பாகனேரி த. வை. இளைஞர் தமிழ்ச் சங்க வெளியீடு - எ.எ

Katchuri Kavalar.
சு. அருணாசலம்.
தி. சொக்காரிஞ்.

எட்டுத் தொகையுள்

ஒன்றுகிய

அகநானூறு

களிற்றியானை நிரை

N. Saukar.
Pularar.
Thiruvalaputhur.
Elautkope.
mayuram.
Tanjur. Dt. Madras
ORIENTAL COLLEGE. DHARMAPURAM
Serial No. 439
Catalogue No.
INDIA

திரு. நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்,
கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை
அவர்களால் எழுதப்பெற்ற
பதவுரை விளக்கவுரைகளுடன்

❋

பாகனேரி
வெ. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார்
அவர்களால் வெளியிடப்பெற்றது.

❋

கிடைக்குமிடம்:

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி & சென்னை

குறும்புத்தீப்பு - கடாயு ஆனி.

Oct. 1947
சருவசித்து - கார்த்திகை
[உரிமை பதிவு செய்யப்பட்டது]

The Jupiter Press Ltd., Madras—for Q. H. M.S. 05—10-1947

LIBRARY

பதிப்புரை

அகத்தே நிகழும் இன்பம் 'அகப்பொருள்' எனப்படும். அகப் பொருள் நூல்கள் தமிழிற் பல உள்ளன. ஆயினும், 'அகம்' என்றே பெயரமைந்த பழைய இலக்கியநூல் இப்போது ஒன்றே உள்ளது. அதுதான் 'அகநானூறு' என்பது.

கடைச்சங்க காலத்தின் எட்டுத்தொகை நூல்களுள் அகநானூறும் ஒன்று. நானூறு அகவற் பாட்டுக்களால் ஆனது: புலவர் பலரால் இயற்றப்பட்டு, மதுரை உப்பூரிகுடிகிழான் மகனார் உருத்திரசன்மரால் தொகுக்கப்பட்டது.

அகநானூறு மூன்று பகுதிகளாக உள்ளது. முதல் நூற்றிருபது பாட்டுக்கள் 'களிற்றியானை நிரை' எனப்படும். அடுத்த நூற்றெண்பது பாட்டுக்கள் 'மணிமிடை பவளம்' எனப்படும். கடைசி நூறு பாட்டுக்கள் 'நித்திலக் கோவை' எனப்படும்.

இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு. அது, முதல் 100-பாட்டுகட்குமட்டும் குறிப்புரையாக இருக்கின்றது. அடுத்து 80-பாட்டுகட்கு அகநானூற்றின் முதற் பதிப்பாசிரியரான திரு. வே. இராசகோபாலாசாரியார் உரை எழுதியிருக்கின்றார். அதனால் நூல் முழுமைக்கும் ஒரே வகையாகத் தெள்ளிய உரையொன்று எழுதி வெளிவரவேண்டிய இன்றியமையாமை இந்நூலுக்கு நெடுங்காலமாக இருந்துவந்தது.

அக் குறையினை நீக்கும்பொருட்டு, இப்போது தஞ்சை நாவலர் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களும், கரந்தைக் கவியரசு பி. வேங்கடாசலம் பிள்ளையவர்களும் சேர்ந்து இந்நூல் முழுமைக்கும் உரையெழுதி வருகின்றனர். நூலும் விரைந்து அச்சாகி வருகின்றது.

செய்யுட்களைப் பதம் பிரித்து, முதலில் தெளிவாகத் தலைப்புக் கொடுத்துப், பின்பு பொருள் செல்லும் நெறிக்கு ஏற்ப முறைப் படுத்திப் பதவுரை கண்டு, அதன்மேல் முடிபும் விளக்கவுரையும் எழுதி, உள்ளுறை புலப்படுத்தி, மேற்கோள் இடங்களை விளக்கி, உரிய அடிக்குறிப்புக்களுடன் இவ்வுரை தெளிந்து செல்கின்றது.

பல்கலைக் கழகத்தின் 'வித்துவான்' தேர்வுக்கு இந்நூலின் 'களிற்றியானைநிரை' என்னும் முதற் பகுதி பாடமாக இருந்தலின், இப்போது அதுமட்டும் உரையுடன் ஒரு தனிப்புத்தகமாக வெளியிடப் பெறுகின்றது. இறுதியிற், பாட்டு முதற்குறிப்பும், புலவர்கள் பெயர் வரிசையும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாணவர் பயன்படுத்திக்கொள்வாராக! அகநானூறு முழுப் புத்தகமாக வெளிவரும்போது நூல் வரலாறு, உரை வரலாறு, அரும்பொருட் குறிப்பு முதலிய பிற குறிப்புக்களும் சேர்க்கப்பெறும்.

திருவள்ளுவர் யாண்டு
ஆகூழருடு ஐப்பசி
25-10-1945

மு. காசிவிசுவநாதன்.

இரண்டாம் பதிப்புரை

"இன்பம் அகமாகும் இஃதின்றேல் பொருளறமும்
மன்பதைக்கிங் கெய்தா தாகி."

முன்குறித்தபடி களிற்றியானைநிரை, மணிமிடைபவளம், நித்திலக் கோவை ஆகிய மூன்றும் தஞ்சை நாவலர் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களும் கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளையவர்களும் சேர்ந்துளமுதி உதவிய உரையுடன் தனித்தனிப் புத்தகமாக வெளிவந்துள்ளன.

இப்பொழுது அம்மூன்றனுள் ஒன்றாகிய இக் களிற்றியானைநிரை இரண்டாம் பதிப்பாக வெளிவருகின்றது. விரைவில் நால் முழுமையும் ஒரே புத்தகமாக வெளிவரும். அப்பொழுது, நூல்வரலாறு உரைவரலாறு அரும்பொருட் குறிப்பு முதலியன சேர்க்கப்பெறும்.

திருவள்ளுவர் யாண்டு சுக்கோ அ
கார்த்திகை ஞ-ஆம் நாள்,
22-11-1947.

மு. காசிவிசுவநாதன்.

அகநானூறு களிற்றியானை நிரை

பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை

பாட்டு	பக்க எண்
அகலறை மலர்ந்த	௨௨
அணங்குடை நெடுவரை	ரூ
அம்மவாழி	௨௯
அயத்துவளர் பைஞ்சாய்	௯ரு
அரக்கத்தன்ன	ரூ
அரிபெய் சிலம்பி	௯
அருளன்ருக	௯ரூ
அரையுற்றமைந்த	௨௯
அழியாவிழுவின்	௨ரூ
அழிவில் உள்ளம்	௯ரு
அளிநிகர் பொருஅ	௯ரு
அறியாய்வாழி	௯௭
அன்றவன் ஒழிந்த	ரூஅ
அன்னுய்...நம்படப்பை	௯ரூ
அன்னுய் நின்மகள்	௯ரா
அன்னை அறியினும்	௨ரூ
ஆடமைக்குயின்ற	௭ரரி
ஆய்நலந்தொலைந்த	௯ரு
ஆள்வழக்கற்ற	௯ரூ
இம்மையுலகத்	ரூரூ
இருங்கழிமுதலை	ரு
இருள்நிழிப்பதுபோல்	ரூரூ
இன்னிசை உருமொடு	ரூ௭
ஈயற்புற்றத்	ரூ
ஈன்றுபுறந்தந்த	அ
உழுந்துதலைப்பெய்த	ரூஅ
உள்ளாங்குவத்தல்	ரூரூ
உளைமான்துப்பின்	ரூரூ
உன்னங்கொள்கை	ரூரு
எம்வெங்காமம்	ரூரூ
எரியகைந்தன்ன தாமரைப் பழனத்து	௨௨ரூ
எரியகைந்தன்ன தாமரை யிடையிடை	ரூரு
ஒழிந்தது பழிந்த	அரூ
கடல்பாடவிந்து	ரூ௨
கடல் முகந்து கொண்டை	ரூ௭
கள்ளியங்காட்ட	௨ரு
கலியும் இடனுல்	ரூஅ
கறங்குவெள் அருவி	ரூரூ
காய்ந்து செலற்கனலி	ரூ௨
கார்விரிகொன்றை	ரூ
கானல் மாலை	ரூ௨
கிளியும் பந்தும்	ரூரு
கூன்முள்முள்ளிக்	ரூரூ
கூனல் எண்கின்	ரூரூ
கேள்கேடுன்றவும்	ரூரூ
கேளாய் எல்லதோழி	ரூரூ
கேளாய்வாழியோ	ரூரூ
கொடுந்தாள்முதலை	ரூ௨
கொடுந்திமிற்பரதவர்	ரூரூ
கொடுவரி இரும்புலி	ரூரு
கொல்லினைப்பொலிந்த	ரூ
கோழிலைவாழை	ரூ
சிறுகரும்பிடவின்	ரூ
சிறுபைந்தூவி	ரூரு
சேற்றுநிலை முனை இய	ரூரூ
தண்கயத்தமன்ற	ரூரூ
தன்கடற் பிறந்த	ரூரு
தீந்தயிர்கடைந்த	ரூரு
தெறுகதிர்ஞாயிறு	ரூரூ
தேம்படுசிமைய	ரூரூ
தொடங்குவினை தவிரா	ரூரூ
தோட்பதன் அமைத்த	ரூரூ
நகையாகின்ற	ரூரூ
நறவுண்மண்டை	ரூரூ
நன்றல்காலையும்	ரூரூ
நன்னுதல்பசப்பவும் ஆள்வி	ரூரூ
நன்னுதல் பசப்பவும் பெருந் தோள்	ரூரூ
நனந்தலைக்கானத்	ரூரூ
நாயுடைமுதுநீர்	ரூரூ
நாளுலா எழுந்த	ரூரூ
நிழலுறநனந்தலை	ரூரூ

பாட்டு	பக்க எண்
நிறைந்தோர்த் தேரும்	கடுசு
நீசெலவயர	உஉடு
நீர்நிறம்கரப்ப	சகூ
நுதலுந்தோளும்	உடுo
நெடுங்கயிறு	எக
நெடுங்கரை	கo
நெடுமலையடுக்கம்	ககசு
நெடுவேள்மார்பின்	உடுஉ
நெருநல் எல்லி	எசு
நெருப்பெனச்சிவந்த	எகூ
நோற்றோர்மன்ற	ககூகூ
பகுவாய்வராஅல்	அஉ
பல்லிதழ்மென்மலர்	உஉகூ
பனிவரைநிவந்த	உoள
பின்னெடுமுடித்த	கடுஅ
புணர்ந்தோர்புன்கண்	உஉள
பெருங்கடற்பரப்பில்	ககூக
பெருநீர்அழுவத்	டுo
பையயப்பசந்தன்று	உoக
மஞ்சுகண்குளிர்ப்ப	டுள
மண்கனிை முழுவொடு	கசுசு
மலிபெயற்கலித்த	கடு
மலைமிசைக்குலை இய	களக
மறந்தவண் அமையார்	அடு
மனையிள கொச்சி	டுக

பாட்டு	பக்க எண்
முதைச்சுவல்	கஅள
முல்லைவைந்நுனை	கஉ
முல்லைமுகஞ்செய்தன	உக
மூத்தோரன்ன	ககக
மெய்யில்தீரா	கூள
மௌவலொடுமலர்ந்த	உசள
யாயே கண்ணினும்	ஈகூ
யானெவன் செய்கோ	கசஈ
வண்டுபடத்ததைத்த	டு
வந்துவினை முடித்தனன்	கஈ
வலஞ்சுரிமரா	களள
வலந்தவள்ளி	கக(டு)
வளங்கெழுதிருநகர்	சஉ
வாடல் உழுஞ்சில்	கoக
வாள்வரிவயமான்	உகக
வான்கடற்பரப்பில்	உகூ
வானம்ஊர்ந்த	ஈக
விரியிணர்வேங்கை	அள
விருந்தின்மன்னர்	ககக
விளங்குபகல் உதவிய	ககஈ
வினை நன்றுதல்	எள
வினை வலம்படுத்த	கசு()
வேந்துவினை முடித்த	உஉ()
வேளாப்பார்ப்பான்	டுஅ
வைகுபுலர்விடியல்	கசு

ஆசிரியர் பெயர்

அகரவரிசை

(எண் - செய்யுளெண்)

அந்தியிளங்கீரனார் 71
அம்மூவனார் 10
அள்ளூர் நன்முல்லையார் 46
ஆலம்பேரிச் சாத்தனார் 47, 81
ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார் 64
ஆலங்குடி வங்கனார் 106
ஆவூர் மூலங்கிழார் 24
ஈழத்துப் பூதன் தேவனார் 82
உமட்டூர்கிழார் மகனார் பரங் கொற்றனார் 69
உலோச்சனார் 20, 100
ஊட்டியார் 68
எயினந்தை மகனார் இளங் கீரனார் 3
எருமை வெளியனார் 73
எருமை வெளியனார் மகனார் கடலனார் 72
ஒக்கூர் மாசாத்தனார் 14
ஓரோடோகத்துக் கந்தரத் தனார் 23, 95
ஔவையார் 10
கடுந்தொடைக் காவினார் 109
கபிலர் 2, 12, 18, 42, 82, 118
கயமனார் 7, 17
கருவூர்க் கண்ணம்புல்லனார் 63
கருவூர்ப் பூதஞ் சேந்தனார் 50
கல்லாடனார் 9, 83, 113
காட்டூர் கிழார் மகனார் கண்ணனார் 85
காவன்முல்லைப் பூதரத்தனார் 21
காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் 107
காவிரிப்பூம் பட்டினத்துச் செங்கண்ணனார் 103
குன்றியனார் 40, 41
குடவாயிற் கீரத்தனார் 35, 44 60, 79, 119
குறுங்குடி மருதனார் 4
சாகலனார் 16
சித்தலைச் சாத்தனார் 53
செல்லூர்க் கோசிகன் கண்ணனார் 66
தங்கால் முடக்கொற்றனார் 48
தங்காற் பொற்கொல்லனார் 108
தாயங் கண்ணனார் 105
நக்கீரனார் 57, 120
நக்கீரனார் (கணக்காயனார் மகனார் நக்கீரனார்) 93
நக்கீரனார் (மதுரை நக்கீரர்) 36, 78
நல்லாவூர் கிழார் 86
நல்வெள்ளியார் 32
நன்பலூர்ச் சிறுமேதாவியார் 94
நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர் கிழார் 112
நொச்சி நியம்நங்கிழார் 52
நோய்பாடியார் 67
பரணர் 6, 62, 76, 116
பாண்டியன் அறிவுடை நம்பி 28
பாண்டியன் கானப் பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி 26
பாலைபாடிய பெருங் கடுங்கோ 5, 98, 111
பெருங்குன்றூர் கிழார் 8
பெருந்தலைச் சாத்தனார் 13
பெருந்தேவனார் 51
பொருந்தில் இளங்கீரனார் 19
போந்தைப் பசலையார் 110
மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் 33
மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் 56
மதுரை இளம்பாலாசிரியன் சேந்தங் கூத்தன் 102

(illegible) 79
மதுரை எழுத்தாளன் 84
மதுரைக் கணக்காயனார் 27
மதுரைக்கவுணியன் பூதத்தனார் 74
மதுரைக் காஞ்சிப் புலவர் 83
மதுரைச் செங்கண்ணனார் 39
மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார் 70
மதுரைப் பண்ட வாணிகன் இளந்தேவனார் 58
மதுரைப் பாலாசிரியர் நற்சோமனார் 92
மதுரைப் பேராலவாயர் 87
மதுரைப் போத்தனார் 75
மதுரை மருத னிளநாகனார் 34, 59, 77, 90, 104
மதுரை யாசிரியர் நல்லந்துவனார் 43
மருங்கூர் கிழார் பெருங் கண்ணனார் 80
மருதம்பாடிய இளங்கடுங்கோ 9
மாமூலனார் 1, 15, 31, 55, 61, 65, 91, 97, 101, 11
மாற்றார் கிழார் மகனார் கொற்றங் கொற்றனார் 6
முடங்கிக் கிடந்த நெடுஞ் சேரலாதன் 3
வடம வண்ணக்கன் பேரி சாத்தனார் 3
வண்ணப்புறக் கந்தரத்தனார் 4
விற்றூற்று மூதெயினனார் 3
வெள்ளாடியனார் 2
வெள்ளி வீதியார் 4
வெறிபாடிய காமக் கண்ணியார் 22, 9
..... 11
..... 117

அகநானூறு

மூலமும் உரையும்

கடவுள் வாழ்த்து

கார்விரி கொன்றைப் பொன்னேர் புரிமலர்
தாரன் மாலையன் மஞ்ஞை[1] கன்னியன்
மார்பி னஃதே மையில் நுன்ஞாண்
நூலை நிமையா நாட்டம் இகலட்டுக்
கை யது கனிச்சியொடு மழுவே மூவாய்
வேறும் உண்டத் தோலா தோற்கே
ஊர்ந்த தேறே சேர்ந்தோள் உமையே
செவ்வா னன்ன மேனி அவ்வாள்
இலங்குபிறை அன்ன விலங்குவால் வையெயிற்
றெரியகைந் தன்ன அவிர்ந்துவிளங்கு புரிசடை
முதிராத் திங்களொடு சுடரும் சென்னி
மூவா அமரும் முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொன்முறை மரபின்
வரிநிலர் வயமான் உரிவை தைஇய
யாழ்மிகு மணிமிடற் றந்தணன்
தாவில் தாள்நிழல் தவிர்த்தன்றுல் உலகே.

—பாரதம் பாடிய பெருந்தேவனார்.

(சொற் பொருள்) அ—கடு. செவ்வான் அன்ன மேனி - சிவந்த வானை யொத்த நிருமேனியினையும், அவான் இலங்கு பிறை அன்ன விலங்கு வால் வை எயிற்று - அவ்வாவில் விளங்கும் பிறையை யொத்த வளைந்த வெள்ளிய கூரிய எயிற்றினையும், எரி அகைந்தன்ன அவிர்ந்து விளங்கு புரி சடை முதிராத் திங்களொடு சுடரும் சென்னி - நெருப்புக் கப்புவிட் டெரிந்தா லொத்த விட்டு விளங்கும் முறுக்குண்ட சடை இளம் பிறையுடன் ஒளிரும் சென்னியினையுமுடைய, மூவா அமரரும் முனிவரும் பிறரும் யாவரும் அறியா - மூப்புருத தேவரும் முனிவரும் ஏனோரும் ஆகிய யாவரும் அறியாத, தொல்முறை மரபின் - பழமையாகிய கன்மையையுடைய; வரிநிலர் வயமான் உரிவை தைஇய - கோடுகள் விளங்கும் வலிய புலியின் தோலை யுடுத்த, யாழ் மிகழு மணி மிடற்று - மறையினை பொருந்திய நீலமணி போலும் திருமிடற்றினை யுடைய, அந்தணன் - அந்தணரு ளிய சிவபிரான்.

(பாடம்) 1. மஞ்ஞை, தகைந்த.

உ

கடவுள் வாழ்த்து

கடவுள் வாழ்த்து

கடவுள் வாழ்த்து

இமையா நாட்டத்து நுதலினனுய்க் கணிச்சி மழுவு மூவாய்வேலும் ஏந்திய கையினனுய் யாவர்க்கும் நோலாதோனுமாய் எற்றினையு மூர்ந்து உமையாளையுஞ் சேர்ந்து செவ்வானன்ன மேனியையும் பிறைபோன்ற எயிற்றினையும் எரி போன்ற சடையினையும் திங்க ளொடு சுடருஞ் சென்னியையு முடையனுய் மூவா அமரர் முதலிய யாவருமறியாத் தொல்முறை மரபினனுய்ப் புலியதளையுமுடுத்த, யாழ்கெழு மணிமிடற் றந்தணனது சிவாலயநிலையிற் பேருலகம் தங்கிற்று எனப் பொருள் உரைக்குங் காலத்து அதன்கண் இடைக் கிடந்த சொற்கள் முன்னெடு பின் வாய்பாடுகள் சேராவன்றே; அவ்வழி அவ்வாய்பாட்டாற் போந்த பொருளுரைப்பச் சேர்ந்த வாறும் இசைநிரிந் திசைத்தவாறும் அவை தத்தம் நிலையிற் குலை யாமை நின்று பொருள்பட்டவாறுங் கண்டு கொள்க,' என்றுரைத் தனர் இளம். 'வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு முரித்தே'[1] என் னும் சூத்திரவுரையில், இச் செய்யுளை எடுத்துக் காட்டி, இஃது உல கிற்குப் பயன்பட வாழ்த்தியது என்றுர் பேரா.

... COLLEGE, PIRA...
439.

---

1. தொல். பொருள். 60 உ.

முதலாவது

(3) கவிற்றியான் நிரை

திணை : (1) பாலை — பின்றைகாறும்.

[பிரிவிடை யாற்றாளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

வண்டுபடத் தைதந்த கன்னி ஒண்கழல்
உருவக் குதிரை மழவர் ஓட்டிய
முருகன் நற்போர் நெடுவே ளாவி
அறுகோட் டியானைப் பொறிவரி யாங்கன்

(5) <u>சிறுகா ரோடன் பயிறெடு சேர்ந்திய</u>
<u>கூற்போற் பிரியலம் என்ற சொற்றும்</u>
மறந்தனர் கொல்லோ நோழி நிறந்த
வேய்மருள் பணைத்தோள் நெகிழச் சேய்நாட்டுப்
பொலங்கல வெறுக்கை தருமார் நிலம்பக

(10) அழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலின்
நிழல்தேய்ந் துலறிய மரத்த அறைகாய்
பறுநீர்ப் பைஞ்சுனை ஆமறப் புலர்தலின்
உகுநெற் பொரியும் வெம்மைய யாவரும்
வழங்குநர் இன்மையின் வெளவுநர் மடியச்

(15) சுரம்புல் லென்ற ஆற்ற அலங்குகினை
நாரின் முருங்கை நவிரல் வான்பூச்
சூரலங் கடுவளி எடுப்ப ஆருற்
<u>றுடைநிரைப் பிரிர்வில் பொங்கி முள்</u>
<u>கடல்போல் தோன்றல காடுறந் தோரே.</u>

—மாமூலனார்.

(சொ - ள்) எ—கூ. தோழி -, சேய்நாட்டு - சேய்மைக்கண் ணுள்ள நாட்டினின்று, பொலம் கல வெறுக்கை தருமார் - பொன் னணி முதலாய செல்வங்களை ஈட்டிவரவேண்டி, சிறந்த வேய் மருள் பணைத்தோள் நெகிழ - சிறந்த மூங்கிலை யொத்த பரிய தோள் மெலியுமாறு (விட்டுப் பிரிந்து),

கூ—கஉ. நிலம் பக - நிலம் பிளக்குமாறு, அழல்போல் வெங் கதிர் - தீயைப் போன்று வெப்ப மிக்க ஞாயிற்றின் கதிர், பைது அற தெறுதலின் - பசுமையறக் காய்தலின், நிழல் தேய்ந்து உலறிய மரத்த - நிழல் சுருங்க வற்றிய மரங்களையுடைய, அறை காய்பு - பாறைகள் கொதித்து, அறுநீர் பைஞ் சுனை - நீர் அற்ற பசிய சுனை, கவிலும், ஆம் அறப் புலர்தலின் - சரம் இல்லையாம்படி காய்தலின் உகு நெல் பொரியும் வெம்மைய - அங்குச் சொரியும் நெல்லும் பொரியும் வெம்மையை உடைய, யாவரும் வழங்குநர் இன்மையின்

வழிச் செல்வார் யாவரும் இன்மையின், வெளவுநர் மடிய - ஆறலைப் போரும் வறுமையால் மெலிய, சுரம் புல்லென்ற ஆற்ற - சுரம் பொலிவற்ற நெறியினையுடைய, அலங்கு சினை நார் இல் முருங்கை நவிரல் வான்பூ - அசையுங் கிளையினையுடைய நார் இல்லாத முருங் கையின் குலைந்த வெள்ளிய பூக்கள், குரல் கடு வளி எடுப்ப - கடிய குரு வளியாகிய காற்றுவாரி வீச, ஆர் உற்று - ஆர்த்தலுற்று, உடை திரைப் பிதிர்வில் பொங்கி - உடைந்த திரையின் துளிகளைப்போலப் பரந்து கிடத்தலின், முன் கடல்போல் தோன்றல - கடலின் கரை யகம் போலத் தோன்றுதலையுடைய, காடு இறந்தோர் - காட்டினைக் கடந்தேகிய நம் தலைவர்,

(கூ—எ.) வண்டுபட தகைந்த கண்ணி - வண்டுகள் மொய்த்திட மலர்ந்த பூக்களாலாய கண்ணியினையும், ஒள்கழல் - ஒள்ளிய கழலினை யும் உடைய, உருவ குதிரை மழவர் ஓட்டிய - அஞ்சத்தக்க குதிரை களையுடைய மழவரை வென்றோட்டிய, முருகன் நற்போர் - முரு கனைப் போன்ற நல்ல போர் வெற்றியினையுடைய, நெடுவேள் ஆவி - பெருமையுடைய வேளாகிய ஆவி என்பானது, அறுகோட்டு யாழின - அறுத்துத் திருத்திய கோட்டினையுடைய யாழினையுடைய, பொதினி ஆங்கண் - பொதினி மலையாகிய அவ்விடத்திருந்து, சிறு காரோடன் பயிலெறு சேர்த்திய கல்போல் பிரியலம் என்ற சொல் தாம் சிறியனாகிய சாணைக்கல் செய்வோன் அரக்கொடு சேர்த்தியற் றிய கல்லைப்போலப் பிரியேம் என்று கூறிய சொல்லை, மறந்தனர் கொல் - மறந்துவிட்டனரோ?

(முடிபு) தோழி, செய்தாட்டு வெறுக்கை தருமார் தோள் நெடிமுக்காடிறந் தோர், பிரியலம் என்ற சொல் மறந்தனரோ?

மரந்த, வெம்மைய, ஆற்ற, தோன்றல ஆகிய காடு எனவும், தருமார் இறந் தோர் எனவும் கூட்டுக.

(வி - ரை.) வண்டுபட - IIட: காரணப் பொருட்டு; காரியப் பொருட்டும் ஆம். தகைந்த - சிதறின எனலும் ஆம். வண்டு படத் தகைந்த என்பது சினைக்கு ஏற்ற அடை. உரு - உருவ என நின்று நின்றது; அழகிய குதிரை என்னலுமாம். மழவர் ஓட்டிய: உயர்திணை மருங்கின் இரண்டனுருபு தொக்கு வந்தது. ஓட்டிய ஆவி எனவும், பொதினி யாங்கண் சொல்லிய சொல் எனவும் கூட்டுக. அறுகு ஓட்டு எனப் பிரித்துச் சிங்கத்தை வென்ற எனலுமாம். பொதினி - ஆவியின் மலை; பழனி. 'நெடுவேள் ஆவி, பொன்னுடை நெடுநகர்ப் பொதினி' (61) எனவும், 'சிறு காரோடன் பயிலெறு சேர்த்திய கற்போல்' (356) எனவும் பின்னர் வருவன அறியற் பாலன.

(மே - ள்.) 'முதல் கரு உரிப்பொருள்'[1] என்னுஞ் சூத்திர வரையில் இச் செய்யுளை எடுத்துக்காட்டி, பாலைக்கு முதலும் கருவும் வந்து முதற் பொருளாற் சிறப்பெய்தி முடிந்தது என்றார் நச்சினார்க்கினி

---

1. தொல், அகத். கூ.

(2) குறிஞ்சி

[பகற் குறிக்கட் செறிப்பறிவுறீஇத் தோழி வரைவு கடாயது.]

கோழிலை வாழைக் கோண்மிகு[1] பெருங்குலை
ஊழுறு நீங்கனி உண்ணுநர்த் தடுக்க
சாரற் பலவின் சுளையொடு தும்பை
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்
கு அரியா துண்ட கடுவன் அயலது
கறிவளர் சாந்தம் ஏறல்செல் லாது
நறுவி அடுக்கத்து மிழற்றுகண் படுக்கும்
குறியா இன்பம் எளிதின் நின்மலைப்
பல்வேறு விலங்கும் எய்து நாட
கூ குறிந்த இன்பம் நினக்கெவன் அரிய
வெறுந்த வேளர் வேய்புரை[2] பணைத்தோள்
நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்
டிவளும் இலைய ளாயின் தந்தை
அருங்கடிக் காவலர் சோர்படின் ஒற்றிக்
கரு கங்குல் வருதலும் உரியை பைம்புதல்
வேங்கையும் ஒள்ளினர் விரிந்தன
நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே.

(சொ - ள்.) கூ—கூ. கோழ் இலை வாழைக் கோள் மிகு பெருங் குலை ஊழ்உறு நீங்கனி -\ளவிய இலைகளையுடைய வாழையின் காய்த்தல் மிக்க பெரிய குலையிலுள்ள முதிர்ச்சியுற்ற இனிய கனியும், உண்ணுநர்த் தடுத்த சாரற் பலவின் ஊழ்படு சுளையொடு - தம்மை உண்போரைப் பிறவற்றை யுண்ணுமல் தடுத்த பக்கமலையிலுள்ள பலாவின் மூற்றிய சுளையாலும், பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல் -\பாறையிடத்து நெடிய சுனையில் உண்டாகிய தேனை, அறியாது உண்ட கடுவன் -\தேனென் றறியாதே உண்ட ஆண்குரங்கு, அயலது -\அச் சுனையின் பக்கத்ததாகிய, கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது -\மிளகு கொடி படர்ந்த சந்தன மரத்தில் ஏறமாட்டாது, நறு வீ அடுக்கத்து மிழற்றுகண் படுக்கும் குறியா இன்பம் -\நறிய பூக்களாலாய படுக்கையிற் களிப்புற்று உறங்கும் எதிர்பாராத இன்பத்தை, நின்மலைப் பல்வேறு விலங்கும் -\நினது மலையிலுள்ள பல் வகை விலங்குகளும், எளிதின் எய்தும் நாட -\எளிதாக அடையும் நாடனே,

கூ. குறித்த இன்பம் நினக்கு எவன் அரிய -\நீ குறித்து முயலும் இன்பங்கள் நினக்கு எங்ஙனம் அரியனவாகும்?

கூகூ—ரு. வெறுந்த ஏளர் -\மிக்க அழகினையுடைய, வேய் புரை பணைத்தோள் இவளும் -\மூங்கிலை யொத்த பருத்த தோளினையுடைய

(பாடம்) 1. கோண் முதிர். 2. வேய் மருள்.

இவளும், நிறுப்ப நில்லா நெஞ்சமொடு நின்மாட்டு இவள் ஆயின் நிறுத்தவும் நில்லாது ஓடும் நெஞ்சினளாய் நின்னிடத்தே இத்தகைய காதலுடையளாயின், தந்தை அருங்கடிக் காவலர் சோர் பதன் ஒற்றிக் கங்குல் வருதலும் உரியை ↓இனி நீ இவள் தந்தையின் அரிய காத்தற் ஒழுங்கியுடைய காவலாளர் சோர்வுற்றிருக்குஞ் செவ்வியை மறைய உணர்ந்து இரவில் வருதற்கும் உரியை;

கரு—எ. பைம்புதல் வேங்கையும் ஒள் இணர் விரிந்தன ↓அன்றியும் பசிய புதர் சூழ்ந்த வேங்கை மரங்களும் ஒள்ளிய பூங்கொத்துக்கள் விரியப் பெற்றன; நெடுவெண் திங்களும் ஊர் கொண்டன்று மிக்க வெண்மையையுடைய திங்களும் நிரம்புதலுற்றது.

(முடிபு) நாடனே, குறித்த இன்பம் நினக்கு எங்ஙனம் அரியன; இவளும் இரியளாயின் கங்குல் வருதலும் உரியை; வேங்கையும் இணர் விரிந்தன; திங்களும் ஊர் கொண்டன்று.

(வி-ரை.) சுடரியொடு-சுடரியால். ஒடுவைக் கனியொடுங் கூட்டுக. கனியாலும் சுடரியாலும் விரிந்த ஊழ்படுதேறல் என்றுமாம்; ஊழ்படு-முறைமைப்பட்ட. உண்ணுநர்த் தடுத்த என்னும் அடை கனிக்கும் பொருந்தும். வாழைக் கனியையும் பலவின் சுடரியையும் உண்டு, அவற்றுள் விரிந்த தேறலையும் அறியாது மாந்திய கடுவன் என்றுரைத்துமாம். பொருந்தும். அறியாதுண்டல் - நீர் வேட்கையால் இத தேறலென்றறியாது நீரென்றுண்டல். சாந்த மேருது என்றது மரமாயிற் சந்தனமே ஆண்டுள்ளதென்னுங் குறிப்பிற்று. வீ அடுக்கம் - பூப்படுக்கை. குறியா இன்பம் - சிந்தனையும் முயற்சியுமின்றி வந்த இன்பம். கடுவனெய்திய குறியா வின்பத்தை அதுவேயன்றி வேறு பல் விலங்கும் எய்தும் நாடென்க. எய்துமென்னும் பெயரெச்சம் இடப்பெயர். கொண்டது. விலங்குமென்னும் உம்மை இழிவு சிறப்பு. வெறுத்தல் - செறிதல், மிகுதல். எரினையுடைய தோள் என்க. நிறுப்ப - நின்ற நிலையினின்று அழியாமல் நிறுத்தவும்.

கங்குல் வருதலு முரியை - பகற்குறியே யன்றி இரவுக் குறியில் வருதற்கு முரியை. வேங்கையும் விரிந்தன என்றது நினைப்புனம் அறுத்துத் தலைவி இற்செறிக்கப்பட்டாள் என்றபடி; என்னை? வேங்கை மலருங்காலம் தினை முற்றி அறுக்குங் காலமாகலின். இதனற் பகற்குறி மறுத்ததாம். காவலர் சோர்பத னெற்றி என்பதனால் இரவுக்குறி யருமை கூறி அதுவும் மறுத்ததாம். இரண்டிற்கும் உடம்படுவாள் போன்று இரண்டினையும் மறுத்துத் தோழி வரைவுகடாயினவாறு.

நெடுவெண்டிங்கள் என்பதற்கு நெடும்பொழுது ஒளி செய்யும் நிறைமதி யெனப் பொருள்கொண்டு, ஊர் கொண்டன்று என்பதற்குக் குறைவின்றி வட்டமாக ஒளி பரந்தது என்றுரைத்தலுமாம். திங்கள் நிரம்புதலுற்றது என்றமையால் திருமணத்திற்குரிய நாளாதலும், நெடுமலர் வரைய முற்படுவர் என்பதும் புலப்படுத்தி, விரைவில் வரைந்து கொள்ளுமாறு தூண்டியவாருயிற்று.

வேங்கை மலர்தலும் மணஞ் செய்யுநாள் குறித்தலாகக் கோடலும் அமையும். உம்மை யெச்சத்திற்கு முடிவு கூறும் [1]சூத்திரவுரையிற் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் "வேங்கையும் . . . ஊர் கொண்டன்றே" என்பதில், இணர் விரிதலும் ஊர் கோடலும் மணஞ் செய்யுங் காலங் குறித்தலின் அவை ஒருவினைப் பாற்படும் என்றுரைத்து, அவ்வும்மை எச்சவும்மையாதற் கிழுக்கின்மை தெளித்தமை அறியற்பாலது.

களிற்றியானை நிரையின் குறிப்புரையாசிரியர் 'நெடுவெண் டிங்க ளென்ருர்; ஆதித்தனுக்கு மேலாகலான்' எனக் கூறியது பௌராணிக மதம்.

> "மையார் கதனி வனத்து வருக்கைப் பழம்விழுதேன்
> எய்யா தயின்றிள மந்திகள் சோரு மிருஞ்சிலம்பா
> மெய்யா வரியதெ னம்பலத் தான்மதி யூர்கொள்வெற்பின்
> மொய்யா ரிளவள வேங்கைபொன் மாலையின் முன்னினவே"

என்னும் திருச்சிற்றம்பலக்கோவைச் செய்யுளும், அதனுரையும் இச் செய்யுளின் கருத்துக்களைக் கொண்டு இயன்றிருப்பது அறிந்து இன்புறற்பாலது.

(உள்ளுறை) கடுவனானது தேனை அறியாது நுகர்ந்து, பின்பு தன் ருழிலாகிய மரமேறலு மாட்டாது, பிறிதோரிடத்திற் செல்லவு மாட்டாது, அயலதாகிய சந்தன மரத்தின் நிழலிற் பூமேலே உறங்கு கின்ருற்போல, நீயும் இக் களவொழுக்கமாகிய இன்பம் நுகர்ந்து, நினது தொழிலாகிய அறநெறியையும் தப்பி, இக் களவினை நீக்கி வரையவு மாட்டாது, இக் களவொழுக்கமாகிய இன்பத்திலே மயங்கானின்ருய் என்றவாறு.

(மே - ள்.) 'நாற்றமும் தோற்றமும்'[2] என்னும் சூத்திரவுரையில் இச் செய்யுளை எடுத்துக் காட்டி, "விலங்கும் எய்தும் நாட' என்று அந் நாட்டினை இறப்பக் கூறி, இந்நாடுடைமையிற் 'குறித்த இன்பம் நினக்கெவனரிய' என வரைதல் வேண்டியவாறும், வேங்கை விரிந்ததனால் நினையறுத்தலின் இற்செறிப்புக் கூறியவாறும் 'கங்குல் வருதலு மூரியை எனப் பகற்குறி மறுத்து இரவுக் குறி நேர்வாள் போற் கூறி 'நெடுவெண் டிங்களு மூர்கொண் டன்றே' என்று அதனையும் மறுத்து வரைதற்கு நல்ல நாளெனக் கூறி வரைவுகடாய வாறுங் காண்க" என்ருர் நச்சினார்க்கினியர்

---

3. பாலை

[மூன்ருரு காலத்து நெஞ்சிறற் பொருள் வலிக்கப்பட்டுப் பிரிந்து இடைச் சுரத்தினின்று அவள் நலம் நயந்து மீளலுற்ற நெஞ்சினைக் கழறிப் போய்ப் பொருள் முடித்து வந்த தலைமகன், பின்னும் பொருள் வலிக்கப்பட்ட நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.]

---

1. தொல். எச்ச. ச0. 2. தொல். களவு. உக.

இருங்கழி முதலில் மேஎந்தோல் அன்ன'
கருங்கால் ஓமைக் காண்பின் பெருஞ்சினைக்
கடியுடை நனந்தலை சென்றீஇப் பட்ட
கொடுவாய்ப் பேடைக் கல்கிரை தரீஇய
மான்றுவேட் டெழுந்த செஞ்செவி எருவை
வான்தோய் நிமைய விறல்வரைக் கவாஅன்
துளங்குநடை மரையா வலம்படத் தொலைச்சி
ஒண்செங் குருதி உவறியுண் டருந்துபு
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை
கொள்ளை மாந்தரின் ஆறுது'கவரும்"
புல்லிலை மராஅத்த[1] அகல்சே ணைத்தங்
கலந்தரல் உள்ளமொடு கழியக் காட்டிப்
பின்னின்று துரக்கும் நெஞ்சம் நின்வாய்
"வாய்போற் பொய்ம்மொழி எவ்வமென் கூஉமா"
கடு கவிர்ந முள்ள காண்பின் செவ்வாய்
அந்தீங் கிளவி ஆயிழை மடந்தை
கொடுங் குழைக் கமர்ந்த நோக்கம்
நெடுந்தே ணிடை விலங்கு ஞான்றே.

—எயினந்தை மகனார் இளங்கீரனார்.

(சொ - ள்.) க—கக. இருங் கழி முதலில் மேஎம் தோல் அன்ன - பெரிய உப்பங்கழியிலுள்ள முதலையிடத்துப் பொருந்திய தோலை யொத்த, கருங்கால் ஓமை காண்பு இன் பெருஞ்சினை - கரிய அடியையுடைய ஓமை மரத்தின் காண்டற்கினிய பெரிய கிளையின், கடியுடை நனந்தலை - காவலையுடைய அகன்ற இடத்தில், சென்றீஇப் பட்ட கொடுவாய்ப் பேடைக்கு - சென்று காவற்பட்ட வளைந்த வாயினையுடைய தன் பேடைக்கு, அல்கு இரை தரீஇய - மிக்க இரையைக் கொணர்ந்து தரும்பொருட்டு, மான்று வேட்டு எழுந்த செஞ் செவி எருவை - மயங்கி இரையை விரும்பி எழுந்த சிவந்த செவியினையுடைய எருவைச் சேவலானது, வான்தோய் நிமைய விறல் வரைக் கவான் - வானை அளாவிய உச்சியினையுடைய சிறப்பு வாய்ந்த மலையின் சாரலில், துளங்கு நடை மரையா வலம்பட - தொலைச்சி - அசைந்த நடையையுடைய மரையாவை வலப்பக்கத்தே வீழக் கொன்று வீழ்த்தி, ஒண் செங் குருதி உவறி உண்டு அருந்துபு - அதன் ஒள்ளிய சிவந்த குருதியை உறிஞ்சியுண்டு ஆர்ந்து, புலவுப் புலி துறந்த - புலால்நாறும் புலி கைவிட்டுப் போன, கலவுக் கழி கடுமுடை - மூட்டுவாய் கழிந்த மிக்க முடை வீசும் புலாலை, கொள்ளை மாந்தரின் ஆறுது கவரும் - கொள்ளை புரியும் மாந்தரைப்போல விடாது கவர்ந்து செல்லும் (இடமாகிய), புல் இலை மரா அத்த அகன் சேண் அத்தம் - புல்லிய இலைகளையுடைய பராமரங்களைக் கொண்ட அகன்ற நெடிய நெறியில்.

(பாடம்) 1. புல்லிலை யாஅத்த.

கஉ—கங. கலம் தரல் உள்ளமொடு கழியக் காட்டிப் பின்னின்று துரக்கும் நெஞ்சம்! அணிகலன்களை ஈட்டி வரும் எண்ணத்தாலே கடந்து செல்வதாகக் காட்டி எம்மைப் பின்னின்று தூண்டும் நெஞ்சமே!

கரு—கஅ. கவிர் இதழ் அன்ன காண்பு இன் செவ்வாய் - முருக்கம் பூவினையொத்த காண்டற்கு இனிய சிவந்த வாயினையும், அம் தீம் கிளவி - அழகிய இனிய மொழியினையும், ஆய் இறை - ஆய்ந்த அணியினையுமுடைய, மடந்தை நம் தகைவியது, கொடுங்குழைக்கு அமர்த்த நோக்கம் - வளைந்த குழையோடு மாறுபட்ட நோக்கமானது, நெடுஞ் சேண் ஆர் இடை விலங்கும் ஞாலத்து - மிக நீண்ட அரிய சுரத்திடத்தே தோன்றித் தடுக்கும் அன்று.

கங—கச. நின் வாய் வாய்போற் பொய்ம்மொழி எம் எவ்வம் என் களைமா? நின் வாயினது மெய்போலும் பொய்ம்மொழி எமது துன்பத்தை எங்ஙனம் போக்குவதாகும்?

(முடிபு) அகன் சேண் அத்தம் கலம் தரல் உள்ளமொடு பின்னின்று துரக்கும் நெஞ்சமே! ஆயிழை மடந்தை நோக்கம் ஆரிடை விலங்கும் ஞாலத்து நின் பொய்ம்மொழி எவ்வம் என் களைமா?

புலி கவான் மரையா தொலைச்சி உண்டு துறந்த கடுமுடை எனவும், பேடைக்கு இரை தரீஇய எழுந்த எருவை கடுமுடை கவரும் அத்தம் எனவும் இயையும்.

(வி-ரை.) மேவும் என்பது மேளம் எனத் திரிந்தது. உயரத்தால் ஏறவொண்ணுமை பற்றிக் கடியுடை நவந்தலை யென்றார். 'சென்ற பேடை பிறிதிடத்திற் செல்லலாகாமையின் 'இகூப்பட்ட' என்று கூறப்பட்டது. பின்னரும் 'பருந்திகூப் படுஉம்'[1] என இங்ஙனம் வருதல் காண்க. இகூப்பட்ட - வகுப்பட்ட என்பாருமுளர். அல்கு இரை எனற்கு வைத்திருந்து உண்ணும் இரை என்றும், இராப் பொழுது உண்ணும் இரை யென்றும் கூறுதலும் பொருந்தும். எருவை - பருந்தின் ஒருவகை. விறல் வரை - தன் பெருமையால் பிற மலையை வென்ற வெற்றியை யுடைய மலை எனலுமாம். கவான் - பக்க மலை. மரை ஆ - ஒருவகை மான். புலி பிற விலங்கின் ஊன் பக்கத்தே வீழ்த்தி உண்ணும் இயல்பின தென்பது சான்றோர் செய்யுட்கள் பலவற்றுள் அறியப்படுவது. உவறி - இஃது ஊற்றி என மருவி வழங்குகின்றது. நிறைந்து' எனப் பொருள்படும் ஆர்ந்து என்பது அருந்துபு என்றுயிற்று. கலவு - மூட்டுவாய். முடை: ஆகுபெயர். மராஅ - ஆச்சாமரம்; மராஅம் எனப் பிரித்து வெண்கடம்பு எனலுமாம். நெஞ்சம்: அண்மைவிளி. 'நின்வாய்' என்றது நெஞ்சின் உறுப்புடையது போலவும், வாய்போற் பொய்ம்மொழி என்றதனால் முன்மறுத்தமை கூறுதலின், மறுத்துரைப்பது போலவும் கூறினார்: இது 'நோயு மின்பமும்'[2] என்னும் சூத்திரத்து 'உறுப்புடையதுபோல் உணர்வுடையதுபோல் - மறுத்துரைப்பதுபோல் நெஞ்சொடு

1. அகம். உக. 2. தொல். பொருளியல். உ.

புணர்த்தும்' எனவும் போந்த வழுவமைதியால்; பின்னரும் ஆண் டாண்டு இங்ஙனம் வருதல் இவ் விதியின்பாற் படும் என்க. செவ்வாய் முதலியன விலங்கும் என்றது, முன் தலைவியின் உரு வெளிப்பட்டுத் தடுத்தமை கருதியாகும். கதுமாறு என்பது கதுமா எனத் திரிந்தது. குழைக்கு - குழையொடு; வேற்றுமை மயக்கம்.

(மே-ள்.) இச் செய்யுளில் 'பின்னின்று...கதுமா' என்பதனை, மறுத்துரைப்பதுபோல நெஞ்சினை இளிவரல் பற்றிக் கூறியது என்றார் நச்சினார்க் கினியர்

'இன்பத்தை வெறுத்தல்'[1] என்னுஞ் சூத்திர வுரையில், எதிர் பெய்து பரிதல் என்பதற்கு 'அந்திங் கிளவி...ஞான்றே' என்பதனை எடுத்துக் காட்டினார் பேராசிரியர்

---

(4) முல்லை

[தோழி தலைமகளைப் பருவங் காட்டி வற்புறுத்தியது.]

முல்லை வைகுபுலர்[2] தோன்ற, இல்லமொடு
பைங்கால் கொள்ளை மென்பிணை அவிழ
திருந்து நிரைந்தன்ன மாயிரு மருப்பிற்
பரலுவல் அடைய இரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புபுறக் கொடுப்பக்
கருவி வானம் கதழுறை சிதறிக்
கார்செய் தவ்வே றுகவின்பெறு கானம்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்த் தன்ன[3] வாங்குவள் பரியப்
பூந்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாறுண் பறவை பேதுறல் அஞ்சி
மனிநா ஆர்ந்த[4] மாஎயினர் நோரன்
உவக்காண்[5] தோன்றும் குறும்பொறை நாடன்
கூர்நிரை விழுவின் உறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றந் தமவ்ற காந்தட்
போதவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி அரிவைநின் மாணலம் படர்ந்தே.

—குறுங்குடி மருதனார்.

(சொ - ள்.) கஎ. ஆய்தொடி அரிவை - ஆராய்ந்த வகையினை யுடைய அரிவையே,

க—எ. முல்லை வை குபுலர் தோன்ற - முல்லையிலது கூரிய குவிலை யுடைய அரும்புகள் தோன்றவும், இல்லமொடு பைங்கால்

---

1. தொல். மெய்ப்பாடு. உஉ, (பாடம்) 2. வைகுதுலர். 3. நரம்பார்ப்பன்ன, 4. யாத்த. 5. உதுக்காண்.

கொன்றை மென்பிணி அவிழ - தேற்ரு மரத்தின் முகையொடு பசிய அடியினையுடைய கொன்றை மரத்தின் முகைகள் மெல்லிய கட்டு நெகிழ்ந்து விரியவும், இரும்பு நிரித்தன்ன மா இரு மருப்பிற் பரல் அவல் அடைய இரலை தெறிப்ப - இரும்பை முறுக்கிவிட்டாற் போலும் கரிய பெரிய கொம்பினையுடைய ஆண் மான்கள் பரல்களை யுடைய பள்ளங்களிலெல்லாம் துள்ளிக் குதிக்கவும், மலர்ந்த ஞாலம் புலம்பு புறக் கொடுப்ப - அகன்ற காடுறை யுலகில் நீரில்லாத வருத்தம் விட்டொழியவும், கருவி வானம் கதம் உறை சிதறி கவின் பெறு காலம் கார் செய்தன்று - மின் முதலியவற்றின் தொகுதியையுடைய மேகம் விரைந்து வீழும் துளிகளைச் சிதறி அழகிய அக் காட்டினைக் கார்ப்பருவம் செய்தது;

கஉ—எ. குறும் பொறை நாடன் - குறிய மலைகளையுடைய நாட்டினையுடைய தலைவன், கறங்கு இசை விழவின் உறந்தைக் குணுது-ஆரவாரிக்கும் ஒலி பொருந்திய விழவினையுடைய உறையூர்க்குக் கிழ்பா லுள்ளதாகிய, நெடும் பெருங் குன்றத்து - நீண்ட பெரிய மலையின்கண்ணே, அமன்ற காந்தள் போது அவிழ் அலரின் நாறும் நின் மாண்நலம் படர்ந்து-நெருங்கிய காந்தளின் போது விரிந்த மலரென நாறும் நினது சிறந்த அழகினை நினைந்து,

அ—கஉ. குரங்கு உளை பொலிந்த கொய் சுவல் புரவி - வளர்ந்த தலையாட்டத்தாற் பொலிந்த கொய்த பிடரிமயிரினையுடைய குதிரைகள், வாங்கு வள் பரிய - இழுக்கும் கடிவாளம் நெகிழ (விரைந்து ஓட), பூத்த பொங்கர் துணையொடு வதிந்த - பூத்த சோலையில் பெடையொடு தங்கும், நரம்பு ஆர்த்தன்ன தாது உண் பறவை - யாழின் நரம்பு ஒலித்தாலொத்த ஒளியினையுடைய தேனை யுண்ணும் வண்டுகள், பெதுறல் அஞ்சி - மயங்குமென அஞ்சி, மணிநா ஆர்த்த மாண் வினைத் தேரன் - மணிகளின் நாவை ஒலியாமற் கட்டிய மாண்புற்ற தொழிலமைந்த தேரினையுடையனுய், உவக்காண் தோன்றும் - உவ்விடத்தே தோன்றும்.

(முடிபு) அரிவை! காலம் கார்செய்தன்று; குறும்பொறை நாடன் மார்பு நலம் படர்ந்து தோனுய் உவக்காண் தோன்றும்.

தோன்ற, அவிழ, தெறிப்ப, புறக்கொடுப்ப, வானம் உறை சிதறிக் காலத்தைக் கார் செய்தன்று என்க. மருப்பின் இரலை எனவும், அவலடையத் தெறிப்ப எனவும், நரம்பார்த்தன்ன பறவை எனவும், புரவி வள்பரிய (விரைதலால்) அஞ்சி மணி நா ஆர்த்த எனவும், நாடன் நலம் படர்ந்து தோன்றும் எனவும் கொண்டு கூட்டுக.

(வி-ரை.) 'நுதல்' என்றது நுதலையுடைய மொட்டை. இல்லம் கொன்றை என்பன அவற்றின் சிறிய யாகிய அரும்பை யுணர்த்தி நின்றன. மாயிரு: யகர வுடம்படு மெய் பெற்றது 'கிளந்தவல்ல'[1] என்னும் அதிகாரப் புறனடையாற் கொள்க. குரங்கல் - வளைதல்; 'இலைவிரி கரும்பின் கணைக்கால் வான்பூ - மாரியங் குருகி னீரிய

1. தொல். குற்றிய. எஅ.

குரங்கு' (உகிர்) எனப் பின்வரும் வந்துளது. 'குரங்குகை யுடுத்த மரமாயின் அறக்கற்று'[1] என்றார் இளங்கோவடிகளும். புரவியாது வாங்கு வயிர், நரைபார்த்தனைய பரிய எனக் கொண்டு கூட்டினர் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்; வார், நரம்பு போலச் சிறிது தூங்கும் எனப்படுமே, அதனை ஈர்த்திலன் என்பதும் அவர்தம் கருத்தாகும். அஞ்சி: அருள் காரணமாகத் தோன்றும் அச்சம். துணை யொரு வழியுள் வலை பிரித்து வருத்துதற்கும் அஞ்சுவான் தலைவ னாகலின் அவனும் மானைப் பிரிந்திருக்க ஒருப்படான் என்பது குறிப்பு.

காதல் என்ற அடையால் பறவை வண்டாயிற்று. உவக்காண்-உவ்விடத்தில், உம்பர். 'உவக்கா னெறுழ் காதலர்'[2] என்புழி, உவக் காண் என்பதற்கு, 'உம்பர்' எனப் பொருளும், 'ஓட்டி நின்ற இடைச் சொல்' என இலக்கணமும் பரிமேலழகர் எழுதினமை காண்க. குன்றம் - சிராப்பள்ளி மலை.

(மே-ள்.) செய்யுள் உறுப்பினுள் ஒன்றாகிய, நோக்கு[3] என்பதற்குப் பேராசிரியர் இச்செய்யுளை எடுத்துக் காட்டித் தம் நுண் மாண் நுழை புலம் தோன்றக் கூறியிருக்கும் உரை சுவைபடு அறிந் தின்புறற் பாலது. 'இனி அடிநிலை காறும்' என்றதனாற் செய்யுள் முழுவதும் எவ்வகை யுறுப்பும் கூட்டி நோக்கி யுணருமாறும் கூறுதும்: முல்லை யெட்பது முதலாகக் கானம என்பதீறாக காற்சொல் லியலான் வரைப்பு வகுக்கப்பட்டதாயினும் பருவங் காட்டி வற்புறுக்கும் தொழி பருவம் தொடங்கிய துணையே காண் என்று வற்புறுத்தினனென்பது நோக்கி யுணர வைத்தான்; 'உவக்காண் தோன்றும் குறும் பொறை நாடன்' என்றும் துணையும் தலைமகனது காதன் மிகுதி கூறி வற்புறுத்தினனென்பது நோக்கி யுணர வைத்தான்; ஒழிந்த அடி நிலைகாறும் பிரிந்த காலம் அணித்தெனக் கூறி வற்புறுத்தினனென் பது நோக்கி யுணர வைத்தான் எனப்படும்; என்னை?

முல்லை யென்றது 'வைகுறுதுணை' என்றதனான் அவை அரும்பி யது அணித்தென்பது பெறப்பட்டது; சின்னாள் கழியின் வைகுறுதுணை யாகாது மெல்லென்று மாகலின். இல்லமும் கொன்றையும் மெல் லென்ற பிணி யவிழ்ந்தன வென்றான், முல்லைக் கொடி கரிந்த துணை அவை முதல் கெடாது, முல்லை யரும்பிய காலத்து மலர்ந்தமையின். இரவு மருப்பிசை இரும்பு திரிந்தன்ன மருப்பு என்றதூஉம், நீர் தோய்ந்தும் வெயிலுமுந்த வெப்பம் தணிந்திலை; இரும்பு முறுக்கி விட்டவழி வெப்பம் மாறு (விட்ட) வாறு போல வெம்பா நின்ற னின்றும் என்றவாறு. 'பரலவ லடைய இரவு தெறிப்ப' எனவே, பரல்படு குழிதோறும் தெளிந்து நின்ற நீர்க்கு விருந்தின வாகலாற் பலகாலும் நீர் பருகியும் அப் பரலவலினது அடை கரை விடாது துள்ளுகின்றனவென அதுவும் பருவம் தொடங்கினமை கூறியவா றாயிற்று. 'கருவி வானங் கதழுறை சிதறி' என்பதூஉம் பலவுறுப் புங் குறைபடாது தொக்கு நின்றன மேகம் தமது விக்கத்திடைக்

---

1. சிலப். கo-கடை. 2. குறள். கசை. 3. தொல். செய். கo.

காற்றெறியப்படுதலின் விரைந்து துளி நெறிந்த வென்று நலத்தையும் புதுமை கூறினான். எனவே இவையெல்லாம் பருவந் தொடங்கியமைந்தனமையின், வற்புறுத்தற்கு இலேசாயிற்று. 'குரங்குகூப் பொலிந்த கொய்குலற் புரவி' என்பது, கொய்யாத உடம்பையும் கொய்த உடம்பை பலகாலும் கொய்ய வேண்டுதலுமுடைய குதிரை யென்றவாறு; எனவே நனது மனப்புகழ்ச்சி கூறியவாறு. அத்துணை மிகுதியுடைய குதிரை பூட்டிய வாரோலி விலக்காது மணியொலி விலக்கி வாராநின்றுள், அங்ஙனம் மாட்சிமைப்பட்ட மன்னர் தலைவன் என்றவாறு. அதற்கென்னை காரணமெனின், 'துணையொடு வந்தும் தாழுண் பறவை' எனவே, பிரிவஞ்சி யென்றவாறு. மணிநா வொலி கேட்பின் வண்டு வெருவு மாகலின் அது கேளாமை மணிநாவினை யியங்காமை யாப்பித்த மாண் விளைத் தேரருகு வாராநின்றுளென இவையெல்லாம் தலைமகள் வன்புறைக் கேதுவாயின. 'கறங்கிசை விழவி னுறந்தைக் குரூஉ, நெடும் பெருங் குன்றத் தமன்ற காந்தள்' தெய்வமலி யாகலான் அதனுள் அமன்ற காந்தளைத் தெய்வப் பூ வெனக் கூறி. அவை போதவிழ்ந்தாற் போல அவர் புணர்ந்த காலத்துப் புதுமணம் கமழ்ந்த நின் கைத் தொடிகள் அவை அரியவாகிப் பிரிந்த காலத்துப் போன்று வடிவொத்து மமைந்து குறைபட்ட துணையேயால் அவர் பிரிந்து செய்தனமையின் என இதுவும் வன்புறைக்கே உறுப்பாயிற்று. 'நிலவாறே பலவும் நோக்கி யுணர்தற்குக் கருவியாகிய சொல்லும் பொருளும் எல்லாம் மாத்திரை முதலா வடிநிலை காறும்' என அடங்கக் கூறி நோக்குதற்குக் காரணம் நோக்கென்றுள் என்பது.

'மங்கை நல்லவர் கண்ணும் மனமும் போன்று'[1] என்னும் நிகாமனிச் செய்யுள் உரையில், நச்சினார்க்கினியர் வண்டிற்குச் செவியறிவு உண்டெனக் கூறிப் 'பூத்த...தேரன' என்னும் இச் செய்யுட் பகுதியை யெடுத்துக் காட்டினர்.

'எனைநீர் மருங்கினும்'[2] என்னும் குறிஞ்சி உரையில் இச்செய்யுளையெடுத்துக் காட்டி, 'இதனுள் முல்லைக்குரித்தாகிய நிலமும் காலமும் கருப்பொருளும் இருத்தலாகிய உரிப்பொருளும் வந்தவாறு கண்டுகொள்க' எனவும், 'முதல் கரு உரிப் பொருள்'[3] என்னுஞ் சூத்திர வுரையில் இதனை எடுத்துக் காட்டி, 'முல்லைக்கு முதலும் கருவும் வந்து, உரிப் பொருளாற் சிறப்பெய்தி முடிந்தது' எனவும் முறையே கூறுவர் இளம். நச். 'குரங்குகூ ... பரிய' என்பதனையும், 'இருப்பு ... தெறிப்ப' என்பதனையும், மொழிமாற்றுப் பொருள்களுக்கு[4] உதாரணம் காட்டினர், நச்சினார்க்கினியர்.

---

1. சிவக. 2. தொல். அகத். உ. 3. தொல். அகத். உ.
4. தொல். எச்ச. உ.

(5) பாலை

[பொருள்வயிற் பிரியக் கருதிய தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.]

அளிநிலை பொருஅ[1] தமரிய முகத்தள்,
வளிநிலை கேளாள் தமியள்[1] மெல்மெல
நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூரெயிறு தோன்ற,
வறிதகத் தெழுந்த வாயல் முறுவலள்,
கண்ணிய துணரா அளவை யொண்ணுதல்
விளைநலப் படுதல் செல்லா நினைவுடன்
மூளிந்த ஓமை முதையலங் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி,
மோட்டிரும் பாறை சுட்டுவட் டேய்ப்ப
உதிர்வன படுஉம் கதிர்திகழ் சுவாஅல்
மாய்ந்த போல மழுகுநுனை தோற்றிப்
பாந்தி யன்ன சுடுமிக் கூர்ங்கல்
விரனுதி நிறைக்கும் நிரைநிலை அதர,
பரல்முரம் பாகிய பயம்மில் கானம்
இறப்ப எண்ணி ராயிவ் அகன்மா
மன்றிறை மொழிந்த நொன்றுபடு கிளவி
அன்ன வாக என்னுநள் போல,
முன்னம் காட்டி முகந்நின் உரையா
ஓவச் செய்நியின் ஒன்றுநினைந் தேற்றிப்
பாவை மாய்ந்த பனிநீர் நோக்கமொ
டாகத் தொடுக்கிய புதல்வன் புன்றலைத்
தாநீர் பயந்த துணையமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலி, மாமலர்
மறியுரு இழந்த அணியயற் றோற்றம்
கண்டே கடிந்தனம் செலவே, ஒண்தொடி
உழையம் ஆகவும் இலேவோள்
பிழையலள் மாதோ பிரிதும்நாம் எனினே.

—பாலை பாடிய பெருங்கடுங் கோ.

(சொ-ள்.) க—ள. (தெஞ்சே!) ஒள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றியினளாகிய நம் தலைவி, அளிநிலை பொருது அமரிய முகத்தள் - நாம் அளிசெய்யும் நிலையிற்பொருமல் மாறுபட்ட முகத்தினளாய், வளிநிலை கேளாள் - நாம் அழைத்தலைக் கேளாமலே, தமியள் - நாண் முதலியவற்றைத் துறந்தனளாய், மென்மெல நலம் மிகு சேவடி நிலம் வடுக்கொளா குறுக வந்து - மென்மெலச் செல்லும் இயல்பினவாய நன்மை மிக்க சிவந்த அடியால் நிலத்தில் சுவடு

(பாடம்) 1. கொள்ளாடமியன்.

தோன்ற அண்மையில் வந்து, கூர் எயிறு தோன்ற வறிது அகத்து எழுந்த வாய் அல் முறுவலள் - தனது கூரிய பற்கள் தோன்றச் சிறிது தன்னிடத்தெழுந்த மெய்ம்மை யல்லாத முறுவலுடையளாகி, கண்ணியது உணரா அளவை - யாம் எண்ணியதை உணரும் முன்பே, விரை தகைப்படுதல் செல்லா நிலையுடன் - நாம் பொருள் வயிற் பிரிதலை உடன்படாத எண்ணத்துடன்,

அ—கூ. மூளிந்த ஓமை முதையல் காட்டு நெல்லி பளிங்கத்து அன்ன பல் காய் – காய்ந்த ஓமை மரங்களையுடைய முதிய காட்டில் நெல்லியினது பளிங்கு போன்ற பல காய்கள், மோடு இரும் பாறை சுட்டு வட்டு ஏய்ப்ப உதிர்வன படூஉம்-உயர்ந்த பெரிய பாறைகளில் சிறார் விளையாடற்கு சுட்டி வைத்திருக்கும் வட்டுக்களைப் போல உதிர்ந்து கிடக்கும், கதிர் தெறு கவான் - ஞாயிற்றின் கதிர்கள் காயும் பக்க மலைகளில், பாத்தி அன்ன குடுமி கூர் கல் - பகுத்து வைத்தாலொத்த தலையினையுடைய கூரிய கற்கள், மாய்த்தபோல மழுகு நுனை தோற்றி - தீட்டப்பட்டன போலத் தேய்ந்த கூர்முனையைத் தோற்றுவித்து, விரல் நுதி சிதைக்கும் நிரை நிலை அதர - வழிச் செல்வார் விரலின் முனையைச் சிதைக்கும் கல்லொழுங்குபட்ட நிலைமையையுடைய வழிகளைக் கொண்ட, பரல் முரம்பு ஆகிய பயம் இல் கானம் - பரற் கற்களையுடைய மேட்டு நிலமாகிய வளனற்ற காட்டினை, இறப்ப எண்ணுதிர் ஆயின் - கடந்து செல்ல எண்ணுவீராயின்,

கூ—உ. அறத்தாறு அன்று என மொழிந்த தொன்றுபடு கிளவி - (காதலுடையாரை விட்டுப் பிரிதல்) அறநெறி அன்றென்றுக் கூறிய பழமை பொருந்திய சொல், அன்ன ஆக என்னுநள்போல - அங்ஙனம் சொல்லிய அளவில் கழிக என்று கூறுவாள் போல, முன்னம் காட்டி முகத்தின் உரையா - அக் குறிப்பினை முகக் குறிப்பால் உரைத்துக் காட்டி, ஓவச் செய்தியின் ஒன்று நினைந்து ஏற்றி - ஓவியம் வளராது நிற்பதுபோல் நின்று நமக்கு உடன்படாமையை நினைந்து தணிந்து, பாவை மாய்த்த பனி நீர் நோக்கமொடு - தனது கண்ணின் பாவையை மறைத்து நிற்கும் நடுக்கத்தைச் செய்யும் நீரையுடைய பார்வையுடன், ஆகத்து ஒடுக்கிய புதல்வன் புல்லிய தலை தூநீர் பயந்த துணை அமை பிணையல் மோயினள் உயிர்த்த காலை - தனது மார்பில் அடக்கிய புதல்வனது புல்லிய தலையிலுள்ள தூய நீர் தந்த இணைப்பூக்களால் தொடுத்த செங்கழு நீர் மாலையை மோந்து பெருமூச்சு எய்திய காலத்தே, மாமலர் மணி உரு இழந்த அணி அழி தோற்றம் கண்டு - அச் சிறந்த மலர் பவளம் போலும் உருவினை யிழந்த பொலிவற்ற காட்சியைக் கண்டு, கடிந்தலம் செலவே - போதலைத் தவிர்ந்தோ மன்றோ;

உகூ—அ. ஒண் தொடி உழையம் ஆகவும் இனிவோவு பிரிதும் நாம் எனினே பிழையலள் - ஒள்ளிய தொடியினளான இவள் நாம் அண்மையில் இருக்கவும் அவ்வாறு வருந்தும் இயல்பினள் பிரிவோமாயின் உயிர் உய்ந்திராள்; (ஆகலின் நாம் செல்லுமாறு எங்ஙனமோ)

(முடிபு) ஒண்ணுதல் அரிவை நிலை பொருது அமரிய முகத்தளாய், செல்லா நிகழ்வுடன், காலம் இறப்ப எண்ணுதிராயின், இளமி அன்னவாக என்னுநள் போல, முகத்திற் காட்டி, ஒன்று நினைந்தேற்றி, புதல்வன் புன்றலைப் பிணாயள் மோயினள் உயிர்த்த காலை, அணி யழி தோற்றம் கண்டு நாம் பிரிதும் எனின் பிழையலன் என்று செலவு கடிந்தனம்.

முகத்தள் கொளள் வந்து முறுவலள் உரைஅ அளவை செல்லா நிகழ்வுடன் எனவும், காட்டு நெல்லி பாறை படுஉம் கவான் கூர்ங்கல் நிறைக்கும் அரவ காணம் எனவும் கூட்டுக.

(வி-ரை.) அரிவை பொருமையை, " முள்ளுறழ் முகிழ்யெயிற் றமிழ்தூறுந் தீஞ்சொற், கள்ளினு மகிழ்செயு மெனவுரைத்து மனை யாரென், னெள்ளிமை நிருந்துவர் காதலர் மற்றவர், உள்ளுவ தெவன்கொ லறியே னென்னும் "[1] என்பது முதலியவற்றுல் அறிக. " பிரிவஞ்சும் புன்க ணுடைத்தாற் புணர்வு "[2] என்புழிப் பரிமேலழகரும் பிரிவச்சத்திற்கு இக் கலியின் பகுதியை எடுத்துக் காட்டினர். கொளா - கொண்டு; இதனைக் கொள்ள வெனத் திரிக்க; கொள்ள வென்றே பாடங் கோடலுமாம். வறிது - சிறிது; உரிச்சொல். வாய்மையற்ற நகையாவது உள்ளத்தொடு பொருந்தாத நகை. முதையலங்காடு என்பதில் அம்மும், பனிங்கத்தன்ன என்பதில் அத்தும் சாரியைகள். அறத்தா றன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி என்பதற்கு, காதலுடையாரைப் பிரிதல் அறநெறி யன்றுகின், நின்னைப் பிரியேன் என்று, இயற்கைப் புணர்ச்சிக் காலத்துரைத்த சொல் என விரித்துரைத்துக் கொள்க. ஏற்றி - ஏற்றம் என்னும் உரியடியாகப் பிறந்த விணையெச்சம்; ' கானலஞ் சேர்ப்பன் கொடுமை யேற்றி '[3] என்பது காண்க; எற்றி எனப் பாடங் கொள்வாரும் உளர். மோயினள்: விணையெச்சமுற்று; ' விணையெஞ்சு கிளவியும் வேறு பல் குறிய '[4] என்னுஞ் சூத்திர உரையில், சேனாவரையர் மோயினள் என்பதற்கு விணையெச்சம் முற்றுச் சொல்லது திரிபாய் வந்ததென்றும், நச்சினார்க்கினியர் விணையெச்சப்படர்க்கைத் தெரிநிலை முற்று என்றும் இலக்கணம் கூறினர். மணி - நண்டுப் பவளம். கழிந்தனம் செலவு என்றது பண்டொருகால் போக்கு ஒழிந்ததனைக் குறித்தது. இது, 'செலவிடையழுங்கல் செல்லாமை யன்றே, வன்புறை குறித்தல் தவிர்ச்சியாகும் '[5] என்னும் விதியால் வற்புறுத்திப் பிரிதற்குத் தலைவன் செலவழுங்கியதாம் என்க.

(மே - ள்.) [6]கரணத்தி னமைந்து '[6] என்னும் சூத்திர வுரையில் 'கை விடின் அச்சமும்' என்பதற்கு இளம்பூரணர் இச் செய்யுளை எடுத்துக் காட்டினர். 'செலவிடை யழுங்கல்'[7] என்னும் சூத்திர வுரையில், 'மணியுரு . . . பிரிது நாமெனினே ' என்னும் பகுதியைப் பேராசிரியர் எடுத்துக்காட்டி, இது வன்புறை குறித்துச் செலவழுங்குதலிற் பாலையாயிற்று என்றார்.

---

1. கலி, பாலை. க. 2. குறள். கஉடு உ. 3. குறு. சஉ.
4. தொப். எச். கூக. 5. தொல். கற்பு. சச. 6. தொல். கற்பு. ஒ.
7. தொல். கற்பு. சச.

⑥ மருதம்

[பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகற்குத் தோழி கூறியது]

அரிபெய் சிலம்பி னும்பலந் தொடலை
அரம்போ முவ்வளைப் பொலிந்த முன்கை
இழையணி பணைத்தோ ளாயை தந்தை
மழைவளந் தரூஉ மாவண் டித்தன்
பிண்ட நெல்லின் உறந்தை யாங்கண்
கழைநிலை பெருக் காவிரி நீத்தங்
குழைமான் ஒள்ளிழை நீவெய் யோளொடு
வேழ வெண்புணை தழீஇப் பூழியர்
கயந்தா டியானையின் முகனமர்ந் தாஅங்
கேந்தெழில் ஆகந்துப் பூந்தார் குழைய
நெருநல் ஆடினை புனலே இன்றுவந்
தாக வனமுலை யரும்பிய சுணங்கின்
மாயில் கற்பின் புதல்வன் தாயென
மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றியெம்
முதுமை யெள்ளலஃ தமைகுந் நிற்வி
சுடர்ப்பூந் தாமரை நீர்முதிர் பழனத்
தந்தூம்பு வள்ளை யாய்கொடி மயக்கி
வாளை மேய்ந்த வள்ளெயிற் றுணர்நாய்
முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியும்
புலவேன் மன்ற கழாஅ தாள்னவெம்
இளமை சென்று தவந்தரல் லஃதே
இனிமையெவன் செய்வது பொய்ம்மொழி யெமக்கே.

—பரணர்.

(சொ - ள்.) க—கூ. அரி பெய் சிலம்பின் - \பரல்கள் இடப் பெற்ற சிலம்பினையும், ஆம்பல் அம் தொடலை - \ஆம்பல் மலராலாகிய அழகிய மாலையினையும், அரம் போழ் அவ்வளை பொலிந்த முன்கை - \அரத்தாற் பிளக்கப்பெற்ற அழகிய வளைகளாற் பொலிந்த முன்கையினையும், இழை அணி பணை தோள் - \அணிகலன் அணிந்த மூங்கில் போன்ற தோளினையும் உடைய, ஐயை தந்தை - \ஐயை என்பாளுக்குத் தந்தையாகிய, மழைவளம் தரும் மாவண் தித்தன் - \மழைவளம் போலத் தரும் பெரிய வண்மையையுடைய தித்தனது, பிண்டம் நெல்லின் உறந்தை ஆங்கண் - \நெற் குவியல்களையுடைய உறையூராகிய அவ்விடத்தே, கழை நிலை பெருக் காவிரி நீத்தம் - \ஓடக் கோலும் நிலைத்தலில்லாத காவிரியின் நீர்ப் பெருக்கில்,

எ—கஉ. குழை மான் ஒள் இழை நீ வெய்யோளொடு - \குழை முதலாகிய மாண்புறும் ஒளி பொருந்திய அணிகளையுடைய நின்னால் விரும்பப்பட்ட பரத்தையொடு, வேழம் வெண்புணை தழீஇ - \வேழக் கரும்பாலாகிய வெள்ளிய தெப்பத்தினைக் கொண்டு, பூழியர் கயம்

நாடு யானையின் முகன் அமர்ந்து ஆங்கு -\அவ்விடத்துப் பூமி நாட்டாரது குளத்தினாடிச் சென்று விளையாடும் களிறும் பிடியும் போல முகமலர்ச்சியுற்று, எந்து எழில் ஆகத்துப் பூதார் குழைய -\உயர்ந்த அழகிய மார்பிலுள்ள மலர்மாலை அழுகெட, நெருநல் ஆடினை புனலே -\நேற்றுப் புனலாடினை ;

கக—டு. இன்று வந்து -\இன்று இங்கு வந்து, ஆகம் வனம் முலை அரும்பிய சுணங்கின் \மார்பிலுள்ள அழகிய முலையில் தோன்றிய தேமலையும், மாசு இல் கற்பின் \குற்றமற்ற கற்பினையுமுடைய, புதல்வன் தாய் என - என் புதல்வன் தாயே என்று, மாய்ப் பொய் மொழி சாயினை பயிற்றி \வஞ்சனை பொருந்திய பொய்ம் மொழியினை வணங்கிப் பலகாலும் கூறி, எம் முதுமை எள்ளல் \எம் மூதுமை நிலையினை இகழாதேகொள், அஃது அமைகும் -\அம் முதுமைக்கு நாங்கள் அமைவோம் ;

கசு—உ0. சுடர் பூ தாமரை நீர் முதிர் பழனத்து -\நீப்போலும் தாமரைப் பூக்களையுடைய நீர்மிக்க வயலில், அம் தூம்பு வள்ளை ஆய் கொடி மயக்கி -\அழகிய உட்டுளையுடைய வள்ளையினது மெல்லிய கொடிகளை முழக்கி, வாளை மேய்ந்த வள் எயிற்று நீர் நாய் -\வாளை மீன்களைத் தின்ற கூரிய பற்களையுடைய நீர்நாய், முள் அரைப் பிரம்பின் முது அரில் செறியும் \முட்கள் பொருந்திய தண்டினையுடைய பிரம்பினது பழைய தூறுகளில் தங்கி யிருக்கும் (இடங்களையுடைய) பல் வேல் மத்தி கமழ் ஆர் அன்ன -\பலவேற்படையினையுடைய மத்தி யென்பானது கமழ் ஆர் என்னும் ஊரினை யொத்த,

உ0—உக. எம் இளமை சென்று தவ தொல்லஃது \எமது இளமை கழிந்து மிகப் பழைதாயிற்று ;

உஉ. பொய் மொழி எமக்கு இனிமை எவன் செய்வது \ இனி நின் பொய்ம்மொழி எங்கட்கு இனிமை செய்வதென்பது எங்ஙனம் ஆகும் ?

(முடிபு) காவிரி நீத்தத்து நெருநல் புனல் ஆடினை ; இன்று வந்து, கணங் கினையும் கற்பினையுமுடைய புதல்வன் தாயெனப் பொய்ம்மொழி பயிற்றி எம் முதுமை எள்ளல் ; அஃது அமைகும் ; எம் இளமை சென்று தவத் தொல்லது ; நின் பொய்ம்மொழி எமக்கு இனிமை செய்வது என்னை ?

மெம்பினையும் தொடலையினையும் முன்கையினையும் தோளினையுமுடைய ஐயை எனவும், நீர்நாய் மூதினிற் செறியுங் கழார் எனவும் இயையும்.

(வி - ரை) ஐயையது - கற்பின் சிறப்பு நோக்கி. ஐயை தந்தை என்றார். மழை வளம் தரூஉம் என்பதற்கு மழையாகிய வளத்தினைத் தரும் எனக் கொண்டு, தித்தனது செங்கோன்மை கூறிற்று எனலுமாம் ; மழை வளம் தரும் ஐயை என்றியைத்தலும் பொருந்தும். வேழக் கோலப் புனையாகக் கொண்டு புனலாடுதல் 'கொடுங் கோல் வேழத்துப் புகை துனையாகப், புனலாடு கேண்மை' (கஅசு) எனவும், யானை போலப் புன தழுவிப் புனலாடுதல், 'தார்தூங் களிற்றிற் றகைப்புனை தழீஇ . . . காவிரிக்கோடு தோய் மலிர்நிலை

யாடியோரே' (நகூ) எனவும், 'மைந்துமலி களிற்றிற் றகிலப்புனை தமீஇ . . . நீர் பெயர்ந்தாடிய' (உகூ) எனவும் பின்னரும் வருதல் காண்க. யானை யெனவே பிடியும் அடங்கிற்று. ஆங்கு, அசை. புதல்வன் தாய் என்றது கொண்டு, முதுமை எள்ளல் என்றுள். நெருநல் பரத்தையுடன் புனலாடினவன் இன்றுவந்து சுணங்கினையும் கற்பினையும் பாராட்டுதலின் அதனை மாயப் பொய்ம்மொழி யென்றுள். பயிற்றல் - பலகாற் சொல்லல். அஃது அமைகும் என்பதற்கு நீ செய்கின்ற பரத்தமைக்கு யாம் அமைவேம் என்றுமாம். நில், விழைவின்கண் வந்தது: அசையுமாம். அரில் - தூறு; பினக்கம். தொல்லஃது: ஆய்தம் விரித்தல். ட

(உ - றை.) "நீர் நாய் வாளைக்குக் காவலாகிய வள்ளையினது நிலையை நெகிழ்த்து, இழிந்ததாகிய வாளையை நுகர்ந்து, பிரம்பாகிய முதிய தூற்றிலே தங்கினாற்போல, நீயும் பரத்தையர்க்குக் காவலாகிய தாய் முதலாயினரது நிலைமையை நெகிழ்த்துக் குலமகளிரல்லாத விலைமகளிரை நுகர்ந்து, முன்பு நுமக்குண்டாகிய எங்கள் பழமையைப் பற்ற, ஒரு பயன் கருதாது தங்குதல் மாத்திரத்திற்கு எம்மில்லில் வந்தீ ரென்றுளாம்."

(மே - ள்.) 'வைகுறு விடியல்'[1] என்னும் சூத்திர வரையில் இச்செய்யுளை இத் துறைக்கே காட்டி, இது இளவேனில் வந்தது என்றும், 'மெய்ப்பெயர் மருங்கில் வைத்தனர் வழியே'[2] என்னும் சூத்திரத்து, புறத்திணையாற் கொண்ட மெய்ப் பெயரிடம் பற்றி அகத்திணைப் பொருள் நிகழவும் பெறும் எனக் கூறி, 'அரி பெய் சிலம்பின்' என்னும் அகப்பாட்டினுள் நித்தன் எனப் பாட்டுடைத் தலைவன் பெயரும், பிண்ட நெல்லின் என நாடும், உறந்தை என ஊரும், காவிரி யாடினை எனை யாறுங் கூறிப் பின்னர் அகப்பொருள் நிகழ்ந்தவாறுங் கொள்க என்றும், 'நிகழ்தகை மருங்கின்'[3] என்னும் சூத்திரத்து, 'ஆகவனமுலை . . . சாயினை பயிற்றி' என்பது புலவிக்கண் தலைவன் புகழ்ந்தது என்றும் உரைத்தனர் நச்.[4] "மூப்பே பிணியே' என்னும் சூத்திரத்து 'மாயப் பொய்ம்மொழி . . . நில்ல' என்பதனைத் தன்கட் டோன்றிய மூப்புப் பொருளாக இளிவரல் பிறந்தது - என்பதற்கு எடுத்துக் காட்டினர் பேராசிரியர்

---

(7) பாலை

தலைமகள் [மகட் போக்கிய செவிலித் தாய் சுரத்திடைப் பின்சென்று கவ்விப் பிறைக கண்டு சொல்லியது.]

முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின்
நிலைமுடி சான்ற நுண்தழை யுடையை
அலமரல் ஆயமொ டயாவுயிர்த் தணங்கும் படாஅல்
மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய

---

1. தொல். அகத். ன. 2. தொல். புறத். கூ. 3. தொல். பொருளி. கூ. 4. தொல். மெய். கூ.

கூ காப்பும் பூண்டிகின் கடையும் போகலை
பேதை அல்லை மேதையங் குறுமகள்
பெதும்பைப் பருவந் தொதுங்கினை புறந்தென
ஒண்சுடர் நல்லில் அருங்கடி நீவித்
தன்கிதை வரிநல் அஞ்சி இன்கிலை

கஂ ஏறுடை இனத்த நாறுயிர் நவ்வி
வேலுகாண் பிணையிற் போகி ஈங்கோர்
தோலிவில் வெள்வேல் விடலையொ டென்மகள்
இச்சுரம் படர்ந்த நோளே ஆயிடை
அந்தக் கள்வர் ஆதொழு அறுந்தெனப்

கீஞ. கடு பிற்படு பூசலின் வழிவழி யோடி
மெய்ந்நிலைப் [1]படுநல் செய்யேன் இந்நிலை
நின்னெடு வினவல் கேளாய் பொன்னெடு
புலிப்பல் கோத்த புலம்புமணித் தாலி
ஒலிக்குழைச் செயலை உடைமான் அல்குல் அழூஉ.

உஂ ஆய்சுனைப் பலவின் மேய்கலை உகிர்த்த
துய்த்தலை வெண்காழ் பெறூஉ உங்
கற்கெழு சிறுகுடிக் கானவன் மகளே

— கயமனார்.

(சொ - ள்.) கூ—கஂ. இன் சிலை ஏறு உடை இனத்த - இனிய முழக்கங்கொண்ட ஆண்மானுகிய இனத்தினையுடைய, நாறு உயிர் நவ்வி - உயிர்ப்புத் தோன்றும் இளைய மானே!

க—எ. (என் மகளை நோக்கி யான்), மேதை அம் குறுமகள் - அறிவினையுடைய இளைய மகளே! முளை முகஞ் செய்தன - நினக்கு முலைகள் அரும்பின, முள் எயிறு இலங்கின - (விழுந்தெழுந்த) கூரிய பற்கள் ஒளி கொண்டன, தலை முடி சான்ற - கூந்தல் முடித்தல் அமைந்தன, தண் தழை உடையை - தண்ணிய தழையுடை கொண்டனை (ஆதலின்). அலமரல் ஆயமொடு யாங்கணும் படாஅல் - சுழன்று திரியும் நின் ஆயத்தாருடன் எங்கணும் போகற்க, மூப்புடை முதுபதி தாக்கு அனங்கு உடைய - தொன்மை வாய்ந்த இந்தப் பதியின் இடங்கள் தாக்கி வருத்தும் தெய்வங்களை யுடையன, காப்பும் பூண்டிகின் - (இவற்றுல்) நீ காவலும் எய்தினை, கடையும் போகலை - இனி நீ நம் வாயிலகத்தும் போகற்பாலை யல்லை, பேதை அல்லை - நீ பேதைப் பருவத்தினை யல்லை, பெதும்பைப் பருவத்து புறத்து ஒதுங்கினை எனை - இப் பெதும்பைப் பருவத்து நீ புறத்துப் போனுய் என்னை என்று நான் கூற (அது கேட்டு).

கஎ—உஉ. பொன்னெடு புலிப்பல் கோத்த புலம்பு மணித் தாலி - பொன்னலியன்ற புலிப்பல்லொடு கோக்கப்பெற்ற தனி மணித் தாலியினையும், ஒலி குழை செயலை உடை மான் அல்குல் - நமைத்த அசோகந் தளிரானாலாய தழையுடையால் மான்புறும் அல்குலினையும்

(பாடம்) 1. படுதல் செல்லேன்.

உடைய, பலவின் ஆய் கனி மேய் கலி உதிர்த்தபலாவினது சிறந்த கனிகளை உண்ணும் முசுக்கலைகளால் உதிர்க்கப்பெற்ற, துய் தலை வெண் காழ் பெறாஉம்தலையில் ஆர்க்கினையுடைய வெள்ளிய பலாவித்துக்கள் எங்கணும் கொள்ளக்கிடக்கும், கல்கெழு சிறுகுடிக் கானவன் மகள்மலையிடத்தே பொருந்திய சிறு குடியை யுடைய கானவன் மகளாகிய என் மகள்,

அ—கூ. தன் சிதைவு அறிதல் அஞ்சிதனது குற்றத்தினை நான் அறிந்தமைக்கு அஞ்சி, ஒண்சுடர் நல்இல் அருங்கடி ஈவிமிக்க ஓவி பொருந்திய எங்கள் நல்ல இல்லின் அரிய காவலைக் கடந்து,

கக—கூ. வலை கான் பிணையின் போகிவலையினை முன்னர்க் காணும் பெண் மான் அதனைத் தப்பி யோடுமாறு (விரைந்து) சென்று, தொலைவுஇல் வெள்வேல் ஓர் விடலையொடுதோற்றல் இல்லாத வெள்ளிய வேலினையுடைய ஒரு தலைவனோடு, இச் சுரம் சங்கு படர்ந்தோள்-இச் சுரத்தே இந் நெறியில் சென்றனள்.

கஙு—சூ. அ இடை-அப்பொழுதே, அத்தக் கள்வர் ஆ தொழு அறுத்தென-அருஞ்சுரத்துக் கள்வர் ஆக்களைத் தொழுவினின்றுங் கொண்டகன்றனராக, பின் படு பூசலின் வழிவழி ஓடி அவர்கள் பின் சென்று செய்யும் போரினைப்போலப் பின்னே பின்னே (தொடர்ந்து) செல்லுமிடங்களி லெல்லாம் ஓடி, மெய்த் தலைப்படுதல் செய்யேன்-அவள் மேனியை அணுகப் பெற்றிலேன்;

கூ—சூஎ. இத்தலை நின்னொடு வினவல் கேளாய்இவ்விடத்து நின்னொடு வினவுகின்றதை விரும்பிக் கேட்டு (அவர்கள் செல்லும் நெறியினைக் கூறுவாயாக.)

(முடிபு) நவ்வி! யான் என் மகளை நோக்கி, பேதையல்லை: முகஞ் செய்தன, இலங்கின, சான்ற, உடையை, அணங்குடைய, ஆதலால் காப்பும் பூண்டின், படாஅல், இனி யாங்கணும் போகலை எனவும், பெறும்பைப் பருவத்து துஞ்சினை புறத்தெனவும் கூற, அக் கானவன் மகள் ஆகிய என் மகள் அஞ்சி, நீவி, போகி, விடலையொடு சங்குப் படர்தந்தோள்; வழிவழி யோடி மெய்த்தலைப் படுதல் செய்யேன்; இத்தலை நின்னொடு வினவல் கேளாய்; (அவர்கள் செல்லும் நெறி கூறுவாயாக.)

தாவியினையும் அல்குலினையும் உடைய கானவன் மகள் எனவும், கானவன் மகளாகிய என் மகள் எனவும் கூட்டுக.

(வி-ரை.) இச் செய்யுளின் துறை கூறிய நச்சினார்க்கினியர், இது கானவன் மகளைக் கண்டு கூறியதுமாம் என, 'எஞ்சியோர்க்கும்[1] என்னும் சூத்திரத்துக் கூறலின், 'பொன்னெடு . . . கானவன் மகளே' எனுமிச் செய்யுட் பகுதியை, செவிலி தான் கானகத்தே கண்டதோர் மகளை விளித்துக் கூறியதாகக் கோடலுமாம்; அங்ஙனம் கொள்ளின், 'இன்சிலை . . . போகி' என்ற பகுதியை, 'இன்சிலை எறுடையினத்த வலைகாண் நாறுயிர் நவ்விப் பிணையிற்போகி' எனக் கூட்டி யுரைத்துப் போகிப் படர்தந்தோள் என முடிக்க. 'மூப்பு'

1. தொல். அகத். சூஉ.

என முன் வந்தமையின், 'முதுபதி' பதியென்னும் பெயர் மாத்
நிரையே யாகும். சின் - அசை. நவ்வியின் இளிய குரலிற் பாராட்டு
வாள் இன்சிலை என்றுள். வெப்பம் தாங்கலாற்றாது உயிர்த்திடும்
இளமைச் செவ்வியினதாதல், நாறுயிர் நவ்வி என்றதனாற் குறிக்கப்
பட்டது. வலியைச் செய்மைக்கண் கண்டதொரு பிணை அதனை
அணுகாது விலகியோடி மறைவது போல, தனது இற் செறிப்பினைக்
கண்டஞ்சிக் கழிந்தனள் என்றுள். நாறுதல் - தோன்றுதல். உயிர்-
உயிர்ப்பு. அத்தக் கள்வர் என்றது வெட்சி மறவரை. பிற்படு
பூசல் - பின்னே தொடர்ந்து சென்று மீட்கும் கரந்தையாரின் போர்.
அவள் காவகமகளாதலின் நினக்கும் ஓர் அடைவு உண்டு; ஆதலின்
கூறுவாயாக என்றுள். பூசலின் : இன், ஒப்பு.

(மே - ள்.) தலைவி கூற்று நிகழ்த்துமாறு கூறும் 'மறைந்தவற்
காண்டல்'[1] என்னும் சூத்திரத்துத் 'தமர்தற் காத்த காரண மருங்
கினும்' என்னும் பகுதிக்கு, இச் செய்யுளையும் எடுத்துக் காட்டி,
(தலைவி தோற்றப் பொலிவு கண்டு தமர் அவளை வெளியிற் செல்
லாது காத்தலர் என்பார்) 'என்றன தோற்றப் பொலிவாற் காத்தன'
என்றும், 'எஞ்சியோர்க்கும்'[2] என்ற சூத்திரத்துச் செவிலிக்குங்
கூற்று உண்டு எனக் கூறி, 'முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்
கிவட்' என்னும் அகப்பாட்டு 'மகட் போக்கிய செவிலித்தாய் சுரத்
திடைப்பின் சென்று நவ்விப் பிணையைக் கண்டு சொற்றது : செவிலி,
கானவர் மகளைக் கண்டு கூறியதுமாம்' என்றும் கூறுவர் நச்
'மரபே தானும்'[3] என்ற சூத்திரத்துப் 'புலிப்பற்கோத்த... அல்குல்'
எனும் இச் செய்யுட் பகுதியைக் காட்டி 'என்பது பருவத்திற்கேற்ற
அணி கூறியது' என்பர் பேராசிரியர்.

---

⑧ குறிஞ்சி

[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லெதிர்ப்
தலைமகள் சொல்லியது.]

சுயற் புற்றத் தீர்ம்புறத் நிறுத்த
குறும்பி வல்சிப் பெருங்கை யேற்றை
தூங்குதோல் துறிய வள்ளுகிர் கதுவலின்
பரம்புமதன் அழியும் பாளட் கங்குலும்
அரிய அல்லமன், இகுளை பெரிய
கேழல் அட்ட பேழ்வா யேற்றை
பலாவமல் அடுக்கம் புலவ ரர்க்கும்
கழைநரல் சிலம்பின் ஆங்கண் வழையொடு
வாழை யோங்கிய நாழ்கண் அசும்பில்
படுகடுங் களிற்றின் வருந்நந் சொலிய
பிடிபடி முறுக்கிய பெருமரப் பூசல்
விண்டோய் விடரகந் நியம்பும் அவர்நாட்

---

1. தொல். களவு. ௨0. 2. தொல். அகத். சூ௨. 3. தொல். செய். ௰0.

8] களிற்றியானை நிரை உடு

டெண்ணரும் பிறங்கல் மானதர் மயங்காது
மின்னுவிடச் சிறிய ஒதுங்கி மெல்மெலத்
கடு துளிதலைத் தலைஇய மலியே ரைப்பால்[1]
சிறுபுறம் புதைய வாரிக் குரல்பிழிபூஉ
நெறிகெட விலங்கிய நீயிர் இச்சுரம்
அறிதலும் அறிதிரோ என்னுநர்ப் பெறினே.

—பெருங்குன்றூர் கிழார்.

(சொ - ள்.) டு—கூ. இருளே / தோழியே! பெரிய கேழல் அட்ட பேழ் வாய் ஏற்றை / பெரிய ஆண்பன்றியினைக் கொன்ற பிளந்த வாயினையுடைய புலியேறு, பல அமல் அடுக்கம் / பல மரங்கள் செறிந்த பக்க மலைகளில், புலவு நாற்கும் / புலால் நாற அதனை இழுத்துச் செல்லும் இடமாகிய, கழை நரல் சிலம்பின் ஆங் கண் / மூங்கில்கள் ஒலிக்கும் மலையாய அவ்விடத்து, வழையொடு வாழை ஒங்கிய தாழ் கண் அகம்பில் / சுரபுன்னையோடு வாழை ஒங்கி வளர்ந்த தாழ்ந்த இடத்தையுடைய நீர் அறுக் குழியில், படு கடுங் களிற்றின் வருத்தம் சொலிய / அகப்பட்ட கடிய களிற்றின் வருத்தத்தினை நீக்கற்கு, பிடி படி முறுக்கிய பெருமரப் பூசல் - அதன் பெண் யானை அக் களிறு ஏறுதற்குப் படியாகப் பெரிய மரத்தினை முறித்திட்ட ஓசை, விண் தோய் விடரகத்து இயம்பும் அவர் நாட்டு / வான் அளாவிய மலை முழையின்கண் சென்றொலிக்கும் நம் தலைவர் நாட்டில்,

கூ—சு. எண் அரும் பிறங்கல் மான் அதர் மயங்காது மின்னுவிடச் சிறிய மென்மெல ஒதுங்கி - எண்ணற்கரிய குன்றுகளின் பக்கமாகச் செல்லும் மான்களின் நெறிகளில் மயங்கித் திரியாது மின்னல் வழிகாட்டச் சிறுகச் சிறுக மெத்தென நடந்து,

சு—சை. சுயல் புற்றத்து சுர்ம் புறத்து இறுத்த குறும்பி வல்சி பெருங் கை ஏற்றை - சுயல்கரை யுண்ட்ட புற்றின் குளிர்ந்த மேற் புறத்தே தங்கிய புற்றரு சோருகிய இரையினையுடைய பெரிய கையினையுடைய ஆண் கரடியின், தூங்கு தோல் துதிய வள் உகிர் கதுவலின் - தொங்கும் தோல் உறைக்குள் பொருந்தியிருக்கும் கூரிய நகம் பற்றிக் கொள்வதால், பாம்பு மதன் அழியும் பாறள் கங்குலும் - பாம்பு தனது வலிமையற்றொழியும் பாதிநாளிரவும் (செல்லுதல்),

சு—அ. துளி தலைத் தலைஇய மணி ஏர் ஐம்பால் - மழைத் துளியைத் தன்னிடத்தே கொண்ட நீலமணிபோன்ற அழகிய கூந்தல், சிறுபுறம் புதைய வாரி குரல் பிழியூஉ - பிடரி மறையப் பின்னே கோதி அம் மயிர்த்தொகுதியைப் பிழிந்து விட்டு, நெறி கெட விலங்கிய இச்சுரம் நீயிர் அறிதலும் அறிதிரோ என்னுநர்ப் பெறின் - வழிகள் செல்ல முடியாதபடி பின்னிக்கிடக்கும் இச்சுரத்

(பாடம்) 1. மழையே சைப்பால்.

நின் நெறியினை நீவிர் முன்பு அறிதலும் செய்வீரோ என்று பரி
வுற்று வினவுவாரைப் பெறின்.

டு. அரிய அல்ல மன் - நமக்கு அரியன அல்லவாம்; (அற்றோ
அது பெற்றிலோமே!)

(முடிபு) இகுளை! அவர் நாட்டு மென்மெல ஒதுங்கிப் பாலுட்கங்குலும்
(செல்லல்), வினவுவாரைப் பெறின், அரிய அல்ல மன்.

ஏற்றை சாக்கும் ஆங்கண் அகும்பில் படுகளிறு என்க.

(வி - ரை.) 'ஏற்றை' என்பது, "ஆற்றலொடு புணர்ந்த ஆண்
பாற்கெல்லாம், ஏற்றைக் கிளவி யுரித்தென மொழிப"[1] என்பதனால்,
கரடி புலி முதலியவற்றின் ஆணிற்கே குறிப்பதொரு மரபுப் பெய
ராகும். துதி - உரை. புலர என்றே பாடங்கொண்டு புலால் நாற
எனலுமாம். அறிதலும் மறிதிரோ - இங்ஙனம் வினா யிரட்டிக்குங்
கால் பின்னது 'செய்தல்' என்னும் பொது வினையாகக் கொள்ளப்
படும்;[2] "அறிதலும் அறிதியோ பாக" என்பதும் காண்க. பிறங்கல்,
பிறங்குகல் என்பதன் விகாரமாம். மின்னுவிட - மின் வழிவிட.
ஒதுங்கி - ஒதுங்க எனத் திரித்தலுமாம். மணியார் ஐம்பால்: ஏர்,
உவம உருபுமாம்.

(உ - றை) 'சயற்புற்றத்து . . . மதனழியும்' என்பதற்கு,
"ஏற்றையானது பாம்பை வருத்தவேண்டும் என்னும் கருத்தில்லை
யாயினும், அது தன் காரியம் செய்யவே வள்ளுகிர் படுதலாகிய அவ்
வளவிற்குப் பாம்பு வலியழிந்தாற்போல, அவர் நம்மை வருத்தவேண்
டும் என்னும் கருத்தில்லையாயிருக்கவே, தமது காரியமாகிய களவின்
பத்திலே ஒழுகவே, ஆறின்னுமை கூறின்னுமை முதலாகிய இவ்வள
விற்கே நாம் வருந்தும்படியாய் விட்டது" என்றும், பெரிய கேழ
லட்ட . . . புலரவீர்க்கும்' என்பதற்கு, "புலியானது தான் நுகர்தற்
பொருட்டுக் கேழலிலட்டுப் பழ நாற்றத்தையுடைய பலாவமலடுக்
கம் புலர ஈர்த்தாற்போல, அவரும் இன்பந் துய்த்தற்பொருட்டு
வந்து நம்மைக்கூடி, அக்கூட்டத்தாலே புகழ்ச்சியை யுடைத்தாகிய
நம் குடியை இகழ்ச்சியுடைத்தாம்படி பண்ணினர்" என்றும், 'வழை
யொடு . . . விடரகத் தியம்பும்' என்பதற்கு "வாழை நுகர வந்த
யானை அதன் அயலாகிய அகும்பின் குழியிலே விழுந்ததாகப் பின்பு
அக்குழியினின்றும் ஏறமாட்டாது வாழையாகிய உணவையும் இழந்
துழிப், பிடி அது ஏறுதற்குப் படியாக மரம் முறிக்கின்ற ஓசை
விண்டோய் விடரகத்து இயம்பினாற்போல, அவரும் நமது கலம்
நுகர வந்து களவொழுக்கமாகிய குழியிலே விழுந்து, இக்கள
வொழுக்கமாகிய இதனின் விட்டு வரையவுமாட்டாது, நமது காவலரு
மையால் இக்களவொழுக்கினை நுகரவுமாட்டாது துயரப்படு
கின்றுழி, அறத்தொடு நிலை முதலாகிய இவற்றுள் மகளிராகிய
நாமே வரையுமுயலும் வழி, அம்முயற்சியானே னைரெல்லாம் அறி
யும்படி பண்ணினர்" என்றும் கூறுவர் குறிப்புரைகாரர்.//

1. தொல். மரபு. சக. 2. நற். கூக.

(மே - ள்.) 'அறக்கழிவுடையன[1] என்னும் சூத்திரத்து, இச் செய்யுளுள் 'பாம்பு மதன் . . . இகுளை' என்ற பகுதியைக் காட்டி, இதனுள், தலைவி செல்வாமென்றது, சிறைப்புறமாக வரைவு கடாயது பொருட்பயன் தருதலின், அறக்கழிவுடையதேனும் அமைந்தது என்றனர் நச். 'மாட்டும் எச்சமும்'[2] என்னுஞ் சூத்திரத்து உரையில், இச் செய்யுளுள் முதலும் கருவும் முறை பிறழ வாராமையின், இதனைத் துறை வகையின்றி வந்தது என்பர். பேராசிரியர்

---

9. பாலை பாடியவர் - உருத்திரங்கண்ணனார்

[வினை முற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.]

கொல்விளைப் பொலிந்த கூர்ங்குறும் புழுகின்[3]
வில்லோர் தூணி விங்கப் பெய்த
அப்புறுவை ஏய்ப்ப அரும்பிய இருப்பைச்
செப்படர் அன்ன செங்குழை அகந்தோ
நிழுநின் அன்ன நீம்புழல் துய்வாய்
உழுதுகாண் துளைய வாகி ஆர்கழல்
பாலி வானிற் காலொடு பாறித்
துப்பின் அன்ன செங்கோட் டியவின்
நெய்த்தோர் மீமிசை நினைத்நிற் பரிக்கும்
அத்த நண்ணிய அங்குடிச் சிறார்க்
கொடுநுண் ஓதி மகளிர் ஒக்கிய
தொடிமான் உலக்கைத் தூண்டுரற் பாணி
நெடுமால் வரைய குடிஞையோ டிரட்டுங்
குன்றுபின் ஒழியப் போகி உரந்துரந்து
ஞாயிறு படினும் ஊர்சேய்த் தெனாது
துனைபரி துரக்கும் துஞ்சாச் செலவின்
எம்மினும் விரைந்துவல் லெய்நிப் பன்மாண்
ஓங்கிய நல்லில் ஒருநிறை நிலைஇப்
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
குன்றுபுகு மாலை நின்சிறுள் எய்நிக்
கைகலியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை அன்ன பின்னகந் நிண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணெடு மிடைந்த கற்பின் வாள்நுதல்
அந்நீர் நெளிவிக் குறுமகள்
'மெல்சிறுள் பெறநசைஇச்[4] சென்ற என் நெஞ்சே.

—கல்லாடனார்.

---

1. தொல். பொருளி. உச. 2. தொல். செய். உகக.
(பாடம்) 3. குறும்பெயின். 4. மென்சிறு நசைஇ.

(சொ - ள்.) க—கo. கொல் விசைப் பொலிந்த - கொற்றொழி லாற் சிறந்த, கூர் குறு புழுகின் - கூரிய குறிய புழுகெனப் பெயரிய, வில்லோர் தூளி வீங்கப் பெய்த - வில்வீரர் அம்புக் கூட்டில் மிகப் பெய்திருக்கும், அப்பு நுவி ஏய்ப்ப - குப்பி நுனியை ஒப்ப, அரும் பிய இருப்பை - அரும்பிய இருப்பையது, செப்பு அடர் அன்ன - செப்புத் தகட்டை யொத்த, செங்குழை அகம்தொறும் - சிவந்த தளிர்களிலிடந்தொறும், இழுதின் அன்ன தீம்புழல் துய்வாய் - நெய்யை யொத்த இனிய துளையுள்ள பூக்கள், ஆர் கழல்பு - ஆர்க்குக் கழன்று, உழுதுகாண் துளையவாகி - காம்பிலே நீக்கிக் காணத்தக்க துளையினை யுடையவாய், ஆவி வாளிற் காலொடு பாறி - வானினின்று விழும் பளிக்கட்டி போலக் காற்றுற் சிதறுண்டு, துப்பின் அன்ன செங் கோட்டு இபவில் - பவளம் போன்ற சிவந்த மேடாகிய வழிகளில், நெய்த்தோர் மீமிசை நிணத்தில் பரிக்கும் - குருதியுள்ள கொழுப் பினைப் பரக்கும், அந்தம் நண்ணிய அம குடிச் சிறார் - சுரத்திலே பொருந்திய அழகிய குடிகளையுடைய சிற்றார்க் கண்ணே.

கக—உ. கொடு நுன் ஒறி மகளிர் ஒக்கிய தொடிமான் உலக்கை தூண்டு உரல் பாணி - வளைந்த நுண்ணிய கூந்தலினை யுடைய பெண்டிர்கள் உயர்த்த பூண்மாண்ட உலக்கையாற் குற்றும் உரலினின் றெழும் ஒலி,

கஉ—ச. நெடுமால் வரைய குடிஞையோடு இரட்டும், குன்று நெடிய பெரிய பக்க மலையிலுள்ள ஆந்தை யொலியொடு மாறி மாறி ஒலிக்கும் குன்றுகள், பின் ஒழியப் போகி - பின்னே ஒழிய முன்னே போய்,

கச—எ. ஞாயிறு படினும் ஊர் சேய்த்து எனாது - ஞாயிறு மறைந்திடினும் ஊர் சேய்மையிடத்தது என்று கூறி யொழியாது, துணை பரி உரம் தூர்ந்து - விரைந்து செல்லும் குதிரைகளை வலியாற் செலுத்தி, தூசக்கும் - மேலும் மேலும் முடுக்குகின்ற, துஞ்சாச் செல வின் - மடிதல் இல்லாத போக்கினையுடைய, எம்மினும் - எம்மைக் காட்டினும்,

உச—சு. நாணுடு மிடைந்த கற்பின் - நாணுடு செறிந்த கற்பினையும், வாள் நுதல் - ஒள்ளிய நெற்றியினையும், அம் தீங் கிளவி - அழகிய இனிய சொல்லினையுமுடைய, குறு மகள் - இளையோளது, மெல் தோள் பெற நசைஇ சென்ற - மெல்லிய தோளை அடைதற்கு விரும்பிச்சென்ற, என் நெஞ்சு - என் நெஞ்சம்,

கஎ. விரைந்து வல் எய்தி - மிக விரைந்து சென்று,

கஎ—உங. பல் மான் ஓங்கிய நல் இல் - பல கட்டுக்களால் மாண்புற உயர்ந்த நல்ல இல்லில், ஒரு சிறை நிலை இ - ஓரிடத்தே நின்று, பாங்கர் பல்லி படுதொறும் பரவி - நற் பக்கத்தே பல்லி ஒலிக்கும் தோறும் அதனைப் போற்றி, கன்று புகு மாலை நின்றோள் எய்தி - ஆன் கன்றுகள் இல்லிற்கு வந்தறும் மாலைக் காலத்தே நின்றவளை அடைந்து, கை கவியாச் சென்று குறுகி கண் புதையா - கையைத்

கவித்துச் சென்று குறுகிக் கண்ணைப் புதைத்து, பிடிக்கை அன்ன பின்னகந் தீண்டி - பெண் யானையின் கையை ஒத்த. பின்னின கூந்தலைத் தீண்டி, தொடிக் கை தைவர தோய்ந்தன்று கொல் - அவளது தொடியணிந்த கை பொருந்தத் தழுவியது கொல்லோ!

(முடிபு) சிறார் உரம் பாணி இரட்டும் குன்று ஒழியப் போகித் துஞ்சுச் செலவின் எம்மினும் எம் நெஞ்சு விரைந்து சென்று மாலை நின்றோள் எய்தக் குறுகித் தோய்ந்தன்று கொல்.

(வி - ரை.) புழுவின் அப்பு எனக் கூட்டி, புழுகாகிய அப்பு என்க. புழுகு - அம்பின் தலையிற் செறிக்கும் குப்பி; இது மல்லிகை மொட்டு எனவும்படும். துய்வாய் - துய்யைத் தன்னிடத்தே யுடைய பூ; துய் - பஞ்சு. இழுதினன்ன பூ எனவும் தீம் பூ எனவும் இயையும். ஆலிவானின் என்பதனை வானின் ஆலி என மாறுக. ஆலி - நீர்க்கட்டி; ஆலம் - நீர். காலொடு - காலால். துப்பின் அன்ன - சாரியை நிற்க உருபு தொக்கது. பரிந்தல் - சுண்டுப் பரத்தல். பாணி - உலக்கையாற் குற்றும்பொழுது பாடும் வள்ளைப் பாட்டுமாம். இரட்டுதல் - மாறி யொலித்தல். வல் விரைந்து என மாறுக. பல்லி சொல்லுந்தொறும் பரவுதல் உலக வழக்கு. கன்று புகுதல் மாலைக்கு அடை. தன் வருகையைக் காண விருப்புற்றுத் தலைவி இங்ஙனம் நிற்பள் எனத் தலைவன், பாவிக்கின்றான். எப்பொழுதும் நெஞ்சு வல்விரைந்தெய்தி என்றது, தலைவன் தலைவியைக் காண்டற்கு விரையும் விதுப்புத் தோன்ற நின்றது. நெஞ்சு எய்திக் கை கவியாச் சென்று குறுகித் தீண்டித் தோய்ந்தன்று என்பது, 'நோயும் இன்பமும்'[1] என்னும் சூத்திரத்து, 'உறுப்புடையதுபோல் . . . நெஞ்சொடு புணர்த்தும்' என்பதனால் அமைந்த வழுவமைதி யாகும்.

(மே - ள்.) 'நோயு மின்பமும்'[2] என்னுஞ் சூத்திர வுரையில் 'கை கவியாச் சென்று . . . என்நெஞ்சு' இஃது உறுப்புடையது போல் உவந்துரைத்தது' என்று நச்சினார்க்கினியரும், 'மரபேதானும்'[3] என்னுஞ் சூத்திர உரையில் இச் செய்யுளை எடுத்துக்காட்டி, 'என்ற வழி, குறிஞ்சிக்கும் முல்லைக்கும் ஏற்ற பொருள் தத்தம் மரபிற்றாய்ப் பலவும் வந்தன கண்டு கொள்க' என்று பேராசிரியரும் கூறினர்.

---

(10) நெய்தல்

[இரவுக்குறிவந்து தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலைமகனை எதிர்ப்பட்டு நின்று தோழி சொல்லியது.]

வான்கடற் பரப்பில் தூவற் கெறிய
மீன்கண் டன்ன மெல்லரும் பூத்த
முடவுமுதிர் புன்னைத் தடவுநிலை மாச்சினைப்
புள்ளிறை கூரும் மெல்லம் புலம்ப
நெய்தல் உண்கண் பைதல கலுழப்

---

1. தொல். பொருளி. உ. 2. தொல். பொருளி. உ. 3. தொல். செ. ஈ.

பிரிதல் என்னினு யாயின் நன்றும்
அரிதுற்[1]றனை யாற் பெரும உரிதினிற்
கொண்டாங்குப் பெயர்தல் வேண்டுங் கொண்டலொடு
குரூஉத்திரைப் புணரி உடைதரும் எக்கர்ப்
கo பழந்திமில் கொன்ற[2] புதுவலைப் பரதவர்
மோட்டுமணல் அடைகரைக் கோட்டுமீன் கொண்டி
மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளங்கெழு தொண்டி யன்னஇவள் நலனே

—அம்மூவனார்

(சொ - ள்.) கூ—சு. வான் கடல் பரப்பில் தூவற்கு எதிரிய - பெரிய கடற்பரப்பில் எழும் திரைத் நிவலிகளை ஏற்றுக் கொண்ட, மீன் கண்டன்ன - விண்மீனைக் கண்டாலொத்த, மெல் அரும்பு ஊழ்த்த - மெல்லிய அரும்புகள் மலர்ந்த, முடவு முதிர் புன்னை - முடம்பட்ட முதிர்ந்த புன்னை மரத்தின், தடவு நிலை மா சினை - பெரிய நிலையையுடைய கரிய சினையில், புள் இறைகூரும் மெல் அம் புலம்பு - புட்கள் மிகத் தங்கியிருக்கும் மென்னிலமாகிய கடற்கரைக்குத் தலைவனே!

எ.—பெரும - பெருமானே!

கூ—எ. நெய்தல் உண்கண் பைதல கலுழ - நெய்தற் பூவை ஒத்த மையுண்ட இவள் கண்கள் வருந்தினவாய் அமை, பிரிதல் என்னினையாயின் - இவளைப் பிரிந்து செல்லுதலை நினைத்தாயாயின், நன்றும் அரிது துற்றனை - பெரிதும் அரியதனை மேற்கொள்வாயாயினை;

எ—கஉ. கொண்டலொடு குரூஉ திரைப் புணரி உடைதரும் எக்கர் - கீழ்காற்றால் விளக்கம் பொருந்திய கடலின் அலைகள் உடைக்கும் மணல் மேட்டிற் (கிடக்கும்), பழந்திமில் கொன்ற புது வலைப் பரதவர் - பழைய படகின் சிதைவு போக்கிப் புதுக்கிய புதிய வலையினை யுடைய பரதவர்கள், மோட்டு மணல் அடைகரை கோட்டு மீன் கொண்டி - உயர்ந்த மணலையுடைய அடைகரையில் வந்து கிடக்கும் சுறு மீனின் கொள்ளையினை, மணம் கமழ் பாக்கத்துப் பகுக்கும் - மணம் நாறுகின்ற பாக்கத்தின்கண் பலர்க்கும் பகுத்துக் கொடுக்கும், வளம் கெழு தொண்டி அன்ன இவள் நலன் - வளம் மிக்க தொண்டி என்னும் பட்டினத்தை யொத்த இவளது அழகு, உரிதினில் கொண்டு ஆங்குப் பெயர்தல் வேண்டும் - இவட்கே உரித்தாக நின்னூர்க்கு வரைந்து கொண்டு போதல் வேண்டும்.

(முடிபு) புலம்ப! பெரும! பிரிதல் என்னினையாயின் அரிது துற்றனை; தொண்டி அன்ன இவட் நலன், உரிதினில் கொண்டு ஆங்குப் பெயர்தல் வேண்டும்.

(வி - ரை) எதிரிய ஊழ்த்த புன்னை என்க. தூவற்கு - தூவலை - வேற்றுமை மயக்கம். மாச்சினை: மா-கரிய எனலுமாம். பைதல்-வினையெச்சமுற்று. கொண்டி - கொள்ளப்பட்டவை. பாக்கம் - பரதவர்

(பாடம்) 1. அரிதுற்றனை. 2. பழந்திமில் சென்ற.

சேரி. தொண்டி என்பதொரு பதி சோழநாட்டுக் கடற்கரைக்கண் ணிருப்பினும், இவ்வாசிரியர் பிற இடங்களில் சேரனுடைய தொண்டி, மாந்தை என்பனவற்றைப் பாடி யிருத்தலின், இங்குக் குறித்த தொண்டியும் சேரர் கடற்கரைப் பட்டினமாகிய தொண் டியே யாதல் வேண்டும். 'தோளும் கூந்தலும் பல பாராட்டி, வாழ்த லொல்லுமோ மற்றே செங்கோற் குட்டுவன் தொண்டி யன்ன, எற் கண்டு நயந்துநீ நல்காக் காலே'[1] என்பது காண்க. நலம் இவட்கு உரித்தாக வரைந்துகொண்டு போகவேண்டும் என்றது; அன்றேல் இவள் இறந்துபடுவள் என்பது தோன்றக் கூறியபடி.

(உ - றை.) 'பழந்திமில் ... கொண்டி' என்பதற்குப் "பரதவர் தாம் அறிவு கோத்த கிமிலானும் பண்ணின வலையானும் தமது தொழிலாகிய வேட்டைமேற் செல்லாது தேடாமல் வந்த இழிந்த சுறுமீன அகப்படுத்து, அதன அறித்துக் கூறுவைத்து எல்லாரையும் அழைத்தாற்போல, நீயிரும் நுமக்கு உறுதியாக ஆக்கிக்கொள்ளப் பட்ட ன்மைகளான் நுமக்கு ஒழுக்கமாகிய நல்வழியின் ஒழுகாது, கண்டோ ரிகழ்ந்த களவொழுக்கிலே ஒழுகி, இக் களவினைப் பரப் பிப் பலரும் அலர் கூறும்படி பண்ணுகின்றீர்" என்பர் குறிப்புரை காரர்.

---

(11) பாலை — பின்தருநாளும்

[தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவிடத்து ஆற்றுளாய தலை மகள் வேறுபாடு கண்டு ஆற்றுளாய தோழிக்குத் தலைமகள் ஆற்று வல் என்பதுபடச் சொல்லியது.]

வானம் ஊர்ந்த வயங்கொளி மண்டிலம்
நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் அம்காட்
டிலையில மலர்ந்த முகையில் இலவம்
கலிகொள் ஆயம் மலிபுதொகு பெடுத்த
'அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றிக்'
கயந்துகள் ஆகிய பயந்தபு கானம்
எம்மொடு கழிந்தன ராயின் கம்மென
வம்பு விரித்தன்ன பொங்குமணற் கான்யாற்றுப்
படுசினை தாழ்ந்த பயிலினர் எக்கர்
'மெய்புகு வன்ன கைகவர் முயக்கம்'
அவரும் பெறுகுவர் மன்னே நயவர
'நீர்வார் நிகர்மலர் கடுப்ப ஒமறந்
நறுகுள நிறைக்குநர் போல' அல்கலும்
அழுதல் மேவல வாகிப்
பழிநீர் கண்ணும் படுகுவ மன்னே.

—ஔவையார்.

---

1. ஐங். எஎ.

(சொ-ள்.) க—ன. வானம் ஊர்ந்த வயங்கு ஒளி மண்டிலம் வானில் ஊர்ந்தேகும் விளங்கும் ஒளியினதாகிய ஞாயிற்று மண்டிலம், நெருப்பைச் சிவந்த உருப்பு அவிர் அம் காட்டு \ தீ யென்னச் செங்தொரித்த வெப்பம் விளங்கும் காட்டகத்தே, இலை இல மலர்ந்த முகை இல் இலவம் -\ இலையிலவாய் மலர்ந்துள அரும்பிலலாத இலவம் பூக்கள், கலிகொள் ஆயம் மலிபு தொகுபு எடுத்த \ ஆரவாரத்தைக் கொண்ட மகளிர் கூட்டம் மகிழ்ந்து கூடி எடுத்த, அம் சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி -\ அழகிய கார்த்திகை விளக்கின் நெடிய ஒழுங்கு போலத் தோன்ற, கயம் துகள் ஆகிய பயம் தபு காலம் \ குளங்கள் நீரற்றுத் துகள்பட்டிருக்கும் வளம் தப்பிய காட்டில், கம்மென எம்மொடு கழிந்தனராயின் \ நம் தலைவர் விரைவாக நம்மை உடன்கொண்டு கழிந்தனராயின்,

அ—கூ. வம்பு விரித்த அன்ன பொங்கு மணல் கான்யாற்று - \ கச்சினை விரித்துப் பரப்பி வைத்தாலன்ன விளங்கும் மணல் மிக்க காட்டாற்றினது, பயில் இணர்படு சினை தாழ்ந்த எக்கர் \ மிக்க பூங் கொத்துக்களையுடைய பெரிய கிளைகள் தாழ்ந்துள மணல் மேட்டில், மெய் புகுவு அன்ன -\ உடம்புகள் ஒன்றின் ஒன்று புகுவதை ஒத்த, கை கவர் முயக்கம் -\ கை விரும்பும் முயக்கத்தினை, நயவர அவரும் பெறுகுவர் மன் -\ அன்பு தோன்ற அவரும் அடைவர்;

கஉ—ரு. பழி தீர் கண்ணும் -\ எமது குற்ற மற்ற கண்களும், நீர் வார் நீகர் மலர் கடுப்ப \ நீர் சொரியும் ஒளி பொருந்திய மலரை யொப்ப, ஓ மறந்து \ ஒழிதலின்றி, அறு குளம் நிறைக்குந போல - \ நீரற்ற குளத்தினைப் பெருக்கும் மடை போல, அல்கலும் அழுதல் மேவல ஆகிப் படுகுவ மன் \ நாளும் அழுதலைப் பொருந்தாவாகித் துயிலப்பெறும்.

(முடிபு) (நம் தலைவர்) கானம் எம்மொடு கழிந்தனராயின், முயக்கம் அவரும் பெறுகுவர்; (நம்) கண்ணும் படுகுவ.

(வி - ரை.) இலவம் - இலவம் பூ. தோன்றி - தோன்ற எனத் திரிக்க. கம்மென - விரைய, தேய வழக்கு; 'கம்மென வெழுதரு பெரும்படை'[1] என்பதனை உங்ங காண்க. கார்த்திகைத் திங்களின் கார்த்திகைநாளில் இல்லந்தோறும் வரிசையாக விளக்குகளை ஏற்றிவைத்து விழா அயர்தல், சங்கச் செய்யுட்கள் பலவற்றிற் கூறப் பெறுதலின், தமிழ் நாட்டில் பண்டு தொட்டு இவ் வழக்கம் இருந்து வருவதென்பது பெற்றும்; "அம்ம வாழி தோழி கைம்மிக"[2] என்னும் பாட்டினுள் கார்த்திகை விழாக் கொண்டாடும் முறைமையும், "எல்வளை ஞெகிழச் சாஅய்"[3] என்னும் பாட்டினுள், "பெருவிழா விளக்கம் போலப் பலவுடன், இலையில் மலர்ந்த இலவமொடு" என இவ் வுவமையும் இந்நூலுட் பின்னர் வருவதுங் காண்க. எம்மொடு கழிந்தனராயின், கண்ணும் அழுதல் மேவலவாகிப் படுகுவ என எதிர்வு பற்றிக் கூறலின், ஆற்றுவல் என்பது படச் சொல்லிய தென்னும்

1. புறம். உகஉ. 2. அகம். கசக. 3. அகம் கஅடு.

துறையாயிற்று. மன் கழிவின்கண் வந்தது எனக் கொள்ளின், ஆற்றது இரங்குதல் விகழ்ந்ததாம். நச்சினார்க்கினியர் இதனைப் [1]பாலைக் கண் இரங்கல் விகழ்ந்ததற்கு எடுத்துக் காட்டியவாறும் காண்க.

(மே - ள்.) 'உரிப்பொருளல்லன மயங்கவும் பெறுமே'[2] என்னும் சூத்திரவுரைக்கண், "வானமூர்ந்த . . . அம்காட்டு' எனக் காடுறையுலகத்துப் பாலை வந்தது" என்றும், 'கொண்டுதலைக் கழியினும்'[3] எனனும் சூத்திரவுரைக்கண், 'வானமூர்ந்த' என்னும் அகப்பாட்டினுள் 'மெய்புகுவன்ன...மன்னே' எனக் கூறி அழுதல்மேவா வாய்க் கண்ணும் துயிலுமென இரக்கம் மீக் கூறியவாறும் உணர்க' என்றும் உரைத்தனர் நச்சினார்க்கினியர்.

(12.) குறிஞ்சி

[பகற்குறி வாராநின்ற தலைமகன் தோழியாற் செறிப்பறிவுறுக்கப்பட்டு, இரவுக் குறி வாரா வரைவல் என்றுற்று, அதுவும் மறுத்து வரைவு கடாயது.]

யாயே கண்ணினும் கடுங்கா தலளே
எந்தையும் நிலன் உறப் பொருஅன்
எவனில குறுமகள் இயங்குதி என்னும்
யாமே பிரிவின் றியைந்த துவரா நட்பின்
இருந்லைப் புள்ளின் ஓருயி ரம்மே
ஏனலங் காவலர் ஆனா தார்த்தெழு
கிளிவிளி பயிற்றும் வெளிலாடு பெருஞ்சினை
விழுக்கோட் பலவின் பழுப்பயன் கொண்மார்
குறவர் ஈன்றிய குரம்பை புதைய
வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்
புலிசெத்து வெரீஇய புகர்முக வேழம்
மழைபடு சிலம்பிற் கழைபடப் பெயரும்
நல்வரை நாட நீவின்
மெல்லியல் ஒருந் தான்வா ழலளே.

—கபிலர்.

(சொ - ள்.) க—ரு. யாயே கண்ணினும் கடுங் காதலள் - எமது தாய் தன் கண்ணினும் இவள்பால் மிக்க காதலுடையாள், எந்தையும் நிலன் உறப் பொருஅன் - எம் தந்தையும் (இவள் எங்கேனும் செல்வது காணின்) நிலத்தே இவள் அடி பொருந்தி நடக்கப் பொருதவனாகி, இல குறுமகள் - மடி! இனைய மகளே! சிறடி சிவப்ப - நின் சிறிய அடி சிவப்புற, எவன் இயங்குதி என்னும் - என் செயச் செல்கின்றாய் என்று கூறும், யாமே - யாங்களும், பிரிவு இன்று இயைந்த துவரா நட்பின் - பிரிதலில்லாது கூடிய உவர்த்த

1. தொல். அகத். கடு. 2. தொல். அகத். கூ. 3. தொல். அகத். கடு.

லில்லாத காட்பினால், இருதலைப் புள்ளின் ஓர் உயிரம்|இருதலைப் பற வையைப் போல இரண்டு உடற்கு ஒருயிரினம் ஆவேம்;

கூ—கச. எனல் அம் காவலர் ஆனது ஆர்த்தொறும் ஃ கினைப் புனம் காக்கும் மகளிர் ஓயாது ஆர்க்குந்தோறும், கிளி விளி பயிற்றும் வெளில்ஆடு பெருஞ்சினை ஃ கிளிகள் தம் இனத்தை அழைக்கும் அணில் ஆடும் பெரிய கிளைகளில், விழுக்கோள் பலவின் பழுப்பயன் கொண்மார் ஃ பெரிய காய்களைக் கொண்ட பலா மரத்தின் பழமாய பயனைக் கொள்ளுதற்கு, குறவர் ஊன்றிய குரம்பை புதைய ஃ குறவர்கள் காட்டிய குடிசை மறைய, வேங்கை தாய தேம்பாய் தோற்றம்-தேன் ஒழுகும் வேங்கைப் பூக்கள் பரந்த தோற்றத்தை, புலி செத்து வீழ்இய புகர்முக வேழம் ஃ புலியென்று கருதி அஞ்சிய புள்ளிகள் பொருந்திய முகத்தினையுடைய யானை, மழை படு சிலம்பில் கழை படப் பெயரும் ஃ மேகம் பொருந்திய பக்கமலையிலுள்ள மூங்கில்கள் முறிபடப் பெயர்ந்து|செல்லும், நல்வரை நாட ஃ நல்ல மலை பொருந்திய நாடனே, நீ வரின் ஃ நீ இரவுக்குறி வரின், மெல்லியல் வாழலள் · \மென்மைத்தன்மை வாய்ந்த இத் தலைவி உயிர்வாழ்ந்திராள்.

(முடிபு) வரை நாட! யாய் காதலள்; எந்தை எவன் இயங்குதி என்னும்; யாம் ஒருயிரம்; நீ வரின் மெல்லியல் வாழலள்.

கிளி விளிபயிற்றும் நல்வரை எனவும், வேழம் பெயரும் நல்வரை எனவும் கூட்டுக.

(வி-ரை.) தோழியானவள், யாய் காதலள்; எந்தை எவன் இயங்குதி யென்னும் என்பவற்றுல் இற்செறிப்பினையும், யாம் ஒருயிரம் என்பதனால் தலைவி யெய்தும் வருத்தத்தினைத் தான் நன்கு அறியுமாற்றினையும், நீ வரின் மெல்லியல் வாழலள் என்பதனால் இரவுக்குறியின் ஏதம் அஞ்சுதலையும் அறிவுறுத்து வரைவு கடாயிவளாம் என்க. இல - ஏடி; விளிப்பெயர். கிளி விளி பயிற்றும் என்றது, கிளியோப்பும் மகளிர் குரலைக் கிளியின் குரலெனக் கருதிப் புனத்திலுள்ள கிளிகள் தம் இனத்தை அழைத்தலைச் செய்யும் என்றபடியாம்; [1]'கொடிச்சி யின்குரல் கிளிசெத் தடுக்கத்துப், பைங்குர லேனற் படர்தரும் கிளி' எனக் கபிலர் கூறுமாறுங் காண்க. இனி, காவலர் குறவர் எனக் கொண்டு அவர்கள் மரத்தின் சினைமீ திருந்து ஆர்க்குந்தோறும் கிளிகள் ஒலித்தலைச் செய்யும் என்று உரைத்தலுமாம். வெளில் - அணில். கோள் - காய்; காய்த்தலுமாம். பழுப்பயன் - பழுத்த பழமுமாம். குரம்பையில் வேங்கை மலர் பரந்த தோற்றத்தைப் புலியெனக் கருதி வேழம் அஞ்சிற்று என்னும் இக் கருத்து [2]"நறுமலர் வேங்கையின் பூப்பயில் பாறையை நாக நண்ணி, மறமலை வேங்கை யெனாநனி யஞ்சுமஞ் சார்சிலம்பா" எனத் திருச்சிற்றம்பலக் கோவையாரினும் வருதல் அறியற்பாலது. தேம்-தேன். ஓரும், தான் என்பன அசைகள்.

---

1. ஐங்குறு. உகக. 2. திருச்சிற். கக

(உ-றை.) யானையானது வெருவத்தகாத குரம்பையை வெருவத் தக்க புலியென்று கருதித் தனக் குணவாகிய கழை முறியப் பாயும் என்பது, வெருவத்தகாத எங்கள் தமரை வெருவி வரைய முயலாது நீ நிரிதலின், யாங்கள் இறந்துபடும்படியாயிற்று என்றபடியாம்.

(மே - ள்.) 'பொழுதும் ஆறும்'[1] என்னும் சூத்திரத்து, 'நல் வரை . . . வாழலள்' என்னும் இச் செய்யுட் பகுதியைக் காட்டி, 'என்பது இரவும் பகலும் வாரலென்றது, வரைதல் வேட்கைப் பொருளதாய வழுவமைதி' என்றனர் நச்சினார்க்கினியர்.

'முட்டு வயிற் கழறல்'[2] என்னும் சூத்திரத்து, வரைந்தெய்துங் கூட்டத்திற்கு எதுவாகிய மெய்ப்பாடுகளுள் ஒன்றாகிய அவன், புணர்வு மறுத்தல் என்பதற்கு, 'நல்வரை நாட . . . வாழலள்' என்ற பகுதியை எடுத்துக் காட்டி, "என்பது தலைமகள் குறிப்பினைத் தோழி கூறியதாகலான், இஃது அவன் புணர்வு மறுத்தல் எனப் படும். இஃது 'ஒன்றித்தோன்றம் தோழி மேன'[3] என்னும் இலக் கணத்தாற் றோழி குறிப்பாயினும், தலைமகள் குறிப்பெனவே படும் என்பது கொள்க" என்றுரைத்தனர் பேராசிரியர்.

---

13. பாலை

[பொருள்வயிற் பிரியலுற்ற தலைமகனைத் தோழி செலவழுங்கு வித்தது; உடம்பட்டதூஉமாம்.]

[1]தன்கடற் பிறந்த முத்தின் ஆரமும்
முளைநிரை கொடுக்குந் துப்பின் தன்மலைத்
தெறலரும் மரபின் கடவுட் பேணிக்
குறவர் தந்த சந்தின் ஆரமும்
இருபே ராரமும் எழில்பெற அணியும்
திருவீழ் மார்பின் தென்னவன் மறவன்
குழியிற் கொண்ட மராஅ யானை
மொழியின் உணர்த்துஞ் சிறுவரை யல்லது
வரைநிலை யின்றி இரவலர்க் கீயும்
வள்வாய் அம்பிற் கோடைப் பொருநன்
பன்னி நைஇய பயங்கெழு வேள்வியின்
விழுமிது நிகழ்வ தாயினுந் தெற்கேர்பு
கழிமழை பொழிந்த பொழுதுகொள் அமையத்துச்
சாய லின்றுணை இவட்பிரிந் துறையின்
நோயின் றாக செய்பொருள் வயிற்பட
மாரில் தூமடி விரிந்த சேக்கைக்
கவவில் புன்மைக் கழிக வளவயல்

---

1. தொல். பொருளி. கூ. 2. தொல். மெய். உக (பாடம்) 3. தொல். அகத். கக. 4. தண்கடல். தன்கடல்.

அழுஞ்சி யன்ன தோகை சுவற்ற
கழனி நெல்லின் கவைமுதல் அலங்கல்
நிரம்பகன் செறுவில் வரம்பணையாத் துயல்வரப்
புலம்பொடு வந்த பொழுதுகொள் வாடை
இலங்குபூங் கரும்பி னேர்கழை இருந்த
வெண்குருகு நரல வீசும்
நுண்பல் துவலைய தண்பனி நாளே.

—பெருந்தலைச் சாத்தனார்.

(சொ - ள்) கூ—கூஉ. தன் கடல் பிறந்த முத்தின் ஆரமும், தனது தென்கடலில் தோன்றிய முத்தாகிய ஆரமும், முன்னை நிறை கொடுக்கும் துப்பின் பகைவர் நிறைகொடுக்கும் வலிமையையுடை யதாலை, தன்மலைத் தெறல் அரும் மரபின் கடவுள் பேணி தனது பொதியில்மலையில் உள்ள அடியார்களோடு துன்புறுத்தலில்லாத முருகவேளை வழிபட்டு, குறவர் தந்த சந்தின் ஆரமும் குறவர்கள் கொண்டு வந்து தரும் சந்தனமாகிய ஆரமும்ஆய, இரு பேர் ஆரமும் இவ்விரு பெரிய ஆரங்களையும், எழில் பெற அணியும் அழகுற அணியும், திருவீழ் மார்பின் தென்னவன் மறவன் இலக்குமி விரும்பும் மார்பினையுடைய பாண்டியனது படைத்தலைவனும், குழியிற்கொண்ட மராஅ யானை பயம்பில் பிடித்த பழகாத யானைகளை, மொழியின் உணர்த்தும் சிறு வரை அல்லது உரிய மொழிகளால் தொழிலை அறி விக்கும் சிறு பொழுதல்லது, வரைநிலை இன்றி தனக்கெனச் சிறிதும் வரைந்து கொள்ளும் நிலைமை யின்றி, இரவலர்க்கு ஈயும் இரவலர் களுக்கு வழங்கும், வள்வாய் அம்பின் கோடைப்பொருநன் கூர்மை வாய்ந்த அம்பினையுடைய கோடைக்குத் தலைவனுமாகிய, பண்ணை தைஇய பயம் கெழு வேள்வியின் பண்ணி என்பான் செய்த பயன் மிக்க களவேள்வியைப் போல, விழுமிது நிகழ்வதாயினும் நீர் தேடி வரும் பொருளாற் சிறந்த பயன் நிகழுமாயினும்,

கஎ—உசு. வளவயல் அழல்நுதி அன்ன வளம் மிக்க வயலின் தீயின் கொழுந்தினை யொத்த, தோகை சுவற தோடுகளை சுவற கழனி நெல்லின் கவை முதல் அலங்கல் வயல் நெல்லின் பலவாக கிளைத்த முதலிலிருந்து தோன்றிய நெற்கதிர், நிரம்பு அகன் செறு வில் நிரம்பிய அகன்ற வயலினிடத்து, வரம்பு அணையாத் துயல்வர வரப்புக்களை அணையாகக் கொண்டு கிடந்து அலைய, புலம்பொடு வந்த பொழுதுகொள் வாடை தனிமைத் துன்பினைக் கொண்டு வரும் பனிக்காலத் தன்மை கொண்ட வாடைக்காற்று, இலங்கு பூங் கரும்பின் ஏர் கழை இருந்த விளங்கும் பூக்களையுடைய கரும்பின் ஒன்றின தண்டின் மீதிருந்த, வெண்குருகு நரல வீசும் வெண்ணிறை ஒலிக்கும்படி வீசுகின்ற, நுண் பல் துவலைய தண்பனி நாள் நுண்ணிய பலவாகிய துளிகளைக் கொண்ட தண்ணிய பனிக்காலத்தே,

கஏ—ச. தெற்கு ஏர்பு கழி மழை பொழிந்த (மேகங்கள்) தெற்கே எழுந்துபோய் மிக்க மழையைப் பொழியும், பொழுது

கொள் அமையத்து-மழைக்காலத் தன்மை வாய்ந்திடும் கூதிர் காலத் நிற்கு. சாயல் இன் துணை இவள் - இனிய துணையாகிய மென்மை வாய்ந்த இவளை, பிரிந்து உறையின்-பிரிந்துபோய் வேற்று நாட்டுத் தங்குவீராயின்,

கரு—எ. வயிற்பட மாசு இல் தூ மடி விரிந்த - தக்க இடத்தே குற்றமற்ற தூய அறுவை விரிக்கப்பெற்ற, சேக்கை கவவு இன்பு உருமைக் கழிக - படுக்கைக்கண் முயங்கும் இன்பம் உரிமல் (அப் பனி நாள்) கழியினும் கழிக. செய்பொருள் நோய் இன்று ஆக - நீ தேடுகின்ற பொருட்கு எக்குறையும் நேரா தொழிவதாக.

(முடிபு) தகைவ! பண்னி தைஇய வேள்வியின் விழுமிது நிகழ்வதாயினும், கூதிர்ப் பொழுதிற்குத் துணையாய இவளைத் தண்பனி நாளில் பிரிந்துறையின், அப் பனி நாள் கவவு இன்புருமைக் கழிக; செய்பொருள் நோயின்றாக.

(வி - ரை.) இரு பேராரமும் அணியும் தென்னவன் மறவனும், இரவலர்க்கு யானை ஈயும் கோடைப் பொருநனுமாய பண்னி என்றும், "வயலில் நெல்லின் அலங்கல் துயல்வர வந்த வாடை, ஏருகு நரல வீசும் பனிநாள் என்றும் கூட்டுக. முத்தின், சந்தின் என்புழி, இன்சாரியை அல்வழிக்கண் வந்தன. பிறரால் தொறுதலரிய கடவுள் என்றுமாம். அணியும் மறவன் என்க; அணியும் தென்னவன் என்றுமாம். மொழி - யானைக்குத் தொழில் அறிவிக்கும் குறிப்பு மொழிகள். கோடை - கோட்டோர் என்பர் குறிப்புரையாசிரியர். வாடை வீசலின், மேகம் தெற்கு ஏர்பு என்றார். பொழுது கொள் அமையம் - கூதிர்ப்பொழுது. செய்பொருள் நோயின்றாக என்றது, அதற்கு இடையூறு உண்டாம் என்னும் கருத்தால். இடையூறுவது தலைவி தலைவனைப் பிரிந்து உயிர் வாழாமையாலாவது. அணையா - அணைந்து என்றுமாம்.

(14.) முல்லை—

பாணன் தனக்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது.

அரக்கத் தன்ன செந்நிலப் பெருவழிக்
காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
ஈயல் மூதாய் வரிப்பப் பவளமொடு
மணிமிடைந் தன்ன குன்றங் கவைஇய
அங்காட் டாரிடை மடப்பிணை தழீஇத்
திரிமருப் பிரலை புல்லருந் துகள
முல்லை வியன்புலம் பரப்பிக் கோவலர்
குறும்பொறை மருங்கின் நறும்பூ வயரப்
பாலைமேயல் அருந்து மாலைநடை நல்லான்
வீங்குமான் செருந்தல் தீம்பால் பிலிற்றக்
கன்றுபயிர் குரல மன்றுநிரை புகுகரு

மாலையும் உள்ளா ராயிற் காலை
யாங்கா குவங்கொல் பாண வென்ற
மகிழ்யோள் சொல்லெதிர் சொல்லல் செல்லேன்
கடு செவ்வழி நல்யாழ் இசையினென் பையெனக்
கடவுள் வாழ்த்திப் பையுள் மெய்ந்நிறுத்
தவர்நிறந் தொல்வேவ் கண்டவெவ்வியாமே
விடுவிசைக் குதிரை விலங்குபரி முடுகக்
கல்பொரு நிரங்கும் பல்லார் நேமிக்
உ0. கார்மழை முழக்கிசை கடுக்கும்
முனைநல் லூரன் புனைதெடுந் தேரே.

—ஒக்கூர் மாசாத்தனார்

(சொ - ள்.) கூ-கூஉ. அரக்கத்து அன்ன செங்கிலப் பெருவழி. செவ்வரக்கினை யொத்த சிவந்த நிலத்திற் செல்லும் பெரு நெறியில், காயா செம்மல் தாஅய் - காயாவின் வாடிய பூக்கள் பரவிக்கிடக்க, சுயல் மூதாய் பல உடன் வரிப்ப - தம்பலப் பூச்சிகள் பலவும் ஒருங்கே வரிவரியாக ஊர்ந்து செல்ல, பவளமொடு மணி மிடைந்தன்ன குன்றம் கவைஇய - (அவை) பவளத்தொடு நீலமணி நெருங்கியிருந்தாலொக்கும் குன்றம் சூழ்ந்த, அம் காட்டு ஆர் இடை - காட்டின் அகத்தே அரிய இடங்களில், மடப்பிணை தழீஇ - மடப்பத்தையுடைய பெண்மானைத் தழுவி, நிரிமருப்பு இரலை - நிரித்து விட்டாற்போன்ற கொம்பினையுடைய ஆண்மான், புல் அருந்து உகள - புல்லை அருந்தித் தாவிச் செல்ல, முல்லை வியன்புலம் பரப்பி-(ஆனினங்களை) அகன்ற முல்லை நிலத்திலே பரவி மேயவிட்டு, கோவலர் குறும் பொறை மருங்கின் நறும்பூ அயர-ஆயர்கள் சிறிய குன்றுகளிடத்தே நறிய பூக்களை மாலையாகக் கட்டி மகிழ்ந்திருக்க, பதவு மேயல் அருந்தி மதவு நடை நல்லான் - அறுகம்புல்லாய உணவினை அருந்திய வலிய நடையினையுடைய நல்ல ஆனினங்கள், விங்கு மாண் செருத்தல் - பருத்த மாண்புற்ற மடி, தீம்பால் பிலிற்ற - இனிய பாலைச் சொரிய, கன்று பயிர் குரல மன்று நிறை புகுதரும்-கன்றை நினைந்து அழைக்கும் குரலினவாய் மன்றுகளில் நிறையச் செல்லும், மாலையும் உள்ளார் ராயின் - இம் மாலைக் காலத்தும் நம் தலைவர் நம்மை நினைத்து வாரார் ராயின்,

கஉ—ச. காலை யாங்கு ஆகுவம் கொல் பாண என்ற - பாணனே இக் காலத்து யாங்கள் எங்ஙனே யுறுவேம் என்று கூறிய, புனை யோள் சொல் எதிர் சொல்லல் செல்லேன் - தலைவியின் சொல்லிற்கு மறு மொழி கூற இயலாதவனாகி,

கரு—எ. செவ்வழி நல்யாழ் இசையினென் பையென - யாழில் நல்ல செவ்வழிப் பண்ணை மெல்லென இசைத்து, கடவுள் வாழ்த்தி- கடவுளை வாழ்த்தி, பையுள் மெய் நிறுத்து-துயரினைக்கொண்ட மெய்யினனாய், அவர் நிறம் செல்லேன் யான்-அவர் மாட்டுச்செல்லவறிய யான்,

கஅ—உக. விடு விசைக் குதிரை - தாண்டப்பெறும் வேகங் கொண்ட குதிரையின், விலங்கு பரி முடுக - எதிர்ப்படுமவற்றை விலங்கி முன் செல்லும் செலவு மிக, கல் பொருது இரங்கும் பல் ஆர் நேமி - கற்களில் மோதி ஒலிக்கும் பல ஆரங்கால்களையுடைய உருளையின் ஒலி, கார் மழை முழக்கிசை கடுக்கும் - கார்காலத்து மழையின் இடி முழக்கினை ஒக்கும், முனை நல்லூரன் புனை நெடுந் தேர் - முனையாகிய நல்ல ஊரிடத்தானுகிய தலைவனுடைய அணி செயப்பெற்ற நீண்ட தேரினை,

கஎ. கண்டனென் - கண்டேன்.

(முடிபு) 'பாண! எம் தலைவர், மாலையும் உள்ளாராயின், காலை யாங்கா குவம்' என்ற (தலைவி) சொல்லைநிர் சொல்லேன்; கடவுள் வாழ்த்தி, அவர்நிறம் செல்வேன் முனை நல்லூரன் நெடுந்தேர் கண்டனென்; (எனப் பாணன் பாங்காயி னர்க்குக் கூறினன்.)

இரலை உகள, கோவலர் நறும்பூ அயர, நல்லான் புகுதரு மாலை என்க.

(வி - ரை.) அரக்கத்தன்ன : அத்துச்சாரியை. காயாஞ் செம்மல் என மெலிமிக்கது, [1] 'யாமரக்கிளவி' என்னும் சூத்திரத்து இலேசாற் கொள்க. காயாஞ் செம்மலுக்கு நீல மணியும், ஈயல் மூதாய்க்குப் பவளமும் உவமையாம்; எதிர் நிரலிணர. ஈயல் மூதாய் - தம்பலப் பூச்சி. இந்திர கோபம். புல்லருந்து - புல்லை அருந்தி. நிறை - நிறைய. காலை - காலம். செவ்வழி - மூல்லைப்பண். முனை - பகைப் புலம்.

(மே - ள்.) [2] 'நிலம் பெயர்ந்துறைதல் என்னும்' குத்திரத்துப் பாணர்க்குக் கூற்று நிகழ்வதற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டினர் நச்சினார்க்கினியர்.

[3] 'மனையோள் இளவியும்' என்னுஞ் சூத்திரத்து, 'மாலையும்...' பாண' என்னும் இச் செய்யுட் பகுதியை, பாணன் கேட்பத் தலைவி கூற்று வந்ததற்கு எடுத்துக் காட்டினர் பேராசிரியர்

---

(15) பாலை

(மகட் போக்கிய தாய் சொல்லியது.)

எம்வெங் காமம் இயைவ தாயின்
மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாக லார்கைப் பறைக்கண் பிளிற்
தோகைக் காவின் துளுநாட் டன்ன
வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பிற்

---

1. தொல். எழுத். ௨௨௯.
2. தொல். கற்பு. ௩௰.
3. தொல். செய்யு. ௧௫௫.

செறிந்த சேரிச் செம்மல் மூதூர்
அழிந்த மாக்கட்டாகுக நிலவே
தோழி மாரும் யானும் புலம்பச்
கூழி யானைச் சுடர்ப்பூண் நன்னன்
பாழி அன்ன கடியுடை வியன்நகர்ச்
செறிந்த காப்பிகந் தவணெடு போகி
அத்த இருப்பை ஆர்கழல் புதுப்பூத்
துய்த்த வாய துகள்நிலம் பரக்கக்
கொன்றை யஞ்சினைக் குழற்பழங் கொழுநி
வன்கை யெண்கின் வயநிரை பரக்கும்
இன்றுணைப் படர்ந்த கொள்கையோ டொராங்குக்
குன்ற வேயில் நிரண்ட என்
மென்றோள் அஞ்சுஞ் சென்ற ஆறே.

—மாமூலனார்.

(சொ - ள்.) கூ—ஙகூ. தோழிமாரும் யானும் புலம்ப - தன் தோழிமாரும் யானும் தனிமையான் வருந்த, கூழி யானைச் சுடர்ப் பூண் நன்னன் பாழி அன்ன - முகபடாம் அணிந்த யானையினையும் ஒளிவிடும் அணியினையும் உடைய நன்னனது பாழி என்னும் பதியை ஒத்த, கடி யுடை வியன் நகர் செறிந்த காப்பு இகந்து - காவல் மிக்க தந்தையது பெரிய மனையின் மிக்க காவலைத் தாண்டி, அவணெடு போகி - தலைவனெடு புறப்பட்டு, இன்துணைப் படர்ந்த கொள்கையொடு ஒராங்கு - தனது இனிய துணைவனின் நிகழ்ந்த கொள்கையால் ஒருங்குகூடி, குன்ற வேயில் நிரண்ட மெல் தோள் என் அஞ்சுஞ் சென்ற - குன்றத்து மூங்கில்போலத் திரண்ட மெல்லிய தோளையுடைய எனது அன்னை சென்றடைந்ததும், அத்தம் இருப்பை ஆர் கழல் புது பூ - அருஞ்சுரத்தில் உள்ள இருப்பை மரத்தின் ஆர்க்குக் கழன்ற புதிய பூக்களை, துய்த்த வாய் - தின்ற வாயினவாய், துகள் நிலம் பரக்க - நிலத்திலே தூளி பரக்கச் சென்று, கொன்றை அம் சினை குழல் பழம் கொழுநி - கொன்றையினது அழகிய கிளைகளிலுள்ள குழல்போலும் பழத்தைக் கொழுநி, வன் கை எண்கின் வய நிரை பரக்கும் - வலிய கையினையுடைய கரடிகளின் வலிய கூட்டம் பரந்து செல்வதுமாய, ஆறு - நெறி,

க—அ. எம் வெம் காமம் இயைவதாயின் - எமது மிக்க விருப்பம் கைகூடுவதாயின், மெல் மலி பெரும்பூண் செம்மல் கோசர் - மெய்ம் மொழியாற் சிறந்த பெரிய அவைகளையுடைய தலைமை கொண்ட கோசர்களது, குடுமி கொம்மை அம் பசுங்காய் விளைந்த பாகல் ஆர்கை - ஆர்க்கினைத் தலையிலுடைய நிரண்ட பரிய காய் முற்றின பாகற்பழத்தைத் தின்னுதலுடைய, பறைக் கண் பிரித் தோகைக் காவின் - பறைபோல வட்டமான கண்களைக் கொண்ட தோகைகளையுடைய மயில்கள் மிக்க சோலைகளையுடைய, துளுநாட்டு அன்ன - துளுநாட்டை யொத்த, வறுங்கை வம்பலர் தாங்கும் பண்பின் - பொருளின்றி வரும் புதியர்களைப் புரக்கும் நற்பண்பினையுடைய, செறிந்த

சேரி செம்மல் மூதூர் அறிந்த மாக்கட்டு ஆகுக - நெருங்கிய் சேரிகளைக் கொண்ட தலைமை வாய்ந்திருக்கும் முதிய ஊர்களில் முக மறிந்த மக்களை உடையது ஆகுக.

(முடிபு) எம் வெங்காமம் இயைவதாயின் அவனெடு போகி என் அஞ்ஞை சென்ற ஆறு, துஞ நாட்டன்ன செம்மல் மூதூரில் அறிந்த மாக்கட்டு ஆகுக.

கோசர் துஞ நாடு என்க. அஞ்ஞை சென்ற ஆறு, வயநிரை பரக்கும் ஆறு எனத் தனித்தனி கூட்டுக.

(வி - ரை.) கோசர் மெய்ம்மையிற் சிறந்தவர் என்பது, 'ஒன்று மொழிக் கோசர்'[1] எனவும், 'வாய்மொழி நிலை இய சேண்விளங்கு நல் விசை, வளங்கெழு கோசர்'[2] எனவும் வருவனவற்றுன் அறியப்படும். இனி, மெய்ம்மலி என்பதற்கு உடம்பிலே நிறைந்த எனலுமாம். பீலி-தோகை, சிறை. தோகை-மயில். நிழல் - விழைவு. பாழி - நன்னனது ஊர். கொன்றைப் பழத்தினைத் துருவித் துளைத்துக் குழலாகக்கொள் ளுதல் உண்டாகலின், குழற்பழம் என்றார். அஞ்ஞை - அன்னை. செவிலி, தலைவியை அருமை பாராட்டி அஞ்ஞை என்றாள்.

(உ - றை) 'கரடி ஆர்கழல் புதுப்பூவை நுகர்ந்த வாயையுடையவாய் அதிலே நிறைந்து, கொன்றைப் பழத்தைக் கோதினாற் போல, அவளும் தலைவனெடும் கூடிய இன்பத்திலே நிறைந்த செருக்கிலே, கூடி வளர்ந்த தோழிமாரையும், பெற்று வளர்த்த என்னையும் புறக்கணித்துப் போனாள்' என்பது.

---

(16) மருதம்

[பரத்தையர் சேரியினின்றும் வந்த தலைமகன் யாரையும் அறியேன் என்றாற்குத் தலைமகள் சொல்லியது.]

நாயுடை முதுநீர்க் களித்த தாமரைத்
தாதின் அல்லி அயலிதழ் புரையும்
மாதில் அங்கை மணிமருள் அவ்வாய்
நாவொடு நவிலா நகைபடு நீஞ்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனை
தேர்வழங்கு தெருவில் தமியோற் கண்டே
கூரெயிற் றரிவை குறுநனள் யாவரும்
காணுநர் இன்மையின் செத்தனள் பேணிப்
பொலங்கலஞ் சுமந்த பூண்தாங் கிளமுலை
வருக மாளஎன் றுயிரெனப் பெரிதுவந்து
கொண்டனள் நின்றோள் கண்டுநிலைச் செல்லேன்
மாதில் குறுமகள் எவன்பேதுற்றனை
நீயுந் தாயை இவ்வெனை யான்தன்
கரைய வந்து விரைவனென் கலைஇத்

---

1. அகம். ஈஉ உ. 2. அகம். உ0ஓ.

"கடு களவுடம் படுநரில் கவிழ்ந்துநிலங் நிகோயா
நாணி நின்ரேருள் நிலைகண் டியானும்
பேணினென் அல்லனே மகிழ்ந வானத்
தனங்கருங் கடவு ளன்னேள் நின்
மகள்தா யாதல் புரைவதாங் கெனவே.

—சாகலாசனார்

(சொ - ள்.) கள. மகிழ்ந - தகிலவனே!

க—ரு. நாயுடை முது நீர் கலித்த தாமரைத் தாநின் அல்லி அயல் இதழ் புரையும் - நீர் நாய்கனோயுடைய பழைய நீரில் தழைத்த தாமரையின் பூந்தாதாகிய அல்லியின் அடுத்த இதழினை யொத்த, மாசு இல் அங்கை மணி மருள் அவ்வாய் - குற்றமில்லாத அகங்கையினை யும் பவளம்போன்ற அழகிய வாயினையும், நாவொடு நவிலா நகை படு நீள்சொல் - நாவாற் பயின்று பேசப்படாத கேட்டார்க்கு மகிழ்ச்சியைத் தரும் இனிய குதலைச் சொற்களையும் உடைய யாவரும் விழையும் பொலம் தொடிப் புதல்வனை - கண்டார் அனை வரும் விரும்பும் பொற்றொடி யணிந்த புதல்வனை,

சு—கக. பொலம் கலம் சுமந்த - பொற்கலன்களைத் தாங்கிய, கூர் எயிற்று அரிவை - கூரிய பற்களையுடைய நின் பரத்தை, தேர் வழங்கு தெருவில் தமியோன் கண்டு - அவன் சிறுதேர் ஓட்டிக் கொண்டிருந்த தெருவில் தனியனாய் நிற்பக் கண்டு, செத்தன்ள் பேணி-நின் ஒப்புமை கருதிப் போற்றி, யாவரும் காணுநர் இன்மை யின் - யாருங் காண்போர் இன்மையின், குறுகினள்-குறுகி, பெரிது உவந்து-மிகமகிழ்ந்து, வருக என் உயிரென-என் உயிரே வருவாயாக என, பூண் தாங்கு இளமுலை கொண்டனள் நின்ரேருள் கண்டு - பூண் களை யணிந்த இளமுலைகளில் அணைத்துக்கொண்டு நின்றவளைக் கண்டு,

கக—ச. நிலைச் செல்லேன் - நின்ற நிலையினின்று மீளானாய், விரைவனென் வந்து கனைஇ - விரைந்து வந்து அவளை அணைத்து, மாசில் குறுமகள் - குற்றமற்ற இளைய மகளே, எவன் பேதுற்றனை - என் மயங்கினை, நீயும் தாயை இவற்கு என - இவனுக்கு நீயும் ஒரு தாயல்லையோ என்று, யான் தன் கரைய - யான் அவளிடம் கூற,

கரு—சு. களவு உடம்படுநரில் கவிழ்ந்து - தாம் செய்த கள வைக் (கண்டு கொண்டார் முன்) உடன்பட்டு நிற்பார்போல முகம் கவிழ்ந்து, நிலம் நோயா நாணி நின்ரேருள் நிலை கண்டு - நிலத்தைக் கால்விரலாற் கீறி நாணி நின்ற அவள்தன் நிலையினைக் கண்டு,

சுசு—கூ. வானத்து அனங்கு அருங் கடவுள் அன்னேள் - வானத்தின் அரிய தெய்வமாகிய அருந்ததி போன்றுள், நின் மகள் தாயாதல் புரைவது எனவே-நின் மகனுக்குத் தாயாதல் ஒக்கும் என எண்ணி, யானும் பேணினென் அல்லனே - யானும் அவளை விரும்பி னேன் அல்லனே.

(முடிபு) மகிழ்ந! கூர் எயிற்றிவை, புதல்வனைக் கண்டு கொண்டனள் நின்றோட் கண்டு, வந்து கவைஇ, நீயும் தாயை இவற்கெனை யான் கரைய, நாணி நின்றோள் நிலைகண்டு, நின்மகள் தாயாதல் புரைவது எனவே பேரினென் அல்லேனென:

அரிவை குறுகினள் பேணி முலை (யிடத்துக்) கொண்டனள் நின்றோள் எனவும், யான் விரைவனெள் வந்து கவைஇக் கரைய எனவும் கூட்டுக.

(வி - ரை.) அல்லி என்றது ஈண்டுத் தாதினை உணர்த்திற்று. அவி நிதம் என்னும் பாடத்திற்கு அல்லியாகிய இதழென இருபெய ரொட்டாகக் கொள்க; அல்லி - அகவிதழ். மணி-பவளம். நகைபடு தீஞ்சொல் என்பதற்கு, நகையைத் தோற்றுவிக்கும் திருந்தாத சொல் என்றுமாம்; இஃது இளமை பொருளாகத் தோன்றிய நகையாம். பகைவரும் உட்பட யாவரும் விழையும் என்றுள்; 'செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச் சிறுவர்' என (66) இந்நூலுட் பின்னர் வருதலுங் காண்க. தலைவனது தேர் செல்லும் தெரு, என்றுமாம்; தலைவன் பரத்தையரின் தேரூர்ந்து செல்வான் ஆகலின். செத்து - கருதி; ஒப்புமாம். பொலங்கலஞ் சுமந்த பூண் தாங்கு இளமுலை என்றது, தலைவனை வயமாக்கும் அவளது இளமை கருதிக் கூறியது. மாள, அசை. புதல்வனை உயிரென்றது, காதல் பற்றியது. தாயை: 'ஐ' முன்னிலைக்கண் வந்தது. எப்பொழுதும் நின்னையே உள்ளத்துக் கொண்டிருப்பாள் என எள்ளுவாளாய் அருந்ததியன்னாள் என்றுள். இனி, அணங்கு அருங் கடவுள் என்பதற்குப் பிறரை வருத்துகின்ற எய்தற்கு அரிய தெய்வமகள் என்றுமாம்.

(மே - ள்.) 'அவனறிவு ஆற்ற'[1] என்னும் சூத்திரத்து 'காமக் கிழத்தி தன்மகத் தழீஇ ஏமுறு விளையாட் டிறுதிக்கண்' தலைவி கூற்று நிகழ்வதற்கு, இச்செய்யுளையும், அச் சூத்திரத்து 'அவன் வயிற் பிரிப்பினும்' என்பதற்கு 'நின்மகன்றுயாதல்' என்னும் இச்செய்யுட் பகுதியையும், 'கற்பு வழிப்பட்டவள்'[2] என்னும் சூத்திரத்து, தலைவி பரத்தையை ஏத்துதல் வழுவமைதியாம் என்பதற்கு 'நாணி...புரைவ தாங் கெனவே' என்னும் இச்செய்யுட் பகுதியையும் உதாரணம் காட்டினர் நச்சினார்க்கினியர்.

"எள்ளலிளமை"[3] என்னும் சூத்திரத்து, 'நாவொடு நவிலா நகை' என்பது, பிறர் இளமை பொருளாக நகை பிறந்தது என்றும், 'பெருமையுஞ் சிறுமையும்'[4] என்னுஞ் சூத்திரத்து, களவுடம்படுநரிற் கவிழ்ந்து நிலங்கிளையா' என்பது நகை யென்னும் மெய்ப்பாடு பற்றிய உவமம் என்றும், சிறுமை பற்றி வந்ததென்றும், 'உவமப் பொருளை'[5] என்னுஞ் சூத்திரத்து, களவுடம்படுநர்க்குள்ள வேறுபாடு உலகத்து அடிப்படவந்த வழக்காதலான் அஃது ஏதுவாக அறிந்துகொள்ளப் படுவதாயிற்று என்றும் கூறுவர் பேராசிரியர்.

---

1. தொல். கற். கூ. 2. தொல். பொருளி. ஈக. 3. தொல். மெய்ப். ச.
4. தொல். உவம. கூ. 5. தொல். உவம. உ.

(17.) பாலை

[மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.]

வளங்கெழு நிருநகர்ப் பந்துசிறி தெறியினும்
இளந்துணை யாயமொடு கழங்குட னுடினும்
உயங்கின் றன்னோயெ னெய்யென் றசைஇ
மயங்குவியர் பொறித்த நுதலள் தண்ணென
முயங்கினள் வதியும் மன்னே, இனியே
தொடிமான் சுற்றமும் எம்மும் உள்ளாள்
நெடுமொழி தந்தை அருங்கடி நீவி
நொதுமலாளன் நெஞ்சுறப் பெற்றனள்
சிறுமுதுக் குறைவி சிலம்பார் சிறுடி
வல்லகொல் செல்லுந் தாமே, கல்லென
ஊரெழுந் தன்ன உருகெழு செலவின்,
நீரிலந் தந்த தாரிடை மடுத்த
கொடுங்கோ லுமணர் பகுதெழி தெள்விளி
நெடும்பெருங் குன்றத் திமிழ்கொள இயம்புங்,
கடுங்கதிர் நிரிய வேய்பயில் பிறங்கல்,
பெருங்களி றுரிஞ்சிய மன்னரை யாஅத்,
தருந்சுரக் கவலைய அதர்படு மருங்கின்,
நீளரை இலவத் தூழ்கழி பன்மலர்,
விழுவுத் தலைக்கொண்ட பழவிறல் மூதூர்
நெய்யுமிழ் சுடரில் கால்பொரச் சிலைஇ
வைகுறு மீனில் தோன்றும்
மைபடு மாமலை விளங்கிய சுரனே.

—கயமனார்.

(சொ - ள்.) க—ரு. என் மகள் - வளம்கெழு நிருநகர்-செல்வம் பொருந்திய அழகிய மனையின் கண்ணே, பந்து சிறிது எறியினும் - சிறிது பொழுது பந்து எறிந்து ஆடினும், இளந்துணை ஆயமொடு - தன்னை யொத்த இளையராய ஆயத்தாரோடு, கழங்கு உடன் ஆடினும் - ஒருங்கிருந்து கழங்கு ஆடினும், அன்னை என் மெய் உயங்கின்று என்று அசைஇ - அன்னையே! என் உடல் வருந்திற்று என்று கூறித் தளர்ந்து, மயங்கு வியர் பொறித்த நுதலள் - செறியும் வியர்வு அரும்பிய நெற்றியினளாய், தண்ணென முயங்கினள் வதியும் - (என் உடல்) தண்ணென்று குளிர என்னைத் தழுவி அமர்ந்தாள் (முன்பு), மன் - அந்தோ அது கழிந்ததே!

ரு—எ. இனி - இப்பொழுது, தொடிமான் சுற்றமும் எம்மும் உள்ளாள் - தொடியையுடைய சிறந்த ஆயத்தாரையும் எம்மையும் நினையாளாய், நெடுமொழித் தந்தை அருங்கடி நீவி - மிக்க புகழையுடைய தனது தந்தையினது அரிய காவலினைக் கடந்து சென்று,

கo—உஉ. கல் என ஊர் எழுந்தன்ன உருகெழு செலவின் - கல்லென்னும் ஒலியுடன் ஓர் ஊரே எழுந்து செல்வதொக்கும் அச்சம் மிக்க செல்கையையுடைய. கொடுங்கோல் உமணர் - கொடிய கோல்களையுடைய உப்புவாணிகர், நீர் இல் அத்தத்து ஆரிடை - நீரற்ற காட்டின் அரிய இடங்களிலே, மடுத்த பகடு தெழி தெள்விளி - தடையுறும் கடாக்களை உரப்பியோட்டும் தெள்ளிய ஒலிகள், நெடும் பெருங் குன்றத்து இமிழ் கொள இயம்பும் - நெடிய பெரிய மலையில் எதிரொலி உண்டாக வந்திசைப்பதும், கடுங்கதிர் திருகிய வேய்ப்புழில் பிறங்கல் - கடுமை மிக்க ஞாயிற்றின் கதிர்கள் முறுகிய மூங்கில் அடர்ந்த பக்கமலைகளையுடையதும், பெருங் களிறு உரிஞ்சிய மண் அரையாத்து - பெரிய களிறுகள் உரிஞ்சியதால் சேற்று மண்ணைப் பொருந்திய அடியினையுடைய யா மரங்களையுடைய, அருஞ் சுரக் கவலிய அதர்படு மருங்கின் - அரிய சுரத்தே கவர்த்த நெறிகள் பொருந்திய பக்கங்களில், நீள் அரை இலவத்து ஊழ்கழி பல்மலர் - நீண்ட அடியினையுடைய இலவ மரத்தின் முதிர்ச்சி மிக்க பலவாய பூக்கள், விழவு தலைக் கொண்ட பழவிறல் முது ஊர் - விழாக்களைத் தன்னிடத்தே கொண்ட பழைய வெற்றியைக் கொண்ட முதிய ஊரில், நெய் உமிழ் சுடரில் - நெய்யைப் பெய்த விளக்கின் சுடர் விழுவதுபோல விழும்படி, கால்பொரச் சில்கி - காற்றுப் பொருதலால் எஞ்சியவை சிலவாகி, வைகுறு மீனில் தோன்றும் - விடிகின்ற காலத்து மீன்போலச் சிலவாய்த் தோன்றுவதுமாகிய, மை படு மா மலை விலங்கிய சுரன் - மேகங்கள் பொருந்திய பெரிய மலைகள் குறுக்கிட்டு நிற்கும் சுரநெறியினில்,

அ—கo. செல்ல - செல்லுதற்கு, நொதுமலாளன் நெஞ்சு அறப் பெற்ற - ஏதிலானனது நெஞ்சு தனக்கே யுரித்தாகப் பெற்ற, என் சிறு முதுக்குறைவி - எனது சிறிய மூதறிவுடைய அவளது, சிலம்பு �ார் சிறடி தாம் - சிலம்பு பொருந்திய சிறிய அடிகள், வல்லகொல் - வல்லுநவோ?

(முடிபு) சிறு முதுக் குறைவியாய என் மகள், முன்பு பந்து சிறிது எறியினும் கழங்கு ஆடினும் அசைஇ முயங்கினள் வதியும். இனி, அவள் சிலம்பு ஆர் சிறடி தந்தை அருங்கடி நீவி, மலை விலங்கிய சுரன் செல்லவல்ல கொல்.

உருகெழு செலவின் உமணர் எனவும், ஆரிடை மடுத்த பகடு எனவும் கூட்டுக. தெள்விளி இயம்பும் மலை எனவும், பிறங்கலையுடைய மலையெனவும், பன்மலர் சிலைத் தோன்றும் மலை யெனவும் இயையும்.

(வி - ரை.) மன் கழிவின்கண் வந்தது. நெடுமொழி - புகழ்; வஞ்சினமுமாம். அறப் பெறுதல் - உரித்தாகப் பெறுதல்; 'தன்னுயிர் தானறப் பெற்றூஉம்' (உசுஅ) என்றார் திருவள்ளுவரும். சிறுமுதுக் குறைவி - இளமையிலே அறிவு முதிர்ந்தவள்; 'சிறுமுதுக்குறைவிக்குச் சிறுமையுஞ் செய்தேன்'[1] என்றார் இளங்கோவடிகளும். உமணர்

---

1. சிலப், கசு : சுஅ.

சசு

கூட்டத்து மிகுதியைக் குறித்தற்கு னைரெழுந்தன்ன என்றார். ஆரிடை - ஏற்றமிவுடைய இடங்கள். இமிழ் கொள - இனிமை பொருந்த என்றுமாம். களிறு, மாரிக்காலத்து உண்டான சேறு உலர்ந்து விறுவிறுத்த உடலை உரிஞ்சுதலால் யாமரம் மண்னையுடைய அரையாயிற்று. விடிகின்ற காலத்து, மீன்கள் பல மறையச் சிலவே தோன்றுமாகலின், வைகுறு மீனிற் றோன்றுமென்றார்.

———

(18.) குறிஞ்சி

[தோழி இரவு வருவானைப் பகல் வர வென்றது.]

நீர்நிறம் கரப்ப ஊழுறு புதிர்ந்து
பூமலர் கனுலிய கடுவரற் கான்யாற்றுக்
கராஅந் துஞ்சுங் கல்லுயர் மறிசுழி
மராஅ யானை மதந்தப ஒற்றி
உராஅ சர்க்கும் உட்குவரு நீத்தங்
கடுங்கட் பன்றியின் நடுங்காது துறந்து
நாம அருந்துறைப் பேர்தந் தியாமத்
திங்கும் வருபவோ ஓங்கல் வெற்ப
ஒருநாள் விழுமம் உறினும் வறிநாள்
வாழ்குவள் அல்லளென் தோழி யாவதும்
ஊறில் வழிகளும் பயில வழங்குநர்
நீடின் றாக இழுக்குவர் அதனால்
உலமரல் வருத்தம் உறுதுமெம் படப்பைக்
கொடுந்தேன் இழைந்த கோடுயர் நெடுவரைப்
பழந்தூங்கு நளிப்பில் காந்தளம் பொதும்பில்
பகனீ வரினும் புனர்குவை அகன்மலை
வாங்கமைக் கண்ணிடை கடுப்பயாய்
ஓம்பினள் எடுத்த தடமென் தோளே.

—கபிலர்.

(சொ-ள்.) அ. ஓங்கல் வெற்ப - உயர்ந்த மலையையுடைய தலைவனே!

க—ரு. நீர் நிறம் கரப்ப ஊழ் உறுபு உதிர்ந்து பூமலர் கனுலிய கடுவரல் கான்யாற்று - நீரின் நிறம் மறைய முதிர்புற்று உதிர்ந்து அழகிய மலர்கள் நெருங்கிய நீர் கடுகி வருதலையுடைய காட்டாற்றில், கராஅம் துஞ்சும் கல் உயர் மறிசுழி - முதலை தங்கும் உயர்ந்த கல்லில் மோதி மீளும் சுழிகளையுடையதும், மராஅ யானை மதம் தப ஒற்றி உராஅ சர்க்கும் உட்குவரு நீத்தம் - இனத்தோடு மருவாத களிற்றியானையை அதன் மதம் கெட மோதி வலியுற்று இழுத்தலின் அச்சம் தோன்றுவதுமாகிய வெள்ளத்தினை,

சு—அ. கடுங்கண் பன்றியின் நடுங்காது துறந்து-அஞ்சாமையையுடைய பன்றியைப்போல நடுங்குதலின்றிக் கடந்து ஏறி, நாம அருந்துறை போர்ந்து யாமத்து சுங்கும் வருபவோ-(அணங்கு உறைதலின்) அச்சம் தரும் அரிய துறையினைத் தாண்டி நள்ளிரவில் இத்தகைய இடத்தும் மக்கள் வருவாருளரோ,

கூ—கo. ஒருநாள் விழுமம் உறினும் வழிநாள் என் தோழி வாழ்குவள் அல்லள் - ஒருநாள் நீ துன்பம் உறினும் பின்னுள் என் தோழி உயிர்வாழ்வாள் அல்லள்;

கo—உ. யாவதும் ஊறு இல் வழிகளும் பயில வழங்குநர் நீடு இன்றுக இழுக்குவர் - இடையூறு சிறிதும் இல்லாத வழிகளிலும் அங்குப் பலகாலும் போய் வருவார் நீடுதல் இலையாகத் தவறு எய்துவர்;

கஉ—ங. அதனுல் உலமரல் வருத்தம் உறுதும் - அதனுல் யாங்கள் மனம் சுழலும் வருத்தத்தினை யடைவோம்;

கங—அ. அகல் மலி வாங்கு அமைக் கண் இடை கடுப்ப - அகன்ற மலியிலுள்ள வளைந்த மூங்கிலின் கணுக்கட்கு நடுவான இடத்தை யொக்க, யாய் ஓம்பினள் எடுத்த தட மெல் தோள்-யாய் போற்றி வளர்த்த தலைவியின் பெரிய மென்மை வாய்ந்த தோளை, எம் படப்பை - எம் தோட்டத்தினை யடுத்துள்ள, கொடு தேன் இழைத்த - வட்டமாகிய தேனிறுல் வைக்கப்பெற்ற, கோடு உயர் நெடு வரை - சிகையும் உயர்ந்த நீண்ட மலைக்கண், பழம் தூங்கு நளிப்பில் - பழங்கள் தொங்குகின்ற மரச்செறிவினுள், காந்தள் அம் பொதும்பில் - காந்தளினுடைய புதரிடத்து, பகல் நீ வரினும் புணர் குவை - பகற்கண் நீ வரினும் பொருந்துவை.

(முடிபு) வெற்ப! கான்யாற்று நீத்தம் நடுங்காது துறந்து யாமத்து சுங்கும் வருபவோ; என்தோழி வாழ்குவள் அல்லள்; ஊறில் வழிகளும் வழங்குநர் நீடுக்குவர்; அதனுல் வருத்த முறுதும்; நீ தடமென்றோள் காந்தளம் பொதும்பிற் பகல் வரினும் பெறுகுவை.

கான்யாற்றுச் சுழியையுடைய நீத்தம் எனவும், யானையையுடைய நீத்தம் எனவும் இயையும்.

(வி - ரை). உராஅ - அலைய என்றுமாம். நாம - நாம் என்னும் உரிச்சொல் சுற திரிந்தது. போர்ந்து - போர்ந்து. சுங்கு-தன்மைக்கண் வந்தது. அன்றே வாழாள் என்னுது வழிநாள் வாழாள் என்றது, அறிவது பின்னுளிலாகலின். யாய் - செவிலி,

'கொடுந்தேன் . . . பொதும்பில்' என்றமையால், இரவுக்குறி விலக்கிப் பகற்குறி உடன்பட்டாள் போலக் கூறினும், தேன் அழிக்க வருவராலும், பழமெடுக்க வருவாராலும், பூப்பறிக்க வருவாராலும் பகற்குறியும் அரிதாம் என்று குறிப்பால் மறுத்தாளாம்.

(மே-ள்.) 'பொழுதும் ஆறும்'[1] என்னும் சூத்திரத்து, 'அவனு
றஞ்சல், என்றதற்கு, 'ஒரு நாள் விழுமமுறினும் வழிநாள், வாழ்கு
ளல்லள் என்றெழி' என்னும் பகுதியை எடுத்துக் காட்டினர் நச்சி

---

19. பாலை

[நெஞ்சிறைப் பொருள் வலிக்கப்பட்டுப் பிரிந்த தலைமகன் தலை
மகள் நலன் நயந்து உள்ளிய நெஞ்சினைக் கழறியது)

அன்றவண் ஒழிந்தன்றும் இலையே வந்துநனி
வருந்தினை வாழியென் நெஞ்சே பருந்திருந்
துயாவிளி பயிற்றும் யாஅயர் நனந்தலை
உருள்துடி மகுளியின் பொருள்தெரிந் திசைக்கும்
கடுங்குரற் குடிஞையது நெடும்பெருங் குன்றம்
எம்மொடு நீறத்தலும் செல்லாய் பின்னின்
றெறியச் சூழ்ந்தனை யாயின் தவிராது
செல்லினிச் சிறக்கு நின் னுள்ளம் வல்லே
மறவல் ஒம்புமதி எம்மே நறவின்
சேயிதழ் அனைய வாகிக் குவளை
மாயிதழ் புரையும் மலிர்கொள் சாரல
உள்ளகங் கனல உள்ளுதொ றுலறிப்
பழங்கண் கொண்ட[2] கழுந்துவீழ் அவிரறல்
வெய்ய உகுதர வெரீஇப் பையெனச்
சில்வளை சொரிந்த மெல்லிறை முன்கை
பூவி கொடியிற் புல்லெனப் போகி
அடர்செய் ஆயகல் சுடர்துணை யாக
இயங்காது வதிந்தநங் காதலி
உயங்குசாய் சிறுபுறம் முயங்கிய பின்னே

—பொருத்தில் இளங்கீரனார்.

(சொ-ள்). கூ—உ. என் நெஞ்சே வாழி-, அன்று அவண் ஒழிந்தன்றும் இலை - நாம் புறப்படும் அன்று யான் வாரேன் என்று கூறி நம் மனையில் தங்கிவிட்டாயு மல்லை, வந்து நனி வருந்தினை - இத்துணையும் வந்து மிகவும் வருத்தமுற்றாய், உ—கூ. பருந்து இருந்து உயா விளி பயிற்றும் - பருந்து தங்கி வழிச்செல்வோர் வருத்தததை யடையும் ஓசையைப் பலகாலும் செய்யும், யா உயர்நனந்தலை - யா மரங்கள் உயர்ந்த அகன்ற இடங்களில், உருள் துடி மகுளியின் - (கடிப்பு) உருளின்ற இருகு பறையின் ஓசையைப்போல, பொருள் தெரிந்து இசைக்கும் - பொருள் தெரிய ஒலிக்கும், கடுங்குரல் குடிஞையது - கடிய குரலையுடைய ஆந்தைகளையுடைய, நெடும் பெருங் குன்றம் - நீண்ட பெரிய குன்றத்தை, எம்

---

1. தொல், பொருளி. கூ. (பாடம்) 2. கலிழ்ந்து.

மொடு இறத்தலும் செல்லாய் - எம்மொடு தொடர்ந்து கடத்தலும் செய்யாய்,

சு—அ. பின் நின்று ஒழியச் சூழ்ந்தனை யாயின்-பின்னே நின்று ஒழியக் கருதினையாயின், தவிராது செல் இனி வல்லே - தடையின்றி இப்பொழுதே விரைந்து செல்வாயாக, சிறக்க நின் உள்ளம் - நின் உள்ளத்தெண்ணம் சிறப்பதாக;

கூ—கஉ. குவளை மா இதழ் புரையும்—முன் குவளையினது கரிய இதழை யொக்கும்; மலிர்கொள் சுர் இமை - நீர் மிகுதல் கொண்ட குளிர்ந்த கண்களின் இமை, நறவின் சேய் இதழ் அனையவாகி-பின்பு நறவம்பூவின் சிவந்த இதழ் அனையவாகி, உள்ளகம் கனல - உள்ளம் கொதித்தலாலே, உள்ளுதோறு உலறி - நினையுந்தொறும் வற்றி, பழங்கண் கொண்ட கதழ்ந்து வீழ் அவிர் அறல்-துன்பங் கொளற்கு ஏதுவான விரைந்து விழும் விளங்கும் அறல்நீர், வெய்ய உகுதர-வெப்பங் கொண்டவாய்ச் சொரிய, வெரீஇ - அஞ்சி, சில் வளை சொரிந்த மெல்இறை முன்கை-சில வளைகளும் சொரியப்பெற்ற மெல்லிய சந்தினையுடைய முன்கையுடையளும், பூ வீ கொடியிற் புல்லெனப் பையெனப் போகி - பூக்கள் ஒழியப்பெற்ற கொடிபோலப் பொலிவற மெல்லெனச் சென்று, அடர் செய் ஆய் அகல் சுடர் துணையாக - பொற் றகட்டா னியன்ற அழகிய அகலிடத்துத் தான் ஏற்றிய விளக்கே துணையாக, இயங்காது வதிந்த நம் காதலி - எங்கணும் இயங்க வலியற்று ஓரிடத்தே தங்கியுள்ளவளுமாகிய நம் காதலியின், உயங்கு சாய் சிறுபுறம் முயங்கிய பின் - வருந்தி மெலிந்த பிடரினைத் தழுவிய பின்,

கூ. மறவல் ஒம்புமதி எம்மே - எம்மை மறத்தலை நீக்குவாயாக.

(முடிபு) நெஞ்சே! அன்று ஒழிந்தன்று மிலை; வந்து நனி வருந்தினை; குன்றம் எம்மோடிறந்தலும் செல்லாய்; ஒழியச் சூழ்ந்தனையாயின் செல் இனி; நின் உள்ளம் சிறக்க; நம் காதலி சிறுபுறம் முயங்கிய பின்னே எம்மை மறவல் ஒம்புமதி.

(வி-ரை.) மருளி - ஓசை. மருளியின் என ஒப்பு உரைத்தது ஓசை மாத்திரம் கருதி; பொருள் தெரிதல் குடிஞை ஓசைக்கே உள்ளது. தெரிந்து - தெரிய எனத் திரிக்க. பொருள் தெரிய இசைத்தல், குத்திப்புதை என்பதோர் பொருள் தெரிய இசைத்தல் என்பர். இலி, பொருள் - போவார் காரியமுமாம்; ஆந்தையின் குரல் போவார் காரியத்தை உணர்த்தும் நிமித்தமாதலின். உள்ளம் - நெஞ்சினது உள்ளம். நறவின் சேயிதழைச் செவ்வரிக்கு உவமையாகவும், குவளையைக் கண்வடிவிற்கு உவமையாகவும் கூறுவாரும் உளர். கொண்ட - கொள்ளுதற்கு ஏதுவான. குறிப்புரைகாரர் விரைந்து விழுகின்ற எனப் பொருள் செய்திருத்தலின் 'கதழ்ந்து வீழ்' என்பதே அவர் கொண்ட பாடமாகும். 'கலிழ்ந்து' எனும் பாடத்திற்குக் 'கலங்கி' என்க. அறல் - அற்று விழுகின்ற நீர். வெரீஇ - பிறர் காணுபரென அஞ்சி. வளை பலவும் முன்பே கழன்றொழிந்தன என்பான் சில்வளை சொரிந்த என்றான். முன்கையையுடைய காதலி, வதிந்த காதலி எனக் கூட்டுக. மறைய நின்று பின்னே தழுவுதலான்,

சிறுபுறம் முயங்கியன் என்றான். முயங்கியபின் என்றது முயங்குங் எனக் கூறியவாறுமாயிற்று.

(மே - ள்.) [1]'புணர்தல் பிரிதல்' என்னுஞ் சூத்திரத்து, இ செய்யுளைக் காட்டி, 'இது மறவலோம்புமதி யெனப் பிரிவு கூறிற்' என்றும், [2]'தோயு மின்பமும்', என்னுஞ் சூத்திரத்து, 'கைகவியா சென்று...நெஞ்சே' என்பது, நெஞ்சினை உறுப்புடையதுபோல் உவந்துரைத்தது என்றும், 'வருந்தினை வாழியென் நெஞ்சே...சிறந் நின்னுள்ளம்' என்பது, நெஞ்சினை அறிவுடையதுபோல் அழுை பற்றிக் கூறியது என்றும் கூறினர் நச்சினார்க்கினியர்.

---

(20) நெய்தல்

[பகற்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தன் மகட்குச் சொல்லுவாளாய்த் தலைமகன் கேட்பச் சொல்லியது.]

பெருநீர் அழுவத் தெந்தை நந்த
கொழுமீன் உணங்கல் படுபுள் ஒப்பி
எக்கர்ப் புன்னை இன்னிழல் அசைஇச்
செக்கர் ஞெண்டின் குண்டுநீர் கெண்டி
நாமுழு வெங்கயிற் றூசல் தூங்கிக்
கொண்டல் இடுமணல் குரவை முனையின்
வெண்டலைப் புணரி ஆயமொ டாடி
மணிப்பூம் பைந்நழை நனைஇ யணிந்தகப்
பல்பூங் கானல் அல்லினம் வருந்தல்
கல்லென் நல்லணங் குற்ற இவ்வூர்க்
கொடுந்தாழ் பெண்டிர் சொற்கொள் வன்மை
கூடுகொண் டனனே தோழி பெருந்துறை
எல்லியும் இரவும் என்னது கல்லென
வலவன் ஆய்ந்த வண்பரி
நிலவுமணல் கொட்குமோர் தேரொன் டெனவே.

—[3]உலோச்சனார்.

(சொ - ள்.) கக. தோழி—,

க—கo. எக்கர்ப் புன்னை இன்னிழல் அசை இ - கடற்கரைக்கண் மணல் மேட்டிலுள்ள புன்னையின் இனிய நிழலில் தங்கி, பெருநீர் அழுவத்து-கடற்பரப்பினின்று, எந்தை தந்த கொழுமீன் உணங்கல் படுபுள் ஒப்பி - நம் தந்தை தந்த கொழுமையாகிய மீனின் வற்றலைக் கவரவரும் பறவைகளை அகற்றியும், செக்கர் ஞெண்டின் குண்டு நீர் கெண்டி - சிவந்த நண்டின் ஆழமான வளைகளைத் தோண்டியும்,

---

1. தொல். அகத். கசு. 2. தொல். பொருளியல். உ. (பாடம்) 3. பொருந்தில் இளங்கீரனார்.

கொடுங்கழி தாழை வீழ்கயிற்று ஞாழல் ஒங்கு சினைத் தொடுத்த ஊசல் தூங்கி - வளைந்த கழியிலுள்ள தாழை விழுதாலாய கயிற்றால் புலிநகக் கொன்றையின் உயர்ந்த கிளையில் கட்டித்தொங்கவிட்ட ஊசலில் ஆடியும், கொண்டல் இடுமணல் குரவை முகையின் - கீழ்க் காற்றுக் குவித்த மணலில் குரவையாடி (யும் இவை) வெறுப்பின், வெண்தகைப் புணரி ஆயமொடு ஆடி - வெள்ளிய தகையையுடைய கடல் நீரில் ஆயத்தாரோடு விளையாடி, மணி பூ பைந்தழை அணிந்த கதுப்பு - அழகிய பூக்களோடு மேவிய பசிய தழை யுடையினை அழகு பொருந்த உடுத்திக் கொண்டும், பல் பூ கானல் அல்கினம் வருதல் - (இங்ஙன மெல்லாம்) பல பூக்களையும் உடைய கடற்கரைச் சோலையில் நாம் தலைவரோடு தங்கி வருதலைப்பற்றி,

கஉ—ரு. இவ்வூர் - இவ்வூரில், கவ்வை கல் அணங்கு உற்ற - அலர் கூறலாகிய கற்பேய் பிடித்திருக்கும், கொடிது அறி பெண்டிர் சொற்கொண்டு - கொடுமை கூறலே அறியும் பெண்டிர் கூறும் சொல்லைக் கேட்டு, அன்னை - நமது அன்னை, பெரும் துறை - பெரிய துறையகத்து, எல்லியும் இரவும் என்றது - பகலும் இரவும் என்றில்லாது, உலவன் ஆய்ந்த வன்பரி - பாகன் ஆய்ந்து கொண்ட அழகுமிக்க குதிரை பூட்டப்பெற்று, நிலவு மணல் கல் என கொட்கும் ஓர் தேர் உண்டு எனவே - நிலாப்போன்ற மணலில் கல்லென்னும் ஒலியுடன் சுழன்று திரியும் ஒரு தேர் உண்டு என்று எண்ணி, கடிகொண்டனள் - இல்லின்கண் காவற்படுத்தினள்: (என் செய்வாம்.)

(முடிபு) தோழி, நாம் பல்பூங்கானல் தலைவனொடு அசைஇ, ஒப்பிக், கொண்டித், தூங்கி, ஆடி, முகையின், தைஇ, அல்கினம் வருதலைப் பற்றி) அன்னை பெண்டிர் கூறும் சொற்கொண்டு பெருந்துறையிடத்துக் கொட்கும் தேர் உண்டு எனவே நம்மைக் கடிகொண்டனள்; (என் செய்வாம்.)

(வி-ரை.) கொழுமீன் - ஒருவகை மீனுமாம். குரவையை வெறுப்பின் புணரி யாடியும் என்றுமாம். அணங்கு - சண்டுப் பேய்: கல் அணங்கு என்றது இகழ்ச்சிக் குறிப்பு.

(மே-ள்.) [1]'மறைந்தவற் காண்டல்' என்னுஞ் சூத்திரத்து, பிறர் கூற்றால் தமர் தற்காத்தமைக்கு இச் செய்யுளையும், [2]'தேரும் யானையும்' என்னுஞ் சூத்திரத்து, தலைவன் தேரூர்ந்து வருதற்கு, 'நிலவு மணற் கொட்கு மோர் தேருண்டெனவே' என்பதனையும் எடுத்துக் காட்டினர் நச்சினார்க்கினியர்.

---

21. பாலை

[பொருள் வலிக்கப்பட்டுப் பிரிந்த தலைமகன் இடைச்சுரத்து நின்று மீளலுற்ற நெஞ்சினைக் கழறியது.]

மனையுள நொச்சி மெளவல் வான்முகைத்
தூணிறைத்த நல்ல மாவீழ் வெண்பல்

---

1. தொல். எ. உ0. 2. தொல். பொருளியல். உஎ.

அல்வயிற் றகன்ற அல்குல் தைஇத்
தாழ்மெல் கூந்தல் தடமென் பணைத்தோள்
மடந்தை மானலம் புலம்பச் சேய்நாட்டுச்
செல்லல் ஒல்லியான் சொல்லவும் ஒல்லாய்
விதுப்புறத் தமைந்தனை ஆயின் மதுகைப்
பல்வேறு வெறுக்கை தருகம் வல்லே
எழுவினி வாழியென் றெஞ்சே புரியினர்.

மெல்லிழை அரிவை புலம்ப வல்லோன்
கோடறை கொம்பின் வியலகத் தீண்டி
மராஅ மலைந்த மணவாய்த் தென்றல்
சுரஞ்செல் மள்ளர் சுரியல் தூற்றும்
என்றாழ் நின்ற புன்தலை வைப்பிற்

பருந்திளைப் படூஉம் பாறுநிலை ஓமை
இருங்கல் விடரகத் தீன்றிளைப் பட்ட
மெல்புனிற் றம்பினை பரிந்தெனப் பைங்கண்
செந்நாய் ஏற்றை கேழல் தாக்க
இரியற் பிணவல் தீண்டலின் பரீஇச்

செங்காய் உதிர்ந்த பைங்குலை சுற்றின்
பரல்மண் சுவல முரணிலம் உடைந்த
வல்வாய்க் கணிச்சிக் கூவலர்
ஊரு நிட்ட உவலைக் கூவல்
வெண்கோடு நயந்த அல்பில் கானவர்

இகழ்ந்தியங் கியவின் அகழ்ந்த குழிசெந்
திருங்களிற் றினநிரை தூர்க்கும்
பெருங்கல் அத்தம் விலங்கிய காடே.

—காவன் முல்லைப் பூதனார்

(சொ - ள்.) க—கூ. மடந்தை இள நொச்சி - மடப் படப்பையில் உள்ள இளைய நொச்சியிற் படர்ந்த, மா வீழ் மௌவல் வால்முகை - வண்டுகள் விரும்பும் முல்லையின் வெள்ளிய அரும்புகளில், துளை நிரைத்தன்ன - ஒத்தனவற்றை நிரைத்து வைத்தாலொத்த, வெண் பல் - வெள்ளிய பற்களையும், அவ்வயிற்று - அழகிய வயிற்றினையும், அகன்ற அல்குல் - பரந்த அல்குலினையும், தைஇ தாழ் மெல் கூந்தல் - ஒப்பனை செய்யப்பெற்றுத் தாழ்ந்து தொங்கும் மெல்லிய கூந்தலினையும், தட மெல் பணைத் தோள் - பெரிய மென்மை வாய்ந்த மூங்கிலையொத்த தோளினையும் (உடைய), மடந்தை மான் நலம் புலம்ப - நம் தலைவியின் மாண்புறும் அழகு கெட, சேய் நாட்டுச் செல்லல் என்று - சேய்மைக் கண்ணதாகிய நாட்டிற்குச் செல்லாதே என்று, யான் சொல்லவும் ஒல்லாய் - அவ்விடத்தே யான் கூறவும் அதற்குப் பொருந்தாயாய்,

எ—கூ. விதுப்புற அமைந்தனை யாயின் - அவ் வினையை விரும்பி அமைந்து போந்தா யாகலின், மதுகை பல்வேறு வெறுக்கை தரு

கம் - நம் தலைவி மகிழப் பலவேறு வகையினவாய் செல்வங்களை ஈட்டித் தருவோம்;

கூ—சு. புரி இணர் மெல் அவிழ் அம் சினை புலம்ப - வலம் சுரிந்த பூங்கொத்துக்கள் மெல்லென மலர்கின்ற அழகிய கொம்புகள் அப் பூக்களை யிழந்து தனிமையுற, வல்லோன் கோடு அறை கொம் பின் - பூக்கொள்ள வல்லோன் மரக்கொம்பினை வெட்டித்து அசைக்கும் கோல் போல, மராஅம் வீ உகத் தீண்டி அலைத்த மணவாய்த் தென் றல் - மராமரத்தை மலர்கள் உதிரத் தாக்கி அலைக்கும் மணத்தைத் தன்னிடத்துடைய தென்றல், சுரம் செல் மள்ளர் சுரியல் தூற்றும் - சுரநெறியிற் செல்லும் வீரர்களது குழன்ற மயிரில் அம் மலர்களைச் சொரியும், என்றூழ் நின்ற புன்தலை வைப்பில் - வெம்மை நிலை பெற்ற புல்லிய இடத்தையுடைய ஊர்களில்,

சு—உங. பருந்து இருப்பின் பாறு தலை ஓமை - பருந்து சென்று காவற்படும் சிதறிய தலையினவாய ஓமை மரங்களையுடைய, இருங்கல் விடரகத்து - பெரிய மலையின் முழைஞ்சிலிடத்து, சென்று இருப்பட்ட - சென்று காவற்பட்ட, மென் புனிற்று அம் பிணவு பசித் தென - மென்மையும் ஈன்ற அண்மையும் உடைய அழகிய பெண் நாய் பசித்ததாக, பைங்கட் செந்நாய் ஏற்றை - பசிய கண்களை யுடைய செந்நாய் ஏறு, கேழல் தாக்க - ஆண் பன்றியினைத் தாக்க, இரியல் பிணவல் தீண்டலின் - அது கண்டு அஞ்சியோடும் பெண் பன்றி மோதிச் செல்லுதலின், பைங்குலை ஈந்தின் பரீஇ உதிர்ந்த செங்காய் பரல் - பசிய குலைகளையுடைய ஈந்தினின்றும் அறுபட்டு உதிர்ந்த செங்காய்களின் வித்துக்களுடன் கூடிய, மண் சுவல முரண் நிலம் - மண் மேடாகிய வன்னிலத்தை, உடைத்த - உடைத்திட்ட, வல் வாய்க் கணிச்சி - வலிய வாயினையுடைய குந்தாலியை யுடைய, கூம் ஆர் கூவலர் - கூழினை யுண்ணும் இளைய வெட்டுவோர், ஊருது இட்ட உவலைக் கூவல் - அகழ்ந்து பார்த்தும் நீர் ஊறுமையின் விட் டேகிய தழை மூடிய இளைய குழிகளை,

உசு—எ. இரும் களிற்று இனநிரை - பெரிய களிற்றினமாகிய கூட்டம், வெண்கோடு நயந்த அன்பு இல் கானவர் - தமது வெள்ளிய கொம்பினைக் கவர விரும்பிய இரக்கமற்ற வேடர்கள், இகழ்ந்து இயங்கு இயவின் - நீங்கிச்செல்லும் என்று நினைத்துக் கருதின்றிச் செல் லும் நெறிகளில், அகழ்ந்த குழி செத்து - தங்களை அகப்படுத்த அகழ்ந்து மறைத்த குழிகளாகக் கருதி, தூர்க்கும் - அவற்றைத் தூர்க்கும், பெருங்கல் அத்தம் விலங்கிய காடு - பெரிய கற்களை யுடைய நெறிகள் குறுக்கிடும் இக்காட்டிற் சேறற்கு (ஈண்டு நின் றும் மீளாது),

கூ. இனி வல்லே எழு - இப்பொழுது விரைந்து எழுந்து என் பின்னே வருவாயாக.

(முடிபு) நெஞ்சே! மடந்தை நலம் புலம்ப, சேய் நாட்டுச் செல்லல் என்று யான் சொல்லவும், ஒல்லாது அமைந்து போந்தனையாகலின், மனை நக வெறுக்கை தருகம்; ஈண்டு நின்றும் மீளாது, காட்டிற் சேறற்கு இப்பொழுது எழுவாயாக.

தென்றல் தூற்றும் வைப்பின் காடு எனவும், உவலைக் கூவலைக் களிற்றின் நிரை தூர்க்கும் காடு எனவும் இயையும்.

(வி—ரை.) பிணவு பசித்தெனச் சென்றாயேற்றை, கேழல் தாக்கப் பிணவல் நிண்டலின் பரிஇ உதிர்ந்த சந்தின் பரலியுடைய மட்சுவலாகிய வன்னிலத்தில் கூவலர் உடைத்த கூவல் என்க.

மதினப் படப்பையில் நொச்சியின் கண் மெளவல் படர்ந்திருத்தல், 'மயிலடி யிலிய மாக்குரல் நொச்சி, மதினடு மெளவலோ டும்முதை யவிழ்' என்னும் நற்றிணை(கந)ச் செய்யுளானும், 'மதினயிள நொச்சி மெளவல் வான்முகை, (உக) 'மதினய, தாழ்வி னெருச்சி சூழ்வன மலரும், மெளவல் மாச்சிதிர், (உசு) என்னும் இந்நாற் செய்யுட்களானும் அறியப்படும். அமைந்தனை யாயின் - அமைந்து போந்தனையாயின் என விரிக்க. மதின நக - இல்லம் பொலிய என்றுமாம். கோடு அதி கொம்பு - பூ உதிர்க்கும் கொம்பு; அது தென்றலுக்கு உவமை. சுரியல் - சுருண்ட தலைமயிர். சன்றணிமைபற்றிப் புறத்தே செல்லலாகாமையின் சாரிடத்தும் இகப்பட்ட என்றார்.

[1]'பன்றி புல்வாய் நாயென மூன்றும், ஒன்றிய வென்ப பிணவென் பெயர்க்கொடை', [2]'பிணவ லெனிலு மவற்றின்மேற்றே' என்னும் சூத்திரங்களால், 'பிணவு' எனவும் 'பிணவல்' எனவும் வந்தன. சிறுதாம் இகும்து இயங்கு இயவில் கானவர் அகம்ந்த குமி என்க.

---

(22) குறிஞ்சி

[(1) வரைவிடை வைத்துப் பிரிந்த காலத்துத் தலைமகள் ஆற்றுளாகத் தோழி தலைமகனை இயற்பழிப்பத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

(2) தலைமகன் இரவுக்குறி வந்து சிறைப்புறத்தானாகத் தோழியாற் சொல்லெடுக்கப்பட்டுத் தலைமகள் சொல்லியதூஉமாம்.]

அனங்குடை நெடுவரை யுச்சியின் இழிதரும்
கனங்கொள் அருவிக் கான்கெழு நாடன்
மனங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்
இதுவென அறியா மறுவரற் பொழுதில்
படியோர்த் தேய்த்த பல்புகழ்த் நடக்கை
நெடுவேட் பேணத் தணிகுவள் இவளென
முதுவாய்ப் பெண்டிர் அதுவாய் கூறக்
களநன் றிழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் நிலம்பப் பாடிப் பலிகொடுத்
துருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்
ஆர நாற அருவிடர்த் தலைந்த

---

1. தொல். மர. நூ. 2. மர. நூ.

சாரற் பல்பூ வண்டுபடச் சூடிக்
களிற்றிரை தெரீஇய பார்வல் ஒதுக்கின்
கரு ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல
நல்மனை நெடுநகர்க் காவலர் அறியாமைத்
தன்னசை உள்ளத்து நந்நசை வாய்ப்ப
இன்னுயிர் குழைய முயங்குதொறும் மெய்ம்மலிந்து
நக்கனென் அல்லனே யானே எய்த்த
உ0 நோய்தணி காதலர் வரவீண்
டேநில் வேலற் குலந்தமை கண்டே.

—வெறிபாடிய காமக் கண்ணியார்.

(சொ - ள்.) க—ச. அணங்குடை நெடுவரை உச்சியின். இழி தரும் கணம் கொள் அருவிக் கான் கெழு நாடன் - தெய்வமுடைய நீண்ட மலையுச்சியினின்று விழும் கூட்டமாய அருவிகளையுடைய காடு பொருந்திய நாட்டையுடைய நம் தலைவனது. மணம் கமழ் வியன் மார்பு அணங்கிய செல்லல் இது என அறியா மறுவரல் பொழுதில் - மணம் கமழும் அகன்ற மார்பு வருந்திய வருத்தத்தை இதனை உண்டாயதென்று அறியாத கலக்கமுற்ற காலத்தே,

ரு—கக. படியோர்த் தேய்த்த பல்புகழ் தடக்கை நெடுவேள் பேணத் தணிகுவள் இவள் என - வணங்காரைத் தேய்த்தொழித்த பலவகைப் புகழ்களைக் கொண்ட பெரிய கையினையுடைய நெடு வேளைப் போற்றின் இவள் துயர் தணியப் பெறுகுவள் என்று, முதுவாய்ப் பெண்டிர் அது வாய் கூற - அறிவு வாய்த்தலையுடைய பெண்டிர் அதனை மெய்யாகக் கூற, களம் நன்கு இழைத்துக் கண்ணி குட்டி - வெறியாடுங் களம் நன்கு அமைத்து (வேலிற்குக்) கண்ணி குட்டி, வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்து - வளம் பொருந்திய கோயிலில் ஒலியுண்டாகப் பாடிப் பலிகொடுத்து, உரு வச் செந்தினை குரூஉயொடு தூஉய் - அழகிய செந்தினையைக் குரூஉ யுடன் கலந்து தூவி, முருகு ஆற்றுப்படுத்த உருகெழு நடுநாள் - முருகனை வரவழைத்த அச்சம் பொருந்திய நடு இரவில்,

கஉ—உக. ஆரம் நாற - சந்தனம் மணம் வீச, சாரல் அருவிடர்த் ததைந்த பல்பூ வண்டுபடச் சூடி - பக்க மலையில் உள்ள அரிய முழைஞ்சுகளிற் செறிந்த பல பூக்களை வண்டு மொய்த்திடச் சூடி யும், களிற்று இரை தெரீஇய பார்வல் ஒதுக்கின் ஒளித்து இயங்கும் மரபின் வயப் புலி போல - களிறுகிய இரையைத் தெரிதற் பொருட்டு ஒதுங்கிய பார்வையோடு மறைந்து இயங்கும் இயல்பினை யுடைய வலிய புலியினைப்போல, நல்மனை நெடுநகர்க் காவலர் அறி யாமை - நமது நல்ல மனையின் கண்ணுள்ள நெடிய இல்லின் காவ லாளரும் அறியாவண்ணம், எய்த்த நோய்தணி காதலர் வர - நாம் மெலிதற்கு ஏதுவாய இந் நோயைத் தணித்தற்குரிய நம் காதலர் வந்து, தன் நசை நம் உள்ளத்து நசை வாய்ப்ப - தன்னை நச்சுதலை யுடைய நம் உள்ளத்தின் விருப்பம் நிறைவேறும்படி, இன் உயிர்

குழைய முயங்குதொறும் - இனிய உயிர் குழையும்படி முயங்குந் தொறும், சண்டு எதில் வேலற்கு உலந்தமை கண்டு - இங்கு நமர் யாதும் இயைபில்லாத வேலனுக்கு அழிந்தமை கண்டு, யான் மெய் மலிந்து நக்கலென் அல்லனே - யான் உடல் பூரித்துச் சிரித்தேன் அல்லனோ.

(முடிபு) நாடல் மார்பு அணங்கிய செல்லல் அரியாப் பொழுதில், நெடு வேட் பேணத் தணிருவள் இவளென முதுவாய்ப் பெண்டிர் கூற, முருகாற்றுப் படுத்த நடுநாள், வயப்புலிபோலக் காதலர்வர, நசை வாய்ப்ப முயங்குதொறும் வேலற் குலந்தமை கண்டு, நக்கலென் அல்லனே.

(வி - ரை.) மறுவரல் - சுழற்சி. படியார் - வணங்கார்: ஆ ஓவாயிற்று. பிரதியோர் என்னும் சொல்லின் சிதைவுமாம். பல் புகழ் - வென்றி கொடை முதலாயவற்றால் வரும் புகழ். முதுவாய்: முது - அறிவு. அது வாயாக: வாய் - உண்மை. முருகனை ஆற்றுப் படுத்தல், [1]'குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள், முருகிய றிறுத்து முரணினர் குட்க, முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனகர்' என இவ் வாறே திரு முருகாற்றுப்படையிலும் வருதல் காண்க. புலி களிற றிரையினைப் பெறுதற்குப் பதுங்கி மறைந்து வருதல் போலத் தலை வன் தலைவியைப் பெறுதற்கு மறைந்து வந்தான் என்க.

1. வெறியெடுத்துத் தீராத வறியில், அஃதியாராலே வந்த தென் றயிராதபடி வரையவந்த பேருதவியினரைப் பொல்லாங்கு சொல்லக் கடவையோ எனத் தலைவி இயற்பட மொழிந்தாள் என்க.

2, சண்டும் தலைவி இயற்பட மொழிந்தாளாயினும் வெறி யாட்டு நிகழ்ச்சியைத் தலைவற்கு வெளிப்படுத்தி விரைந்து வரையத் தூண்டுதல் பயனாகும். வெறியாட்டினை அழகுபெறக் கூறும் இச் செய்யுளைப் பாடிய சிறப்புப்பற்றி இவர் வெறிபாடிய காமக் கண்ணியார் என வழங்கப்பட்டார்.

(மே - ள்.) [2]'மறைந்தவற் காண்டல்' என்னும் தலைவி கூற்று நிகழ்த்துமாறு கூறுஞ் சூத்திரத்தே 'பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்' என்பதற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டி, 'இதனுட் பழிதீர அவன் வந்து உயிர் தளிர்ப்ப முயங்க, நக்க நிலையைத் தோழிக்குத் தலைவி கூறியவாறு காண்க' என்பர் நச்.

[3]'பிறப்பே குடிமை' என்னும் சூத்திரத்து, 'தன்னசை யுள்ளத்து நன்னசை வாய்ப்ப' என்பது 'இருவர் உணர்வும் ஒத்தவாறு' எனவும், [4]'வினைபயன் மெய்யுரு' என்னுஞ் சூத்திரத்து 'களிற்றிரை.....வயப் புலி போல' என்புழி, பார்வலொதுக்கமாகிய வினை பண்பெனப் படாது. என்னை? பண்பென்பது குறிப்பின்றி நிகழும் குணமாகலின் எனவும், பார்வலொதுக்க மெனப்பட்ட வினைப்பகுதியாற் பிறை யாமற் கோடற்குப் பார்வலொதுக்கினின்று வென்பதும் பிறர்க் களிப் பார்வலொதுங்குகின்றுனல்ல னென்பதுஞ் சொல்லி, அவன்

---

1. முரு. உசஉ . உசச 2. தொல். களவு. உ0. 3. தொல். மெய்ப் பாடு. உடு. 4. தொல். உவமம். க

தலைக்கேற்ற உவமையாதலின், அது பொருட்டோற்றமாயிற்று எனவும் கூறினர் பேராசிரியர்

---

23. பாலை

[தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

மண்கண் குளிர்ப்ப வீரித் தண்பெயல்
பாடுலந் தன்றே பறைக்குரல் எழிலி
புதன்மிசைத் தளவின் இதன்முட் செந்நனை
நெருங்குகுலைப் பிடவமொடு ஒருங்குபிணி அவிழக்,
காடே கம்மென் றன்றே யவல
கோடுடைந் தன்ன கோடற் பைம்பயிர்ப்,
பதவின் பாவை முனைஇ, மதவுநடை
அண்ணல் இரலை அமர்பிணை தழீஇத்,
தண்ணறல் பருகித் தாழ்ந்துபட் டனவே,
அனையகொல், வாழி தோழி மனைய
தாழ்வின் நொச்சி சூழ்வன மலரும்
மெளவல் மாச்சினை காட்டி,
அவ்வள வென்ரூர், ஆண்டுச்செய் பொருளே:

—ஒரோடோகத்துக் கந்த ரத்தனார்.

(சொ - ள்.). கட. தோழி வாழி -,

க—உ. பறை குரல் எழிலி - முழவின் குரல் போன்ற ஒலியினை யுடைய மேகம், மண்கண் குளிர்ப்ப - மண்ணினிடமெல்லாம் குளிர, தண்பெயல் வீசி - குளிர்ந்த மழையைப் பெய்து, பாடு உலந்தன்றே - ஒலி யடங்கிற்று;

ஙு—ரு. புதல் மிசை தளவின் இதல் முள் செந்நனை - புதரின் மீது படர்ந்த செம் முல்லையினது சிவல் முள்போப் போன்ற சிவந்த அரும்பு, நெருங்கு குலை பிடவமொடு ஒருங்கு பிணி அவிழ - நெருங்கிய குலையினையுடைய பிடாவின் அரும்புடன் ஒருங்கு பிணிப்பு விரிந்து மலர, காடு கம் என்றன்றே - காடு கம்மென்று மணம் வீசு கின்றது;

ரு—கூ. அவல கோடு உடைந்தன்ன கோடல் பைம் பயிர் - பள்ளங்களிலுள்ள சங்கு உடைந்தாற்போன்ற வெண்கோடலது பசிய பயிரோடு, பதவின் பாவை முனைஇ - அறுகங் கிழங்கைத் தின்று தெவிட்டுதலின் வெறுத்து, மதவு நடை அண்ணல் இரலை அமர் பிணை தழீஇ - செருக்கிய நடையினையும் தலைமையினையு முடைய ஆண்மான் விரும்பிய பெண்மானைத் தழுவி, தண் அறல் பருகித் தாழ்ந்துபட்டனவே - குளிர்ந்த நீரைப் பருகி ஓரிடத்தே சேர்ந்து தங்கிவிட்டன;

கஅ

கo—கூ. மலைய தாழ்வின் நொச்சி குழ்வன மலரும் மௌவல் மாச்சினை காட்டி - மலைவிடத்துள்ள முல்லை குழ்ந்து மலரும் இட மாகிய குறிய நொச்சியது கரிய கினையைக் காட்டி, ஆண்டுச் செய் பொருள் - தாம் வேற்று நாட்டிருந்து பொருள் ஈட்டுங் காலத் தெல்லை, அ அளவு என்றார் - அம் மௌவல் பூக்கத் தொடங்கும் ஏக்காலத் தெல்லையே என்றாரன்றே, அனைய கொல் - இக்காலம் அவ்வளவிற்றோ, அதனைத் தாண்டி நிற்பதொன்றோ கூறுவாயாக!

(முடிபு) நோழி வாழி, எழிலி மண் குளிப்பப் பெயல் எிப் பாடு உலந் தன்று; நளவின் நனை பிடவமொடு பிணி யவிழக் காடு கம்மென்றன்று; இரவி பினை தழீஇத் தண்ணறல் பருகித் தாழ்ந்து பட்டன; மௌவல் குழ்வன மலரும் நொச்சியாச்சினை காட்டி, ஆண்டுச் செய்பொருள் அவ்வளவென்றார்; அனைய கொல்!

(வி - ரை.) இதல் - சிவல்; கவுதாரியுமாம். கம்-மணங்கமழ் குறிப்பு. அறுகு, இஞ்சி முதலியவற்றின் கிழங்கைப் பாவை என்றல் மரபு; [1]'செய்யாப் பாவை' எவ்புழி, இஞ்சிக் கிழங்கைப் பாவை என்றல் மரபென நச்சினார்க்கினியர் கூறியதுங் காண்க. கோடற் பைம்பயிர்-கோடலிக் கனியாகவுடைய வரகு முதலிய பயிர்களு மாம். அனைய கொல் என்பதற்கு (தலைவன் குறித்த காலங் கடந்தமை கூறுவாளாய்) பொருள் அங்ஙனம் சிறந்த தொன்றோ என்றுள் எனலுமாம்.

(மே - ள்.) [2]'ஏனைப் பிரிவும் அவ்வயி னிலையும்' என்னும் சூத் திரத்து, இச் செய்யுளை எடுத்துக் காட்டி, இது பொருட்பிரிவின்கண் கார்குறித்து (வருவ லென்றமையின்) ஆறு திங்கள் இடையிட்டது என்று கூறினர் நச்சினார்க் கினியர்

---

(24) முல்லை

[(1) தலைமகன் பருவங்கண்டு சொல்லியது. (2) வினை முற்றும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியதாக மாம்.]

வேளாப் பார்ப்பான் வாளரந் தமித்த
வளை[3]கொளந் தொழிந்த கொழுந்து னவ்வின,
தளைபிணி அவிழாச் சுரிமுகப் பகன்றை,
சிதாலந் துவலை தூவலின் மலருந்
தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்,
வயங்கு கதிர் கரந்த வாடை வைகறை,
விசும்புரி வதுபோல் வியலிடந் தொழுதி,
மங்குல் மாமழை தென்புலம் படரும்,
பனியிருங் கங்குலுந் தமியள் நீந்தித்
தம்மூ ரோளே நன்னுதல் யாமே' —

---

1. மலைபடு. கூடு. 2. தொல். கற்பு. சூ, (பாடம்) 3. கனிந் தொழிந்த.

கடிமதிற் கதவம் பாய்தலின், தொடிபிளந்து
நுதிமுகம் [1]மழுகிய மண்கணைவெண் கோட்டுச்
சிறுகண் யானை, நெடுநா ஒண்மணி,
கழிப்பிணிக் கறைத்தோல் பொழி[2]கணை யுதைப்புந்,
கரு [3]தழங்குகுரல் முரசமொடு முழங்கும் யாமத்துக்,
கழித்துறை செறியா வாளுடை யெறுழ்த்தோள்,
இரவுத் துயில் மடிந்த நாகர்,
உரவுச்சின வேந்தன் பாசறை யேமே.

—ஆவூர் மூலங் கிழார்.

(சொ - ள்.) கூ—ரு. வேளாப் பார்ப்பான் -/யாகம் பண்ணுதல் வேர்ப்பார்ப்பான், வாள் அரம் துமித்த /கூரிய அரத்தால் அறுத்தெடுத்த, வடிவு கலிந்து ஒழிந்த /வடிவுகள் போக எஞ்சிய, கொழுந்தின் அன்ன /சங்கின் தலையைப் போன்ற, தலை பிணி அவிழாச் சுரிமுகப் பகன்றை /கட்டுண்ட பிணிப்பு விரியாத சுரிந்த முகத்தினையுடைய பகன்றையின் அரும்புகள், சிதரல் அம் துவலை தூவலின் மலரும் /சிதறுகின்ற அழகிய மழைத் துளிகள் வீசுதலால் மலரும் (காலமாகிய), தன் பெயல் நின்ற தை இ கடைநாள் /குளிர்ந்த பெயல் நின்ற தைத் திங்களாகிய முன்பனியின் கடை நாளில்,

கூ. வயங்கு கதிர் கரந்த வாடை வைகறை /எழுகின்ற ஞாயிறு மறைந்திருக்கும் வாடையுடன் கூடிய விடியற்காலையில்.

எ—கo. மங்குல் மா மழை /இருண்ட பெரிய மழை, விசும்பு உரிவதுபோல் /விசும்பு தோலுரிவதுபோல, வியல் இடத்து ஒழிகின்ற வானிடத்தே யியங்கி, தென்புலம் படரும் /தென்திசைக் கண் போய்ச் சேரும், பனி இரும் கங்குலும் /பனியுடன் கூடிய கரிய கங்குலின் வெள்ளத்தையும், நன்னுதல் தமியள் நீந்தித் தம் மூரோளே /சிறந்த நெற்றியினளாய நம் தலைவி தனியளாய் நீந்தித் தமது ஊரின்கண் உளளாள்;

கo—அ. யாமே /யாம், கடி மதில் கதவம் பாய்தலின் /காவலையுடைய மதிற் கதவினைப் பாய்தலினால், தொடி பிளந்து நுதிமுகம் மழுகிய மண்கணை வெண் கோட்டுச் சிறுகண் யானை /பூண் பிளக்கப் பட்டுக் கூரிய முனை மழுங்கிய மொட்டையான வெள்ளிய கோட்டையும் சிறிய கண்ணினையுமுடைய யானையின், நெடுநா ஒண்மணி /நீண்ட நாவினையுடைய ஒளி பொருந்திய மணியின் ஓசையும், கழிப் பிணிக் கறைத்தோல் பொழிகணை யுதைப்பு /கழிகளுடன் பிணிக்கப்பட்ட கரிய தோலாகிய கேடகத்துப்பொழியும் அம்புகள் தைத்தலால் எழும் ஓசையும், தழங்குகுரல் முரசமொடு முழங்கும் யாமத்து- /முழங்கும் ஓசையினையுடைய முரசொலியுடன் சேர்ந்தொலிக்கும் நள்ளிரவில், கழித்து உறைசெறியா /உறையினின்றும் உருவி மீண்டும்

---

1. மருங்கிய மொண்கணை. 2. கணையுதைப்ப. 3. தமங்குரல் முரசமொடு மயங்கும்.

உள்ளிடாத, வாள் உடை எறும்த் தோள்/வாளினைக் கோத்த வலிய தோளினை யுடையவனும், இரவுத் துயில் மடிந்த தானை/ இரவில் அயர்ந்து தாங்கும் சேனைகளைக் கொண்டவனுமாகிய, உரவு சின வேந்தல் பாசறையேம் /மிக்க சினம் பொருந்திய வேந்தனது பாசறையின்கண் உள்ளேம்; (என் செய்வாம்.)

(முடிபு) பகன்றை தாவலின் மலரும் தைநின்ற கடைநாள் வைகறை மழை தென்புலம்படரும் கங்குலும் நன்னுதல் நமியள் நீந்நித் தம் ஊராள்; யாம், யானை மலியோசையும் கனையுதைப்பின் ஓசையும் முரசமொடு முழங்கும் யாமத்துத் தோளினையும் தானையையு முடைய வேந்தன் பாசறையேம். (என் செய்வாம்.)

(வி - ரை.) வேளாப் பார்ப்பான் வாளரம் துமித்த வினை என் றமையால், வேள்வி செய்யாமையான் தாழ்நிலை யடைந்த பார்ப்ப னர்க்குச் சங்கறுக்கை முதலிய தொழில்கள் உளவென்பது பெறப் பட்டது. கொழுந்து - சங்கின் தலை; தண்பெயல் நின்ற தை கடை நாள் என மாறுக. கங்குலும்: உபமை சிறப்பு. 'விசும்புறிவதுபோல்' என இவ்வாசிரியர் உவமம் கூறியது பாராட்டற்குரியது; இஃது இல் பொருளுவமை. வாளுடை வேந்தன் எனவும், தோளையும் தானை யும் உடைய வேந்தன் எனவும் கூட்டுதலும் ஆம். இரவுத் துயில் மடிந்த தானை என்றது, பலநாளும் துயிலின்றிப் போர் செய்து வினை முற்றுங் காலை துயின்ற தானை என்றபடி. குறித்த பருவம் வந்தும் சென்று தலைவியைக் கூடாது நின்று இருக்கின்றேமே எனத் தலைவன் இரங்கிக் கூறினனும்.

(மே - ள்.) [1]'கிழவி நிலையே' என்னும் சூத்திரத்து, தலைமகன் பாசறைக்கண் கிழவி நிலையுரைத்துப் புலம்பல், வென்றிக்காலத்தே விளங்கித் தோன்றும் என்பதற்கும், [2]'வேந்துறு தொழிலே' என்னுஞ் சூத்திரத்து பகைவயிற் பிரிவு யாண்டினதகம் ஆம் என்பதற்கும் இச் செய்யுளை எடுத்துக் காட்டினர் நச்சினார்க்கினியர்

---

25. பாலை

[பருவங் கண்டழிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

நெடுங்கரைக் கான்யாற்றுக் கடும்புனல் சாஅய்
அவிரறல் கொண்ட விரையுமணல் அகன்துறைத்
தண்கயம் நண்ணிய பொழில்தொறுங் காஞ்சி
பைந்தா னுணிந்த போதுமலி எக்கர்
வறுவை நாற்றம் புதுவது கருல
மாநீர் கொழுநிய மணிநிற இருங்குயில்
படுநா விளியா னடுநின் றல்கலும்
உரைப்ப போல வாழ்கொள்பு கூவ
இனைந்தோர் உருந்த இலவந் தாங்கண்

---

1. தொல். கற்பு. சூ. 2. தொல். கற்பு. சூ.

உள்ளிடாத, வாள் உடை எறும்த் தோள்/வாளினைக் கோத்த வலிய தோளினை யுடையவனும், இரவுத் துயில் மடிந்த தாளை/ இரவில் அயர்ந்து தாங்கும் சேனைகளைக் கொண்டவனுமாகிய, உரவு சின வேந்தல் பாசறையேம் /மிக்க சினம் பொருந்திய வேந்தனது பாசறையின்கண் உள்ளேம்; (என் செய்வாம்.)

(முடிபு) பகன்றை தாவலின் மலரும் தைநின்ற கடைநாள் வைகறை மழை தென்புலம்படரும் கங்குலும் நள்ளுதல் தமியள் நீந்தித் தம் ஊராள்; யாம், யாளை மலியோசையும் கலியுதைப்பின் ஒசையும் முரசமொடு முழங்கும் யாமத்துத் தோளினையும் தாளினையு முடைய வேந்தன் பாசறையேம். (என் செய்வாம்.)

(வி - ரை.) வேளாப் பார்ப்பான் வாளரம் துமித்த வளை என் றமையால், வேள்வி செய்யாமையான் தாழ்நிலை யடைந்த பார்ப்ப னர்க்குச் சங்கறுக்கை முதலிய தொழில்கள் உளவென்பது பெறப் பட்டது. கொழுந்து - சங்கின் தலை; தண்பெயல் நின்ற தை கடை நாள் என மாறுக. கங்குலும்: உபமை சிறப்பு. 'விசும்புறிவதுபோல்' என இவ்வாசிரியர் உவமம் கூறியது பாராட்டற்குரியது; இஃது இல் பொருளுவமை. வாளுடை வேந்தன் எனவும், தோளையும் தாளை யும் உடைய வேந்தன் எனவும் கூட்டுதலும் ஆம். இரவுத் துயில் மடிந்த தாளை என்றது, பலநாளும் துயிலின்றிப் போர் செய்து வினை முற்றுங் காலை துயின்ற தாளை என்றபடி. குறித்த பருவம் வந்தும் சென்று தலைவியைக் கூடாது நின்று இருக்கின்றேமே எனத் தலைவன் இரங்கிக் கூறினனும்.

(மே - ள்.) [1]'கிழவி நிலையே' என்னும் சூத்திரத்து, தலைமகன் பாசறைக்கண் கிழவி நிலையுரைத்துப் புலம்பல், வென்றிக்காலத்தே விளங்கித் தோன்றும் என்பதற்கும், [2]'வேந்துறு தொழிலே' என்னுஞ் சூத்திரத்து பகைவயிற் பிரிவு யாண்டினதகம் ஆம் என்பதற்கும் இச் செய்யுளை எடுத்துக் காட்டினர் நச்சினார்க்கினியர்

---

25. பாலை

[பருவங் கண்டழிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

நெடுங்கரைக் கான்யாற்றுக் கடும்புனல் சாஅய்
அவிரறல் கொண்ட விரையிணர் அகன்துறைத்
தண்கயம் நண்ணிய பொழில்தொறுங் காஞ்சி
பைந்தா ணணிந்த போதுமலி எக்கர்
வருவை நாற்றம் புதுவது கருல
மாநீர் கொழுநிய மணிநிற இருங்குயில்
படுநா விளியா னடுநின் றல்கலும்
உரைப்ப போல வாழ்கொள்பு கூவ
இனைந்தோர் உருந்த இலவந் தாங்கண்

---

1. தொல். கற்பு. சூ. 2. தொல். கற்பு. சூ.

புலந்த நெஞ்சமொடு நோவல் - தலைவர் வாராமையால் வெறுத்த நெஞ்சுடன் வருந்தற்க;

கஅ—உஉ. பொருநர் செல்சமம் கடந்த வில் கெழு தடக்கை. போர்புரியும் பகைவர் எதிர்த்துவரும் போரினை வென்றொழித்த வில்லினைக் கொண்ட பெரிய கையினையுடையானும், பொதியில் செல்வன் பொலம் தேர் நிதியன் - பொதியில் மலைக்குரிய செல்வனும் பொன்னாலாய தேரினையுடையானுமாகிய நிதியன் என்பானது, இன்னிசை இயத்தின் கறங்கும் கல்மிசை அருவிய காடு இறந்தோர். இனிய வெற்றி முரசுபோல ஒலிக்கும் மலையுச்சியினின்று வீழும் அருவிகளையுடைய காடுகளைத் தாண்டிப் பொருளீட்டச் சென்றிருக்கிறாராயினும் தலைவர்.

கசு—அ. குறுமகள் நோயிலர் என் உயிரென - இனியாளை, (நின்னை இங்ஙனம் துயருறச் செய்த) என் உயிர் வருந்துவதாக என்னுற் போலும், மெல்லிய இனிய கூறி - மென்மை வாய்ந்த இனிய சொற்களைக் கூறிக்கொண்டு, வல்லே வருவர்-விரைந்து வந்துறுவர்.

(முடிபு) தோழி, வாழி, இகழுநர் இகழா இளநாளமையம் குறி செய்தார் என, வாராமையின் புலந்த நெஞ்சமொடு கண்பனி வார்பு உறைப்ப நோவல்; காடிறந்தோர், குறுமகள் நோயிலர் என் உயிரென இனிய கூறி வல்லே வருவர்.

(வி - ரை.) எக்கர் வதுவை நாற்றம் கலுல, குயில் கூவ, காதல் பொன் சொரிந்தன்னவாகலின் இகழுநர் இகழா இளநாளமையம் என்க. சாஅய் - சாய என நிரிக்க. அறல் - நீர் வற்றிய காலத்து மணல் அற்றற்றிருப்பது: இளவேனிற் பொழுதிலே ஆடவரும் மகளிரும் சோலைகளிலுள்ள எக்கரில் இன்பவிளையாட்டு நிகழ்த்துவராகலின் வதுவை நாற்றம் கலுல என்றார். ஊழ் கொள்பு கூவுதலாவது பேடை கூவச் சேவல் கூவுதல். குயில் நடுநின்று உரைப்ப போல என்பதனை, [1]'ஊடிவீ ரெல்லாம் உருவிலான் றன்னோ, கூடுமி னென்று குயில்சாற்ற' என்பதனால் அறிக. அடுநின்று எவப் பிரித்து வருத்தாநின்று என்று உரைத்தலுமாம். சிதர்வண்டு. கலுல, கூவ எனும் எச்சங்கள் இகழாத என்னும் வேறுவினை கொண்டு முடிந்தன. இளநாளென்றார் இளவேனிலை. குறுமகள் என்றது தோழி தலைமகளை விளித்ததுமாம். என்னுயிர் நோவதாக வென்று நீ நோவாதே என்றுரைத்துப் பின். காடிறந்தோர் என்னுயிர் நோவதாக என மெல்லிய இனிய கூறி வருவரென வேறறுத்தலுமாம்.

---

26. மருதம்

[தலைமகன் தோழியை வாயில்வேண்டி, அவளால் தான் வாயில் பெறுது ஆற்றுமையே வாயிலாகப் புக்குக் [2]கூடியவன் மீக்கதுக் கண் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

---

1. லெப். வெளிமகளை இறந்தி வென்பா. (பாடம்) 2. கூடிய தலைமகன்.

[1]கூள்முள் முள்ளிக் குவிகுலைக் கழன்ற
மீன்முள் ளன்ன வெண்கால் மாமலர்
பொய்தல் மகளிர் விழுவனிக் கூட்டும்
அவ்வயின் நண்ணிய வளங்கெழு ஞாஅனைப்
புலத்தல் கூடுமோ தோழி அல்கல்
பெருங்கதவு பொருத யானை மருப்பின்
இரும்புசெய் தொடியி னேர வாகி
மாக்கண் அடைய மார்பகம் பொருந்தி
முயங்கல் விடாஅல் இவையென மயங்கி
யானெம் என்னவும் ஒல்லார் நாமத்
திவைபா ராட்டிய பருவமு முளவே, இனியே,
புதல்வற் றடுத்த பாலொடு தடைஇத்
திதலை அணிந்த தேங்கொள் மென்முலை
[2]நறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் அகலம்
விங்கு முயங்கல் யாம்வேண் டினமே
நீம்பால் படுதல் தாமஞ் சினரே, ஆயிடைக்
கவவுக்கை நெகிழ்ந்தமை போற்றி மதவுநடைச்
செவிலி கையென் புதல்வனை நோக்கி
நல்லோர்க் கொத்தனிர் நீயிர் இஃதோ
செல்வற் கொத்தனம் யாமென மெல்லவென்
மகன்வயிற் பெயர்தந் தனனே அதுகண்
டியாமுங் காதலம் அவற்கெனச் சாஅய்ச்
சிறுபுறங் கவையின னாக [3]உறுபெயல்
தண்துளிக் கேற்ற பலவுழு செஞ்செய்
மண்போல் நெகிழ்ந்தவம் கலுழ்ந்தனை
நெஞ்சறை போகிய அறிவி னேற்கே.

—பாண்டியன் கானப் பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி.

(சொ-ள்.) கூ—கக. தாம் - நம் தலைவர்தாம், பெருங் கதவு பொருத யானை மருப்பின் இரும்பு செய் தொடியின் ஏர ஆக - பெரிய மதிற் கதவினைப் பாய்ந்து பிளந்த யானையின் கோடுகளிற் பொருந்திய இரும்பிரூற் செய்யப்பெற்ற பூணின் அழகினையுடைய வாகி, மா கண் இவை - கரிய கண்களையுடைய இவை, மார்பு அகம் அடைய பொருந்தி முயங்கல் விடாஅல் என - தம் மார்பகம் அழுந்தப் பொருந்தி முயங்குதலை விலக்கற்க என்று கூறி, யான் மயங்கி ஒம் என்னவும் ஒல்லார் மற்று இவை பாராட்டிய பருவமும் உள - யான் வருந்தி ஒழிவீராக எனவும் தாம் அதற்குப் பொருந்தாராகிப் பின்னும் இவைகளைப் பாராட்டிய காலங்களும் உள்ளன;

கக—கூ. இனி - இப்பொழுதோ, புதல்வன் தடுத்த பாலொடு தடைஇ - புதல்வன் உள்ளத்தைப் பிறிதிற் செல்லாது தடுத்துக் கொண்ட பாலாற் சரிந்து, திதலை அணிந்த தேம்கொள் மென்முலை -

---

(பாடம்) 1. கூர்முள். 2. நறுஞ்சாந்து புலர்ந்த. 3. இரு பெயல்.

தேமலி யணிந்த இவிமைகொண்ட மெல்லிய முலைகள், நறும் சாந்து அணிந்த மேகம் னைர் அகலம் - அவரது நறிய சந்தனம் அணியப் பெற்ற நல்லிறம் விளங்கும் மார்பில், வீங்க முயங்கல் யாம் வேண் டினம் - விம்ம முயங்குதலி யாம் விரும்பினேம் ஆகவும், தீம்பால் படு தல் தாம் அஞ்சினரே - தமது மார்பில் இனிய பால் படுதலி அவர் அஞ்சினர்;

கசு—உக. ஆயிடை கவவு கை நெகிழ்ந்தமை போற்றி - அவ் விடத்து (முன்பு) அணைத்தலி விடாத அவரது கைகள் (இன்று) நெகிழ்ந்தமை கண்டு, செவிலி கை மதவுநடை என் புதல்வனை நோக்கி - செவிலியின் கையிலிருந்த மெல்லிய நடையினையுடைய என் புதல்வனை நோக்கி, நல்லோர்க்கு ஒத்தனிர் நீயிர் - நீயிர் நுமது அழகிய பரத்தை மார்க்குப் பொருந்தியவர் ஆவீர், இனிதோ செல் வற்கு ஒத்தவம் யாம் என - இதோ இந்தச் செல்வனுக்கு நாங்கள் பொருந்தியவர்கள் ஆவோம் என்று கூறி, மெல்ல என் மகன் வயின் பெயர்ந்தனென் - மெல்லென என் மகனிடத்துச் சென்றேன்;

உக—ங. அதுகண்டு யாமும் காதலம் அவற்கு என - அது கண்டு தலிவர் அச் செல்வன்பால் யாமும் காதலுடையேம் என்று கூறி, சாஅய் சிறுபுறம் கவவுயினுக - பணிந்து எனது முதுகினை அணைத்துக் கொண்டனராக;

உங—சு. உறுபெயல் தண்துளிக்கு ஏற்ற-மிக்க பெயலாய குளிர்ந்த மழையை ஏற்றுக்கொண்ட, பல உழு செஞ்செய் மண் போல்—பல முறையும் உழுதிட்ட செம்மையாகிய செய்யின் மண் போல, நெஞ்சு நெகிழ்ந்து கலுழ்ந்து - என் நெஞ்சம் நெகிழ்ந்து கலங்கி,

சு. அல்கல் - இரவில்,

உசு—சூ. அவன் அறை போகிய அறிவினேற்கு - அவர்பால் என்னை வஞ்சித்துச் சென்ற அறிவினையுடைய எனக்கு,-

சூ—சு. கூன்முள் முள்ளி குவிகுலை கமழ்ந்த - வளைந்த முள்ளியினையுடைய நீர் முள்ளியது குவிந்த குலைகளினின்று வீழ்ந்த, மீன்முள் அன்ன வெண்காற் மாமலர் - மீனினது முள்ளியினை யொத்த வெள்ளிய காம்பினையுடைய கரிய மலர்களை, பொய்தல் மகளிர் விழவு அணி கூட்டும் - விளையாட்டு மகளிர் தாம் செய்யும் விழாவிற்கு அழகு செய்வனவாகச் சேர்க்கும், அவ்வயல் நண்ணிய வளம் தெழு ஊரனைப் புலத்தல் கூடுமோ - அழகிய வயல்கள் பொருந்திய வள மிக்க ஊரனுடைய நுலினைப் புலத்தல் பொருந்துமோ; (இதற்கு யான் என்செய்வேன்!)

(முடிபு) தோழி! நாம் மார்பகம் பொருந்தி, முயங்கல் விடார்கள் என்று கூறி, யாம் ஒவும் என்னவும் ஒல்லார், இவை யாராட்டியபருவமும் உள; இனி நீட்டி பால் படுதல் தாம் அஞ்சினரே; ஆயிடை என் புதல்வனை நோக்கி, நல்லோர்க் கொத்தனிர் நீயிர்; இனிதோ செல்வற் கொத்தனம் யாமென மகன் வயிற் பெயர்

நந்தேன்; அதுகண்டு யாமும் காதலம் அவற்கெனச் சாஅய்க் கவையினமை, அவன்கண் நெகிழ்ந்து கலுழ்ந்து நெஞ்சறை போகிய அறிவினேற்கு ஊரனைப், புலத்தல் கூடுமோ.

அல்கல் நெஞ்சறை போகிய என்க.

(வி - ரை.) கூர்முள் என்னும் பாடத்திற்குக் கூரிய முள்ளென உரைக்க. ஓம், ஓவும் என்பதன் இடைக்குறை; செய்யும் என்னும் முற்று முன்னிலைக்கண் வந்தது. தேம்கொள் - இடங்கொண்ட என்றுமாம். இந்த என்பது இஃதோ எனத் திரிந்தது.

(உ - றை.) 'முள்ளியின் பக்கலிலே தோற்றி வாழும் பூ, அதனை விட்டுப் பிறர்க்குப் பயன் பட்டாற்போல, நம்முடன் பிறந்த நெஞ்சு அவருடன் ஏகுதையாயிற்று. அவருடைய வதுவை விழவிற்கும் உடலாய்த் திரியாநின்றுல் புலத்தல் கூடுமோ என்க' என்பது குறிப்புரை.

(மே.ள்.) [1]'அருண்முந்துறுத்த' என்னும் சூத்திரத்துத் தலைவியின் அருண்முந்துறுத்த அன்புபொதி கிளவிக்கும் பணிந்த மொழிக்கும் இதிலுள்ள 'மண் போல் நெகிழ்ந்து' 'இவை பாராட்டிய பருவமுமுள' 'நெஞ்சறை போகிய அறிவினேற்கு' என்பவற்றையும், [2]'தன்வயிற் காதல்' என்னுஞ் சூத்திரத்துத் தலைவி மடன் அழிதற்கு, 'கவவுக்கை . . . பெயர்ந்திதனே' என்றதனையும் காட்டினர் நச்சினார்க்கினியர்

[3]'விளையுயிர் மெலிதல்' என்னும் சூத்திரத்துப் பாராட்டெடுத்தல் முதலிய பன்னிரு நிமித்தமுமின்றி ஆற்றுமை நிமித்தமாகக் கற்பினுட் புணர்ச்சி நிகழ்ந்ததற்கு, 'தண்டுளிக்கேற்ற . . . அறிவினேற்கே' என்பதனையும், [4]'தெய்வ மஞ்சல்', என்னும் சூத்திரத்து, 'மறைந்தவை யுரைத்தல், என்பதற்கு,' முயங்கல் விடாஅல் . . . அஞ்சினரே' என்பதனையும் எடுத்துக் காட்டினர் பேராசிரியர்

(27.) பாலை

[செலவுணர்ந்து வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

கொடுவரி இரும்புலி [5]நயங்க நெடுவரை
ஆடுகழை இருவெதிர் கோடைக் கொல்குங்
கானங் கடிய வென்னுர் நாமழ
நின்றநில் பொருட்பிணிச் சென்றிவண் தருமார்
செல்ப என்ப என்போய் நல்ல
மடவை மன்ற நீயே வடவயின்
வேங்கடம் பயந்த வெண்கோட் டியானை
மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்குங்
கொற்கையம் பெருந்துறை முத்தின் அன்ன
நகைப்பொலிந் நிலங்கும் எயிறுகெழு துவர்வாய்

1. தொல். கற்பி. உ0. 2. தொல். பொருளியல், கக. 3. தொல். மெய்ப், உ0. 4. தொல். மெய். உச. (பாடம்) 5. நயங்கு.

அகநானூறு

கூகை

நகைவிழைத் தன்கலம் ஆயினும் இகப்ப
யாங்கமைந் விடுமோ மற்றிவ ணோங்குபடைத்
தெவ்வெரிக் கேற்ப நிரள்காற் குவளைப்
பெருந்தண நிலைதந்தும் அமையார் பருந்துபட
கடுஞ் சொன்மாக் கடந்த வென்வேல் நல்லோய்
நெடுநெடு யொறுநுயல்வந் நல்கினிர்
அடுவ யுள்ளுகஞ் அமர்ந்த நோக்கே.

—மதுரைக் கணக்காயனர்.

(சொ - ள்.) க—கூ. கொடுவரி இரும்புலி தயங்க / வளைந்த நெடுங்கோட்டையுடைய பெரிய புலி வெளிப்பட்டுத் தோன்ற, நெடு வரை சூழ்ந்த கழை இரு வெதிர் கோடைக்கு ஒல்கும் கானம் / நீண்ட மலைப்பக்கத்தில் அசையும் தண்டினையுடைய வலிய மூங்கில்கள் மேல்காற் றினால் தாக்கப்பட்டு வளையும் காட்டு நெறி, கடிய என்னர் / கொடி நிறுத்த தேரின

(முடிபு) தோழி, நம் தலைவர் கானம் கடிய என்னார், நாம் அழ, நின்றது இம் பொருட்பிணிச் சென்று இவ்வ் தருமார், சென்ப என்ப எவ்போய், நீ ஊடலை மன்ற: துவர்வாய் தகைப்பத் தங்கலராயினும், நின் உண்கண் அமர்த்த நோக்கு இகப்ப யாங்ஙனம் விடும்? விடாதுகாண்.

(வி - ரை.) புதருட் கிடந்த புலி வெளிப்பட மூங்கில் அசையும் என்க. கடியவென்னார் தருமார் நாம் அழச் செல்வர் என்றார் என்று கூட்டுக. நின்றது - நிலைபேறு. வேங்கடம் பயந்த யானை என்றது அம் மலையையுடைய அரசர் நிறையாகத் தந்த யானை என்றவாறு. யானையையுடைய பாண்டியர் எனவும், போரினில் வல்ல பாண்டியர் எனவும் இயையும். பாண்டியர் போரிலே தறுகண்மையும் நாடு காத்தலில் தண்ணளியும் உடையரென்பார், மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்கும் என்றார். பாண்டியர் காக்கும் தொற்கை; பாண்டியர் நாடு காத்தற்கு இடனகிய கொற்கை எனலுமாம். துவர்வாய் தகைப்பத் தங்கலராயினும் என்றது, அது தகைத்தல் கொண்டே போக்கொழிவர் என்பது தோன்ற நின்றது. கோடைக்கு ஒல்கும் என்பதனை மூன்றன் உருபாகவும், தெண்ணீர்க்கு ஏற்ற என்பதனை இரண்டனுருபாகவும் விரித்துரைக்க. அமையா என்னும் எதிர்மறை யெச்சம் துயல்வந்தன்ன என்னும் குறிப்பு வினைகொண்டு முடிந்தது. வேந்து, வேத்தென விகாரமாயிற்று. அமர்த்த நோக்கு - பொருந்திய நோக்குமாம்.

---

(28) குறிஞ்சி

[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது. இது பகலே சிறைப்புறம்.]

மெய்யில் நீரா மேவரு காமமோ
டெய்யா யாயினும் உரைப்பல் தோழி
கொய்யா முன்னும் குரல்வார்பு நிலையே
அருவி ஆன்ற பைங்கால் தோறும்
இருவிதோன்றின பலவே நீயே
முருகுமுரன் கொள்ளும் நெம்பாய் கண்ணிப்
பரியல் நாயொடு பன்மலைப் படரும்
வேட்டுவற் பெறலொ டமைந்தனை யாழநின்
பூக்கெழு தொடலை [1]நுடங்க வெழுந்தெழுந்து
கொள்ளாத் தெள்விளி யிடையிடை பயிற்றி
ஆங்காங் கொழுகா யாயின்-அன்னை
நிறநிளி கூடுதல் நேர்குவ ளிவளெனப்
பிறர்ந்நந்து நிறுக்குவ னாயின்!
உறற்கரி தாகுமவன் மலர்ந்த மார்பே

—பாண்டியன் அறிவுடை நம்பி

(பாடம்) 1. நுடங்க எழுந்து.

(சொ - ள்.) உ. தோழி—,

கூ—உ. மெய்யில் நீரா மேவரு காமமொடு - ஒருவர் மெய்யி லின்றும் ஒருவர் மெய் நீங்காதவாறு பொருந்திய காமத்தால், எய் யாய் ஆயினும் உரைப்பல் - நீ அறியாய் ஆயினும் (அதனால் வரும் எதத்தினை) நான் உரைப்பேன் கேட்பாயாக;

கூ—அ. அருவி ஆன்ற பைங்கால் தோறும் - நீர் இல்லையான பல முதல்தோறும், தினைகுரல் வார்பு - தினைகதிர் முற்றப் பெற்று, கொய்யா முன்னும் - கொய்வதன் முன்னும், பல இருவி தோன் றின - பலவும் தட்டைகளாகத் தோன்றின, நீயே - நீதான், முருகு முரண் கொள்ளும் தேம் பாய் கண்ணி - வேறுபட்ட பல மணங் கமழும் தேன் ஒழுகும் கண்ணியையுடையனை, பரியல் நாயொடு பல்மலை படரும் வேட்டுவற் பெறுதலொடு அமைந்தனை - விரைந்தோடும் நாய்களுடன் பல மலைகளையுங் கடந்து செல்லும் வேட்டுவனை எய்துமளவில் அமைந்தனை;

அ—கக. நின் பூ கெழு தொடலை நுடங்க எழுந்தெழுந்து - நின் பூக்கள் பொருந்திய மாலை யசைய அடிக்கடி எழுந்து சென்று, கிள்ளைத் தெள் விளி இடை இடை பயிற்றி - கிளிகளை ஓட்டும் தெளிந்த ஓசைகளை இடையிடையே (பலகாலும்) எழுப்பி, ஆங்கு ஆங்கு ஒழுகாய் ஆயின் - அங்கங்கே சென்று வாராதொழியின்,

கூ—கூ. அன்னை இவள் சிறுகிளி கடிதல் தேற்றாள் என - நம் அன்னை சிறிய கிளியை இவள் ஓட்டுதலை யறியாளென எண்ணி, பிறர்த் தந்து நிறுக்குவள் ஆயின் - நினை காத்தற்குப் பிறரைக் கொணர்ந்து நிறுத்துவளாயின்,

கூ அ. அவன் மலர்ந்த மார்பு உறற்கு அரிது ஆகும் - தலைவனது பரந்த மார்பு நீ அடைதற் கரியதாகும்.

(முடிபு) தோழி! காமத்தால் நீ எய்யாயாயினும் உரைப்பல்; தினை கொய்யா முன்னும் பைங்கால்தோறும் இருவி பல தோன்றின; நீயே வேட்டு வற் பெறலை டமைந்தனை. நின் தொடலை நுடங்க எழுந்து விளி பயிற்றி ஒழுகாயாயின், அன்னை கிளி கடிதல் தேற்றாளென பிறர்த்தந்து நிறுக்குவளாயின், அவன் மார்பு உறற் கரிதாம்.

(வி - ரை). தினை குரல் வார்பு கொய்யா முன்னும் பைங்கால் தோறும் இருவி தோன்றின என்க. அருவி - அருவி நீர். ஆன்ற - அன்ற; இல்லையான. இருவி - கதிர் ஒழிந்த தட்டை. மாறுபட்ட பல பூக்களால் பல நாற்றமா யிருத்தலின் முருகு முரண்கொள்ளு மென்றார். கண்ணியை யுடைய வேட்டுவன், படரும் வேட்டுவன் என்க. தலைவனையே நினைந்து காத்தலைக் கைவிடுத்தமையின் கிளி கள் கவர இருவியாயின. இடை இடை - அவற்றின் ஓசைக்கு இடையிடையே எனலுமாம்; இரண்டோசைகட்கும் வேற்றுமை யில்லை என்றபடி. ஆங்காங்கு - அப்படி அப்படியே என்றுமாம்; கிளியோட்டுவது போன்று நடித்தலுஞ் செய்யாயாயின் என்க. வாறு.

(மே – ள்.) [1]'காற்றமும் தோற்றமும்' என்னுஞ் சூத்திரத்து இச் செய்யுளை எடுத்துக் காட்டி, இது வரையும் பருவம் அல்லெனக் கூறியது என்பர் நச்சினார்க்கினியர்.

(29) பாலை

[விளைமுற்றி மீண்ட தலைமகன் எம்மையும் நினைத்தறிதிரோ என்ற தலைமகட்குச் சொல்லியது.]

தொடங்குவினை தவிரா அசைவில் நோன்தாள்
கிடந்துயிர் மறுகுவ தாயினும் இடம்படின்
வீழ்களிறு மிசையாப் புலியுளுஞ் சிறந்த
தாழ்வில் உள்ளம் தலைந்தலைச் சிறப்பச்

செய்வினைக் கமைந்த காலை எஃகுறும்
நிருவே ருகிய நெரிதரு வனப்பின்
மாவின் நறுவடி போலத் காண்தொறும்
மேவல் தண்டா மகிழ்நோக் குண்கண்
நினையாது கழிந்த வைகல் எனையதூஉம்

வாழலென் யானெனத் தேற்றிப் பன்மாண்
நாழுக் கூறிய நகைசால் நன்மொழி
மறந்தனிர் போறிர் எழ்மெனச் சிறந்தநின்
எயிறுகமழ் துவர்வாய் இன்னகை அழுங்க
வினவல் ஆனாப் புலவியிழை கெளினி

வெம்மை தண்டா எரியுகு பறந்தலைக்
கொம்மை வாடிய இயவுள் யானை
நீர்மருங் கறியாது தேர்மருங் கோடி
அறுநீர் அம்பியின் நெறிமுதல் உணங்கும்
உள்ளூர்ப் பனிக்கும் ஊக்கரும் கடந்நிடை

எள்ளல் நோனாப் பொருள்தரல் விருப்பொடு
நாணுத்தலை யாக வைகி மாண்வினைக்
குடம்பான் டொழிந்தமை அல்லதை
மடந்தகழ் நெஞ்சம் நின்னுழை யதுவே.

—[2]வெள்ளாடியனார்.

(சொ – ள்.) ரு—கக. எஃகு உற்று இரு வேறு ஆகிய தெரிதகு வனப்பின் மாவின் நறுவடி போலத் தகத்தியால் அறுக்கப்பெற்று இரு பிளவாகிய விளங்கும் வனப்பினையுடைய மாவின் நறிய வடுப்போல, காண்தொறும் மேவல் தண்டா மகிழ் நோக்கு உண்கண்/காணுந் தொறும் களிப்பு மேவுதல் குறையாத பார்வையினையுடைய மை யுண்ட கண்களை, நினையாது கழிந்த வைகல்/நினையாது ஒழிந்த நாளில், எனையதூஉம் வாழலென் யான் எனத் தேற்றி/யான் சிறி

1. தொல். கள. உகூ. (பாடம்) 2. வெண்வட்டியார். வெளாவட்டனார்.

தும் உயிர் தரித்திரேன் எனத் தெளிவித்து, பல் மாண் தாழக் கூறிய தகை சால் நல்மொழி - பல மாண்புகளும் தாழ்ந்திடக் கூறிய அழகு மிக்க நல்ல மொழியை.

க—டு. தொடங்கு விடா தவிரா அசைவு இல் நோன்தாள் - தான் தொடங்கிய விடாமுயற்சியை கைவிடாத தளர்ச்சியில்லாத வலிய முயற்சியினையுடையதும். கிடந்து உயிர் மறுகுவதாயினும் இடம் படின் வீழ்களிறு மிசையா / பட்டினி கிடந்து உயிர் வருந்துவதாயி னும் தான் வீழ்த்திய களிறு இடப்பக்கம் வீழின் அதனைத் தின்னு தலுமாகிய, புலியினும் சிறந்த தாழ்வு இல் உள்ளம் தகைத்தகை சிறப்ப / புலியைக் காட்டினும் மேம்பட்ட என்றும் தளர்தலில்லாத வலக்கம் மேன்மேல் மிக, செய்வினைக்கு அகன்ற காலை / பொருளீட் டும் வினைக்குப் பிரிந்து அகன்ற காலத்தே,

கஉ—ச. மறந்தனிர் போறிர் எம எனை / எம்மிடத்து மறந்து விட்டீர்போலும் என்று, சிறந்த நின் எயிறு கெழுதுவர் வாய் இன் நகை அழுங்க / சிறந்த நினது பற்கள் விளங்கும் பவளம் போன்ற வாயின் இனிய நகைகெட, வினவல் ஆனாப் புகையினை / வினவுதல் நீங்காத அழகிய அணிகளை யுடையவளே, இவள்கேள் / இப்பொழுது யான் கூறுவதைக் கேட்பாயாக;

கடு—கூ. வெம்மை தண்டா எரி உகு பறந்தலை / வெப்பம் குறையாத எரிபரந்த பாழிடத்தே, கொம்மை வாடிய இயவுள் யானை / பெருமை யொழிந்த வழிச் செல்லும் யானை, நீர் மருங்கு அறியாது தேர் மருங்கு ஓடி / நீருள்ள இடம் அறியாமல் பேய்த்தேர் தோன்றும் இடமெல்லாம் ஓடி, அறநீர் அம்பியின் நெறிமுதல் உணங்கும் / நீரற்ற ஆற்றிற் கிடக்கும் ஓடம்போல வழியிடத்து வருந்திக்கிடக்கும். உள்ளுநர்ப் பழிக்கும் / வினைப்போரை வருத்தும், வினைக்கு அரும் கடத்திடை / வினைக்கும் ஒழியும் காட்டினிடத்தில்,

உ0—க. எள்ளல் நோனாப் பொருள் தரல் விருப்பொடு / பிறர் இகழ்தலைப் பொறாத பொருள் ஈட்டி வரும் விருப்பத்துடன், நாளுந் தலையாக வைகி / தொடங்கிய வினையை முடிக்க வேண்டுமென்றும் மானமே தலையாகக் கட்டுண்டிருந்து, மாண் வினைக்கு / மாண்புற்ற வினையின் பொருட்டு, உடம்பு ஆண்டு ஒழிந்தமை அல்லதை / எவ் உடம்பு ஆங்குப் பிரிந்து நின்றதல்லது, மடம் கெழு நெஞ்சம் நின் உழையதுவே / அறியாமையுடைய என் நெஞ்சம் நின் கண்ணதே யாகும்; (இதனை யறியாமையின் இங்ஙனம் வினவுகின்றனை.)

(முடிபு) உண்கண் நினையாது கழிந்த வைகல் வாழலென் யானெனத் தெரிக் கூறிய தன்மொழியை, புலியினும் சிறந்த தாழ்வில் உள்ளம் சிறப்பச் செய் வினைக்கு அகன்றகாலை எம்மிடத்து மறந்தனிர் போறிர் எனை, நின் நகை அழுங்க வினவல் ஆனாப் புகையினை கேள் இனி; உள்ளுநர்ப் பழிக்கும் அருங் கடிடைப் பொருள்தரல் விருப்பொடு வினை உடம்பு ஆண்டு ஒழிந்தமை அல்லதை நெஞ்சம் நின்னுழை யதுவே.

(வி - ரை.) நோன்முட் புலியெனவும் மிசையாப் புலி யெனவும் தனித்தனி இயையும். இடம் வீழ்ந்ததனை உண்ணுத புலியினும்

சிறந்த ஊக்கம் என்னும் இக்கருத்தினை, [1]'கடுங்கட் கேழல் இடம்பட வீழ்ந்தென, அன்றவ ணுண்ணு தாகி வழிநாட், பெருமலை விடரகம் புலம்ப வேட்டெடுஞ், திருங்களிற் றிருந்த வல்வலம் படுக்கும், புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத், துரனுடை யாளர்' என்பதனுன் அறிக. (எஃகு) உற்று - உறுதலால். தெரிதகு - ஆராயத் தக்க எவவும், பன்மாண் - பலமுறை எனவும், இடவுள் - தலைமை எனவும் உரைத்தலுமாம். யானை ஓடி உளைங்கும் கடம் என்க. நெஞ்சினை, மடங்கெழு நெஞ்சு என்றது தலைவியிடத்திருந்தும் தன் ஆற்றுமையை அறிவித்திலது என்று.

(மே - ள்.) [2]'கரணத்தினமைந்து' என்னுஞ் சூத்திரத்து, மறந்தீர் போலும் என்ற மனோயோள் ஏழாறு இளவிக்குந் தலைவன் எதிர் கூறியதாகும் இச் செய்யுள் என்றனர் நச்சினார்க்கினியர்

---

(30) நெய்தல்

[பகற்குறி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.]

நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலைக்
கடல்பா டழிய இனமீன் முகந்து
துணைபுணர் உவசையர் பரத மாக்கள்
இனையரும் முனியரும் கினையுடன் துவன்றி
உப்பொய் உமணர் அருந்துறை உய்த்தும்
ஒழுகை நோன்பகட டொப்பக் குழீஇ
அயிர்நிறை அடைகரை ஒலிப்ப வாங்கிப்
பெருங்களந் தொகுத்த உழுவர் போல
இரந்தோர் வறுங்கலம் மல்க விரிப்
பாடுபல அமைந்துக் கொள்ளா சாற்றிக்
கோடுயர் நிணிமனல் துஞ்சுந் துறைவ
'பெருமை என்பது நெறியோ' ஒருநாள்
மண்ணு முத்தம் அரும்பிய புன்னைத்
தண்ணறுங் கானல் வந்துநும்
கருவண்ணம் எவனே என்றனிர் செலினே.

—முடங்கிக் கிடந்த நெடுஞ் சேரலாதன்.

(சொ - ள்.) க—கக. நெடுங் கயிறு வலந்த குறுங்கண் அவ் வலை - நெடிய கயிறு சுட்டப்பெற்ற குறிய கண்களையுடைய அழகிய வலையில், கடல் பாடு அழிய இனமீன் முகந்து - கடலின் பெருமை குன்ற இனமாகிய மீன்களை முகந்து, துணை புணர் உவகையர் பரத மாக்கள் இனையரும் முனியரும் கினையுடன் துவன்றி - துணையுடன் கூடிய மகிழ்ச்சியுடையராய் இனையரும் முனியருமாய துணையுடன் கூடிய மகிழ்ச்சியுடையராய் இனையரும் முனியருமாய துணையர்கள் சுற்றத்துடன் நெருங்கி, உப்பு ஒய் உமணர் அருந்துறை

---

1. புறம். கூ0. 2. தொல். கற்பு. ூ.

போக்கும் ஓடுகை நோன் பகடு ஒப்பக் குழீஇ - உப்பினைச் செலுத்
தும் உப்பு வாணிகர் அரிய துறைகளிற் செலுத்தும் சகடுகளிற்
பூட்டப்பெற்ற வலிய எருதுகளை யொப்பக் கூடி, அயிர் திணி அடை
கரை ஒலிப்ப வாங்கி - நுண்மணல் செறிந்த பக்கத்துள்ள கரையில்
ஆரவாரம் பெருக இழுத்து, பெருங்களம் தொகுத்த உழவர் போல,
பெரிய களத்திலே நெல்லைத் தொகுத்த உழவர்களைப் போன்று,
இரந்தோர் வறுங் கலம் மல்க வீசி - கும்மிடம் வந்து இரந்தோர்க
ளுடைய வறிய கலன்கள் நிறைய அம் மீன்களைச் சொரிந்து, பாடு பல
அமைத்துக் கொள்ளை சாற்றி - எஞ்சியவற்றைப் பல கூறுகளாகச்
செய்து விலைகூறி விற்று, கோடு உயர் திணிமணல் குஞ்சும் துறைவ-
கரை உயர்ந்த திண்ணிய மணற் பரப்பில் தூங்கும் துறைவனே,

கஉ—டு. ஒருநாள் -, மண்ணு முத்தம் அரும்பிய புன்னைத் தண்
நறுங்கானல் வந்து - தூய்மை செய்யப் பெறுத முத்துக்கள் அரும்பி
யிருக்கும் புன்னை மரங்களையுடைய தண்ணிய நறிய கடற்கரைச்
சோலையில் வந்து, நும் வண்ணம் எவனே என்றனிர் செலின் -
நுங்கள் மேனியின் வண்ணம் எத்தகையதோ என்று வினவிச் செல்
லின்,

கஉ. பெருமை என்பது கெடுமோ - நின் பெருமை என்பது
கெட்டுப் போமோ?

(முடிவு) பாதமாக்கள் இனையுடன் துவன்றிப் பகடொப்பக் குழீஇ, அடை
கரை ஒலிப்ப வாங்கி, உழவர் போல வறுங்கலம் மல்க வீசிக் கொள்ளை சாற்றி
மணலிற்றுஞ்சும் துறைவ! ஒருநாள் கானல் வந்து, நும் வண்ணம் எவனே
என்றனிர் செலின் பெருமை என்பது கெடுமோ?

(வி -ரை.) இனமீன்: இனம்-வகை; கூட்டமுமாம். தொகுத்த
வற்றை வறுங்கலம் மல்க வீசுதல் என்னும் தொழில் பற்றியதாக
லின், உழவர்போல என்றது தொழில் உவமம். பாடு-கூறு. பெருமை
என்பது, நீர் பெருமை என்று நினைக்கும் அது. மண்ணு முத்தம்-கழு
வப்படாத முத்து; என்றது, புன்னை யரும்பு; இது வெளிப்படை.
'வண்ணம் எவனே என்றனிர் செலினே' என்றது, வண்ணம் அழிவு
படுதலைக் குறித்தற்கு.

(உ -றை.) 'பெருங்கடலுட் சிக்கிக் கிடக்கின்ற மீனை
நுனையர் அதனினின்றும் நீக்கி உயிர் செகுத்துக் கண்டாரெல்
லார்க்குங் கூறுவைத்துப்பரப்பிப் பின்பு உயிர் வருத்தினேமென்னும்
இரக்கமின்றி, மணற்குன்றிலே உறங்கினாற் போல, பெருங்குலத்துப்
பிறந்த இவளை, நீயிர் நும் வசமாக நீக்கி வருத்தி, வேறுபாட்டாள
எல்லாரும் இவளைச் சூழும்படி அலராக்கிப் பின்பு நீர் துயரமின்றி
உறங்குகின்றீர் என்றவாறு.'

(மே - ள்.) [1]'நாற்றமும் தோற்றமும்' என்னும் சூத்திரத்து 'வந்த
கிழவனை மாயஞ்செப்பிப் பொறுத்த காரணம்குறித்த காலையும்'என்ற
பகுதிக்கு, இச்செய்யுளை உதாரணமாகக் காட்டி, இதனுல், 'தம்மால்

---

1. தொல். களவு. உஉ.

இடையுறெய்தி வருந்துகின்றனை ஒரு நாள் வந்திலனென மாயஞ் செப்பியவாறும், நீர் வாராமையின் வண்ணம் வேறுபடுமென ஏற்றுக் கோடுமெனக் காரணங் கூறியவாறும் காண்க; தம்மேல் தவறின்றுகக் கூறுங்காலத்து இது கூறுவர் என்றதற்குக் குறித்த காலமென்றார்' என்றுரைத்தனர் நச்சினார்க்கினியர்

---

31. பாலை

[பிரிவிடை ஆற்றாளாயினளென்று பிறர் சொல்லக் கேட்டு வேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் மண்டிலம்
புலங்கடை மடங்கத் தெறுதலின் ஞாயிறு
நிலம்புடை பெயர்வ தன்றுகொல் இன்றென
மன்னுயிர் மடிந்த மழைமா றமையத்
நிலையில வோங்கிய நிலையுயர் யாஅத்து
மேற்கவட் டிருந்த பார்ப்பினங் கட்குக்
கல்லுடைக் குறும்பின் வயவர் வில்லிட
நினைவரிக் குறைந்த நிறந்த வதர்தொறுங்
கனைவிர மாலை யிடுஉக்கழிந் தன்ன
புன்னுமிழ் குருதி பரிப்பக் கிடந்தோர்
கண்ணுமிழ் கழுதின் கானம் நீந்திச்
சென்றூர் எய்பிலர் தோழி வென்றியொடு
வில்லலைத் துண்ணும் வல்லாண் வாழ்க்கைத்
தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலை இறந்தே.

—மாமூலனார்.

(சொ - ள்.) கஉ. தோழி - தோழியே,

க—ச. நெருப்பு எனச் சிவந்த - தீயைப் போன்று சினந் தெழுந்த, உருப்பு அவிர் மண்டிலம் - வெம்மை விளங்கும் ஞாயிறு, புலம் கடை மடங்கத் தெறுதலின் - விசும் நிலத்திடத்தேயுள்ள பயிர்கள் தீய்ந்தொழிய அழித்தலின், இன்று நிலம் ஞொள்கிப் புடை பெயர்வது அன்றுகொல் என - இன்று நிலவுலகம் குறைவுற்று நிலைபெயரும் காலம் அன்றே என்று சொல்லும்படி, மன்னுயிர் மடிந்த மழை மாறு அமையத்து - நிலைபெறும் உயிர்கள் மடிதற் கேதுவாகிய மழை பெய்யாதொழிந்த இக் காலத்திலே,

டு—கக. நிலைஇல வோங்கிய உயர்நிலை யாஅத்து - இலைகள் இல வாகி மிக ஓங்கிய நிலையையுடைய யாமரத்தின், மேற்கவட்டு இருந்த பார்ப்பு இனங்கட்கு - மேலுள்ள கிளைகளிலிருந்த பார்ப்புக்களுக்கு, கல்லுடைக் குறும்பின் வயவர் வில்லிட - கற்களையுடைய சிறாரில் உள்ள மறவர்கள் வில்லால் அம்பினை எய்தலால், குறைந்த நிறத்த அதர்தொறும் - பொலிவற்ற நிறத்தினையுடைய வழிதோறும், கண

விரம்மலி யிடூஉக் கழிந்தன்ன - செவ்வலரி மாலை இடப்பட்டு இறந்து கிடந்தாலொப்ப, நீண வரி - நினை ஒழுங்கும், புண் உமிழ் குருதி பரிப்பக் கிடந்தோர் - புண் சொரியும் குருதியும் தம்மைச் சூழக் கிடந்தோரது, கண் உமிழ் - கண்ணைக் கவர்ந்து சென்று உமிழ்ந்து கொடுக்கும், கழுகின் கானம் நீந்தி - கழுகுகளையுடைய காட்டைத் தாண்டி.

கூஉ—டு, வில் அலைத்து வென்றியொடு உண்ணும் வல்லாண் வாழ்க்கை - விற்போரில் பகைவர்களை அழித்து அவ் வெற்றியாலெய்தும் சிறைப் பொருள்களைத் துய்க்கும் வலிய ஆண்மை பொருந்திய வாழ்க்கையினையுடைய, தமிழ்கெழு மூவர் காக்கும் - தமிழ் நாட்டினையாளும் மூவராலும் காக்கப்பெறும், மொழிபெயர் தேஎத்த பன்மலை யிறந்து - வேற்று மொழியினையுடைய தேயங்களிலுள்ள பல மலைகளையுங் கடந்து, சென்றூர் என்பு இலர் - தலைவர் சென்றூர் என்று கூறுதல் இலர்; (இவள் பிரிவாற்றாது வருந்துகின்றாளென்று என்னையே குறை கூறுகின்றனர்.)

(முடிபு) தோழி! மண்டிலம் தெறுதலின், மன்றுயிர் மடிந்த அமையத்து, யாஅத்து மேற்கவட்டிருந்த பார்ப்பினங்கட்கு (உணவாகக்) குருதி பரிப்பக் கிடந்தோரது கண்களைக் கொண்டு சென்று உமிழும் கழுகுகளையுடைய கானம் நீந்திப் பன்மலையிறந்து தலைவர் சென்றூர் என்பு இலர். அமையத்துச் சென்றூர் என்க.

(வி - ரை.) புலக்கடை, புலங்கடையென விகாரமாயிற்று. நிலம் புடை பெயர்வது - உலகம் அழியும் ஊழிக்காலம்; [1] நிலம் புடை பெயர்வதாயினும் எனப் புறநானூற்றில் வருவதுங் காண்க. இல: குறிப்புமுற்று எச்சமாயிற்று. பார்ப்பு, பறப்பவற்றின் இளமைப் பெயர். நினைவரியும் குருதியும் பரிப்பக் கிடந்தோர் என்க. கழுகின் கானம், உருபும் பொருளும் தொக்கன. என்பு - என்றல்; தொழிற் பெயர். மூவர் காக்கும் தமிழ் மொழியின் வேறுய மொழி வழங்கும் தேயம் என்றுமாம்.

---

(32) குறிஞ்சி

[(1) பின்னின்ற தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்குக் குறையுறுப்பக் கூறியது. (2) தோழிக்குத் தலைமகள் சொற்றதுமாம்.]

நெருநல் எல்லி யேனல் தோன்றிச்
சிறுமனை ஒளிர்வரும் பூனன் வந்து
புரவலன் போலுந் தோற்றம் உறழ்கொள
இரவன் மாக்களிற் பனிமொழி பயிற்றிச்
சிறுநிலைப் படுகிளி கடிஇயர் பன்மான்
குளிர்கொள் தட்டை மதலில புடையாச்
சூர மகளிரின் நின்ற நீமற்

1. புறம். கூ.

றியாரை யோவெம் அணங்கியோய் உன்கெனச்
சிறுபுறங் கவையின னாக அதற்கொண்
கடு குபெயல் மண்ணின் ஞெகிழ்பநு ருற்றவெவ்
உள்ளவன் அறிதல் அஞ்சி உள்ளில்
கடிய கூறிக் கைபிணி விடாஅ
வெரூஉமான் பிணையின் ஓரீஇ நின்ற
என்னுரத் தகைமையில் பெயர்த்துப்பிறி தென்வயிற்
கடு சொல்ல வல்லிற்றும் இலனே அல்லாந்
தினந்நீர் களிற்றிற் பெயர்ந்தோன் இன்றுந்
தோலாவா றில்லை தோழிநாம் சென்மோ
சாயிறைப் பணைந்தோட் கிழமை தனக்கே
மாரின் ரூதலும் அறியான் ஏசற்
உ0 றென்குறைப் புறனிலை முயலும்
அன்ன னானினை நகுகம் யாமே!

—1நல்வெள்ளியார்.

(சொ - ள்.) க—கூ. திரு மணி ஒளிர்வரும் பூணான் - அழகிய மணி விளங்கும் பூணினையுடையான் ஒருவன், நெருநல் எல்லி எனல் வந்து தோன்றி - நேற்றைப் பொழுது நினைப்புனத்தின்கண் வந்து தோன்றி, புரவலன் போலும் தோற்றம் உறழ்கொள - அரசன் போலும் தனது தோற்றத்துடன் மாறுபட, இரவல் மாக்களிற் பணிமொழி பயிற்றி - இரத்தல் செய்யும் மக்களைப் போலப் பணிந்த மொழிகளைப் பலகாற் சொல்லி, சிறுநிரை படுகிளை கடியர் - சிறிய நிரையிற் பொருந்தும் கிளைகளைக் கடியுமாறு, குளிர் கொள் தட்டை மதன் இல பன் மான் புடையா - குளிருடன் கூடிய தட்டையாய கிளி கடி கருவிகள் வலியில்லாதன கொண்டு பல முறையும் புடைத்து, சூர் அர மகளிரின் நின்ற ஈ-சூரரமகளிர் போல நின்ற ஈ, யாரையோ - யாரோ, எம் அணங்கியோய் - எம்மை வருத்தினவளே, உண்கு என - நின்னை நுகர்வேன் என்று கூறி, சிறுபுறம் கவையினன் ஆக - எனது பிடரியினை அணைத்துக்கொண்டானாக,

கூ—கசு. அதற்கொண்டு - அவ்வுரைக் கருத்தினை மனத்திற் கொண்டு, இகுபெயல் மண்ணின் - மழை பெய்யப் பெற்ற மண் போல, ஞெகிழ்பு அனூர் உற்ற என் உள் அவன் அறிதல் அஞ்சி - நெகிழ்ந்து வருந்திய என் உள்ளத்து நிகழ்வினை அவன் அறிதலை அஞ்சி, உள் இல் கடிய கூறிக் கைபிணி விடாஅ - மனத்தொடு படாத கடிய சொற்களைக் கூறி அவன் கையை அகற்றி, வெரூஉம் மான் பிணையின் ஓரீஇ நின்ற - அச்சமுறும் பெண்மானைப்போல் விலகிநின்ற, என் உரத் தகைமையில் - எனது வன்னிலையைக் கண்டு (கூசி), பெயர்த்து - தன் காதலை உள்ளடக்கிக் கொண்டு,

கசு—எ. பிறிது என் வயின் சொல்ல வல்லிற்றும் இலன் - பிறிதோர் சொல்லும் என்னிடம் கூற வலியற்றவனாகி, அல்லாந்து -

(பாடம்) 1. நல்லொளியார்.

வருந்தி, இனம் நீர் களிற்றின் பெயர்ந்தோன் - தன் இனத்தினின் றும் நீங்கும் களிற்றைப்போல் மீண்டான்; இன்றும் தோலா ஆறு இல்லை - அவன் இன்றும் வந்து நமக்குத் தோலாதிருத்தல் இல்லை; கஅ—உ0. சாய் இறைப் பணைத்தோட் கிழமை - நமது வசீகர சந்திரனையுடைய பெரிய தோளின் உரிமை, தனக்கே மாசு இன்று ஆதலும் அறியான் - தனக்கே குற்றமின்றி யுளதாதலையும் அறியா வாய், எசற்று - வருந்தி, என் குறைப் புறனிலை முயலும் - என்னால் அடையலாம் காரியத்திற்கு என்னை இரந்து பின்னிற்றற்கு முயலும், கண் அண் ஆளிலை யாம் நகுகம் - நம்முன் வந்தறியும் அத் தலைவனைப் பழித்து மகிழ்வோம்;

கள. தோழி நாம் சென்மோ - தோழி நாம் செல்லுவோமாக.

(முடிபு) தோழி! பூணல் வந்து பணிமொழி பயிற்றி எம் அணங்கியோய்! நீ யாரையோ உன்னென்னக் கலையினலுக. கைபிணி விடாஅ ஒரீஇ நின்ற என் உயர்ந்தகைமையின் சொல்ல வல்லிற்று மிலன் பெயர்ந்தோன்; இன்றும் தோலாவாதலின்லை; அண்ணளிலை நகுகம் நாம் சென்மோ.

(வி-ரை) 'புரவலன் போலும் தோற்றம் உறழ்கொள, இரவன் மாக்களிற் பணிமொழி பயிற்றி' என்னும் இக்கருத்து.[1] 'ஒன்று, ஓரப்பான்போல்எளிவந்தும் சொல்லும், உலகம், புரப்பான்போல்வ தோர் மதுகையு முடையன்' எனக் கலியுள்ளும் வருவது காண்க. குளிர்-இளி கடி கருவியுள் ஒன்று;[2] 'நமுலும் தட்டையும் குளிரும் பிறவும், இளி கடி மரபின்' என்றுர் பிறரும். குளிர், சுரமும் ஆம். மதனில என்ற கொய்ம்மையால் மகளிர் நொய்ம்மை கூறப்பட்டது. உண்கு - நுகர்வேன். உள் அறிதல் - உள்ள நெகிழ்ச்சியை அறிதல். உள்ளில் கடிய கூறி என்றது, உள்ளத்தில் அன்பு வைத்தே புறத்தே கடுமொழிபோற் சொன்றக் கூறி என்றபடி. இன்றும் தோலாவாதில்லை யென்றது, அவன் இன்றும் வந்து நம் கருத்தினை யறியாது திரும்பிச் செல்வான் என்றவாறு. புறனிலை - பின்னிற்றல், தாழ்ந்து நிற்றல். கண் அண்ணளிலை எனக் கூட்டுக. தலைவியின் உள்ளக் கருத்தினை அறிதற்குத் தோழி தனது சிறுபுறம் கலையினலுக எனப் படைத்து மொழிந்து, அவன் குறையினைத் தலைவி விரும்பி ஏற்றுக் கொள்ளவேண்டு மென்பாள், அண்ணளிலை நகுகம் சென்மோ என்றுள் என்க. இச் செய்யுள் தலைமகள் கூற்றெனின், தோழிக்கு அறத்தொடு நிற்றலாகும்.

(மே - ள்.) [3] 'அறக்கழி வுடையன' என்னுஞ் சூத்திரத்து 'சிறு புறங் கலையினலுக...கைபிணி விடாஅ' என்பதனைத் தலைவி மறை புலப்படுத்தல் வேண்டி, தன்னை அவன் நயந்தான் போலத் தோழி கூறிய வழுவமைதிக்கு எடுத்துக் காட்டினர் நச்சினர்க்கினியர்

---

1. குறிஞ்சிக்கலி. கக. 2. குறிஞ்சிப் பாட்டு, சுக, சச.
3. தொல், பொருளியல். உச.

(33) பாலை — பின்முறைவரைவு

[தலைமகன் இடைச் சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

விளைநன் முதல் வெறுப்பக் காட்டி
மனைமான் கற்பின் வாணுதல் ஒழியக்
கவைமுறி இழந்த செந்நிலை யாஅத்து
ஒன்றோங் குயர்சினை இருந்த வன்பறை
விளைப் பருந்தின் கோள்வல் சேவல்
வளைவாய்ப் பேடை வருநிறம் பயிரும்
இளிதேர் நீங்குரல் இசைக்கும் அத்தம்
செலவருங் குரைய என்னது சென்றவண்
மலர்பா டான்ற மையெழில் மழைக்கண்
நெளியா நோக்கம் உள்ளினை உளிவாய்
[1]வெம்பரல் அதர குன்றுபல நீந்தி
யாமே எமியம் ஆக நீயே
ஒழியச் சூழ்ந்தனை யாயின் முனைஅது
வெல்போர் வானவன் கொல்லி மீமிசை
நுணங்கமை புரையும் வணங்கிறைப் பணைத்தோள்
வரியணி அல்குல் வாலெயிற் றேர்வயின்
பிரியா யாயின் நன்றுமன் நில்ல
அன்றுநம் மறியா யாயினும் இன்றுநம்
செய்வினை ஆற்றுற விலங்கின்
உ0 "எய்துவை அல்லையோ பிறர்நகு பொருளே!"

—மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்.

(சொ - ள்.) க—உ. நெஞ்சே -, விளை நன்று ஆதல் வெறுப்பக் காட்டி - பொருள் ஈட்டும் விளை அறம் முதலிய பயந்து நன்றுதலில் மிக எடுத்துரைத்து. மான் கற்பின் வாள் நுதல் மனை ஒழிய - மான் புற்ற கற்பினையுடைய ஒள்ளிய நெற்றியினையுடைய நம் தலைவி மனையில் இருப்ப,

க—எ, முறி இழந்த கவை செந்நிலை யாஅத்து - தளிர்கள் இழந்த கிளைகளையுடைய செவ்விய நிலையினையுடைய யா மரத்தில், ஒன்று ஓங்கு உயர் சினை இருந்த - கப்பின்றி ஒன்றுக மிக உயர்ந்துள கிளையிலிருந்த, வன் பறை விளை கோள் வல் பருந்தின் சேவல் - வலிய பறத்தலையுடைய சிள்ளென்று ஒலி செய்யும் இரை கொள்ளவல்ல பருந்தினது சேவல், வளை வாய்ப் பேடை வருநிறம் பயிரும் - வளைந்த வாயினையுடைய தனது பேடை தன்பால் வரும் பரிசு அழைக்கும், இளி தேர் தீம் குரல் இசைக்கும் அத்தம் - இளியெனும் இசைபோன்ற இனிய குரல் ஒலித்துக்கொண்டிருக்கும் அரிய சுரநெறிகள்,

---

(பாடம்) 1. வெம்பர முனைய.

எஃ

அ—கஉ. செலவு அருங்குரைய என்னாது சென்று - செல்லுதற்கரியவென அதுபோதே கூறாது இந்துஇனையும் போந்து, அவள் மலர் பாடு ஆன்ற மை எழில் மழைக் கண் - தகிலியது மலர் தன் பெருமை இழுத்தற்குக் காரணமான மையுண்ட அழகிய குளிர்ந்த கண்ணின், தெளியா நோக்கம் உள்ளினை - மயங்கிய நோக்கத்தினை நினைந்து, உளி வாய் வெம்பரல் அதர குன்று பல ஈர்ந்து - உளியின் வாய்போன்று கூரிய வெவ்விய பரல்கள் பொருந்திய நெறி களையுடைய குன்றுகள் பலவற்றைக் கடந்து வந்தும், யாமே எமியம் ஆக - யாம் தமியேம் ஆக, நீயே ஒழியச் சூழ்ந்தனையாயின் - நீ எம்மை விட்டு நீங்கிப் பிரிந்தேதகக் கருதினையாயின்,

கஉ—எ. வெல்போர் வானவன் முளுஅது கொல்லி மீமிசை - போர் வெல்லும் சேரனது பழையதாகிய கொல்லிமலையின் உச்சியில் உள்ள, நுணங்கு அமை புரையும் வணங்கு இறைப் பணைத்தோள் - சிறிய மூங்கிலை யொத்த வளைந்த முன் கையினை யுடைய பெரிய தோளினையும், வரி அணி அல்குல் - திதலையை அணிந்த அல்குலினையும், வால் எயிற்றுருள் வயின் - வெள்ளிய எயிற்றினையுமுடைய தகிலியிடத்திருந்து பிரியாயாயின் நன்று மன் - பிரியாதிருப்பாயாயின் நன்றாகும்; அது செய்திலையே;

கஅ—உ0. அன்று நம் அறியாய் ஆயினும் - பிரிகின்ற அன்று நம் இயல்பினை அறிந்து கொள்ளாய் ஆயினும், இன்று நம் செய்வினை ஆற்ற உற விலங்கின் - இன்று நமது செய்யப்படும் இவ் வினையினை இந்த இடைநெறியில் உற்ற அளவில் விலக்குவையாயின், பிறர் நகுபொருள் எய்துவை அல்லையோ - பிறர் சிரிக்கத்தக்க இகழ்ச்சியை அடைவாய் அல்லையோ?

(முடிபு.) நெஞ்சே! வினை நன்றுதல் வெறுப்பக் காட்டி, மனவானுதல், ஒழிய, அந்தம் செலவு அருங்குரைய என்னாது சென்று, அவள் நோக்கும் உள்ளினை ஒழியச் சூழ்ந்தனையாயின், வாலெயிற்றுருள்வயின் (அன்றே) பிரியாயாயின் நன்று, மன்; இன்று நம் செய்வினை ஆற்றுற விலங்கின், பிறர் நகுபொருள் எய்துவை யல்லையோ.

(வி - ரை.) காட்டிச் சென்று ஒழியச் சூழ்ந்தனையாயின் என்க. மனை ஒழிய எனவும், பயிருங் குரல் எனவும், முளுஅது கொல்லி எனவும் இயையும். இளி - சட்ச சுரம்; குரல மத்திமம் ஆகலின் என்க. மெத்தெனப் பேடையை அழைத்தலின் மந்த சுரம் ஆயிற்று. சென்று என்றது போந்து என்றபடி. நில், அசை; சுறு நிரிந்தது. யாமே நீயே என்னும் ஏகாரம் பிரிநிலை.

---

34. முல்லை

[வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

சிறுகரும் பிடவின் வெண்டலைக் குறும்பூதல்
கண்ணியின் மலரும் நன்னாறும் புறவில்
தொடுதோற் கானவன் கலைபொறுத் தன்ன

இருநிரி மருப்பின் அண்ணல் இரலை
செறியிலைப் பதவின் செங்கோல் மென்குரல்
மறியாடு மருங்கின் மடப்பிணை யருத்தித்
தெள்ளறல் தழீஇய வார்மணல் அடைகரை
மெல்லிடு கவுள துஞ்சுபுறங் காக்கும்
பெருந்தகைக் குடைந்த நெஞ்சம் ஏமுறச்
செல்க தேரே நல்வலம் பெறுந
பசைகொல் மெல்விரற் பெருந்தோட் புலைத்தி
துறைவிட் டன்ன தூமயி ரெகினம்
துணையொடு திளைக்கும் காப்புடை வரைப்பில்
செந்தார்ப் பைங்கிளி முன்கை யேந்தி
இன்றுவரல் உரைமோ சென்றிசினோர் திறத்தென
இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லெனத்
தழீஇ இன்சொல் பயிற்றும்
நாணுடை அரிவை மாணலம் பெறவே.

—மதுரை மருதன் இளநாகனார்.

(சொ-ள்.) க—கூ. சிறு கரும் பிடவின் - சிறிய கரிய பிடாவின், வெண்தலை குறும் புதல் - வெள்ளிய உச்சியிலையுடைய குறிய புதர், கண்ணியின் மலரும் - மாலை போல மலரும், தண் நறும் புறவில் - குளிர்ந்த நறிய முல்லை நிலத்தில், தொடுதோல் கானவன் - செருப்பு அணிந்த தாளையுடைய வேட்டுவன், கவைபொறுத்தன்ன - கவைக்கோலைச் சுமந்தாலொத்த, இரு நிரி மருப்பின் - பெரிய முறுக்குடைய கோட்டினையுடைய, அண்ணல் இரலை - பெருமை தங்கிய ஆண்மான்கள், செறி இலைப் பதவின் செங்கோல் மென்குரல் - நெருங்கிய இலைகளையுடைய அறுகிலது சிவந்த தண்டினோடு மெல்லிய கொத்துக்களை, மறியாடு மருங்கின் மடப்பிணை அருத்தி - மறியாடும் பக்கத்தினையுடைய இரலை பெண்மானை அருந்தச் செய்து, தெள் அறல் தழீஇய வார்மணல் அடைகரை - தெளிந்த அறல்நீர் தழுவிச் செல்லும் நெடிய மணல் சார்ந்த கரைகளில், மெல்லிடு கவுள - அசைவிடும் கவுளினையுடையவாய், துஞ்சு புறம் காக்கும் - அவை துயிலும் இடத்தைக் காவல் செய்திருக்கும், பெருந்தகைக்கு உடைந்த நெஞ்சம் ஏமுற - பெருந்தன்மையினைக் கண்டு அவை போலத் தலையளி செய்திலமே என்று தளர்ந்த நெஞ்சம் இன்பம் அடையவும்,

கூ—அ. பசை கொல் மெல்விரல் - ஆடைகளிலே தோய்த்துள்ள கஞ்சிப் பசையினைக் கரைத்து விடும் மெல்லிய விரல்களையும், பெருந் தோள் புலைத்தி - பெரிய தோள்களையும் உடைய ஆடை துவைப்பவள், துறைவிட்டன்ன - அக் கஞ்சிப் பசையினைத் துறையில் அலசி விடுவதுபோன்ற, தூ மயிர் எகினம் - தூய மயிரினையுடைய அன்னங்கள், துணையொடு திளைக்கும் - தம் பெடைகளுடன் விளையாடி மகிழும், காப்புடை வரைப்பின் - காவல் பொருந்திய மனையில்க்குள், செந்தார்ப் பைங்கிளி - சிவந்த மாலை யணிந்தது

போன்ற கழுத்தினையுடைய பசிய கிளியினை, முன் கை ஏந்தி - தனது முன் கையில் ஏந்தி. இல்லவர் அறிதல் அஞ்சி - இல்லில் உள்ளார் அறிந்து விடுவரோ என அஞ்சி, மெல்லென-மென்மையாக, சென்றி கிழவோர் நிறத்து இன்று வரல் உரைமோ என - நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் நிறத்து ஒன்று உரைப்பையாயின் அவர் இன்று வருவார் என உரைப்பாய் என்று, மழலை இன் சொல் பயிற்றும் - மழலையாகிய இனிய சொற்களைப் பயில்வித்திருக்கும். நாள் உடை அரிவை மாண் நலம் பெற - நாணம் மிக்க நம் தலைவியது மாண்புற்ற நலம் பிற அடையவும்,

கo. நல் வலம் பெறுக செல்க தேரே - தேரைச் செலுத்தும் கற்றினம் வாய்ந்த பாகனே. நம் தேர் விரைந்து செல்வதாக.

(முடிபு) நல்வலம் பெறுக! நெஞ்சம் எமுற அரிவை மாணலம் பெறச் செல்க தேர்.

இரலை புறவில் பிணை அருந்திச் துஞ்சு புறங்காக்கும் பெருந்தகை எனவும், வரைப்பில் கிளி முன்கை யேந்தி இன்று வரல் உரைமோ என இன்சொற் பயிற்றும் அரிவை எனவும் இயையும்.

(வி - ரை.) பூவிறல் வெண்டலையாயிற்று. கலை - புதர்களில் ஒடுக்குதற்குக் கொண்ட கலைக்கோல். மறியாடு மருங்கின் மடப் பிணை - குழவிற்ற பிணையுமாம். பெருந்தகைக்கு - பெருந் தகைமையால். செல்க - செலுத்துக எனப் பிறவினையுமாம். தார். கழுத்தின் இரேகை. சென்றிசினோர் நிறத்து உரைக்கில் என ஓர் சொல் வருவிக்க. இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லெனச் சொல்லி லின் நாணுடையாள் ஆயிற்று. [1] உயிரினுஞ் சிறந்தன்று நாண் என்பவாகலின் நாணுடை அரிவை என்பாராயினர். தலைவன் தன்னை இங்கே இரலையும் பிணையும் வருத்துகின்றன என்பதும் அவளை அங்கே அன்னமும் துணையும் வருத்துவன என்பதும் புலப் படக் கூறினன்.

(மே - ள்.) [2] கரணத்தினமைந்து' என்னுஞ் சூத்திரத்துப் பாங் கிடத்தும் தலைவன் கூற்று நிகழும் என்பதற்கு, 'செல்க தேரே நல்வல பெறுக' என்பதனைக் காட்டினர் நச்சினார்க்கினியர்

---

(35) பாலை

[முகட் போக்கிய நற்றாய் தெய்வத்திற்குப் பராஅயது.]

சென்று புறந்தந்த எம்மும் உள்ளாள்
வான்தோய் இஞ்சி நன்னகர் புலம்பத்
தனிமணி இரட்டும் தாழுடைக் குடிகை
நுழைநுதி நெடுவேற் குறும்படை மழவர்
முனையாத் தந்து முரம்பின் விழ்ந்த

1. தொல். களவு. 2. தொல். கற். ஒ.

வில்லோர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லான் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகற் பீலி சூட்டிக் குடிப்படுத்துத்[1]
தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்
போக்கரும் கவலைய புலவுநா றருஞ்சுரம்
துணிந்துபிறள் ஆயினள் ஆயினும் அணிந்தணிந்
தார்வ நெஞ்சமோ டாய்நலள் அஃதிந்தன்
மார்புதுஞ் ஞை யாகத் துயிற்றுக நில்ல
துஞ்சா முழவின் கோவற் கோமான்
நெடுந்தேர்க் காரி கொடுங்கான் முன்றுறைப்
பெண்ணையம் பேரியாற்று நுண்ணறல் கடுக்கும்
நெறியிருங் கதுப்பினள் பேதைக்
கறியாத் தேனத் தாற்றிய துஞ்ஞையே.

—அம்மூவனார்

(சொ - ள்.) க—உ. வான்தோய் இஞ்சி - வான் அளாவிய மதிலு புடைய, கல் நகர் புலம்ப - நன்றாகிய மலை தனிமையுற, சான்று புறந்தந்த எம்மும் உள்ளாள் - பெற்றுப் பாதுகாத்த எம்மையும் நினையாளாய்,

ங—கக. தனி மணி இரட்டும் - ஒப்பற்ற மணி மாறி மாறி யொலிப்பதும், தாளுடைக் கடிகை நுழைநுதி - கடையாணி யிட்ட காம்பினையும் கூரிய முனையையும் உடையதுமாய, நெடுவேல் - நெடிய வேலையுடைய, குறும்படை மறவர் - கோட்டை மறவராகிய, முனை ஆ தந்து - வெட்சியார் போர்முனையில் வென்று ஆக்களை மீட்டு, முரம்பின் வீழ்த்த - அவ் வெட்சியாரை மேட்டு நிலத்தே வீழ்த்திய, வில் ஏர் வாழ்க்கை - வில்லையே ஏராகக்கொண்டு வாழும் வாழ்க்கையினையுடைய, விழுத்தொடை மறவர் - சிறந்த அம்பினை யுடைய கரந்தை வீரர்கள், வல்லான் பதுக்கைக் கடவுள் பேண் மார் - தங்கள் வலிய ஆண்மையாலிட்ட பதுக்கைக்கண் ணுள்ள கடவுளை வழிபடற்கு, நடுகல் பீலி சூட்டி - அந் நடு கல்லில் மயிற் றோகைகளைச் சூட்டி, குடி படுத்து - குடியை அடித்து, தோப்பிக் கள்ளொடு - நெல்லாலாக்கிய கள்ளொடு, துரூஉப் பலி கொடுக்கும் - செம்மறிக் குட்டியைப் பலி கொடுக்கும், போக்கு அரும் கவலைய - வழிப்போதற்கு இயலாத கவர்த்த வழிகளையுடைய, புலவு நாறு அருஞ் சுரம் - புலால் வீசும் அரிய சுரநெறியில், துணிந்து பிறள் ஆயினள் ஆயினும் - செல்லத் துணிந்து பிறளொருத்தியாக ஆயினுள் எனினும்,

கச—அ. துஞ்சா முழவின் கோவல் கோமான் - முழவொலி யறாத நிருக்கோவலூர்க்குத் தலைவனாகிய, நெடுந்தேர்க் காரி கொடுங் கால் முன்றுறை - நெடிய தேரினையுடைய காரியின் கொடுங்கால் என்னும் ஊரினிடத்தே முன்றுறையில் உள்ள, பெண்ணை அம் பேர்

1. (பாடம்) குடிபடுத்து, குடிப்படத்.

யாற்று நுண் அறல்கடுக்கும் - அழகிய பெரிய பெண்ணையாற்றின் நுண்ணிய கருமணலை யொக்கும், நெறி இரும் கதுப்பின் என் பெதைக்கு - நெளிந்த கரிய கூந்தலையுடைய என் மகட்கு, அறியாத் தெளத்து ஆற்றிய துணை - அவளை யறிவார் பிறர் இல்லாத நாட்டிலே அவளைச் செலுத்திப்போம் துணைவன்.

கக—ங. அணிந்து அணிந்து ஆர்வ நெஞ்சமொடு - அன்பு மிக்க உள்ளத்தோடு அவளைப் பலகாலும் அணிவித்து, ஆய் நலன் அணி இ - அவளது அழகிய நலனைத் துய்த்து, தன் மார்பு துணையாகத் துயிற்றுக - தனது மார்பு பற்றுக்கோடாகத் துயில்விப்பானாக.

(முடிபு) என்று புறந்தந்த எம்மும் உள்ளாள், நகர் புலம்ப, அருங்கரம் அணிந்து பிறள் ஆயினள் ஆயினும், என் பெதைக்கு அறியாத்தெளத்து ஆற்றிய துணை, அணிந்தணிந்து ஆய்நலன் அணி இத் தன் மார்பு துணையாகத் துயிற்றுக தில்ல.

(வி - ரை.) எம்மும் என்னும் உம்மை ஆயத்தினையும் பந்து கழங்கு முதலியவற்றையும் தழுவி நின்றது. சிறந்த நகர் எனினும் இவ் வொருத்தியின்றி விளக்கம் ஒழிந்தது என்றவாறு. குறும்படை-கோட்டை; குறுமையை அடைந்த என்றுமாம்; குறும்பு - சிற்றரண். மழவர் - வெட்சி வீரர் எனக்கொண்டு, அவரது முனையிடத்து ஆ எனலுமாம். பதுக்கைக் கடவுள் - பதுக்கையிடத்துக் கல்லில் உறையும் கடவுள். விழுத்தொடை - நப்பாத அம்பென்றும், துன் பஞ் செய்யும் அம்பென்றுமாம். துணிந்து என்றது சுரம்போதற் கருமையையும், பிறளாயினள் என்றது தம்மை மறந்து செல்லுதற் கருமையையும் புலப்படுப்பனவாம். தில், விழைவுப் பொருட்டு. பெண்ணையாற்று முன்றுறை யென்க. துணை - தலைவன்; துணையாவான் அவனே எல்லும் குறிப்பிற்றுமாம்.

(மே - ள்.) [1]'தன்னு மவனும்' என்னும் சூத்திரத்துத் தலைவன் தலைவிபால் மிகவும் அன்பு செய்கவென்று கற்றுய்த் தெய்வத்தைப் பராவியதற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டினர் நச்சினார்க்கினியர்.

இச் சூத்திரத்து இச் செய்யுளை எடுத்துக் காட்டி, இது செவிலி தெய்வம் பராவியது என்பர் இளம்பூரணர்

(36.) மருதம்

[தலைமகள் பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனொடு புலந்து சொல்லியது.]

பகுவாய் வராஅல் பல்வரி இரும்போத்துக்
கொடுவாய் இரும்பின் கோளிரை தூற்றி
ஆம்பல் மெல்லடை சிதையப் பாய்ந்தெழுந்

---

1. தொல். அகத். கக.

அரில்படு வள்ளை ஆய்கொடி மயக்கித்
தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது
கயிறிடு கதச்சேப் போல மதமிக்கு
நாட்கயம் உழக்கும் பூக்கே ழூர
வருபுனல் வையை வார்மணல் அகன்றுறைத்
திருமரு தோங்கிய விரிமலர்க் காவின்
நறும்பல் கூந்தற் குறுந்தொடி மடந்தையொடு
வதுவை அயர்ந்தனை யென்ப அலரே
கொய்சுவற் புரவிக் கொடித்தேர்ச் செழியன்
ஆலங் கானத்தகன்றலை நிவப்பச்
சேர்ந்தெம்பியன் நினங்கெழு நிரியன்
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி
நார்மி நறவின் எருமை யூரன்
தேங்கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான் இயல்தேர்ப் பொருநனென்
றெழுவர் நல்வலம் அடங்க ஒருபகல்
மூரசொடு வெண்குடை அகப்படுத் துரைசெலக்
கொன்றுகளம் வேட்ட ஞான்றை
வென்றிகொள் வீரர் ஆர்ப்பினும் பெரிதே. — எழு?

—மதுரை நக்கீரர்.

(சொ - ள்.) க—அ. பகுவாய் - பிளந்த வாயினையும், பல்வரி - பல வரிகளையுமுடைய, வராஅல் இரும்போத்து - பெரிய வராற் போத்து, கொடுவாய் இரும்பின் கோள் இரை துற்றி - வளைந்த வாயினையுடைய தூண்டிலிலுள்ள தனக்குக் கூற்றமாகிய இரையினை விழுங்கி, ஆம்பல் மெல்லடை கிழிய எழுந்து - ஆம்பலது மெல்லிய இலை கிழிய மேலெழுந்தும், குவளைக் கூம்புவிடு பன்மலர் சிதையப் பாய்ந்து - குவளையின் அரும்பு மலர்ந்த பல மலர்களும் சிதையும்படி பக்கத்தே பாய்ந்தும், அரில்படு வள்ளை ஆய்கொடி மயக்கி - பிணக்கம் மேவிய அழகிய வள்ளைக் கொடியினைக் கலக்கியும், தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது-தூண்டிலிட்ட வேட்டுவன் இழுக்கவும் வாராமல், கயிறு இடு கதச் சேப் போல-கயிறிட்டுப் பிடிக்கும் சினம் மிக்க ஏறு போல, மதம் மிக்கு நாட்கயம் உழக்கும் பூக்கேழ் ஊர - செருக்குமிக்கு விடியற்காலத்தே குளங்களைக் கலக்கும் பூக்கள் பொருந்திய ஊரனே!

கூ—உங. புனல் வரு வையை வார் மணல் அகன்றுறை-என்றும் நீர் வற்றுது வரும் வையையின் மிக்க மணல் பொருந்திய அகன்ற துறையைச் சார்ந்த, திரு மருது ஓங்கிய விரிமலர்க் காவின் - அழகிய மருதமரம் ஓங்கிய விரிந்த மலர்களையுடைய சோலையில், நறும்பல் கூந்தல் குறுந்தொடி மடந்தையொடு-நன்மணமுடைய மிக்க கூந்தலையும் குறிய வளையல்களையும் உடைய பரத்தையை, வதுவை அயர்ந்தனை என்ப - மணஞ் செய்து கொண்டனை யென்று ஊரார் கூறுவர்; அலர்-அவ்வலர், கொய்சுவல் புரவிக் கொடித் தேர்ச்

அசை

செழியன் - கொய்த பிடரி மயிரினையுடைய குதிரைகள் பூண்ட கொடி எடுத்த தேரினையுடைய பாண்டியன் நெடுஞ்செழியன், ஆலங் காலத்து அகன்ற இவ்வ - நன்னாலங்கானம் என்ற ஊரின் அகன்ற இடனெல்லாம் செந்நிறமடைய, சோழ செம்பியன் சினம் கெழு நிதியன் - சோழன் சோழன் சினம் மிக்க நிதியன், போர்வல் யானைப் பொலம்பூண் எழினி - போரில் வலிய யானைகளையுடைய பொற்பூண் அணிந்த எழினி, நார் அரி நறவின் எருமையூரன் - பன் னாடையால் அரிக்கப்பெற்ற கள்ளினையுடைய எருமையூர்க்குத் தலை வன், தேம் கமழ் அகலத்துப் புலர்ந்த சாந்தின் இருங்கோ வேண் மான் - தேன் மணங்கமழும் மார்பிலே பூசிப் புலர்ந்த சந்தனத்தை யுடைய இருங்கோ வேண்மான், இயல்தேர்ப் பொருநன் என்று - செல்வியின் இயன்ற தேரினையுடைய பொருநன் என்று கூறப்பட்ட, எழுவர் நல் வலம் அடங்க - எழுவரது சிறந்த வெற்றிகள் சாய்ந் தொழிய, ஒரு பகல் - ஒரு பகலிலே, முரசொடு வெண்குடை அகப் படுத்து - அவர்தம் முரசுகளுடன் வெண் குடைகளைப் பற்றிக் கொண்டு, உரை செல - தன் புகழுரை எங்கும் பரவ, கொன்று களம் வேட்ட ஞான்றை - அவர்தம் படைகளைக் கொன்று கள வேள்வி செய்த காலத்து, வெல்கொள் வீரர் ஆர்ப்பினும் பெரிது - வெற்றியடைந்த வீரர்கள் ஆர்த்த ஆரவாரத்திலும் பெரிதாக உள்ளது.

(முடிபு) ஊர! வையை அகன்றுரைக் காவில், மடந்தையொடு வதுவை அயர்ந்தனை யென்ப; அலர், செழியன் எழுவர் நல் வலம் அடங்கக் கொன்று களம் வேட்ட ஞான்றை வீரர் ஆர்ப்பினும் பெரிது.

வரற் போந்து, துற்றி, சிறிய எழுந்து, சிதையப் பாய்ந்து மயங்கி, வங்க வாராது, உழக்கும் எனவும், செழியன் அகன்றலை இவ்வ எழுவர் நல்வலம் அடங்க அகப்படுத்துக் கொன்று களம் வேட்ட எனவும் இயையும்.

(வி - ரை.) கோள் - கொள்ளப்பட்ட என்றுமாம். இரும்பு - தாண்டில் முள். கூடற்பதியில் மருதமரம் உயர்ந்த காவினையுடைய வையையாற்றின் துறையானது, திருமருதந்துறையெனச் சான் றோர் பலராலும் பாராட்டிக் கூறப்பெறும்: [1]'திருமருத நீர்ப்பூந் துறை.' 'நீம்புனல் வையைத் திருமருத முன்றுறை" 'திருமருத முன்றுறை முற்றங் குறுகி.' எனப் பரிபாடலிலும். [2]"வருபுனல் வையை மருதோங்கு முன்றுறை' எனச் சிலப்பதிகாரத்திலும் வருதல் காண்க. பகைவரது முரசுங் குடையும் போரில் பற்றிக்கொள்ளல் வெற்றிக்கு அடையாளமாகும். 'சினங்கெழு வேந்தரை, அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடு, ஒருங்ககப் படேஎ னுயின்' என இந் நெடுஞ் செழியனே வஞ்சினங் கூறுதல் காண்க.

(உ - றை.) 'வேட்டுவன் தாண்டிலிற் கோத்த இரையை இரை யின் கீழ்க் கிடந்த வாளை நுகர்ந்து, தாண்டிற் றுவக்கு விடாது இரை யிழிய எழுந்து குவளைப் பூமுறியப் பாய்ந்து அக் குவளையைச் சூழ்ந்த

---

1. பரி. எ: அட; கஉ: கo: உஉ: சடு. 2. சிலப். கச: எஉ.

வள்ளையைமயக்கி, நாட்காலத்தே எல்லாருங் காணக் கயத்தை உழக்குகின்றுற்போல, நின்பாலுடைய நெஞ்சு வலியதாய்ப் புறம்பு மெல்லிதா யிருக்கின்ற இன்சொல்லாலே, அப் பரத்தை நலத்தை நுகர்ந்து, அப் பரத்தையர் தாய்மார் நெஞ்சு வருந்த அவ்விடத்தை விடாத அன்புடனே போந்து, நாங்கள் நுமது நிறங்கண்டு வருந்த இங்கே வந்து, குவளை மலர் சூழ்ந்த வள்ளைபோலும் எங்கள் சுற்றத் தார் மயங்க, அவர்களை வருத்தி, ஊரை யெல்லாம் இப்படி எல்லாரு மறியக் கலக்குவா னெருவ னல்லையோ என்ற வாறு' என்பர் குறிப் புரைகாரர்.

(மே - ள்.) [1]'பெற்ற மெருமை' 'நீர்வாழ் சாதியுள்' என்னும் சூத்திரங்களின் உரையில், நீர்வாழ் சாதியுள் 'போத்து' எனும் சொல் வந்ததற்கு, 'பகுவாய் வராஅற் பல்வரி யிரும்போத்து' என் பதனை எடுத்துக் காட்டினர் பேராசிரியர்.

---

37. பாலை

[1. தலைமகள் தோழிக்கு வன்புறை எதிரழிந்து சொல்லியது, 2. பிரிவுணர்த்திய தோழி சொல்லியதூஉமாம்.]

மறந்தவன் அமையார் ஆயினும் கறங்கிசைக்
கங்குல் ஓதைக் கலிமிழ் உழுவர்
பொங்கழி முகந்த தாவில் நுண்துகள்
மங்குல் வானின் மாதிரம் மறைப்ப
வைகுபுலர் விடியல் வைபெயர்த் தாட்டித்
தொழிற்செருக் கனந்தர் வீட எழிற்றகை
வளியொடு சினைஇய வண்டளிர் மாஅத்துக்
கிளிபோல் காய கிளைத்துணர் வடித்துப்
புளிப்பதன் அமைத்த புதுக்குட மலிர்நிறை
வெயில்வெரி நிறுத்த பயிலிதழ்ப் பசுங்குடைக்
கயமண்டு பகட்டிற் பருகிக் காண்வரக்
கொள்ளொடு பயறு பால்விரைஇ வெள்ளிக்
கோல்வரைந் தன்ன வாலவில் மிதவை
வாங்குகை தடுத்த பின்றை ஒங்கிய
பருதியங் குப்பை சுற்றிப் பகல்செல
மருத மரவிழல் எருதொடு வறியும்
காமர் வேளில் மன்னிது
மாணலம் நுகருந் துணையுடை யோர்க்கே.

—விற்றூற்று மூதெயினனார்.

(சொ - ள்.) கூஅ. (தோழி), மாண் நலம் நுகரும் துணையுடை யோர்க்கு - மாண்புற்ற நலத்தினைத் துய்க்கும் துணையினை யுடைய காதலர்க்கு,

---

1. தொல், மரபு. ௭௬ : ௭௯.

அசு

க—கள. கறங்கு இசைக் கங்குல் ஓதை - ஒலிக்கும் ஒலியினை யுடைய வைகறையில் ஆள் அழைக்கும் ஆரவாரத்தையுடைய, கலி மகிழ் உழவர் - மிக்க களிப்புற்ற உழவர், வைகு புலவர் விடியல் வை பெயர்த்து ஆட்டி - இரவில் தங்கிய இருள் புலர்கின்ற அவ் விடியலில் வைக்கோலைப் பிரித்துக் கடாவிட்டு அலைத்தெடுத்து, பொங்கழி முகந்த தா இல் நுண் துகள் - தூற்றுப் பொலியினின்றும் முகந்த வலியற்ற நுண்ணிய கூளங்கள், மங்குல் வானின் மாதிரம் மறைப்ப - இருண்ட மேகம்போலத் திசையெங்கும் மறைப்பத் தூற்றி, தொழில் செருக்கு அளந்தர் வீட - தொழிற் செருக்கால் வந்த மயக்கம் ஒழிய, வளியொடு சிதை இய எழில் தகை வண் தளிர் மாஅத்து - தென்றற் காற்றினால் சிதைத்த அழகின் மேன்மையுற்ற வளம் பொருந்திய தளிர்களையுடைய மாமரத்தில், கிளிபோல் காய். கிளிபோன்ற வடிவினையுடைய காய்களைக் கொண்ட, கிளைத்துணர் வடித்து - கிளைக் கொத்துக்களிலிருந்து அவற்றைக் கிள்ளி எடுத்து, புளிப் பதன் அறைத்த புதுக்குடம் மலிர் நிறை - அவற்றோடு புளிக் கும் பதனைச் சேர்த்தாக்கிய புதுக்குடங்களில் மிகப் பெய்த சாரங் களை, வெயில் வெரிந் நிறுத்த பயில் இதழ் பசுங்குடை — வெயில் னிடத்துப் பின்புறம் தோன்ற வைத்துப் பத்திலெடுத்த மிக்க இதழ்களையுடைய பசிய குடைகளால், கயம் மண்டு பகட்டிற் பருகி. குளத்தில் மண்டிய கடாக்களைப் போலக் குடித்து, கொள்ளொடு பயறு காணவர பால் விரைஇ - கொள்ளும் பயறும் அழகு பொருந் தப் பாலுடன் கலந்து ஆக்கிய, வெள்ளிக்கோல் வரைந்தன்ன வால் அவிழ் மிதலை - வெள்ளிக் கம்பியை ஒரளவாக நறுக்கி வைத்தாற் போன்ற வெள்ளிய அவிழ்க் கஞ்சியை, வாங்கு கை தடுத்த பின்றை. வளைத்துண்ட கை போதும் எனத் தடுத்த பின்வர், ஓங்கிய பருதி அம் குப்பை சுற்றி - வட்டமாய் உயர்ந்த ஞாயிறு போன்ற அழகிய நெற்குவியலை நெற்கூடாக்கிச் சுற்றி, பகல் செல - ஞாயிற்றின் வெப்பம் அகல, மருதமர நிழல் எருதொடு வதியும் - மருதமரத்தின் நிழலில் தம் எருதுகளோடு தங்கியிருக்கும், காமர்வேனில் இது. அழகிய வேனிற்காலம் இதுவாகும், மன் - அது கழிந்ததே, மறந்து அவண் அமையாராயினும் - நம் தலைவர் நம்மை மறந்து அங்கே தங்கியிரா ராயினும் அதனால் நாம் பெற்றது என்?

(முடிபு) தோழி! துணையுடையோர்க்கு இது காமர்வேனில் மன், நம் தலைவர் மறந்து அவண் அமையாராயினும் அதனால் நாம் பெற்றது என்னை? உழவர் விடியலில் வைபெயர்த்தாட்டி, துகள்பாதிரம் மறைப்பத் தூற்றி, அளந்தர் வீட மலிர்நிறை பருகி, மிதலை தடுத்த பின்றை சுற்றி எருதொடு வதியும் வேனில் என்றியையும்.

(வி - ரை.) கறங்கிசை - அனுகரணம். வளியொடு - வளி யால், மாஅத்து - மாமரத்தில்; அத்து, சாரியை. கிளிபோலும் மாங் காய் உளதென்பதனை, [1]'ஊடுமென் சிறுகிளி யுணர்ப்பவண் முகம் போலப்,... கடிகயத் தாமரை கமழ்முகை கரைமாவின், வடி தீண்ட வாய்விடூஉம் வயலணி நல்லூர்' எனவும், [2]'கொங்கலர் சேர்ந்த

1. கலி. மரு. எ. 2. மணி. கூ : கூ-எ.

மாங்கனி தன்னைப், பாங்குற விருந்த பல்பொறி மஞ்ஞையைச், செம்பொற் றட்டிற் றீம்பா லேந்திப், பைங்கிளி யூட்டுமோர் பாவையா மென்று' எனவும் பிற சான்றோர்கள் உவமை கூறியவாற்றானு முணர்க. கிளி மூக்கு மாங்காய் என்னும் வழக்கும் உளது. வடித்து-உறந்து. புளிப் பதன் - புளிப்பையுடைய மாதுளங்காய் முதலிய சில் பதம். இனி, புளிக்கும் செவ்வி யுண்டாக்கப் பெற்ற என்றுமாம். நிறை - ஊறின சாரம். ஆகுபெயர். விரைஇ ஆக்கிய என ஒரு சொல் வருவித்துரைக்க. மிதவை - கூம். வாங்கு கை தடுத்த என்றது. வேண்டுபுளவு உண்ட என்றபடி. எருதொடு வதியும் என்றது, அவர்கள் இயல்பு கூறியபடி,

(மே - ள்.) [1] உரிப் பொருளல்லன மயங்கவும் பெறுமே' என்னுஞ் சூத்திரத்து, உம்மையாற் றழுவிய பாலை நிம் புனலுலகத்து மயங்கி வந்தது இச் செய்யுள் என்றார் நச்சினார்க்கினியர்

---

(38) குறிஞ்சி

[1. தோழி தலைமகன் குறை கூறியது. 2. பகலே சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைமகன் கேட்பச் சொல்லியதுமாம். 3. தோழி குறி பெயர்த்திட்டுச் சொல்லியதுமாம்.]

விரியிணர் வேங்கை வண்டுபடு கண்ணியன்
தெரியிதழ்க் குவளைத் தேம்பாய் தாரன்
அஞ்சில மிடவ தாக வெஞ்செலற்
கானவலந் தெரிந்து துணைபடர்ந் துள்ளி
வருதல் வாய்வது வாள்தோய் வெற்பன்
வந்தனை-யுயின் அந்தளிர்ச் செயலைத்
தாழ்வில் ஒங்குநிலைத் தொடுத்த வீழ்கயிற்
றூசல் மாறிய மருங்கும் பாய்புடன்
ஆடா மைமயிற் சுரும்பில தேறி
நீடிதழ் நிலைஇய சுவின்பெறு நீலம்
கண்ணென மலர்ந்த சுனையும் வண்பறை
மடக்கிளி எடுத்தல் செல்லாத் தடக்குரற்
குலவுப் பொறை இறுத்த கோற்றலை இருவி
கொய்தொழி புனமும் நோக்கி நெடிதுநினைந்து
பைதலன் பெயரலன்[2] கொல்லோ ஐதேய்
கயவெள் ளருவி சூடிய உயர்வரைக்
கூஉங்கண் அமிதெம் ஊரென
ஆங்கதை யறிவுறல் மறந்திரின் யானே.

—வடம வண்ணக்கன் பேரி சாத்தனார்.

---

1. தொல். அகத். கூ. (பாடம்.) 2. பெயர்வன்.

(சொ - ள்.) கூ—டு. வான் தோய் வெற்பன் - வானளாவிய மலையையுடைய நம் தலைவன், விரி இணர் வேங்கை வண்டு படு கண்ணியன் - விரிந்த கொத்துக்களையுடைய வேங்கைப் பூவினாலாய வண்டுகள் மொய்க்கும் கண்ணியையுடையனாய், தெரி இதழ்க் குவளைத் தேம் பாய் தாரன் - ஆய்ந்தெடுத்த இதழ்களையுடைய குவளைப் பூவினாலாய தேன்பாயும் தாரையுடையனாய், அம் சிறு இடவதாக - அழகிய வில் இடப்பக்கத்திருப்ப, வெம் செலல் கதிர் வலம் தெரிந்து - கடிய செலவினையுடைய வலியமைந்த அம்புகளை ஆராய்ந்தெடுத்துக் கொண்டு, துணை படர்ந்து உள்ளி - தலைவி நினைந்து வருந்த, வருதல் வாய்வது - இங்கு வருதல் மெய்ம்மை;

கூ—அ. வந்தனன் ஆயின் - அங்ஙனம் வரின், அம் தளிர்ச் செயலை - அழகிய தளிர்களையுடைய அசோகினது, காம்பு இல் ஒங்கு சினை தொடுத்த - காம்பில்லாது ஒங்கிய கிளையில் தொடுத்த, வீழ் கயிற்று ஊசல் மாறிய மருங்கும் - தொங்கும் கயிற்றினாலாய ஊசல் இல்லாதொழிந்த இடத்தையும்,

அ—கு. பாய்பு உடன் ஆடாமையின் கலும்பு இல தேறி. ஒருங்கு பாய்ந்து விளையாடாமையின் கலங்குதல் இலவாய்த் தெளிந்து, நீடு இதழ் தலைஇய கவின்பெறு நீலம் - நீடிய இதழ்கள் பொருந்திய அழகிய நீலப் பூக்கள், கண்ணென மலர்ந்த சுனையும். கண்போல மலர்ந்த சுனையையும், வண்பறை மடக்கிளி - அழகிய சிறகினையுடைய இனிய கிளி, எடுத்தல் செல்லாத் தடக்குரல் குலவுப் பொறை - தூக்கிச் செல்ல இயலாத பெரிய கதிராகிய வளைந்த பாரத்தை, இறுத்த கோல் தலை இருவி - முறித்த கோலாகிய தலையையுடைய தட்டைகள் பொருந்திய, கொய்து ஒழி புனமும் நோக்கி - கொய் தொழிந்த வறும் புனத்தையும் நோக்கி, நெடிது நினைந்து பைதலன் பெயரலன் கொல்லோ - நீள நினைந்து தன் புற்றவனாய்ப் பெயராதது வருந்துவன் அன்றே;

கசு—அ. கய வெள் அருவி குடிய உயர்வரை - சுனையினின்றும் வரும் வெள்ளிய அருவிகளை உச்சியிற் கொண்ட உயர்ந்த மலையில், கூஉம் கண்ணது எம் ஊரென - கூப்பிடு தூரத்தினுள்ளதே எம் ஊரென, ஆங்கு அதை அறிவுறல் யான் மறந்திசின். அத் தலைவனைப் பிரிந்தவிடத்து அதனை அறிவுறுத்தலை யான் மறந்தேன், ஐ தேய்கு - அதனால் அழகு கெடுவதாக.

(முடிபு) வான்தோய் வெற்பன் வருதல் வாய்வது; வந்தனனாயின் ஊசல் மாறிய மருங்கும் நீலம் மலர்ந்த சுனையும் கொய்தொழி புனமும் நோக்கி நெடிது நினைந்து பைதலன் பெயரலன் கொல்லோ; யான் ஆங்குக் கூஉங் கண்ணள் எம் ஊரென அதை அறிவுறல் மறந்திசின்; ஐ தேய்கு.

வெற்பன் கண்ணியன் தாரனைச் சிறு இடவதாகக் கதிர் தெரிந்து, உள்ள வருதல் வாய்வது என்க.

(வி - ரை.) சங்கச் செய்யுட்களில் வேங்கைமலரில் வண்டு படுமெனக் கூறியிருக்கவும், திவாகர பிங்கல நிகண்டுகள் சண்பகமும்

வேங்கையும் வண்டுணு மலர் மரம் எனக் கூறுதல் ஆராய்தற்குரியது: துணை-தலைவி; முன்னிலை. உள்ளி - உள்ள எனத் திரிக்க. தலைவியை நினைந்து எனப் பொருள் கொள்ளின், துணைப்படர்ந்து என்று பாடங் கொள்ளுதல் வேண்டும். தேறி என்னும் எச்சம் மலர்ந்த என்னும் பிறவினை கொண்டு முடிந்தது. கதிர்த்தலை கழிந்தென்பார் கோற்றலை என்றார். இருவியையுடைய புனம் எனக் கூட்டுக. கொய் தொழி புனம் என்றது புனம் என்னும் பெயரளவாய் நின்றது. பெயரலன் கொல்லோ, பெயரமாட்டானுய் என்றுரைத்தலுமாம். கூஉங்கண்ணஃது; விரித்தல் விகாரம். அது அதை எனத் திரிந்தது; அது - அதனை. அறிவுறல், ஈண்டுப் பிறவினை.

இச் செய்யுட்குக் குறிக்கப் பெற்றுள்ள கருத்துக்கள் மூன்றும் தொழி கூற்றுகவுள்ளன. நச்சினர்க்கினியர் கருத்தின்படி இச் செய்யுள் தலைவி கூற்றுகின்றது.

(மே - ள்.) 'மறைந்தவற் காண்டல்'[1] என்னும் சூத்திரத்து 'தன் குறி தள்ளிய தெருளாக்காலை, வந்தனன் பெயர்ந்த வறுங்கள நோக்கித், தன் பிழைப் பாகத் தமீஇத் தேறல்' என்பதற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டி, இதனுள் ஊசன் மாறுதலும் புனமும் தன் குறி தள்ளிய இடன்; மறந்திசின் என்றது தெருளாக்காலை: கூஉங் கண்ணது ஊரென உணர்த்தாயின் இடையிடு படுவதன்றி அவன்கண் தவறுண்டோ வெனத்தன் பிழைப்பாகத் தமீஇயினள் என்றுரைத்து, இது சிறைப்புறமாக வரைவு கடாயது என்றும், 'அவன் வரம் பிறத்தல்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுள் தலைவி களஞ் சுட்டியதாகும் என்றும் கூறினர் நச்சினர்க்கினியர்

---

39. பாலை

[பொருண் முற்றிய தலைமகன் தலைமகளைக் கண்டு சொல்லியது.]

க ஒழித்தது பழித்த நெஞ்சமொடு வழிப்படர்ந்
துள்ளியும் அறிதிரோ எம்மென யாழநின்
முள்ளெயிற்றுத் துவர்வாய் முறுவல் அழுங்க
நோய்முந் துறுத்து நொதுமல் மொழியனின்

ஙு ஆய்நல மறப்பெனே மற்றே சேணிகந்து
ஒலிகுழை பிசைந்த ஞெலிசொரி யொண்பொறி
படுஞெமல் புகைநயப் பொத்தி நெடுநிலை
முளிபுல் மீமிசை வளிசுழற் றுருஅக்
காடுகவர் பெருந்தீ யோடுவயின் ஓடலின்

கo அதர்கெடுத் தலரிய சாத்தொ டோராங்கு
மதர்புலி வெரீஇய மையல் வேழத்
தினந்தலை மயங்கிய நளந்தலைப் பெருங்காட்டு
ஞான்றுதோன் றவிர்சுடர் மான்ருற் பட்டெனக்

---

1. தொல். களவு. உo.

2. தொல். களவு. உக

கட்படச் ஒதி நிற்படர்ந் துள்ளி
கடு அருஞ்செல வாற்று ஆரிடை ஞெரேரெனப்
பரந்துபடு பாயல் நவ்வி பட்டென
இலங்குவளை செறியா இருந்த நோக்கமொடு
நிலம்நிகர் நினைவினை நின்ற நிற்கண்
டுள்ளகை யினைய மாகவும் எம்வயின்
உ0 ஊடல் யாங்குவந் தன்றென யாழநின்
கோடேந்து புருவமொடு குவைஇநுகல் நீவி
நறுங்கதுப் புளரிய நன்ன ரமையத்து
வறுங்கை காட்டிய வாயல் கனவின்
எற்றேக் கற்ற உலமரல்
உடு போற்று யாகலின் புலத்தியால் எம்மே.

—மதுரைச் செங்கண்ணனார்.

(சொ - ள்.) கசை. கள் படர் ஒதி - வண்டு படியுங் கூந்தலையுடையவளே!

கடு. ஒழித்தது பழித்த நெஞ்சமொடு - பெண்கட்குத் துயர் புரியலாகாது என்று முன்னோர் ஒழித்த கொள்கையைப் பழித்த உள்ளமோடு, வழிப் படர்ந்து - நெடுவழிச் சென்று, உள்ளியும் அறிதிரோ எம்மென - எம்மை நினைத்தும் அறிந்திரோ என, நின் முள் எயிற்றுத் துவர்வாய் முறுவல் அழுங்க - நினது முட்போன்ற கூரிய பற்களையுடைய பவளம் போன்ற வாயின் நகை அழிய, நோய் மூன்றுறுத்து - நோயைத் தோற்றுவித்து, நொதுமல் மொழியல் - உண்மைக்குப் புறம்பானதொன்றை மொழியாதே, நின் ஆய் நலம் மறப்பெனை மற்று - ஆராயப்படும் நினது அழகினை மறப்பேனை மறந்திலேன்;

டு—கஉ. சென்ன இகந்து - நெடுந்தூரம் தாண்டி, ஓலி கழை பிசைந்த ஞெலி சொரி ஒண் பொறி - தழைத்த மூங்கில் ஒன்றோடொன்று உரசித் தேய்வதால் அம் மூங்கில் சொரியும் ஒள்ளிய தீப் பொறி, படுஞெமல் புதையப் பொத்தி - மிக்க சருகுகள் மறையும் படி மூள, நெடு நிலை முளி புல் மீமிசை வளி சுழற்றுரு அ - நெடிய இடத்துள்ள உலர்ந்த ஊகம் புல் மீது காற்றுனது சுழற்றிப் பரவச் செய்ய, காடு கவர் பெருந் தீ ஓடுவயின் ஓடலின் - காட்டைக் கவரும் பெரிய தீயானது காற்றுச் சென்ற விடமெல்லாம் பரத்தலின், அதர் கெடுத்து அலறிய சாத்தொடு - நெறியினைக் கைவிட்டலறிய வானரிகச் சாத்தனோடு, ஓராங்கு - ஒரு பெற்றியே, மதர் புலி வெரீஇய மையல் வேழத்து இனம் - செருக்குற்ற புலியினைக் கண்டு அஞ்சிய மயக்கம் பொருந்திய யானைக்கூட்டம், தகிலமயங்கிய நனந் தகைப் பெருங்காட்டு - பலவிடத்தும் நிரிதலுற்ற அகன்ற இடத்தையுடைய பெரிய காட்டகத்தே, ஞான்று தோன்று அவிர் சுடர் மாறுற் பட்டென - (மாலையில் மறையுங் காலத்துத்) தாழ்ந்து தோன்றும் ஞாயிறு மயங்கி மறைந்திட்டதாக,

கசை—உடு. நிற்படர்ந்து உள்ளி - நின்னை நினைந்து நினைந்து. அருஞ் செலவு ஆற்று ஆனிடை - அரிது சென்ற அச் செலவும் இயலா தொழிந்த அரிய வழியில், ஞெரேரென - பொதுக்கென, பரந்து படு பாயல் - பரந்து கண்படும் பாயற்கண்ணே, நவ்வி பட்டென - பெண் மானைக் கண்டாலொத்த, இலங்கு வளை செறியா - விளங்குகின்ற வளை கழன்று விழுவதனை மேலே ஏற்றுச் செறித்து, இகுத்த நோக்கமொடு - தாழ்ந்த நோக்கத்துடனே, நிலம் நினை நினைவினை நின்ற நிற்கண்டு - நிலத்தைக் காலாற் கீறும் வருத்த முடையையாய் நின்ற நின்னைக் (கனவிற்) கண்டு, இன் நகை - இனிய நகையினை யுடையாய்! இனையமாகவும் - யாம் இங்ஙனம் வருந்தியிருப்பவும், எம்வயின் ஊடல் யாங்கு வந்தன்று என - எம்மிடத்து நீ ஊடல் செய்தல் எங்ஙனம் வந்தது எனச் சொல்லி, நின் கோடு ஏந்து புருவ மொடு குவவு நுதல் நீவி - நினது பக்கம் உயர்ந்த புருவத்துடன் திரண்டு சிறுகிய நெற்றியினைத் துடைத்து, நறுங் கதுப்பு உளரிய நன்னர் அமையத்து - மணம் பொருந்திய கூந்தலைக் கோதிய நல்ல பொழுதிலே, வறுங்கை காட்டிய வாய் அல் கனவின் - வெறுங்கை யாக்கிய அப் பொய்க் கனவிடத்தே, ஏற்று ஏக்கற்ற உலமரல் - துயிலேயேற்று நின்னைக் காணுது ஏக்கற்ற வருத்தத்தினை, போற்றாய் ஆகலின் - நீ அறிவிற் கொள்ளாயாகலின், புலத்தியால் எம்மே - எம்மைப் புலக்கின்றாய்.

(முடிபு) கள்படர் ஒதி எம் உள்ளியும் அரிதிரோவென, முறுவல் அழுங்க, தோய் முந்துறுத்து, நொதுமல் மொழியல். நின் ஆய் நலம் மறப்பனே பெருங் காட்டு அவிர்சுடர் பட்டென, நிற்படர்ந்துள்ளி, செலவாற்று ஆனிடைப் பாயல், நினைவினை நின்ற நிற்கண்டு இனையமாகவும் ஊடல் யாங்கு வந்தனென, நீவி, உளரிய அமையத்து, வாயல் கனவின் உலமரல் போற்றாயாகலின் எம்மைப் புலத்தி.

(வி - ரை.) ஒழித்தது பழித்தல் - இரவலர்க்கு இடுதற்குப் பொருளின்றி அவரை அகற்றியதனைப் பழித்தல் என்றுமாம். ஆய் நலம் - ஆயத்தாரால் ஆராயப்படும் அழகு. மற்று, வினைமாற்று, ஞெலி - தீக்கடை கோல் : சண்டு மூங்கிலு ஞெலியென்றார். ஞெமல் - சருகு. கொளுத்தி - பொத்த. மூளிபுல் - மூங்கிலுமாம். சுமற்றாரு - சுமற்றி ; இதனைச் சுமற்ற எனத்திரிக்க. ஓடலின் அலறிய சாத் தொடு எனவும், சாத்தொடு ஞெரேரெனக் கண்படு பாயற் கண்ணே எனவும், நவ்வி பட்டென இகுத்த நோக்கமொடு எனவும் இயக்க. ஞான்று தோன்று - தொங்குவதுபோலத் தோன்றும். மான்றூல் : ஆல், அசை. சட்படர், கள் - வண்டு. ஞெரேரென - ஒலிக்குறிப்புமாம். பரத்தல் - வேண்டியபடி கிடத்தல். படுபாயல் - கண்படு பாயல். ஓதி, இன்னகை : விளிகள். என - என்றுகூறி, யென ஒருசொல் வருவிக்க. யாழ இரண்டும் அசை. கனவிற் கண்டமையின் நன்னர் அமையம் ஆயிற்ற. வறுங்கை காட்டுதல், கையில் ஒன்று உளது போலப் பிடித்துப் பின் வறுங்கை காட்டுதல் வழக்கு. சண்டுப் புணர்ச்சிபோல இருந்து பொய் படுத்திய கனவு. வாய் அல் - உண்மையல்லாத. ஏற்று - துயிலேற்று. துயிலேற்றமையின் கனவு பொய்யாயிற்று.

(மே - ள்.) 1'கானைத்தி லமைத்து' என்னும் குத்திரத்து 'சென்ற நேளத்து முழுப்புகலி விளக்கி, இன்றிச் சென்ற நங்கி ளெப்பிலும்' என்னும் பகுதியில், இச் செய்யுளைக் காட்டி, இதனு 'வறுங்கை காட்டிய வாயல் கணவன்' என நனவின்றிச் சென் வற்றைத் தலைவன் கூறியவாறு காண்க என்றார் நச்சினார்க்கினியர்

2'கனவு முரித்தா லவ்விடத் தான' என்னும் சூத்திரத்து, காம இடையீடுபட்டுழித் தலைவனும் தலைவியும் கனாக் காண்டலும் உரித் எனக்கூறித் தலைவன் கனாக் கண்டற்கு இச் செய்யுளை எடுத்து காட்டினார் இளம்பூரணர்

---

40. நெய்தல்

[தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவழிக் கிழத்தி தோழிக்கு சொல்லியது.]

கானல் மாலைக் கழிப்பூக் கூம்ப
நீனிறப் பெருங்கடல் பாடெழுந் தொலிப்ப
மீனார் குருகின் மென்பறைத் தொழுதி
குவையிரும் புன்னைக் குடம்பை சேர
ரு அசைவண் டார்க்கும் அல்குறு காலைத்
தாழை தளரத் தூங்கு மாலை
அழிதக வந்த கொண்டலொடு கழிபடர்க்
காமர் நெஞ்சம் கையறு பிணையத்
துயரஞ் செய்துநம் அருளா ராயினும்
கo அரு அ லியரோ அவருடைக் கேண்மை
அளியின் மையின் அவணுறை[1] முனைஇ
வாரற்க தில்ல தோழி கழனி
வெண்ணெல் அரிநர் பின்றைத் ததும்புந்
தண்ணுமை வெரீஇய தடந்நாள் நாரை
கரு செறிமடை வயிரிற் பிளிற்றிப் பெண்ணை
அகமடற் சேக்குந் துறைவன்
இன்றுயின் மார்பிற் சென்றனள் நெஞ்சே.

—குன்றியனார்

(சொ - ள்.) கஉ. தோழி-.

க—கூ. கானல் மாலைக் கழிப்பூக் கூம்ப - கடற்கரைச் சோலையை அடுத்த கழியில் வரிசையாகவுள்ள பூக்கள் குவியவு நீல் நிறப் பெருங்கடல் பாடு எழுந்து ஒலிப்ப - நீல நிறத்தையுடை பெரிய கடல் ஒலிமிக்கு ஒலிக்கவும், மீன் ஆர் குருகின் மெ

---

1. தொல். கற்பு. டு. 2. தொல. பொருளியல். கூ. (பாடம்) 3. தா
4. அவணுறைவு.

பறைத் தொழுதி - மீனை யுண்ணும் மெல்லிய சிறகினையுடைய பறவைக் கூட்டம், குவை இரும் புன்னைக் குடம்பை சேர - திரட்சி பொருந்திய பெரிய புன்னை மரத்திலுள்ள கூடுகளிற் சேரவும், அசைவண்டு ஆர்க்கும் - அசைகின்ற வண்டுகள் ஒலிக்கும், அல்குறு காலை - எல்லாம் தம் பதிகளிலே சென்று தங்குங் காலமாகிய, மாலை - மாலைப் பொழுதிலே, தாழை தளரத் தூங்கி - தாழைகள் தளர்ந்திட அசைந்து, அழிதக வந்த கொண்டலொடு - (பிரிந்திருப்பார்) வருந்த வந்த மேற்காற்றினால், கழி படர்க் காமர் நெஞ்சம் கையறுபு இனைய - மிக்க துன்பங் கொண்ட அழகிய நெஞ்சம் செயலற்று வருந்த, துயரஞ் செய்து நம் அருளாராயினும் - நமக்குப் பிரிதற் றுன்பினைச் செய்து (மீண்டு வந்து) நம்மை அருளாராயினும்,

கo. அருளியர் அவருடைக் கேண்மை - அவரது நட்பு நமக்கு ஒழியாதிருப்பதாக;

கக—எ. கழனி வெண் நெல் அரிநர் பின்றைத் ததும்பும் - வயல்களில் வெண்ணெல்லை அரிவோரது பின்பு நின்றொலிக்கும், தன்னுமை வெரீஇய தடந் தாள் நாரை-பறை ஒலியினைக் கேட்டஞ்சிய நீண்ட கால்களையுடைய நாரை, செறிமடை வயிறிற் பிளிற்றி - செறிந்த மூட்டு வாயினையுடைய கொம்புபோல் ஒலித்து, பெண்ணை அகமடல் சேக்கும் துறைவன் - பனைமரத்தின் மடலகத்தே தங்கும் கடற்றுறையுடைய தலைவனது, இன்துயில் மார்பில் சென்ற என் நெஞ்சு - இனிய துயிற்குரிய மார்பின் பொருட்டுச் சென்ற என் நெஞ்சு, அளியின்மையின் அவன் உறை முனை இ - அவர் அளி செய் நிலரென்று அங்கே தங்குதலை வெறுத்து, வாரற்க தில்ல - இங்கு வாராதிருப்பதாக.

(முடிபு) தோழி! மாலைக் கொண்டலால் நெஞ்சம் இனைய, (தலைவர்) துயரஞ் செய்து அருளாராயினும் அவருடைக் கேண்மை அருளியர்; துறைவன் மார்பிற் சென்ற என் நெஞ்சு வாரற்க.

கூம்ப, ஒலிப்ப, சேர, ஆர்க்கும் காலையாய மாலை எனவும், தூங்கி வந்த கொண்டல் எனவும் இயையும்.

(வி - ரை.) நீல், கடைக்குறை. அசை வண்டு-நீர்ப்பூக்களிலும் கோட்டுப் பூக்களிலும் தடுமாறுகின்ற வண்டு. நம் - நம்மை, உறை-உறைதல்; முதனிலைத் தொழிற்பெயர். வாரற்க என்றது இங்கு வந்தால் என்னொடு கிடந்து துயருறு மென்றவாறு. தில் - விழைவு; அசையுமாம்.

(உ - றை.) 'வெண்ணல் அரிநர் தங் காரியஞ் செய்யப் பறை கொட்டுவிக்க, நாரை வேற்று நிலத்ததாகிய பெண்ணையிலே சென்று தங்கித் தான் வாழுமிடமாகிய மருத நிலத்தை மறந்தாற்போலத் தங்காரியஞ் செய்ய நம்மைப் பிரிவார் இல்லைப் பிரிந்த வழி நம்முடைய நெஞ்சு நம்மைவிட்டுத் தனக்கு அந்நியமாகிய அவர் மார்பிலே சென்றது என்றவாறு' என்பது குறிப்புரை.

(மே - ள்.) 1"முதல்கரு வரிப்பொருள்" என்னுஞ் சூத்திரத்து, நெய்தற்கு முதலும் கருவும் உரியும் வந்ததற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டினர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும்.

2"வைகுறு விடியல்" என்னுஞ் சூத்திரத்து, நெய்தற்கு மாலையும் வந்தமைக்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டினர், நச்சினார்க்கினியர்.

(41.) பாலை

[தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவிடத்துக் கிழத்தியை நினைந்து சொல்லியது.]

க வைகுபுலர் விடியல் மைபுலம் பரப்பக்
கருநனை அவிழ்ந்த ஊழுறு முருக்கின்
எரிமருள் பூஞ்சினை இகைச்சிதர் ஆர்ப்ப
நெடுநெல் அடைச்சிய கழனியேர் புகுத்துக்
ங குடுமிக் கட்டிய படப்பையொடு மிளிர
அரிகால் போழ்ந்த நெரிபகட் டுழவர்
ஓதைத் தெள்விளி புலந்தொறும் பரப்பக்
கோழினர் எறிந்த மரத்த கவினிக்
காடனி கொண்ட காண்டகு பொழுதின்
கo நாம்பிரி புலம்பின் நலஞ் செலச் சா அய்
நம்பிரி பறியா நலனெடு சிறந்த
நற்றேர்ள் நெகிழ வருந்தினள் கொல்லோ
மென்சிறை வண்டின் தண்கமழ் பூந்துணர்
தாதின் துவலை தளிர்வார்ந்த தன்ன
கஉ அங்கழும் மாமை கிளைஇய
நுண்பல் நித்தி மாஅ யோளே.

—[3]குன்றியனார்.

(சொ - ள்.) கங—சு. மென்சிறை வண்டின் - மெல்லிய சிற கினையுடைய வண்டுகளினையுடைய, தண்கமழ் பூந்துணர்-குளிர்ச்சியை யுடைய மணக்கும் பூங்கொத்துக்களிலுள்ள, தாதின் துவலை - தாதுடன் கூடிய தேன்றுளி, தளிர் வார்ந்தன்ன - தளிரில் ஒழுகியது போலும், அம் கழும் மாமை கிளைஇய - அழகு ஒழுகும் மாமை நிறத்தில் கிளைத்துத் தோன்றும், நுண்பல் நித்தி - சிறிய பல தேமற் புள்ளிகளினையுடைய, மாயோள் - நம் கிழத்தி,

க—கூ. வைகு புலர் விடியல் - தங்கிய இருள் புலர்ந்திடும் விடியற்காலத்தில், மை புலம் பரப்ப - எருமைகள் நிலத்தே பரந்து செல்ல, முருக்கின் கருனை அவிழ்ந்த - முருக்க மரத்தின் பெரிய அரும்புகள் முறுக்கு நெகிழ்ந்த, எரி மருள் ஊழ் உறு பூஞ்சினை -

---

1. தொல், அகத். கூ. 2. தொல். அகத். அ. (பாடம்) 3. சாரமானக்கையர்.

நெருப்பை ஒத்த மலர்ந்த பூக்களையுடைய கிளைகளில், இனச் சிதர் ஆர்ப்ப - கூட்டமாய வண்டுகள் ஒலிக்க, நெடு நெல் அடைச்சிய கழனி ஏர் - நெடிய நெற்பயிரினை நட்ட கழனியிலுள்ள ஏர்களை, குடுமிக் கட்டிய படப்பையொடு புகுத்து - தலைகுவிந்த கட்டிகளையுடைய தோட்டத்தில் சேர்த்து, மிளிர-மண் பிறழும்படி, அரிகால் போழ்ந்த - அரிதாளையுடைய நிலத்தைப் பிளந்து உழுத, தெரி பகட்டு உழவர் - ஆராய்ந்த எருதுகளைக் கொண்ட உழவர்களது, ஓதைத் தெளிவிளி - ஏர் ஓட்டும் ஓசையாகிய தெளிந்த ஒலி, புலந் தொறும் பரப்ப - இடந்தோறும் பரக்க, கவினிக் கோழ் இணர் எரி நிய மரத்த - அழகுற்றுச் செழிய பூங்கொத்துக்களை தோன்றிய மரங் களையுடைய, காடு அணி கொண்ட - காடு அழகுபெற்ற, காண்தகு பொழுதில் - காட்சி பொருந்திய இக் காலத்தில்,

கo—உ. நம் பிரிவு அறியா நலனெடு சிறந்த நற்றோள் - நம் பிரிவு என்பதே அறியாமல் இயற்கை யழகினோடுகூடி மிகச் சிறப் புற்றிருந்த தனது நல்ல தோள்கள், நாம் பிரி புலம்பின் - இப்போது நாம் பிரிந்திட்ட தனிமையால், நலம் செலச் சாஅய் நெகிழ - அவ் வியற்கை யழகு கெட மிகவும் மெலிந்து நெகிழ்ந்திடலால், வருந்தினள் கொல்லோ - வருந்தினளோ.

(முடிபு) மாயோளாகிய நம் மெழுத்தி, காடனி கொண்ட காண்டகு பொழுதில், தனது நற்றோள் நலஞ்செலச் சாஅய் நெகிழ வருந்தினள் கொல்லோ.

உபுலம் பரப்ப, நெல் ஆர்ப்ப, தெள்விளி பரப்ப, காடனி கொண்டபொழுது என்க.

(வி - ரை.) விடியலும் எருமையும் பாலைக்கண் மயங்கி வந்தன. படப்பையொடு - படப்பையில். அரிகால் - புன்செய்ப் பயிர்களை அரிந்த தாள்.

(மே - ள்.) [1]'ஒன்றுத் தமரினும்' என்னுஞ் சூத்திரத்து, இச் யுள் 'பகைவயிற் பிரியும் தலைமகன் கூற்று' எனவும், ... 'இவ் வாறு வருவன குறித்த பருவம் பிழைத்துழி என்று கொள்ள' எனவும் கூறினர் இளம்பூரணம்

---

(42) குறிஞ்சி

[தலைமகன் வரைவு மலிந்தமை தோழி தலைமகட்குச் சொல்லியது.]

மலிபெயர் கலித்த மாரிப் பித்திகத்துக்
கொயலரு நிலைய[3] பெயலேர் மனைமுகைச்
செவ்வெரி நுறழுங் கொழுங்கடை மழைக்கண்
தளிரேர் மேனி மாஅ யோயே

ரு நாடுவறங் கூர நாஞ்சில் துஞ்சக்
கோடை நீடிய பைதறு காலைக்

---

1. தொல். அகத். சூ. (பாடம்) 2. நிலைய.

சுரம்

குன்றுகண் டுள்ள கோட்ட யாவையுஞ்
சென்றுசெக் கல்லாப்[1] புள்ள உள்ளில்
என்றாழ் வியன்குளம் நிறைய வீசிப்
பெரும்பெயல் பொழிந்த ஏம வைகறைப்
பல்லோ ருவந்த உவகை எல்லாம்
என்னுட் பெய்தந் தற்றே சேணிடை
ஓங்கித் தோன்று முயர்வரை
வான்தோய் வெற்பன் வந்த மாறே.

—கபிலர்.

(சொ - ள்.) க—ச. மலிபெயல் கலித்த - மிக்க பெயலாலே தழைத்த, மாரிப் பித்திகத்து - மாரிக்காலத்துப் பூப்பதாய பித்திகத் தின், கொயல் அரும் நிகுய - மிகுதியால் கொய்தல் இயலா நிகு மையையுடைய, பெயல் ஏர் மண முகை - மழைக்கு எழுச்சி பெற்ற மணம் தங்கிய அரும்பின், செவ் வெரிந் உறழும் - சிவந்த பின் புறத்தை ஒக்கும், கொழுங்கடை மழைக்கண் - வளைய கடையிலை யுடைய குளிர்ந்த கண்ணிலையும், தளிர் ஏர் மேனி - தளிரை யொத்த அழகிய மேனியையும் உடைய, மாஅயோயே - மாமை நிறத்தை யுடையவளே!

கஉ—ச. சேண் இடை ஓங்கித் தோன்றும் - நெடுந்தூரத்தே உயர்ந்து தோன்றும், உயர்வரை - உயர்ந்த பக்கமலைகளையுடைய வான்தோய் வெற்பன் - வானளாவிய பெருமலையை யுடைய தலை வன், வந்த மாறே - வரைவு மலிந்து வந்தமையானே (அது கண்ட என் மகிழ்ச்சி).

டு—கூ. நாடுவறங்கூர நாஞ்சில் துஞ்ச - மழை பெய்யாமை யால் நாட்டில் வறுமைமிகக் கலப்பை தொழிலற்று ஒழிய, கோடை நீடிய பைது அறுகாலை - கோடை நீண்ட பசுமையற்ற காலத்தே,

எ—கூ. குன்று கண்டன்ன கோட்ட - குன்றங்களைக் கண்டாற் போலும் பெரிய கரைகளையுடையனவும், சென்று சேக்கல்லாப் புள்ள - நீரின்மையின் பறவைகள் வந்து தங்குதலில்லாதனவும், உள்இல் என்றாழ் வியன் குளம் யாவையும் - உள்ளே நீர் இல்லா தனவும் வெப்பம் மிக்கனவுமாகிய பெரிய குளங்களெல்லாம்,

கூ—கஉ. நிறைய வீசிப் பெரும் பெயல் பொழிந்த - நிறையும் படி உதவிப் பெரிய மழை பொழிந்து விட்ட, ஏம வைகறை - இன் பம் மிக்க விடியற்காலத்தே, பல்லோர் உவந்த உவகை யெல்லாம் அதனைக் கண்ட பல்லோரும் மகிழ்ந்த மகிழ்ச்சியை யெல்லாம், என்னுட் பெய்தந் தற்றே - ஒரு சேர என்னுள்ளே பெய்து வைத் தாற் போலும்.

(முடிபு) மாயோய்! வெற்பன் வந்த மாறே, (என் மகிழ்ச்சி) பெறும் பெயல் பொழிந்த ஏம வைகறை, பல்லோர் உவந்த உவகை யெல்லாம் என்னுட் பெய்தந்தற்று.

---

1. சேக்கல்லா.

(வி - ரை.) பித்திகம், மாரிக்காலத்தே தழைத்து அக் காலத்து அந்தியில் மலர்வது; அதன் மலரின் புறம் சிவப்பாயிருத்தலின் செவ்வரி படர்ந்த கண்ணிற்கு உவமை: இதுவே பிச்சி என்று வழங்கப் பெறுவது. நின் மழைக்கண்ணும் தளிர் மேனியும் வேறுபட்டு வருந்தாமல் வரைவொடு வந்தார் என்பது குறிக்கத் தோழி தலைவியை அங்ஙனம் விளித்தனள். வந்தமையால் எழுந்த மகிழ்ச்சி என எழுவாய் வருவித்து முடிக்கப்பட்டது.

சென்று சேக்கல்லாப் புள்ள - சென்று தங்காத பறவைகளையுடைய: பறவைகள் சென்று தங்காத என்றபடி; இது கேடில்லாதவன் என்பதனை, இல்லாத கேட்டையுடையவன் என்பது போல நின்றது. [1]''அருங்கேடன்' என்பதனைச் 'சென்று சேக்கல்லாப் புள்ள வுள்ளில் - என்றாழ் வியன்குளம் 'என்பதுபோலக் கொள்க'' எனப் பரிமேலழகர் உரைத்ததுங் காண்க. சேக்கல் - தங்கல். கோட்ட, புள்ள, குளம் என்க. வரை - மூங்கிலுமாம். மாறு: மூன்றும் வேற்றுமைப் பொருள் படுவதோர் இடைச் சொல்; [2]'அனையை யாகன் மாறே' என்பதுபோல.

---

(43) பாலை

[தலைமகன் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது.]

கடல்முகந்து கொண்ட கமஞ்சூல் மாமழை
சுடர்நிமிர் மின்னெடு வலனேர் பிரங்கி
என்றாழ் உழந்த புன்றலை மடப்பிடி
கைமாய் நீத்தங் களிற்றெருடு படீஇய
நிலனும் விசும்பும் நீரியைந் தொன்றிக்
குறுநீர்க் கன்னல் என்னுநர் அல்லது
கறிமருங் கறியா தஞ்சுவரப் பாஅய்த்
தளிமயங் கின்றே [3]தண்குரல் எழிலி, யாமே,
கொய்யகை முல்லை காலொடு மயங்கி
மையிருங் கான நாறு நறுநுதற்
பல்லிருங் கூந்தல் மெல்லியல் மடந்தை
நல்லெழில் ஆகந் சேர்ந்தனம் என்றும்
அளியதோ வளியர் தூமே அளியின்
றேறில் பொருட்பிணிப் போதித்தம்
இன்றுகண் பிரியும் மடமை யோரே.

—முதுவரையாசிரியர் நல்லந்துவனார்.

(சொ - ள்.) க—அ. தண் குரல் எழிலி - தண்ணிய முழக்கத்தைக் கொண்ட மேகங்கள் பெய்யும் கார்காலமானது. கடல் முகந்து கொண்ட கமஞ்சூல் மாமழை - கடலின் நீரை முகந்து

---

1 குறள் உகo. 2. புறம்.ச. (பாடம்) 3. இன்குரல்.

நிறைந்த சூலினையுடைய கரிய மேகம், கடல் நீரை மின்னெடு வலம் ஏர்பு இரங்கி - ஒளி மிக்க மின்னலுடன் வலமாக எழுந்துசென்று ஒலித்து, எல்லாரும் உழந்த புன்றலை மடப்பிடி - ஞாயிற்றின் வெம்மையால் வருந்திய புற்கென்ற தலையினையுடைய இளைய பெண் யானை, கைமாய் நீத்தம் களிற்றொடு படீஇய - மேலே உயர்த்திய தன் கையும் மறையத்தக்க ஆழ்ந்த வெள்ளத்தில் களிற்றுடன் படிந்து விளையாட, நிலனும் விசும்பும் நீர் இயைந்து ஒன்றி - நிலத்தினும் வானினும் மழைக்கால் நீர் பொருந்திச் சேர்ந்திட, குறுநீர்க் கல்வல் எண்ணுநர் அல்லது - குறிய நிரையுடைய நாழிகை வட்டில்லால் நாழிகை அளந்து கூறுவார் கூறலன்றி, கதிர் மருங்கு அறியாது அஞ்சுவர - ஞாயிறு உள்ள இடம் இதுவென அறியப்படாமையின் உலகம் அஞ்சுதலையுடைய, பாஅய் தளி மயங்கின்று - எங்கும் பரந்து பெய்யும் மழையொடு பொருந்தியது;

அ—கஉ. யாமே - நாம், கொய் அகை மூலிலை காலொடு மயங்கி - கொய்யப்படும் தழைத்த மூலிலை காற்றால் மயங்குதலின், மை யிருங் கானம் நாறும் நறு நுதல் - கரிய பெரிய காடு நாறுவதென்ன நாறும் நறிய நுதலினையும், பல்இருங்கூந்தல் - பல வகை முடி சான்ற கரிய கூந்தலினையும், மெல்லியல் - மென்மைத் தன்மையினையும் உடைய, மடந்தை நல் எழில் ஆகம் சேர்ந்தனம் - நம் தலைவியின் நல்ல அழகுடைய ஆகத்தினைப் பிரியாதிருக்கின்றோம்;

கஉ—ரு. அளி இன்று - இரக்கம் இன்றி, ஏதில் பொருட் பிணிப்போகி - அயலதாகிய பொருளிட்டும் பற்றுக்கொண்டு பிரிந்து சென்று, தம் இன்துணைப் பிரியும் மடமையோர் - தமது இனிய துணைவியைப் பிரியும் மடமையையுடையோர், என்றும் அளியரோ அளியர் - எஞ்ஞான்றும் மிகவும் இரங்கத்தக்கார்.

(முடிபு) எழிலி, மழை ஏர்பு இரங்கிப் பாஅய்ப் (பெய்யும்) தளியொடு மயங்கின்று; யாம் மடந்தை ஆகம் சேர்ந்தனம்; துணைப் பிரியும் மடமையோர் அளியரோ அளியர்.

(வி - ரை.) பெய்யும் தளி யென ஒரு சொல் வருவித்துரைக்க. ஒன்று, அஞ்சுவர என்னும் செயவெ னெச்சங்கள் பெய்யும் என வருவித்த பெயரெச்ச வினைகொண்டு முடியும். மழை - மேகம். கைமாய்நீத்தம்: கை - நீர் ஆழம் காட்டுவார் கையுமாம். ஒன்றி - ஒன்ற எனத் திரிக்க. கல்வல் - நாழிகை வட்டில்; நாழிகையுமாம். தளி - மழை. தண் குரல் எழிலி என்பது ஆகுபெயரால் கார்காலத்தை யுணர்த்திற்று. கொய் மூலிலை, அகை மூலிலை என்க. அகைத்தல் - தழைத்தல்; இலைத்தலுமாம். காலொடு - காலால். மயங்குதல் - நெருங்குதல். அளியரோ அளியர் என்னும் அடுக்கு மிகுதி பற்றியது. கழைமாய் என்பது பாடமாயின் ஓடக் கோல் மறையும் நீத்தம் என்க.

(44) முல்லை

[வினை முற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

வந்துவினை முடித்தனன் வேந்தனும் பகைவரும்
தந்நிறை கொடுத்துத் தமரா யினரே
முரண்செறிந் திருந்த தானை இரண்டும்
ஒன்றென [1] அறைந்தன பணையே நின்தேர்
முன்னியங் கூற்றி பின்னிலை யியாது
ஊர்க பாக ஒருவினை கழிய
நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி
துன்னரும் கடுந்திறற் கங்கள் கட்டி
பொன்னணி வல்வில் புன்றுறை யென்றும்
கன்றவர் குழீஇய அளப்பருங் கட்டுப்பு
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டது நோலுள் ஆகித் தண்டேர்க்
கானையல் அகப்படக் கழுமலந் தந்த
பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி
அழும்பில் அன்ன அரு அயாணர்ப்
பழம்பல் நெல்லின் பல்குடிப் பரவைப்
பொங்குடி படிகயம் மண்டிய பசுமிளைக்
தன்குடவாயில் அள்ளேள்
பன்புடை ஆகுந் தின்துயில் பெறவே.

—[2]குடவாயிற் கீரத்தனார்.

(சொ - ள்.) க—ச. வேந்தனும் வந்து வினை முடித்தனன் - நம் அரசனும் போர் முனையி லெய்தி வினையை வெற்றியுற ஆக்கினன். பகைவரும் தம் நிறை கொடுத்துத் தமர் ஆயினர் - பகைவரும் தாம் கொடுக்கக் கடவ நிறையைக் கொடுத்து நம் அரசனுக்குச் சுற்றமாயினர், முரண் செறிந்திருந்த தானை யிரண்டும்-முன்பு மாறுபாடு மிக்கிருந்த இரு சேனைகளும், ஒன்றென - ஒரே சேனையாக, பணை அறைந்தன - முரசறையப்பட்டன;

கக. பழையன் - பழையன் என்பான்,

எ—கக. நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி - நன்னனும் ஏற்றையும் நல்ல பூணினை யணிந்த கந்தியும், துன் அரும் கடுந் திறல் கங்கன் கட்டி - பகைவர் நெருங்கற்கரிய மிக்க வலி பொருந்திய கங்கனும் கட்டியும், வல்வில் பொன் அணி புன்றுறை - வலிய வில்லினையுடைய பொன்னணி யணிந்த புன்றுறையும், என்று அவர் - என்று கூறப்பட்ட அவர்கள், அன்று குழீஇய - முன்பு கூடிப் பொருதற்கு நின்ற, அளப்பு அரும் கட்டூர் - அளத்தற்கரிய மிறப்பு வாய்ந்த

(பாடம்.) 1. ஒர்ந்தன படையே. 2. உறையூர்ச் சல்லியங் குமரனார்.

பாசறைக்கண்ணே பருந்துபடப் பண்ணி - பருந்து சுற்றும்படி போர் செய்து, பட்டென - பின்பு இறந்தானது.

கஉ—ச. கண்டு அது தோனன் ஆகி - அதனைக் கண்டு பொருகுறி, தின் தேர்க் கணையன் அகப்பட - வலிய தேரினையுடைய கணையன் உட்பட, கழுமலம் தந்த - கழுமலம் என்னும் ஊரைக் கைப்பற்றிய, பிணையல் அம் கண்ணிப் பெரும்பூண் சென்னி - கட்டிய கண்ணியினையுடைய பெரும்பூட் சென்னி என்பானது.

கடு—க. அழும்பில் அன்ன - அழும்பில் என்னும் ஊரினையொத்த, அருவ யாணர் - நீங்காத புது வருவாயை யுடையதும், பழம் பல் நெல்லின் பல் குடிப் பரவை - மிக்க பழைய நெல்லினையுடைய பல குடிப் பரப்பினை உடையதும், பொங்கடி படிகயம் மண்டிய பசுமிளை - யானை படியும் குளத்தினையும் நெருங்கிய காவற் காடுகளையும் உடையதுமாகிய, தண்குடவாயில் அன்ன - குளிர்ந்த குடவாயில் என்னும் ஊரை ஒத்த சிறப்பினளாகிய நம் தலைவி யது, பண்புடை ஆகத்து இன்துயில் பெறவே - நற்பண்பினையுடைய ஆகத்தின்கண்ணே இனிய துயிலைப் பெறுதற்கு.

ச—சு. பாக - பாகனே, முன் இயங்கு ஊர்தி நின்தேர் - முற்பட்டுச் செல்லும் நின் தேராகிய ஊர்தியினை, பின்னிலை யியாது - இனிப் பின்னில்லாதபடி, கழிய - இச் சுரத்தை நாம் கழிய, ஒருவினை ஊர்க - மீண்ட தேர்களை நீங்கினையாய் விரைந்து செலுத்துவாயாக.

(முடிபு) பாக ! வேந்தனும் வினைமுடித்தனன்; பகைவரும் தமரையினர்; தானை இரண்டும் ஒன்றெனப் பிணை அறைந்தன; சென்னியின் குடவாயிலன்னோன் ஆகத்து இன்றுயில் பெற நின் தேரினைப் பின்னிலை யியாது ஒருவினை கழிய ஊர்க.

(வி - ரை.) பின்னிலை யியாது - பின்னிற்றல் செய்யாது; வினைத்திரிசொல். நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை என்போர் சேரன் படைத் தலைவர்கள். என்று அவர் - என்று கூறப்பட்ட அவர் என விரித்துரைக்க. ஆங்கு, அசை. கட்டூர் - பாசறை. பழையன் - சோழன் பெரும்பூட் சென்னியின் படைத் தலைவன். கணையன் - சேரன் படை முதலி, தலைமைப் படைத் தலைவன். பிணையலங் கண்ணி - அல் அம், சாரியைகள். கழுமலம் - சேர நாட்டகத்தோர் ஊர். அழும்பில் - பாண்டிய நாட்டூர் என்பர். பரவை - பரப்பு. பொங்கடி - யானை; யாவற்றினும் பெரிய அடியினை யுடையது. பண்புடை யாகம்: பண்பாவது கற்புடைமையான் ஆற்றி யிருத்தல். தலைவியின் பண்பு ஆகத்தின்மேல் ஏற்றிக் கூறப்பட்டது.

'வந்து வினை முடித்தனன் வேந்தனும்' என்றமையின் வேந்தற்கு உற்றுழிச் சென்ற தலைவனுதல் பெற்றும்.

(மே - ள்.) [1]'கரணத்தி னமைந்து' என்னுஞ் சூத்திரத்து பேரிசையூர்திப் பாங்கினும்' தலைவன் கூற்று நிகழ்வதற்கு இதனை எடுத்துக் காட்டினர் நச்சினார்க்கினியர்

1. தொல். கற்பு. ரு.



(45) பாலை

[வற்புறுக்குந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

வாடல் உழிஞ்சில் விளைநெற் றந்துணர்
ஆடுகளப் பறையின் அரிப்பன வொலிப்பக்
கோடை நீடிய அகன்பெருங் குன்றத்து
நீரிலார் ஆற்று நிவப்பன களிறட்
டுடாளில் அந்தத் துழுவை உகளும் புலி
காடிறந் தனரே காதலர் மாமை
அரிநுண் பசலை பாஅய்ப் பீரத்
தெழில்மலர் புரைதல் வேண்டும் அலரே
அன்னி குறுக்கைப் பறந்தலைத் திதியன்
கொன்னிலை முழுமுதல் தமியப் பண்ணிப்
புன்னை குறைத்த ஞான்றை வயிரியர்
இன்னிசை யார்ப்பினும் பெரிதே யானே
காதலற் கெடுந்த நிறுமையொடு நோய்கூர்ந்
தாறி மந்தி போலப் பேதுற்று
அலந்தனென் உழல்வென் கொல்லோ பொலந்தார்க்
கடல்கால் நிளர்ந்த வென்றி நல்வேல்
வான வரம்பன் அடன்முனைக் கலங்கிய
உடைமதில் ஓரரண் போல
அஞ்சுவரு நோயொடு துஞ்சா தேனே.

—வெள்ளி வீதியார்.

(சொ - ள்) க—சு. (தோழியே!) காதலர் - நம் காதலர், வாடல் உழிஞ்சில் விளைநெற்று அம் துணர் - நீர்வற்றிய வாகையின் முதிர்ந்த நெற்றுக்களைக் கொண்ட கொத்து, ஆடு களப் பறையின் அரிப்பன ஒலிப்ப - கூத்தர் ஆடுங் களத்தில் ஒலிக்கும் பறையைப் போல விட்டு விட்டு ஒலித்திட, கோடை நீடிய அகன் பெருங் குன்றத்து-கோடைத் தன்மை மிக்க அகன்ற பெரிய குன்றினிடத்தே, நீரில் ஆர் ஆற்று - நீரில்லாத அரிய சுரநெறியில், நிவப்பன களிறு அட்டு-ஓங்கின களிற்றினைக் கொன்று, ஆள்இல் அத்தத்து உழுவை உகளும்-மக்கள் இயங்குதல் அற்ற சுரத்தே புலி திரிவதாகிய, காடு இறந்தனரே - காட்டினைக் கடந்து சென்றனரே.

சு—அ. மாமை அரி நுண் பசலை பாஅய் - எனது மாமை நிறமானது ஐதாய நுண்ணிய பசலை பரத்தலால், பீரத்து எழில் மலர் புரைதல் வேண்டும்-பீர்க்கின் அழகிய மலரை ஒப்பதாகும்:

அ—கஉ. அலரே - ஊரில் எழும் அலரானது, அன்னி - அன்னி என்பான், குறுக்கைப் பறந்தலை-குறுக்கைப் போர்க்களத்தில், திதியன் - திதியன் என்பானது, கொன்னிலைப் புன்னை முழுமுதல்-பழையதாகிய நிலையையுடைய புன்னை மரத்தின் பெரிய அடியை, தமியப் பண்ணிக் குறைத்த ஞான்றை - வெட்டித் துண்டித்த காலத்தே,

வயிரியர் இன்னிசை ஆர்ப்பினும் பெரிதே - கூத்தர் எடுத்த இன்னிசைப் புகழ் முழக்கத்தினும் பெரிதாகும் :

கஉ—ஙo. யான் - நான், பொலம் தார் கடல் கால் கிளர்ந்த வென்றி - பொன்னரி மாலையினையும் கடலிடத்தினைப் புடைபெயரச் செய்த வென்றியினையும், நல்வேல் - நல்ல வேலினையுமுடைய, வான வரம்பன் - வான வரம்பனது, அடல் முனைக் கலங்கிய - வலிபொருந்திய போர்முனையிற் கலங்கிய, உடைமதில் ஓர் அரண்போல - உடைமதிலாகிய ஒரு அரணைப்போல, அஞ்சுவரு நோயொடு துஞ்சாதேன் - அச்சம் பொருந்திய வருத்தத்தால் துயிலேனாகி, ஆதிமந்திபோல - ஆதிமந்தியைப்போல, காதலற் கெடுத்த சிறுமையொடு - காதலனைக் காணுதொழிந்த சிறுமையால், நோய் கூர்ந்து - மிக்க வருத்தமுற்று, அலந்தனென் உழல்வென் கொல்லோ - துன்புற்றுத் தேடித் திரிவேனோ.

(முடிபு) காதலர் காடிறந்தனர்; மாமை மலர் புரையும்; அலர், குறுக்கைப் பறந்தலை ஆர்ப்பினும் பெரிது; யான் அஞ்சுவரு நோயொடு துஞ்சாதேனாய், ஆதிமந்திபோலக் காதலற் கெடுத்த சிறுமையொடு அலந்து உழல்வேனோ.

(வி - ரை.) உழிஞ்சில் - வாகை. நெற்றந்துணர் : அம், அசை. வாகை நெற்றுக் கழைக் கூத்தரது பறைபோல ஒலிக்கும் என்னும் கருத்து, [1]ஆரியர், கயிறுடு பறையிற் கால்பொரக் கலங்கி, வாகை வெண்ணெற் றெரூலிக்கும்' எனக் குறுந்தொகையுள்ளும், 'உழிஞ்சில், தாறுசினை விளைந்த நெற்ற மாடுமகள், அரிக்கோற் பறையினையென வொலிக்கும்' (கூo4) என இந்நூலுள்ளும் வருதல் காண்க. உசளல் - சண்டுந் திரிதல். பிரந்து : அத்து, சாரியை. வேண்டும் என்பது படும் என்றதுபோல் நின்றது. ஆதிமந்தி காதலற் பிரிந்து அவனைத் தேடி யுழந்தமை, இதனாலும், பொருநனைக் காண்டிரோவென, ஆதிமந்தி பேதுற்றினைய' (எக) எனவும், 'ஆட்டனத்தியைக் காணீ ரோவென.....காதலற் கெடுத்த, ஆதிமந்தி போல்' (உகக) எனவும் இந் நூலுட் பின் வருவனவற்றாலும், [2]'மள்ளர் குழீஇய' என்னும் குறுந்தொகைச் செய்யுளாலும் பெறப்படும். ஆதிமந்திபோல என்னும் உவமையால், வேள்ளி வீதியும் கணவனைக் கெடுத்துத் தேடி யுழந்தமை பெற்றும் : அது 'வெள்ளி வீதியைப்போல நன்றுஞ் செலவயர்ந் திசினே யானே' (கசஎ) என்னும் இந்நூற் செய்யுளானும், [3]'கன்றுமுண்ணுது' என்னும் குறுந்தொகைச் செய்யுளானும் பெறப்படுதலுங் காண்க.

---

(46) மருதம்

[வாயில் வேண்டிச் சென்ற தலைமகற்குத் தோழி வாயில் மறுத்தது.

சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்
ஊர்மடி கங்குலின் தோன்றலை பரிந்து
கூர்முள் வேலி கோட்டின் நீக்கி
நீர்முதிர் பழனத்து மீனுடன் இரியப்

---

1. குறுந். எ. 2. குறுந். கக. 3. குறுந். உஎ.

அந்தூம்பு வள்கோ மயக்கித் தாமரை
வண்டுது பனிமலர் ஆரும் ஊர!
யாரை யோநிற் புலக்கேம் வாருற்று
உரையிறந் தொளிருந் தாழிருங் கூந்தல்
பிறரும் [1]ஒருத்தியை நம்மனைத் தந்து
வதுவை அயர்ந்தனை யென்ப அஃதியாங்
கூறேம் வாழியர் எந்தை செறுநர்
களிறுடை அருஞ்சமந் தகைய நாறும்
ஒளிறுவாள் நாகைக் கொற்றச் செழியன்[2]
பிண்ட நெல்லின் அள்ளூ ரன்னாள்
ஒண்தொடி நெகிழினும் நெகிழ்க
சென்றி பெருமநின் தகைக்குநர் யாரோ.

—அள்ளூர் நன்முல்லையார்.

(சொ - ள்.) க—சு. சேற்றுநிலை முனை இய செங்கண் காரான் - சேற்றில் நிற்றலை வெறுத்த சிவந்த கண்ணினையுடைய எருமை, ஊர்மடி கங்குலின் - ஊரார் துயின்ற இருளில், நோன் தலை பரிந்து - தனது வலிய தலையை அறுத்துக்கொண்டு, கூர்முள் வேலி கோட்டின் நீக்கி - கூரிய முள் வேலியைத் தனது கொம்பினால் அகற்றிவிட்டு, நீர்முதிர் பழனத்து - நீர்மிக்க வயலில், மீன் உடன் இரிய - மீன்கள் எல்லாம் ஓட, அம் தூம்பு வள்கோ மயக்கி - அழகிய உட்டுளையையுடைய வள்கொக் கொடியை மயங்கச்செய்து, தாமரை வண்டு ஊது பனிமலர் ஆரும் ஊர — வண்டுகள் உள்ளிருந்து ஊதும் தாமரையின் குளிர்ந்த மலரை நிறையத் தின்னும் ஊரனே!

எ. யாரையோ நின் புலக்கேம் - நின்னை யாம் புலத்தற்கு ? என்ன உறவினை ;

எ—க0. பிறரும் - இவ்வூரார் பிறரும், வார் உற்று உறையிறந்து ஒளிரும் - நீட்சியுற்று மழைக்கால் வீழ்ச்சியினையுங் கடந்து விளங்கும், தாழ் இருங் கூந்தல் ஒருத்தியை - தாழ்ந்த கரிய கூந்தலையுடையாள் ஒருத்தியை, நம் மனைத் தந்து - எம் மனையிற் கொணர்ந்து காட்டி, வதுவை அயர்ந்தனை என்ப - நீ அவளை வதுவை புரிந்தனை என்று கூறுவர் ;

க0—க. எந்தை அஃது யாம் கூறேம் வாழியர் - எந்தையே, அதனை நீ செய்தாயென யாங்கள் சொல்லேம் ; நீ வாழ்வாயாக ;

கக—ச. செறுநர் களிறு உடை அருஞ் சமம் - பகைவர்களது யானைகளைக் கொண்ட அரிய போரினை, தகைய நாறும் - சிதைந்திடக் கொல்லும், ஒளிறு வாள் நாகை - ஒளிவீசும் வாட்படையினையுடைய, கொற்றச் செழியன் - வெற்றி பொருந்திய செழியனது, பிண்ட நெல்லின் அள்ளூர் அன்ன - நெற்பொலி மிக்க அள்ளூரையொத்த,

---

1. (பாடம்) பிறளும். 2. கொற்கைச் செழியன்.

கச—சு. என் ஒள் தொடி நெகிழினும் நெகிழ்க - எனது ஒள்ளிய எக்கியல் நெகிழ்ந்து விழினும் விழுக, செல்றீ பெரும - நீ முன்னிய விடத்திற்குச் செல்வாயாக, நின் தலைக்குநர் யாரோ - நின்னைத் தடுப்பவர் யாரோதான்!

(முடிபு) ஊர! நிற்புணர்கேம், யாரையோ; ஊரார் ஒருத்தியைத் தந்து வதுவை அயர்ந்தனை என்ப; எந்தை! அஃது யாம் கூறேம்; தொடி நெகிழினும் நெகிழ்க; செல்றீ பெரும; நிற்றலைக்குநர் யாரோ.

காரான், பரிந்து, நீக்கி, மயக்கி, ஆரும் ஊர் என்க.

(வி - ரை.) எருமையைக் காரான் என்றார், [1]'பெற்றமும் எருமையும் மையும் ஆவே' என்னும் குத்திரத்தால். இராக்கால மாதலின், வண்டு பவி மலர் என்றது, வண்டு உள்ளே ஊதும் மலர் என்க. யாரையோ: ஐகாரம் முன்னிலைக்கண் வந்தது; சாரியையுமாம். 'யாரையோ நிற் புலக்கேம்' என்றது, நின்னெடு புலத்தற்கு ஒரு நியையும் இல்லை யென்றபடி. பிறளுழ் ஒருத்தியை என்பது பாடமாயின், பிறளாகிய ஒருத்தியை என்க. வதுவை அயர்ந்தனை யென்று கூறுவர்; கூறுபவர் அச் செய்தியை நம்மனைக்கட் சொணர்ந்து கூறுவர் எனலுமாம். [2]'அன்னை யென்னை என்றலு முளவே" என்னுங் குத்திரத்து, உண்மையாற் பிறவுமுள வென்பது பெறுதலின், தகுவனை எந்தை என்று ளென்க. [3]'எந்தைதன் உள்ளங் குறைபடாவாறு' எனக் கலியுள்ளும் வருவது காண்க. நெகிழ்தல் - கழலுதல். என் தொடி யென்றுள், தான் அவள் என்னும் வேற்றுமை யின்மையால். இனி, ஒண்டொடி யென்பதனை ஆகுபெயரால் தலைவி யெனக் கொண்டு, அவள் மெலியினும் மெலிக வென்று உரைத்தலுமாம். செல் என்பது சென்றீ எனத் திரிந்து நின்றது. யாரோ: ஆசிரியம் ஓகாரத்தால் முடிந்தது.

(உ - றை.) 'காரான் தனக்கு நிகரெனறு புகுதப்பட்ட தொட்டிலை நீராலும் சாணகத்தாலும் தானே சேறாக்கிக்கொண்டு தலையையும் அறுத்துக் கொண்டு. பழனத்துக்குக் காவலாகிய வேலியையும் கோட்டாலெடுத்து மீன்கள் இரியத் தாமரையைச் சூழ்ந்த வள்ளையை மயக்கி, மலர்ச்சியின்றி வண்டொடு குவிந்த தாமரையை ஆர்ந்தாற்போல, நீயே ஆதரித்துக் கொள்ளப்பட்ட இவளை, நீ தானே வேறுபடுத்தி, நாணமாகிய தலையையும் அறுத்துக்கொண்டு, பரத்தையர்க்குக் காவலாகிய விறலியையும் பாணனாகிய கோட்டாலே நீக்கி, அப்பரத்தையருடனுறையும் தோழிமார் இரிய, அப்பரத்தையருடைய தாய்மாரையும் மயக்கி, அகமலர்ந்து உன்னை எதிரேற்றுக் கொள்ளாத மகளிரை நுகர்வானெருத்தன் அல்லையோ என்றவாறு' என்றனர் குறிப்புரைகாரர்.

(மே - ள்.) [4]'அவனறி வாற்ற' என்னும் தலைவி கூற்று நிகழுமிடம் கூறுஞ் குத்திரத்து, செல்லாக் காலை செல்கென விடுத்தலும், என்பதற்கு, தலைவன் செல்லான் என்பது இடமும் காலமும் பற்றி

---

1. தொல். மரபு. கூ0. 2. தொல். பொருளியல். ருஉ. 3. கலி. கக. 4. தொல். கற்பு. கூ.

அறிந்த காலத்து, ஊடல் உள்ளத்தாற் கூடப்பெருதாள், செல் கெனக் கூறி விடுத்து ஆற்றுதற் கண்ணும்' எனப் பொருள் கூறி, அதற்கு இச்செய்யுளை எடுத்துக் காட்டினர் நச்சினார்க்கினியர்.

[1]'உறுகண் நோய்ப்பல்' என்னுஞ் சூத்திரத்து, தோழி அறிவுடைய ளாகக் கூறற்கு உதாரணமாக 'பிண்ட நெல்லின் . . . தகைக்குநர் யாரோ' என்னும் பகுதியைக் காட்டி, என்பது, 'உறுகண் காதற் பொருட்டாகத் தலைவி வருந்தினும் நீ செல்லென்றாள்; தலைவன் செல்லாமை அறிதலின்' என்று அவருரைத்தமை அவர் கற்பியலிற் கூறியதனோடு கூற்றுவகை பால் மாறுபடுகிறது.[2] "நிழதேவாட் குவம மீரிடத் துரித்தே" என்னும் சூத்திரத்து, தலைமகள் மருதத்து உள் ளுறை உவமம் கூறற்கு, 'தாமரை வண்டு...புலக்கேம்' என்பதனை எடுத்துக் காட்டினர் பேரா. சிலியர்.

---

(47) பாலை

[தலைமகன் இடைச்சுரத்து அழிந்த நெஞ்சிற்குச் சொல்லியது.]

அழிவில் உள்ளம் வழிவழிச் சிறப்ப
விடையிவன் முடித்தன மாயின் வல்விரைந்து
எழுவினி வாழிய நெஞ்சே ஒலிதலை
அலங்குகழை நரலத் தாக்கி விலங்கெழுந்து
கடுவளி உருமு ப கொடிமிடு கூதிர்
விடர்முகை அடுக்கும் பாய்தலின் உடனிலையாது)
அமைக்கண் விடுநோடி கலுழக்கூலை அகற்றும்
வெம்முகிர் அருஞ்சுரம் நீந்திக் கைம்மிக்
ககன்சுடர் கல்சேர்பு மறைய மனைவயின்
கஎ ஒண்டொடி மகளிர் வெண்நிரிக் கொளாஅலிற்
குறுநடைப் புறவின் செங்காற் சேவல்
நெடிநிலை யியனகர் வீழ்துணைப் பயிரும்
புலம்பொடு வந்த புன்கண் மாலை
பாண்டுளர் கொல்லெனக் கலிழ்வோள் எய்தி
கஏ இழைபயிர் நெருந்தோள் கைவண் செழிபவர்
மழைவிளை யாடும் வளங்கெழு நிறுமலைச்
சிலம்பிற் கூதளங் கமழும் வெற்பின்
வெய்புறை பரீஇந்தோள் பாயும்
நோயசா வீட முயங்குகம் பலவே.

—ஆலம்பேரிச் சாத்தனார்.

(சொ-ள்.) கூ. நெஞ்சே வாழிய—,

க—உ. அழிவில் உள்ளம் வழிவழிச் சிறப்ப - சோர்தலில்லாத நம் உள்ளம் மேலும் மேலும் (ஊக்கத்தாற்) சிறப்ப, விடின் இவன்

---

1. தொல். பொருளிய. சூ. 2. தொல் உவம. உக.

முடித்தனமாயின் - இவ்விடத்தே விலையைச் செய்து முடித்தோ மாயின்,

கூ—அ. ஒலிதலை அலங்கு கழை நரலத் தாக்கி - தழைத்த தலையினையுடைய அசையும் மூங்கிலை ஒலி யுண்டாகத் தாக்கி, விலங்கு எழுந்து - பக்கங்களில் எழுந்து, கடுவளி உருத்திய கொடி விடு கூர் எரி - குருவளி வெப்பமுறச் செய்த கொழுந்து விட்டெரி யும் மிக்க தீ,

விடர்முகை அடுக்கம் பாய்தலின் - பிளப்பையும் முழைஞ்சினையு முடைய மலைப் பக்கங்களிற் பரத்தலின், அமைக் கல் விடு நொடி - மூங்கிலின் கணுக்கள் வெடித்தலால் எழும் ஒலி, கணக்கலி அகற் றும் - கூட்டமாகிய கலிமான்களைத் துரத்தும், வெம்முனை அரும் சுரம் நீந்தி - கொடிய போர் நிகழும் இடங்களாகிய அரிய சுரத் தினைக் கடந்து,

அ. கைபிழக்கு - அளவு கடந்து,

கூ—கஉ. அகன் கடற் கல் சேர்பு மறைய - பெரிய ஞாயிறு மேற்கு மலையினைச் சேர்ந்து மறைந்திட., மனைவயின் ஒள் தொடி மகளிர் - மனையிடத்து ஒளி பொருந்திய வளைகளை யணிந்த மகளிர், வெண்திரிக் கொளாஅலின் - விளக்கில்கள் வெள்ளிய திரியைக் கொளுவுதலின், குறுநடைப் புறவின் செங்காற் சேவல் - குறுக அடியிட்டு நடக்கும் சிவந்த காலினை யுடைய புறாவின் சேவல், நெடுநிலை வியன்நகர் - உயர்ந்த மேல் நிலைகளையுடைய பெரிய மனை யின்கண், வீழ்துணைப் பயிரும் - தம்பால் அன்புள்ள பெடையை அழைக்கும், புலம்பொடு வந்த புன்கண் மாலை - தனிமையொடு வந்த துன்பத்தைத் தரும் மாலையில்,

கசு. யாண்டு உளர் கொல் எனை - நம் தலைவர் இப்பொழுது எவ்விடத்துள்ளாரோ என நினைந்து, கலிழ்வோள் எய்தி - கலங்கி அழுதுகொண்டிருக்கும் தம் தலைவியை அடைந்து,

கரு—கூ இழை அணி நெடுந்தேர்க் கைவண் செழியன் - இழைகள் அணியப்பெற்ற நீண்ட தேரினையும் கை வண்மையையு முடைய செழியனது, மழை விளையாடும் வளங்கெழு சிறுமலை - மழை தவழ்ந்திடும் வளம் மிக்க சிறுமலை என்னும் பெயருடைய, சிலம்பி கூதளம் கமழும் வெற்பின் - பக்கமலையிலே கூதளஞ் செடி கமழப் பெறும் மலையிலுள்ள, வேய் புரை பணைத்தோள் - மூங்கில் ஒத்த பெரிய தோளில், பாயும் நோய் அசா வீட - பரவியுள்ள நோய் வருத்தம் நீங்க,

முயங்குகம் பல - பன்முறையும் முயங்குவோம் ; (ஆதலின்)

உ—கூ. இனி வல் விரைந்து எழு - இப்பொழுது வினையின் பொருட்டு என்னுடன் மிக விரைந்து எழுவாயாக.

(முடிபு) நெஞ்சே ! இவண் வினை முடித்தனமாயின், இவ்வரிய சுரத்தினைக் கடந்து, நெடுநிலை வியனகரில் புன்கண் மாலையில், கலிழ்வோள் எய்தி பசலை தோள் நோயசா வீட முயங்குகம் பலவே ; ஆகலின் விரைந்து எழு.

(வி - ரை.) விலங்கெழுந்து பாய்தலின் என இயையும். கடுவளி விலங்கெழுந்து உருத்திய என்றுமாம். விடராகிய முகை என்றுமாம். முகை - முகை.

கைமிக்குக் கலிழ்வோள் எனக் கூட்டுக. செழியன் சிறுமகிழ் யாகிய வெற்பின் என்று இயைக்க. சிறுமகிழ், பெயர். புறவின் சேவல் வீழ்துணைப் பயிரும் மாலை என்றது தலைவர் கம்மை விரும்பி அகன்றிலரே எனத் தலைவி எண்ணி இரங்குவள் என்பதனைப் புலப் படுத்தி நின்றது. [1] இரைவேட்டெழுந்த சேவலுள்ளிப், பொறிமயி ரெருத்திற் குறுநடைப் பேடை . . . தயங்க விருந்து புலம்பக் கூஉம்' என்பது இதனைடு ஒத்து நோக்கற்பாலது.

(48.) குறிஞ்சி

[செவிலித் தாய்க்குத் தோழி அறத்தொடு நின்றது.]

அன்னாய் வாழிவேண் டன்னை நின்மகள்
பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு
நனிபசந் தனளென வினவுதி அதன்றிறம்
யாதுந் தெற்றென உணரேன் மேனாள்
மலிபூஞ் சாரலென் தோழி மாதோ
டொலிநீர் வேங்கை கொய்குவந் சென்றுழிப்
புலிபுலி யென்னும் பூசல் தோன்ற
வண்செங் கழுநீர்க் கண்போல் ஆயிதழ்
ஈரி போகிய சூழ்செய் மாஅயன்
பக்கஞ் சேர்ந்திய செச்சைக் கண்ணியன்
குயமண் டாகஞ் செருச்சாந் தணிந்து நீவி
வரிபுனை வில்லன ஒருகணை நொந்துகொண்(டு)
யாதோ மற்றம் மாதிறம் படரென
வினவி நிற்றந் தோனை அவற்கண்டு
எம்முள் எம்முள் மெய்ம்மறை பொடுங்கி
நாணி நின்றனெ மாகப் பேணி
ஐவகை வகுத்த கூந்தல் ஆய்நுதல்
மைஈர் ஓதி மடவீர் நும்வாய்ப்
பொய்யும் உளவோ என்றனள் பையெனப்
பரிமுடுகு தவிர்ந்த தேரன் னெரிமறுத்து
நின்மகள் உண்கண் பன்மாண் நோக்கிச்
சென்றிரும் மன்ற அக் குன்றுறை வோனே
பகல்மாய் அந்திப் படுசுடர் அமையத்
தவன்மறை தேனம் நோக்கி மற்றிவன்
மகனே தோழி என்றனள்
அதனள வுண்டுகொல் மதிவல் லோர்க்கே.

—தங்கால் முடக் கொற்றனார்.

---

1. குறுந். கஓச.

(சொ-ள்) க—ங. அன்னுய் வாழி - அன்னையே வாழ்வா
யாக; வேண்டும் அன்னை - அன்னையே யாள் கூறுவதனை விரும்பிக் கேள்; நின் மகள் -, பழங்கண் கொண்டு - துன்பம் எய்தி, பாலும் உண்ணுள் - பாலையும் பருகாளாய், நனி பசந்தனள் என வினவுதி - மிகவும் பசந்துள்ளாள் என வினவுகின்றனை:

ஙு—எ. அதன் நிறம் யாதும் தெற்றென உணரேன் - அது வந்த வழியினை யாதும் தெளிவாக உணர்ந்திலேன், மேல் நாள் - முன்பு ஒருநாள், மலிபுனல் சாரல் - பூக்கள் நிறைந்த மலைச் சாரலில், என் தோழியருடன், ஒலிசினை வேங்கை கொய்குவம் சென்றுழி - தழைத்த கிளைகளை யுடைய வேங்கையின் பூவினைக் கொய்யச்சென்ற காலை, புலி புலி என்னும் பூசல் தோன்ற. புலி புலி என்னும் ஆரவாரம் தோன்ற,

அ—கசு. கண்போல் - மகளிர் கண்ணினைப்போலும், ஒண் செங்கழுநீர் ஆய் இதழ் - ஒளிபொருந்திய அழகிய செங்கழுநீர்ப் பூக்களை, ஊசி போகிய சூழ் செய் மாலையன் - ஊசியாற் கோத்துச் சுற்றிக் கட்டிய மாலையனுய், பக்கம் சேர்த்திய செச்சைக் கண்ணி யன் - தலையின் ஒரு பக்கத்தே கொண்ட வெட்சிப்பூவாலாய கண் ணியனுய், குயம் மண்டு ஆகம் - மகளிர் முலைகள் பாய்தற்குரிய மார் பில், செஞ்சாந்து நீவி - சிவந்த சந்தனத்தைப் பூசி, வரிபுனை வில்லன். வரிந்து புனைந்த வில்லையுடையனுய், ஒரு கணை தெரிந்து கொண்டு - ஒப்பற்ற கணையினை ஆய்ந்தெடுத்துக்கொண்டு (ஒரு தலைவன் தோன்றி), அம்மா படர் நிறம் யாதோ என - அப் புலி சென்ற வழி யாதோ என்று, வினவி நிற்றற்றோன் - வினவி நின்றனன் ;

கசு—சூ. அவற் கண்டு - யாங்கள் அவனைக் கண்டு, எம்முள் எம்முள் மெய் மறைபு ஒடுங்கி: எங்களுள் ஒருவர் முதுகில் ஒருவர் உடல் மறைந்து ஒடுங்க, நாணி நின்றவெம் ஆக - நாணுற்று நின் றேமாக,

கசு—கூ. பேணி ஐவகை வகுத்த கூந்தல் - விரும்பி ஐவகை யாக வகுத்த கூந்தலினையும், ஆய் நுதல் - அழகிய நெற்றியினை யு முடைய, மை யிர் ஓதி படவீர் - கரிய நெய்த்த கூந்தலையுடைய படவீரே, நும் வாய் பொய்யும் உளவோ என்றனன் - நுமது வாயிற் பொய்ச் சொற்களும் உளவாமோ என்று கூறி,

கஙு—உஉ. அக் குன்று கிழவோன் - மலை நாட்டிற்குரியனுகிய அவன், பரிமுடுகு பை யெனத் தவிர்த்த தேரன் - பரிகளின் வேகத்தை அடக்கி மெல்லெனச் செலுத்தும் தேரனுகி, நின் மகள் உண்கண் - நின் மகளது மையுண்ட கண்களை, எதிர் மறுத்துப் பன்மாண் நோக்கி - நோக்கியபின் எதிர்நோக்கலாகப் பலமுறை நோக்கா நின்று, சென்றோன் - சென்றனன் ;

உங—டு. பகல் மாய் அந்தி - பகற்பொழுது மாய்கின்ற அந்தி யாகிய, படுசுடர் அளையத்து - ஞாயிறு மறையும் பொழுதிலே, அவன் மறை தேளம் நோக்கி - அவன் மறைந்திடும் திசையை நோக்கி,

தோழி இவன் மகனே என்றனள் - தோழியே இவன் ஒரு ஆடவனே என்றனள்;

உசு. மதி வல்லோர்க்கு - ஆராய்ந்து அறியும் அறிவு மிக்கோர்க்கு, அதனளவு உண்டு கோள் - அதனளவாக ஓர் கோட்பாடு உண்டு.

(முடிபு) அன்னாய் வாழி! வேண்டு, நின் மகள் பசந்தனளென வினவுதி; யாதும் தெற்றென உணரேன்; மேனாள் தோழிமாரோடு சென்றுழி, பூச்சூன்றான, ஒரு தகிலவன் வினவி நிற்றந்தோன்; அவற் கண்டு, ஒடுங்கி நின்றனளாக, நும் வாய்ப் பொய்யும் உளவோ என்றனன்; அக் குன்று கிழவோன் தேரன், நோக்கிச் சென்றனன்; தகிலவி, அவன் மறை தேயம் நோக்கி, இவன், மகனே என்றனள்; வல்லோர்க்குக் கோள் உண்டு.

(வி - ரை.) பசந்தனள் என வினவுதி - பசந்தனள் அதன் காரணம் யாதென வினவுகின்றாய் என விரித்துரைக்க. வேங்கை மரத்திற் பூக்கொய்வார், புலி புலி யென்று கூவின், அதன் கிளை தாழ்ந்து கொடுக்கும் என்பது வழக்கு. கழுநீர் இதழ் என்க. இதழ் - பூ. ஊசி போகிய - அல்லியைக் கழித்துத் தொடுத்த என்றுமாம்; ஊசி-ஊசிபோன்ற அல்லி. குயம் மண்டு என்பது மார்பிற்கு இயற்கையடை. நீவி-பூசி; உதிர்த்து என்றுமாம். மா படர் நிறம் என மாறுக. நிற்றந்தோன் - நிற்றல் தந்தோன்; நின்றோன். பேணி - புழுகு முதலியவற்றூற் பேணி என்றுமாம். கூந்தல் என முன் வந்தமையின் 'மையீரோதி மடவீர்' என்றது பெயர் மாத்திரையாகி நின்றது, எதிர்மறுத்து நோக்குதலாவது, தகிலவி தன்னை நோக்காதிருக்க, தான் அவளை நோக்குதல். தகிலவன் நோக்குழித் தகிலவி எதிர் நோக்காள் என்பதனை, [1]'யானெனக்குங் காதல நிலனெனக்கும்' என்பதனு லறிக.

(மே - ள்.) [2]'எளித்த லேத்தல்' என்னும் அறத்தொடு நிலை கூறுஞ் சூத்திரத்து, ஏதீடு என்பதற்குக் காரணம் இட்டு உணர்த்தல் என்று பொருள் கூறி, இதனைப் புலி காத்தற்கு வந்தானென இட்டுரைத்தது என்றும், [3]'உயர்மொழிக்குரிய' என்னுஞ் சூத்திரத்து, 'அவன் மறை தேயம் நோக்கி மற்றிவன் - மகனே தோழி யென்றனள்' என்பது, தகிலவி ஐயத்துக் கண் தெய்வமென்று துணிந்தாள் அல்லள் என்றும், கூறினர் நச்சினார்க்கினியர்

[4]'இன்பத்தை வெறுத்தல்' என்னுஞ் சூத்திரத்து, 'அன்னாய் . . . வினவுதி' என்றது, பசியடநிற்றல் என்னும் மெய்ப்பாடாமென்றும், [5]'பிறப்பே குடிமை' என்னுஞ் சூத்திரத்து, 'நின்மகள் . . . என்றனள்' என்பது, உருவு நிறுத்த காமவாயில் என்றும் கூறினர் பேரா.

[6]'எளித்தல் ஏத்தல்' என்னுஞ் சூத்திரத்து, இது தகிலவனை உயர்த்துக் கூறுதல் என்றும், [7]'உற்றுழியல்லது' என்னுஞ் சூத்திரத்து 'அன்னாய் வாழி . . . வினவுதி' என்ற வழி செவிலி குறிப்பினால் உணர்ந்தவாறு இஃது என்றும் கூறினர் இளம்பூரணர்

---

1. குறள். கoசு. 2. தொல். பொரு., கக. 3. தொல். பொருளி. சச. 4. தொல். மெய். உஉ. 5. தொல். மெய். உடு. 6. தொல். பொருளியல். கஉ. 7. தொல். பொருளி. கக.

(19.) பாலை

[உடன்போயின தலைமகனை நினைந்து செவிலித்தாய் மனையின் கண் வருந்தியது.]

தெளியும் பந்தும் கழங்கும் வெய்யோள்
அளியும் அன்பும் சாயலும் இயல்பும்
முளைஎள் போலாள் இறீஇயிரென் உயிரெனக்
கோடுந் தொடைக் குழவியொடு வயின்மரத் தியாத்த
5 கடுங்கட் கூளையிற் சிறுபுறம் நோக்கிக்
குறுக வந்து குவவுநுதல் நீவி
மெல்லெனத் தழீஇயினேன் மகள் என்மகள்
நன்னர் ஆகத் நடுமுலை வியர்ப்பப்
பல்கால் முயங்கினள் மன்னே அன்னை
10 விளம்பழு நெடுந்தகை பலபாராட்டி
வளைமுன் அசைஇ வான்புலந்து வருந்திய
மடமான் அன்னஎன் நிரங்குமரல் சுவைக்குங்
காடுடன் கழிதல் அறியாள் தந்தை
அல்குபதம் மிகுந்த கூடியுடை வியனகர்ச்
15 செல்வுழிச் செல்வுழி மெய்ந்நிழல் போலக்
கோதை யாயமோ டோரை தழீஇத்
தோடமை அரிச்சிலம் பொலிப்ப அவள்
ஆடுவழி ஆடுவழி அகலேன் மன்னே.

—[1]வண்ணப்புறக் கந்தரத்தனார்.

(சொ-ள்.) க—ங. தெளியும் பந்தும் கழங்கும் வெய்யோள் - தெளி பந்து கழங்கு எனும் இவற்றை மிக விரும்பிக் கைவிடாதவளாகிய என்மகள், அளியும் அன்பும் சாயலும் இயல்பும் - அருள் அன்பு மென்மை செயல் எனும் இவற்றால், முளைஎள் போலாள் - முன்னுட்கலைப் போலாது வேறுபட்டுளாள், இஃதென்னே? இறீஇயர் என் உயிர்என - என் உயிர் கழிவதாக என்று கூறி,

ச—ஞ. கோடுந் தொடைக் குழவியொடு - வளைந்த தொடையினையுடைய கன்றுடன், மரத்து வயின் யாத்த - மரத்திடத்தே கட்டப் பெற்ற, கடுங்கண் கறவையின் - விரைந்து விரைந்து கன்றைப் பார்த்திருக்கும் பசுவைப்போல, சிறுபுறம் நோக்கி - அவள் முதுகினைப் பார்த்து, குறுக வந்து குவவு நுதல் நீவி அன்னையில் வந்து வளைந்த நெற்றியினைத் தடவி, மெல் எனத் தழுவினேன் ஆக - மெத்தெனத் தழுவிக் கொண்டேனாக,

ட—ண. என் மகள் - எனது மகள், ஆகத்து முலையிடை வியர்ப்ப - ஆகத்தே முலையிடை வியர்வுண்டாக, பல்கால் நன்னர் முயங்கினள் மன்னே அன்னை - பன்முறை நன்கு தழுவிக் கொண்டனள், அந்தோ, அது கழிந்ததே;

(பாடம்.) 1. வண்ணப்புறக் கல்லாடனார்.

கo—ங. வான்புலந்து வருந்திய - மேகத்தை வெறுத்து வருந்திய, மடமான் அசாஇனம் - தளர்ச்சியுற்ற இளைய மானின் கூட்டம், நிரங்குமரல் சுவைக்கும் காடு - வற்றிய மரச்செடியினைச் சுவைத்துப் பார்க்கும் காட்டில், விறல் மிகு நெடுந்தகை பல பாராட்டி. வலிமை மிக்க பெருந்தகையாய தலைவன் இவளைப் பலபடியாகப் பாராட்டி, வறன்நிழல் அசைஇ - உலர்ந்த நிழலிலே தங்கி, உடன் கழிதல் அறியின் - இவளை உடன் கொண்டு கழிதலை அறியின்,

கங—அ. தந்தை - இவள் தந்தையது, அல்கு பதம் மிகுத்த கடியுடை வியன் நகர் - தங்கும் உணவு மிகுந்துள காவல் பொருந்திய பெரிய மனையில், செல்வுழிச் செல்வுழி மெய்ந்நிழல் போல - செல்லும் இடந்தொறும் இடந்தொறும் உடம்பின் நிழலைப் போலச் சென்று, கோதை ஆயமொடு ஓரை தழீஇ - கோதையையுடைய ஆயத்தாரோடு விளையாடும் விளையாட்டினை மேற்கொண்டு, தோடு அமை அரிச் சிலம்பு ஒலிப்ப - தொகுதி வாய்ந்த பரலினையுடைய சிலம்பு ஒலிக்க, அவள் ஆடுவழி ஆடுவழி - அவள் விளையாடும் இடந்தோறும், அகலேன் மன்னே - அகலாதிருப்பேன்; அது கழிந்ததே.

(முடிபு) வெய்யோள் முன்னுட் போலாள், உயிர் இறீஇயெனக் கறவையின் நோக்கி, வந்து, நீவித் தழீஇயினேனாக, என் மகள் வியர்ப்ப, முயங்கினள் மன்னே; காடுடன் கழிதல் அறியின், வியனகர் செல்வுழிச் செல்வுழி நிழல் போலத் தழீஇ, ஆடுவழி ஆடுவழி அகலேன்; மன்னே.

நெடுந்தகை, பாராட்டி, அசைஇ, கழிதல் எனவும், மெய்ந்நிழல் போல அகலேன் எனவும் கூட்டுக.

(வி - ரை.) இயல்பு - செய்தி. [1]'குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க் கொடை', 'ஆவும் எருமையும் அவைசெலப் படுமே' என்பவற்றுள், குழவி யென்றார். மரத்துவயின் எனவும், முகிலிடை எனவும் மாறுக. கடுங்கண் : கடுமை - விரைவு. வியர்ப்பவும் பல்கால் முயங்கியது, போக்கை நினைந்து என்க. மன் இரண்டும் கழிவின்கண் வந்தன. அல்கு பதம் - வைத்திருந்துண ணுறும் உணவு; மிக்க உணவு. உடன் கழிதல் - உடன்கொண்டு கழிதல். பாராட்ட எனத் திரித்து, இருவரும் கழிதல் என் றுரைத்தலுமாம். அடுக்குகள் பன்மை குறித்தன. அன்னே, இரக்கப் பொருட்டு.

(மே - ள்) [2]'கொண்டு தலைக் கழியினும்' என்னுஞ் சூத்திரத்து 'அல்குபத மிகுத்த கடியுடை வியனகர் என நெல்லுடைமை கூறிய அதனானே வேளாண் வருணமென்பது பெறற்கும்' எனவும், [3]'எஞ்சியோர்க்கும் எஞ்சுதலிலவே' என்னுஞ் சூத்திரத்து, செவிலி கூற்று நிகழ்வதற்கு இப் பாட்டினை யெடுத்துக் காட்டி, 'இவ் வகப்பாட்டு உடன்போன தலைவியை நினைந்து செவிலி மனையின்கண் மயங்கியது' -எனவும் கூறினர் நச்சினார்க் கினியர்.

1; தொல். மரபு. கூ; உo. 2. தொல். அகம். கடு. 3. தொல். அகம். சூ.

(50) நெய்தல்

[தோழி பாணனுக்குச் சொல்லியது.]

கடல்பா டவிந்து தோணி நீங்கி
நெடுநீர் இருங்கழிக் கடுமீன் கலிப்பினும்
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை தூற்றினும்
மாணிழை நெடுந்தேர் பாணி நிற்பப்
பகலும் நம்வயின் அகலா னாகிப்
பயின்றுவரும் மன்னே பனிநீர்ச் சேர்ப்பன்
இனியே, மணப்பருங் காமந் தணப்ப [1]நீந்தி
வாரா தோர்நமக் கியாஅரென் னாது
மல்லல் மூதூர் மடையினஞ் சென்று
சொல்லின் எவனோ பாண எல்லி
மகிழ்நர் பெண்டிர் [2]மடிவாய் அன்றில்
துணையொன்று பிரியினுந் துஞ்சா காணைனைக்
கண்ணிறை நீர்கொடு கரக்கும்
ஒண்ணுதல் அரிவையான் என்செய்கோ வெனவே.

—[3]கருவூர்ப் பூதஞ்சாத்தனார்

(சொ - ள்.) கடி. பாண - பாணனே!

க—ங. பனி நீர்ச் சேர்ப்பன் - குளிர்ந்த கடற்கரையையுடைய நம் தலைவன், கடல்பாடு அவிந்து-(முன்பு) கடலொலி அவிய, தோணி நீங்கி - தோணி கடலிற் செல்லாதொழிய, நெடுநீர் இருங்கழி-மிக்க நீரினையுடைய பெரிய கழியில், கடுமீன் கலிப்பினும் - சுறு முதலிய செருக்கித் திரியினும், வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை தூற்றினும்-கொடிய வாயினராய பெண்டிர் அலர் தூற்றினும், மாணிழை நெடுந் தேர் பாணி நிற்ப - மாண்ட இழையினையுடைய நீண்ட தேர் தாழ்த்து நிற்க, பகலும் நம்வயின் அகலா னாகி - பகற் காலத்தும் நமமிடத்து நின்றும் பிரியானாகி, பயின்று வரும் மன்னே - அடுத்தடுத்து வருவன், அது கழிந்தது;

எ—கச. இனி - இப்பொழுது, மணப்பு அருங் காமம் - களவுக் காலத்துக் கூடுதற்கரிய வேட்கை, தணப்ப - நீங்குதலால், நீந்தி வாராதோர் - தாம் சென்றிருக்கும் இடத்தைக் கடந்து வராதொழிவார், நமக்கு யார் என்னாது - நமக்கு என்ன உறவினர் என்னாது, ஒண் நுதல் அரிவை - ஒள்ளிய நெற்றியையுடைய தலைவி, எல்லி-இரவில், மகிழ் நர் பெண்டிர் - மனையைச் சார்ந்துள்ள பரதவர்த்தில், ஒன்று துணை பிரியினும் - ஒன்றி யிருத்தலினின்றும் துணை சிறிது பிரியினும், மடிவாய் அன்றில் - வளைந்த வாயினையுடைய அன்றில்கள், துஞ்சா காண் என - துயிலாதன வாதலின் நெஞ்சே காண்.

(பாடம்) 1. நீங்கி. 2. மடல்வாய் அன்றில். 3. கருவூர்ப் பூதனார் மகனார் கொற்றனார்.

பாயாக என்று, கண் நிறை நீர்கொடு கரக்கும் - கண்ணில் நிறையும் நீரைக்கொண்டு தனது ஆற்றுமையைப் பிறரறியாமை மறைக்கும், யான் என் செய்கோ எனவே - இதற்கு யான் என் செய்வேன் என்று, மல்லல் மூதூர் - வளம் பொருந்திய பழமையான ஊரின் கண், மறையினை சென்று - மறைந்து சென்று, சொல்லின் எவனோ - தலைவர்க்குச் சொல்லின் என்ன தவறும்?

(முடிபு) பாண! சேர்ப்பன் கடுமீன் கலிப்பினும், கவ்வை சாற்றினும், பாணி நிற்ப, பகலும் அகலாதுபெய் பயின்று வரும் மன்; இனி, அவன்பால் நீ மறையினை சென்று, அரிவை 'துஞ்சா கான் எனச் சொல்லிக் கரக்கும்' யான் என் செய்கோ எனச் சொல்லின் எவனோ?

தணப்ப, நீந்தி வாராதோர் யார் எனுநு கண்கள் அழாநிற்க அதனைக் கரக்கும் எனவும், மறையினை சென்று சொல்லின் எவனோ எனவும் இயையும்.

(வி-ரை.) கழி-கடற் குட்டம். கடுமீன்-சுறாமுதலியன. தோணியிற் சென்று மீன் பிடிப்பாரின்மையின் அவை செருக்கும் என்றார்; தலைவன் வருகைக்கு அஃதோர் இடையூடு; களவுக் காலத்து அலர் முதலானவற்றிற்குச் சிறிதும் அஞ்சாது பகலிலும் அகலாதிருந்தான் என்க. மன், கழிவு. மணப்பரும் - கூடுதற்கரிய; மிக்க என்றபடி. தணப்ப - நீங்குகையாலே. நீந்தி - தாம் சென்றிருக்குமிடத்தைக் கழித்து; பரத்தையர் சேரியைக் கடந்து, நீங்கி என்பது பாடமாயின் நம்மைப் பிரிந்து என்க. மல்லல் மூதூர் - பரத்தையரின் ஊரவர மிகுதியையுடைய சேரி. மறையினை - அவரறியாதபடி மறைந்து.

தலைவனைப் பிரிந்த ஆற்றுமையால் கண்கள் அழாநிற்கவும், அன்றில் பிரியினும் துஞ்சா காணெனச் சொல்லி, அதன் பொருட்டுக் கண்ணீர் சொரிவதுபோற் காட்டித் தனது ஆற்றுமையைத் தலைவி மறைக்கும் என்க.

'அரிவை கரக்கும்; இதற்கு யான் என் செய்கோ' எனச் சென்று சொல்லின் எவன் எனப் பாணனை நோக்கித் தோழி கூறினாள்.

இனி, துஞ்சா கான்; இதற்கு என் செய்கோ எனச் சொல்லி அரிவை கரக்கும், எனச் சொல்லின் எவனோ? என்றுளெனினும் அமையும்.

(மே-ள்.) [1]'கற்புங் காமமும்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுளை எடுத்துக் காட்டி, இதனுள் காம மிகுதியால் கண் தாமே அழுவும், கற்பிற் கரக்கும் எனத் தலைவி பொறையும் நிறையும் தோழி பாணற்குக் கூறினாள், அவன் தலைவற்கு இவ்வாறே கூறுவன் எனக் கருதி. இவி என்றதனாற் கற்பும் பெற்றும்; என்றார் நச்சினார்க்கினி யரு.

[2]'இன்பத்தை வெறுத்தல்' என்னுஞ் சூத்திரத்து, இன்பத்தை வெறுத்தல் என்பது இன்பத்திற் கேதுவாய பொருள் கண்டவழி

1. தொல். கற்பு. கக. 2. தொல். மெய்ப். உட.

க்க

அவற்றின்மேல் வெறுப்புத் தோன்றுதல் என்று கூறி, அதற்கு, 'எல்லி, மதிசேர்...என் செய்கோ எனவே' என்னும் பகுதியை எடுத்துக் காட்டினர் பேராசிரியர்.

51. பாலை

[பொருள்வயிற் பிரிவு கடைக்கூட்டிய தெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.]

ஆள்வழக் கற்ற சுரத்திடைக் கதிர்தெற
நீளெரி பரந்த நெடுந்தா ளியாத்துப்
போழ்வளி முழங்கும் புல்லெல் உயர்சினை
முடைநசை இருக்கைப் பெடைமுகம் நோக்கி
ஞாள்பதித் தன்ன வெருவரு செஞ்செவி
எருவைச் சேவல் கரிபுறை தின்ற
வேனில் நீடிய வெயிலுயர் நனந்தலை
நீயுமுந் தெய்துஞ் செய்வினைப் பொருட்பிணி
பல்லிதழ் மழைக்கண் மாஅ யோள்வயிற்
பிரிவிற் புணர்வ தாயிற் பிரியாது
எந்துமுலை முற்றம் விங்கப் பல்லாம்
சேயிழை தெளிர்ப்பக் கவைஇ நாளும்
மதிமுதல் வினையொடும் உவப்ப
நீயுமான் றெஞ்சம் நீங்குதல் மறந்தே.

—பெருந்தேவனார்.

(சொ-ள்.) க—ஏ. ஆள் வழக்கு அற்ற - ஆட்கள் இயங்குதல் ஒழிந்த, சுரத்திடை - அத்தத்தில், கதிர் தெற நீள் எரி பரந்த - ஞாயிற்றின் கதிர்கள் காய்தலின் மிக்க வெம்மை பரவிய, நெடுந் தாள்யாத்து - நீண்ட அடியினையுடைய யாமரத்தின், போழ் வளி முழங்கும் புல்லென் உயர்சினை - பிளந்து செல்லும் காற்று முழங்கும் பொலிவற்ற உயர்ந்த கிளையில், முடை நசை இருக்கை - புலால் விருப்பத்துடன் இருத்தலையுடைய, பெடை முகம் நோக்கி - தன் பெடையின் முகத்தினைப் பார்த்து (எழும்), ஞான் பதித்தன்ன வெருவரு செஞ்செவி - ஞான் துண்டினைப் பதித்து வைத்தாற் போலும் அச்சத்தைத் தரும் சிவந்த செவியினையுடைய, எருவைச் சேவல் - ஆண் பருந்தின், சிறை கரிபு தின்ற - சிறை கரிந்து தீய்ந்திட, வேனில் நீடிய வெய் உயர் நனந்தலை - வேனில் வெப்பம் மிக்க மூங்கில் உயர்ந்த அகன்ற காட்டிடத்தில்,

அ—கஂ. நீ உமந்து எய்தும் செய்வினைப் பொருட்பிணி - நீவருந்திச் செய்யும் வினைகளால் அடையப்படும் பொருள், பல் இதழ் மழைக்கண் - பல இதழ்களையுடைய பூப்போலும் குளிர்ந்த கண்ணினையுடைய, மாயோள் வயின் - மாமை நிறத்தினளாய நம் தலைவியிடத்

(பாடம்) 1. பிரியப்புணர்வதாயின். 2. கடுகு பெருந்தேவனார்.

நின்றும், பிரியின் - பிரிந்து செல்வதானே, புணர்வதாயின் - கை கூடுவது ஒன்றாயின்,

கo—கச. மான் நெஞ்சம் - எனது நல்ல மனமே; நீங்குதல் மறந்து அவளை நீங்குதலே மறந்து, பிரியாது ஏந்துமுலை முற்றம் - ஒன்றினொன்று பிரியாது ஒருங்கு நிமிர்ந்த முலைப்பரப்பு, விங்க - விம்மவும், சேய் இழை தெளிர்ப்ப - சிவந்த அணிகள் ஒலிக்கவும், பல்லாம் கவைஇ - பலமுறையுந் தழுவி, நாளும் - நாடோறும், மனைமுதல் - தலைவியானவள், வினையொடும் உவப்ப - இல்வாழ்க்கைத் தொழிலோடும் மகிழும்படி, நினை - நினைவாயாக.

(முடிபு) நெஞ்சம்! பொருட்பினை மாயோள்வயின் பிரியின், புணர்வதாயின், அவளை நீங்குதல் மறந்து, விங்க, தெளிர்ப்பக் கவைஇ, மனைமுதல் உவப்ப நினை.

யாத்துச் சினை யிருக்கைப் பெடை எனவும், நோக்கி எழும் எருவைச் சேவல் எனவும் இயையும்.

(வி-ரை.) எரி - வெம்மை. பல் இதழ் - பூவிற்கு ஆகுபெயர் வயின் - இடம், இடத்தினின்றும் என விரிக்க. மனைமுதல்-மனைவி. வினை - அறவோர்க் களித்தல், விருந்தெதிர் கோடல் முதலிய இல்வாழ்க்கைத் தொழில். பிரியின் இவள் இறந்துபடும் என்பது கருதி, நீங்குதல் மறந்து உவப்ப நினை என்றான்.

(மே - ள்.) [1]'கரணத்தினமைந்து' என்னும் தலைவன் கூற்று நிகழுமாறு கூறிய சூத்திரத்து, 'நின்று நனி பிரிவின் அஞ்சிய பையுளும்' என்பதற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டினார் இளம்.

---

52. குறிஞ்சி

[தலைமகள் வேறுபட்டமை யறிந்த செவிலித் தாய்க்குத் தோழி அறத்தொடு நிற்குமெனத் தலைமகள் சொல்லியது.]

வலந்த வள்ளி மரனெங்கு சாரற்
கிளர்ந்த வேங்கைச் சேணெடும் பொங்கர்ப்
பொன்னேர் புதுமலர் வேண்டிய குறமகள்
இன்னு விசைய பூசல் பயிற்றலின்
ஏகல் அடுக்கத் திருளளைச் சிலம்பின்
ஆகொள் வயப்புலி யாகுமஃ தெனத்தம்
மலைகெழு சிறார் புலம்பக் கல்லெனச்
சிலையுடை யிடத்தர் போதரு நாடன்
நெஞ்சமர் வியன்மார் புடைத்தென அஞ்சாக்
கருவிப் பேங்கொல் [2]அறிவியேங் கொல்லென
இருபாற் பட்ட சூழ்ச்சி ஒருபாற்
சேர்ந்தன்று வாழி தோழி யாக்கை

---

1. தொல். கற்பியல். டு. (பாடம்) 2. அறியலங்கொல்.

இன்னுயிர் கழிவ தாயினும் நின்மகள்
ஆய்மலர் உண்கண் பசலை
கடு காம நோயெனச் செப்பா தீமே.

—[1]நோச்சி நியமங்கிழார்.

(சொ - ள்.) கூ. நோழி வாழி-,

கூ. அன்னைக்கு - நம் தாய்க்கு.

கஙு—ச. நின் மகள் ஆய் மலர் உண்கண் பசலை - நின் மகளது அழகிய மலரனைய மையுண்ட கண்ணிற் படர்ந்த பசலையானது.

கஙு—அ. மரன் ஓங்கு சாரல் - மரங்கள் உயர்ந்த பக்க மலை யிடத்து, வலந்த வள்ளி - சுற்றிய கொடியையுடைய, இளர்ந்த வேங்கை - செழித்தெழுந்த வேங்கை மரத்தினது, சேண் நெடும் பொங்கர் - மிக வுயர்ந்த கிளையிலுள்ள, பொன் கோர் புதுமலர் வேண் டிய குறமகள் - பொன்னை யொத்த புதிய மலரினைப் பறிக்க விரும் பிய குறமகள், இன்ன இசைய பூசல் பயிற்றலின் - இன்னுமைமையைத் தரும் ஒலியையுடைய புலி புலி என்னும் ஆரவாரத்தினை அடுத் தடுத்து எழுப்பலின், ஏ கல் அடுக்கத்து - உயர்ந்த பாறைகளின் அடுக்கையுடைய, இருள் அளைச் சிலம்பின் - இருண்ட குகையினை யுடைய பக்க மலையில், ஆ கொள் வயப்புலி ஆகும் அஃது என - பசு வினைக் கவரும் வலிய புலியைக் குறித்த ஒலியாகும் அஃது என்று எண்ணி, சிலையுடை இடத்தர் - வில்லை இடக்கையிற் கொண்ட கானவர், தம் மலைகெழு சீறூர் புலம்ப - தமது மலையை யடுத்துள சிறிய ஊர் தனிப்ப, கல்லெனப் போதரும் நாடன் - கல்லெனும் ஒலி யுடன் செல்லாநிற்கும் நாட்டையுடைய நம் தலைவனது,

கூ—கஉ. நெஞ்சு அமர் வியன் மார்பு உடைத்தென - நமது நெஞ்சை இடமாகக் கொண்ட பெரிய மார்பினைக் காரணமாக உடையது என, அறிவிப்பேம்கொல் அறிவியேம்கொல் என - தெரிவிப்பேமோ தெரிவியா தொழிவேமோ என, இருபாற்பட்ட சூழ்ச்சி - இருவகையிற்பட்ட ஆராய்ச்சி, ஒருபாற் சேர்ந்தன்று-ஒரு முடிபிற்கு வந்துள்ளது ;

கஉ—ரு. யாக்கை இன்னுயிர் கழிவது ஆயினும் - நமது யாக் கையினின்றும் இனிய உயிர் பிரிவதாயினும், காம நோயெனச் செப் பாதீமே - இது காம நோயால் உண்டாயதென இங்ஙனம் விளங்க உரையாதே.

(முடிபு) நோழி வாழி ! அன்னைக்கு நின் மகள் உண்கண் பசலை, நாடன் மார்பைக் காரணமாக வுடைத்தென அறிவிப்பேம்கொல், அறிவியேம் கொல்லென இருபாற்பட்ட சூழ்ச்சி ஒருபாற் சேர்ந்தன்று ; இன்னுயிர் கழிவதாயினும் காம நோயெனச் செப்பாதீம்.

(பாடம்) 1. மாற்றார் மோர் மகளுக் கொற்றங்கொற்றனுக்.

(வி - ரை.) வலத்தல் - சுற்றுதல். வள்ளி - கொடி; [1]"வாடிய வள்ளி முதலரிந் தற்று" என்பது காண்க. பொன் ஏர் - பொன் போலும் அழகிய என்றுமாம்.

பூசல் - புலி புலீ என்னும் ஆரவாரம்; அச்சத்தை விளைப்பதாகலின், இன்ன விசைய என்றார். வேங்கை மலர் பறிப்பார் புலி புலி என்று கூவுதல், 'ஒலிசினை வேங்கை கொய்குவஞ் சென்றுழிப், புலி புலி யென்னும் பூச லிருன்ற' (சுஅ) என முன்னரும் வந்துளது.

ஏ கல் - மிக்க கல்: [2]"ஏ பெற்றருகும்" என்பது உரியியல். அறியலம் என்ற பாடத்திற்கும் அறிவியேம் எனப் பிறவினைப் பொருளே கொள்க.

மார்பு உடைத்து - மார்பினைக் காரணமாக உடையது என விரிக்க. காமநோ யெனச் செப்பாதீமே - ஆராய்ந்து காணுமாறு குறிப்பினாற் சொல்லுக என்றபடி.

(உ - றை.) 'வேங்கையைக் கொடி சூழ, அவ் வேங்கையிலே அலர் உண்டான அளவில், ஆண்டு வாழும் மகளிர் புலி புலி யென்று பூப்பறித்தற்குச் சென்ன அரவத்தாலே ஊரெல்லாம் ஆரவாரித்தாற்போல, அவரை நாம் தலைப்பெய்த அளவிலே, அலர் பிறந்ததாக, அவ்வலர் முதற் சீராலே முழுமூ முழுமுத்துப் பின்னை யெல்லாரும் அறிந்தது என்றவாறு' என்றனர் குறிப்புரைகாரர்.

(மே - ள்.) [3]'மறைந்தவற் காண்டல்' என்னுஞ் சூத்திரத்து, 'விட்டுயிர்த் தழுங்கினும்' என்பதற்கு, கரந்த மறையினைத் தலைவி தமர்க்கு உரைத்தற்குத் தோழிக்கு வாய்விட்டுக் கூறி, அக் கூறிய தனையே தமர் கேட்பக் கூறுது தவிரினும் எனப் பொருள் கூறி, அதற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டி, இது சிறைப்புறம் என்றும், [4]'செறிவு நிறையும்' என்னும் சூத்திரத்து, இவை உடையளெனவே (தலைவி) மறை புலப்படுத்தற்கு உரியள் அல்லள் என்று கூறி, 'இன்னுயிர் கழிவ தாயினும் . . . செப்பாதீமே' என்றது அவ்விலக்கணத்ததாம் என்றும் கூறினர் நச்.

[5]'முட்டுவயிற் கழறல்' என்னுஞ் சூத்திரத்து. 'முனிவு மெய்ந்நிறுத்தல்' என்பதற்கு, 'இன்னுயிர் கழிவ தாயினுஞ் . . . செப்பாதீமே' என்பதனை எடுத்துக் காட்டி, இது வாழ்க்கை முனிந்து தலைமகள் சொல்லியது என்றார் பேரா.

---

53. பாலை

[வற்புறுக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

அறியாய் வாழி தோழி யிருளற
விசும்புடன் விளங்கும் விரைசெலல் நிவிரிக்
கடுங்கதிர் எறிந்த விடுவாய் நிறைய
நெடுங்கால் முருங்கை வெண்பூந் தாஅய்

---

1. குறள். கஉ0ச. 2. தொல். உரி. அ. 3. தொல். களவு. உ0.
4. தொல். பொருளியல். கடு. 5. தொல். மெய்ப்பாடு. உக.

டு நீரற வறந்த நிரம்பா நீளிடை
வள்ளெயிற்றுச் செந்நாய் வருந்துபரிப் பினவொடு
கள்ளியங் காட்ட கடத்திடை உழிஞ்சில்
உள்ளுன் வாடிய சுரிமூக்கு நொள்ளை
பொரியரை புதைந்த புலம்புகொள் இயவின்
கஎ விழுந்தொடை மறவர் வில்லிட வீழ்ந்தோர்
எழுத்துடை நடுகல் இன்னிழல் வதியும்
அருஞ்சுரக் கவலை நீந்தி யென்றும்
இல்லோர்க் கில்லென் றீயவது கரத்தல்
வல்லா நெஞ்சம் வலிப்ப நம்மினும்
கடு பொருளே காதலர் காதல்
அருளே காதலர் என்றி நீயே.

—சீத்தலைச் சாத்தனார்.

(சொ - ள்.) க—டு. தோழி வாழி - . இருள் அற விசும்பு உடன் விளங்கும் - இருள் நீங்க வானிட மெல்லாம் விளங்குதற்கு ஏதுவாய, விரை செலல் நிகரி - விரைந்து செல்லும் ஞாயிற்றின், கடுங் கதிர் எறித்த - கடிய கதிர் எறித்தலாலாகிய, விடுவாய் நிறைய - பிளப்பிடம் நிறையும்படி, நெடுங் கால் முருங்கை வெண்பூத் தாஅய் - நீண்ட அடியினையுடைய முருங்கையின் வெள்ளிய பூக்கள் பரக்க, நீர் அற வறந்த நிரம்பா நீள் இடை - நீர் அற்றுப் போயதால் வறட்சியுற்றதும் செல்லத் தொலையாததுமாய நீண்ட இடத்தினையுடைய,

சு—கசு. வள் எயிற்றுச் செந்நாய் - கூரிய பற்களையுடைய செந்நாய், வருந்து பரிப் பினவொடு - பசியால் வருந்துந் தன் பினவோடு, கள்ளிக் காட்ட கடத்திடை - கள்ளிக் காட்டினையுடைய கடத்திலே, உழிஞ்சில் - (கோழுரையினதாகிய) வாகை மரத்தின, உள் ளுன் வாடிய சுரிமூக்கு நொள்ளை - உள்ளிருக்கும் ளுன்வாடப் பெற்ற சுரிந்த மூக்கினையுடைய சிறு நத்தைகள், பொரியரை புதைத்த - பொரியரையுடையது போலாக மூடிக்கொண்டிருக்கும், புலம்புகொள் இயவின் - தனிமை கொண்ட நெறியில், விழுத் தொடை மறவர் வில்லிட - சிறந்த அம்பினை மறவர்கள் வில்லில் வைத்தெய்ய, வீழ்ந்தோர் எழுத்துடை நடுகல் இன்னிழல் வதியும் - இறந்து கிடப்போரது (பெயரும் பீடும் எழுதிய) எழுத்துக்களையுடைய நடுகல்லின் இனிய நிழலிலே தங்கியிருக்கும், அருஞ் சுரக் கவலை நீந்தி - அரிய பாலையிலே கவர்பட்ட நெறியினைக் கடந்து, என்றும் இல்லோர்க்கு இல்லென்று - எந்நாளும் வறியார்க்கு இல்லையென்று கூறி, இயைவது கரத்தல் வல்லா நெஞ்சம் வலிப்ப - இயைவதைச் செய்யாது கரத்தல் மாட்டாத நெஞ்சம் வற்புறுத்தலின், நம்மினும் பொருளே காதலர் காதல் - நம் காதலர் காதலித்தது நம்மினுங் காட்டில் பொருளேயாகும், அருளே காதலர் என்றி நீயே - நீயோ காதலர் காதல் நம்பால் அருள் செயலே என்றுநின்றாய்; அறியாய் - ஆதலால் நீ அறியாய்காண்.

(முடிபு) தோழி வாழி! நீளிடைக் கடத்திடை இயவில் நாய் பினவொடு நடுகல் நிழலில் வதியும் சுரக்கவலம் நீந்திக் காதலர் காதலித்தது பொருளே; நீ அருளே என்றி; அறியாய்.

(வி - ரை.) விளங்கும் திதிரி - விளங்குதற்கு ஏதுவாய திதிரி; விசும்பில் விளங்கு மெனலுமாம். எறித்த விடுவாய்: பெயரெச்சம்; காரணப் பொருட்டு; ஆறு சென்றவியர் என்றுற் போல. விடுவாய் - பிளப்பு. கடம் - கன்னிலம். நொள்ளை - நத்தையினமாகிய சிறு பூச்சிகள். விழுத்தொடை - தப்பாத தொடையுமாம். தொடை - தொடுத்தல். வேறு நிழலின்மையின் கல்லின் நிழல் இனிய நிழலா யிற்று. பொருள் இல்லாதிருக்கச் செய்தே 'முயன்று தேடும் வலி யுடையராயிருந்து இரவலர்க்குப் பொருள் இல்லை யென்னின் அது வும் இயைவது காரத்தலாகும் என்பது பெற்றும்.

காதல் - காதலித்தது. நீந்திக் காதலித்தது பொருளே யென்க. அருளே காதலர் என்பதற்கு, அருளையே காதலித்தலுடையர் என்ற லுமாம்.

(மே - ள்.) [1]'புணர்தல் பிரிதல்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுளை எடுத்துக் காட்டி, 'இது பிரிதல் நிமித்தம்; வற்புறுத்தும் தோழிக்குத் தலைவி கூறியது' என்றும் [2]'நிகழ்ந்த நினைத்தற் கேதுவுமாகும்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுள் தலைவன்கண் நிகழ்ந்தது தலைவி நினைந்து தோழிக்குக் கூறியது என்றுங் கூறினர் நச்.

---

54. முல்லை

[வினைமுடித்து மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது]

விருந்தின் மன்னர் அருங்கலந் தெறுப்ப
வேந்தனும் வெம்பகை தணிந்தனன் நம்பெயற்
காரும் ஆர்கலி தலையின்று தேரும்
ஓவத் தன்ன கோபச் செந்நிலம்
வள்வாய் ஆழி உள்ளுரு புருளக்
கடவுக காண்குவம் பாக(ம்)நனைநடைத்
தாம்பசை குழவி வீங்குசுரை மடியக்
கானயலங் குரல காற்பரி பயிற்றிப்
படுமணி மிடற்ற பயநிரை யாயம்
கொடுமடி புடையர் கோற்கைக் கோவலர்
கொன்றையங் குழலர் பின்றைந் தூங்க
மனைமனைப் படரும் நனைநகு மாலைத்
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்ணிலைப்
[3]புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்

---

1. தொல். அகத். கசு. 2. தொல். அகத். சக. (பாடம்) 3. புன் கால் நெல்லி.

நீர்குடி சுவையில் தீவிய மிழற்றி
முகிழ்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்
பொன்னுடைத் நானி யெல்மகள் ஒப்பி
வருபுவை யாயில் தருகுவென் பாலென
உ0 விலங்கமர்க் கண்ணள் விரல்விளி பயிற்றித்
திதலை யல்குலெங் காதலி
புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலையே.

—[1]மாற்றார் கிழார் மகனார் கோற்றங் கோற்றனார்.

(சொ - ள்.) கூ. பாக - பாகனே!

க—ங. விருந்தின் மன்னர் - புதிய அரசர், அருங்கலம் தெறுப்ப - நிறையாக அரிய அணிகலன்களைக் குவிப்ப, வேந்தனும் வெம் பகை தணிந்தனன் - நம் அரசனும் கொடிய பகைமை தணியப்பெற்றனன்; நீம் பெயல் காரும் ஆர்கலி தகுயின்று - மிகவும் இனிய பெயலை மிக்க ஒலியுடன் பெய்தது;

ங—சு. ஓவத்து அன்ன கோபச் செந்நிலம் - ஓவியம் போன்ற இந்திர கோபத்தையுடைய சிவந்த நிலத்தே, தேரும் வள் வாய் ஆழி உள் உறுபு உருள - தேரினை அதன் உறுதி வாய்ந்த உருளை நிலத்தே பதிந்து உருண்டுவர, கடவுக - செலுத்துவாயாக;

சு—கஉ. படுமணி மிடற்ற பயநிரை ஆயம் - ஒலிக்கும் மணி கட்டிய கழுத்தினையுடைய பாற்பசுக்களாகிய இனம், கொடு மடி உடையர் - வளைந்த மடிகோலிய உடையினராகிய, கோல் கைக் கோவலர் - கோலைக் கையிலுடைய இடையர், கொன்றை அம் குழலர் பின்றைத் தூங்க - கொன்றையினது களியாளுய அழகிய குழலினை யிசைப்பவராய்ப் பின்னே மெத்தென நடந்துவர, மதவு நடைத் தாம்பு அசை குழவி - செருக்கிய நடையினையுடைய தாம்பிற் பிணிக்கப்பெற்ற இளங்கன்றுகளிடத்தே, வீங்கு சுரை மடிய - பெருத்த மடி கரையவேண்டி, கனையலங் குரல - கனைக்கின்ற குரலவாய், கால் பரி பயிற்றி - காலால் விரைதலைப் பயிலச்செய்து, மனை மனைப் படரும் - மனைதோறும் செல்லும், நனை நகு மாலை - அரும்புகள் மலரும் மாலைக் காலத்தே;

கஎ—சு. தனக்கென வாழாப் பிறர்க்கு உரியாளன் - தனக்கென்றே வாழாத பிறர்க்கெல்லாம் உரியவனுகிய, பண்ணன் சிறு குடிப் படப்பை - பண்ணன் என்பானது சிறுகுடியைச் சார்ந்த தோட்டத்தில் உள்ள, நுண் இலைப் புன்காழ் நெல்லி - சிறிய இலையினையும் புல்லிய வித்தினையுமுடைய நெல்லியின், பைங்காய் தின்றவர் - செவ்விக் காய்களைத் தின்றவர், நீர்குடி சுவையில் - நீர் குடித்த காலை எழும் சுவைபோல,

கசு—உஉ. முகிழ் நிலாத் திகழ்தரு மூவாத் திங்கள் - அரும்பும் நிலவினைச் சிளங்கும் இனிய மதியே!

(பாடம்) 1. கொச்சி யியமன்மோர் மகனார் ...

பொன்னுடைத் தாலி என்மகன் ஒற்றி-பொன்னுலாய தாலியினையுடைய என் மகனை நினைந்து, வருகுவையாயின்-இவண் வருதியாயின், தருகுவன் பால் என - நினக்கும் பால் தருவேன் என, நீவிய மிழற்றி-இனிய மொழிகள் கூறி, விலங்கு அமர்க் கண்ணள் - ஒருக்கணித்து நோக்கும் அமரிய கண்ணினளாய், விரல் விளி பயிற்றி - விரலால் அழைத்தலைப் பயிலச் செய்து, புதல்வற் பொய்க்கும்-தன் புதல்வனைத் தன் கருத்துணராமை மறைக்கும், நிதலை அல்குல் எம் காதலி பூங்கொடி நிலை - தேமல் அரிந்த அல்குலினையுடைய எம் காதலியாய பூங்கொடி போல்வாள் நிலையினை,

கூ. காண்குவம் - காண்போம்.

(முடிபு) பாக! வேந்தனும் பகை தணிந்தனன்; காரும் தலைஇன்று; தேரும் கடவுக: நீவிய மிழற்றி, விளிபயிற்றிப் புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலை காண்குவம்.

ஆயம் மினமினப் படரும் மாலை எனவும், நிங்கள் வருகுவையாயின் தருகுவென் பாலென விளி பயிற்றிப் பொய்க்கும் பூங்கொடி எனவும் இயையும்.

(வி - ரை.) விருந்தின் மன்னர் - புதியராய் மாறெற்ற அரசர். வேந்தனும் பகை தணிந்தனன் என்றமையால் தலைவன் வேந்தற் குற்றுழிப் பிரிந்தானுயிற்று. நச்சினார்க்கினியர் கருத்தின்படி இது அந்தணன் தூதிற் பிரிந்ததாகும் என்க. உள்ளுறுதல் நிலத்தின் சாரத்தால் என்க.

குழவி பாலுண்ண வேண்டி என்பார் குழவியிடத்து வீங்குசுரை மடிய என்றார்.

கொடுமடி - அடகு பறித்திடுதற்கு வலைத்துக்கட்டிய மடி. சிறுகுடி - காவிரியின் வடவயிலுள்ளதோர் ஊர். நிங்கள், விளி. என் மகன் ஒற்றி-என் மகன் நினைக்க என்றுமாம். இங்கு ஒற்ற எனத் திரிக்க.

(மே - ள்.) [1]'நிணமயக் குறுதலும்' என்னுஞ் சூத்திரத்து, 'இச்செய்யுள் கார்காலத்து மீள்கின்றுன், முகிழ்நிலாத் நிகழ்தற்குச் சிறந்த வேனி லிறுதிக்கண் தலைவிமாட்டு நிகழ்வன கூறி, அவை காண்டற்குக் கடிது தேரைச் செலுத்தென்றது; இது முல்லைக்கண் வேனில் வந்தது' என்றும்; [2]'அவற்றுள் ஒதலும் தூதும் உயர்ந்தோர் மேன' என்னுஞ் சூத்திரத்து 'இப்பாட்டில், வேந்தன பகைமையைத் தான் தணிவித்தமை கூறலின் அந்தணன் தூதிற் பிரிந்தமை பெற்றும்' என்றும் கூறினர் நச்.

---

1. தொல். அகத். கூ. 2. தொல். அகத். உசு.

கஉஉ

55. பாலை

[புணர்ந்துடன் போன தலைமகட்கு இரங்கிய தாய் தெருட்டும் அயலிலாட்டியர்க்கு உரைத்தது.]

காய்ந்து செலற் கனலி கல்பகத் தெறுதலின்
நீந்து குருகுருகும் என்றூழ் நீளிடை
உளிமுக வெம்பரல் அடிவருத் துருலின்
விளிமுறை அறியா வேய்கரி கானம்
வயக்களிற் றன்ன காளையொ டென்மகள்
கழிந்தநற் கழிந்தன்றோ இலனெ னொழிந்தியான்
ஞாலுலக் குருகின் உள்ளுயிர்த் தனைஇ
வேவது போலும் வெய்ய நெஞ்சமொடு
கண்படை பெறேஎன் கனவ ஒண்படைக்
கரிகால் வளவனெ டெண்ணிப் பறந்தலைப்
பொருதுபுண் ணணிய சேர லாதன்
அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென
இன்னு மின்னுரை கேட்ட சான்றோர்
அரும்பெறல் உலகந் தவனெ டெலீஇயர்
பெரும்பிறி தாகி யாங்குப் பிறிந்நிவண்
காதல் வேண்டியென் றுறந்து
போதல்செல் லாவென் உயிரொடு புலந்தே.

—மாமூலனார்.

(சொ - ள்.) கூ—சூ. காய்ந்து செலல் கனலி - வெம்மையுற்றுச் செல்லுதலையுடைய ஞாயிறு, கல் பகத் தெறுதலின் - மலை பிளக்கக் காய்ந்திடலால், நீந்து குருகு உருகும் என்றூழ் நீளிடை - கடந்து செல்லும் பறவைகள் இனைதற்கு ஏதுவாகிய வெப்ப மிக்க நீண்ட விடத்தே, உளிமுக வெம்பரல் - உளி போலும் வாயையுடைய கொடிய பரற் கற்கள், அடி வருத்துருலின் - அடியிற் பதிந்து வருத்துதலின், விளிமுறை அறியா - இறக்கும் இடம் இன்னது என்று அறியலாகாத, வேய்கரி கானம் - மூங்கில் கரிந்தொழியுங் காட்டில், வயக்களிற்றன்ன காளையொடு - வலிய களிற்றினை யொத்த காளையுடன், என்மகள் கழிந்ததற்கு அழிந்தன்றோ இலன் - என்மகள் உடன் போயதற்கு வருந்தினேன் அல்லேன்;

சூ—கூ. யான் ஒழிந்து-யான் அவளைப் பிரிந்திருந்து, ஞாலுலக் குருகின் - உலகக்கண் ஞாலும் துருத்திபோல, உள் உயிர்த்து அசைஇ-வெய்துயிர்த்து உள்மெலிந்து, வேவது போலும் வெய்ய நெஞ்சமொடு - நீயில் வேவது போலும் வெவ்விய நெஞ்சமொடு, கண்படை பெறேஎன் கனவ - கண் துயிலலையும் வாய் வெருவிப் புலம்ப,

கூ—கூ. ஒண்படைக் கரிகால் வளவனெடு-ஒளிதங்கிய படையினையுடைய கரிகால் வளவனெடு, வெண்ணிப் பறந்தலைப் பொருது-வெண்ணிப் போர்க்களத்தே போர் செய்து, புண் ணாணிய - புறப்

புண் பட்டமைக்கு நாணின, சேரலாதன்-பெருஞ் சேரலாதன், அமிகள மருங்கின் - பொருதழிந்த களத்தின் புறத்தே, வாள் வடக்கு இருந்தென - வாளொடு வடக்கிருந்தானாக, இன்ன இன்னுரை கேட்ட சான்றோர் - அச்செய்தியாகிய இன்னுமையும் இனிமையும் உடைய உரையினைக் கேட்ட பெரியோர், அரும்பெறல் உலகத்து - பெறுதற்கரிய துறக்கத்திற்கு, அவனெடு செலீஇயர் - அவனோடு செல்லும் பொருட்டு, பெரும்பிறிது ஆகியாங்கு - உயிர் நீத்தாங்கு,

கடு—எ. இவண் காதல் வேண்டி - இவ்வுலகத்து ஆசையை விரும்பி, என் துறந்து பிறிந்து - என்னை விட்டுப் பிரிந்து, போதல் செல்லா என் உயிரொடு - போதலைச் செய்யாத என் உயிரோடு. புலந்து - நொந்தேன்.

(முடிபு) *யான் கானம் என் மகள் கழிந்ததற்கு அழிந்தன்றே இலன்; நெஞ்சமொடு கனவப் போதல் செல்லா என் உயிரொடு புலந்தேன்.*

கழிந்ததற்கு உயிரொடு புலந்து, அழிந்தன்றே விலன் எனக் கூட்டி முடித்தலுமாம்.

(வி - ரை.) சேரலாதன் வடக்கிருந்தெனக் கேட்ட சான்றோர் அவனெடு செலீஇயர் பெரும் பிறிதாகியாங்கு என் துறந்து போதல் செல்லா உயிர் என்க. உரும் - உறுதல். விளிமுறை அறியா - இன்னவிடத்தில் இன்ன துன்பம் வருமென்றறியாத. அழிந்தன்றே: ஓ - ஒழியிசை. வாள் - வாளொடு. இன்ன இன்னுரை - மரிக்கின்றான் என்பதனால் இன்னுமையும், புறப்புண்பட்ட பழிநீர இருந்து உயிர் விடுகின்றான் என்பதனால் இனிமையும் உடைய உரை. அரும் பெறல் உலகம் - வீரர் எய்தும் துறக்கம். புலந்து - புலந்தேன்; தன்மை வினைமுற்று. சான்றோர் தமக்கு அயன்மை யுடையான் வடக்கிருந்த வழியும் அவனெடு செல்லுதற்கு உயிர் துறந்தனர்; யானே என் மகளைப் பிரிந்தும் போகாத உயிருடன் கூடியுள்ளேன் என்று வெறுத்தாள் என்க.

(மே - ள்). [1]'தாய்க்கு மூரித்தாற் போக்குடன் கிளப்பின்' என்னுஞ் சூத்திரத்து. இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும், 'கண் படை பெறேன் கனவ' என்பதனை எடுத்துக் காட்டி, முறையே உடன்போக்கின்கண் நற்றாய்க்கும் கனவு உரித்தாயிற் றெனவும், செவிலித் தாய்க்கும் கனவு உரித்தாயிற் றெனவும் கூறினர்.

---

56. மருதம்

[பரத்தை மனைக்குச் செல்கின்ற பாணன் தன் மனைக்கு வந்தானுகத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

நகையா கின்றே தோழி நெருநல்
மணிகண் டன்ன தூநிகயந் தூளங்க

---

1. தொல். பொருளியல், ச.

கடசி

இரும்பியல் றன்ன கருங்கோட் டெருமை
ஆம்பல் மெல்லடை கிழியக் குவளைக்
கூம்புவிடு பன்மலர் மாந்திக் கரைய
காஞ்சி நுண்டா நீர்ம்புறத் துறைப்ப
மெல்லிடு கவுள அல்குநீழ் புகுநரும்
நுண்டுறை யூரன் றண்டார் அகலம்
வதுவை நாளணிப் புதுவோர்ப் புணரிய
பரிவொடு வருஉம் பாணன் றெருவில்
புனிற்றாய்ப் பாய்ந்தெனக் கலங்கி யாழிட்
டெம்ம வூர்ப் புகுந்த நோனே அதுகண்டு
மெய்ம்மலி உவகை மறையினென் எதிர்சென்
றும்மனை அன்றஃ தும்மனை என்ற
என்னுந் தன்னும் நோக்கி
மம்மர் நெஞ்சினென் றொழுதுநின் றதுவே.

—மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்.

(சொ - ள்.) க. தோழி -,

க—கo. நெருநல் - நேற்று, மணிகண்டன்ன தணிகயம் தளங்கு-பளிங்கு மணியினைக் கண்டாற்போலும் தெளிந்த குளம் கலங்க, இரும்பு இயன்றன்ன கருங்கோட்டு எருமை - இரும்பாற் செய்தா லொத்த கரிய கொம்பினையுடைய எருமைகள், ஆம்பல் மெல் அடை கிழிய-ஆம்பலின் மெல்லிய இலைகள் கிழிய, குவளைக் கூம்புவிடு பன் மலர் மாந்தி - குவளையின் குவிதல் நீங்கிய பல மலர்களையும் நிறையத் தின்று, கரைய காஞ்சி நுண்தாது ஈர்ம் புறத்து உறைப்ப-கரையின்கண்ணுள்ள காஞ்சியின் நுண்ணிய தாது ஈரமுடைய உடம் பின் புறத்திலே சிந்த, மெல்லிடு கவுள - அசையிடும் தாழ் வாயின வாய், அல்குநீழ் புகுதரும் - தாம் தங்கும் கொட்டிலில் வந்து புகும், தண்துறை ஊரன் திண்தார் அகலம் - குளிர்ந்த துறையினையுடைய ஊரனது நிண்ணிய மாலையினைத் தரித்துள்ள மார்பினில், வதுவை நாள்அணிப் புதுவோர்ப் புணரிய - வதுவைக் காலத்து ஒப்பனை யையுடைய பரத்தையரைப் புணர்க்க, பரிவொடு வருஉம் பாணன்-அவாவுடன் வந்த பாணன்.

கo—உ. தெருவில் புனிற்று ஆ பாய்ந்தெனக் கலங்கி-தெருவில் ஈன்ற அண்மையுடையதோர் ஆ தன்னைப் பாய்ந்தணுகையாற் கலக்க முற்று, யாழிட்டு - யாழினைக் கீழே போகட்டு, எம்மனைப் புகுந்த தோன் - எம்மில்லின்கண் புகுந்தான்;

கஉ—சு. அது கண்டு —, மெய்ம்மலி உவகை மறையினென்-உடல் விம்ம எழுந்த உவகையை மறைத்து, எதிர் சென்று - அவன் எதிரே சென்று, உம்மனை இம்மனையன்று அஃது என்ற - உங்கள் மனை இம்மனையன்று அதுவாகும் என்று கூறிய, என்னும் தன்னும் நோக்கி - என்னையும் தன்னையும் பார்த்து, மம்மர் நெஞ்சினென்-

மயங்கிய நெஞ்சினளாய், தொழுது நின்றது - என்னைத் தொழுது நின்ற நிலை.

க. நகையாகின்று - நகையை விளைப்பதாகின்றது.

(முடிபு) தோழி, ஊரன் அகலம் புதுவோர்ப் புனைய வரும் பாணன், புலர்ந்துப் பாய்ந்தெனக் கலங்கி, யாழ்இட்டு எம்மனைப் புகுந்தான்தோள்; அதுகண்டு எதிர் சென்று இம்மனை யன்று அஃது என்ற என்னுந் தன்னும் நோக்கி மம்மர் நெஞ்சினள் தொழுது நின்றது: நகையாகின்று.

(வி - ரை.) மணி - பளிக்குமணி. துணி - தெளிவு. குவளை கூம்பு விடுமலர் என்றமையால், ஆம்பல் குவிதல் பெற்றும். புகுதரும் என்னும் எச்சம் ஊரன் என்பதன் முதலிலே கொண்டு முடியும். புது வோர் - புதிய பரத்தையர். நோக்கி - நோக்கல் நோக்கம். என்னும் தன்னும் நோக்கி - யான் இகழுதலையும் தனது இளிவையும் கருதி. தொழுது நின்றது நகையாகின்று என்றது பிறன் பேதைமை பொருளாக நகை யென்னும் மெய்ப்பாடு தோன்றியது.

(உ - றை.) "இரும்பியன்றன்ன கருங்கோட் டெருமை கயங்கலங்க ஆம்பல் மெல்லடை கிழியக் குவளைக் கூம்புவிடு பன்மலரை மாந்திக் காஞ்சிநுண்டாது புறத்துறைப்ப மெல்கிடு கவுளவாய்த் தங்கு நிலைக்கட் புகுதரு மென்றது, இரும்பு போன்ற நெஞ்சினை யுடையராகிய பரத்தையர் ஊர்முழுதுங் கலங்கத் தான் முன்பு கூடின பரத்தையர் தாய்மார் கலங்க, அப்பரத்தையர் அவ் வாம்பற் பூப்போலக் குவியக், குவிதல் விட்ட குவளை மலர்போலும் பூப்பெய்து கொள்ளப்பட்ட பரத்தையரை நுகர்ந்து வருகின்ற காலத்து, வழியிலகப்பட்ட சேடியர் முதலாயினரை நுகர்ந்து, பின்னுஞ் சிலரைக் கூடக் கொடுநாக் கெறிந்துகொண்டு நம் மனையிலே தங்குதற் பொருட்டு வருகின்றான் என்று தோழிக்கு வாயில் மறுத்தது" என்பது குறிப்புரை.

(மே - ள்.) [1]'எள்ள விளைமை' என்னுஞ் சூத்திரத்து, 'நகையாகின்றே தோழி . . .' என்பது, எள்ளல் பொருளாக நகை பிறந்ததென்று இளம் பூரணரும், 'பிறன் பேதைமை பொருளாக நகை பிறந்த' தென்று பேராசிரியரும் கூறினர்.

---

57. பாலை

[பொருள்வயிற் பிரிந்த தலைமகன் நிமித்தியை நினைந்து சொல்லியது.]

சிறுபைந் தூவிச் செங்காற் பேடை
நெடுநீர் வானத்து வாவுப்பறை நீந்தி
வெயிலவிர் உருப்பொடு வந்துகனி பெருஅது
பெறுநாள் யானர் உள்ளிப் பையாந்து
இகுலைக் கற்ற புல்லென் உலவைக்

---

1. தொல். மெய். ச.

வளர்தல். இடம் பார்த்து : இடம் - காலம். ஒற்றி நிற்கும் நிலை யென விரித்துரைக்க.

எல்லோரும் இனிது உறங்கும் கங்குலில் தான் உறக்கமிவ்வி இங்ஙனம் நிற்கும் நிலை இனிதாயிற்றென்று தலைவி கூறினும், குறிப் பினுல் வாடையால் எய்திய வருத்தத்தை உணர்த்தினுள் ஆவள் என்க. கொடிச்சியர் தந்தையர் தாம் செய்தொழிற்கு இடம் பெறுது கூதிர்க் காலத்து இல்லிலே செறியும் குன்ற நாட என்றது, புறத்து விளையில்லாக் காலத்து எம்மை நினைக்கின்றாய் என்னுங் குறிப்பிற்று.

(மே-ள்.) [1]'மறைந்தவற் காண்டல்' என்னுஞ் சூத்திரத்து, 'பெற்றவழி மலியினும்' என்பதற்கு இச் செய்யுளை எடுத்துக் காட் டினர் நச்.

[2]'விளையுயிர் மெலிவிடத்து' என்னுஞ் சூத்திரத்து, உயிர் மெலிந்த விடத்துப் புணர்ச்சி நிமித்தமெனக் கூறப்பட்டவை யின்றி யும் புணர்ச்சி நிகழ்ந்ததற்கு, 'வணங்குவரல் . . . இனிதாகின்றே' என்னும் பகுதியை எடுத்துக் காட்டினர் பேரா.

---

59. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட நிமித்திக்குத் தோழி சொல்லியது.]

தண்கயந் தமன்ற வண்டுபடு தூமலர்ப்
பெருந்தகை இழந்த கண்ணினை பெரிதும்
வருந்தினை வாழியர் நீயே வடாஅது
வண்புனல் தொழுதை வார்மணல் அகன்றுறை
அண்டர் மகளிர் தண்டழை உடீஇயர்
மரஞ்செல மிதித்த மாஅல் போலப்
புன்றலை மடப்பிடி உணீஇயர் அங்குழை தாஅய்
நெடுநிலை யாஅம் ஒற்றி நனைகவுள்
படிஞிமிறு கடியும் களிறே தோழி
கூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்
[3]சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை
இன்றீம் பைஞ்சுனை ஈரணிப் பொலிந்த
தண்ணறுங் கழுநீர்ச் சென்னியற் சிறுபுறம்
நாம்பா ராட்டிய காலையும் உள்ளார்
வீங்கிறைப் பணைத்தோள் நெறிழச் சேய்நாட்
டருஞ்செயற் பொருட்பிணி முன்னிநப்
பிரிந்துசேண் உறைநர் சென்ற ஆறே.

—மதுரை மருதனிளநாகன்.

---

1. தொல். களவு. உ0. 2. தொல். மெய்ப். உ0. (பாடம்.) 3. சீர்மிகு முருகன்.

கொந்து வருந்தி, பானட் கங்குலும் பகலும் - நடு இரவிலும் பகலிலும், ஆனது அழுவோள் - ஒழியாது அழுதிருக்கும் நம் தலைவியின், ஆய் சிறு நுதல் - அழகிய சிறிய நெற்றி,

கந—ரு. பசுநிலா விரிந்த பல்கதிர் மதியில் - குளிர்ந்த நிலா விரிந்த பல கதிர்களையுடைய மதியைப்போலும், பெருநல் ஆய்கவின் ஓரீஇ - பெரிய சிறந்த ஆராயும் அழகு நீங்க, சிறு பீர் வீ ஏர் வண்ணம் கொண்டன்று கொல் - சிறிய பீர்க்கினது பூவினை ஒத்த நிறம் கொண்டதோ.

(முடிபு) குன்ற வைப்பின் என்றூழ் நீளிடை, யாம் எமியமாக, வருந்திப் பெரிதழிந்து அழுவோள் சிறுநுதல் மதியின் கவின் ஓரீஇப் பீர் வீ ஏர் வண்ணம் கொண்டன்று கொல்.

பேடை நீந்தி வந்து பெருது உள்ளிப் பையாந்து எக்கற்ற நீளிடை எனவும், இற்றி நெடுவீழ் துறுகற் றீண்டி யானை நிவப்பிற் றூங்கும் நீளிடை எனவும் கூட்டுக.

(வி - ரை.) வாவுப்பறை கனி பெருது என்ற குறிப்புக்களால் செங்காற்பேடை என்பது வாவற்பேடை யென்பது பெற்றும்; வாவிப் பறத்தலின் இது வாவலெனப் பெயர் பெறுவதாயிற்று: இது வெளவால் எனவும் வழங்கப்பெறும். வாவல் கனிகளை விரும்பியுண்பதென்பது, [1]'அருகல தாகிப் பலபழுத்தக் கண்ணும், பொரிதாள் விளவினை வாவல் குறுகா', [2]'மரம் பழுத்தால் வெளவாலே வாவென்று கூவி, இரந்தழைப்பார் யாவருமிங் கில்லை' என்பவற்றாலும், [3]'பளிக்கறைப் பவளப் பாவை' என்னுஞ் செய்யுளில், அஞ்சிறைப் பறவை என்பதற்கு வாவல் எனப் பொருள்கொண்டு, 'கண்ணுள் கனியை யொத்தாள், . . . அயில்கின்ற வேந்தன் வாவலை யொத்தான்' என உரை கூறியிருத்தலாலும் பெறப்படும். ஏக்கறுதல் - ஆசையிற் ருழ்தல். ஓரீஇ-ஒருவ எனத் திரிக்க. கொல்-ஐயம். ஓ, அசை.

---

58. குறிஞ்சி

[சேட்படுத்து வந்த தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.]

இன்னிசை உருமொடு கனைதுளி தலைஇ
மன்னுயிர் மடிந்த பானட் கங்குல்
காடுதேர் வேட்டத்து விளிவிடம் பெரு அது
வரியதள் படுத்த சேக்கைத் தொரியினைந்
தேனுறு கதுப்பிற் கொடிச்சியர் தந்தை
கூதிரிற் செறியுங் குன்ற நாட
வனைந்துவரல் இளமூலை ஞெமுங்கப் பல்லூழ்
விளங்குதொடி முன்கை வளைந்துபுறஞ் சுற்ற
நின்மார் படைதலின் இனிநா கின்றே

---

1. நாலடியார், உக. 2. நல்வழி, ஈ0. 3. சிவ, ககஉ.

கo நும்மில் புலம்பினும் உள்ளுதொறு நலியும்
தண்வரல் அசைஇய பண்பில் வாடை
பதம்பெறு கல்லா நடம்பார்த்து நீடி
மஃமரம் ஒசிய ஒற்றிப்
பலர்மடி கங்குல் நெடும்புற நிலையே.

—மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார்.

(சொ - ள்.) கo—கூ. கூதிர் - கூதிர்க்காலத்தில், இன்னிசை உருமொடு கனைதுளி தலைஇ - இனிய ஓசையுடைய இடியுடன் மிக்க மழை பெய்திட, மல்லுயிர் மடிந்த பானள் கங்குல் - நிலைபெற்ற உயிர்களெல்லாம் துயின்ற பாதியிரவில், தெரியிழை தேன்நாறு கதுப்பின் கொடிச்சியர் தந்தை - ஆராய்ந்தெடுத்த அணிகலனையும் தேன் நாறும் கூந்தலினையுமுடைய குறத்தியர் தந்தைமார், காடுதேர் வேட்டத்து - காட்டில் விலங்குகளை ஆராயும் வேட்டையில், விளி விடம் பெறாது - துயிலும் இடம் பெறாமல், வரி அதள் படுத்த சேக்கை - புலித்தோலினை விரித்துள்ள படுக்கையில், இல்செறியும் - இல்லிலே வந்து தங்கியிருக்கும், குன்ற நாட - மலைகள் பொருந்திய நாட்டின் தலைவனே,

கo—ச. நும் இல் புலம்பின் நும் உள்ளுதொறும் நலியும் - நும்மைப் பிரிந்திருக்கும் தனிமையில் நும்மை நினையுந்தோறும் வருத்தாநிற்கும், தண்வரல் அசைஇய - குளிர்ச்சியுடன் அசைந்து வருதலையுடைய, பண்பில் வாடை - இனிய பண்பில்லாத வாடைக்கு, பதம் பெறுகல்லாது - குறித்த பருவத்தில் நும் வருகையைப் பெறாது, இடம் பார்த்து நீடி - நீர் வருங் காலத்தை நோக்கித் தாழ்த்து, மஃமரம் ஒசிய ஒற்றி - மஃமரம முறிய வலித்து, பலர் மடி கங்குல் - பலரும் துயின்ற இரவில், நெடும் புற நிலை - நெடுங்காலம் புறத்தே நின்று கொண்டிருக்கும் எமது நிலை,

எ—கூ. வனைந்து வரல் இளமுலை ஞெமுங்க - பண்ணினாற்போல் எழும் இளமுலைகள் அழுந்த, பல்லாம் - பன்முறை, விளங்குதொடி முன்கை வலைந்து புறம் சுற்ற - விளங்கும் தொடிகளை யணிந்த முன்கை வலைந்து புறத்தினைச் சுற்றிக்கொள்ள, நின்மார்பு அடைதலின் - நின் மார்பை முயங்குதலினும், இனிதாகின்று - இனியதாயிற்று.

(முடிபு) குன்ற நாட! நும் உள்ளுதொறும் நலியும் வாடைக்கண், பதம் பெறுகல்லாது நீடி ஒற்றிக் கங்குலில் நிற்கும் புறநிலை, இளமுலை ஞெமுங்க முன்கை புறஞ்சுற்ற, நின்மார் படைதலின் இனிதாகின்று.

கொடிச்சியர் தந்தை, கூதிர்க் காலத்து, கங்குலில், வேட்டத்து, விளிவிடம் பெறாது சேக்கையில் இற்செறியும் குன்ற நாடு என்க.

(வி - ரை.) தலைஇ - பெய்து; பெய்ய எனத் திரிக்க. காடு தேர் - காட்டில் விலங்குகளைத் தேரும் என ஒரு சொல் வருவித்துரைக்க. விளிவிடம்-முடிவிடமுமாம். தந்தை - தந்தையர் என்க. வனைந்து வரல் - வனைந்தாற்போல் வரல்; வனைதல் - இயற்றுதல்; வரல் -

வளர்தல். இடம் பார்த்து : இடம் - காலம். ஒற்றி நிற்கும் நிலை யென விரித்துரைக்க.

எல்லோரும் இனிது உறங்கும் கங்குலில் தான் உறக்கமின்றி இங்ஙனம் நிற்கும் நிலை இனிதாயிற்றென்று தலைவி கூறினும், குறிப் பினுல் வாடையால் எய்திய வருத்தத்தை உணர்த்தினுள் ஆவள் என்க. கொடிச்சியர் தந்தையர் தாம் செய்தொழிற்கு இடம் பெறுது கூதிர்க் காலத்து இல்லிலே செறியும் குன்ற நாட என்றது, புறத்து விளையில்லாக் காலத்து எம்மை நினைக்கின்றாய் என்னுங் குறிப்பிற்று.

(மே-ள்.) [1]'மறைந்தவற் காண்டல்' என்னுஞ் சூத்திரத்து, 'பெற்றவழி மலியினும்' என்பதற்கு இச் செய்யுளை எடுத்துக் காட் டினர் நச்.

[2]'விளையுயிர் மெலிவிடத்து' என்னுஞ் சூத்திரத்து, உயிர் மெலிந்த விடத்துப் புணர்ச்சி நிமித்தமெனக் கூறப்பட்டவை யின்றி யும் புணர்ச்சி நிகழ்ந்ததற்கு, 'வணங்குவரல் . . . இனிதாகின்றே' என்னும் பகுதியை எடுத்துக் காட்டினர் பேரா.

---

59. பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட நிமித்திக்குத் தோழி சொல்லியது.]

தண்கயந் தமன்ற வண்டுபடு தூமலர்ப்
பெருந்தகை இழந்த கண்ணினை பெரிதும்
வருந்தினை வாழியர் நீயே வடாஅது
வண்புனல் தொழுதை வார்மணல் அகன்றுறை
அண்டர் மகளிர் தண்டழை உடீஇயர்
மரஞ்செல மிதித்த மாஅல் போலப்
புன்றலை மடப்பிடி உணீஇயர் அங்குழை தாஅய்
நெடுநிலை யாஅம் ஒற்றி நனைகவுள்
படிஞிமிறு கடியும் களிறே தோழி
கூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்
[3]சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை
இன்றீம் பைஞ்சுனை ஈரணிப் பொலிந்த
தண்ணறுங் கழுநீர்ச் செண்ணியற் சிறுபுறம்
நாம்பா ராட்டிய காலையும் உள்ளார்
வீங்கிறைப் பணைத்தோள் நெகிழச் சேய்நாட்
டருஞ்செயற் பொருட்பிணி முன்னிநம்
பிரிந்துசேண் உறைநர் சென்ற ஆறே.

—மதுரை மருதனிளநாகன்.

---

1. தொல். களவு. உ0. 2. தொல். மெய்ப். உ0. (பாடம்.) 3. சீர்மிகு முருகன்.

(சொ - ள்.) கூ. தோழி -,

க—ங. நீ - நீதான், தண் கயத்து அமன்ற - குளிர்ந்த குளத்தில் நிறைந்த, வண்டு படு துணைமலர்ப் பெருந்தகை இழந்த கண் னினை - வண்டுகள் படியும் தமக்குத் தாமே நிகராய மலர்கள் போலும் பெரிய அழகிய இமைத்திட்ட கண்களை யுடையை யாகி, பெரிதும் வருந்தினை - மிகவும் வருந்தினை, வாழியர் - வாழ்வாயாக; ச—டு. சூர் மருங்கு அறுத்த சுடர்இலை நெடுவேல் - சூரபன் மாவினையும் அவன் சுற்றத்தினையும் தொலைத்த ஒளி பொருந்திய இலைத்தொழிலையுடைய நெடிய வேலினையுடைய, சினம் மிகு முரு கன் தண் பரங்குன்றத்து - சினம் மிக்க முருகனது தட்பம் வாய்ந்த திருப்பரங்குன்றமாகிய, அந்துவன் பாடிய - நல்லந்துவனார் பாடிய, சந்துகெழு நெடுவரை - சந்தன மரங்கள் மிக்க உயர்ந்த மலையில் உள்ள, இன்தீம் பைஞ்சுனைத் தண் நறுங் கழுநீர் - இனிய தீவிய பசுமை வாய்ந்த சுனையில் உள்ள தண்ணிய நறிய குவளைப் பூவுடன் இயன்ற, சுரனைப் பொலிந்த - பெரிய ஒப்பனையாற் பொலிவுற்ற, செண் இயல் நிறுபுறம் - கொண்டை அசைதலையுடைய முதுகினை, தாம் பாராட்டிய காலையும் உள்ளார் - நம் தலைவர் தாம் பாராட்டிய காலத்தினையும் நினையாராய்,

ஙசு—அ. வீங்கு இறைப் பணைத்தோள் நெகிழ - பருத்த இறையினையுடைய மூங்கில்போலும் தோள் மெலியும்படி, சேய்நாட்டு அருஞ்செயற் பொருட்பிணி முன்னி - தூரநாட்டிற் சென்று செய்யும் அருஞ்செயலாகிய பொருளீட்டலை நினைத்து, நப் பிரிந்து சேண் உறைநர் சென்ற ஆறு - நம்மைப் பிரிந்து சேணின்கண் உறைகின்றவர் போன வழியின்கண்,

ஙா—ஙூ. வடாது வண்புனல் தொழுஉ வார்மணல் அகல்துறை- வடக்கின் கண்ணதாகிய நீர்வளம் அருத யமுனை யாற்றின் நெடிய மணலையுடைய அகன்ற துறையில் நீராடிய, அண்டர் மகளிர் தண் தழை உடீஇயர் - ஆயர் மகளிர் தண்ணிய தழையை உடுத்திக் கொள்ள, மரம் செல மிதித்த மாஅல் போல - குருந்த மரம் வேரோடு மிடமிதித்துத் தந்த கண்ணன்போல, களிறு புன்தலை மடப்பிடி அங்குழை உணீஇயர் - களிறு மெல்லிய தலையினையுடைய இனிய பெண்யானை அழகிய தளிர்களை உண்ணற்கு, நெடுநிலை யாஅம் ஒற்றி-(முன்னர்) உயர்ந்த நிலையினையுடைய யாமரத்தினை வளைத்துத் தந்து, நனைகவுள் படி ஞிமிறு கடியும் - மதத்தால் நனைந்த கன்னத்தில் படியும் வண்டுகளை ஓட்டா நிற்கும்; (அவர் இது கண்டு வருவர்.)

(குடிபு) தோழி! நீ தலைவரைப் பிரிந்து பெரிதும் வருந்தினை; வாழியர்! நின் சென்னியற் சிறுபுறம் பாராட்டிய காலையு முள்ளார்; நோள்நெகிழ பொருட் பிணி முன்னிப் பிரிந்து சேணுறைநர் சென்ற ஆற்றிலே களிறு பிடி குழை உணீஇயர் யாஅம் ஒற்றி, மிஞிறு கடியும்; (அவர் அது கண்டு வருவர்).

(வி - ரை.) துணைமலர் - இரண்டாகிய மலருமாம். 'வண்புனல் ... மால்போல' என்பதிற் குறித்த வரலாறு, ஆயர் பெண்கள்

யமுனை யாற்றில் நீராடுங்கால், அவர்கள் கரையில் இட்டுவைத்த ஆடைகளைக் கண்ணபிரான் விளையாட்டாக எடுத்துக்கொண்டு குருந்த மரத்தேறி யிருந்தாராக, அப்பொழுது பலதேவர் அங்கு வர, அம் மகளிர் ஒரு சேர மறைதற்கு வேறு வழியின்மையால், தாம் ஏறி யிருந்த குருந்த மரக் கொம்பினைத் தாழ்த்துக் கொடுத்தார் என்பது. இதனை,

> 1"நீலிற வண்ண னென்று நெடுந்துகில் கவர்ந்து தம்முன்
> பாலிற வண்ண னுகக்கிற் பறியுடைத் தென்று கண்டாய்
> வேலிறத் தானை வேந்தே விரிபுனற் றொழுனை யாற்றுட்
> கோலிற வலாயி னார்க்குக் குருந்தவ னெளிந்த தென்றான்"

என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளானும் அறிக. மாஅல் போல - வினை பற்றிய உவமை. யாமரத்தை வலாத்த களிறு அதினின்றும் தன் கன்ன மதத்திற் படிந்த வண்டுகளைக் கடியும் என்றவாறு. அது கண்டு அவர் வருவரென்று விரித்துரைக்க. குரினையும் மருங்கினையும் அறுத்த என்க. பரங் குன்றத்து நெடுவரை - பரங் குன்றமாகிய நெடுவரை; அத்துச் சாரியை அல்வழிக்கண் வந்தது. அந்துவன் - கடைச் சங்கப் புலவராகிய ஆசிரியர் நல்லந்துவனார். அவர் [2]"மண் மிசை யவிழ்துமாய்" என்னும் பரிபாடலிற் பரங்குன்றத் தைப் பாடியுள்ளமை அறிக. அக்காலத்து நல்லிசைப் புலவர்கள் ஒருவர்பா லொருவர் மதிப்பு வைத்திருந்தமைக்கு இஃதொரு சான்றா கும். செண் - ஒப்பனை செய்யப் பெறுவதாற் கொண்டைக்குப் பெயராயிற்று. நப்பின்னை, வலித்தல் விகாரம். களிறு பிடி குழை யுண்ணுதற்கு யாமரத்தினை வலாத்துத் தருமென்றது. [3]அன்புறுதற்கு இறைச்சியுட் கூட்டியதாகும்.

---

60. நெய்தல்

[தலைமகற்குத் தோழி தெறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.]

பெருங்கடற் பரப்பில் சேயிரும் பிடிநிரைக்க
கொடுந்தொழில் முகந்த செங்கோல் அவ்வலை
நெடுந்திமில் தொழிலொடு வைகிய தந்தைக்கு
உப்புநொடை நெல்லின் மூரல் வெண்சோறு

[4]அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து
கொழுமீன் கடியொடு குறுமகள் கொடுக்கும்
திண்டேர்ப் பொறையவ் தொண்டி அன்னளம்
பெண்டொடி [5]ஞெமுக்கார் நீமோ தெய்ய
ஊதை சுட்டிய உயர்மணல் அடைகரைக்
கோ கோதை ஆயமொடு வண்டல் தைஇ
ஓரை ஆடினும் உயங்குநின் ஒளியெனக்
கொன்னுஞ் சிவப்போள் கானில் வெள்வேல்

---

1. சிந்தா. உ0கூ. 2. பரி. அ. 3. தொல். பொருளியல், கள. (பாடம்) 4. அயிரை துழந்த. 5. ஞெமுங்கா நீமோ.

கடல் மலர்ந்த அகலாலூறு
கொற்றச் சோழர் குடந்தை வைத்த
நாடுதரு நிதியினும் செறிய
கடு அருங்காவற் படுக்குவள் அறனில் யாயே.
—குடவாயிற் கீரத்தனார்.

(சொ - ள்.) கடல்—அ. பெருங்கடல் பரப்பில் சேயிரும் நடுங்க - பெரிய கடற்பரப்பில் சிவந்த இருள்மீன் நடுங்க, கொடுந் தொழில் முகந்த செங்கோல் அவ்வலை - முகக்கும் கொடிய தொழிலையுடைய கோரிய கோலையுடைய அழகிய வலையைக் கொண்ட, நெடுந் திமிர் தொழிலொடு வைகிய - நீண்ட படகிலிருந்து மீன் பிடிக்குந் தொழிலொடு பொருந்திய, தந்தைக்கு - தன் தந்தைக்கு, உப்பு நொடை நெல்லின் மூரல் வெஞ்சோறு - உப்பு விற்றுக்கொண்ட நெல்லினற் சமைத்த மூரலாகிய வெண் சோற்றை, அயிலை துமுந்த அம்புளி சொரிந்து - அயிலை மீனை யிட்டாக்கிய அழகிய புளிக்கறியினைச் சொரிந்து, கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும் - கொழுமீன் கருவாட்டுடன் இளைய மகள் இடும் இடமாகிய, நிண் தேர்ப் பொறையன் தொண்டி அன்ன - நிண்ணிய தேரினையுடைய சேரனது தொண்டியைப் போன்ற, எம் - எம்முடைய, ஒண் தொடி ஒருமுக்கா நீமோ - ஒள்ளிய வளையலைத் தழும்புறும்படி அமுக்கற்க;

கூ—கடு. ஊதை சுட்டிய உயர் மணல் அடைகரை - வாடைக் காற்றுக் குவித்த உயர்ந்த மணல் மேடாகிய கரையில், கோதை ஆய மொடு வண்டல் தைஇ - மாலையையுடைய ஆயத்தாரோடு வண்டல் இயற்றி, ஓரை ஆடினும் - விளையாட்டினைப் புரியினும், உயங்கும் நின் ஒளி என - உன்மேனி வாடும் என, கொன்னும சிவப்போள் - ஏதுவின்றியும் சினப்பவளாகிய, அறனில் யாய் காணின் - அறங்கரு தாத யாய் இதனைக் காணின், வென்வேல் கொற்றச் சோழர் - வெல்லும் வேலினையுடைய வெற்றி பொருந்திய சோழர், குடந்தை வைத்த - குடவாயிற்கண் போற்றி வைத்த, நாடுதரு நிதியினும் - பகைவர் நாடு திறையாகக் கொடுத்த நிதியைக் காட்டினும், செறிய அருங்கடிப் படுக்குவள் - மிகவும் அரிய காவற்படுத்தி விடுவள்.

(முடிபு) தலைவ! நெடுந்திமிர் தொழிலொடு வைகிய தந்தைக்குக் குறுமகள் மூரலாகிய வெண்சோறு புளிக்கறி சொரிந்து தடியுடன் கொடுக்கும் தொண்டியன்ன எம் ஒண்தொடி ஒருமுக்காநீமோ; ஓரை யாடினும் உயங்கும் ஒளி எனக் கொன்னுஞ் சிவப்போளாகிய யாய் காணின், சோழர் குடந்தை வைத்த நிதியினும் செறிய அருங்கடிப் படுக்குவள்.

(வி - ரை.) இரும், அயிலை, கொழுமீன் - இவை மீனின் சில வகைகள். கொடுந் தொழிலையுடைய வலை என்க. கோல் - வலையிற் கட்டிய கோல். மூரல் சோறு; இரு பெயரொட்டு: முறுவல்போலுஞ் சோறு எனலுமாம். புளி - புளிக்கறிக்கு ஆகுபெயர். கொடுக்கும். தொண்டி யெனப் பெயரெச்சம் இடப் பெயர் கொண்டது. ஒண் தொடி என்பதற்குத் தலைவி யென்று பொருள் கூறி அவளை வருத்தாதே யென்று உரைத்தலுமாம். மோ, தெய்ய அசைகள். சிவப்போள் - வெகுள்பவள். குடந்தை - குடவாயில் என்பதன் மரூஉ.

(உ - றை.) "திமிற்றெழிலொடு வைகிய தந்தைக்கு இளமகளானவள் மீன்கொண்டு வருதற்கு முன்னே தான் உப்பு விற்ற ஞெல்லாலே ஆக்கப்பட்ட மூரல் வெண் சோற்றையும் புளிக் கறியையும் சொரிந்து கொழுமீன் தடியொடு கொடுத்தாற்போலத் தாம் வரைதற்குத் தாமும் புறம்பே முயல, நாங்களும் அறத்தொடு நிலை வகையால் அங்கே முயல்வேம் எனச் சொல்லியவாறுக்குக" என்றார் குறிப்புரைகாரர்.

(மே-ள்.) [1]'மரபே தானும், நாற்சொல் லியலான் யாப்புவழிப்பட்டன' என்னுஞ் சூத்திரத்து, 'குடவாயில் என்பதனைக் 'கொற்றச் சோழர் குடந்தை வைத்த' எனவும்...மேலையோர் நிரித்த வகையானே இக் காலத்தும் நிரித்துக் கொள்ளப்படுவன உள' என்றார் பேரா.

---

61. பாலை

[தலைமகன் பொருள்வயிற் பிரிய வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

நோற்றோர் மன்ற தாமே கூற்றம்
கோளுற வினியார்பிறர் கொளவிளிந் தோரெனத்
தேய்த்தியர் தோள்வலம் படுப்பச் சேட்புலம் படர்ந்தோர்
மாலைவந் நாளிழை நெடுஞ்சுவர் நோக்கி நோயுழந்து
ஆழல் வாழி தோழி தாமா அது
உருமெனச் சிலைக்கும் ஊக்கமொடு பைங்கால்
வரிமான் நோன்ஞாண் வன்சிலைக் கொளீஇ
அருநிறத் தழுத்திய அம்பினர் பலருடன்
அன்னல் யானை வென்கோடு கொண்டு
நறவுநொடை நெல்லின் நாண்மகிழ் அயருங்
கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
முழுபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழுவுடை விழுச்சீர் வேங்கூடம் பெறினும்
பழகுவ ராதலோ அரிதே முனை அது
முழுவுறழ் திணிதோள் நெடுவே ளாவி
பொன்னுடை நெடுநகர்ப் பொறனி அன்னநின்
ஒண்கேழ் வனமுலைப் பொலிந்த
நுண்பூண் ஆகம் பொருந்துதல் மறந்தே.

—மாமூலனார்.

(சொ-ள்.) க—ரு. தோழி வாழி -, நாள் இழை நெடுஞ்சுவர் நோக்கி - தலைவர் பிரிந்த நாளைக் குறித்து வைத்த நீண்ட சுவரினை நோக்கிச் (சென்ற நாட்களை எண்ணி யுணர்ந்து), நோய் உழந்து ஆழல் - வருந்தித் துன்பத்தை ஆழ்ந்திடாதே, கூற்றம்கோள் உற விளியார் - கூற்றம் கொள்ள (மறித்த) மரியாமல், பிறர் கொள விளிந்

---

1. தொல். செய். அ0.

தோர்-பிறர் தம் பொருளைக் கொள்ளும்படி மரித்தோர், நோற்றோர் மன்ற - உறுதியாக நோற்றோராவர், என - என வற்புறுத்தி, கால் வலம் படுப்ப - வாக்கத்தினை வெற்றி யுறுவிக்க, சேட்புலம் படர்ந் தோர் - செல்லிலத்தை விரைவயிற் பிரிந்தோர்,

டு—கஅ. தாமரை உரும் எனச் சிலைக்கும் வாக்கமொடு - தாழ்க் காது இடியென ஒலிக்கும் வாக்கத்துடன், பைங்கால் வரி மாவின் நேமி ஞாண் வெஞ்சிலைக் கொளீஇ - பசியகாலும் மாண்புறும் வரி யும் உடைய வலிய வில்லில் வலிய நாணினைக் கொளுத்தி, அருமிறத்து அரசு எய்திய அம்பினர் பலருடன் - பகைவரது அரிய மார்பிற் செலுத் தும் அம்பினையுடைய இளையர் பலருடன், அண்ணல் யானை வெண் கோடு கொண்டு - தலைமை வாய்ந்த யானைகளின் வெள்ளிய கோடு களைக் கொண்டு, கறவு கொடை நெல்லின் நான் மகிழ் அயரும் - அக் கோட்டுடன் கள்ளினை விற்றுக் கொண்ட நெல்லால் காளாலக் கச் சிறப்புச் செய்யும், கழல் புனை திருந்தடிக் கள்வர் கோமான் - கழலினைத் தரித்த திருந்திய அடியினையுடைய கள்வர் பெருமானாகிய, மழபுலம் வணக்கிய - மழவரது நிலத்தை வணங்கச் செய்த, மாவண் புல்லி - மிக்க வண்மையையுடைய புல்லி என்பானது, விழவுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும் - திருவிழாக்களையுடைய மிக்க சிறப்பு வாய்ந்த திருவேங்கடத்தைப் பெறுவதாயினும், முரண்அது - மிகப் பழமை வாய்ந்த, முழ உறழ் திணிதோள் நெடுவேள் ஆவி - முழவினை யொத்த வலிய தோளினையுடைய பெரிய வேளாகிய ஆவியின், பொன்னுடை நெடுநகர்ப் பொதினி அன்ன - பொன் மிக்க பெரிய நகரமாகிய பொதினியை ஒத்த, நின் ஒண் கேழ் வன முலைப் பொலிந்த - நினது ஒளி விளங்கும் அழகிய முலையாற் சிறந்த, நுண் பூண் ஆகம் பொருந்துதல் மறந்து - நுண்ணிய பூணினை யணிந்த ஆகத்திற் பொருந்துதலை மறந்து, பழகுவர் ஆதலோ அரிது - ஆங்குப் பழகி யிருத்தல் இல்லையாகும்.

(முடிபு) தோழி வாழி! நீ நாள் இழை நெடுஞ்சுவர் நோக்கி நோயுழந்து ஆழல்; சேட்புலம் படர்ந்தோர் புல்லி வேங்கடம் பெறினும் நின் ஆகம் பொருந் தல் மறந்து பழகுவர் ஆதல் அரிது.

(வி - ரை.) கூற்றங் கோடலுற விளிதலாவது - ஒருவர்க்கும் பயனின்றி வறிதே மரித்தல். பிறர் கொள விளிதல் - பிறர்க்குத் தம் பொருளை உதவிப் பயன்பட்டு மரித்தல். இதற்கு அமர்க்களத்தில் உயிர் துறத்தல் என்று பொருள் கொள்வர் நச். அவர் கருத்தின்படி தலைவன் விரைவயிற் பிரிந்தானும். என - என்று வற்புறுத்தி என ஒரு சொல் வருவித்துரைக்க; எனவே உதவி செய்தற்காகப் பொருள் ஈட்டவேண்டுமென்றார் என்றுளாம். நாள் இழை நெடுஞ் சுவர் - நாடோறும் ஒவ்வொரு கோடாகப் பிரிந்த நாட்களைக் குறிவைத்துள்ள நெடிய சுவர். காலினையும் வரியினையுமுடைய சிலையில் ஞாண் கொளீஇ என்க. மழபுலம் வணக்கிய - மழவர் தேயத்தை வணக்கி அவர்பால் நிறைகொண்ட. பழகுவராதல் - பயின்று தங்குதல். முரண்அது பொதினி என்க; பொதினி - பழனி. நுண் பூண் - நுண்ணிய தொழிலுடைய பூண்.

(மே-ள்.) [1]'நிகழ்ந்தது கூறி நிலையலுந் தினையே' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுளைக் காட்டி, இவ்வகப்பாட்டினுள் மூப்பினும் பிணியினும் இறவாது அமர்க்களத்து வீழ்ந்தாரே துறக்கம் பெறுவரெனத் தன்சாதிக் கேற்பத் தலைவன் புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலைத் தோழி கூறினாள் என்றார் நச்.

---

62. குறிஞ்சி

[அல்லகுறிப்பட்டுழித் தலைமகன் தன் னெஞ்சிற்குச் சொல்லியது.]

அயத்துவளர் பைஞ்சாய் முருந்தின் அன்ன
நகைப்பொலிந் நிலங்கும் எயிறுகெழு துவர்வாய்
ஆகந் தரும்பிய முலையள் பணைத்தோள்
மாந்நாட் குவளை மலர்பிணைத் தன்ன
மாயிதழ் மழைக்கண் மாஅ யோளொடு
பேயும் அறியா மறையமை புனர்ச்சி
பூசல் துடியில் புணர்புரிந் நிசைப்பக்
கரந்த கரப்பொடு நாஞ்செலற் கருமையின்
கடும்புனல் மலிந்த காவிரிப் பேரியாற்று
நெடுஞ்சுழி நீத்தம் மன்னுநள் போல
நடுங்குகுர் தீர முயங்கி நெருநல்
ஆகம் அடைகந் தோளே இவள்வேல்
களிறுகெழு தானைப் பொறையன் கொல்லி
ஒளிறுநீர் அடுக்கத்து வியலகம் பொற்பக்
கடவுள் எழுதிய பாவையின்
மடவது மாண்ட மாஅ யோளே.

—பரணர்.

(சொ-ள்.) கஉ—சு. வென்வேல் - வெல்லும் வேலினையும், களிறு கெழு தானைப் பொறையன் - யானைகள் மிக்க படையினையுமுடைய சேரனது, கொல்லி ஒளிறு நீர் அடுக்கத்து வியல்அகம் பொற்ப - கொல்லி மலையின் விளங்கும் அருவி நீரினையுடைய பக்கமலையின் அகன்ற இடம் அழகுற, கடவுள் எழுதிய பாவையின் - தெய்வமாக அமைத்த (கொல்லிப்) பாவையினைப் போன்ற, மடவது மாண்ட மாயோள் - மடப்பத்தாற் சிறப்புற்ற கரியளாய தலைவி,

க—ரு. அயத்து வளர் பைஞ்சாய் முருந்தின் அன்ன - நீரில் வளர்ந்த பைஞ்சாய்க் கோரையின் குருத்தினை யொத்த, நகைப் பொலிந்து இலங்கும் எயிறு கெழு துவர்வாய் - ஒளியாற் சிறந்து விளங்கும் பற்கள் பொருந்திய பவளம்போன்ற வாயினையும், ஆகத்து அரும்பிய முலையள்-மார்பில் தோன்றிய முலையினையும் உடையளும். பணைத்தோள் - மூங்கில் போன்ற தோளினையும், மா தான் குவளை

1. தொல். அகத். ௪௪.

மலர் பிணைத்தன்ன - கரிய தண்டிணையுடைய குவளையின் மலர்களை இணைத்து வைத்தாற் போன்ற, மாஇதழ் மழைக்கண் மாயோ ளொடு - கரிய இமையிணையுடைய குளிர்ந்த கரிய கண்களையும் உடையளுமாகிய அவளுடன்,

சு—கஉ. பேயும் அறியா மறையமை புணர்ச்சி - பேயும் அறியாத காலத்தே நிகழ்ந்துவந்த மறைவு அமைந்த புணர்ச்சியை, பூசல் துடியில் புணர்பு பிரிந்து இசைப்ப - ஓரவாரமுடைய துடியிணைப்போல ஒருகால் இணைந்தும் ஒரு கால் கனிந்தும் அயலோர் அலர் கூறலால், கரந்த கரப்பொடு நாம் செலற்கு அருமையின் - முன்பு போல் கரந்த ஒழுக்கத்தில் இனி நாம் செல்லுதற்கு அருமை எய்தினமை யாற் போலும், கடும்புனல் மலிந்த காவிரிப் பேர் யாற்று - விரைந்தோடும் நீர் மிக்க காவிரி எனும் பேர் யாற்றில், நெடுஞ்சுழி நீத்தம் மண்ணுநர் போல - ஒடிது சுழலும் சுழிகளையுடைய வெள்ளத்திற் படிந்து குளிப்பவள் போல, நெருநல் - நேற்று, நடுங்கு அஞர் நீர முயங்கி - உள்ளம் நடுங்கும் துன்பம் போகத் தழுவி, ஆகம் அடை தந்தோள் - ஆகத்திற் பொருந்திக் கிடந்தனள்.

(முடிபு) பொறையன் கோல்லியில் எழுதிய பாவையின் மாண்ட மாயோள், துவர்வாய் அரும்பிய முகிழ்நகை பதினந்தோள் மழைக்கண் மாயோளாகிய தன்னு டன் மறை அமை புணர்ச்சி, புணர்பு பிரிந்திசைப்ப, செலற்கு அருமையின் காவிரி நீத்தம் மண்ணுநர் போல, நெருநல் முயங்கி ஆகம் அடைதந்தோள். (அந்தோ இன்று அல்ல குறிப்பட்டோமே.)

(வி-ரை.) மாயோள் எனப் பின்னர் வருதலின், மழைக்கண் மாயோள் என்புழிக் கருமையைக் கண்ணிற்கு ஏற்றுக. பேயும் இயங்காத நள்ளிரவில் நிகழ்ந்ததாதலின் அஃது அறியாததாயிற்று. புணர்வு பிரிந்து எனப் பாடங் கொண்டு, புணர்ந்த காலத்து மேனி அழகாலும் பிரிந்த காலத்துமேனி வேறுபாட்டாலும் இசைப்ப என்றுமாம்; இப் பொருட்குப் புணர்வு பிரிந்து என்பவற்றைப் புணர்தல் பிரிதல் எனத் தொழிற்பெயராக்குக. நீத்தம் மண்ணுநர் போல முயங்கி - நீத்தத்திற் குளிக்குமிடத்துக் குளிருமாறு போல குளிர முயங்கி.

இச் செய்யுள் நச்சினார்க்கினியர் கருத்தின்படி, தலைவன் தோழியை இரப்பதாகும்.

(மே - ள்.) [1] 'மெய் தொட்டுப் பயிறல்' என்னும் சூத்திரத்து, 'களஞ்சுட்டுக் கிளவி கிழவிய தாகும்' என்பதனால் இச் செய்யுள், தலைவியாற் குறி பெற்றும் தலைவன் தோழியை இரப்பதாகும் என்றும், [2] 'தன்னுறு வேட்கை' என்னுஞ் சூத்திரத்து, 'கடும்புனல்... அடைதந்தோளே' என்பது, தலைவி வேட்கையைத் தலைவன் குறிப்பால் உணர்ந்தது என்றும் கூறினர் நச்.

---

1. தொல். களவு. கக. 2. தொல். களவு. உள.

63. பாலை

[தலைமகள் புணர்ந்துடன்செல்லச் செவிலி தன் மகளுக்குச் சொல்லியது.]

கேளாய் வாழியோ மகளோநின் தோழி
நிருநகர் வரைப்பகம் புலம்ப அவனெடு
பெருமலை இறந்தது நோவேன் நோவல்
கடுங்கண் யானை நெடுங்கை சேர்த்தி
முடங்குதாள் உதைத்த [1]பொலங்கெழு பூமி
பெரும்புலர் விடியல் விரிந்துவெயில் எறிப்பக்
கருந்தார் மிடற்ற செம்பூழ்ச் சேவல்
சிறுபுன் பெடையொடு குடையும் ஆங்கண்
அஞ்சுவரத் தகுந கானம் நீந்திக்
கல்றுகா ணுதுபுன் கண்ண செவிசாய்த்து
மன்றுநிறை பைதல் கூரப் பலவுடன்
கறவை தந்த [2]கடுங்கால் மறவர்
கல்லென் சீறூர் எல்லியின் அசைஇ
முதுவாய்ப் பெண்டின் செதுகால் குரம்பை
மடமயில் அன்னனன் நடைமெலி பேதை
தோள்துணை யாகத் துயிற்றத் துஞ்சாள்
வேட்டக் கள்வர் விசியுறு கடுங்கண்
சேக்கோள் அறையுந் தண்ணுமை
கேட்குநள் கொல்லெனக் கலுழுமென் நெஞ்சே.

—கருவூர்க் கண்ணம் புல்லனார்.

(சொ - ள்.) க. மகளோ வாழியோ - மகளே! வாழ்வாயாக. கேளாய்-,

க—ங. நின் தோழி - நின் தோழியானவள், திருநகர் வரைப்பு அகம் புலம்ப - அழகிய இல்லின் இடனெல்லாம் தனிமையுற, அவனெடு பெருமலை இறந்தது - அத் தலைவனுடன் பெரிய மலையைத் தாண்டி உடன்போயது பற்றி, நோவேன்-யான் வருந்துகின்றேனல்லேன்;

ச—ஙு. கடுங்கண் யானை நெடுங்கை சேர்த்தி - அஞ்சாமையையுடைய யானை நீண்டகையினை அணைத்து, முடங்கு தாள் உதைத்தவளைந்த காலால் உதைத்துண்டாக்கிய, பொலம் கெழு பூமி - பொற்றுகள் எழும் புழுதியில், பெரும் புலர் விடியல்-பெரிய இருள் புலர்கின்ற விடியற்காலத்தில், விரிந்து வெயில் எறிப்ப - வெய்யில் மிகுந்து எறிக்க, கருந்தார் மிடற்ற செம்பூழ்ச் சேவல் - கரிய மாலை போன்ற கழுத்தினையுடைய சிவந்த குறும்பூழின் சேவல், சிறு புன் பெடையொடு - தனது சிறிய புல்லிய பெடையுடன், குடையும்

(பாடம்) 1. புலங்கெழு பூமி. 2. கடுங்கண் மறவர்.

கடை

ஆங்கண் - குடையும் அவ்விடங்களையுடைய, அஞ்சுவரத் தகுந
கானம் நீந்தி - அச்சமுறத் தகுவதாகிய காட்டினைக் கடந்து,

கo—ங. கன்று காணுது புன்கண்ணை செவிசாய்த்து - கன்று
தன்னைக் காணுமைபின் பொலிவற்ற கண்ணினவாய்ச் செவிகளைச்
சாய்த்து, மன்று நிறை பைதல் கூர - மன்றில் நிறைவதாலாம் துன்
பம் மிக, பலவுட்கன் கறவை தந்த - பல கறவைகளையும் ஒருங்கே
தந்து அடைத்த, கடுங்கால் மறவர் - வேகம் மிக்க காலினராகிய
வெட்சி மறவரது, கல்லென் சீறூர் எல்லியின் அசைஇ - கல்லென்
னும் ஓசையுடைய சீறூரில் இரவிலே தங்கி,

கச—கூ. முதுவாய்ப் பெண்டின் செதுகால் குரம்பை - மூதாட்டி
வாய்த்தலையுடைய பெண்டின் சேர்ந்த காலினையுடைய குடில்
டத்து, மடமயில் அன்ன என் நடையெவி பேதை - இளைய மயில்
யொத்த நடத்தல் தளர்ந்திட்ட எனது பேதைமைகள், தோள்துணை
யாகத் துயிற்றத் துஞ்சாள் - தன் தலைவன் தனது தோளில் அணைத்
துத் துயிற்றவும் துயிலாதவளாகி, வேட்டக் கள்வர் - வேட்டம் புரி
யும் கள்வரது, விசியுறு கடுங்கண் - வாளினையிழுத்துக் கட்டிய கடிய
கண்ணினையுடைய, சேக்கோள் அறையும் தண்ணுமை - ஏறுகளைக்
கொள்ளுங்கால் அடிக்கும் பறையின் ஒலியினை, கேட்குநள் கொல்
எனக் கலுழும் என் நெஞ்சு - கேட்டு அழுவளோ என நினைந்தழும்
என் நெஞ்சினைக் குறித்து,

கூ. நோவல் - யான் நோதல் செய்வேன்.

(முடிபு) மகளே! வாழி! கேளாய்! நின் தோழி அவனெடு மலையிறந்தது நோவேன்; யானை உதைத்த பூழி சேவல் பெடையொடு குடையும் ஆங்கண் கானம் நீந்தி மறவர் சீறூர் அசைஇ குரம்பை நுழைந்தாள் தண்ணுமை கேட்குநள் கொல்லெனக் கலுழும் நெஞ்சை நோக்கி நோவல்.

(வி - ரை.) வாழியோ, மகளே: ஓவும் ஐயும் அசைகள், பூழியில் குடையும் என்க. வெயிலெறிப்ப - எறிக்கும் பொழுது, மன்று நிறை கறவை எனலுமாம். சேக்கோள் - ஏறுகோடல். கானம் நீந்துதலும் மறவர் சீறூரில் எல்லியில் தங்குதலும் குரம்பையிற் றுயிற்றவும் துஞ்சா திருத்தலும் தண்ணுமை கேட்டலும் ஆகிய இவற்றைக் குறித்துக் கலுழும் நெஞ்சு என்பது கருத்தாகக்கொள்க.

(மே - ள்.) [1]'தன்னுமவனும்' என்னுஞ் சுத்திரத்து, இச் செய்யுள் அச்சம் கூறியது என்பர் நச்.

---

64. முல்லை

[வினைமுற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

கடலையும் இடனுல் பாக உலகுடன்
உலகுகூடப் பன்ன புள்ளியற் கலிமா

---

1. தொல், அகத். கூக.

வகையமை வனப்பின் வள்புநீ தெரியத்
தளவுப்பிணி அவிழ்ந்த தண்பதப் பெருவழி
ரு ஐநிலங் சகளிலை நெய்கனி நோன்காழ்
வெள்வேல் இலையர் விங்குபரி முடுகச்
செலவுநாம் அயர்ந்தன மாயின் பெயல
கடுநீர் வரித்த செந்நில மருங்கின்
விடுநெறி ஈர்மணல் வாரணஞ் சிதரப்
கo பாம்புறை புற்றத் தீர்ம்புறங் குத்தி
மண்ணுடைக் கோட்ட அண்ணல் ஏனறு
உடனிலை வேட்கையின் மடநாகு தழீஇ
ஊர்வயிற் பெயரும் பொழுதில் சேர்புடன்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரும்
கரு ஆநுண் நெண்மணி ஐநியம் பின்னிசை
புலம்புகொள் மாலை கேட்டொறுங்
கலங்கினள் உறைவோள் கையறு நிலையே.

—ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்.

(சொ - ள்.) க. பாக - பாகனே!

க—ங. உளை அணி - பிடரி மயிரணிந்த, உலகு கடப்பு அன்ன - உலகத்தையே கடத்தல் வல்லது போன்ற, புள் இயல் கலிமா - பறவையையொத்த வேகம் கொண்ட செருக்குடைய குதிரையின், வகையமை வனப்பின் - செலுத்தும் கூறுபாடமைந்த வனப்பினையுடைய, வள்பு நீ தெரிய - கடிவாள வாரினை நீ ஆராய்ந்துகொள்ள,

ச—ஞ. தளவுப் பிணி அவிழ்ந்த தண் பதப் பெருவழி - செம்முல்லையின் அரும்பு விரிந்த குளிர்ந்த செவ்வியைக் கொண்ட பெருவழியில், ஐது இலங்கு அகல் இலை நெய்கனி நோன்காழ் - அழகிதாக விளங்கும் அகன்ற இலையினையும் எண்ணெய் கனியப்பெற்ற வலிய தண்டினையும் உடைய, வெள்வேல் இளையர் - வெற்றி பொருந்திய வேலை ஏந்திய ஏவலர், விங்கு பரி முடுக - (தாளால் ஏகும்) விரைந்த செலவில் மிகு வேகங்கொள்ள, செலவு நாம் அயர்ந்தனமாயின் - செல்லும் செலவினை நாம் விரும்பினமாயின்,

ஏ—கஎ. பெயல கடுநீர் வரித்த செந்நில மருங்கின் - மழையினுடைய கடுகிய நீர் வரிவரியாக இழைத்த செம்மண் நிலப் பக்கத்தே, விடு நெறி ஈர் மணல் வாரணம் சிதர - தேய்விடும் நெறியினுள்ள ஈர மணலில் கானங் கோழி கிளற, பாம்பு உறை புற்றத்து ஈர்ம் புறங் குத்தி - பாம்பு அடங்கிய புற்றின் குளிர்ந்த மேற்புறத்தைக் குத்தி, மண்ணுடைக் கோட்ட - கோட்டு மண்கொண்ட, அண்ணல் ஏறு - தலைமை மேவிய ஏறு, உடன் நிலை வேட்கையின் மடநாகு தழீஇ - (எக்காலத்தும்) தன்னொடு உடனிற்றலை விரும்பிய தனது இளைய பசுவினைத் தழுவிக்கொண்டு, ஊர் வயின் பெயரும் பொழுதில் - ஊரின்கண் மீண்டு வரும் பொழுதில், சேர்பு உடன் கன்று

கசo

பயிர் குரல மன்று நிறை புகுதரும் - யாவும் ஒருங்கு சேர்ந்து கன்று கூவ அழைக்கும் குரலிவவாய்த் தொழுவிலே நிறையப் புகும், ஆபுண் தெவ்மணி ஐது இயம்பு இன்னிசை - ஆக்கள் பூண்டுள தெள்ளிய மணிகளின் அழகியதாய் இயம்பும் இனிய ஒலியை, புலம்பு கொள் மாலை கேட்டொறும் - தனிமையைக் கொண்டுள்ள மாலையிற் கேட்குந்தொறும், கலங்கினள் உறைவோள் கையறுநிலை - கலங்கி யுறைவோளாகிய நம் தலைவியது செயலற்ற நிலையை.

க. கூவையும் இடன் - நீக்கும் காலம் இதுவேயாகும்.

(முடிபு) பாக, நீ வள்பு தெரிய, இனையர் முடுக, நாம் செலவு அயர்ந்தனம் மாயின், வாரணம் சிதற எறு நாகு தழீஇப் பெயரும் பொழுதில், ஆவின் மன்றி லிசை மாலை கேட்டொறும் கலங்கினள் உறைவோள் கையறு நிலை கூவையும் இடம் இது.

(வி - ரை.) தலைவன் ஊர்ந்து செல்லும் குதிரை பறவை போலும் விரைந்த செலவினதா மென்பது, [1]'விசைவயிற் பிரிந்தோன் மீண்டு வருங்காலை, யிடைச்சுர மருங்கிற் றவிர்த்த லில்லை, யுள்ளம் போல வுற்றுழி யுதவும், புள்ளியற் கலிமா வுடைமை யான' எனத் தொல்காப்பியனர் கூறுமாற்றானும் அறிக. ஐதியம்புதல் - நடக்க நடக்க விட்டிசைத்தல் என்றலுமாம்.

(மே - ள்.) [2]'எருமையும் மரையும் பெற்றமும் நாகே' என்னும் குத்திரத்து, பெற்றத்திற்கு நாகு எனும் பெண்பாற் பெயர் வந்ததற்கு, 'உடனிலை வேட்கையின் மடநாகு தழீஇ' என்பதனை எடுத்துக் காட்டினர்.—பேரா.

---

65. பாலை

[வேறுபட்ட தலைமகட்குத் தலைமகன் உடன்போக்கு வலித்தமை தோழி சொல்லியது.]

உன்னங் கொள்கையொ டுளங்கரந் துறையும்
அன்னை சொல்லும் உய்கம் என்னது தூஉம்
சுரஞ் சேரா இயல்பின் பொய்ம்மொழிச்
சேரியம் பெண்டிர் கௌவையும் ஒழிகம்
நாடுகண் அகற்றிய உதியஞ் சேரற்
பாடிச் சென்ற பரிசிலர் போல
உவவினீ வாழி தோழி அவரே
பொம்மல் ஓதி நம்மொ டொராங்குச்
செலவயர்ந் தனரால் இன்றே மலைதொறும்
மால்கழை பிசைந்த கால்வாய் கூரெரி
மீன்கொள் பரதவர் கொடுந்நிமில் நுளிசூடர்
வான்தோய் புணரி மிசைக்கண் டாங்கு
மேவரத் தோன்றும் யாஅயர் நனந்தலை

---

1. தொல். கற்பு. ஙஉ. 2. தொல். மரபு. கூஉ.

களிற்றியானை நிரை

உயவல் யானை வெரிநுச்சென் றன்ன
கடு கல்லூர் பிழிதரும் புல்சாய் சிறுநெறிக்
காடுமீக் கூறுங் கோடேந் தொருத்தல்
ஆறுகடி கொள்ளும் அருஞ்சுரம் பலநீத்தோள்
நாறைங் கூந்தற் கொம்மை வரிமுலை
நிரையிதழ் உண்கண் மகளிர்க்கு
உ0 அரிய வாலென அழுங்கிய செலவே.

—மாமூலனார்.

(சொ - ள்.) எ—அ. பொம்மல் ஓதி - பொலிவுற்ற கூந்தலையுடையாய், தோழி வாழி - , அவரே - நம் தலைவர்,

கூ—கசு. மலை தொறும் மால்கழை பிசைந்த கால் வாய் கூர்எரி-மலைகள்தோறும் பெரிய மூங்கில்கள் உரசிக்கொள்வதால் உண்டாகிய காற்று வீசுவதால் மிக்க நீச்சுடர்கள், மீன்கொள் பரதவர் கொடும் திமில் ஈளி சுடர் - மீன் பிடிக்கும் பரதவர்களது வளைந்த படகில் தோன்றும் மிக்க சுடர்கள், வான்தோய் புணரி மிசைக் கண்டாங்கு - வானளாவிய கடல் அலையின்மீது காணப்படுமாறு, மேவரத் தோன்றும் - பொருந்தத் தோன்றும், யா உயர் நனந்தலை - யா மரங்கள் உயர்ந்துள அகன்ற இடத்தில், உயவல் யானை வெரிநுச் சென்றன்ன - பட்டினியால் மெலிந்து வருந்திய யானையின் முதுகில் நடந்து செல்வதுபோலும், கல் ஊர்பு இழிதரும் புல் சாய் சிறு நெறி - பாறையில் ஏறியும் இறங்கியும் செல்லும் மூங்கில்கள் சாய்ந்த சிறு நெறிகளையுடைய, காடு மீக் கூறும் கோடு ஏந்து ஒருத்தல் - காட்டை மேம்படச் சொலற்குக் காரணமான நிமிர்ந்த கோட்டினையுடைய களிறு, ஆறு கடி கொள்ளும் அருஞ்சுரம் - வழியினைக் காவல் பூண்டிருத்தற்குரிய அரிய சுரநெறிகள், பலநீத்தோள் நாறு ஐங் கூந்தல் கொம்மை வரி முலை - மூங்கில் போன்ற தோளினையும் மணம்நாறும் ஐவகைக் கூறுபாடும் அமைந்த கூந்தலினையும் நிரண்ட தேமலையுடைய முலையினையும், நிரையிதழ் உண்கண் மகளிர்க்கு - பூப்போலும் மையுண்ட கண்ணினையும்உடைய மகளிர்க்கு, அரிய என அழுங்கிய செலவு - செல்லற்கு அரியவாகும் என்று தாழ்த்திருந்த போக்கினை,

அ—க்கூ. நம்மொடு ஓராங்குச் செலவு அயர்ந்தனர் - இதுபோது நம்மோடு ஒரு பெற்றியே உடன்செல்ல விரும்பினர் ஆதலின்,

க—ச. உன்னம் கொள்கையோடு - நம் கருத்தினை உணர்ந்து கொண்ட அறிவுடன், உளங் கரந்து உறையும் - தானறிந்தவற்றைக் கரந்து அவற்றை வெளியிட்டுக் கூறுதலை செலுத்துகிற, அன்னை சொல்லும் உய்கம் - அன்னையின் கடுஞ் சொல்லினின்றும் தப்புவோம், என்னதும் ஈரம் சேரா இயல்பின் - சிறிதும் அன்பு பொருந்தாத இயல்பினையுடைய, பொய்ம்மொழிச் சேரியம் பெண்டிர் - பொய்ம் மொழி கூறும் சேரிப் பெண்டிர்களது, கௌவையும் ஓழிகம் - அலரினையும் நீங்குவோம்;

கசஉ

ரு—எ. நாடுகண் அகற்றிய உதியஞ் சேரல் - தன் நாட்டினைப் பிறர் நாட்டினை வென்று கொண்டமையான் விரிவாக்கிய உதியஞ் சேரலாதனை, பாடிச் சென்ற பரிசிலர் போல - பாடிச் செல்லும் பரிசிலரைப் போல, உவ இனி - இப்பொழுது மகிழ்வாயாக.

(முடிபு) பொம்மலோதி! தோழி! அவர் அருஞ்சுரம் மகளிர்க்கு அரியவா லெனை அழுங்கிய செலவை இன்று நம்மொடு செலவயர்ந்தனர்; ஆதலின் அன்னை சொல்லும் உய்கம்: சேரிப் பெண்டிர் கௌவையும் ஒழிகம்: உதியஞ் சேரற் பாடிச் சென்ற பரிசிலர் போல இனி உவ.

மலைநாறும் கூரெரி கொடுந்திமில் நளிகடற் புணரிமிசைக் கண்டாங்குத் தோன்றும் அருஞ்சுரமெனவும், நனந்தலைச் சிறுநெறி ஒருத்தல் ஆறு கடிகொள் ளும் அருஞ்சுரமெனவும் இயைக்க.

(வி - ரை.) உன்னம் - கருத்து; இது உன்னல் என்னும் வினையடியாகப் பிறந்த பெயர். சேரியம் பெண்டிர்: அம் - அசை. யானையின் முதுகின்மேல் சென்றன்ன சிறுநெறி, கல்லூர் பிழிதரு சிறுநெறி என இயையும். புல் மூங்கில். யானையுடைய காடு காட்டிற் சிறந்ததென்றார். யானையுடைமையின் யாவரும் இயங்காமையின், ஒருத்தல் கடி கொள்ளும் சுரம் எனப்பட்டது. வரி - தோய்யிலுமாம். நிரை யிதழ் - நிரைத்த இதழை யுடையது என மலருக்கு ஆகுபெயர்.

(மே - ள்) [1]'தகிலவரு விழுமம் நிகிலயெடுத் துரைப்பினும்' என்னுஞ் சூத்திரத்து, 'விடுத்தற் கண்ணும்' என்பதற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டி, இஃது உடன்போக்கு நயப்பித்தது என்றனர் இளம்.

[2]இச் சூத்திரத்து' இச் செய்யுளை எடுத்துக் காட்டி இதனுள் அன்னை சொல்லும் பெண்டிர் கௌவையும் தகிலவரும் விழுமமென்று (தோழி) தகிலவிக்குக் கூறினள் என்றனர் நச்.

[3]பெருமையும் சிறுமையும் மெய்ப்பா டெட்டன், வழிமருங் கறியத் தோன்று மென்ப' என்னுஞ் சூத்திரத்து, பாடிச் சென்ற பரிசிலர் போல, உவவினி வாழி தோழி' என்பது உவகையுவமை என்றனர் பேரா.

---

66. மருதம்

[பரத்தையிற் பிரிந்த தகிலமகற்கு வாயிலாப்புக்க தோழிக்குத் தகிலமகள் சொல்லியது.]

இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின் றெய்துப
செறுநரும் விழையுஞ் செயிர்நீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்

---

1. தொல். அகத். ஙக. 2. தொல். அகத். ஙக. 3. தொல். உவம. கஎ.

வாயே யாகுதல் வாய்த்தனம் தோழி,
நிரைதார் மார்பன் நெருநல் ஒருத்தியொடு
வதுவை அயர்தல் வேண்டிப் புதுவதின்
இயன்ற அணியன் இத்தெரு இறப்போன்
மாண்டொழின் மாமணி கூறங்கக் கடைகழிந்து
காண்டல் விருப்பொடு தளர்புதளர் போடும்
பூங்கட் புதல்வனை நோக்கி நெடுந்தேர்
தாங்குமறி வலவுளன் நிழிந்தனன் தாங்காது
மணிபுரை செவ்வாய் மார்பகஞ் சிவணப்
புல்லிப் பெருமை செல்லினி அகத்தெனக்
கொடுப்போற் கொல்லான் கலுழ்தலின் கடுத்த
மாநிழற் சிறுவனும் போன்மென மகனெடு
தானே புகுதந் தோனே யானது
படுத்தனென் ஆகுதல் நாணி இடித்திவன்
கலக்கினன் போலுமிக் கொடியோன் எனச்சென்
றலைக்குங் கோலொடு குறுகத் தலைக்கொண்
டிமிழ்கண் முழவின் இன்சீர் அவர்மனைப்
பயிர்வன போலவந் திசைப்பவும் தவிரான்
கழங்கா டாயத் தன்றுநம் அருளிய
பழங்கண் ணோட்டமும் நலிய
அழுங்கினன் அல்லனே அயர்ந்ததன் மனனே.

—[1]செல்லூர்க் கோசிகன் கண்ணனார்.

(சொ - ள்.) க—சு. தோழி -, செறுநரும் விழையும் செயிர் தீர் காட்சி-பகைவரும் விரும்பும் குற்றமற்ற அழகினையுடைய, சிறுவர்ப் பயந்த செம்மலோர் - மக்களைப் பெற்ற தலைமையை யுடையோர், இம்மை உலகத்து இசையொடும் விளங்கி - இவ்வுலகத்தே புக ழொடும் விளக்கமுற்று, மறுமை யுலகமும் மறுவின்று எய்துப என - மறுமை யுலக வாழ்வினையும் குற்றமின்றி எய்துவர் என்று, பல் லோர் கூறிய பழமொழி யெல்லாம்-பலரும் கூறிய பழைய மொழிக ளெல்லாம், வாயே ஆகுதல் வாய்த்தனம் - உண்மையே யாதலைக் கண்கூடாகக் காணப் பெற்றேம்;

எ—கூ. நிரை தார் மார்பன் - மலர் வரிசையாலாய மாலையைத் தரித்த மார்பனாகிய நம் தலைவன், நெருநல் - நேற்று, ஒருத்தியொடு வதுவை அயர்தல் வேண்டி - ஒருத்தியை மணம் செய்து கொள்ள விரும்பி, புதுவதின் இயன்ற அணியன் - புதிதாக இயன்ற ஒப்பனை யுடையனாகி, இத்தெரு இறப்போன் - இத் தெருவினைக் கடந்துசெல் வோன்,

கூ—உ. மாண் தொழில் மா - மாட்சியுற்ற தொழிலிற் சிறந்த (அவனது) குதிரையின், மணி கறங்க - மணி ஒலிக்க (அதனைக் கேட்டு), கடை கழிந்து - தலைவாயிலைக் கடந்து சென்று, காண்டல்

(பாடம்) 1. செயலூர்க் கோசங் கண்ணனார்.

விருப்பொடு தளர்பு தளர்பு ஓடும் - (தன்னைக்) காணும் விருப்புடன் தளர்ந்து தளர்ந்து ஓடிவந்த, பூங்கண் புதல்வனை நோக்கி - பூப் போலும் கண்களையுடைய தன் புதல்வனைக் கண்டு,

கஉ—அ. வலவ நெடுந்தேர் தாங்குமதி என்று - வலவனே நீண்ட தேரினை நிறுத்துவாயாக என்று கூறி, இழிந்தனன் - தேரினின்றும் இறங்கி, தாங்காது - தாழ்க்காது, மணிபுரை செவ்வாய் மார்பகம் சிவணப் புல்லி - (புதல்வனது) பவளமணியினை யொத்த சிவந்தவாய் தனது மார்பகத்தே பொருந்த எடுத்துத் தழுவி, பெரும செல் இனி அகத்தெனக் கொடுப்போற்கு - பெரும! இனி அகத்திற்குச் செல்வாயாக என விடுப்போனுக்கு, ஒல்லான் கலுழ்தலின் - இசையானெனி அழுதலின், தடுத்த மகனெடு மாறிக் கிழவனும் போன்மெனப் புகுதந்தோனே - அங்ஙனம் தடுத்த மகனோடு இவன் குபேரனும் ஆவான் எனக் கூறி இல்லிற் புகுந்தனன்;

கஅ—உக. யான் அது படுத்தனென் ஆகுதல் நாணி - யான் அதனைச் செய்வித்தேன் ஆதற்கு நாணி, இக் கொடியோன் - இக் கொடிய மகன், இடித்து இவற் கலக்கினன் போலும் என - இவனை இடித்துக் கலக்கமுறுவித்தனன் போலும் என்று கூறி, அடிக்குங் கோலொடு சென்று குறுக - அடித்தற்குரிய கோலுடன் சென்று அடைய, தழுக்கொண்டு - மகனைத் தன்பாலணைத்துக்கொண்டு,

உஉ—சு. அவர் மனை - வதுவை நிகழும் அவர் மனையில், இமிழ் கண் முழவின் இன்சீர் - ஒலிக்கும் கண்ணினையுடைய முழவின் இனிய ஓசை, பயிர்வனபோல வந்து இசைப்பவும் - தன்னை அழைப்பனபோல வந்தொலிக்கவும், தவிரான் - தவிராது, கழங்கு ஆடு ஆயத்து அன்று நம் அருளிய - முன்பொருநாள் கழங்கு ஆடும் ஆயத்தாரிடை வந்து நம்மை அருள் செய்த, பழங்கண் நோன்றொடும் நலிய பழைய அருட் செயலும் வருத்த, அயர்ந்த தன் மனன் - தொடங்கிய தனது மனத்தினை, அழுங்கினன் அல்லனே - நிறுத்திவிட்டனல்லனே.

(முடிபு) தோழி, மாப்பன் ஒருத்தியொடு வதுவை வேண்டி இத் தெரு நிறப்போன், கடைகழிந்து ஓடும் புதல்வனை நோக்கி, தேர் இழிந்தனள் புல்லிக் கொடுப்போற்கு, ஒல்லான் கலுழ்தலின் மகனெடு புகுதந்தோன், யான் நாணிக் கோலொடு குறுக, தழுக்கொண்டு, அவர்மனை விழவின் இன்சீர் இசைப்பவும் கண் நோட்டமும் நலிய மனன் அழுங்கினன் அல்லனே; ஆதலால், பழமொழி வாய்யாதல் வாய்த்தனம்.

நிறுவப் பயந்த செம்மலோர் மறுவின் றெய்துப எனப் பல்லோர் கூறிய பழமொழி என்க.

(வி - ரை.) இம்மை யுலகம் - இவ்வுடம்புடன் வினைப்பயன் நுகரும் உலகம். மறுமை யுலகம் - உயிர் இவ்வுடம்பின் நீங்கிச் சென்று வினைப்பயன் நுகரும் உலகம். மறுவின் றெய்துப என்பதனால் அது நல்லுலகம் என்பது பெற்றும். இன்று - இன்றி; வினையெச்சக் குறிப்பு முற்று. செறுநரும் விழையும் என்னுங் கருத்து "யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வன்" என (16) முன்னர்ப் போந்ததுங் காண்க.

கொடுப்போற்கு - விடுப்போனுக்கு; தன்னைக் குறோனும் போல்வன் எனக் கண்டார் சொல்லும்படி மகனொடு புகுதந்தோன் என்றுரைத்தலுமாம். இருவழியும் கிழவனும் என்ற உம்மை எச்சப் பொருட்டு. தான் மகனைப் புறஞ்செல்ல விடுத்தமையால், அவன் அது செய்தான் எனக் கொண்டு, 'யான் அது படுத்தனெனுதல் நாணி, என்றாள். அன்று - இயற்கைப் புணர்ச்சிக் காலத்து ஒரு நாள். அயர்ந்த மணன் - விரும்பிய மணம் என்றுமாம்.

(மே - ள்.) [1]'பின்முறையாகிய பெரும் பொருள் வதுவைத், தொன்முறை மனைவி எதிர்ப்பா டாயினு, மின்னிழைப் புதல்வனை வாயில் கொண்டு புகினு, மிறந்த துணைய கிழவோனுங்கட், கலங்கஞ் முரிய னென்மனார் புலவர்' என்னுஞ் சூத்திரத்திற்கு, இச் செய்யுளை உதாரணமாகக் காட்டினர் இளம்.

[2]'நிகழ்தகை மருங்கின்' என்னுஞ் சூத்திரத்து, 'நிரைதார் மார்ப னெருங் கொருத்தியொடு . . . 'என்றது தலைவி புலவிக்கட் புகழ்ந் தது என்றும், [3]'வாயிற் கிளவி' என்னுஞ் சூத்திரத்து, தோழி வாயி லாகச் சென்றுழி, தலைவி வெளிப்படக் கூறுதலுங் கொள்க; அஃது 'இம்மை யுலகு' என்னும் அகப்பாட்டினுட் காண்க என்றும் கூறினர் நச்.

[4]'இன்பத்தை வெறுத்தல்' என்னுஞ் சூத்திரத்து, 'மெய்யே யென்றல்' என்றதற்கு பொய்யை மெய்யென்று கூறுதல் என்று பொருள் கூறி, அது, 'கழங்காடாயத்து . . . அயர்ந்ததன் மணனே': என்பது; தானே தன் மகனை வாயில் கொண்டு புக்காளையினும், அதனைப் பழங்கண்ணோட்டமும் நலிதரப் பொய்யே புகுந்தா னென்று மெய்யாகத் துணிந்து கோடலால் அப்பெயர்த்தாயிற்று என்றார் பேரா.

---

67. பாலை

[பொருள்வயிற் பிரிந்தவழி வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

யானெவன் செய்கோ தோழி பொறிவரி
வானம் வாழ்த்தி பாடவும் அருளாது
உறைதுறந் தெறிலி நீங்கலிற் பறையுடன்
மரம்புல னென்ற முரம்புயர் நனந்தலை
அரம்போழ் நுனிய வாளி அம்பின்
நிரம்பா நோக்கின் நிரையங் கொண்மார்
நெல்லி நீளிடை எல்லி மண்டி
நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி அநர்தொறும்

1. தொல். கற்பியல். கூ. 2. தொல். பொருளியல். கூ. 3. தொல். பொருளியல். சஎ. 4. தொல். மெய்ப். உஉ.

கசசு

கம பிளி சூட்டிய பிறங்குநிலை நடுகல்
வேற்றுள்ளு பலகை [1]வேற்றுமுனை கடுக்கும்
மொழிபெயர் தேஎத்[2] தருமார் மன்னர்
கழிப்பிலிக் கறைத்தோல் நிரைகண் டன்ன
உவலிடு பதுக்கை ஆளுரு பறந்தலை
நீர்கடு உருவில் பேஎய் வாரா தேறொடு
நிலம்படு மின்மினி போலப் பலவுடன்
இலங்குபரல் இமைக்கும் என்பதம்
நலந்துறந் துறைநர் சென்ற ஆறே. மதி

—[3]நோய்பாடியார்.

(சொ - ள்.) க. தோழி -,

கள—அ. நலம் நம் துறந்து உறைநர் சென்ற ஆறு - நமது இன்பத்தைக் கைவிட்டுப் பிரிந்து போயிருப்பவர் சென்ற நெறி,

க—கச. பொறி வரி வானம் வாழ்த்தி பாடவும்-புள்ளிகளையும் வரிகளையுமுடைய வானம்பாடிப்புள் பாடவும், அருளாது உறைதுறந்து எழிலி நீங்கலின் - மேகம் அருள் செய்யாது துளிபெய்தலை நீத்து அகன்று போதலின், பறைபு உடன் மரம் புல் என்ற - மரங்கள் தம் இலைகள் யாவும் கெட்டொழிதலின் பொலிவற்றிருக்கும், முரம்பு உயர் நனந்தலை - கற்குவியல்கள் உயர்ந்துள அகன்ற இடமாகிய நெல்லி நீ ளிடை - நெல்லி மரங்களையுடைய நீண்ட இடங்களில், எல்லி மண்டி - இருளிலே விரைந்து சென்று, அரம் போழ்ந்நிய - அரத்தினால் அராவப்பட்ட முனையையுடைய, வாளி அம்பின் - பற்களையுடைய அம்பினையும், நிரம்பா நோக்கின் - இடுக்கிக் குறிபார்க்கும் பார்வையினையு முடையராய், நிரை அம் கொண்மார் - தம் நிரையை மீட்க வேண்டி நெல் அமர் கடந்த - வெட்சியாருடன் நிகழ்ந்த நல்ல போரினை வென்று பட்ட, நா னுடை மறவர் - மானம் மிக்க கரந்தை வீரர்களது, பெயரும் பீடும் எழுதி - பெயரினையும் சிறப்பினையும் பொறித்து, அதர்தொறும் - நெறிதோறும், பீலி சூட்டிய - மயிற்றோகை யணிந்த, பிறங்கு நிலை நடுகல் - விளங்கும் நிலை மேவிய நடுகல்லானவை, வேல் வென்று பலகை - வென்றிய வேலும், சார்த்திய பலகையுங் கொண்டு, வேற்று முனை கடுக்கும் - பகைவருடன் போர்செய்யும் முனைப் புலத்தை யொக்கும், மொழி பெயர் தேஎம் தருமார் - வேற்றுமொழி வழங்கும் தேயத்தைக் கொள்ள வேண்டிச் செல்லும், மன்னர் - மன்னர்களது, கழிப்பிணிக் கறைத் தோல் நிரை கண்டன்ன-கழியாற் பிணிக்கப்பட்ட கரிய பரிசையின் நிரையினைக் கண்டாலொத்த, உவல் இடு பதுக்கை ஆள் உரு பறந் தலை - மரித்த ஆட்களின் இட்டுத் தழைகளைக் கொண்டு மூடிய தூங்கு யல்களையுடைய பாழிடத்தே,

---

(பாடம்) 1. வேற்று முனைடொந்து. 2. தருமார் மன்னர். 3. நொய்ப்பாடியார்.

கடு—எ. உரு இல் ஊராப் பேய்த் தேரொடு - உரு இல்லாத ஊர்ந்திடப் பெருத பேய்த்தேருடன், நிலம்படு மின்மினிபோல - நிலத்தே பொருந்திய மின்மினிப் புழுவைப்போல, பலவுடன் இலங்கு பரல் இமைக்கும் - விளங்கும் பரற்கற்கள் பலவும் ஒருங்கு ஒளிவிடும், என்ப - என்று கூறுவர்.

க. யான் எவன் செய்கோ - யான் என் செய்வேனே.

(முடிபு) தோழி! நம் நலம் துறந்து உறைநர் சென்ற ஆறு, பறந்தலையில் ஊராத் தேரொடு பரல் இமைக்கும் என்பு; யான் எவன் செய்கோ. எழினீங்களின் மரம் புல்லென்ற நனந்தலை நீளிடை எல்லி மண்டிக் கடந்த மறவர் பெயரும் பிடும் எழுதிப் பீலி சூட்டிய நடுகல் வேலான்று பலகை வேற்றுமுனை கடுக்கும் தேஎம் எனவும், நேஎம் தருமார் மன்னர் தோல் நிறை கண்டன்ன பதுக்கைப் பறந்தலை எனவும் கூட்டுக.

(வி - ரை.) போழ்தல் – ஈங்கு அராவுதல், வாளி அம்பு-எயிற்றம்பு, நிரையம் : அம், அசை. நிரயம் கொண்மார் என்பது பாடமாயின், நரகம்புகுவார் என்றுதல், நரகத்தை அடையவேண்டி என்றுதல் கொள்க. நிரை மீட்கும் போராதலின் 'நல்லமர்' என்றார். இறுதன்னுறு தொழில். கடந்த - வென்று இறந்த என்றபடி. வேற்றுமுனையிடத்தும் வேலும் பலகையும் உண்மையின் வேற்று முனை கடுக்கும் என்றார். வேற்று முனை கடந்து என்பது பாடமாயின், நடுகல் முதலியவற்றை யுடைய வேற்று முனையைக் கடந்து சென்ற ஆறு என இயையும். பதுக்கைகள் தோலின் நிரையை ஒக்கும் என்க; உருவில்லாத பேய் என்க. பேய்த்தேராகிய ஊராத் தேர் என்க ஊராத் தேர் வெளிப்படை. நச்சினார்க்கினியர் இதனைத் தோழி கூற்றாகக் கொள்வர்.

(மே - ள்.) [1]'நிகழ்ந்தது கூறி நிலையலுந் தினையே' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுள் மண்டிலத் தருமை தலைவன் கூறக் கேட்ட தோழி கூறியது என்றார் நச்.

---

68. குறிஞ்சி

[தலைமகன் இரவுக்குறி வந்தமை யறிந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.]

அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்
தண்ணயந் தமன்ற கூதளங் குழைய
இன்னிசை அருவிப் பாடும் என்னது உங்
கேட்டியோ வாழிவேண் டன்னைநம் படப்பை
ஒ ஊட்டி அன்ன ஒண்நளிர்ச் செயலை
ஒங்குநினைத் தொடுத்த ஊசல் பாம்பென
முழுமுதல் துமிய உருமெறிந் தன்றே
பின்னுங் கேட்டியோ எனவைமஃ தறியாள்

---

1. தொல். அகத். சூ.

அகநானூறு

அன்னையும் கனைதுயில் மடிந்தனள் அதன்றலை
மன்னுயிர் மடிந்தன்ற பொழுதே காதலர்
வருவ ராயின் பருவம் இதுவென
சுடர்ந்திலங் கெல்வளை நெகிழ்ந்த நம்வயின்
படர்ந்த உள்ளம் பழுதன் றுக
வந்தனர் வாழி தோழி அந்தரத்து
இமிழ்பெயல் தலைஇய இனப்பல கொண்மூத்
தவிர்வில் வெள்ளம் தலைத்தலை சிறப்பக்
கன்றுகால் ஓய்யும் கடுஞ்சுழி நீந்தம்
புன்றலை மடப்பிடிப் பூசல் பலவுடன்
வெண்கோட் டியானை விளிபடத் துழவும்
அகல்வாய்ப் பாந்தட் படாஅர்ப்
பகலும் அஞ்சும் பனிக்கடுஞ் சுரனே.

—ஊட்டியார்.

(சொ - ள்.) கச.: தோழி வாழி -, (நாம் நம் அன்னையை நோக்கி அவள் துயிலுதலை உணர்ந்து கொள்ள).

க—ச. அன்னுய் வாழி வேண்டு அன்னை - அன்னையே வாழ்வாயாக, அன்னையே நான் கூறுவதை விரும்பிக் கேட்பாயாக. நம் படப்பைத் தன் அயத்து அமன்ற - நம் தோட்டத்திலுள்ள குளிர்ந்த பள்ளத்தே நிறைந்த, கூதளம் குழைய - கூதளஞ் செடியின் தழைகளின் கண்ணை விழும், இன்னிசை அருவிப் பாடும் - இனிய இசையையுடைய அருவி யொலியும், என்னதூஉம் கேட்டியோ - சிறிதேனும் கேட்டாயோ (எனவும்).

ச—அ. பின்னும் - மற்றும், வாழி வேண்டு அன்னை —, நம் படப்பை - நம் தோட்டத்திலுள்ள, ஊட்டி யன்ன ஒண் தளிர்ச் செயலை - அசக்கு ஊட்டிற்றோலும் ஒள்ளிய தளிரினையுடைய அசோகினது, ஓங்குசினைத் தொடுத்த - ஓங்கிய கிளையிற் கட்டிய, ஊசல் பாம்பென - ஊசற் கயிற்றினைப் பாம்பெனக் கருதி, முழுமுதல் தடிய உரும் எறிந்தன்றே - (அம்மரத்தின்) பெரிய அடியும் துணிபட இடி வீழ்ந்தது. கேட்டியோ எனவும் - அதனை நீ கேட்டாயோ என்று கூறவும்,

அ—கூ. அஃது அறியாள் அன்னையும் கனைதுயில் மடிந்தனள் - அக் கூற்றினை அறியாளாய் அன்னையும் மிக்க துயிலில் அழுந்தியுள்ளாள்;

கூ—கo. அதன்றலை மன்னுயிர் மடிந்தன்ற பொழுதே - அதன் மேலும் அந்நேரம் ஏனை உயிர்களும் துயிலப் பெற்றிருந்தது:

கo—ஙு. காதலர் வருவராயில் பருவம் இது வென - நம் காதலர் வருவராயின் அதற்குரிய அமையம் இஃதாகுமென, சுடர்ந்து இலங்கு எல்வளை நெகிழ்ந்த நம்வயின் - விட்டு விளங்கும் ஒளியுடைய வளை

கழன்றிடும் நம்மிடத்து, படர்ந்த உள்ளம் பழுது அன்றுக - மேவிய தமது உள்ளம் குற்ற மற்றதாக,

கச—உக. அந்தரத்து - வானிடத்தே, இமிழ் பெயல் தலைஇய இனப் பல கொண்மூ - இடித்ததுடன் பெய்தலைச் செய்த கூட்டமாய பல மேகங்கள், தவிர்வு இல் வெள்ளம் தலைத்தலை சிறப்ப-நீங்குதலில்லாது (பெய்தமையால்) எழுந்த வெள்ளங்கள் இடந்தொறும் மிகுதலால், கன்று கால் ஓய்யும் கடுஞ் சுழி நீத்தம்-யானைக்கன்றின் கால்களை இழுத்துச் செல்லும் கடிய சுழியினையுடைய வெள்ளத்தில், புன்தலை மடப்பிடிப் பூசல் பலவுடன் - மெல்லிய தலையினையுடைய இளைய பெண் யானைகளின் ஆரவாரங்கள் பலவுடன், வெண்கோட்டு யானை விளிபடத் துழவும், வெள்ளிய கொம்பினையுடைய களிறுகள் தாம் அழைக்கும் ஒலியும் சேரத் தடவிக் கொண்டிருப்பதும், அகல் வாய்ப் பாந்தள் படாஅர் - அகன்ற வாயினையுடைய பாம்புச் செடியினையுடையதும் ஆகிய, பகலும் அஞ்சும்-பகற்பொழுதினும் அஞ்சப் படும், பனிக் கடுஞ்சுரம் - மிக்க நடுக்கத்தினைச் செய்யும் சுரநெறியில், வந்தனர் - வந்துள்ளார்.

(முடிபு) தோழி! வாழி! 'அன்னாய் வாழி! கேட்டியோ' எனவும், பின்னும், 'கேட்டியோ' எனவும், நம் அன்னை அறியாள் கனைதுயில் மடிந்தனள்; அதன் றலை மன்னுயிர் மடிந்தன்று பொழுது; காதலர் வருவராயிற் பருவம் இதுவென நெகிழ்ந்த நம்வயின் படர்ந்த உள்ளம் பழுதன்றுக சுரம் தலைவர் வந்தனர்.

(வி - ரை.) என்னதும் - சிறிதும். 'பின்னுங் கேட்டியோ எனவும்' என்பதிலுள்ள எனவும் என்பதனை என்னதூஉங் 'கேட்டியோ எனவும் என முன்னரும் வருவித் துரைக்க. அன்னையின் துயில் நிலையை உணரக் கருதியவள் அருவி யோசையைக் கேட்டாயோ என முதலிற் கூறிப் பின்பு அதனிலும் துணுக்கத்தினை விளைக்கத்தக்கதாக இடியோசையைக் கேட்டாயோ என்று உரைத்தாள். 'அன்னாய் வாழி வேண்டன்னை' என இருமுறையும் அடுக்கி விளிப்பதும் அவளது துயிலின் பெற்றியை அறிதற் பயத்ததே யாகும். ஒருவாற்றலும் அவள் உணர்ந்தெழாமையின் 'கனைதுயில் மடிந்தனள்' என்றாள். கனை துயில் மடிதல் - தூக்கத்தில் ஆழ்ந்து விடுதல். இதனால் தாய் துஞ்சுதலும், மன்னுயிர் மடிந்தன்றுற் பொழுது என்பதனால், ஊர், காவலர், தாய் முதலியவை துஞ்சுதலும் கூறினாள். ஓய்தல் - செறிதலுதல். வெள்ளத்தில் கன்று இழுக்கப்படுதலால் பிடியும் களிறும் முறையே பூசல் செய்து, விளித்துத் துழவின. பாந்தட் படார் - பாம்புபோலும் இயல்பினையுடைய ஒரு செடி. யானை துழவுதலானும் பாந்தட் படாரை யுடைமையானும் சுரம் பகலினும் அஞ்சப்படுவதாயிற்று. துழவும் சுரம், படாரையுடைய சுரம், அஞ்சும் சுரம் எனத் தனித்தனி இயையும். இவி, பிடியின் பூசலும், யானையின் விளியும் உண்டாகக் கேட்டு. அவற்றை உண்டற்குந் துழாவுகின்ற பெரும் பாம்புகள் பொருந்திய காட்டினையுடைய சுரம் என்று உரைத்தலும் ஆம். இப் பொருட்குப் படார் என்பது காடு என்னும் பொருளதாகும். பாம்பு யானையை உண்ணவல்லது என்பதை

கரு0

1. இடிகொள் வேழத்தை யெயிற்றொடு எடுத்துடன் விழுங்கும் கடிய மாசுணம்' என்பதனாலும் அறிக.

(உ - றை.) 'யானைகளும் கன்று காரணமாகப் பிடிவருந்திய பின்பு எடுக்க முயன்ற்போல, அவரும் அலராலும் வழிய தருமை யாலும் நாம் கலனழிந்த பின்பு வரைய முயலுவதல்லது முன்பு முயலாரென்பது' என்றது குறிப்புரை.

(மே - ள்.) 2. குறித்தோன் கூற்றம் தெரித்து மொழி கிளவி' என்னுஞ் சூத்திரத்து 'ஊட்டி யன்ன வொண்டளிர்ச் செயலை என் புழி இன்னதனை யென்று தெரித்து மொழியாமையின் வழுவாம் பிற வெனின், உவமை யென்னும் அலங்காரமாயின்றே இன்னதொன் றனை யெனல் வேண்டுவது; செயலையந் தளிரினது செய்யாத நிறத் தைச் செய்ததுபோலக் கூறுங் கருத்தினாலுதலிற் பிறிதோர் அலங் காரமாம்' என்றார் சேனாவரையர்; ஊட்டாததனை ஊட்டியது போலக் கூறலின் வேறோர் உவமை யிலக்கணமாம் என்பர் நச்சி னார்க்கினியர். 3. காற்றமும் தோற்றமும்' என்னும் தொழி கூற்று உணர்த்தும் சூத்திரத்து இச் செய்யுளை எடுத்துக் காட்டி, இது தாயது குயிலுணர்ந்து தலைவன் வந்தமை தோழி தலைவிக்குக் கூறிக் குறிவயிற் சென்றது என்றனர் நச்.

---

69. பாலை

[பொருள்வயிற் பிரிந்து நீட்டித்தான் தலைமகன் எனக் கவன்ற தலைமகட்கு வருவர் என்பதுபடச் சொல்லித் தோழி ஆற்றுவித்தது.]

ஆய்நலந் தொலைந்த மேனியும் மாமலர்த்
தகைவனப் பிழந்த கண்ணும் வகையில
வண்ணம் வாடிய வரியும் நோக்கி
ஆழல் ஆன்றிசின் நீயே உரிதினின்
5 சுதல் இன்பம் வெஃகி மேவரச்
செய்பொருட் டிறவ ராகிப் புல்லிலைப்
பராரை நெல்லி அம்புளித் நிரள்காய்
கான மடவரைக் கணநிரை கவரும்
வேனில் அத்தம் என்னை தேமுற்று
10 வின்பொரு நெடுவரை இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
அறையிறந் தகன்றனர் ஆயினும் எனையதூஉம்
நீடலர் வாழி தோழி ஆடியல்
மடமயில் ஒழிந்த பீலி வார்ந்நுதம்
15 கடுமான் வல்விற் சுற்றிப் பலமான்
அம்புடைக் கையர் அரண்பல நாறி

---

1. கம்ப. சித்திரகூடம். கூ. 2 தொல். இளவி. ரு சூ. 3. தொல். களவு. உக.

நன்கலந் தருஉம் வயவர் பெருமகன்
சுடர்மணிப் பெரும்பூண் ஆஅய் கானத்துத்
தலைநாள் அலரி நாறுநின்
உ0. அலர்முலை ஆகத்து நின்றுயில் மறந்தே.

—உமட்டூர்கிழார் மகனூர் பரங்கொற்றனூர்.

(சொ - ள்.) கஉ. வாழி தோழி -,

க—ச. நீ -, ஆய் நலம் தொலைந்த மேனியும் - ஆராயும் அழகு தொலைந்த மேனியினையும், மாமலர்த் தகைவனப்பு இழந்த கண்ணும் - கரிய மலரின் சிறந்த அழகினை இழந்த கண்ணினையும், வகை இலவண்ணம் வாடிய வரியும் - முன்னை யியல்பு இலவாய் அழகு வாடின திதலையையும், நோக்கி ஆழல் ஆன்றிசின் - நோக்கித் துயரில் அழுந்தாதேகொள்;

ஞ—சு. உரிதினில் ஈதல் இன்பம் வெஃகி-(நம் காதலர்) ஈதலால் எய்தும் இன்பம் தமக்கு உரிமையாக விரும்பி, மேவர - அது வந்துற, செய்பொருள் திறவராகி - செய்யும் பொருள் வகையராகி,

சு—கூ. புல் இலை பரு அரை நெல்லி அம் புளித் திரள்காய் - சிறிய இலையினையும் பரிய அடியினையும் உடைய நெல்லியின் இனிய புளிப்பினையுடைய திரண்ட காயினை, கானம் மடமரைக் கணை நிரை கவரும் - கானத்தே யுள்ள இலைய மரைமானின் மிக்க கூட்டம் தின்னும், வேனில் அத்தம் என்னுது - வெம்மை மிக்க நெறி என்று நினையாது, ஏமுற்று - மயக்கமுற்று,

கூ—உ. விண்பொரு நெடுவரை இயல் தேர் மோரியர் - விண்ணை அளாவும் நீண்டுயர்ந்த பெருமலைகளில் செல்லும் தேரினையுடைய மோரியர், பொன்புனை திகிரி திரிதர - தங்கள் பொன்னுலியன்ற உருள் (தடையின்றிச்) செல்ல, குறைத்த அறை இறந்து அகன்றனராயினும் - வெட்டி நெறியாக்கிக் கொண்ட குன்றங்களைக் கடந்து சென்றாராயினும்,

கஉ—உ0. ஆடு இயல் மடமயில் ஒழித்த பீலி வார்ந்து - ஆடும் இயல் வாய்ந்த இளைய மயில் நீக்கிய தோகையை உரித்து, தம் நிலை மாண் வல் வில் சுற்றி - தமது ஒசை மிக்க வலிய வில்லில் சுற்றி, பல்நாண் அம்புடைக் கையர் - பலவாகிய மாட்சியுற்ற அம்புடைய கையினராய், அரண் பல நூறி - பகைவர் அரண்கள் பலவற்றை அழித்து, நன் கலம் தரூஉம் - கல்ல அணிகலன்களைக் கொணரும், வயவர் பெருமகன் சுடர்மணிப் பெரும்பூண் ஆஅய் கானத்து - வீரர்களது பெருமானாகிய சுடரும் மணிகள் பதித்த பெரும் பூணினை அணிந்த ஆய் என்பானது காட்டில், தலைநாள் அலரி நாறும் - அன்றலர்ந்த மலரென மணக்கும், நின் அலர் முலை ஆகத்து இன் துயில் மறந்து-நினது பரந்த முலையினையுடைய மார்பின்கண்ணே துயிலும் இனிய துயிலினை மறந்து,

உ—ஊ. எனையதும் நீடலர் - சிறிதும் நாம்நீந்திரார்.

கருத்து

(முடிபு) தோழி வாழி, மேனியும் கண்ணும் வரியும் நோக்கி, ஆமூல் ஆன்றி சின், நம் தலைவர் சதல் இன்பம் வெஃகிச் செய்பொருட்டிறவராகி, அத்தம் எள் னது எழுற்று, மோரியர் குறைத்த அறையிற் ஞகன்றனராயினும், ஆய் கானத்து அளி நாறும் நின் அவர் முலையாகத்தின் துயில் மறந்து எனாயதும் நீடலர்.

(வி - ரை.) ஆன்றிசின் - அமைக. சதலால் இன்ப முண்டாகு மென்பதனை, [1]'சத்துவக்கும் இன்பம்' என்பதனால் அறிக. செய் பொருட்டிறவர் - பொருள் செய்யும் கூற்றினர். மோரியர் வடநாட் டின்கண் ணிருந்த அரச வகுப்பினர். இவர்கள் சில பகைவரோடு போர் கருதித் தெற்கே சென்ற காலை, குறுக்காக நின்றதோர் மலை யைத் தேருருள் செல்லுமாறு குறைத்து வழி செய்துள்ளார் என்ற வரலாறு. 'தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர், பணியா மையிற் பகைதலை வந்த, மாகெழு தானை வம்ப மோரியர், புனை தேர் நேமி யுருளிய குறைத்த, இலங்குவெள் ளருவிய வறைவா யும்பர்' (உடுக) எனவும், 'முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர், தென்றிசை மாநிரம் முன்னிய வரவிற்கு, விண்ணுற வோங்கிய பனி யிருங்குன்றத், தொண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த, அறையிற் தவரோ சென்றனர்' (உஅக) எனவும் இந்நூலுள்ளும், [2]'வென்வேல், விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர், திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த, உலக விடைகழி யறைவாய் நிலை இய' எனப் புறநானூற்றிலும் வருவனவற்றுன் அறியப்படும். சிலை - ஒரு மராமரம். நன்கலம் தருஉம் - பெற்ற கலன்களைப் பாணர் முதலா யினர்க்குத் தரும் என்றுமாம்.

---

70. நெய்தல்

[தலைமகன் வரைவு மலிந்தமை தோழி தலைமகட்குச் சொல்லியது.]

கொடுந்திமிற் பரதவர் வேட்டம் வாய்த்தென
இரும்புலாக் கமழும் சிறுகுடிப் பாக்கத்துக்
குறுங்கண் அவ்வலைப் பயம்பா ராட்டிக்
கொழுங்கள் அயிலை பகுக்குந் துறைவன்
நம்மொடு புனர்ந்த கேண்மை முன்னே
அலர்வாய்ப் பெண்டிர் அம்பல் தூற்றப்
பலருமாங் கறிந்தனர் மன்னே இனியே
வதுவை கூடிய பின்றைப் புதுவது
பொன்வீ ஞாழலொடு புன்னை வரிக்கும்
கானலம் பெருந்துறைக் கழனி மாநீர்ப்
பாசடைக் கலித்த கூனைக்கால் நெய்தல்
விழவணி மகளிர் தழையணிக் கூட்டும்
வெல்வேற் சுரியர் தொல்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்றுறை

---

1. குறள், உஉ. 2. புறம், எடு.

கடு வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றிவ் அழுங்கல் ஊரே.

—மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார்.

(சொ - ள்.) க—எ. கொடுந் திமில் பரதவர் - வளைந்த படகினையுடைய பரதவர், வேட்டம் வாய்த்தென - மீன்வேட்டை நன்கு கைகூடிற்றுக, இரும்புலாக் கமழும் - பெரிய புலால் நாற்றம் வீசும், சிறுகுடிப் பாக்கத்து - சிறிய குடிகளையுடைய கடற்கரையூரில், குறுங்கண் அவ்வலைப் பயம் பாராட்டி - குறுகிய கண்களையுடைய அழகிய வலையின் பயனைப் பாராட்டிக் கூறி, கொழுங்கண் அயிலை பகுக்கும் துறைவன் - கொழுவிய கண்களையுடைய அயிலை மீனை யாவர்க்கும் பகுத்துக் கொடுக்கும் துறைவன், நம்மொடு புணர்ந்த கேண்மை - நம்முடன் கொண்ட காதல் நட்பு, முன்னே - முன்பு, அலர்வாய்ப் பெண்டிர் அம்பல் தூற்ற - அலர் கூறும் வாயினையுடைய பெண்டிர் அம்பலாக்கிப் பரப்ப, பலரும் ஆங்கு அறிந்தனர் - அவ்விடத்துப் பலர் அறிவாராயினர், மன் - அது கழிந்தது.

எ—அ. இனி - இப்பொழுது, வதுவை கூடிய பின்றை - மணம் கூடிய பிறகு,

அ—கள. புதுவது பொன் வீ ஞாழலொடு புன்னை - புலிநகக்கொன்றையின் புதிய பொன்னிறப் பூக்களுடன் புன்னைப் பூக்கள் உதிர்ந்து, வரிக்கும் - ஓவியம் வரைந்தாற்போல் அழகு செய்யும், கானல் அம் பெருந்துறை - கடற்கரைச் சோலையையுடைய அழகிய பெருந்துறைகளில், கழனி மா நீர் பாசடைக் கலித்த கணைக்கால் நெய்தல் - வயல்களில் கரிய நீரில் பசிய இலைகளையுடைய தழைத்த திரண்ட தண்டினையுடைய நெய்தற் பூக்களை, விழவு அணி மகளிர் தழையணிக் கூட்டும் - விழாவிற்கு ஒப்பனை செய்யும் மகளிர்கள் தங்கள் தழையுடைக்கு அணிசெயச் சேர்க்கும், வென்வேற் கவுரியர் - வெற்றி வேலினையுடைய பாண்டியரது, தொல்முது கோடி - மிக்க பழமையுடைய திருவகைக் கரையின் அருகில், முழங்கு இரும் பௌவம் இரங்கும் முன்றுறை - முழங்கும் இயல்பினதான பெரிய கடலின் ஒலிக்கின்ற துறைமுற்றத்தில், வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த - வெல்லும் போரினில் வல்ல இராமன் அரிய மறையினை ஆய்தற் பொருட்டாகப் புட்களின் ஒலி இல்லையாகச் செய்த, பல்வீழ் ஆலம் போல - பல விழுதுகளைக் கொண்ட ஆலமரம் போல, இவ் அழுங்கல் ஊர் ஒலி அவிந்தன்று - இந்த ஆரவாரமுடைய ஊர் ஒலியடங்கப் பெற்றது.

(முடிபு) துறைவன் கேண்மை, பெண்டிர் அம்பல் தூற்ற, (முன்பு) பலர் அறிந்தனர்; இனியே, வதுவை கூடிய பின்றை, இராமன் அருமறைக்கு அவித்த ஆலம்போல இவ்வழுங்கலூர் ஒலியவிந்தன்று.

(வி - ரை.) பலரும் : உம் - அசை. மன் : கழிவின்கண் வந்தது. தழையணிக் கூட்டும் - தழை அணிக்குக் கூட்டும் என்க. இராமன்

கடுஞ

இலங்கைமேற் செல்லுதற் பொருட்டுத் திருவரிஞைக் கரையின் ஞாங்க
ணிருந்த பெரிய ஆலமரத்தின் கீழ், தமக்குத் துணைவராயினரொடு,
அரிய மறைகளைச் சூழுங்கால், ஆங்குள்ள பறவைகள் ஒலிக்காத
வாறு தன் சூளையால் அடக்கினன் என்றதொரு வரலாறு கூறப்பட்
டது.

(உ - ம.) "பரதவர் தம் முயற்சியானே வேட்டை வாய்த்தா
தாகிலும், குறுங்கண் வலையைப் பாராட்டி அம் முயற்சியா லுண்டான
அயிலையைக் கடலினின்றும் நீக்கி, எல்லார்க்கும் பகுத்துக் கொடுத்து
மகிழ்வித்தாற் போல, அவரும் தம்முடைய முயற்சியானே வதுவை
கூடிற்றாயினும், அதற்குத் துணையாக நின்ற என்னைக் கொண்டாடி,
நின்னைப் பெரிய இச்சுற்றத்தினின்றும் கொண்டுபோய்த் தம்மூரின்
கண்ணே நின்னைக் கொண்டு விருந்து புறந்தந்து தம்மூரையெல்லாம்
மகிழ்விப்பர் என்றவாறு.

"நெய்தற்பூவானது, சூழலும் புன்னையுங் கரையிலே நின்று
தாதை யுதிர்த்துப் புறஞ்சூழ, நீரிடத்துத் தன்னை விடாதே அலைகள்
சூழ நடுவே நின்று செருக்கி வளர்ந்து பின்னை விழவணி மகளிர் அல்கு
லுக்குத் தழையாய்ப் பயன்பட்டாற்போல, இரு முது குரவர் புறங்
காப்ப ஆயவெள்ளத்தார் மெய்யை விடாதே சூழ்ந்து புறங்காப்ப,
ஆயவெள்ளத்தார் மெய்யை விடாதே சூழ்ந்து புறங்காப்ப, இப்படிச்
செல்வத்தால் வளர்ந்தும் நம் பெருமானுடைய இல்லறமாகிய
நிலவிற்குத் துணையாகப் போகாநின்றாயன்றே வென்று வியந்து
கூறியவாறு.

---

71. பாலை

[பொருள்வயிற் பிரிந்தவிடத்து ஆற்றுளாய தலைமகட்குத்
தோழி சொல்லியது.]

நிறைந்தோர்த் தேரும் நெஞ்சமொடு குறைந்தோர்
பயனின் மையிற் பற்றுவிட் டொருஉம்
நயனின் மாக்கள் போல வண்டுனம்
சுனைப்பூ நீந்துச் சினைப்பூப் படர
மையின் மானினம் மருளப் பையென
வெந்நாறு பொன்னின் அந்தி பூப்ப
ஐயமி வகற்றுங் கையறு படரோ
உகளிரு வானம் அம்மஞ் சினப்
பகலாற்றுப் படுந்த பழங்கண் மாலை
காதலர்ப் பிரிந்த புலம்பின் நோதக
ஆரஞர் உறுநர் அருநிறஞ் சுட்டிக்
கூரெஃ கெறிஞரின் அலைந்தல் ஆனாது
எள்ளற இயற்றிய நிழல்காண் மன்றலத்
துள்ளுநா வியிற்பை பய நுணுகி
மறுகை மாய்நல் வேண்டும் பெரிதழிந்
நிறுகொல் வாழி தோழி என்னுயிர்

விலங்குவெங் கடுவளி எடுப்பத்
துளங்குமரப் புள்ளில் துறக்கும் பொழுதே.

—அந்தியிளங்கீரனார்.

(சொ - ள்.) கசு, தோழி வாழி -,

க—ச, நிறைந்தோர்த் தேரும் நெஞ்சமொடு - செல்வம் நிறைந்தோரை ஆராய்ந்தடையும் உள்ளத்தால், குறைந்தோர் பயன் இன்மையின் - செல்வம் குறைந்தோரால் பயன் அடைதல் இன்மையின், பற்றுவிட்டு ஒரூஉம் – அவர்பா லிருந்த பற்றினை யொழித்து நீங்கும், நயன்இல் மாக்கள் போல - நடுநிலை இல்லா மக்களைப்போல, வண்டினம் சுனைப்பூ நீத்துச் சினைப்பூப் படர-வண்டின் கூட்டங்கள் சுனைப் பூக்களை ஒழித்துச் சினைப் பூக்களை யடையவும்,

ஞ—சு. மையில் மான் இனம் மருள - குற்றமற்ற மான்கூட்டம் வருந்தவும், பையென வெந்துஆறு பொன்னின் அந்தி பூப்ப-உலையிற் காய்ந்து மெல்லென ஆறிவரும் பொன்னின் நிறம்போலச் செக்கர் வானம் பூத்தலைச் செய்யவும், ஐ அறிவு அகற்றும் கையறு படரோடு-வியக்கத்தக்க அறிவினைப் போக்கும் செயலற்ற துன்பத்துடன், அம் மஞ்சு அகல் இரு வானம் ஈன - அழகிய மேகங்களை அகன்ற பெரிய வானம் தரவும், பகல் ஆற்றுப் படுத்த பழங்கண் மாலை - ஞாயிற்றைப் போக்கிய துன்பத்தினைத் தரும் மாலைக்காலமானது,

க○—உ. காதலர் பிரிந்த புலம்பின் நோதக - காதலரைப் பிரிந்த தனிமையால் வருந்தியிருக்கவும், ஆர் அஞர் உறுநர் அருநிறம் சுட்டி - மிக்க துன்பத்தை அடைந்திருப்பா ரொருவரது அரிய மார்பினைக் குறித்து, கூர் எஃகு எறிஞரின் - கூரிய வேலை எறிவார்போல, அலைத்தல் ஆனது - வருத்துதலை ஒழியாது;

கஉ—ரு. எள் அற இயற்றிய நிழல் காண் மண்டிலத்து உள் - இகழ்ச்சி யற இயற்றப்பெற்ற உருவங்காணும் கண்ணாடியின் அகத்தே, ஊது ஆவியில் - ஊதிய ஆவி மூன்பரந்து பின் சுருங்கு றல்போல், பைப்பய நுணுகி - சிறிது சிறிதாகக் குறைந்து வந்து, மதுகை மாய்தல் வேண்டும் - என் வலிமை மாய்தல் வேண்டியிரா நின்றது,

ஙரு—அ. வெம் கடு விலங்கு வளி எடுப்ப - மிக்க கடிய சுழல்வளி அலைப்ப, துளங்கும் மரப் புள்ளில்- அசையும் மரத்திலுள்ள பறவை போல, பெரிது அழிந்து என் உயிர் துறக்கும் பொழுது - மிகவும் அழிவுற்று என்னுயிர் இவ்வுடலைத் துறந்தேகும் காலம், இதுகொல்-இதுவேபோலும்.

(முடிபு) தோழி வாழி, பழங்கண் மாலை அலைத்தல் ஆனது; மதுகை மாய்தல் வேண்டும்; என் உயிர் துறக்கும் பொழுது இதுகொல்.

படர, பூப்ப, ஈனப் பகலாற்றுப்படுத்த பழங்கண் மாலை என்க.

(வி - ரை.) குறைந்தோர் என்றது, தமது பொருளை வழங்கி வறியராயினவர் என்றபடி, நயன் - நல்லியறிவு என்றுமாம். சுனைப்

பக்கம் நரல்பு வளம் சிறந்து தேன் வழங்குவன. இப்பொழுது வாடி வறியவாயினவாயின. வயற்றிற்குச் சுனைநீர்தானை உவமை கூறினார். நிலைப்பு - மேலிற் காலதது மலரும் மரங்களின் கொட்டு துள்ள பக்கம். [1]கறுத்த நல்ல நெடிய கயலில் கரிய, வாய்பூத் துறக் ரை வளை பிரல்கிலம்' என வயற் உவமை கூறப்படுவதும் வள்ள அறியாத பாற்று. மகளிரைவகள் கொம்மையால் வருந்த என்க. ல்ல பூவிரை. மையுறிவு எனப் பிரித்துக் கூரிய அறிவு என்றுமாம். மருங்க - பல நிறத்தையுடைய மேகம். விலங்குவளி - குறுவளி. புன் குறுவளியால் அலைப்புண்ட மரத்தைவிட் டொறிதல்போல, என் உயிர் பிரிவால் வருந்தி உடலைத் துறக்கும் பொழுது இதுகொல் என்றுள் என்க.

(மே - வி.) [2]'மேலட்டை யொருதலை' என்னுஞ் சூத்திரத்து, தலைவி சாக்காடு என்னும் அவத்தை எய்தினமைக்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டினார் நச்.

[3]'பிழைத்தது பொருளோ டைந்து மாகும்' என்னுஞ் சூத்திரத்து, உலமை நிலைக்களத்து னொன்றுபய பிழைத்த பொருளிற்கு, 'உள்ளு தலையிற் பைப்பய நுணுகி' என்பதனை எடுத்துக் காட்டினார் பேரா.

---

72. குறிஞ்சி

[(1) தலைமகன் இரவுக்குறிக்கண் சிறைப்புறத்தானாகத் தலை மகள் தோழிக்குச் சொல்லியது. (2) தோழி தலைமகட்குச் சொல்லி யதாகவுமாம்.]

இருள்கிழிப் பதுபோல் மின்னி வானம்
நுளைதலைக் கொண்ட நுளிபெயல் தருநாள்
மின்னிலை மொய்த்த முரைவாய்ப் புற்றம்
பொன்னெயி றிடைதொ றுடர வாங்கிக்
நரும்பி கொண்டும் பெருங்கை எற்றை
இருட்பிசைச் கொல்லெனத் தோன்றும் ஆங்கண்
ஆற அருமர பினவே யாற
சுட்டுநர்ப் பலிக்குந்த சூருடை முதலிய
கனைமரப் நீந்நம் கல்போரு நிரங்க
அந்நுவந் தமியம் என்னுயு மஞ்சுமந்
நாடுகழை நரலும் அணங்குடைக் கவாஅன்
சுருயிர்ப் பினவின் வயவுப்பசி கூர
இருங்களி றட்ட பெருந்தினை உழுவை
நாம நல்லராக் கூர்ப்பட உமிழ்ந்த
மேய்மணி விளக்கின் புலி சுர்க்கும்
வாள்நுடந் தன்ன வழக்கருங் கவலை
உள்ளுநர் உட்கும் கல்லடைச் சிறுநெறி

---

1. மணிமேகலை, காதை: கே - உ0. 2. தொல், களவு. கூ. 3. தொல். உலம 3

அருள்புரி நெஞ்சமோ டெஞ்சுறு நோயா கவ்
வந்தோன் கொடியனும் அல்லலன் நந்த
உஏ நீதவ றுடையையும் அல்லை மின்னவிர்
ஆறு அரும்படர் செய்த
யாரை நோழி நலமுடை யையோ.

—எருமை வெளியனார் மகனார் கடலனார்.

(சொ - ள்.) க—எ. ஆறு - தலைவன் வரும் நெறிகள், வானம் இருள் விழிப்பதுபோல் மின்னி - மேகம் இருளைக் விழிப்பதுபோல மின்னி, துளி தலைக் கொண்ட நளி பெயல் நடுநாள் - துளியைத் தன்னிடத்தே கொண்ட மிக்க பெயலையுடைய நள்ளிரவில், மின்மினி மொய்த்த முரவு வாய்ப் புற்றம் - மின்மினிகள் மொய்த்திருக்கும் முரிந்த இடத்தினையுடைய புற்றினை, பொன் எறி பிதிரில் கடவ வாங்கி - இரும்பினைக் காய்ச்சி யடிக்குங்கால் சிதறும் பிதிர்போல அம்மின்மினிகள் ஒளிவிடப் பெயர்த்து, குரும்பி கெண்டும் பெருங்கை ஏற்றை - புற்றுருஞ் சோற்றினைத் தோண்டி யெடுக்கும் பெரிய கையினையுடைய கரடியேறு, இருட்டு செய் கொல் எனத் தோன்றும் ஆங்கண் - இருட்டு வேலை செய்யும் கொல்லன்போலத் தோன்றும் அவ்விடத்து, அருமரபினவே - செல்லுதற்கு அரிய தன்மையன;

எ—கூ. யாறே - யாறு, கழை மாய் நீத்தம் கல்பொருது இரங்க - ஓடக்கோல் மறையும் வெள்ளம் கல்லிற் பொருது ஒலிக்க, கட்டு நர்ப் பலிக்கும் குர் உடை முதலிய - கருதுவோரையும் நடுங்கச் செய்யும் அச்சமுடைய முதலிகளை யுடையன;

கூ. அஞ்சுவம் தமியம் என்னாது - யாம் தமியேம்: இக்கொடிகளிற் போதற்கு அஞ்சுவேம் என்று எண்ணாது,

கூ—எ. மஞ்சு கமந்து ஆடு கழை நரலும் - மேகத்தினைத் தலைக் கொண்டு அசையும் மூங்கில் ஒலிக்கும், அணங்குடைக் கவான்-தெய்வங்களையுடைய பக்க மலையில், சுருயிர்ப் பிணவின் வயவுப் பிடி களை இய - கருவுற்றிருக்கும் பெண் புலியின் வேட்கை மிக்க பிடியினை ஈர்க்க, இருங் களிறு அட்ட பெருஞ்சின உழுவை-பெரிய ஆண் பன்றியினைக் கொன்ற மிக்க சினம்பொருந்திய ஆண்புலி, நாம நல்லராக் கதிர்பட உமிழ்ந்த மேய் மணி விளக்கில் - அச்சந் தரும் நல்ல ரைக் கதிர்பட உமிழ்ந்த மேய் மணி விளக்கில் - அச்சந் தரும் நல்ல ரைப் பார்த்து மேய்தற்குச் செல்ல ஒளியுண்டாக உமிழ்ந்து வைத்த மணி யாகிய விளக்கில், புலர் சார்க்கும - உதிரம் தோய்ந்துகாய இழுத்துச் செல்லும், வாள் நுடங்தன்ன வழக்கு அருங் கவலை - கூர்மழுங்காத தன்மையால் வாளில் நடப்பதை யொக்கும் செல்லுதற்கு அரிய வழியாய, உள்ளூர் உட்கும் கல்அடர்ச் சிறுநெறி - கடக்க எண்ணு நர் அஞ்சும் கற்செறிவையுடைய இட்டிய நெறியில்,

கூ—உ. அருள்புரி நெஞ்சமொடு எஞ்சு துணையாக - நம்மேல் அருள் வைத்த நெஞ்சமொடு வேல் துணையாகக் கொண்டு, வந்தோன் கொடியனும் அல்லன் - வந்த தலைவனும் கொடியன் அல்லன்; நந்தா நவ நுடையையும் அல்லை - அவனைக் குறிவழி வரச்செய்த

நீயும் தவறுடையை யல்லை ; நின்வயின் ஆன அரும்படர் செய்த-நின் பால் நீங்காத அரிய துன்பமே யாக்கிய, யானே தவறுடையேன். யானே தவறுடையவள் ஆவேன்.

(முடிபு) ஆறு அரு மரபின ; யாறு முதலிய ; அஞ்சுவம் தமியம் என்னாது கள்டைச்சி றுநெறி வந்தோன் கொடியனு மல்லன் ; நீ தவறுடையையும் அல்லை ; யானே தவறுடையேன்.

(வி. உரை.) கொல் - கொற்சாதி ; கொல்லனே உணர்த்திற்று. ஆங்கண், அசையுமாம். யாறு, இரங்க முதலிய எனக் கூட்டுக. இரங்க என்னும் செயவென் எச்சம் முதலிய என்னும் முற்றுவினைக் குறிப்புடன் முடியும். தன்னுயிரோடு கருவிலிருக்கும் உயிரையு முடைமையின் சருயிர்ப் பிணவு என்றார். வயவு - கருவுற்றிருக்குங் கால் உளதாம் வேட்கை. நாம: உரிச்சொல் சற்று நிரிந்தது. நல்லரா - பெயர். புலர - புலால் நாற என்றுமாம். கவலையிலும் சிறு நெறியி லும் வந்தோன் எனலுமாம்.

(உ - றை.) "புலி துணை புறந்தருதற்குப் பிறவற்றைத் தின்கு செய்யும் பாம்பும் அதற்குத் துணையாயினாற் போல, நீயுங் குடியோம் பற் செய்தி காரணமாக வரைவொடு வரின், கடுஞ் சொற் சொல்லு கிற பேரும் இன்சொற் சொல்லி வரைவுடம் படுவர் என்பதாம்."

(மே - ள்.) [1] 'மறைந்தவற் காண்டல்' என்ற குத்திரத்து, 'வந் தவன் பெயர்ந்த வறுங்கள நோக்கித் தன்பிழைப்பாகத் தமீஇத் தேறிய'தற்கு, 'வாணடந்தன்ன . . . தவறுடையேன்' என்பதனை எடுத்துக் காட்டினர் இளம்.

[2] 'பொழுது மாறும்' என்னுஞ் குத்திரத்து 'தன்னை அழிதலும்' என்னும் பகுதிக்கு, 'நீதவறுடையையும் . . . தவறுடையேனே' என் பதனை எடுத்துக்காட்டி, அவன் வரவினை உவவாது துன்பங் கூர்தல் வழுவாயினும், அதுவும் அவன்கண் அன்பாதலின் அமைத்தார் என றுரைத்தனர் நச்.

---

73. பாலை

[தலைமகன் பொருள்வயிற் பிரிகின்றுழி குறித்த பருவவரவு கண்டு அழிந்த தலைமகட்குத் தோழி சொல்லியது.]

பின்னெடு முடிந்த மன்ன முச்சி
நெய்கனி விழ்குழல் அகப்படத் தைஇ
வெருநிருள் நோக்கி அன்ன கூர்விடு
பொருகாழ் முந்நம் இடைமுலை விளங்க
அணங்குறு கற்பொடு மடங்கொளச் சாஅய்
நின்னெய்த் தலையையும் அல்லை நெறிவர
என்னு குவள்கொல் அளியள் தானென

---

1. தொல். களவு. உரை. 2. தொல். பொருளி. கசு.

என்னழி பிரங்கும் நின்னெடி யானும்
ஆறன் றென்னு வேறல் காட்சி யார்கொ ? ஓவிலே.
இருவேம் நம்படர் தீர வருவது
காணிய வம்மோ காதலந் தோழி
கொடுபிணங் கரில இருள்கொள் நாகம்
மடிபதம் பார்க்கும் வயமான் துப்பின்
ஏனலஞ் சிறுதினைச் சேணோன் கையதைப்
பிடிக்கை அமைந்த கலல்வாய்க் கொள்ளி
விடுபொறிச் சுடரின் மின்னி அவர்
சென்ற தேஎந்து நின்றதால் மழையே.

—எருமை வெளியனார்.

(சொ - ள்.) கக—எ. காதல் அம் தோழி - காதலை யுடைய தோழியே! அவர் சென்ற தேஎத்து - தலைவர் சென்ற காட்டில், கொடி பிணங்கு அரில இருள் கொள் நாகம் - கொடிகள் பின்னிய சிறு காட்டினிடத்தவாய இருண்ட நிறத்தையுடைய யானையின், மடி பதம் பார்க்கும் - சோரும் செவ்வியை பார்த்திருக்கும், வயமான் துப்பின் - அரியேற்றின் வலியினையுடைய, ஏனல் அம் சிறுதினைச் சேணோன் கையதை - தினையின் வகையு ளொன்றாகிய அழகிய சிறு தினையைக் காக்கும் பரண்மேலுள்ளோன் கையின்கண் ணுள்ள தும், பிடி கை அமைந்த கலல்வாய்க் கொள்ளி - பிடி கையின்கண் பொருந்தியதும் தீவாய்த்தலை யுடையதுமாய கொள்ளிக் கோல், விடு பொறிச் சுடரின் மின்னி - (வீசுங்கால்) விடும் சுடர்ப் பொறிகளைப் போல மின்னி, நின்றது மழையே - மழை கால்கொன்றிப் பெய்து நிற்கின்றது;

க—உ. பின்னெடு முடித்த - பின்னுதல் அளவில் முடித்திட்ட, மண்ணு முச்சி - வேறு ஒப்பனை செய்யாத கொண்டையில், நெய்கனி வீழ்குழல் அகப்படத் தைஇ - நெய் தடவப்பெற்ற தாழும் குழலினைச் சேரக் கட்டி,

உ—ச. வெருகு இருள் நோக்கியன்ன - வெருக்குப் பூனை இருளிலே நோக்கினைப் போல, ஒரு காழ் முத்தம் கதிர் விடுபு இடை முரிந்து விளங்க, முத்தின் ஒரு வடம் கதிர்விட்டு முகிலிடையே விளங்க.

ரு—சு. அணங்கு உறு கற்பொடு - அருந்ததிபோலுற்ற கற்பினால், மடம்கொள - மடம் மிக, சாஅய் - மெலிந்து, நின்நோய்த் தலையையும் அல்லே - நின் நோயளவில் வருந்திநிற்பாயும் அல்லை;

சு—கஉ. தெறுவர என் ஆகுவள் அளியள் தான் என - அச்சம் உற இரங்கத்தக்காள் ஆகிய இவள் என் ஆகுவளோ என, என் அழிபு இரங்கும் - என் வருத்தத்திற்கும் இரங்காநின்றாய்; அந் நனம் இரங்கும், நின்னெடு யானும் - நீயும் யானும், ஆறு அன்று என்னு வேறு அல் காட்சி - ஒருவர் செய்வது நெறியன்று என்று

எண்ணுதல் வேற்றுமையற்ற அறிவினையுடையர். இருவரும் நம் படர் நீர - நம் இருவரையுடைய வருத்தமும் நீங்க, வருவது காலிய வம்மோ - நம் தலைவர் வருதலுக் காண்டற்கு எழுந்து வருவாயாக.

(முடி) தோழி! தலைவர் சென்ற தேசத்து மழை பின்னி நின்றது; நீ நின் தோளைத் தலையையும் அஃசையாய், என் அழிபும் இரங்காதிருந்தாய்; அப்படியும் இரங்கும் நின்னொடு யாதும் நம் படர் நீர அவர் வருவது காலிய வம்மோ.

தலை. சான்றாய், என் அழிபுக்கும் இரங்கும் நின்னொடு என்க.

(வி - ரை.) நோக்கி யென்னவாய்க் கதிர்விட்டு என்க. வணங்குறு கற்பு எனப் பிரித்து, எவ்வோர் வணங்குதற் குரிய கற்பு எனலுமாம். நின்னொடு யாதும் காண வா எனவும், இருவரும் படர்தீர காண வா எனவும் இயையும். வம் - வா என்னும் பொருட்டு. ஓ, அசை. கையது - கையதை எனத் திரிந்துநின்றது. பிடி - பிடிக்கும் இடம். பிடி கையமைந்த என்று பாடம் கொள்ளுதல் பொருந்தும்; பிடித்தற்கு இடம் வைத்து அஃதல்லாத இடம் கூட்டுக் கொள்ளியாக்குதல் இயல்பு.

(மே - ள்.) [1]'இனிவே இமுவே,' என்னுஞ் சூத்திரத்து 'அணங்குறு கற்பொடு . . . நின்னொடு யாதும்' என்னும் பகுதியை எடுத்துக் காட்டி, இது தலைமகன் பிரிவிற்குந் தோழி படர்கூர்ந்தான் எனச் சொல்லினமையின் பிறன்கட் டோன்றிய இமுவுபற்றி அவலம் பிறந்ததாம் என்பர் பேரா.

---

74. முல்லை

[தலைமகன் பிரிவின்கண் அழிந்த தலைமகளை, வற்புறுத்துந் தோழிக்குச் சொல்லியது.]

வினைவலம் படுத்த வென்வியொடு மகிழ்சிறந்து
போர்வல் லிளையர் தாள்வலம் வாழ்த்தி
நன்பெயல் பொழிந்த பைதுறு காலைக்
குருதி யுருவின் ஒண்செம் மூதாய்
பெருவழி மருங்கில் சிறுபல வரிப்பப்
பைங்கொடி முல்லை மெல்பரப் புதுவி
வெண்களர் அரிமணல் நன்பல தாஅய்
வண்டுபோ தவிழ்க்கும் தண்கமழ் புறவில்
கருங்கோட் டிரலை காமர் மடப்பிணை
மருண்டமான் நோக்கம் கான்டொறும் நின்னினைந்து
நின்டேர் வலவ கடவெனக் கடைஇ
இன்றே வருவர் ஆய்நீகம் பனியென
வன்புறை இன்சொல் நன்பல பயிற்றும்
நின்வயிற் நமைகுவள் மன்றெ அல்கல்
கடு புன்கண் மாலையொடு பொருந்திக் கொடுங்கோல்

---

1. தொல். மெய்ப். டு.

கல்லாக் கோவலர் ஊதும்
வல்வாய்ச் சிறுகுழல் வருந்தாக் காலை.

—மதுரைக் கவுணியன் பூதந்தனார்.

(சொ - ள்.) கச—எ. அல்கல் புன்கண் மாலையொடு பொருந்தி - நாடோறும் வருத்தந்தைத் தரும் மாலைப் பொழுதுடன் கூடி, கொடுங்கோல் கல்லாக் கோவலர் ஊதும் - வளைந்த கோலினையுடைய தம் தொழிலன்றிப் பிறதொழிலைக் கல்லாத ஆயர் ஊதும், வல்வாய்ச் சிறுகுழல் வருந்தாக்கால் - வலிய வாயினையுடைய சிறிய குழல் வருந்தாதொழியின்,

க—அ. தண்பெயல் பொழிந்த பைதுறு காலை - குளிர்ந்த மழை பொழிந்ததாற் பசுமையுற்ற காலத்தே, குருதி உருவின் ஒண்செம் முதாய்-குருதியைப் போலும் சிவந்த நிறத்தினையுடைய ஒள்ளிய தம் பலப்பூச்சி, பெருவழி மருங்கில் சிறுபல வரிப்ப - பெரிய வழிகடோறும் பல சிறிய வரிகளாகப் பரக்க, பைங் கொடி முல்லை மென்பதப் புதுவி னன்பல - பசிய முல்லைக் கொடியின் மெத்தென்ற செவ்வியையுடைய மென்மைப் பதம் வாய்ந்த நன்றாகிய மிகப்பல புதிய மலர்கள், வெண்களர் அரிமலர் தாஅய் - வெள்ளிய களர் ஆகிய அறல் பட்ட மணலில் தாவிக் கிடப்ப, வண்டு போது அவிழ்க்கும் தண்கமழ் புறவில் - வண்டுகள் அரும்பினை மலர்த்தும் தண்ணிய கமழும் முல்லை நிலத்தில்,

க—கo. கருங்கோட்டு இரலை - கரிய கொம்பினையுடைய ஆண் மானினது, காமர் மடப்பிணை மான் மருண்ட நோக்கம் காண்டொறும் - அழகிய இனிய பெண்மானின் மருட்சியுற்ற பார்வையினைக் காணுந்தோறும், நின் நினைந்து - நின்னை எண்ணி,

க—உ. வினை வலம்படுத்த வென்றியொடு-வினையை வெற்றியுறச் செய்த மேம்பாட்டுடன், மறம் சிறந்து - மறவுணர்ச்சி மிக்கு, போர்வல் இளையர் தாள்வலம் வாழ்த்த - போரில் வல்ல வீரர் தனது முயற்சியின் வலிமையினை வாழ்த்திவர,

கக—ச. வலவ நின் தேர் கடவு எனக் கடைஇ - பாகனே நின்னிய தேரினை இன்னும் விரைந்து செலுத்துவாயாக எனக் கூறிச் செலுத்திக்கொண்டு, இன்றே வருவர் - இன்றே (நம் தலைவர்) வந்துறுவர், ஆன்றிகம் பனி என - நாம் நடுக்கத்தை அமைவேம் என்று கூறும், வன்புறை இன்சொல் நன் பல பயிற்றும் - வன்புறையாகிய பல இனிய நல்ல சொற்களைக் கூறிவரும், நின் வலித்து அமைகுவன்-நின் சொல்லைத் துணிந்து அமைந்திருப்பேன், மன் - அது மாட்டுஎலென்.

(முடிபு) (தோழி,) அல்கல் மாலையொடு பொருந்திக் கோவலர் ஊதும் சிறுகுழல் வருந்தாக்கால், (தலைவர்), 'புறவில் இரலை மடப்பிணை நோக்கம் காண்டொறும் நின் நினைந்து, நின்டேர் கடைஇ, இன்றே வருவர் ஆன்றிகம் பனி' யென வன்புறை பயிற்றும் நின்வலித் தமைகுவன் மன்னே.

இளையர் வாழ்த்த இன்றே வருவர் எனக் கூட்டுக.

கசுஉ

(வி - ரை.) தாள் - முயற்சி. தாஅய் - தாவ எனத் திரிக்க பழி - நடுக்கம். வன்புறை - வற்புறுத்தல். சிறு குழலின் இன்னிசையும் துன்பத்தினை மிகுவித்தலின் அதனை வல்வாய்ச் சிறுகுழல் என்றுள். மாலையும் குழலும் வருத்தாக்கால் என்க.

(மே - ள்.) 1. இன்பத்தை வெறுத்தல் என்னுஞ் சூத்திரத்து, "கல்லாக் கோவல ரூதும், வல்வாய்ச் சிறுகுழல் வருத்தாக் காலே" என்புழி இன்பத்தை வெறுத்தனளாயினும் புணர்ச்சிக்கு ஏதுவாம் என்பது கருத்து என்றுரைப் போர்.

---

75. பாலை

[1பொருள்வயிற் பிரிவரென வேறுபட்ட தலைமகட்குப் பிரியே னெனத் தலைமகன் சொல்லியது.]

அருளல் ருக ஆள்வினை ஆடவர்
பொருளென வலித்த பொருளல் காட்சியின்
மைந்துமலி உள்ளமொடு துஞ்சல் செல்லாது
எரினெந் தவழ்ந்த இருங்கடற் றடைமுதல்
கரிகுநிர் மரந்த கான வாழ்க்கை
அடுபுலி முன்பின் தொடுகழல் மறவர்
தொன்றியல் சிறுகுடி மன்றுநிழல் படுக்கும்
அன்னல் நெடுவரை ஆமறப் புலர்ந்த
கல்நெறிப் படர்குவ ராயின் நல்லுதல்
செயிர்தீர் கொள்கைச் சின்மொழித் துவர்வாய்
அவிர்தொடி முன்கை ஆயிழை மகளிர்
ஆரம் தாங்கிய அலர்முலை ஆகத்து
ஆராக் காதலொடு தாரிடைக் குழையாது
சென்றுபடு விறற்கவின் உள்ளி என்றும்
இரங்குநர் அல்லது பெயர்தந் நியாவரும்
தருநரும் உளரோ இவ் வுலகந் தானென
மாரி ஈங்கை மாத்தளிர் அன்ன
அம்மா மேனி ஐதமை நுசுப்பின்
பல்காசு நிரைத்த கோடேந் தல்குல்
மெல்லியற் குறுமகள் புலந்துபல கூறி
ஆனா நோயை ஆக [2]யானே
பிரியச் சூழ்தலும் உண்டோ
அரிதுபெறு சிறப்பின் நின்வயி னானே.

—மதுரைப் போத்தனார்.

(சொ - ள்.) கஎ—உக. மாரி ஈங்கை மாத்தளிர் அன்ன - மாரிக் காலத்தே ஒளிரும் இண்டையின் கரிய தளிரை யொத்த. அம் மா

---

* தொல். மெய்ப். உஉ. (பாடம்) 1. பொருள்வயிற் பிரிவரென வேறுபட்ட தலைமகட்குப் பிரியாரெனத் தோழி சொல்லியது. 2. அவரே பிரியச் சூழலும்.

மேனி - அழகிய மாமை நிறத்தை யுடைய மேனியினையும், ஐது அமை நுசுப்பின் - நுண்ணிதாய் அமைந்த இடையினையும், பல காசு நிரைத்த கோடு ஏந்து அல்குல் - பல மணிகள் கோத்த மேகலையையுடைய பக்கம் உயர்ந்த அல்குலினையும் உடைய, மெல்லியற் குறுமகள் - மென்மைத் தன்மையுடைய குறுமகளே நீ,

க—ங. ஆடவர் - ஆடவர்கள், பொருள் - உண்மைப் பொருளாவது, அருள் அன்றுக - அருள் அன்றுகிட, ஆள்வினை என - ஆள்வினையே யாகு மென, வலித்த - துணிந்த, பொருள்அல் காட்சியின் - உண்மையற்ற அறிவினையுடைய, மைந்து மலி உள்ளமொடு - வலிமிக்க உள்ளத்தால், துஞ்சல் செல்லாது - மடிதல் இல்லாது,

ச—ஞ. எரி சினம் தவழ்ந்த - எரியும் தீப் பரந்த, இருங் கடற்று அடைமுதல் - பெருங் காட்டிற் புகுமிடத்தே, கரிகு உதிர் மரத்த - இலைகள் கரிந்து உதிரப்பெற்ற மரங்களையுடைய, கான வாழ்க்கை - காட்டின் வாழ்க்கையையுடைய, அடு புலி முன்பின் தொடு கழல் மறவர் - கொல்லும் புலிபோலும் வலியையும் கட்டப்பெற்ற கழலையுமுடைய மறவர்கள், தொன்று இயல் சிறு குடி மன்று நிழல் படுக்கும் - பழையதாய் வருகிற இயல்பையுடைய தமது சிறாரிலுள்ள மன்றத்து நிழலிலே கண்படுக்கும், அண்ணல் நெடுவரை - பெருமையையுடைய நெடிய மலையிலுள்ள, ஆம் அறப் புலர்ந்த - நீ ரறக் காய்ந்த, கல் நெறிப் படர்குவர் ஆயின் - கல் வழியிற் செல்வாராயின்,

ஞ—உச. நல் நுதல் - நல்ல நெற்றியினையும், செயிர்தீர் கொள்கை - குற்றமற்ற கொள்கையினையும், சின் மொழி - சிலவாய சொற்களையும், துவர் வாய் - பவளம் போன்ற வாயினையும், அவிர்தொடி முன் கை - விளங்கும் வளையணிந்த முன் கையினையும், ஆயிழை - ஆய்ந்த அணிகளையுமுடைய, மகளிர் ஆரம் தாங்கிய அலர்முலை ஆகத்து - மகளிரது முத்தாரம்பூண்ட பரந்த முலையையுடைய ஆகத்தில், ஆராக் காதலொடு - அமையாத விருப்புடன், தார் இடைக் குழையாது - தங்கள் தாரை இடையே குழையச் செய்யாதே, சென்று படு விறல் கவின் உள்ளி - சென்றொழிந்த மிக்க அழகினை நினைத்து, என்றும் இரங்குநர் அல்லது - என்றும் இரங்குவாராவதேயல்லாது, இவ்வுலகத்தான் பெயர்ந்து யாவரும் தருநரும் உளரோ எனா - இவ்வுலகத்தே பெயர்த்து அவ்வழகினைத் தருவார் எவரேனும் உளராவரோ என்று இங்ஙனம், புலந்து பல கூறி - வெறுத்துப் பலவும் கூறி, ஆ நோயை ஆக - அமையாத நோயுடையை ஆகவும், யான் - நான், அரிது பெறு சிறப்பின் நின் வயினான் - அரிதாகப் பெற்ற சிறப்பினையுடைய நின்னிடத்தினின்றும், பிரியச் சூழ்தலும் உண்டோ - பிரியுமாறு கருதுதலும் உளதோ? இல்லையாகும்.

(முடிபு) குறுமகளே! நீ, ஆடவர் பொருளல் காட்சியின் உள்ளமொடு துஞ்சல் செல்லாது, கல்லெறிப் படர்குவராயின், சென்றுபடு விறற்கவின் உள்ளி இரங்குநர் அல்லது பெயர்ந்து தருநரும் உளரோ எனப் புலந்து பல கூறி ஆ நோயை யாக, யான் நின்வயின் பிரியச் சூழ்தலு முண்டோ? (ருமேன்.)

கசுசு

(வி - சை.) ஆள்வினை - பொருளீட்டும் முயற்சி; அருள் பொருளென்றுக, ஆள்வினையே பொருளாக வலித்த என்க. [1] 'ஆங்கவை யொருபாலாக' என்னுஞ் சுத்திரத்து, 'அருளல் என்பது, மக்கள் முதலிய சுற்றத்தாரை அருளல்' என்றுர் பேராசிரியர். பிரிவினுல் தனக்கு வரும் ஏதங் குறித்து இரங்காமையின், அருளன்றுக எனத் தலைவி கூறினுள். இக் கருத்து, 'பொருளே காதலர் காதல், அருளே காதலர் என்றி நீயே' (நெடு.) என முன்னர் இந் நூலுள்ளும், [2] பொருளே மன்ற பொருளே, அருளே மன்ற வாருமில் லதுவே' எனக் குறுந்தொகையுள்ளும் வந்துள்ளமையுங் காண்க. சினம் - நெருப்பு; ஆகுபெயர். கரிகுபு என்னும் எச்சம் கரிகு என விகாரப்பட்டது. கரிந்த குதிர் போலும் என்றுமாம். 'தாரிடைக் குழையாது' என்பது இடக்கரடக்கு. 'அவரே பிரியச் சூழ்தலும்' என்றும் பாடம் உளது. இதற்குத் தலைவர் நின்னைப் பிரியக் கருதலும் உண்டோ வென்று தோழி சொல்லியதாக உரைக்க. இதற்கேற்பக், கருத்திலும், தலைமகட்குப் பிரியாரெனத் தோழி சொல்லியது என்ற பாடமும் உளது. அகநானூற்றுக் குறிப்புரையாசிரியர், யானே பிரியச் சூழ்தலும் உண்டோ என்ற பாடத்திற்கே, 'நின்னி டத்தினின்றும் அவர் பிரிய, அவரொடு யான் விசாரிப்பதுண்டோ' எனத் தோழி கூற்றுக்கி வலிந்து பொருள் கூறியுள்ளனர்.

---

76. மருதம்

[தலைமகனை நயப்பித்துக்கொண்டா ளென்று கழறக் கேட்ட பரத்தை தலைமகட்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது.]

மன்கனை முழவொடு மகிழ்மிகத் தூங்கந்
தண்டுறை ஊரனெம் சேரி வந்தென
இன்கடுங் கள்ளின் அஃதை களிற்றொடு
நன்கலன் சயும் நாண்மகிழ் இருக்கை
அவைபுகு பொருநர் பறையின் ஆர்ப்பது
கழறுப என்பவவன் பெண்டிர் அந்நில்
கச்சினள் கழலினன் தேந்தார் மார்பினன்
வகையமைப் பொலிந்த வள்ப்பமை தெரியல்
சுரியலம் பொருநனைக் [3]காண்டி ரோவென
ஆதி மந்தி போதுற் றினையத்
சிறைபறைந் தூரை இச் செங்குணக் கொழுகும்
அந்தண் காவிரி போலக்
கொண்டுகை வலித்தல் சூழ்ந்திரின் யானே.

—பரணர்.

(சொ - ள்.) க—உ. மண் கனை முழவொடு மகிழ்மிகத் தூங்க - மார்ச்சனை செறிந்த மத்தளத்தொடு (காண்பார்க்கு) மகிழ்ச்சி மிக

---

1. தொல். மெய்ப். கூ. 2. குறுந். களை. (பாடம்) 3. காணிரோ

(யாங்கள்) கூத்தாட, தண்துறை ஊரன் எம் சேரி வந்தென - தண்ணிய நீர்த்துறையையுடைய ஊரன் எம் சேரிக்கண் அதனைக் காண வந்தனனாக (அவ்வளவிற்கே),

ஈ—சு. அவன் பெண்டிர் - அவன் பெண்டிர், இன் கடுங் கள்ளின் அஃதை - இனிய கடிய கள்ளினையுடைய அஃதை என்பானது, களிற்றெருடு நன்கலன் ஈயும் நாண் மகிழிருக்கை - யானைகளையும் நல்ல அணிகளையும் (பரிசிலர்க்கு) வழங்கும் மகிழ்ச்சி பொருந்திய நாளோலக்கத்தையுடைய, அவை புகு பொருநர் பறையின் - அவையிற் புகும் பொருநரது பறையைப்போல, ஆனாது கழறுப என்ப - ஓயாது என்னை இகழ்வர் என்று கூறுவர்;

எ—கஉ. கச்சினன் கழலினன் தேம் தார் மார்பினன் - கச்சினையும் கழலினையும் தேனொழுகும் தாரணிந்த மார்பினையும் உடையவனும், வகை அமைப் பொலிந்த வனப்பு அமை தெரியல் - கூறுபாட்டின் அமைதியோடு விளங்கிய அழகு அமைந்த மாலையையுடையவனும் ஆகிய, சுரியல் அம் பொருநனை - குழன்ற மயிரினையுடைய அழகிய கூத்தனாகிய ஆட்டனத்தியை, காண்டிரோ என - கண்டீரோ என்று (வினவி), ஆதிமந்தி பேது உற்று இனைய - அவன் காதலியாகிய ஆதிமந்தி மயக்கமுற்று வருந்திட, சிறை பறைந்து உரைஇ - கரையினை மோதிப் பரவி, செங்குணக்கு ஒழுகும் - தேர் கிழக்கே ஓடும், அம் தண் காவிரிபோல - அழகிய குளிர்ந்த காவிரி தன் திரைக்கையால் வெளவிக் கொண்டமைபோல, கொண்டு கை வலித்தல் - சூளினை மேற்கொண்டு கையாற் பற்றிக் கோடலை, யான் சூழ்ந்தனென் - யான் எண்ணியுளேன்.

(முடிபு) ஊரன், யாங்கள் முழவொடு தூங்க, எம் சேரி வந்தென, அவன் பெண்டிர் பொருநர் பறையின் ஆனாது கழறுப என்ப; ஆதிமந்தி பொருநனைக் காண்டிரோ எனப் பேதுற்று இனைய, குணக்கு ஒழுகும் காவிரிபோலச் சூள்மேற் கொண்டு கைவலித்தலை யான் சூழ்ந்தனென்.

(வி - ரை.) கடைதல் - செறிதல்; ஒலித்தல் எனக் கொண்டு, மார்ச்சனை யமைந்து ஒலிக்கும் எனலுமாம். தூங்கல் - ஆடுதல். பெண்டிர் என்றது தலைமகளை.

அந்தில்: அசை. கச்சினன் கழலினன் மார்பினன் என்னும் குறிப்பு முற்றுக்கள் எச்சமாய்ப் பொருநன் என்னும் பெயர் கொண்டு முடிந்தன. பொருநன் - ஆட்டனத்தி. இதனை, [1] 'ஆட்டனத்தி நலனையந் துரைஇத், தாமிருங் கதுப்பிற் காவிரி வவ்வலின், மாதிரந் துழைஇ மதிமருண் டலந்த, ஆதிமந்தி' என்பதனு னறிக.

உரைஇ - பரந்து. காவிரிபோல - காவிரி தன் திரைக்கையால் வெளவிக் கொண்டமைபோல; இது தொழிலுவமம்.

ஆடற் றகையானுதல் பாடற்குரலானுதல், பெற்றேனென்று சொல்லுவா ளாயின், யான் இப்படிச் செய்வேன் என்றாள்.

---

1. அகம். உஉஉ.

கசுஉ

(மே - ள்.) 1 புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும் என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுள், தலைவனது காமக் கிழத்தியாய இளமைப் பருவத்தாளொருத்தி, தன்பாற் றலைவன் வருவது பற்றித் தலைவி புலத்தலாகக் கேட்டவழிப் பெருமிதம் தோன்ற கூறியதாகும் என்பர் நச்.

---

177. பாலை — உலோச்சனார் திப்புத்தோளார்.

[தலைமகன் பிரியக் கருதிய நெஞ்சிற்குச் சொல்லிச் செலவு அழுங்குவித்தது.]

நன்றுதல் பசப்பவும் ஆய்வினை தரீஇயர்
நுன்னருங் கானத் துன்னுதல் நன்றெனப்
பின்னின்று சூழ்ந்தநீ யாயினை நீண்நெஞ்
சூழ்ந்திறைஞ் வாழிய நெஞ்சே வெய்துறு
இடியுமிழ் வானம் தீங்கி யாங்கறும்
பிடிபதிப் பெயர்ந்த சுடுமுடை முதுபாழ்க்
கயிறுபினைக் குறிஇ ஓலை கொண்மார்
பொதிகண் டழிக்கும் ஆவல மாக்களின்
உயிர்திறம் பெயர நல்லமர்க் கடந்த
நறுகண் ணாளர் குடர்தரீஇத் தெறுவரச்
செஞ்செவி எருவை யஞ்சுவர இருக்குங்
கல்லதர்க் கவலை போகின் சிறார்ப்
புல்லரை யிற்றிப் புகர்படு நீழல்
எல்வளி யலைக்கும் இருள்கூர் மாலை
வானவன் மறவன் வணங்குவிற் றடக்கை
ஆனா நறவின் வண்மகிழ்ப் பிட்டன்
பொருந்தா மன்னர் அருஞ்சமந் தாங்கிய
திருந்திலை யெஃகம் போல
அருந்துயர் தருமிவள் பனிவார் கண்ணே.

—மருத னிளநாகனார்.

(சொ - ள்.) ச. நெஞ்சே வாழிய -,

க—ச. நன்றுதல் பசப்பவும் - நம் தகவியின் ஒள்ளிய நெற்றி பசந்திடவும், ஆய்வினை தரீஇயர் - முயற்சியால் பொருள் சுட்டு தற்கு, நுன் அருங் கானம் - அடைதற்கரிய காட்டு நெறியில், நுன்னுதல் நன்றென - செல்லுதல் நன்றென எண்ணி, பின்னின்று - என் பின்னே நின்று, சூழ்ந்தனையாயின் - எண்ணுதியாயின், நன்று இன்னு சூழ்ந்திசின் - மிகவும் கொடியவற்றை ஆய்ந்துகொண்டனை யாவாய்; (எதனை லெனின்,)

ச—சு. வெய்துறு இடி உமிழ் வானம் - இடிகளை உமிழும் மேகம் வெம்மை மிக, தீங்கி - மழை பெய்யாது நீங்குதலால், யாங்க

---

1. தொல். கற். 40.

றும் குடி. பறிப் பெயர்ந்த - எவ்விடத்தும் குடிகள் தத்தம் பறிகளி
லின்றும் பெயர்ந்து போகற் கேதுவாய, கட்டு உடை முதுபாம் -
பலரும் கட்டிக் கூறும் மிக்க பாழிடமாகிய பாலியில்,

எ—அ. கயிறு பிணிக்குழிசி - கயிற்றாற் பிணித்தலியற்ற குடத்தி
லுள்ள, ஓலி கொண்மார் - ஓலையை எடுத்துக் கோடற்கு, பொறி
கண்டு அழிக்கும் - அக்குடத்தின்மே லிட்ட இலச்சினையை அழ்த்து
நீக்கும், ஆவண மாக்களின் - அவ்வோலையைத் தேரும் மாக்கள் அலுவ
லிற்றை வெளியே ஈர்த்தெடுத்தல் போல,

கூ—கக. உயிர் நிறம் பெயர - தம் உயிர் வேறொரு நற்பதவியிற்
புக, தெறுவர நல் அமர்க் கடந்த - மாற்றார் நஞ்ச நற்போரை வென்று
பட்ட, தறுகணாளர் குடர் - அஞ்சா வீரரின் குடரை, செஞ்செவி
எருவை - சிவந்த செவியினையுடைய பருந்து, அருகுவர - கண்டார்
அஞ்சுமாறு, தீ இ இருக்கும் - வாங்கிப் போகடும்,

கஉ—ச. கல் அதர்க் கவலை போகின் - கற்களையுடைய கவர்த்த
நெறியிற் போயின், சிறார் புல் அரை இத்தி புகர் படு நீழல் - அங்
குள்ள சிறார்களின் பாங்கர்ப் புல்லிய அடியினையுடைய இத்தியின்
புள்ளிபட்ட நிழலிலே, எல் வளி அலைக்கும் - பெருங் காற்று அலைக்
கும், இருள் கூர் மாலை - இருள் மிக்க மாலைப் பொழுதில்,

கரு—கூ. வானவன் மறவன் - சேரன் படைத்தலைவனாகிய
வணங்கு வில் தடக்கை - வளைந்த வில்லைப் பெரிய கையிற்கொண்ட,
ஆ நிறவின் வண் மகிழ்ப் பிட்டன் - அமையாத கள்ளினது மிக்க
மகிழ்ச்சியையுடைய பிட்டன் என்பான், பொருந்தா மன்னர் அரும்
சமத்து உயர்த்த - பகை மன்னரது அரிய போரில் எடுத்த, நிருந்து
இலை எஃகம் போல - திருந்திய இலைத் தொழிலையுடைய வேல்
போல, இவள் பனிவார் கண் - நம் தலைவியது நீர் ஒழுகும் கண்கள்
(தோன்றி), அருந் துயர் தரும் - அரிய துயரினைத் தரும் ஆதலால்
என்க.

(முடிபு) நெஞ்சே வாழிய! நீ ஆள்வினை தீ இயர் காலம் துன்றுதல் நன்
றெனச் சூழ்ந்தனையாயின், இன்றைச் சூழ்ந்தினின்; (எதனாலெனின்,) முது பாழா
கிய கவலையைக் கடந்து செல்லுங்கால் மாலையில், இவள் பனிவார்கண் தோன்றிப்,
பிட்டன் பொருந்தா மன்னர் சமத்து உயர்த்த எஃகம் போல அருந்துயர் தரும்
ஆதலால் என்க.

'குழிசி ஓலை கொண்மார் பொறி கண்டழிக்கும் ஆவணமாக்களின், எருவை
தறுகணாளர் குடர் தீ இ இருக்கும் கவலை என்க.

(வி - ரை.) தீ இயர் - பொருள்தீ இய ரென விரித்துரைக்க.
சூழ்தலோடு தன்னைத் தூண்டுதலுங் கருதிப் பின்னின்று சூழ்ந்தனை
யாயின் என்றான். பின்னின்று - உடன் நின்று என்றுமாம். நல்ல
னைக் கூறிப் போந்து அதனாலாம் ஏதத்தைப் பின்னின்று ஆராய்வா
யாயின் என் றுரைத்தலுமாம். நீங்கி - நீங்கலால் எனத் திரிக்க. கட்
டுடை முதுபாம் - பலராலும் கூட்டப்படுதலுடைய பாழ் என்க.
பாழாகிய கல்லதர்க் கவலை எனக்கூட்டுக. 'கயிறு பிணிக் குழிசி

கசுஅ

யோலி கொண்மார். பொறிகவ் டநிக்கு மாவண மாக்களின்' என் றது, ஊராண்மை நாட்டாண்மைக் கழகங்கட்கு உற்றுப்பினரைத் தேர்ந்தெடுத்தற்பொருட்டு, உடன்பாடு தெரிவிக்கும் தகுதியுடை யார் பலரும் எழுதிக் குடத்தின்கட் போகட்ட ஓலைகளை, ஆவண மாக்கள் பலர் முன் குடத்தின் மேலிட்ட இலச்சினையைக் கண்டு, நீக்கி, உள்ளிருக்கும் ஓலைகளை எடுத்து எண்ணித் தேரப்பட்டார் இவ ரென்ன முடிபு செய்வதோர் வழக்கத்தினைக் குறிப்பது. இது குட வோலை என்று கூறப்படும்; பழைய கல்வெட்டுக்களில் இம்முறை விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆவணமாக்கள் - பிரமாணம் வாங்குகிற மாக்கள் என்பாரும் உளர். ஓலை கொண்மார் அழிக்கும் மாக்கள் என்பதனை, அழித்து ஓலை கொள்ளும் மாக்கள் என மாறுக. எல் வளி - தோற்றமுடைய வளியுமாம்.

---

78. குறிஞ்சி பரணர்

[களவுக் காலத்துப் பிரிந்துவந்த தலைமகற்குத் தோழி சொல் லியது.]

நனந்தலைக் கானத் தாளி யஞ்சி
இனந்தலைத் தரூஉ மெறுழ்நிளர் முன்பின்
வரிஞிமி ரூர்க்கும் வாய்புகு கடாஅத்துப்
பொறிநுதற் பொலிந்த வயக்களிற் றிருருத்தல்
இரும்பினர்த் தடக்கையின் ஏமுறத் தழுவக்
கடுஞ்சூன் மடப்பிடி நடுங்குஞ் சாரல்
தேம்பிழி நறவின் குறவர் முன்றில்
முந்தூ முாய்மலர் உதிரக் காந்தள்
நீடிதழ் நெடுந்துடுப் பொதியத் தன்னென
வாடை தூக்கும் வருபனி யற்சிரம்)
நம்மில் புலம்பிற் றம்மூர்த் தமியர்
என்னு குவர்கொல் அளியர் நாமென
எம்விட் டகன்ற நின்னுட் நிறிதும்
உள்ளியும் அறிதிரோ ஒங்குமலை நாட
உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் சூழச் சேய்நின்று
செழுஞ்செய்த் நெல்லின் விளைகதிர் கொண்டு
நடந்நாள் ஆம்பல் மலரொடு கூட்டி
யாண்டுபல கழிய வேண்டுவயிற் பிழையா
நாளிடுஉக் கடந்து வாளமர் உழக்கி
ஏந்துகோட் டியானை வேந்தர் ஓட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி)
நீம்பெரும் பைஞ்சுனைப் பூத்த
நேங்கமழ் புதுமலர் நாறுமிவள் நுதலே.)

—மதுரை நக்கீரனார்.

(சொ - ள்.) கச. ஓங்கு மலைநாட - ஓங்கிய மலை பொருந்திய நாட்டையுடையவனே,

க. நனந்தலை கானத்து ஆளி அஞ்சி - அகன்ற இடத்தையுடைய காட்டினிடத்தே ஆளியினை யஞ்சி,

உ—ரு. இனம் தலைத் தரூஉம் – தன் இனத்தைத் தன்னிடத்தே கூட்டிக் கொள்ளும், எறும் கிளர் முன்பின் - விளங்கித் தோன்றும் மிக்க வலியினையும், வரி ஞிமிறு ஆர்க்கும் வாய்புகு கடாஅத்து - வரியினையுடைய வண்டுகள் ஒலிக்கும் வாயிற்புகும் மதத்தினையும் உடைய, பொறி நுதல் பொலிந்த - புள்ளிகள் பொருந்திய நெற்றியாற் பொலிவுற்ற, வயக்களிற்று ஒருத்தல் - வலி பொருந்திய ஆண் யானைகளின் தலைவன், இரும்பிணர்த் தடக்கையின் - கரிய சருச்சரையுடைய பெரிய கையால், ஏம உறத் தழுவ - பாதுகாவல் தோன்றத் தழுவவும்,

சு. கடும் சூல் மடப்பிடி நடுங்கும் சாரல் - முதற் சூலையுடைய இளைய பிடி நடுங்கும் பக்க மலையிலுள்ள,

எ. தேம்பிழி நறவின் குறவர் முன்றில் - இனிமையுறப் பிழிந்த கள்ளினையுடைய குறவர்களது முற்றத்தில்,

ஙா—கo. முந்தாழ் ஆய் மலர் உதிர – மூங்கிலின் அழகிய மலர்கள் உதிரவும், காந்தள் நீடிதழ் நெடுந்துடுப்பு ஒசிய - காந்தளது நீண்ட இதழையுடைய பெரிய மலர் முறியவும், தண்என வாடை தூக்கும் - தண்ணென்று வாடைக்காற்று வீசும், வருபனி அற்சிரம் - தோன்றுகின்ற பனியையுடைய முன் பனிக்காலத்தில்,

கக—ஙo. எம்விட்டு அகன்ற சின்னுள் - எம்மைவிட்டகன்றிருந்த சில நாட்களுள்ளே, நம் இல் புலம்பில் - நம்மைப் பிரிந்திருக்கும் தனிமையால், தம்மூர் - தம்மூரின்கண்ணே, தமியர் அளியர் தாம் - தனித்திருக்கும் இரங்கற்குரிய இவர், என் ஆகுவர் கொல் என - எங்ஙனமடைவரோ என எண்ணி இரங்கி,

கடு—உச. உலகுடன் திரிதரும் பலர் புகழ் நல்லிசை – உலகெலாம் பரக்கும் பலரும் புகழும் நல்ல புகழினையும், வாய்மொழி - மெய்ம்மொழியினையுமுடைய, கபிலன் சூழ - கபிலன் ஆய்ந்து வினை செய, செய் நின்று செழும் செய் நெல்லின் விளை கதிர் கொண்டு - நெடுந் தொலைவினின்று வளம்பொருந்திய வயல்களில் விளைந்த நெற் கதிர்களைக் கொண்டுவந்து, தடந்தாள் ஆம்பல் மலரொடு கூட்டி - அவற்றைப் பெரிய தாளினையுடைய ஆம்பல் மலராலாய அவியலொடு அட்டு உண்பித்து, யாண்டு பல கழிய வேண்டு வயின் பிழையா - பல யாண்டுகள் கழியவும் போரை விரும்பிச் செய்யும் இடத்தினின்றும் பெயராமல், தாள் இடுஉக் கடந்து வாள் அமர் உழக்கி – பகைவர் வாட்போரினைக் கலக்கி முயற்சியால் வென்று, ஏந்து கோட்டு யானை வேந்தர் ஓட்டிய - நிமிர்ந்த கொம்புகள் பொருந்திய களிற்றினையுடைய மூவேந்தரையும் பிறக்கிடச் செய்த; கடும் பரிப் புரவிக் கைவண் பாரி - மிக்க விரைவினையுடைய குதிரை

கஎ0

யையும் கைவண்மையையுமுடைய பாரியின், தீம் பெரும் பைஞ்சுனை பூத்த - இனிய பெரிய பசிய சுனைக்கட் பூத்த, தேம் கமழ் புதுமலர் நாறும் இவள் நுதல் - தேன் மணக்கும் புதிய மலரென மணக்கும் இவளது நெற்றியினை,

கூடீ—சு. சிறிதும் உள்ளியும் அறிதிரோ - சிறிதளவேனும் நினைத்தறிந்தீரோ.

(முடிபு) மகிழ நாட! ஆளி யஞ்சி, ஒருத்தல் கழுவவும் மடப்பிடி நடுங்கும் சாரலிடத்துக் குறவர் முன்றிலில் வாடை தூக்கும் அற்செம், நம்மில் புலம்பில் அளியர் என் ஆகுவர் கொல் என, பாரியின் சுனைபூத்த புதுமலர் நாறும் இவள் நுதலைச் சிறிதும் உள்ளியும் அறிதிரோ.

(வி - ரை.) இனம் தலை : இங்குத் தலை அசையுமாம். எறும் மூன்பு : ஒருபொரு ளிரு சொல். மிஞிறு என்பது ஞிமிறு என்ரு யிற்று. கடுஞ்சுல் - முதற் கரு. [1]'நின்னயந் துறைவி கடுஞ்சூற் சிறுவன்' என்பது காண்க. தேம்பிழி நறவு - தேனுற் பிழிந்த நறவு மாம். துடுப்பு - துடுப்புப் போறலின் பூவிற்கு ஆகுபெயர். நம் மில்நாம் இல்லாத என்க. 'வாய்மொழிக் கபிலன் குழச் சேய் நின்று, செழுஞ்செய் நெல்லின் விளைகதிர் கொண்டு, தடந்தா ளாம்பல் மல ரொடு கூட்டி' என்றது, தமிழ்நாட்டு மூவேந்தரும் பாரியின் பறம் பரசை முற்றியிருப்ப. அரணிலுள்ளார் உணவின்றி வருந்தாவாறு, கபிலர் விளைகதிர் வளர்த்துக் கதிர் கொண்டுவர விட்ட வரலாற்றை உணர்த்தியவாறு. [2]'பாரி பறம்பின், நிரைபறைக் குரீஇயினம் காலைப்போகி, முடங்குபுறச் செந்நெற் றரீஇய வோராங்கு, கிரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபட, படர்கொள் மாலை படர்தந் தாங்கு' என இவ்வரலாறு ஔவையாராலுங் கூறப்பட்டுளது. மலரொடு கூட்டி என்பதன்பின், அட்டு உண்பித்து என வருவித் துரைக்க. பிழைய, சுறு கெட்ட எதிர்மறை வினையெச்சம். வேர்தர் ஓட்டிய என இரண்டனுருபு உயர்திணை மருங்கிற் றொக்கு நின்றது உடம்பொடு புணர்த்தலாற் கொள்க.

(உ - றை.) 'நனந்தலை . . . மடப்பிடி நடுங்கும்' என்றது, 'யானை காக்கவும் பிடி நடுங்கினாற் போல', நீயிர் இவளைப் பாதுகாக்க வேண்டுமென்னுங் கருத்துடையரா யிருக்கவும், பிரிவிற்கு அஞ்சாநின்றாள் என்றவாறு.

79. பாலை

[பொருள்வயிற் பிரிந்த தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

தோட்பதன் அமைந்த கருங்கை ஆடவர்
கனைபொறி பிறப்ப நாறி வினைப்படர்ந்து
கல்லுறுத் தியற்றிய வல்லுவர்ப் படுவில்
பாருடை மருங்கின் ஊறல் மண்டிய

1. கல்லு. கo. 2. அகம். கoக.

கு வன்புலம் நுமியப் போகிக் கொங்கர்
படுமணி யாயம் நீர்க்குநிமிர்ந்து செல்லும்
சேதா எடுத்த செந்நிலக் குரூஉத்துகள்
அகலிரு விசும்பின் ஊன்றித் தோன்றும்
நனந்தலை அழுவம் நம்மொடு துணைப்ப

கo வல்லாங்கு வருது மென்னு தல்குவர
வருந்தினை வாழியென் நெஞ்சே இருஞ்சிறை
வளைவாய்ப் பருந்தின் வான்கட் பேடை
ஆடுதொறு கனையும் அவ்வாய்க் கடுந்துடிக்
கொடுவில் எயினர் கோட்சுரம் படர

கடு நெடுவிளி பயிற்றும் நிரம்பா நீளிடைக்
கல்பிறங் கந்தம் போகி
நில்லாப் பொருட்பிணிப் பிரிந்த நீயே

—கூடவாயிற் கீரத்தனர்.

(சொ - ள்.) கக. வாழி என் நெஞ்சே -,

கக—எ. ஆடுதொறு கனையும் அவ்வாய்க் கடுந்துடி - ஆடுந் தோறும் ஒலிக்கும் அழகிய வாயினையுடைய கடிய துடியினையும், கொடுவில் எயினர் கோள் சுரம் படர - வளைந்த வில்லினையு முடைய மறவர் (பகைவரை வளைத்துக்) கொள்ளும் சுரத்தின்கட் செல்ல, இரும் சிறை வளைவாய்ப் பருந்தின் வான்கண் பேடை - பெரிய சிறையினையும் வளைந்த வாயினையுமுடைய பருந்தின் வெள் ளிய கண்ணினை யுடைய பேடை, நெடுவிளி பயிற்றும் நிரம்பா நீளிடை - (தன் துணையினை நோக்கி) நெடுங் கூப்பிடு செய்யும் செல்லத் தொலையாத நீண்ட இடமாய, கல் பிறங்கு அத்தம் போகி - கற்கள் விளங்கும் காட்டில் நடந்து, நில்லாப் பொருட்பிணிப் பிரிந்த நீ - நீலை நில்லாத பொருளின்மேலுள்ள பற்றினால் பிரிதலுற்ற நீ,

க—கூ. தோட்பதன் அமைத்த கருங் கை ஆடவர் - தோளிலே தொங்கவிடும் சோற்று மூடியைக் கோத்த வலிய கையினையுடைய ஆடவர்கள், வினைப்படர்ந்து - (இனறு வெட்டும்) தொழினிற் புக்கு, கனைபொறி பிறப்ப நூற்றி - மிக்க நீப் பொறி யுண்டாகப் பாறைகளை வெட்டி, கல்லுறுத்து இயற்றிய - கல்லுதல் செய்து அமைத்த, வல் லுவர்ப் படுவில் - மிக்க உவரையுடைய கினற்றில், பாருடை முருங் கின் ஊறல் மண்டிய - பாரினை உடைத்த பக்கத்தே ஊறிய நீரை உண்ணவேண்டி, நீர்க்கு நிமிர்ந்து செல்லும் - நீர் பருகக் கலித்துச் செல்லும், கொங்கர் படு மணி ஆயம் சேதா - கொங்கரது ஒலிக்கும் மணி பூண்ட ஆயமாகிய செவ்விய ஆக்கள், வன்புலம் நுமியப் போகி - வன்னிலங்கள் துணிபடச் சென்று, எடுத்த செந்நிலக் குரூஉத் துகள் - கிளப்பிய செம்மண் னிய நிறம்பொருந்திய புழுதி, அகல் இரு விசும்பின் ஊன்றித் தோன்றும் - அகன்ற பெரிய வானின் கண் மிக்குத் தோன்றும், நனந்தலை அழுவம் - இடமகன்ற காட்டில்,

களவு.

க—கக. நம்மொடு துணைப்ப - நம் தலைவி நம்மொடு துணையாக, வல்லாங்கு வருதும் என்னாது - வல்லபடி செல்வோம் என்னாது, அல்குவர வருந்தினை - இங்கே வந்து தங்கிய அளவில் வருந்துகின் றனை ; இஃதென்னை !

(முடிபு) நெஞ்சே ! கல்பிறங்கு அத்தம் போகி நில்லாப் பொருட்பிணி பிரிந்த நீ, நனந்தலை அழுவம், நம்மொடு (அவள்) துணைப்ப, வல்லாங்கு வருதும் என்னாது, அல்குவர, வருந்தினை.

(வி - ரை.) சோறும் உடன் கொண்டுபோய்க் கிணறு வெட்டு தலின், தோள்பதன் அமைத்த என்றார். கல்லுறுத்தல் - கல்லுதல். வல் உவர் - மிக்க உவர். படு - கிணறு. பார் - வன்னிலம். நீர்க்கு நிமிர்ந்து செல்லும் சேதா மண்டிய போகி எடுத்த துகள் என்க. வருதும் - போவோம் என்னும் பொருட்டு. கடுவிளி பயிற்றும் என்றது எயினர் போர்க்குச் செல்லுதல் அறிந்து பேடை துணையை அழைக்கும் என்றபடி.

---

80. நெய்தல்

[இரவுக்குறி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.]

கொடுந்தாள் முதலையொடு கோட்டுமீன் வழங்கும்
இருங்கழி யிட்டுச்சுரம் நீந்தி யிரவின்
வந்தோய் மன்ற தண்கடற் சேர்ப்ப
நினக்கெவன் அரியமோ யாமே எந்தை
புனர்நிரைப் பரப்பகம் துழைஇத் தந்த
பன்மீன் உணங்கற் படுபுள் ஓப்புதும்
முண்டகம் கலித்த முதுநீர் அடைகரை
ஒண்பல் மலர கவட்டிலை அடும்பின்
செங்கேழ் மென்கொடி ஆழி அறுப்ப
இனமணிப் புரவி நெடுந்தேர் கடைஇ
மின்னிலைப் பொலிந்த விளங்கினர் அவிழ்பொன்
தண்நறும் பைந்தா துறைக்கும்
புள்ளினயங் கானல் பகல்வந் தீமே.

—[1]மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார்.

(சொ - ள்.) கூ. தண்கடற் சேர்ப்ப - குளிர்ந்த கடற்கரையை யுடைய தலைவனே ! நீ,

க—கூ. கொடுந் தாள் முதலையொடு கோட்டுமீன் வழங்கும். வளைந்த காலினையுடைய முதலையோடு சுறுமீன் இயங்கும், இருங்கழி இட்டுச் சுரம் நீந்தி - கரிய உப்பங் கழியாய நெருங்கிய அரிய வழி யினைக் கடந்து, இரவில் வந்தோய் - இரவின்கண் வந்துளாய் ;

(பாடம்) 1. ருக்கோர்.

எ—கு. முண்டகம் கலித்த மூதுநீர் அடைகரை - நீர்முள்ளி தழைத்த கடலையடைந்த கரையிலுள்ள, ஒண் பல் மலர கவட்டிகை அடும்பின் - ஒள்ளிய பலவாய மலர்களையுடைய கவடுபட்ட இதழ் களையுடைய அடம்பினது, செங்கேழ் மென்கொடி ஆழி அறுப்ப - சிவந்த நிறமுடைய மெல்லிய கொடிகளை (நின்) தேருருள் அறுத்து வர, இன மணிப் புரவி நெடுந்தேர் கடைஇ - பணிகளைப் பூண்ட ஓரினமாகிய குதிரைகள் பூட்டிய நெடிய தேரினைச் செலுத்தி, மின் இலைப் பொலிந்த விளங்கு இணர் - ஒளியையுடைய இலையொடு பொலிந்த விளங்கும் பூங்கொத்துக்கள், அவிழ் பொன் தண் நறும் பைந்தாது உறைக்கும் - மலர்ந்த பொன்போலும் தண்ணிய நறிய செவ்வித் தாதுக்களைச் சொரியும், புன்னை அம் கானல் பகல் வந் தியே - புன்னை மரங்களையுடைய அழகிய கடற்கரைச் சோலையில் பகலில் வருவாயாக;

சு—சூ. எந்தை - எமது தந்தை. புணர்திரைப் பரப்பகம் துழை இத் தந்த - பொருந்தும் அலைகளையுடைய கடலகத்தே துழவிக் கொணர்ந்த, பல்மீன் உணங்கல் படுபுள் ஒப்புதும் - பலவகை மீன் களின் வற்றலிற் பொருந்தும் புட்களை ஓட்டியிருப்பேம்; ஆகலின்,

சு. யாம் நினக்கு எவன் அரியம் - யாங்கள் நினக்கு எங்ஙனம் அரியமாவேம்?

(முடிபு) சேர்ப்ப, இருங்கழி இட்டுச் சுரம் நீந்தி இரவில் வந்தாய், நெடுந் தேர் கடைஇ. புன்னையங் கானல் பகல் வந்தியே; மீன் உணங்கல் படுபுள் ஒப்புதும்; யாம் நினக்கு எவன் அரியம்?

(வி - ரை.) கோட்டு மீன் - கொம்பையுடைய மீன்; சுறுமீன். இட்டுச் சுரம் - வழி சிறிதாகிய சுரம். நெறியருமை கூறியவாறு.

மலர அடும்பு எனக் கூட்டுக.

---

81. பாலை

[பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி தலைமகள் குறிப்பறிந்து வந்து சொல்லியது.]

நாளுலா எழுந்த கோள்வல் உளியம்
ஓங்குநிலை இருப்பைத் தீம்பழம் மூசினின்
புல்லிலைப் புற்றின் பல்கிளைச் திதலை
ஓருங்குமுயல் நெடுத்த நனைவாய் நெடுங்கோ
டுரும்பு துருவின் இடங்திரை தேரும்
மண்பகு வறந்த ஆங்கட் கல்பொரக்
கூர்நெறைக் கவிழ்ந்த உலறுதலை நோன்சினை
நெறியயல் மராஅம் ஏறிப் புலம்புகொள
எறிபருந் துயவும் எல்லறப் பாழிடை
வெம்முனை அருஞ்சுரம் நீந்திச் சிறந்த

செம்மல் உள்ளம் துரந்தனின் கூறுத்தோர் வேலும்
ஒளிறுவேல் அழுவம் களிறுபடக் கடக்கும்
மாவலம் கடலன்ன விளங்கில் அன்னை
மையெழில் உண்கண் கலுழ
கருமுய சேறிரோ அகன்றுசெய் பொருட்கே.

— ஆலம்பேரி சாத்தனார்.

(சொ - ள்.) கரு. முய - அகன்றுசெய் பொருட்கு - எம்மைப் பிரிந்து சென்று தேடும் பொருட்கு;

கo—க. சிறந்த செம்மல் உள்ளம் துரந்தலின் - சிறந்த தகுதியை வாய்ந்த நும் உள்ளம் தூண்டுதலின்,

கக—ச. கறுத்தோர் - வெகுண்டெழுந்த பகைவரது, ஒளிறு வேல் அழுவம் - ஒளிர்கின்ற வேலினையுடைய போர்க்களத்தை, களிறு படக் கடக்கும் - யானைகள் மடிய வெல்லும், மாவண் கடலன் விளங்கில் அன்ன - மிக்க வண்மையையுடைய கடலன் என்பானது விளங்கில் எனும் பதியை யொத்த, எம் எழில் மை உணகண் கலுழ- எமது அழகிய மையுண்ட கண்ணினளாய தகுதி அழ,

க—சு. நாள் உலா எழுந்த நாள் வல் உளியம் - விடியற் காலத்தே எழுந்து உலாவிய தன் இரையைக் கொள்ளுதலில் வல்ல கரடி, ஓங்குசினை இருப்பைத் தீம் பழம் முனையின் - உயர்ந்த கிளை யுடைய இருப்பை மரத்தின் இனிய பழத்தினை வெறுப்பின், பல்கினைச் சிதலை - பல கிளைகளாய கறையான், நனைவாய் ஒருங்கு முயன்று எடுத்த - நனைந்த வாயால் ஒருங்குகூடி வருந்திக் கட்டிய, புல்அகைப் புற்றின் - புல்லிய வகைகளையுடைய புற்றினது, நெடுங் கோடு - நெடிய உச்சியினை, இரும்பு ஊது குருகின் இடந்து - இருப்பு உலையில் ஊதும் துருத்தியைப் போன்று (உயிர்த்துப்) பெயர்த்து, இரை தேரும் - இரையினை ஆய்ந்தெடுத்துண்ணும், மண்பக வறந்த ஆங்கண் - மண் பிளவுபட வறட்சியுற்ற பாலை நிலமாய அவ்விடத்து,

சு—கo. கண் பொரக் கதிர் தெற - வெய்யில் கண்களைப் பார்க்க வொண்ணாதவாறு பொர ஞாயிறு காய்தலின், நெறி அயல் மராஅம் நெறியின் அயலதாகிய வெண்கடம்புகளின், கவிழ்ந்த உலறுதலை நோன்சினை ஏறி - (தழைகள் வாடிக்) கவிழ்ந்துள காய்ந்த உச்சியினை யுடைய வலிய கிளைகளில் ஏறி, புலம்புகொள எறி பருந்து உயவும் - இரையினைப் பாய்ந்தெடுக்கும் பருந்து தனிமை கொள வருந்தும், என்றூழ் நீள் இடை - வெப்பம் மிக்க நீண்ட இடங்களாய, வெம் முனை அருஞ்சுரம் நீந்தி - வெவ்விய முனைகளையுடைய அரிய சுரத் தினைத் தாண்டி,

கரு. சேறிரோ - செல்லுவீரோ.

(முடிபு) ஐய! பொருட்கு உள்ளம் துரந்தலின், உண் கண் கலுழ, அருஞ் சுரம் நீந்திச் சேறிரோ.

உளியம் நிம்பழம் முனையின் நெடுங்கோடிடந்து இரை தேரும் ஆங்கண் பருந்து உயவும் நீளிடை அருஞ்சுரம் என்க.

(வி - ரை.) 1 "அத்த விருப்பை யார்கழல் புதுப்பூத், தித்த வாய துகளிலம் பரக்க, . . . வன்கை யெண்கின் வயிரை பரக்கும், எனக் கரடி இருப்பைப்பூ உண்டலும், 2 "சுயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த, குரும்பி வல்சிப் பெருங்கை யேற்றை' எனப் புற்றும் பழஞ் சோறு உண்டலும் முன்னர் வந்துள்ளமை காண்க.

கரடி அகழ்கின்ற காலத்து உயிர்த்தலின், குருஉன் இடத்து என்றார். முனை - எயினர் இருப்பு. அழுவம் - போர்க்களப் பரப்பு. எம் ஐ எழில் எனப் பிரித்து வியக்கத்தக்க அழகு என்றுரைத்தலு மாம். உண்கண், ஆகு பெயர்; தலைவியை உளப்படுத்தி எம் கண் கலுழ என் றுரைத்தாளுமாம். இது செலவழுங்குவித்தது.

---

(82) குறிஞ்சி

[தோழிக்குத் தலைவி அறத்தொடு நின்றது.]

ஆடமைக் குயின்ற அவிர்துகில் மருங்கில்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்
நோடமை முழவின் துடிநடை யாகக்
கு கணக்கலி இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டியா மாத 4
இன்பல் இமிழிசை கேட்டுக் கலிதிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத் நியலியா டும்மயில்.
கo 1 நனவுப்புகு விறலியில் தோன்றும் நாடன்
உருவ வல்வில் பற்றி அம்புதொரிந்து
செருச்செய் யானை சென்னெறி விடுஅய்
புலர்குரல் ஏனற் புழையுடை ஒருநிறை
மலர்தார் மார்பன் நின்றோற் கண்டோர்
கடு. பலர்நில் வாழி தோழி அவருள்
ஆரிருட் கங்குல் அஞ்சொடு பொருந்தி
ஓரியா னுகுவ தெவன்கொல்
நீர்வார் கண்ணெடு நெஞ்சோ டேனே.

—கபிலர்.

(சொ - ள்.) கடு. தோழி வாழி -,

க—கடு. ஆடு அமைக் குயின்ற அவிர் துகில் மருங்கில்—அசையும் மூங்கிலில் துளைக்கப்பெற்ற விளங்கும் துளையிடத்தே, கோடை அவ் வளி குழல் இசையாக - அழகிய மேல் காற்றினு லெழும் ஒலி குழ லின் இசையாகவும், பாடு இன் அருவிப் பனிநீர் இன்னிசை - ஒலி இனிய அருவியின் குளிர்ந்த நீரின் இனிய ஓசை, தோடு அமை முழ

---

1. அகம், கடு. 2. அகம், அ. (பாடம்) 1. விழவுக்கள விறலியில்

(சொ - ள்.) நெஞ்சே!

கூ—கஂ. வலம் சுரி மராஅத்து சுரம் கமழ் புதுவீ - வலமாகச் சுரிந்த வெண்கடம்பினது சுரமெல்லாம் கமழும் புதிய பூக்களை, சுரி சூர் உகளத் தகவு பொலியச் குடி - சுருள் கொண்ட உகளபோன்ற மயிரினையுடைய தகவில் விளங்கும்படி அணிந்து, கறைஅடி மடப் பிடி கானத்து அலற - உரல்போன்ற அடியினையுடைய இளைய பெண் யானை காட்டிற் (பிரிந்து) அலற, களிற்றுக் கன்று ஒழிந்த உவகையர் - யானைக் கன்றினைப் பிரிதலுக்கொண்ட மகிழ்ச்சியை யுடையராய், கலி சிறந்து - செருக்கு மிக்கு, கருங்கால் மராஅத்துக் கொழுங் கொம்பு பிளந்து - வலிய அடிமரத்தினையுடைய வெண் கடம்பின் வளைய கொம்பினைப் பிளந்து, பெரும் பொளி வெண் நார் - பெரிதாக உரித்த வெள்ளிய நார்க் கயிற்றால், அழுந்து படப் பூட்டி - அக்கன்றினை அழுத்தம்பெறக் கட்டிக் கொணர்ந்து, நடுங் கொடி நுடங்கும் நியமம் மூதூர் - நீண்ட கொடிகள் அசையும் அங் காடிகளையுடைய பழமையான ஊரில், நறவு நொடை நல்லில் புதவு முதல் பிணிக்கும் - கள்விற்கும் நல்ல இல்லின் வாயிலிடத்தே பிணித்திடும், கல்லா இளையர் - தம் வேட்டுவத் தொழிலன்றிப் பிறிது தொழில் கல்லாத வேடர்கட்கு, பெருமகன் - தகுவனை, புல்லி - புல்லி என்பானது, வியன் தகு நல் நாட்டு வேங்கடம் கழியினும் - விரிந்த இடத்தினையுடைய நல்ல நாட்டின்கண்ணுள்ள வேங்கட மலையினைக் கடந்து செல்லினும்,

கக—ச. நெய்தல் கூம்பு விடு நிகர் மலர் அன்ன - நெய்தலினது முகை யவிழ்ந்த ஒளி பொருந்திய மலரை யொத்த, ஏந்து எழில் மழைக் கண எம்காதலி குணன் - அழகினை ஏந்திய குளிர்ந்த கண்ணினளாய நம் காதலியின் குணங்கள், சேயர் என்னாது - சேய்மைக்கண் சென்றவர் என்னாது, அன்பு மிகக் கடைஇ - அன்பு மிகச் செலுத்திட, எய்தவந்தன தாம் - தாம் நம்மால் அணுக வந்தன.

(முடிபு) நெஞ்சே! (நாம்) புல்லி வேங்கடம் கழியினும், எம் காதல் குணன் தாம் சேயர் என்னாது அன்பு மிகக் கடைஇ எய்த வந்தன.

(வி - ரை.) உகள - தகவியாட்டம். ஒழிந்த உவகையர்: ஒழிந்த, பெயரெச்சம் காரணப் பொருட்டாக வந்தது.

(மே - ள்.) [1] 'வெறியறி சிறப்பின்' என்னுஞ் சூத்திரத்து, தருதலும் என்ற மிகையால், நிரையல்லாத கோடலும் அத் துறைப் பாற்படும் என்றுரைத்து, 'கறையடி மடப்பிடி கானத் தலறக், களிற்றுக் கன்றொழித்த வுவகையர் கலிசிறந்து, . . . கல்லா விளையர் பெருமகன் புல்லி' என்ற அடிகளைக் காட்டி, . . : யானைக் கன்றைக் கவர்ந்தவாறு காண்க என்றனர் நச்.

---

1. தொல். புறத். ஓ.

84. முல்லை

[தலைமகன் பாசறையிருந்து சொல்லியது.]

மலைமிசைக் குலைஇய உருகெழு திருவில்
பனைமுழங் கெழிலி பௌவம் வாங்கித்
[1]தாழ்பயற் பெருநீர் வலனேர்பு வளைஇ
மாதிரம் புதைப்பப் பொழிதலின், காண்வர
இருநிலங் கவினிய ஏமுறு காலை
நெருப்பின் அன்ன சிறுகட் பன்றி
அயிர்க்கண் படாஅர்த் துஞ்சுபுறம் புதைய
நறுவீ முல்லை நாண்மலர் உதிரும்
புறவடைந் திருந்த அருமுனை இயவில்
சிறா ரோளே [2]ஒண்ணுதல், யாமே
எரிபுரை பன்மலர் பிறழ வாங்கி
அரிநர் யாத்த அலங்குகலைப் பெருஞ்சூடு
கள்ளார் வினைஞர் களந்தொறும் மறுகும்
தண்ணடை தழீஇய கொடிநுடங் காரெயில்
அருந்நிறை கொடுப்பவுங் கொள்ளான், சினஞ்சிறந்து
வினவயிற் பெயர்க்குந் தானைப்
புனைதார் வேந்தன் பாசறை யேமே.

—மதுரை எழுத்தாளன்.

(சொ-ள்.) க—ரு. மலைமிசைக் குலைஇய உருகெழு திருவில் = மலைமீது வளைந்த அச்சந் தரும் அழகிய வில்லினையுடைய, பனை முழங்கு எழிலி - முரசமென முழங்கும் மேகம், பௌவம் வாங்கி = கடல் நீரை முகந்துகொண்டு, வலன் ஏர்பு வளைஇ - உலகினை வலமாக எழுந்து வளைத்து, தாழ் பெயல் பெருநீர் - இறங்கிப் பெய்யும மிக்கமழையை, மாதிரம் புதைப்பப் பொழிதலின் - திசையெல்லாம் மறையப பொழிதலால், காண்வர இருநிலம் கவினிய ஏமுறு காலை - காட்சியுறப் பெரிய நிலம் அழகுபெற்ற இன்பம் எய்திய இக்காலத்தே,

க. ஒண்ணுதல் - ஒளி பொருந்திய நெற்றியினையுடைய நம் தலைவி,

சு—க. அயிர்க்கண் படாஅர்த் துஞ்சு - நுண் மணலின்கண்ணுள்ள சிறு தாறினிடத்தே தூங்கும், நெருப்பின் அன்ன சிறுகண் பன்றி = நெருப்பினையொத்த சிறிய கண்ணினையுடைய பன்றியின், புறம் புதைய - முதுகு மறைய, நறுவீ முல்லை நாள் மலர் உதிரும் - நறிய பூவினதாகிய முல்லையின் புதிய பூக்கள் உதிரும், புறவு அடைந்திருந்த அருமுனை இயவில் - காடு சார்ந்திருக்கும் அரிய முனைகளையுடைய நெறியிலுள்ள, சிறாரோள் - சிறிய ஊரின்கண் உள்ளாள் ஆவள்;

(பாடம்) 1. தாழ்பெயற் கெழி. 2. கன்னுதல்.

கo—எ. யாமே - யாமோ, எரி புரை பன்மலர் பிறழ வாங்கி - நெருப்புப் போன்ற பல மலர்களோ மாறுபட வைத்து வலித்து, அரிஞர் யாத்த அலங்குதலைப் பெருந்தூண் - கொல்லரிஞர் கட்டிய அசையும் பக்கங்களுடைய பெரிய நெறகட்டிகளாக் கொண்டு, கள் ஆர் விழவினர் களம்தொறும் மறுகும் - கள்ளிலே உண்ட களமர் களம் தோறும் கொடுபோகும், தலையடை தழீஇய கொடி நுடங்கு ஆர் எயில் - மருதநிலம் சூழ்ந்த கொடிகள் அசையும் இவ்வரிய எயிலை, அருந்திறை கொடுப்பவும் கொள்ளான் - பகைவர் வணங்கி அரிய திறையாகக் கொடுப்பவும் ஏறறுக் கொள்ளானாய், தினஞ் சிறந்து - வெம மிக்கு, விழவயில் பெயர்க்கும் தாஅம் - மேன்மேலும் போரின்கட் செலுத்தலுமாம் சேஎயிலையுடைய, புகழ்தார் வேந்தன் பாசறையேம் - மாலையை அணிந்த அரசனது பாசறையிடத்தே யுள்ளேம்.

(முடிபு) எரிபொழிதலின் இருநிலம் கரிய ஏமுறு காலை, ஒண்ணுதல் சிறுநோள்: யாமே, ஆரெயில் திறை கொடுப்பவும் கொள்ளான் விழவயிற் பெயர்க்கும் தாஅப் புகழ்தார் வேந்தன் பாசறையேம்.

(வி-ரை.) ஏம் - ஏமம்; பாதுகாவலுமாம். எரிபுரை மலர் - தாமரை; செங்கழுநீர். பிறழ என்றது பூவோடொன்ற நெல்லுக் கட்டுங் காலத்து அரியோடு மாற வைத்துக் கட்டப் பெறுதலால் அவை தம்மின் மாறுபடல். எயில் - அரண், ஊர். தூதுவிடக் கருதிய தலைவன் சிறுநோள் ஒண்ணுதல் எனத் தன் வருத்தந் தோன்றக் கூறினன் எனக. இதனை தாது கண்டு கூறிய தென்பர் நச்சினார்க்கினியர்.

(மே - ள்.) [1]'ஏவன் மரபின்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுளை எடுத்துக் காட்டி, இது தூது கண்டு வருந்திக் கூறியது எனவும், இதன்கண் தன்னூரும் அருமுனையியவிற் சிறார் என்றலின், தான் குறுநில மன்னன் என்பது பெற்றும் என்றும், [2]'தானே சேறலும்' என்னுஞ் சூத்திரத்து, இது குறுநில மன்னர் போல்வார் சென்றனை தோன்றக்கூறியது என்றும், [3]'ஒன்றுந் தமரினும்' என்னுஞ் சூத்திரத்து இது, 'ஆங்கத் தோன்றும் பாங்கோர் பாங்கினும்' என்றதற்கு உதாரணமாகுமென்றும், [4]'கூதிர் வேனில்' என்னுஞ் சூத்திரத்து, 'விழவயிற்...பாசறை யேமே' எனத் தலைவியை விரைவன வாகைக்கு வழுவாம்; அகத்திற்கு வழுவன்று என்றும் கூறுவர் நச்.

---

85. பாலை பரலாத்றுத் குறிஞ்சி.

[தலைமகன் பிரிய வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

77 நன்றுதல் பசப்பவும் பெருந்தோள் நெகிழவும்
உண்ணா உயக்கமோ டுயிர்செலச் சாஅய்

---

1. தொல். அகத். உ. 2. தொல். அகத். உ. 3. தொல். அகத். ஃ. 4. தொல். புறத். உ.

இன்னம் ஆகவும், இங்கு நம் துறந்தோர்
அவர் அல்லர் அவரைப் பலபுலந்து
ஆழல் வாழி தோழி, சாரல்
சென்று நாள் உலந்த மென்னடை மடப்பிடி
கன்று பசி கடிய இயலை பைங்கண் யானை
முற்ற மூங்கில் முளை தரு பூட்டும்,
வெல்வேல் நிரையன் வேங்கட நெடுவரை
நன்னுள் பூத்த நாகு இளவேங்கை
நல்ல நாட்காலையிற் பூத்த மிக இனிய வேங்கை மரத்தின், நறுவி
யாடிய பொறிவரி மஞ்ஞை
நனைப்பசுங் குருந்தின் நாறிணர் இருந்து
துணைப்பயிர்ந் தகவுந் துணைதரு தண்கார்
வருதும் யாமென நம்துறந் தோர்க்கு
பருவங் காணது பாயின்று மழையே.

—காட்டூர் கிழார் மகனார் கண்ணனார்.

(சொ - ள்.) 4—8. தோழி வாழி -, நன்னுதல் பசப்பவும் அழுகிய நெற்றி பசந்திடவும், பெருந் தோள் நெகிழவும் - பெரிய தோள் மெலிந்திடவும், உண்ணு உயக்கமொடு உயிர் செலச் சாஅய் - உண்ணுமையா லாய வருத்தத்தால் உயிர் நீங்க மெலிந்து, இன்னம் ஆகவும் - நாம் இந் நிலையினமாகவும், இங்கு நம துறந்தோர் - இங்கு நம்மை விட்டுப் பிரிந்தார் நம் தலைவர், அவர் அல்லர் அவர் - எதுவே அவர் அறத்தினரல்லர், எனப் பல புலந்து ஆழல் - என்றிவ் வாறு பலவுங் கூறி வெறுத்துத் துயரில் அழுந்தாதே;

1—5. சாரல் - மலைச் சாரற்கண்ணே, சென்று நாள் உலந்த மெல்நடை மடப்பிடி கன்று பசி கடிய இய - சென்று அணிமை கழிந்த மெல்லிய நடை வாய்ந்த இளைய பிடியினதும் அதன் கன்றினதும் பசியைப் போக்கற்கு, பைங்கண் யானை - பசிய கண்ணினையுடைய களிறு. முற்ற மூங்கில் முளை தரு பூட்டும் - மூங்கிலின் முற்றிய முளையினைக் கொணர்ந்து உண்பிக்கும், வெல்வேல் நிரையன் வேங்கட நெடுவரை - வெற்றி பொருந்திய வேலினையுடைய நிரையனது வேங்கடமெனும் நீண்ட மலையில், நன்னுள் பூத்த நாகு இளவேங்கை - நல்ல நாட்காலையிற் பூத்த மிக இனிய வேங்கை மரத்தின், நறுவி யாடிய பொறி வரி மஞ்ஞை - நறிய பூக்களின் துகளினை அணிந்த பொறிகளுடன் கூடிய வரிகளையுடைய மயில், நனைப் பசுங் குருந்தின் நாறு சினை யிருந்து - தேனையுடைய பசிய குருந்த மரத்தின் நறு மணம் வீசும் கிளையிலிருந்து, துணைப் பயிர்ந்து அகவும் துணைதரு தண்கார் - தன் துணையை அழைத்துக் கூப்பிடும் விரைந்து வரும் குளிர்ந்த கார்ப் பருவமே, யாம் வருதும் எனத் தேற்றிய பருவம் - நம் தலைவர் தாம் வருவோம் எனத் தெளிவித்த பருவமாகும், மழை பாயின்று - அதற்கு மழையும் பரவா நின்றது, அதுகாண் - அதனைக் காண்பாயாக.

(பாடம்): 1. துணைதரு தண்கார்.

கதை.

(முடிபு) தோழி, வாழி! நாம் இன்னம் ஆக, நம் தலைவர் நம்மைத் துறந்தார், அவர் அறவர்கள், எமைப் புலந்து ஆழல்; தண் கார், யாம் வருதும் எனத் தேற்றிய பருவம், மழை பாயின்று, அது காண்.

யானை முகம் தருபு ஊட்டும் வேங்கட நெடுவரை வேங்கை நறுவியாடிய மஞ்ஞை குருந்தின் சினையிருந்து துணைப் பயிற்றகவும் கார் என்க.

(வி - ரை.) நம் துறந்தோர் என்பது நத்துறந்தோர் என விகாரமாயிற்று. நாள் உலந்த - நாள் முடிந்த; சுன்றணிமை கழிந்த என்றபடி. பிடி கன்று இவற்றின் பசியென விரித்துக் கொள்க. வேங்கை பூக்கும் காலம மணிகாள் ஆகலின், நன்னுட் பூத்த என்றுள் எனலுமாம். கார் விரைவில் வந்துவிடும் என்பாள் துணைதரு தண் கார் எனவும், மழை பாயின்று எனவும் கூறினள். எனவே இது வேனிற் காலத்து இறுதியாயிற்று. மஞ்ஞை துணைப் பயிற்று அகவும் என்றது, கார் காலத்தில் பிரிந்திருத்தல் அருமையால் கூடுதற்கு அழைக்கும் என்றபடி.

86. மருதம்

[வாயில் மறுத்த தோழிக்குத் தலைமகன் சொல்லியது. தலைமகளைக்கூடி இன்புற்றிருந்த தலைமகன் பண்டு நிகழ்ந்தது சொற்று இன்புற்றிருந்ததூஉமாம்.]

உழுந்துதலைப் பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகால்
தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
உச்சிக் குடத்தர் புக்கல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தர
புதல்வர் பயந்த நிதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்
கல்லென் சும்மையர் ஞெரேரெனப் புகுதந்து
பேரிற் சிழத்தி யாகெனத் தமர்தர
ஓரிற் கூடிய உடன்புணர் கங்குல்
கொடும்புறம் வளைஇக் கோடிக் களிங்கத்

கண்ணு

தொடுங்கினள் கிடந்த ஓர்புறந் தழீஇ
முயங்கல் விருப்பொடு முகம்புதை நிறுப்ப
அஞ்சினள் உயிர்த்த காலை யாழநின்
நெஞ்சம் படர்ந்த நெஞ்சா துரையென
இன்னகை இருங்கைப் பின்யான் வினவலின்
செஞ்சூட் டொண்குழை வண்காது துயல்வர
அகுமலி உவகையள் ஆறி முகனிகுத்
தொய்யென இறைஞ்றி யோளே மாவின்
மடங்கொள் மறைஇய நோக்கின்
ஒடுங்கீர் ஓதி மாஅ யோளே.

—நல்லாவூர் கிழார்.

(சொ - ள்.) க—ச. உழுந்து தகிலப்பெய்த கொழுங் களி மிதலை - உழுத்தம் பருப்புடன் கூட்டிச் சமைத்த செவ்விய குழை தகியுடைய பொங்கலொடு, பெருஞ் சோற்று அமகில கிற்ப - பெரிய சோற்றுத் திரளினை உண்டல் இடையருது நிகழ, நிரை கால் தண் பெரும் பந்தர் - வரிசையாகிய கால்களையுடைய குளிர்ந்த பெரிய பந்தரில், தருமணல் ஞெமிரி - கொணர்ந்திட்ட மணலைப் பரப்பி, மணி விளக்கு உறுத்து - மணியின்கண் விளக்கினை ஏற்றி வைத்து, மாலை தொடரி - மாலைகளைத் தொங்கவிட்டு,

ஞ—க0 கோள் கால் நீங்கிய கொடுவெண் திங்கள் - தீய கோள்களின் தொடர்பு நீங்கப்பெற்ற வளர்ந்த வெள்ளிய திங்களை, கேடில் விழுப்புகழ் நாள் தலை வந்தென - குற்றமற்ற சிறந்த புகழினையுடைய உரோகணி எனும் நாள் அடைந்ததாக, கனை இருள் அகன்ற கவின் பெறு காலை - அந்நாளிலே மிக்க இருள் நீங்கிய அழகுபொருந்திய விடியற் காலையில், உச்சிக் குடத்தர் புது அகல் மண்டையர் - உச்சியில் குடத்தினையுடையரும் கையினிற் புதிய அகன்ற மண்டை எனும் கலத்தினையுடையரும் ஆகிய, பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர் - மணத்தினைச் செய்து வைக்கும் ஆரவாரமுடைய மூதிய மங்கல மகளிர், முன்னவும் பின்னவும் முறை முறை தரத் தர - முன்னே தருவனவும் பின்னே தருவனவும் முறைமுறையாகத் தந்திட,

க—சு. புதல்வன் பயந்த நிதலை அவ் வயிற்று - மகனைப் பெற்ற தேமலுடைய அழகிய வயிற்றினையுடைய, வரல் இழை மகளிர் நால்வர் கூடி - தூய அணிகலனையுடைய மகளிர் நால்வர் கூடி நின்று, கற்பினின் வழாஅ நற்பல உதவி - கற்பினின்றும் வழுவாது நன்றுய பல பேறுகளையும் தந்து, பெற்றோன் பெட்கும் பிணையை ஆகென - நின்னை எய்திய கணவனை விரும்பிப் பேணும் விருப்பத்தையுடையை ஆக என்று வாழ்த்தி, நீரொடு சொரிந்த ஈர் இதழ் அலரி - நீரொடு கூட்டிப் பெய்த குளிர்ந்த இதழ்களையுடைய பூக்கள், பல் இரங் கதுப்பின் நெல்லொடு தயங்க - மிக்க கரிய கூந்தலில் நெற்களுடன் விளங்க,

கள. வதுவை நன்மணம் கழிந்த பின்றை - இங்ஙனம் நன்றுகிய வதுவைக் கலியாணம் முடிந்தபினபு,

கஅ—உ0. தமர் கல் என் கம்மையர் ஞேரேரெனப் புகுதந்து - சுற்றத்தார் கல்லென்ற ஒலியினராய் விரைந்து வந்து, பேர் இற் கிழத்தி ஆக எனத் தர - பெரிய மனைக் கிழமதனை ஆவாய் என்று கூறிக் கூட்ட, ஓர் இல் கூடிய உடன்புணர் கங்குல் - ஓர் அறையில் உடன்கூடிய புணர்ச்சிக்குரிய இரவில்,

உக—சு கொடும்புறம் வளை இ - முதுகினை வளைத்து, கோடிக் கலிங்கத்து - கோடிப் புடவைக்குள், ஒடுங்கினள் கிடந்த புறம் தழீஇ - ஒடுங்கிக்கிடந்த இடத்தினைச் சார்ந்து, முயங்கல் விருப் பொடு முகம புதை நிறப்ப - அவையும் விருப்புடன் முகத்தினை மூடியிருந்த ஆடையினை நீக்க, அஞ்சினள் உயிர்த்த காலை - அஞ்சி உயிர்த்தபொழுது, நின் நெஞ்சம் படர்ந்தது எஞ்சாது உரையென - நின் உள்ளம் நினைந்ததனை மறையாது உரை என்று, பின் யான் வினவலின் - யான் பின்பு வினவுதலின், இன் நகை இருக்கை - இனிய மகிழ்ச்சியுடன் கூடிய இருக்கையின்கண்,

சுஎ—நக. மாவின் மடங் கொள் மதைஇய நோக்கின் - மானின் மடத்தினைக் கொண்டதும் செருக்கினை யுடையதுமான நோக்கினையும, ஒடுங்கு சுர் ஒதி - ஒடுங்கிய குளிர்ந்த கூந்தலினையும் உடைய, மாஅயோள் - மாமை நிறத்தினை யுடையாள்,

நச—நஎ செஞ் குட்டு ஒண் குழை வண்காது துயல்வர - சிவந்த மணிகள் பதித்த ஒள்ளிய குழை வளவிய காதில்கண் அசைய, அகம் மலி உவகையள் ஆகி - உள்ளம் நிறைந்த மகிழ்ச்சியினள் ஆகி, முகன் இகுத்து - முகத்தினைத் தாழ்த்து, ஒய்யென இறைஞ்சியோள் - விரைந்து தலைவணங்கினள்:

(முடிபு) வதுவை நன் மனம் கழிந்த பின்றை, தமர்தர ஒரிற்கூடிய கங்குல், கோடிக் கலிங்கத்து ஒடுங்கினள் கிடந்த புறம் தழீஇ. முகம் புதை நிறப்ப. அஞ்சினள் உயிர்த்தகாலை, நின் நெஞ்சம் படர்ந்தது எஞ்சாது உரையென யான் வினவலின், மாயோள் முகன் இகுத்து ஒய்யென இறைஞ்சியோள்.

தாள் தலைவந்தென, அமலை நிற்ப, பந்தர் விளக்குறுத்து, மாலை தொடரி, முது செம் பெண்டிர் தாத்தர, மகளிர் நால்வர் கற்பினின் வழாஅ நற்பல உதவிப் பெற்றோற் பெட்கும் பிணையை ஆகென, நீரொடு சொரிந்த அலரி கதுப்பின் நெல்லொடு தயங்க வதுவை நன் மனம் கழிந்த பின்றை என்க.

(வி - ரை.) மிதலை - பொங்கல்; கும்மாயமுமாம். உண்பார் இடையருமைபற்றி அமலை நிற்ப என்றான். ஞெமிரி - பரப்பி எனப் பிறவினைப் பொருட்டு. விளக்குறுத்து - தூய்மை செய்தும் எனறுமாம. கலையிரு ளகன்றகாலு மென்றலையால். மூற்பக்கம் (பூர்வபக்கம்) என்பது பெற்றும். கோள் என்றது ஈண்டுத் தீய கோளகளை. உரோகணி என்பதனை வருவித்து, விழுப்புகழ் நாளாவது உரோகணி திங்களை அடைந்த நாள் என்னலுமாம். உரோகணியும் திங்களுமை கூடிய நான் கலியாணத்திற்குச் சிறந்ததென்பது. திங்கட்

சகடம் வேண்டிய துசமூர் கூட்டத்து... வதுவை மண்ணிய மக
ளிர்[1] எனப் பிவ்வர் இந்நூலுள்ளும், [2]வானோர் மரியம் சகடமிய
வானத்துச், சாலியொருமீன் தகையாகிய கோவலன், மாமுது
பார்ப்பான் மறைவழி காட்டிடத் திவலம் செய்வது' எனச் சிலப்
பதிகாரத்துள்ளும் வருதலான் அறியப்படும். கலியாணம் எல்லா
ரும் புகுதற்கு உரியதாகலின் 'பொது' எனப்பட்டது. பிணை -
விருப்பம்; [3]'பிணையும் பேணும் பெட்பின் பொருள்' என்ப
வாகலின். சொல்லொடு தயங்க என்றமையால், நெல்லும் சொரிந்
தமைபெற்றும். வதுவை மணமாவது - குளிப்பாட்டல். கோடிக்
கலிங்கம் - புதுப் புடவை. ஓர்புறந் தழீஇ: ஓர். அசை. யாழ
அசைவி எக்காலத்தும் என்பால் இவ்வினதோர் அன்புடையள்; அவள்
கருத்தறியாது கூறுகின்றனை என்றுன என்க.

(மே - ள்.) [4]'கற்பெனப் படுவது' என்னுஞ் சூத்திரத்து, இச்
செய்யுளைக் காட்டி, 'இதனுள் வதுவைக்கு ஏற்ற காரணங்கள்
நிகழ்ந்தவாறும், தமர் கொடுத்தவாறுங் காண்க. சுற்றஞ் சூழ்ந்து
நிற்றலானும் தாடர் அறிய மணவறைச் சேரலானும் களவாற்சுருங்கி
நின்ற நாண் சிறந்தமையைப் பின்னர்த் தலைமகன் விலவ, அவள்
மறுமொழி கொடாது நின்றமையைத தலைவன் தோழிக்குக் கூறிய
வாறு காண்க. இதனுனே இது களவின் வழி நிகழ்ந்த கற்பாயிற்று,
என்றும், [5]'காரைத்தின் அமைந்து முடிந்த காலை' என்னுஞ் சூத்
திரத்து 'மூகனிகுத் தொய்யென விறைஞ்சியோளே' என்பது
காரணத்தின் அமைந்து முடிந்தது என்றும் கூறினர் நச்.

[6]'புகுமுகம் புரிதல்' என்னுஞ் சூத்திரத்து, 'அகமலி யுவகைய
ளாகி முகனிகுத், தொய்யென விறைஞ்சி யோளே' என்றது சிதைவு
பிறர்க்கின்மை என்னும் மெய்ப்பாட்டிற்கு உதாரணமாகக் காட்டி,
இது தலைமகன் அறிய மெய்ப்பட்டதென்பது என்றும், [7]'மறை
வெளிப் படுதல் தமரிற் பெறுதல் என்னுஞ் சூத்திரத்து 'தமர்தர,
ஓரிற்கூடி யுடன்புணர் கங்குல்' என்பது. தமரிற் பெறுதல் என்றும்
உரைத்தனர் பேரா.

87. பாலை

[8]விணைமுற்றி மீளுந் தலைமகன் இடைச் சுரத்துத் தன் நெஞ்
சிற்குச் சொல்லியது.]

நீந்தரிர் கடைந்த நிரள்கால் மத்தம்
கன்றுவாய் சுவைப்ப முன்றில் தூங்கும்
படலைப் பந்தர்ப் புல்வேய் குரம்பை
நல்கூர் சிறார் எல்லித் தங்கிக்

1 அகம். கஉக. 2. சிலப். மங்கல. டுo-டுக. 3. தொல். உரி. சo. 4. தொல். கற். க. 5. தொல். கற். டு. 6. தொல். மெய்ப். கக. 7. தொல். செய்யுள். கஅஎ. (பாடம்) 8. இடைச்சுரத்து மீளலுறும் நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.

கசஅ

குடுமி நெற்றி நெடுமரச் சேவல்
தகிலக்குரல் விடியல் போகி முனை அது
கடுங்கண் மறவர் கற்கெழு குறும்பின்
எழுந்த தண்ணுமை இடங்கட் பாணி
அருஞ்சுரம் செல்வோர் நெஞ்சம் துண்ணெனக்
குன்றுசேர் கவலை இசைக்கும் அந்தம்
நனி நீடு முழந்தின மன்னே, அதனால்
உவலினி வாழிய நெஞ்சே, மையற
வைகுசுடர் விளங்கும் வான்தோய் வியனகர்ச்
சுணங்கணி வனமுலை நலம்பா ராட்டித்
தாழிருங் கூந்தனங் காதலி
நீளமை வனப்பின் தோளுமா ரினைந்தே.

—மதுரைப் பேராலவாயார்.

(சொ - ள்.) கஉ, வாழிய நெஞ்சே—,

க—சு. தீம் தயிர் கடைந்த திரள் கால் மத்தம் - இனிய தயிரைக் கடைந்த திரண்ட தண்டினையுடைய மத்து, கன்று வாய் சுவைப்ப முன்றில் தாங்கும் - கன்று தன் வாயாற் சுவைத்திட முற்றத்தே தொங்கும், படகுப் பந்தர்ப் புல்வேய் குரம்பை - மர ணிழலாகிய பந்தரையும் புல்லால் வேயப்பெற்ற குடில்களையுமுடைய, நல்கூர் சேறார் - வறுமைப்பட்ட சிறிய ஊரின்கண், எல்லித் தங்கி - இரவிற் றங்கி,

டு—சு. குடுமி நெற்றி நெடுமரச் சேவல் - செஞ்சூடு பொருந் திய நெற்றியையுடைய நீண்ட மரத்திலுள்ள சேவலின், தகிலக்குரல் விடியற் போகி - முதற் குரல் எழுந்த விடியற் காலையிற் புறப்பட்டுச் சென்று,

சு—கக. முனை அது - பழமை யுடையதாகிய, கடுங் கண் மறவர் கல்கெழு குறும்பின் எழுந்த - வன்கண்மையுடைய மறவரது கற் கள் பொருந்திய காட்டரண்களில் எழுந்த, தண்ணுமை இடங்கண் பாணி - தண்ணுமைப் பறையின் அகன்ற கண்ணினின் றெழும் ஓலி, அருஞ் சுரம் செல்வோர் நெஞ்சம் துண்ணென இசைக்கும் - அரிய சுர நெறியே செல்வோர் நெஞ்சு நடுக்குற ஒலிக்கும், குன்று சேர் கவலை அத்தம் - குன்றினைச் சார்ந்த கவர்த்த நெறிகளையுடைய காட்டில், நனி நீடு உழந்தனம் - நீ மிகவும் நெடிது வருந்தினை ;

கக—சு. அதனால் - ஆதலால், மை அற வைகு சுடர் விளங்கும் வான்தோய் வியன் நகர் - இருள் நீங்க விடிவிளக்கு விளங்குகின்ற வான் அளாவிய நம் பெரிய மாளிகையின்கண், தாழ் இருங் கூந்தல் நம் காதலி சுணங்கு அணி வனமுலை நலம் பாராட்டி - தாழ்ந்த கரிய கூந்தலையுடைய நம காதலியின் சுணங்கு அணிந்த அழகிய முலையின் நல்லின்பத்தைப் பாராட்டி, நீள் அமை வனப்பின் தோளும்

88]

களிற்றியானை நிரை

அகணந்து - நீண்ட மூங்கில் போன்ற அழகினையுடைய தோளினையும்
அகணந்து, உவ இனி - இப்பொழுது மகிழ்வாயாக.

(முடிபு) தெஞ்சே வாழிய! நீ தோள் எய்தித் தங்கி விடியற் போல, அத்
தம் நீடு உழந்தனை மன்னே; அதனால் வியனகர், தம் காதலி முகம் நலம் பாராட்டி,
தோளும் அகணந்து இனி உவ.

(வி - ரை,) படலை - தழைப்பாப்பு. படலைப் பந்தர் - மர நிழ
லாகிய பந்தர். வினை முற்றி மீள்கின்றுரைகளின் இபொழுது உவ
என்றனை. மை - இருள். வைகு சுடர் - விடியுமளவும் எரியும்
விளக்கு; விடிவிளக்கு எனப்படும். தோளுமார்; ஆர், அசை.

88. குறிஞ்சி

[இரவுக்குறி வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி
சொல்லியது.]

முதைச்சுவல் கலித்த மூரிச் செந்தினை
ஓங்குவணர்ப் பெருங்குரல் உணீஇய பாங்கர்ப்
பகுவாய்ப் பல்லிப் பாடோர்ந்துக் குறுகும்
புருவைப் பன்றி வருநிறம் நோக்கிக்
கடுங்கைக் கானவன் கழுதுமிசைக் கொளீஇய
நெடுஞ்சுடர் விளக்கம் நோக்கி வந்துநம்
நடுங்குதுயர் கூர்ந்த நன்னராளன்
சென்றனன் கொல்லோ தானே குன்றத்
திரும்புலி தொலைத்த பெருங்கை யானைக்
கவள்மலி பிழிதரும் காமர் கடாஅம்
இருஞ்சிறைத் தொழுதி யார்ப்ப யாழ்செத்
திருங்கல் விடரளை அசுணம் ஓர்க்கும்
காம்பமல் இறும்பில் பாம்புபடத் துவன்றிக்
கொடுவிரல் உளியம் கெண்டும்
கடுவடுவாழ் புற்றின வழக்கரு நெறியே.

—[1]ஈழத்துப் பூதன் தேவனார்.

(சொ - ள்.) க—எ. முதைச் சுவல் கலித்த - பழங் கொல்லை
யாகிய மேட்டு நிலத்தில் தழைத்த, மூரிச் செந்தினை - கொழுத்த
செந்தினையின், ஓங்கு வணர்ப் பெருங் குரல் உணீஇய - உயர்ந்த
வளைந்த பெரிய கதிரை உண்ண, பகுவாய்ப் பல்லி பாங்கர் பாடு
ஓர்த்து - பிளந்த வாயினையுடைய பல்லி நற்பக்கத்தே செய்த ஒலி
யை நிமித்தம் உணர்ந்து, குறுகும் - அணுக வரும், புருவைப் பன்றி
வருநிறம் நோக்கி - இனமை பொருந்திய பன்றியின் வரும வகையினை
நோக்கி, கடுங்கைக் கானவன் - வலிய கையினையுடைய நினைப்
புனங் காப்போன், கழுதுமிசைக் கொளீஇய - பரண்மீது கொளுத்தி

(பாடம்) 1. ஈழத்துப் பூதன் தேவன்.

கனை. வைத்த, நெடுஞ்சுடர் விளக்கம் நோக்கி - நீண்ட சுடரின் ஒளியினை நோக்கி, வந்து நம் நடுங்கு துயர் கடிந்த நன்னராளன் - வந்து நமது கடுக்கத்தைத் தரும் துயரினை ஒழித்த நன்மையாளனாகிய நம் தலைவன், அ—கடு. குன்றத்து இரும்புலி தொலைத்த பெருங்கை யானை - குளிரின் கண் ஞெள்ள பெரிய புலியைக் கொன்ற பெரிய கையினை யுடைய யானையின், கவுள் மலிபு இழிதரும் காமர் கடாஅம் - கன்னத்திலிருந்து பெருகி இழியும் அழகிய மதநீரில், இருஞ்சிறைத் தொழுதி ஆர்ப்ப - கரிய சிறகினையுடைய வண்டின் கூட்டம் ஒலிக்க, யாழ் செத்து - அதனை யாழிசையெனக் கருதி, இருங்கல் விடர் அளை அசுணம் ஓர்க்கும் - பெரிய மலையின் பிளப்பாய குகையிலுள்ள அசுணங்கள், உற்றுக் கேட்கும், காம்பு அமல் இறுப்பில் - மூங்கில் நிறைந்த சிறு காட்டில், பாம்பு பட துவன்றி - பாம்பு இறந்துபட நெருங்கி, கொடுவிரல் உளியம் கெண்டும் - வளைந்த விரலினையுடைய கரடி தோண்டும், வடு வாழ் புற்றின - வடுக்கள் பொருந்திய புற்றமைந்த யுடையனவாகிய, வழக்கு அருநெறி - வழங்குதற்கு அரிய நெறியின்கண், சென்றனன் மன்னோ - சென்றான் கொல்லோ!

(முடிபு) பன்றி வருநிற மேகிக் கானவன் கருதுமிடைக் கொளீஇய விளக்கம் நோக்கி வந்து, நம் துயர்கடிந்த நன்னராளன், வழக்கரு நெறி சென்றனன் கொல்லோ.

(வி - ரை.) பாடு - ஓசை. புருவை - இளமை. கழுது - பரண். புலியைக் கொன்ற யானையுர், அசுணமும், பாம்பின் புற்றும், கரடியும் உடைய கொடு நெறியிற் சென்றானே என்று வருந்தினள் என்க. இத்தன்மையான வழியிலே வந்து போகின்றாரோவென இரங்கிக் கூறக் கேட்டு வரைவானாவது பயனாக இங்ஙனம் கூறினள். பன்றி பல்லி நிமித்தம் பார்த்துச் செல்லுதலுண்டென்னும் கருத்து, [1] "எய்ம்முள் ளன்ன பருஉமயி ரெருத்திற, செய்ம்மே வற்சிறுகட் பன்றி, ஓங்குமலி வியன்புனம் படீஇயர் வீங்கு பொறி, நாழை நுழையும் பொழுதிற் றுழாது, பாங்காப் பக்கத்துப் பல்லி பட்டென, மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்ந்து தன், கல்லகப் பள்ளி வதியும் நாட" என நற்றிணையிலும் வந்திருத்தல் அறிந்து மகிழற்குரியது.

(உ - றை.) நிமித்தம் நுகர்தற்குப் பன்றி நிமித்தம் பார்த்து வருகையைச் செய்தேயும், கானவன் அது வருநிறமறிந்து சுடாது கொளுத்திறற் போல, தாமும் பேணி வந்தாரே யாயினும் வரவு வெளிப்படும் என்றவாறு.

---

89. பாலை

[மகட் போக்கிய செவிலித்தாய் சொல்லியது]

நெறுநுதிர் ஞாயிறு நடுநின்று காய்தலின்
உறுபெயல் வறந்த ஒடுகிடர் நனந்தலை

---

1. நற். கஅ.

உருத்தெழு குரல [1]குடிஞைச் சேவல்
புல்சாய் விடரகம் புலம்ப, வரைய
கல்லெறி இசையின் இரட்டும், ஆங்கண்
சில்விடு கூறங்கும் சிறியிலை வேலத்
தூழுறு விளைநெற் றுதிரச், சாரியர்
கவ்வைவப் பரப்பின் வெவ்வைவர்ப் பொழியக்
களரி பரந்த கல்நெடு மருங்கின்
விளரூன் றின்ற விங்குசிலை மறவர்
மைபடு [2]நின்டோள் மரீஇ வாட்டிப்
பொறைமலி கழுதை நெடுநிரை தழீஇய
நிருந்துவாள் வயவர் அருந்தலை துமித்த
படுபுலாக் கமழும் ஞாட்பில், துடியிசைத்
தருங்கலந் தெறுத்த பெரும்புகல் வலத்தர்
வில்லெழு குறும்பிற் கோள்முறை பகுக்கும்
கொல்லை யிரும்புனம் நெடிய எல்லுறு
மெல்லெல் சேவடி மெலிய ஏக
வல்லுநள் கொல்லோ, தானே தேம்பெய்
தளவுறு தீம்பால் அலைப்பவும் உண்ணாள்
இடுமணற் [3]பந்தருள் இயலும்
நெடுமென் பணைத்தோள் மாஅ யோளே.

—மதுரைக் காஞ்சிப் புலவர்.

(சொ - ள்.) கக—உஉ. தேம் பெய்து அளவுறு தீம்பால் - தேனைச் சொரிந்து கலந்த இனிய பாலை, அலைப்பவும் உண்ணாள் - அதைத் தாட்டவும் உண்ணாளாய், இடு மணல் பந்தருள் இயலும் - மணல் பரப்பிய பந்தருள் அங்கும் இங்கும் ஓடும், நெடுமென பணைத் தோள் மாஅயோள் - நீண்ட மெலிய மூங்கில் போலும் தோளினையுடைய மாமை நிறத்திலளாகிய உன் மகள்,

க—உ. தெறு கதிர் ஞாயிறு - யாவற்றையும் அழிக்கும் கதிர்களையுடைய ஞாயிறு, நடு நின்று காய்தலின் - முதுவேனிற் காலத்து இடை நாட்களில் நின்று எரித்தலின், உறுபெயல் வறந்த - மிக்க மழையாலாய நீர் வறண்ட, ஓடு தேர் நனந்தலை - பேய்த்தேர் ஓடும் அகன்ற இடத்தினையும்,

ஊ—ரு. உருத்து எழு குரல் குடிஞைச் சேவல் - வெகுண்டு எழுகின்ற குரலினையுடைய பேராந்தைச் சேவல், புல் சாய் விடர் அகம் புலம்ப - புற்கள் ஒழிந்த வெடிப்பிடங்கள் தனித்திடச் சென்று, வரைய கல் எறி இசையின் இரட்டும் - மலையிலுள்ள கற்கள் உருண்டு விழும்போது எழும் ஓசைபோல மாறி ஒலிக்கும் (இடத்தினையும்),

சு—கூ. சிறி யிலை வேலத்து - சிறிய இலையினையுடைய வேல மரத்தின, நனம் உறு விளை நெற்று உதிர - முறையாக முற்றி விளைந்த

(பாடம்) 1. குடுமிச்சேவல். 2. நினிதோள். 3. பந்தியலும்.

கெற்று உதிர, கிள்வீடு கறங்கும் - கிள்வி டென்னும் வண்டு ஒலிக்கும், கல்வைப் பரப்பின் - சுரவாரம் பொருந்திய பரப்பினையுடையதும், காழியர் வெல்வுவர்ப்பு ஒழிய - வண்ணார்கள் எடுக்கும் வெவ்விய உவர்மண் ஒழிய, களரி பரந்த - களர் மண் பரந்ததுமாகிய, கல்லென் றெடு மருங்கின் - கற்களை இடையே கொண்ட நீண்ட இடத்தினையும் உடையதும்.

கo—கூ. விளர் ஊன் தின்ற வீங்கு சிலை மறவர் - கொழுப்பினையுடைய ஊனைத்தின்ற விசைகொண்ட சிலையினராய மறவர்கள், மைபடு திண் தோள் மலர - கருமை பொருந்திய வலிய தோள்கள் பூரிக்க, பொறை மலி கழுதை நெடுநிரை தழீஇய - பாரம்மிக்க கழுதைகளின் நீண்ட நிரைகளைப் பின்பற்றி வரும், நிருந்து வாள் வயவர் வாட்டி அருந்தலை துமித்த - செப்பமுடைய வாளினைக் கொண்ட வீரர்களையுடைய வணிகர்களை வாட்டி அவர்களது அரிய தலையைத் துணித்த, படு புலா கமழும் ஞாட்பில் - மிக்க புலவு நாறும் போர்க்களத்தே, துடி இகுத்து - துடியினைத் தாழக் கொட்டி, அருங்கலம் தெறுத்த பெரும் புகல் வலத்தர் - அரிய அணிகலன்களைத் திறையாகப் பெற்றுக் குவித்த பெரிய போர் விருப்பினையுடைய வென்றியினர், வில்கெழு குறும்பில், கோள் முறை பகுக்கும் - விற்கள் பொருந்திய அரணிடத்தே அவரவர் கொள்ள வேண்டிய முறையே பிரித்துக் கொடுப்பதுமாகிய,

கள—கூ. கொல்லை இரும்புனம் நெடிய என்னாது - கொல்லையினையுடைய பெரிய காடுகளை நீண்ட தூரத்தன என்றெண்ணாது, மெல்லென் சேவடி மெலிய ஏக வல்லுகள் கொல்லோ - மெத்தென்றிருக்கும் சிவந்த அடி வருந்தச் செல்லற்கு வன்மையுடையள் ஆவளோ.

(முடிபு) நீர்பால் அகலப்பவும் உண்ணுள் பந்தருள் இயலும் மாஅயோள், கொல்லை யிரும் புனம் நெடிய வென்னாது சேவடி மெலிய ஏக வல்லுநள் கொல்லோ.

ஒடுதேர் நளந்தகலியினையும் கல்லெறி யிசையின் இரட்டும் இடத்தினையும் கன்னெடு மருங்கினையு முடைய கொல்லை இரும்புனம் எனவும், கோள் முறை பகுக்கும் கொல்லை இரும்புனம் எனவும் கூட்டுக.

(வி - ரை.) நடுநின்று காய்தலின் : நடு - முதுவேனிற் காலத்தின் நடுக்கூறுகிய காட்கள். தேர்-பேய்த்தேர், உறுபெயல் 'பரந்த' என்பது பாடமாயின், பெயல் (வறந்து) ஒடு தேராய்ப் பரவிய என்க. சிறிய இலை - சிறியிலை என விகாரப்பட்டது. வேலத்து : அத்து, சாரியை. கறங்கும் கல்வை எனவும், வாட்டித் துணித்த எனவும் கூட்டுக. மலர ஆட்டி எனப் பிரித்து, ஆட்டி எனற்கு அலைத்து என்றுரைத்தலுமாம். வாள் வயவர் என்றதனால் வாளாற் சாத்தரும் வீரராயிருப்பர் என்பது பெற்றும். அவருடன் போர் புரிந்து கொன்றூர் என்பது தோன்றவே ஞாட்பில் என்றூர். தேன் கலந்த பால் சுவை வினையங்களாற் சிறக்கும் என்பது [1] "பாலொடு

1. குறள், ககூக.

தேன் கலந்தற்றே" என்பது முதலியவற்றுள் அறியப்படும். தேன் கலந்த பாலைத் தானும் அச்சுறுத்தி மட்டுமன்றி உணவை ஊட்டவும் செய்வது தாய் என அவளது செல்வச் சிறப்புக் கூறியவாறு. செல்வச் சிறுமியரும் உணவுண்ண மறுக்குங்கால், உண்பிக்கும் தாயர் அவர்க்கு இனிய கதைகள் கூறியும் அச்சுறுத்தியும் உண்பித்தல் இயல்பு என்க.

---

90. நெய்தல் வரலாற்றுக்குறிப்பு.

[பகற்குறி வந்து கண்ணுற்று நீங்கும் தலைமகனைத் தோழி எதிர்ப்பட்டு நின்று இற்செறிப் பறிவுறீஇயது.]

மூத்தோ ரன்ன வெண்டலைப் புணரி
இளையோ ராடும் வரிமண லழிக்கும்
தளையவிழ் நாழைக் கானலம் பெருந்துறைச்
சிலசெவித் தாகிய புணர்ச்சி, அலரெழ
இல்வயின் செறித்தமை அறியாய், பன்னாள்
வருமுலை வருத்தா அம்பகட்டு மார்பில்
தெருமரல் உள்ளமொடு வருந்தும் நின்வயின்
நீங்கு கென்றியான் யாங்ஙனம் மொழிகோ
அருந்திறற் கடவுள் செல்லூர்க் குணவது
பெருங்கடல் முழக்கிற் ருகி யானர்
இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
[1]கடுங்கண் கோசர் நியமம் ஆயினும்
உறுமெனக் கொள்ளுநர் அல்லர்
நறுநுதல் அரிவை பாசிழை விலையே.

—மதுரை மருதனிள நாகனார்.

(சொ - ள்) க—அ. தலைவ, மூத்தோர் அன்ன வெண்தலைப் புணரி-முதியோரை ஒத்த வெள்ளிய தலையையுடைய கடல், இளையோர் ஆடும் வரிமண லழிக்கும் - இளைய மகளிர் விளையாடும் வண்டல் மணையினை அழிக்கும், தளை அவிழ் நாழைக் கானல் அம் பெருந்துறை-கட்டவிழ்ந்த மடல்கள் பொருந்திய நாழைகளையுடைய சோலை பொருந்திய பெரிய கடற்றுறைக்கண்ணே, சில் செவித்தாகிய புணர்ச்சி - சிலர் செவிப்பட்ட மாத்திரையாகிய கூட்டம், அலர் எழ-அலராகி எங்கும் பரவ, இல்வயின் செறித்தமை அறியாய் - தாய் தலைவியை இல்லிடத்தே செறித்தமையை அறியாயாகி, பல்நாள் - பல நாளும், அம் பகட்டு மார்பின் - நினது அழகிய பெருமையையுடைய மார்பினால், வருமுலை வருத்தா - வளரும் முலையினை யுடையாளை வருத்தி, தெருமரல் உள்ளமொடு வருந்தும் - கலங்கும் உள்ளத்தோடு வருந்தா நிற்கும், நின்வயின் - நின்னிடத்தே, நீங்குக

(பாடம்) 1. கருங்கண்.

என்று யான் யாங்ஙனம் மொழிகோ - இக் களவொழுக்கத்தினின் றும் நீங்குவாயாக என்று யான் எங்ஙனம மொழிவேன்;

கூ—கச. நறு நுதல் அரிவை பாசிழை விலை:-(இவள் தந்தைமார்) நறிய நுதலினையுடைய அரிவையாய இவளது பசிய அணிகட்கு விலை யாக, அருந் திறல் கடவுள செல்லூர்க் குன்ற அது - அரிய வலி கொண்ட தெய்வங்களையுடைய செல்லூரின கீழ்பாலினதாய், பெருங் கடல் முழக்கிற்றாகி - பெரிய கடலோசை போலும் ஆரவாரத்தினை யுடையதாகிய, இரும்பு இடம்படுத்த வடு உடை முகத்தர் - படைக் கலம் இடம்படச செய்திட்ட வடுக்களையுடைய முகத்தினராய, கடுங் கட் கோசர்-அஞ்சாமையையுடைய கோசர்கள் (வாழும்), யாணர் நியமம் ஆயினும்-புது வருவாயையுடைய நியமம் என்னும் ஊரினைக் கொடுப்பினும, உறும் எனக் கொள்ளுநர் அல்லர் - அமையும் எனக் கொள்வார் அல்லர்,

(முடிபு) தலைவ! காளைம் பெருந்துறை சில் செவித்தாகிய புணர்ச்சி அளவு இற் செறித்தமை அறியாய், பன்னாள் இவளை வருத்தி வருந்தும் நின் வயின், (இக் களவொழுக்கம்) நீங்குக என்று யாங்ஙனம் மொழிகோ; அரிவை பாசிழை விலை கோசர் நியமமாயினும் உறுமெனக் கொள்ளுநர் அல்லர்.

(வி - ரை.) 'மூத்தோரன்ன .. சிதைக்கும்' என்றது புணரி உருவினுல் முதியோரை யொத்தும் சிறியரின் செய்கை யுடைய தாயிற்றென நயம்படக் கூறியவாறு. வருமுலை, இரும்பு என்பன ஆகுபெயர். மார்பு காரணமாக வருந்துதலின் மார்பின் வருத்தா என்றுள். எம் வருத்தமறிந்து நீயே வரைதற்கு முயலுதல் முறைமை யெனபாள், யான் யாங்ஙனம் மொழிகோ என்றுள். ஆகி என்ற தனை ஆகிய எனத் திரிக்க. யாணர் நியமம் எனக் கூட்டுக. தலை வன் தலைவியைப் பொன்னணிந்து வரைதல் வழக்காதலின் அரிவை பாசிழை விலை என்றுள். உறுமெனக் கொள்ளுநர் அல்லர் என் றமையால், பொருள் மிகக் கொடுக்கவேண்டுமெனத் தலைவியை அருமை பாராட்டியவாறு: அன்றி, விலை நியமம் கொடுப்பினும் கொள்ளாராதலால் அவர்கள் அன்பிற்கும் உரியையாகுக என்றுள் எனலுமாம்.

(உ - றை.) மூத்தோர் இளையோரை வருத்தாரன்றே, அது செய்யாது புணரி இளையோர் மடல் சிதைத்தாற்போல, பெரிய அறி வுடைய நீர் சிறியேமாகிய எங்களை வருத்தாதனீர் என்றவாறு:

(மே.-ள்.) [1] 'காற்றமுந் தோற்றமும்' என்னுஞ் சூத்திரத்து இச்செய்யுள், 'பொருள் மிகக் கொடுத்தல் வேண்டுமென்றது' என்றனர் நச்.

---

1. தொல். களவு. உக.

91. பாலை

[பிரிவிடை மெலிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

விளங்குபகல் உதவிய பல்கதிர் ஞாயிறு
வளங்கெழு மாமலை பயங்கெடத் தெறுதலின்
அருவி யாற்ற பெருவரை மருங்கில்
சூர்ச்சுனை துழைஇ நீர்ப்பயங் காணாது
பாசி நின்ற பைங்கண் யானை
ஓய்பசிப் பிடியொ டொருநிறன் ஒடுங்க
வேய்கண் ணுடைந்த வெயிலவிர் நனந்தலை
அரும்பொருள் வேட்கையின் அகன்றன ராயினும்
பெரும்பே ரன்பினர் தோழி இருங்கேழ்
இரலை சேக்கும் பரலுயர் பதுக்கைக்
கடுங்கண் மழவர் களவுழ வெழுத்த
நெடுங்கால் ஆரெரி ஒடுங்காட் டும்பர்
விசிபிணி முழவின் குட்டுவன் காப்பப்
பசியென வறியாப் பதணபயில் இருக்கைத்
தடமரும் பெருமை தாமரை முனையின்
முடமுதிர் பலவின் கொழுநிழல் வதியும்
குடநாடு பெறினும் தவிரலர்
மடமான் நோக்கினின் மாணலம் மறந்தே.

—மாமூலனார்.

(சொ - ள்.) க—கூ. தோழி-, விளங்கு பகல் உதவிய பல் கதிர் ஞாயிறு - உலகம் விளங்கற்குக் காரணமாகிய பகலினைத் தந்த பல கதிர்களையுடைய ஞாயிறு, வளம் கெழு மாமலை பயம் கெடத் தெறுதலின் - வளம் வாய்ந்த பெரிய மலையின் பயன் கெட்டொழிய்க் காய்தலின், அருவி ஆன்ற பெருவரை மருங்கின் - அருவி இவ்வியான பெரிய பக்க மலையினிடத்து, சூர்ச்சுனை துழைஇ நீர்ப்பயம் காணாது - தெய்வத்தினையுடைய சுனையைத் துழாவி நீராகிய பயனைக் காணாது, பாசி நின்ற பைங்கண் யானை - பாசியினைத் தின்ற பசிய கண்ணினையுடைய ஆண் யானை, ஓய் பசிப் பிடியொடு ஒரு நிறன் ஒடுங்க - அயாவினைத் தரும் பசியினையுடைய பெண் யானையுடன் ஒரு பக்கத்தில் ஒடுங்கிக் கிடக்க, வேய் கண் உடைந்த வெயில அவிர் நனந்தலை - மூங்கில்கள் கணுக்கள் பிளக்க வெயில் விளங்கும் அகன்ற பாலை நிலத்தே, அரும பொருள் வேட்கையின் அகன்றனர் ஆயினும் - அரிய பொருள் விருப்பால் நம் தலைவர் நமைப் பிரிந்து சென்றாராயினும், பெரும் பே ரன்பினர் - மிகப் பெரிய அன்பினராகலின்,

க—கஅ. இரு கேழ் இரலை சேக்கும் பரல் உயர் பதுக்கை - கரிய நிறமுடைய ஆண்மான்கள் தங்கும் பரலையுடைய உயர்ந்த கற்குவியலில், கடுங்கண் மழவர் களவு உழவு எழுத்த - வன்கண்மையினையுடைய மழவர்கள் களவாகிய உழவிற்கு எழும் இடமாகிய, நெடுங்

ககூச.

கால் ஆகிளி ஓடுங்காட்டு உம்பர்-நீண்ட அடியையுடைய சுரப்பலா மரங்களையுடைய ஓடுங்காடு எனும் ஊர்க்கு அப்பால், விசிபிணி முழவின் குட்டுவன் காப்ப - இறுகப் பிணித்த முழவினையுடைய குட்டுவன் என்பான் புரத்தலால், பசி எனவு அறியா பகை பயில் இருகை - பசி எனவும் அறியாத மருதவளம் மிக்க ஊர்களையுடைய, தட மருப்பு எருமை தாமரை முகையின்-வளைந்த கொம்பினையுடைய எருமை (மேய்ந்த) தாமரையை வெறுக்குமாயின், முடம் முதிர் பல வின கொழுநிழல் வதியும் - வளைவு மிக்க பலாவினது கொழுவிய நிழற்கணேயே தங்கும், குடநாடு பெறினும் - குடநாட்டினையே பெறுவராயினும், மடமான் நோக்கி - இளமை வாய்ந்த மான் போலும் பார்வையினையுடையாய், நின் மான் நலம் மறந்து தவிரலர் - நினது மாணபுற்ற நலத்தினையே மறந்து ஆங்குத் தங்குவா ரல்லர்.

(முடிபு) தோழி! மாநெடுங்கண் நம் தலைவர் வெயிலவிர் நனந்தலை அரும் பொருள் வேட்கையின் அகன்றனராயினும் பெரும் பேரன்பினராகலின் குடநாடு பெறினும் நின் மாணலம் மறந்து ஆங்குத் தவிரலர்.

(வி - ரை.) மாநிக்கண் உண்ட நீரை கோடையில் உமிழும் இயல்பினதாகிய மகியின் பயன் கெடத் தெறும் என வேனிலின் வெம்மை மிகுதி கூறியவாறுயிற்று. ஆன்ற - இல்லியான; அகன்ற என்பதன் மரூஉ. சுனைக்கண் சூர் உறையும் என்பதனை, [1] சுனை யுறையும், சூரமகள் மாதோ என்னுமென் னெஞ்சே' என்பதனு லும் அறிக. சூர், அச்சமுமாம். யானை பாசியைத் தின்றமை நீர்ப் பசை கருதி யென்க. ஓடு - ஒருவகைமரம் என்பதும், அதன்மூன் வல்லெழுத்துவரின். மெலிமிகும் என்பதும், [2] உதிமரக் கிளவி மெல் லெழுத்து மிகுமே' 'ஓடுமரக் கிளவி யுதிமர வியற்றே' என்பவற்றுல் அறியப்படும். சுணை ஓடு மரங்கள் சூழ்ந்தமையின் ஓடுங்காடு எனப்பட்ட தென்க. இருக்கையையுடைய குடநாடு என்க. எருமை தாமரை முகையின் பலவின் நிழலில் வதியும என்றது மருதத்திற்கும் குறிஞ்சிக்கும் அணிமை கூறியபடியாம். எருமை, தாமரை யென் னும மருதக் கருப்பொருள்கள் பாலைக்கண் வந்தன; என்னை? [3] எங் நில மருங்கிற் பூவும் புள்ளும், அந்நிலம் பொழுதொடு வாரா வாயி னும், வந்த நிலத்தின் பயத்த வாகும்' என்பவாகலின் என்க.

---

92. குறிஞ்சி

[இரவுக்குறிச் சென்று தலைமகளைக் கண்ணுற்று நீங்குந் தலை மகனைப் பகற்குறி கோர்ந்த வாய்பாட்டால் தோழி வரைவுகடாயது.]

நெடுமலை யடுக்கம் கண்கெட மிளிர்ப்
படுமழை பொழிந்த பானுட் கங்குல்
குஞ்சரம் நடுங்கத் தாக்கிக் கொடுவரிச்

---

1. அகம். கூஅ. 2. தொல். எழுத். உயிர்மயங். சூக. கூ0. 3. தொல்.: அகத். கூ.

கானிற்றியாமை நிரை
செங்கண் இரும்புலி குழுமுந் சாரல்
கு வாரல் வாழியர் ஐய நெறிமை
நெடுமென் பணைத்தோள் இவளும் யானும்
காவல் கண்ணினம் நிகழ்வ நாளை
மந்தியும் அறியா மரம்பயில் இறும்பின்
ஒண்செங் காந்தள் அவிழ்ந்த ஆங்கண்
கரு நுண்பல் அருவித் தாழ்நீர் ஒருசிறை
உருமுச்சினவிந் தெறிந்த உரனழி பாம்பின்
திருமணி விளக்கின் பெறுகுவை
இருண்மென் கூந்தல் ஏமுறு துயிலே.

—மதுரைப் பாலாசிரியர் கற்றுமனார்.

(சொ - ள்.) கு—ரு. ஐய-, வாழியர்-, நெடுமலை அடுக்கம் கண் கெட மின்னி - உயர்ந்த மலையின் பக்கங்களில் கண் ஒளி கெட மின்னி, படு மழை பொழிந்த பால்நாள் கங்குல் - மிக்க மழை சொரிந்த பாதி யிரவாகிய இருளில், குஞ்சரம் நடுங்கத் தாக்கி - யானையை நடுங்கும்படி தாக்கி, கொடுவரி செங்கண் இரும்புலி குழும் சாரல் - வகிர்ந்த கோடுகளையும் சிவந்த கண்ணினையுமுடைய பெரிய புலி முழங்கும் மலைச் சாரலிலே, வாரல் - நீ வாராதிருப்பாயாக;

கு—எ. நேர் இறை நெடு மென் பணைத்தோள் இவளும் யானும் - மெல்லிய முன் கையினையும் நீண்ட மெல்லிய மூங்கில் ஒத்த தோளினையுமுடைய இத் தலைவியும் யானும், காவல் கண்ணினம் நிகழ - நினைப்புனங் காத்தலைக் கருதியுள்ளோம்;

எ—கூ. நாளை - நாளைப் பகற்கண், மந்தியும் அறியா மரம் பயில் இறும்பின் - மந்திகளும் ஏறி அறிய மாட்டாத மரங்கள் செறிந்த காட்டில், ஒண் செங்காந்தள் அவிழ்ந்த ஆங்கண் - ஒள்ளிய செங்காந்தள் மலர்ந்த அவ்விடத்தே, கண் பல் அருவி தாழ் நீர் ஒரு சிறை - பலவாய கண்ணிய அருவிகள் வீழும் சுனையின் ஒருபுறம், உருமு சினந்து தாக்கலின் வலி யழிந்த பாம்பினது அழகிய தலைமணி யாகிய விளக்கிலே, இருள் மெல் கூந்தல் ஏம உறு துயில் - தலைவி இனிய இருண்ட மெல்லிய கூந்தலகத்து இன்பம் உறும் துயிலை, பெறுவை - நீ அடைவாய்.

(முடிபு) ஐய! வாழியர்! மழை பொழிந்த பாதிப் பொழுதில் குஞ்சரம் தாக்கி புலி குழுமும் சாரல் வாரல்: இவளும் யானும் நாளை காவல் கண்ணினம்; மந்தி இறும்பில் காந்தள் அவிழ்ந்த ஆங்கண் தாழ் நீர் ஒரு சிறை பாம்பின் திரு மணி விளக்கில் கூந்தல் ஏம உறு துயில் பெறுகுவை.

(வி - ரை.) நாளை காவல் கண்ணினம் எனலுமாம். கோடு பற்றி ஏறும் குரங்கு எனப்படுவதும், மரமேறுந் தொழிலிற சிறந்ததுமாகிய மந்தியும் ஏறி அறியாத என மரத்தின் உயர்ச்சி கூறியவாறு.

உம்மை சிறப்புமை. [1]குரங்கறி வாரா மரம்பயி லிறும்பில்' எனப் பின்வர் இந்நூலிலும், [2]'மந்தியு மறியா மரமபயி லொருசிறை', [3]'மந்தி யுமறியா மரவபயி லடுகத்து' எனப் பிற நூல்களிலும் வருதலுங் காண்க. இனி, மந்தி என்பதற்கு நாயிறு எனப பொருள் கொண்டு, பருதியின கதிர் நுழையலாகாதவாறு மரங்கள் செறிந்த காடு எனலுமாம். பகற் குறி நேர்ந்தாள்போற் கூறிலும், காந் தள் அவிழ்ந்த ஆங்கண், அருவித் தாம்பீர் ஒருசிறை என்றமையின், பக்கொய்ய வருவாராலும், அருவியாட வருவாராலும் பகற் குறியும் அரிதென்பது புலப்படுதலி வரைவு கடாயிற்று ளாயிற்று.

---

393 பாலை

மூவேந்தர் பற்றிய பரணர்க்குறிப்பு.

[விசும்புற்றி மீளுறுந் தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ் சிற்குச் சொல்லியது.]

கேள்கே டுன்னவும் கிளைஞர் ஆரவும்
கேளல் கேளிர் கொழி இயினர் ஒழுகவும்
ஆள்வினைக் கெறிய ஊக்கமொடு புகல்சிறந்
தாரங் கண்ணி அடுபோர்ச் சோழர்
அறங்கெழு நல்லவை உறந்தை அன்ன
பெறலரு நல்கலன் எய்தி நாடும்
செயலருஞ் செய்வினை முற்றின மாயின்
அரண்பல கடந்த முரண்கொள் தானை
வாடா வேம்பின் வழுதி கூடல்
நாளங் காடி நாறும் நறுநுதல்,
நீளிருங் கூந்தல் மாஅ யோளொடு
வரைகுயின் றன்ன வான்தோய் நெடுநகர்
நுரைமுகந் தன்ன மெல்பூந் சேக்கை
நிவந்த பள்ளி நெடுஞ்சுடர் விளக்கத்து
நலங்கேழ் ஆகம் பூண்வடுப் பொறிப்ப
முயங்குகஞ் சென்மோ நெஞ்சே வரிநுதல்
வயந்திகழ் பிழிற்தரும் வாய்புகு கடாத்து
மீளி மொய்ம்பொடு நிலனெறியாக் குறுகி
ஆள்கோட் பிழையா அஞ்சுவரு தடக்கைக்
கடும்பகட் டியானை நெடுந்தேர்க் கோதை
திருமா வியனகர்க் கருவூர் முன்றுறைத்
தெண்ணீர் உயர்கரைக் கலவிய
தண்ணறுன் பொருநை மணலினும் பலவே.

—கணக்காயனூர் மகனூர் நக்கீரனூர்.

(சொ - ள்,) கசு. சென்சே -,

---

1. அகம். கசச. 2. கற். கசச. 3. முருகு. அடி. சக.

க—கூ. கேள் கேடு ஊன்றவும் - உறவினரைக் கேட்டினை நீக்கித் தாங்கவும், ஐம்பொருள் ஆரவும் - ஐம்பொருள்களாயுள்ளார் உண்ணவும், கேள்யினராகி ஒழுகவும் நினைத்து, உள்விரோதக்கு எதிரிய ஊக்கமொடு - பொருளீட்டும் முயற்சிக்கு ஏற்றதாய ஊக்கங்கொண்டு, புகல் சிறந்து - விருப்பம் மிக்கு.

சா—எ. ஆரம் கண்ணி அடுபோர்ச் சோழர் - ஆத்திமாலை யணிந்த அடும் போரினையுடைய சோழரது, அறம்கழு நலனை உறுதை யொத்த, பெறல் அரும் நன்கலன் எய்தி - பெறுதற்கு அரிய கலன் அணிகலன்களை எய்தி, நாடும் செயல் அரும் செய்யினை முற்றினம் நாம முடித்தனம் ஆதலின்,

அ—கக. அரண் பல கடந்த முரண் கொள் தானை - பகைவர் அரண்கள் பலவற்றை வென்ற மாறுபாடு கொண்ட தானையினை தரித்த பாண்டியனது, கூடல் நான் அங்காடி நாறும் - மதுரையின் காலைக் கடை விரியை மணக்கும், நறுநுதல் நீள் இருங் கூந்தல் மாஅயோளொடு - நறிய நெற்றியினையும் நீண்ட கரிய கூந்தலினையு முடைய மாமை நிறத்தாளாய நம் தலைவியுடன்,

கஉ—ரு. வரை குயின்றன்ன வான்தோய் நெடுநகர் - மலையைக் குடைந்து இயற்றியதை யொத்த வானை அளாவிய நீண்ட மனையின் கணணே, நுரை முகந்தன்ன மென்பூஞ் சேக்கை - நுரையை முகந்து வைத்தாற் போன்ற மெல்லிய பூக்களாலாய படுக்கையையுடைய, நிவந்தபள்ளி நெடுஞ்சுடர் விளக்கத்து - ஓங்கிய கட்டிலினிடத்து நெடிய விளக்கின் ஒளியிலே, நலம் சேர் ஆகம் பூண வடு பொறிப்பன்மை பொருந்திய நம் மார்பிலே தலைவியின் மார்பகத்துப் பூண்கள் வடுக்களைச் செய்ய,

கசு—உஙு. வரிநுதல் - வரி பொருந்திய நெற்றியினையும், வயம் திகழ்பு இமிழ்தரும் - வலி விளங்குதலின் முழங்கும், வாய் புகு கடாத்து - வாயிற் புகும் மதத்தினையும், மீளி மொய்ம்பொடு - கூற்றுவனை யொத்த வலியுடன், நிலன் எறியா - நிலத்தின்கண்ணே குட்டி எறிந்து, குறுகி ஆள் சேர்ந்து பிழையா அஞ்சுவரு தடக்கை - நெருங்கி வந்து ஆட்களைக் கொல்லுதலைத் தப்பாத அச்சம் வரு கின்ற பெரிய கையினையும் உடைய, கடுமை பகட்டு யானை - கடிய பெரிய யானைப் படையினையும், நெடுந் தேர்க் சேனை - நெடிய தேர்ப் படையினையுமுடைய சேரனது, திருமா வியன் நகர்க் கருவூர் முன்றுறை - செல்வம் மிக்க சிறந்த அகன்ற நகராகிய கருவூரின் துறைமுன், தெள் நீர் - தெளிந்த நீரினையுடைய, தண் ஆன் பொருநை - தண்ணிய ஆன் பொருநை என்னும் ஆற்றின், உயர்கரை நெடிய - உயர்ந்த கரைக்கண் குவிந்துள, மணலினும் பல - மணலினும் பலவாக,

கசுஅ

கசு. முயங்குகம் சென்மோ - நாம் முயங்குவோம் வருவாயாக.

- (முடிபு) தெஞ்சே! ஊன்றவும், ஆரவும், ஒழுகவும் வேண்டி, ஊக்கமொடு புகல் சிறந்து, உறந்தையன்ன தன்கலன் எய்தச் செய்வினை முற்றினம் ஆக லால், மாயோளொடு மென்பூஞ் சேக்கை நிவந்த பள்ளியில், சுடர் விளக் கத்த, ஆன் பொருநை மணலினும் பல ஆகம் வடுப் பொறிப்ப முயங்குகம் சென்மோ.

- (வி - ரை.) கேள் - கேளிர் என்னும்பொருட்டு. ஊன்றல் - தாங்கல். வறுமையுற்ற கிழோனுர் ஆரவும் என்க. கேள் அல் கேளிர் - எதிலார். அவர் அன்புடையராய் ஒழுகவும் என்றபடி. 1ஆரும் வெதிரும் சாரும்பீரும், மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றுமை' என்னும் சூத்திரத்து, மெய்பெற என்ற இலேசால் 'ஆரங் கண்ணி' என அம்மூப் பெற்றது. உறையூர் அவையில் அறம் கிழமை பெற்ற தென்பதனை, 2'மறங்கெழு சோழர் உறந்தை யவையத் தறங்கெட வறியா தாங்கு' 3'மறங்கெழு சோழர் உறந்தை அவை யத், தறம் நின்று நிலையிற் ருகலின்' என வருவனவற்ருலும் அறிக. முற்றி யெய்தினம் என்று மாறுதலுமாம். 'எய்தி' எனப் பாடங் கொண்டு, எய்துதற்கென்று உரைப்பாரு முளர். ஆயின் - ஆதலால். மீளி - கூற்றுவன் ஆதலி 4'மீளி யுடம்பிடித தடக்கை' என்பதற்கு நச்சினர்க்கினியர் உரைத்த உரையான் உணர்க. மீளி - மறமுமாம். மதங் கொண்ட யானை கையை நிலத்தின்கண் எறிந்து வரும் என்பது. 5இரும்பிணர்த் தடக்கை யிருநிலம் சேர்த்திச், சினந்திகழ் கடாஅஞ் சுருக்கி மருங்கொல்பு, மையல் வேழம் மடங்கலின் எதிர்தர' என்பதனுல் அறியப்படும். கருவூர் மேல் கடற் பக்கத் தது என்பாரும், சோழ நாட்டின் எல்லையை அடுத்துள்ள கொங்கு நாட்டுக் கருவூரே' என்பாரும் என இருதிறப்படுவர் வரலாற்று ஆராய்ச்சியாளர். இச செய்யுளுள் சோழர், பாண்டியர், சேரர் என்னும் மூவேந்தரும், அவர் தலைநகராகிய உறந்தை, கூடல், கருவூர் என்பனவும் வந்துள்ளமை அறியற்பாற்று.

(மே - ள்.) 6'மேவிய சிறப்பின்' என்னுஞ் சூத்திரத்து, 'கேள் கே டென்றவும் . . . புகல் சிறந்து' என்பது, 'வணிகர் பொருள் வயிற் பிரிந்தவாறு' என்றுப், 7'புறத்திணை மருங்கின்' என்னுஞ் சூத்தி ரத்து, இப் பாட்டு, 'புறத்திணைத் தலைவர் பலராய் அகத்திணைகள் அளவி வந்தது' என்றும, 8'காரணத்தினமைந்து' என்னுஞ் சூத்தி ரத்து 'கேள் கே டென்றவும் கிழோராரவும்' என்பது, 'அவ்வழிப் பெருகிய சிறப்பு' என்றும கூறுவர் நச்.

9'பிறப்பே குடிமை' என்னுஞ் சூத்திரத்து, கேள் கே டென்ற வும் . . . புகல் சிறந்து' என்புழி இன்ன காரணத்தின் பிரிந்த போந்து வினைமுடித் தனமாயினும, அவனை 'முயங்குகம சென்மோ'

---

1. தொல். எழுத். புள்ளி. கூ. 2. நற். ஈ00. 3. புறம். உக. 4. பெரும பாண. எரு. 5. குறிஞ்சி. கூஉ—ரு அடிகள். 6. தொல். அகத். உ. 7. தொல். அகத். ருடு. 8. தொல். கறபு, டு. 9. தொல. மெய்ப். உடு.

களிற்றியானை நிரை

என்றமையின் தன் ஆள்வினைக்குத் தக்க பெண்மையான் அவள் ஆற்றியிருந்தாள் என்பதூஉம் கருதிய கருத்தினாற் காமக் குறிப்புப் பிறந்தமையின். அஃது ஆண்மையாயிற்று எனவும், 1. முறை வெளிப் படுதலும்' என்னுஞ் சூத்திரத்து, நலங்கே முகம் . . . சென்மோ கொஞ்சே' என்பது மிகுதல் எனவும் கூறுவர் போ.

---

94. முல்லை

[விளைமுற்றி மீளுந் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது. தலைமகன் பாங்கற்குச் சொற்றதூஉ மாம்.]

தேம்படு சிமயப் பாங்கர்ப் பம்பிய
குவையிலை முசுண்டை வெண்டூக் குழைய
[2]வானெனப் பூத்த பானட் கங்குல்,
மறித்துரூஉத் தொகுத்த பறிப்புற இடையன்
தண்கமழ் முல்லை தோன்றியொடு விரைஇ
வண்டுபடத் தொடுத்த நீர்வார் கண்ணியன்
ஐதுபடு கொள்ளி அங்கை காயக்
குறுநரி யுளம்புங் கூரிருள் நெடுவிளி
சிறுகட் பன்றிப் பெருநிரை கடிய
முதைப்புனங் காவலர் நினைந்திருந் தாதும்
கருங்கோட் டோசையொ டொருங்குதவந் நிசைக்கும்
வன்புலக் காட்டுநாட் டதுவே, அன்புகலந்
தார்வஞ் சிறந்த சாயல்...
இரும்பல் கூந்தல் திருந்திழை யூரே.

—நன்பலூர்ச் சிறுமேதாவியார்.

(வி - ரை.) கஉ—ச. அன்பு கலந்து ஆர்வம் சிறந்த - அன்பால் உள்ளம் கலந்து விருப்பம் மிக்க, சாயல் - மென்மைத் தனமையையும், இரும் பல் கூந்தல் - கரிய பலவாகிய கூந்தலினையும் உடைய, திருந்து இழை - திருந்திய இழையினையுடைய தலைவியினது, ஊர் - ஊரானது.

க—அ. தேம்படு சிமயப் பாங்கர்ப் பம்பிய குவையிலை முசுண்டை வெண்பூ - தேன் அடை பொருந்திய உச்சி மலையின் பக்கலிற் செறிந்த குவிந்த இலைகளையுடைய முசுண்டையின் வெள்ளிய பூக்கள், வான் எனக் குழையப் பூத்த பால் நாள் கங்குல் - வானமானது மீனைப் பூத்ததுபோலக் குழைந்திடப் பூத்த நடுஇரவின் இருளிலே, மறித்துரூஉ தொகுத்த பறிப்புற இடையன் - கூட்டுக் குட்டிகளைச் சேரத் தொகுத்து வைத்துள ஓலைப்பாயை முதுகிற் கொண்ட இடையன், தண்கமழ் முல்லை தோன்றியொடு விரைஇ - தணிவிய காமரும் முல்லைப் பூவினைத் தோன்றிப் பூவுடன் இணைத்து, வண்டுபடத்

---

1. தொல். செய். எஅ. (பாடம்) 2. வான்பூத்தன்ன.

தொடுத்த நீர்வார் கண்ணியன் - வண்டுகள் மொய்க்கத் தொடுத்த நீர் ஒழுகுகின்ற கண்ணியனும், ஐது படு கொளளி அங்கை காய. மென்மை வாய்ந்த கொளளியின் தீயில் அகங்கை காய்ந்திட, கூர் இருள் குறு நரி உளம்பும் நெடு வெளி - மிக்க இருளில் குறுநரிகளை அகற்றோட்டும் நீண்ட ஒலி,

கூ—கூ. சிறு கண் பன்றிப் பெருநிரை கடிய-சிறிய கண்ணினை யுடைய பன்றியின் பெருங் கூட்டத்தை ஓட்டற்கு, முதைபுனங் காவலர் - முற்றிய திணைப்புலம் காத்திருப்போர், நள்ளென்றிருந்து ஊதும் கருங் கோட்டு ஓசையொடு - அவை வருங் காலத்தை எண்ணி யிருந்து ஊதும் பெரிய கொம்பின் ஓசையோடு, ஒருங்குவந் திசைக் கும் - ஒரு சேர வந்தொலிக்கும், வன்புலக் காட்டு நாட்டதுவே - வன்புலமாகிய காட்டில் அகத்ததாகிய நாட்டினிடத்ததாகும்; (பாக! விரைந்து தேரினைச் செலுத்துவாயாக.)

(முடிபு) (பாக!) திருந்திழை பூர், கங்குலில் இடையன் குறு நரி உளம் பும் நெடுவெளி புனங் காவலர் ஊதும் கோட்டோசையொடு ஒருங்குவந் திசைக் கும் காட்டு நாட்டதுவே, (ஆகலின் தேரை விரைந்து செலுத்துவாயாக.)

(வி - ரை.) தேம் - தேன்; தேனிருல். குழைதல் - தழைத்தல். வான் எனப் பூத்த - வான் மீனைப் பூத்தாற்போலத் தோன்றுமாறு பூத்த எனற விரித்துரைக்க. தருஉ - செயமறியாடு. பறி - குட்டி. பறி - மழையைத் தடுப்பதற்கு ஓலைப் பாயால் வகுத்து இயற்றிய குடில். தொகுத்த இடையன் என இயையும். கொள்ளியல் கையை காய்த்திக்கொண்டு நரியை ஓட்டுவன் என்க. குறு நரி - ஆட்டு மறியை வௌவுதற்கு வருவது. குறு நரி, நெடு வெளி, சிறு கண், பெருநிரை, என்பன முரண் என்னும் அணி. வன்பலம் - குறிஞ்சியும முல்லையும். அன்பு - ஒருவரை யொருவர் இன்றியமை யாமை. ஆர்வம் - விருப்பம்.

தலைமகன் பாங்கற்குச் சொற்றது என்பது துறையாயின் களவுக் காலத்துப் பாங்கற் கூட்டத்துத் தலைவன் பாங்கற்குத் தலைவி யின் இடங் கூறுதலாம். இது முல்லையிற் களவு நிகழ்ந்ததாதலின், திணை மயக்கமாம். [1] திணைமயக் குறுதலும் கடிநிலை யிலவே' என்ப வாகலின்.

(மே - ள்.) [2] 'புணர்தல் பிரிதல்' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுள், 'இருத்தல் நிமித்தமாம்; இக்காலம் வருந்துணையும் ஆற்றி னள் எனத் தான் வருந்துதலின்' என்றார் நச்.

---

1. தொல். அகத். கூ.

2. தொல். அகத். கசு.

95. பாலை.

[போக்குடன் பட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

பையயப் [1]பசந்தன்று நுதலுஞ் சாஅய்
ஐதா கின்றென் தளிர்புரை மேனியும்
பலரும் அறியத் திகழ்தரும் அவலமும்
உயிர்கொடு கழியின் அல்லதை நினையின்
எவனே வாழி தோழி பொரிகால்
பொகுட்டரை யிருப்பைக் குவிகுலைக் கழன்ற
ஆலி யொப்பின் தூம்புடைத் திரள்வி
ஆறுசெல் வம்பலர் நீரிடை யழுங்க
ஈனல் எண்கின் இருங்கிளை கவரும்
[2]சுரம்பல கடந்தோர்க் கிரங்குப என்னார்
கௌவை மேவல ராகி இவ்வூர்
நிரையப் பெண்டிர் இன்ன கூறுவ
புரைய அல்லன் மகட்கெனப் பரைஇ
நம்முணர்ந் தாறிய கொள்கை
அன்னை முன்னர்யாம் என்னிதற் படலே.

—ஒரோடோரகத்துக் கந்தரத்தனார்.

(சொ - ள்.) க—ரு. தோழி வாழி -, பை பயப் பசந்தன்று நுதலும் - என் நெற்றியும் மெல்ல மெல்லப பசந்தது, சாஅய் ஐதாகின்று என் தளிர் புரை மேனியும் - தளிரை யொத்த என் மேனியும் நுணுகி மெல்லிதாகின்றது, பலரும அறியத் திகழ்தரும் அவலமும் - என் துயரமும் பலரும அறியுமபடி விளங்கித் தோன்றும், உயிர்கொடு கழியின அல்லதை - இவை என் உயிரைக் கொண்டு போவதல்லது, நினையின் எவனே - ஆயுமிடத்து வேறு என் செய்வன;

ரு—கஎ. பொரி கால் பொகுட்டு அரை இருப்பை - பொரிந்த அடியினையும் கொட்டைகளையுடைய அரையினையுமுடைய இருப்பையினது, குவி குலைக் கழன்ற - குவிந்த குலையினின்றும் கழன்ற, ஆலி ஒப்பின் தூம்பு உடைத் திரள் வி - பனிக்கட்டி போலும் உட்டுளையினையுடைய திரண்ட பூக்களை, ஆறு செல் வம்பலர் நீள் இடை அழுங்க - வழிச் செல்லும் புறியர் அங்ஙண்ட நெறியிடத்தே அஞ்சிப் போக்கினைத் தவிர, ஈனல் எண்கின் இருங்கிளை கவரும் - ஈன்ற கரடிகளின் பெருங்கூட்டம் கவர்ந்துண்ணுகின்ற, சுரம் பல கடந்தோர்க்கு இரங்குப என்னார் - பல சுரங்களையும் கடந்து சென்ற தம தலைவர் பொருட்டுத் தலைவியர் இரங்குவராதல் இயல்பென்று நினையாராய்,

கக—உ. கௌவை மேவலர் ஆகி - அலர் தூற்றலே விரும்புவாராகி, இவ்வூர் நிரையப் பெண்டிர் இன்ன கூறுவ - இவ்வூரி

(பாடம்) 1. பசந்த, பசந்தது. 2. சரம்பல தமிழ்தோர்.

0.0ட

துள்ள இழிந்த இயல்புடைய பெண்டிர் கூறுவனவாய இன்ன
சொற்கள்;

கூட—டு. புரைய அல்ல என் மகட்கு என - என் மகளுக்குப் பொருந்தவன அல்ல என்று. பரை இ - தெய்வத்தைப் பரவி, நம் உளர்ந்து - நமது களவொழுக்கத்திலே உளர்ந்து வைத்து, ஆதிய கொள்கை அன்னோ முன்னர் - அமைதியுற்றிருக்கும் கொள்கையினை யுடைய நம் அன்னை முன், யாம் என் இதற் படல் - யாம் இக் களவொழுக்கத்திற் பட்டு ஒழுகல் எங்ஙனம் இயலும்?

(முடிபு) தோழி! வாழி! என் நுதலும் பசந்தன்று; மேனியும் ஐதாகின்று; அலமரும் நிகழ்தரும்; (இவை) உயிர்கொடு கழியின் அல்லதை நினையின் எவனோ? சுரம் பல கடந்தோர்க்கு இரங்குப என்னும், கொலை மேவலரோ நிலையப் பெண்டிர் இன்ன கூறுப, என் மகட்குப் புரைய அல்லவென, பரைஇ ஆதிய கொள்கை அன்னை முன்னர் யாம் இதற்படல் என்?

(வி - ரை.) பசந்த என்னும் பாடத்திற்கு, பசந்த நுதலும் ஐதாகின்ற மேனியும் நிகழ்தரும அவலமும் எனப் பெயரெச்சத் தொடர்களாகக் கொள்க. இதற்கு ஆகின்று என்பது விகாரம். அல்லதை - அல்லது; சுரம் நிரிந்தது. பசபபு முதலியன உயிர் கொண்டே கழியும என்பது கருத்து. வியை எண்கின் கிளை கவரும் என்க. என்ற கரடிகள் சிறும் இடல்பினவாகலின் வம்பலர் அழுங்குவர் என்க. புரைய அல்ல - உயர்வாவன அல்ல எனலுமாம். பரைஇ - தெய்வத்தைப் பராவி, அதனை, தன் மகள் பழியொடு படாத இன்ப வாழ்வு பெறல் வேண்டுமெனத் தெய்வத்தைப் பரவி னள். 'நமது களவு நிலைமை யுணர்ந்து நம்மைச் சினவாது அமைந்த அன்னையின் முன்பு நாம் மேலும் இவ்வாறு ஒழுகுதல் இழுக்காது என்றுள்.'

(மே - ள்.) [1]'எஞ்சி யோர்க்கும் எஞ்சுத லிலவே' என்னுஞ் சூத்திரத்து, இச்செயயுளை எடுத்துக் காட்டி, இது போக்குடன் பட்டமை தலைவி தோழிக் குரைத்தது என்றனர் நச்.

---

96. மருதம்

[தோழி வாயின் மறுத்தது.]

நறவுண் மண்டை நுடக்கலின் இறவுக்கலித்துப்
பூட்டறு வில்லில் கூட்டுமுதல் நெறிக்கும்
பழனப் பொய்கை அடைகரைப் பிரம்பின்
அரவாய் அன்ன அம்முள் நெடுங்கொடி
அருவி ஆம்பல் அகலடை துடக்கி
அசைவரல் வாடை தூக்கலின் ஊதுலை
விசைவாங்கு தோலின் விங்குபு ஞெகிழுங்
கழனியம் படப்பைக் காஞ்சி யூர

1. தொல். எச்சம். ஈஉ.

ஒண்தொடி யாயத் துள்ளுநீ நயந்து
கo கொண்டனை யென்பவோர் குறுமகள் அதுவே
செம்பொற் சிலம்பின் செறிந்த குறங்கின்
அங்கனும் மாமை[1] யஃதை தந்தை
அண்ணல் யானை அடுபோர்ச் சோழர்
வெண்ணெல் வைப்பிற் பருஉர்ப் பறந்தலை
கஞ இருபெரு வேந்தரும் [2]பொருதுகளத் தொழிய
ஒளிறுவாள் நல்லமர்க் கடந்த ஞான்றைக்
களிறுகவர் கம்பலை போல
அலரா கின்றது பலர்வாய்ப் பட்டே.

—மருதம் பாடிய இளங்கடுங்கோ.

(சொ - ள்.) க—அ. நறவு உண் மண்டை நுடக்கலின் இறவு கலித்து - கள்ளுண்ட கலம் கழுவப் படுதலின் (அந்நீரையுண்ட) பூட்டிய நாண் அற்ற வில் தெரிப்பதுபோல நெற் கூடுகளின் அடிக நிலத்துப் பொய்கையின் அடைகரையிலுள்ள, பிரம்பின் அர வாய் போன்ற அழகிய முட்களையுடைய நீண்ட கொடி, அருவி ஆம்பல் அகல் அடை துடைஇ - நீர்க்குறை வற்ற ஆம்பலது அகன்ற இலை யினைச் சுற்றிட (அவ்விலையை), அசை வரல் வாடை தூக்கலின் - அசைந்துவரும் வாடைக்காற்று (விட டு விட டுப் புகுந்து) அசைத்த லின், ஊது உலை விசை வாங்கு தோலின் வீங்குபு ஒலிமூம் - (அவ் விலை) ஊதப்பெறும் கொல்லன் உலைக்களத்து விசைத்து இ , ழு விடும் துருத்தியைப் போலப் புடைத்துச் சுருங்கும், கழனி அம பைக் காஞ்சி ஊர - வயல்களையும் தோட்டங்களையுமுடைய க ழ மரங்கள் மிக்க ஊரையுடைய தலைவனே!

கூ—கo. ஒண்தொடி ஆயத்துள்ளும் - ஒள்ளிய தொடியினை யுடைய பரத்தையர் கூட்டத்திலுள்ளும், நீ ஓர் குறுமகள் நயந்து கொண்டனை என்ப - நீ ஒரு இளைய மகளை விரும்பி மணந்தனை என்று ஊரார் கூறுவாராயினர்;

கo—அ. அதுவே - அக் கூற்று, செம்பொன் சிலம்பின் - சிவந்த பொன்னாலாய சிலம்பினையும், செறிந்த குறங்கின் - நெருங்கிய துடையினையும், அம் கவும் மாமை - அழகு ஒழுகும் மாமை நிறத் தினையும் உடைய, அஃதை தந்தை - அஃதை என்பாட்குத் தந்தைய ராகிய, அண்ணல் யானை அடுபோர்ச் சோழர் - பெருமை தங்கிய யானையையும் வெல்லும் போரினையுமுடைய சோழர், வெண்ணெல் வைப்பில் பருஉர்ப் பறந்தலை - வெண்ணெல் விளையும் இடங்களை யுடைய பருஉர்ப் போர்க்களத்தே, இரு பெரு வேந்தரும் பொருது களத்து ஒழிய - தம்மொடு பொருத பகைச் சேரர் பாண்டியராய

(பாடம்) 1. அகுதை. 2. ஒருகளத் தொழிய.

இருபெரு வேந்தர்களும் போர் செய்து களத்திலிடத்தே பட்டொழிய, வெறி வாள் நல் அமர் கடந்த ஞான்றை - விளங்கும் வாளிறை செய்யும் நல்ல போரிலே வென்ற பொழுது, களிறு கவர் கம்படிலே போல - அப் படை வேந்தர்களது களிறுகளைக் கவர்ந்து கொண்ட காலே எழுந்த ஆரவாரம போல, பலர் வாய்ப்பட்டு அலர் ஆகின்றது - பலர் வாயிலும் பொருந்தியெழுந்து அலர் ஆகின்றது.

(முடிபு) ஊர! நீ ஒரு குறுமகள் கொண்டனை யென்ப. அது, சோழர் பருந்துப் பறந்தலையில் இருபெரு வேந்தரும் பொருது ஒழிய, வளமார்க் கடந்த ஞான்றைக் களிறு கவர் கம்பலே போல அலர் ஆகின்றது.

(வி - ரை.) மண்டை இக்காலத்து மொந்தை என வழங்கப் படுகின்றது. நுடக்கல் - கழுவல். அகநீரை யுண்ட என வருவித் துரைக்க. நறவு கலந்த நீராதலின் உண்டு களிப்பதாயிற்று. கூட்டு முகந் தெறிக்கும் என்றது வளமிகுதி கூறியவாறும். தெறிக்கும் ஞெகிழும என்னும் பெயரெச்சங்கள் இடப்பெயர் கொண்டன. பிரபபின் நெடுங்கொடி என்க. கவர் கம்பலே பெயரெச்சம காரியப பெயா கொண்டது. கன்று இடைநிலை பிற்கால வழக்காகலின், அலராகின்று எல்பது பாடமாதல் வேண்டுப; அன்றி, அது பகுதிப் பொருள் விகுதி எனலுமாம்.

(உ - றை.) 'நறவுண் மண்டை . . . காஞ்சி யூர' என்றது பரத்தையர் சேரியைச் சூழ்ந்து நிரியும் பாணன் காமஞ் சாலா இளமையோளாகிய பரதன்தலைவி தகுமகனொடு கூட்டத் தகுமகன் அவள் முயங்கியவிடத்து அவள் களிப்புற்று, நீங்கிய வழி மெலிவின் ருள் என்றபடி. இதன்கண் பொய்கையைப் பரத்தையர் சேரியாகவும், முள்ளுடைப் பிரம்பின் கொடியை அதனைச் சூழ்ந்து நிரியும் நெஞ்சு வலிய பாணரைகவும், ஆம்பல் இதழைக் காமஞ்சாலாக் குறுமகளாகவும், அதனைக் கொடி தடக்கியதனைப் பாணன் அவளைத் தகுமகனொடு கூட்டியதாகவும், வாடையைத் தகுமகனாகவும், அது தாக்குந்தோறும் அவ்விதழ் வீங்கித் தாக்காதவழி நெகிழ்ந்ததனை, தகுமகன் அவளை முயங்கியவழி அவள் களிப்புற்று, நீங்கிய வழி மெலிந்த தன்மையாகவும் கொள்க.) மற்றும், இதில் 'நறவுண் மண்டை . . . கூட்டு முகந் தெறிக்கும்' என்றது நறவு கலந்த இழிந்த நீரையுண்ட இருல் அச்செருக்கினால் கூட்டு முகந் தெறித்ததுபோலப் பரத்தையரின இழிந்த இன்பத்தை நுகர்ந்த தகுவனும் செருக்குற்றுத் தனக்குப் புறம்பாகிய வேறிடத்தே நுங்கிக் கிடக்கின்ற தன்மையாகவுங் கொள்க.

(மே - ள்.) [1]'புல்லுதல் மயக்கும்' என்னுஞ் சூத்திரத்து, ஒண் டொடியாயத் துள்ளூர் நயந்து, கொண்டனை யென்ப வோர் குறுமகள் எனக் காமஞ் சாலா இளமையோளாக் கூறிற்று என்றனர் நச்.

[2]'செய்வ மஞ்சல்' என்னுஞ் சூத்திரத்து, 'களிறு கவர் கம்பலே போல, அலராகின்றது பலர் வாய்ப் பட்டிட' என்பது புறஞ்சொல்லாணக் கிளவிக்கு ஏதுகாரணமாகும் என்றனர் பேரா.

---

1. தொல். கற். ஏ0. 2. தொல். மெய்ப். உச.

'ஒருமை கூட்டிய' என்னுஞ் சூத்திரத்து, 'பன்மைக் காகு மிடனுமா ருண்டே' என்பது, ஒருமைச் சொல் பன்மைச் சொலோடு தொடர்தற்குப் பொருந்து மிடமு முண டென்பதூஉம் பட நின்றமையால், 'அஃறை தந்தை .... சோழர்' என, ஒருமைச் சொல் பன்மைச் சொலோடு தொடர்தலுங் கண்டுகொள்க. சான்று ஒரு வரைக் கூறும் பன்மைக் கிளவி' என்புழி அடங்காமை யறிக எவற னிற்றலின், 'தந்தை' என்னும் ஒருமை, சோழர் என்னும் பன்மை யோடு தனித்தனி சென்று கூடுதலின் வழுவின்றெனும் சற்றுப் பன்மைபற்றி வழுவமைத்தார் என்றனர் நச்.

---

97. பாலை

[வற்புறுக்குந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலை
வறனுறல் அங்கோ டுதிர வலங்கடந்து
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை
இரவுக்குறும் பலற நூறி நிரைபருந்
திருங்கல் முடுக்கர்ந் நிற்றி கொண்டும்
கொலைவில் ஆடவர் போலப் [2]பலவுடன்
பெருந்தலை யெருவையொடு பருந்துவந் திருக்கும்
அருஞ்சுரம் இறந்த கொடியோர்க் கல்கலும்
இருங்கழை இறும்பின் ஆய்ந்துகொண் டுறந்த
நுணங்குதகன் றிறுகோல் வணங்நிறை மகளிரொ
டகவுநர்ப் புரந்த அன்பின் கழல்தொடி
நறவுமகிழ் இருக்கை நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூர் அன்னநின்
அலர்முலை யாகம் புலம்பப் பலநினைந்
தாழேல் என்றி தோழி யாழவென்
கண்பனி நிறுந்நல் எளிதோ குவளைமலர்த்
தற்சிர நீங்கிய [3]அரும்பத வேனில்
அலவிர் வார்மணல் அகலியாற் றடைகரைத்
துறையணி [4]மருது தொகல்கொள வோங்கிக்
கிழிந்நளிர் அணிந்த இருஞ்சினை மாஅத்
தினர்ததை புதுப்பூ நிரைந்த பொங்கர்ப்
புகைபுரை அம்மஞ் சூர
நுகர்குயில் அகவும் குரல்கேட் போர்க்கே.

---

1. தொல். எச்சவியல். கூடு. (பாடம்) 2. பல புலந்து. 3. அரும்பவிழ் கால். 4. மருதமொ டிலவகொள. 5. ஏனையார். குடவழுந்தனர்.

—[5]மாமூலனர்.

உ0சு

(சொ - ள்.) கரு. தோழி -,

க—ங. கள்ளி அம் காட்ட புள்ளி அம் பொறிக் கலி - கள்ளிக் காட்டிலேயுள்ள புள்ளிகளாய பொறிகளையுடைய கலுமானை, வறன் உறல் அமர் கோடு உதிர வலங் கடந்து - அதன் வறட்சியுற்ற அழகிய கொம்பு சிதைந்தொழிய அதன் ஓட்டத்திலே வென்று பறித்தின்ற, புலவுப் புலி துறந்த கலவுக் கழி கடுமுடை - புலால் விருப்புடைய புலி கைவிட்டுப் போன மூட்டு வாய் ஒழிந்த கடிய முடைநாற்றத் திலையுடைய தசை கிடக்கு மிடத்தே,

ச—சு. இரவு குறும்பு அலற நூறி - இரவிலே காட்டரண்களி லுள்ளார் அலற அவர்களைக் கொன்று, மிசை பகுத்து - தாம் கொண்ட மிசைகளைப் பகுத்துக் கொண்டு, இருங் கல் முடுக்கர் - பெரிய கற்பாறையின் முடுக்கிலே, நிற்றி கெண்டும் - தசையினை அறுத்துத் தின்னும், கொலை வில் ஆடவர் போல - கொலைத் தொழில் வல்ல வில்லினையுடைய வெட்சி வீரர் போல,

சு—அ. பெருந்தலை எருவையொடு பருந்து பல உடன் வந்திருக் கும் - பெரிய தலையினையுடைய கழுகுகளோடு பருந்துகள் பலவும் ஒருங்கே வந்து சூழ்ந்திருக்கும், அருஞ் சுரம் இறந்த கொடி யோர்க்கு - அரிய சுரநெறியைக் கடந்து சென்ற கொடியோராய நம் தலைவரின் பிரிவிற்காக, அல்கலும் - நாடோறும்,

க—கடு. இரு கழை இறும்பின் - பெரிய மூங்கில்களையுடைய சிறு காட்டில், ஆய்ந்து கொண்டு அறுத்த - ஆராய்ந்து கொண்டு அறுத்திட்ட, நுணங்கு கண் சிறு கோல் - சிறிய கணுக்களை யுடைய நுண்ணிய கோலினைக் கொண்ட, வணங்கு இறை மகளி ரொடு - வளைந்த முன் கையினையுடைய விறலியரொடு, அகவுநர் புரந்த அன்பின் - பாணர்களைப் புரந்திடும் அன்பினையும், கழல் தொடி நிறவு மணி இருக்கை - கழலும் தொடியினையும் கள்ளுண்டு மகிழும் இருக்கையினையுமுடைய, நன்னன் வேண்மான் - நன்னன் வேண்மானது, வயலை வேலி வியலூர் அன்ன - வயலைக் கொடி படர்ந்த வேலிகளையுடைய வியலூரினை யொத்த, நின் அலர் முலை ஆகம் புலம்ப - நினது பரந்த முலையையுடைய மார்பகம் தனித்து வருந்த, பல் நினைந்து ஆழல் என்றி - பலவும் நினைந்து துன்பத்தில் ஆழ்ந்திடாதே என்னுகின்றாய்; என் - இஃதென்னை!

கக—உக. குரவு மலர்ந்து அற்சிரம் நீங்கிய அரும்பதவேனில் - குரவம் மலர்ந்து முன்பனிக்காலம் நீங்கப் பெற்ற அரிய செவ்வியை யுடைய இளவேனிற் காலத்தே, அறல் அவிர் வார் மணல் அகல் யாற்று அடைகரை - அறல் விளங்கும் நீண்ட மணலையுடைய அகன்ற ஆற்றின் கரையிடத்தே, துறை அணி மருது தொகல் கொள ஓங்கி - துறையை அழகு செய்யும் மருத மரங்களோடு தொகுதியாக உயர்ந்து, கலிழ்தளிர் அணிந்த இரும்சினை மா அதன் - அழகு ஒழுகும் தளிரைக் கொண்ட பெரிய கிளைகளையுடைய மா மரத்தின், இணர்தை புதுப் பூ நிரைத்த பொங்கர் - கொத்துக்க ளாக அரும்பிய புதிய பூக்கள் செறிந்த சோலைகளிலே, புகை புரை

அம் மஞ்சு ஊர - புகையினை யொத்த அழகிய வெண் மேகங்கள் தவழ, நுகர் குயில் அகவும் குரல் கேட்போர்க்கு - (அவ்வின்பத்தை) நிறுத்தல் எளிதோ - கண்ணின் நீரை நிறுத்துதல் எளிதாகுங் கொல் ?

(முடிபு) தோழி ! அருஞ்சுரம் இறந்த கொடியோர்க்கு வியலூரன்ன நின் அல்முலை யாகம் புலம்ப ஆழல் எய்றி : என் ? வெளிலில் யாற்றின் அடை கரைப் பொங்கரில் மஞ்சு ஊரக் குயில் அகவும் குரல் கேட்போர்க்குக் கண் பனி நிறுத்தல் எளிதோ !

நிரை பகுத்துத் திற்றி கெண்டும் ஆடவர் போல, புலி கவியின் வலம் கடந்து துறந்த முடைக்கண் எருவையொடு பருந்து வந்திருக்கும் அருஞ்சுரம் என இயையும்.

(வி - ரை.) கள்ளியம் .... பொறிக்கலி: அம், அசைகள். வலம்-திற்ற என்பதனை விரித்துரைக்க. முடை - முடை நாற்ற மூடைய தசைக்கு ஆகுபெயர். முடையிடத்தே எருவையொடு பருந்து வந்திருக்கும் என்க. இறும்பு - பகைவர் எயிற்புறத்துக் காடுமாம். மகளிர் - விறலியர். இவர் கையிலே சிறிய மூங்கிற் கோலையுடைய ராவரென்பது, [1]'வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்' என்பதனாலும் அறியப்படும். பாணர், கூத்தராகிய அகவருங் கையிற் கோலுடையரென்பது பிறண்டு வருவனவற்றால் அறியப்படும். யாழ - அசை. என் - எவ்வாறு இயலும் எனற்படி. மருது - மருதம். தொடு என்ன மூன்றனுருபு விரித்துரைக்க. குயில் அகவும் குரல் - குயில பேட்டினை அழைக்கும் குரல் என்றலுமாம். கேட்போர்க்கு எனத் தன்னைப் பிறர்போல் வைத்துக் கூறினள். இனி, கேட்டு வாளாவிருக்கும் தலைவர் பொருட்டாக, என் கண் பனி நிறுத்தல் எளிதோ என்றுரைத்தலுமாம்.

(மே - ள்.) [2]'நடுவு நிலைத்திணையே' என்னுஞ் சூத்திரத்து, இச் செய்யுளை எடுத்துக் காட்டி, இதன்கண் இருவகை வேளிலும் பாலைக்கண் வந்தன என்றார் நச்.

---

98. குறிஞ்சி

[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. தோழிக்குத் தலைமகள் சொல்லியதாகவுமாம்.]

பனிவரை நிவந்த பயங்கெழு கவாஅன்
துனியில் கொள்கையோ டுவர்நமக் குவந்த
இனிய உள்ளம் இன்னு வாகு
முனிதக நிறுத்த நல்கல் எவ்வம்
ஞ சூருறை வெற்பன் மார்புறத் தணிதல்

---

1. கலி. கஅ. 2. தொல். அகத். கூ.

அறிந்தனள் அல்லள் அளிதோ வார்கோல்
செறிந்திலங் கெல்வளை தெரிமுற்ற நாக்கிக்
கையறு நெஞ்சினள் வினவலின் ஏறா
பொய்வல் பெண்டிர் பிரப்புளர் பாறு
முருகன் அரணங் கென்றலின் அருவரைத்
தேனிவர் நள்ளிவி னோடுசினை நல்லில்
பாலை அன்ன பலராய் மாண்குவின்
பன்மடையிற் றிறக்கவென் மகட்கெனப் பரைஇக்
கூடுகொள் இன்னியம் கறங்கக் களனிழைந்
தாடனி அயர்ந்த அகன்பெரும் பத்தர்
வெண்போழ் கடம்பொடு சூடி இவ்சிர்
ஐகமை பாணி இரிங்கக் பெயராச்
செல்வன் பெரும்பெயர் ஏத்தி வேலன்
வெறியயர் வியன்களம் பொற்ப வல்லோன்
பொறியமை பாவையின் தூங்கல் வேண்டின்
என்னுங் கொல்லோ தோழி மயங்கிய
மையற் பெண்டிர்க்கு நோவ்வ லாக
ஆடிய பின்னும் வாடிய மேனி
பண்டையிற் சிறவா தாயின் இம்மறை
அலரா காமையோ அரிதே யஃதான்
றறிவர் உறுவிய அல்லல்கண் டருளி
வெறிகமழ் நெடுவேள் நல்குவன் எனினே
செறிதொடி யுற்ற செல்லலும் பிறிதனைக்
கால்கெழு நாடன் கேட்பின்
யாணுயிர் வாழ்தல் அதனினும் அரிதே.

—வெறிபாடிய காமக்கண்ணியார்.

(சொ - ள்.) உக. தோழி -, க—ச. பனிவரை நிவந்த பயம் கெழுகவான் - குளிர் வாய்ந்த மலையினது உயர்ந்த வானம் பொருந்திய பக்க மலையிடத்து, அவர் - நம் தலைவர், துனிஇல் கொள்கையொடு - வெறுப்பில்லாத கொள் கையுடன், நமக்கு உவந்த இனிய உள்ளம் - நமக்குவந்தளித்த அவ ரது இனிய உள்ளம, இன்னாக - இன்னாவாயினமையின், முளிதக சிறுத்த நல்கல் எவ்வம் - வெறுக்குமாறு சில பெறுத்திய நல்கல் வருத்தமானது,

டு—கூ. சூர் உறை வெற்பன். - தெய்வம் உறையும் மலையிடை யுடையானைய அத் தலைவன், மார்புஉற - மார்பு உறுவதொன்றனை, தணிதல் - தணிவதாதலை, அன்னை அறிந்தாள் அல்லள் - நம் தாய் அறியாதவளாகி,

சு—அ. வார்கோல் செறிந்து இலங்கு எல்வளை நெகிழ்ந்தமை நோக்கி - நீண்ட கோற்றொழி லமைந்த நெருங்கி விளங்கும ஒளி பொருந்திய வளை நெகிழ்ந்த சிலயினைப் பார்த்து, கையறு நெஞ்சி னள் - செயலற்ற உள்ளத்தினளாய், வினவலின் - வினவுதலாலே,

அ—கo. முதுவாய் பொய் வல் பெண்டிர் - முதுமை வாய்ந்த பொய் கூறல் வல்ல கட்டுவிச்சியராய பெண்டிர், பிரப்பரிசியைப் பரப்பி வைத்து, முருகன் ஊர் அணங்கு கூறலின் - இது முருகனது செயலான் வந்த அரிய வருத்தம் என்று கூறலின், அது செத்து - அதனை வாய்மையாகக் கருதி,

ஙக—ஙூ. ஓவத்து அன்ன வினை புனை நல் இல் - ஓவியத்தை அன்ன பலர் ஆய் மாண் கவின் - பாவையைப் போன்ற பலராலும் ஆராயப்பெறும் மாண்புற்ற அழகானது, என் மகட்கு பண்டையிற் சிறக்க என - என் மகட்கு முன்போற் சிறப்புறுக என்று, பரவி - தெய்வத்தைப் பரவி,

சஞ—டு. கூடு கொள் இன்னியம் கறங்கக் களன் இழைத்து - இணைந்த பலவாய இனிய இயங்கள் ஒத்து ஒலிக்க வெறியாடும் களனை இயற்றி, ஆடு அணி அயர்ந்த அகல் பெரும் பந்தர் - ஆடுதற் கேற்ற அழகு செய்த அகன்ற பெரிய பந்தலிலே,

சசு—உக. வெண் போழ் கடம்பொடு சூடி - வெள்ளிய பனந் தோட்டினைக் கடப்பமலரொடு சூடி, இன் சீர் ஐது அமை பாணி இரீஇ - இனிய சீர் அழகாக அமைந்த தாளத்தொடு பொருந்தி, செல்வன் பெரும் பெயர் ஏத்தி - முருகக் கடவுளின் பெரும் புகழினைத் துதித்து, வேலன் வெறி அயர் வியன் களம் பொற்ப - வேலன் வெறியாடும் பெரிய களம் அழகுபெற, வல்லோன் பொறி அமை பாவையின் - வல்லோன் ஆட்டும் பொறி யமைந்த பாவையைப் போல, தூங்கல் வேண்டின் - ஆடுதலே விரும்பின், என் ஆம் கொல் - என் ஆகுமோ?

உக—டு. மயங்கிய மையல் பெண்டிர்க்கு - வெறியாடுங் களத்துக் கூடிய மயக்கம் பொருந்திய பெண்டிர்க்கு, நொவ்வலாக ஆடிய பின்னும் - துன்பம் உண்டாக வேலன் ஆடிய பின்னும், வாடிய மேனி - எனது வாடிய மேனி, பண்டையிற் சிறவாதாயின் - முன்பு போலச் சிறந்திடாதாயின், இம் மறை அலர் ஆகாமையோ அரிதே - இக் களவொழுக்கம் பலரும் தூற்றுமாறு வெளிப்படாதிருத்தல் அரிது;

உடு. அஃதான்று - அஃதன்றி,

உசு—ஙo. அறிவர் உறுவிய அல்லல் கண்டருளி - நம் தலைவர் உறுவித்த இவ்வல்லலைத் தெரிந்தருளுதலின், வெறி கமழ் நெடுவேள் நல்குவன் எனின் - மணங்கமழும் நெடுவேள் நம் முன்னை அழகினைத் தந்தருள்வன் எனின், செறிதொடி உற்ற செல்லலும் பிறிதென - செறிந்த வளையலை யணிந்த நம் தலைவி உற்ற துன்பமும் பிறிதொன்று எனைத்தியது என, கான் கெழு நாடன் கேட்பின் - காடு பொருந்திய நாட்டினையுடைய நம் தலைவன் கேட்டறியின், யான் உயிர் வாழ்தல் அதனினும் அரிது - யான் உயிர் கொண்டு வாழ்தல், மற்று நிய அதனினும் அரிது.

(முடி) தோழி (நம்) எவ்வம். அவ்வினை அறிந்தனள் அல்லள்; வினைவலின் பெண்பூ முருகன் ஆரணங்கு எய்தினன், அது செந்து, (முருகற்) பரைஇ ஆடலி அயர்ந்த பூந்தண், வேலன் பாவையிற் றுங்கல் வேண்டுள் என் ஆம் கொல்? ஆய பின்னும் வாடிய மேனி நிறனாதாயின், மலர அணராகாமை அரிது; அற்றன்று, நெடுவேள் தன்குவன் எனின், செல்லலும் பிறிதெனக் கான்கெழு நாடன் கேட்பின், யான் உயிர் வாழ்தல் அதனினும் அரிது.

(வி - ரை.) உவந்த - உவந்து அளிசெய்த. ஆக. காரணப் பொருட்டாயது. நல்கல் எவ்வம் - தலைவன் அருளால் வந்த எவ்வம் எனத தானுற்ற நோய்க்குப் பெயர் கூறினுள். அல்லல் என்பதனை எச்சமாக்குக. முதுவாய் - பேசி முதிர்ந்த வாய் என்றலுமாம். முது வாய்ப் பெண்டிராவார் கட்டுவிச்சியர்; கட்டுக் கூறுபவர். கட்டாவது, முறத்திலே நெல்லை யிட்டுக் குறி சொல்லுதல். பிரப்பு - அரிசி, தினை முதலியவற்றைப் பல பகுதியாகக் கூடையிலாதல், முறத்திலா தல் பலியாக இட்டு வைத்தல். 'பல்பிரப் பிரீஇ யென' என (உசாஉ) இந்நாலுள்ளும், [1] 'நிலைப்பிரப் பிரீஇ' எனக் குறுந்தொகை யிலும், [2] "குருதியொடு விரைஇய தூவெள் எரிசி, சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇ" எனத் - திருமுருகாற்றுப்படையிலும் வரு தல் காண்க. வெண் போழ் - போழப்பட்ட பனந்தோடு; ஆகு பெயர். சீர் - தாள அறுதி. செல்வன் - முருகன். பெரும் பெயர் - பெரிய திருநாமமும் ஆம். அஃதாவது, முருகனுக்குரிய ஆறெழுத் தருமறை. வேலன் - செவ்வேளின் வேலை ஏந்தி நின்றாடுபவன்; பூசாரி. பொறி - இயந்திரம். வல்லோன் இயற்றிய பொறி என்க. வல்லோன் ஆட்டும் பாவை யெனினும் பொருந்தும். நோவ்வல் - நோவல். ஆகாமை அரிது: ஆகும் என்றபடி. அஃதான்று: [3] 'இன்றி யென்னும் விளையெஞ்சிறுதி' என்னும் குத்திரத்து, 'தொன்றி யல் மருங்கின்' என்றதனால், அன்றி என்பது அன்று என ஆயிற்று எனவும், [4] "அன்று வருகாலை ஆவா குதலும்" என்றதனால் ஆன்று என ஆயிற்று எனவும் கொள்க. கண்டருளி - கண்டு அருள் செய்து என்றுரைத்தலுமாம். வெறி - முருகனுக்கு இயல்பாய நறுமணம். [5] 'மணங்கமழ் தெய்வத் திணநலம் காட்டி' என்றார் நக்கீரனாரும். இனி வெறியாடும் களத்துப் போதரலின் அந்நாற்றம் கமழும் என் றலுமாம். செல்லலும் பிறிதெனக் கான்கெழு நாடன் கேட்பின் யானுயிர் வாழ்தல் . . . அரிது என்றது, தனது உண்மைக் காதலுக்கு இழுக்கு உண்டாதல் கருதி என்க. இச் செய்யுள் தலைவி கூற்றே தற்கே பெரிதும் பொருந்தியதாம். நச்சினார்க்கினியரும் இக் கருத்தினரே யென்பது [6] 'களவல ராயினும்' என்னுஞ் சூத்திர வுரையாற் பெறப்படும். தோழி கூற்றாயின் தலைவிக்கும் தனக்கும் உள்ள ஒற்றுமையால், யான் எனக் கூறினுள் எனல் வேண்டும்.

---

1. குறுந். உகக. 2. முரு. உகக-ச. 3. தொல். எழுத். உகச.
4. தொல். எழுத். உடுஅ. 5. முரு. உகo. 6. தொல். பொருள். ட்டுடுக.

Lakshmi Kanthan

[உடன் போகிய தலைமகளைத் தலைமகன் மருட்டிச் சொல்லியது.]

99. பாலை

வாள்வரி வயமான் கோள்உகிர் அன்ன
செம்முகை யவிழ்ந்த முள்முதிர் முருக்கின்
நிரார் செம்மல் தாஅய் மதரெழில்
மானிழை மகளிர் தூஉடை முகையின்
முகைபிணி அவிழ்ந்த கோங்கமொ டசைஇ
அரிரல் பரந்த அந்தண் பாதிரி
உரிவீ அஞ்சினை தாஅய் எதிர்வீ
மராஅ மலரொடு விராஅய்ப் பராஅம்
அணங்குடை நகரின் மணந்த பூவின்
நன்றே கானம் நயவரும் அம்ம
கண்டிரின் வாழியோ குறுமகள் நுந்தை
அடுகளம் பாய்ந்த தொடிசிதை மருப்பின்
பிடிமிடை களிற்றில் தோன்றும்
குறுநெடுந் துணைய குன்றமும் உடைத்தே.

—பாலைபாடிய பெருங்கடுங்கோ.

(சொ - ள்.) கக. குறுமகள் - இளமடவாய், வாழியோ - வாழ்வாயாக,

க—ங. வாள் வரி வய மான் கோள் உகிர் அன்ன - வாள் போலும் வரிகளையுடைய வலிய புலியினது கொல்லும் தொழிலையுடையநகம் போன்ற, செம் முகை அவிழ்ந்த முள் முதிர் முருக்கின் - சிவந்த முகை விரிந்த முள் நிறைந்த முருக்கமலராகிய, நிரர் ஆர் செம்மல் தாஅய் - வண்டு சூழ்ந்த வாடிய பூக்கள் பரந்து,

ங—சு. மதர் எழில் மான் இழை மகளிர் தூஉ உடை முகையின் - கதிர்த்த அழகினையும் மான்புற்ற அணியினையு முடையமகளிர் தூணிந்த முகையினைப் போன்ற, முகை பிணி அவிழ்ந்த கோங்கமொடு நகை அசைஇ - முகைகள் அலர்ந்த கோங்கம் பூக்களோடு கொத்துக்களாய புனலிப்பூ கூடிக் கிடக்க.

சு—ஞ. பரந்த அம் தண் பாதிரி அஞ்சினை உதிர் வீ தாஅய் - பரந்த அழகிய குளிர்ந்த பாதிரியினது அழகிய சினையினின்றும் உதிர்ந்த பூக்களோடு தாவி,

ஞ—அ. எதிர் வீ மராஅ மலரொடு விராஅய் - மாறுபட்ட பூக்கள்வெண்கடப்பம் பூக்களொடு விரவித் தாவி,

அ—கூ. பராஅம் அணங்கு உடை நகரின் மணந்த பூவின் - பரவுக்கடன் பூண்ட தெய்வமுடைய கோவிலின்கலை கலந்து கிடக்கும் பூக்களைப் போல,

கூ—க கானம் நன்றே நயவரும் - இக் காடு பெரிதும் விரும்பத்தக்கதாகின்றது; கண்டிரின் - கான்பாயாக;

உகஉ.

கக—ச. (மற்றும் இக் கானம்). நுந்தை அடுகளம் பாய்ந்த தொடி சிதை மருப்பின்-உன் தந்தை பகைவரை அடும் போர்க்களத்துப் பாய்ந்து போர் செய்தலால் மூண்ட சினத்த கோட்டினையுடைய வும். பிடி மிடை - பிடிகள் குழப் பெற்றவுமாய, களிற்றில் தோன் றும் - களிறுகளைப் போலத் தோன்றும், குறு நெடுந் துணைய-சிறிய வும் பெரியவுமாய அளவினையுடைய, குன்றமும் உடைத்து-குன்றங் களையும் உடையதாகின்றது; (காண்பாயாக.)

(முடிபு) குறுமகள், வாழியோ! முருக்கின் செம்மல் தாஅய், முகை பினி யவிழ்ந்த கோல்கமோடு நகை அதிரல் அசைஇ, பாதிரி அங்கினை உதிர் வி எதிர் வி மராஅ மலரோடு தாஅய், விராஅய், அணங்குடை நகரின் மணந்த பூவின் கானம் நல்ல நயவரும்; (அது) பிடி மிடை களிற்றிற் றோன்றும் குறுநெடுங் துணைய குன்றமும் உடைத்து; அம்ம! கண்டிசின்.

(வி - ரை.) கோள் உகிர் - இரையைப் பற்றிய உகிரென்று மாம்; குருதியாற் சிவந்த உகிரென்பான் 'கோளுகிர்' என்றான்; புலியுகிர் வண்ணமும் வடிவும் பற்றி முருக்கின் செம்முகைக்கு உவமையாயது. முகிலோலும் முகை யென்க. 'மராஅ மலரோடு விராஅய்ப் பராஅம்' என்றது அளபெடை வண்ணம்; என்னை? "அள பெடை வண்ண மளபெடை பயிலும்" என்றாகலின். அம்ம, உரை யசை; கேட்பித்தற் பொருட்டுமாம். பகைவரது. மதிற் கதவைப் பாய்தலின் தொடி சிதைந்த தெனலுமாம். மருப்பிற் களிறு பிடி மிடை களிறு என்க.

(மே - ள்.) [2]"ஒன்றுத் தமரினும்" என்னுஞ் சூத்திரத்து இச் செய்யுளைக் கூறி, 'இது தலைவியை மருட்டியது' என்று கூறினர் நச்.

100. நெய்தல்.

[தோழி வரைவு கடாயது.]

அரையுற் றமைந்த ஆரம் நீவிப்
புரையப் பூண்ட கோதை மார்பின
நல்லகம் வடுக்கொள முயங்கி நீவந்
தெல்லினிற் பெயர்தல் எனக்குமா ரினிதே
பெருந்திரை முழக்கமொ டியக்கவிந் நிருந்த
கொண்டல் இரவின் இருங்கடல் மடுத்த
கொழுமீன் கொள்பவர் இருள்நீங் கொண்சுடர்
ஓடாப் பூட்கை வேந்தன் பாசறை
ஆடியல் யானை அணிமுகந் தசைத்த
ஒடை ஒண்சுடர் ஒப்பத் தோன்றும்
பாடுநர்த் தொடுத்த கைவண் கோமான்
பரியுடை நற்றேர்ப் பெரியன் விரியினர்ப்
புன்னையங் கானற் புறந்தை முன்றுறை

1. தொல். செய். உகக. 2. தொல். அகத். சக.

வம்ப நாரை யினவெளிற் றன்ன
கடு அம்பல் வாய்ந்த தெய்ய தண்புலர்
வைகுறு விடியல் போகிய எருமை
நெய்தலம் புதுமலர் மாந்தும்
கைதையம் படப்பைஎம் மழுங்க லூரே.

—உலோச்சனார்.

(சொ - ள்.) க—ச. அரை உற்று அமைந்த ஆரம் சீவி - நறு மணம் கூட்டி அரைக்கப்பெற்று முடிந்த சந்தனத்தைப் பூசி, புரை யப் பூண்ட கோதை மார்பினை - உயர்வுற மாலையினைப் பூண்ட மார் முயங்கிப் பெயர்தல் எனக்கும் இனிது - நீ இரவினில் வந்து நல் அகம் வடுக்கொள நல்ல மார்பு வடுவுண்டாக முயங்கிப் போதல் எனக்கும் மிக இனி தாகும்; (ஆயினும்),

ரு—ள. பெரும் திரை முழக்கமொடு இயக்கு அவிந்திருந்த - பெரிய அலையின் ஒலியோடு அதன் அலைவும் ஒய்ந்திருந்த - இரவில் - மேகஞ் சூழ்ந்த இரவில், இரு கடல் மடுத்த கொழுமீன் கொள்பவர் - தொழுமீனைப் பிடிக்கும் பரதவர் கரிய கடலிலே மடுத்த அம்பியிலுள்ள, இருள் நீங்கு ஒள்சுடர் - இருள் நீங்குதற்குக் காரணமான ஒளி பொருந்திய விளக்கம்,

அ—கo. ஓடாப் பூட்கை வேந்தன் பாசறை - பிறக்கிடாத மேற் கோளினையுடைய வேந்தன் பாசறைக்கண்ணே யுள்ள, ஆடு இயல் யானை அணிமுகத்து அசைத்த - அடுதல் வல்ல யானையின் அழகிய முகத்திற் பிணித்த, ஒடை ஒண் சுடர் ஒப்பத் தோன்றும் - ஒடையி னது ஒள்ளிய சுடர்போலத் தோன்றும் (இடமகிய),

கக—ரு. பாடுநர்த் தொடுத்த கைவண் கோமான் - பாடி வரு வாரை வரவேற்றுக் கொள்ளும் கைவண்மை வாய்ந்த கோமானுடைய; பரி உண்ட நல்தேர்ப் பெரியன் - குதிரைகள் பூண்ட சிறந்த தேரினை யுடைய பெரியன் என்பானது, விரி இணர்ப் புன்னை அம் கானல் புறந்தை முனறுறை - மலர் விரிந்த கொத்துக்களையுடைய புன்னை மரங்களையுடைய அழகிய சோலை சூழ்ந்த புறையாற்றின் கடற்றுறை யின்கண் ணுள்ள, வம்ப நாரை இவன் ஒலித்தன்ன அம்பல் - புதிய நாரையின் கூட்டம் ஒலித்தாற் போன்ற அலர்,

கரு—அ. தண் புலர் வைகுறு விடியல் - தண்ணென்று புலர்ந் திடும் இருள் தங்கிய விடியற்காலத்தே, போகிய எருமை நெய்தல் புதுமலர் மாந்தும் - வெளிச் சென்ற எருமை நெய்தலின் புதிதாக அலர்ந்த மலரினைத் தின்னும், கைதை அம் படப்பை எம் அழுங்கல் ஊர் - தாழை வேலிகளையுடைய அழகிய தோட்டங்களையுடைய எமது ஆரவாரம் மிக்க ஊரின்கண், வாய்த்த - எழுந்தன.

(பாடம்) 1. நெய்தற் புதுமலர்.

(முடிபு) நகில, நீ எல்லிரில் வந்து பெயர்தல் எமக்கும் இனிது; ஆயினும், மீன் கொள்பவர் இருங்கடல் படுத்த ஒண்கூடர் வேந்தன் பாசறை யாயினையுடை ஒண்கூடர் ஒப்பத் தோன்றும் பெரியல் புறந்தை முன்றுறை நாரை இளஞ் ஞெகிந்தன்ன அப்பல் எம் அழுங்கல் ஊர் வாய்த்தன.

(வி - ரை.) எனக்குமார்: உம்மை எச்சப் பொருட்டு; மார் அசை. உவமைக்கண் யாயை முகந் தசைத்த ஒடை யென்றமை யால், பொருளிலும் அதற்கேற்ப. சுடல்மடுத்த அம்பியிற் பிணித்த சுடர் என வருவித்துரைக்க. 'பாடுநர்த் தொடுத்த கைவண் கோமான்' என்றது, பாடுவார் பொருள் வேட்டுப் பிறரிடம் செல் லாவாறு மிகுதியாக வழங்குபவன் என்றபடியார். புன்னையில் நாரை யிருக்கு மென்பதும், வம்ப நாரை யென்னும் வழக்கும், [1]'நின்ற புன்னை நிலந் தோய் படுசினை, வம்ப நாரை சேக்கும்' என் னுஞ் செய்யுளுள்ளுங் காண்க. புறந்தை - புறையாறு என்பதன் மரூஉ. இது பொறையாறு எனவும் வழங்கும். [2]'நறவுமகிழ் இருக்கை நற்றேர்ப் பெரியன், கட்கமழ் பொறையாற் றன்ன' என்பது காண்க. வாய்த்த: முற்றுவினை. தெய்ய: அசை. [3]'எந்நில மருங் கிற் பூவும் புள்ளும்' என்ற சூத்திரத்து ஒன்றென முடித்தலால், பிற கருப்பொருள் மயங்குவன உளவேனுங் கொள்க என்றனின், மருதத்து விலங்காகிய எருமையும், சிறுபொழுதாகிய வைகறையும் நெய்தற்கண் வந்தன.

---

101. பாலை

[பிரிவிடை வேறுபட்ட கிழத்தி தோழிக்குச் சொல்லியது. தோழி கிழத்திக்குச் சொல்லியதூஉ மாம்.]

அம்ம வாழி தோழி யிம்மை
நன்றுசெய் மருங்கில் நீநில் என்னும்
தொன்றுபடு பழமொழி யின்றுபொய்த் தன்றுகொல்
தகர்மருப் பேய்ப்பச் சுற்றுபு சுரிந்த
சுவன்மாய் பித்தைச் செங்கண் மழவர்
வாய்ப்பகை கடியும் மண்ணெடு கடுந்திறல்
தீப்படு சிறுகோல் வில்லொடு பற்றி
நுரைதெரி மத்தங் கொளீஇ நிரைப்புறத்
தடிபுதை தொடுதோல் பறைய வேறிக்
கடிபுலங் கவர்ந்த கன்றுடைக் கொள்ளையர்
இனந்தலை பெயர்க்கும் நனந்தலைப் பெருங்காட்
டகலிரு விசும்பிற் கோடம் போலப்
பகலிடை நின்ற பல்கதிர் ஞாயிற்
றுருப்பவிர் பூரிய[1] சுழன்றுவரு கோடைப்
புன்கால் முருங்கை ஊழ்கழி பன்மலர்

---

1. குறு. உகக. 2. நற். கூக. 3. தொல். அகத். கூ (பாடம்) 4. உளரிய

தண்கார் ஆலியில் தாவன உதிரும்
பனிபடு பன்மலை இறந்தோர்க்கு
மூளிதகு பண்பியாம் செய்தன்றோ இலமே.

—மாமூலனார்.

(சொ - ள்.) க. தோழி வாழி -, அம்ம - நான் கூறுவதனைக் கேட்பாயாக!

க—ங. இம்மை நன்று செய் மருங்கில் நீது இல் என்னும் - இம்மையில் நன்று செய்யுமிடத்துத் தீது வருவதில்லை என்று கூறப்படும், தொன்று படு பழமொழி - தொன்று தொட்டு வழங்கும் பழமொழி, இன்று பொய்த்தன்றுகொல் - இன்று பொய்யாயதோ,

ச—ஙஙு. தகர் மருப்பு ஏய்ப்பச் சுற்றுபு சுரிந்த - செம்மறியாட்டுக்கிடாயின் கொம்பினை யொப்பச் சுற்றிக் கடை சுருண்ட, சுவல் மாய் பித்தைச் செங்கண் மழவர் - பிடரியை மறைக்கும் தலைமயிரினையும் சிவந்த கண்ணினையுமுடைய மழவர்கள், வாய்ப் பகை கடியும் மண்ணெறு - வாயினின்றெழும் இருமலாய பகையினை எழாமற் றீர்க்கும் மருந்தாய புற்று மண்ணை வாயில் அடக்கிக்கொண்டனராய், கடும் திறல் தீப் படு சிறு கோல் வில்லொடு பற்றி - கடிய திறல்வாய்ந்த தீயுண்டாம் சிறிய அம்பினை வில்லோடு கையிற்பற்றி, நுரை தெரி மத்தம் கொளீஇ - வெண்ணெயை வெளிப்படுத்தும் கடையும் மத்தினைக் கவர்ந்துகொண்டு, நிரைப் புறத்து அடி புதை தொடுதோல் பறைய ஏகி - ஆனிரைகள் உள்ளவிடத்துத் தம் அடியை மறைத்துள்ள செருப்புக்கள் தேயச் சென்று, கடி புலம் கவர்ந்த கன்றுடைக் கொள்ளையர் - பகைவர் காவல் இடத்திலே கவர்ந்த கன்றுகளுடன் கூடிய ஆன் இனத்தை யுடையராய், இனம் தலை பெயர்க்கும் நனந்தலைப் பெருங் காட்டு - அவ்வினத்தினை அவ்விடத்தினின்று கொண்டுபோகும் அகன்ற இடத்தையுடைய பெரிய காட்டின் கண்ணே,

கஉ—சு. அகல் இரு விசும்பிற்கு ஓடம் போல - அகன்ற பெரிய வரனுகிய கடற்கண் ஓடம்போல, பகலிடை நின்ற பல் கதிர் ஞாயிற்று - பகலில் வானிடையே நின்ற பல கதிர்களையுடைய ஞாயிற்றின், உருப்பு அவிர்பு ஊரிய சுழன்று வரு கோடை - வெப்பம் விளங்கிப் பரக்கச் சுழன்று வரும் மேல் காற்றினால், புன் கால் முருங்கை ஊழ் கழி பன்மலர் - புல்லிய அடிமரத்தினையுடைய முருங்கையின் மூதிர்ந்து கழியும் பல பூக்கள், தண் கார் ஆலியில் தாவன உதிரும் - குளிர்ந்த கார்காலத்து ஆலங் கட்டி போலப் பரந்தன வாய் உதிரும்,

சுஎ—அ. பனிபடு பன்மலை இறந்தோர்க்கு - நடுக்கமுண்டாகும் பல மலைகளையும் தாண்டிச் சென்ற நம் தலைவர்க்கு, மூளிதகு பண்பு யாம் செய்தன்றோ இலம் - வெறுக்கத்தக்க செயல் யாதும் நாம் செய்திலமே.

(முடிபு) தோழி! 'நிற்மை . . . பழமொழி' இன்று பொய்த்தன்றுகொல்! பெருங்காட்டிலே, நாயிற்மீன் உருப்பு அவிப்ப வீற்கள், சுழன்றுவரு கோடை யால் ஏருங்கையின் பன்மலர் ஆலியின் உதிரும் பன்மலி யிறுத்தோர்க்கு யாம் முனிதகு பண்பு செய்தல்ஓ இலம்.

மழவர், மண்ணெறி நெடுகோல் வில்லோடு பற்றி, கொலை, எதி, கவர்ந்த கொள்ளையர் இளந்திரை பெயர்க்கும் பெருங்காடு என்க.

(வி - ரை.) வாய்ப்பகை - வாயினின் றுண்டாம் பகை; இருமல்; அவரது வரவை வெளிப்படுத்தலின் பகை எவ்வூர். நுரை - வெண்ணெய். பறைய - கழல வென்றுமாம். கன்றுடைக் கொள்ளையர் - கன்றினையுடைய ஆனின் கொள்ளையர் என்க. விசும்பிற்கு ஓடம் - விசும்பாகிய கடலின்கண் ஓடம்; அளக்கலாகா விரிவு பற்றி விசும்பிற்குக் கடலும், அதனை ஊடறுத்துச் செல்லுதல் பற்றி ஞாயிற்றுக்கு ஓடமும் உவமையாயின. ஊரிய - ஊர்தலால். காட்டினையுடைய பன்மலிடின்கண் மலர் உதிரும் முறை யென்க. காட்டினையுடைய பன்மலியென்றலுமாம். (மலியிறந்தோர்க்கு முனிதகு பண்பு யாம் செய்திலம்; அங்ஙனமாகவும் அவர் வரைவினை நீட்டிக்கச் செய்து நம்மை வருத்துதலின் 'நன்று செய் மருங்கில் தீது இல்' என்னும் பழமொழி இன்று பொய்த்தது போலும் எனக் கிழத்தி கவன்று கூறினளென்க.) 'நன்று செய் மருங்கில்' என்றமையால் இவள் இயற்கைப் புணர்ச்சிக் காலத்துத் தலைவற்கு இன்பம் விளைத்தாளென்பது பெறும். தோழி கூற்றுயினும் பொருளிதுவே.

---

102. குறிஞ்சி

[இரவுக் குறிக்கண் சிறைப்புறமாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைமகள் சொல்லியது.]

உளைமாள் துப்பின் ஒங்குநிலைப் பெரும்புனத்துக்
கழுநிற் கானவன் பிழிமகிழ்ந்து வதிந்தென
உரைத்த சந்நிவ் ஊரல் இருங்கதுப்
பைதுவரல் அசைவளி யாற்றக் கைபெயரா
ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றெருய்யென
மறம்புகல் மழகளி றுறங்கும் நாடன்
ஆர மார்பின் அருஞ்சிமி ருர்ப்பத்
தாரன் கண்ணியன் எஃகுடை வலத்தன்
காவலர் அறிதல் ஓம்பிப் பையென
வீழாக் கதவம் அசையினன் புகுதந்
துயங்குபடர் அகல முயங்கித் தோள்மணந்
நின்சொல் லலைஇப் பெயர்ந்தனன் தோழி

இன்றவன் கொல்லோ கண்டிரு மற்றவன்
நல்காமையின் அம்ப லாகி
ஒருங்குவந் துவக்கும் பண்பின்
இருஞ்சூழ் ஒதி ஒண்ணுதல் பசப்பே.

—1மதுரை இளம்பாலாசிரியன் சேந்தங்கூத்தன்.

(சொ - ள்.) கரு. தோழி -,

க—கூ. உளைமான் துப்பின் - சிங்கம் போலும் வலியினையுய், நினைப் பெரும் புனத்து ஓங்கு கழுநில் - பெரிய தினைப்புனத்தில் ஓங்கிய பரணின்கண்ணே, கானவன் பிழி மகிழ்ந்து வந்தென - கானவன் கள்ளுண்டு களித்து இருந்தவனாக, உறைத்த சந்தின் ஊரல் இரும் கதுப்பு - பூசிய மயிர்ச் சாந்தினையுடைய பரந்த கரிய காற்றுப் புகுந்து புலர்த்த, ஒலியல் வார் மயிர் கை பெயரா உளரி னள் - தழைத்து நீண்ட அக் கூந்தலைத் தன் கையாற் பெயர்த்துக் கோதிக் கொண்டு, கொடிச்சி - அவன் மனைவி, பெருவரை மருங் கில் - அப் பெரிய வரையின் பக்கத்தே, குறிஞ்சி பாட - குறிஞ்சிப் பண்ணைப் பாடாநிற்க, குரலும் கொள்ளாது - தான் கொண்ட நினைக் கருநிலையும் உட்கொள்ளாது, நிலையினும் பெயராது - நின்ற நிலையினின்றும் அகலாது, படாஅப் பைங்கண் பாடுபெற்ற - துயில் வரப்பெருத அழகிய கண் துயில்வரப் பெற்று, மறம் புகல் மழ களிறு ஒய்யென உறங்கும் நாடன் - வீரத்தினை விரும்பிய இளைய களிறு விரைந்து தூங்கும் நாட்டையுடையனாகிய நம் தலைவன்,

க0—ரு. ஆரம் மார்பின் அரி ஞிமிறு ஆர்ப்ப - சந்தனம் பூசிய தனது மார்பின்கண்ணே அழகிய வண்டுகள் ஒலிப்ப, தாரன் கண் ணியன் எஃகு உடை வலத்தன் - தாரனும் கண்ணியனும் வேல் பொருந்திய வலக்கையையுடையவனுமாகி, காவலர் அறிதல் ஓம்பி - காவலாளர் அறிதலைப் பரிகரித்து, பையென வீழாக் கதவம் அசை யினன் புகுதந்து - தாழ் வீழ்த்தாத கதவினருகே தங்கி மெல்லெனப் புகுந்து, உயங்கு படர் அகல முயங்கித் தோள் மணந்து - வருந்தும் துன்பம் நீங்க அணைத்துத் தோளினைக் கூடி, இன்சொல் அளைஇப் பெயர்ந்தனன் - இன் சொற்களைக் கலந்து பேசிச் சென்றனன்; (அங்ஙனமாகவும் இப்பால்,)

கசு—கூ. இன்று அவன் நல்காமையின் - அவன் இன்று ஒரு நாள் வந்து அருள் செய்யாமையின், ஒருங்கு வந்து அம்பல் ஆகி - ஒருங்கே வந்து அலர் ஆகுமாறு, உவக்கும் பண்பின் - மகிழ்ச்சியை விளைவிக்கும் இயல்பினையுடைய, இருஞ் சூழ் ஒதி ஒண் நுதல் பசப்பு - கரிய கூந்தலாற் சூழப்பட்ட ஒள்ளிய நெற்றியின் பசப்பினை, எவன் கொல்லோ கண்டிகும் - நாம் கண்டது என்னையோ.

(முடிபு) தோழி! கானவன் பிழி மகிழ்ந்து வந்தென, கொடிச்சி குறிஞ்சி பாட, களிறு கண்பாடு பெற்று உறங்கும் நாடன், முயங்கித் தோள் மணந்து இன்

(பாடம்) 1. மதுரைப் பாலாசிரியன்.

சொல் அரிதுப் பெயர்த்தனன்; இன்று அவன் நல்காமையின், அம்பல் ஆக. நுனிடத்துப் பசப்பிரோ எவன்கொல் கண்டிரும்?

(வி-ரை.) உரோமான்-பிடரி மயிரினையுடைய விலங்கு; சிங்கம். பிழி - கள். பிழியப்படுவது என்னும் பொருட்டு. பாட - பாடுதலால். பாடுதலாற் கொள்ளாது பெயராது உறங்கும் என்க. தார்-மார்பிற் சூடுவது. கண்ணி - தலையிற் சூடுவது. அறிதல் ஒம்பி - அறியாதபடி பாதுகாத்து. மற்று, விரைமாற்று. அம்பல் ஆதி: அம்பல் ஆக எனத் திரிக்க. உவக்கும் பண்பின் ஒதி என்க; நுதல் என்றலுமாம். இவரி ஒதி என்பதனை ஆகுபெயராகக் கொண்டு, தோழி, ஒதி என விளியாக்கலுமாம். இன்று ஒரு நாள் அருள் செய்யாமையால், நெற்றியில் பசப்பு உண்டாயது என்னை என்றபடி.

(உ-றை) (கொடிச்சி, கானவனுக்கு இன்பம் உண்டாகப் பாடிய குறிஞ்சிப் பண், யானையைத் தினை யுண்ணுமற் செய்ததன்றி, பசி ஒரு புறம் நலிய, அதனை உறங்கவும் செய்ததுபோல, அம்பற் பெண்டிர், தாய்க்கு உரைத்திய அலர், நலிவன் தலைவியை நுகராமற் செய்ததன்றி, வேட்கை ஒருபுறம் நலிய, அவன் வாராதே புறத்தே அயர்ந்திருக்கவும் செய்தது என்க.)

(மே-ள்.) [1] இரவுக்குறியே ... மனையகம் புகாக் காலையான' என்னுஞ் சூத்திரத்து இச் செய்யுளைக் கூறி, இது மனையகம் புக்கது என்றுரைத்தனர் நச்.

---

103. பாலை

[தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொற்றது.]

நிழலுறு நனந்தலை யெழாலேறு குறித்த
கதிர்த்த சென்னி நுனைங்குசெந் நாவின்
விதிர்த்த போலும் அந்நுண் பல்பொறிக்
காமர் சேவல் ஏமஞ் சேப்ப
முளியரில் புலம்பப் போகி முனை அது
முரம்படைந் திருந்த மூரி மன்றத்
தகர்பார்த் தல்கும் ஆகெழு நிறுகுடி
உறையுநர் போகிய வோங்குநிலை வியன்நகர்[2]
இறைநிழல் ஒருசிறைப் புலம்பயா உயிர்க்கும்
வெம்முனை யருஞ்சுரம் நீந்தித் தம்வயின்
சுன்றுவினை மருங்கின் மீண்டோர் மன்னென
நள்ளென் யாமத் துயவெந் துணை யாக
நம்மொடு பசலை நோன்று நம்மொடு

---

1. தொல். களவி. ச0. (பாடம்) 2. வியன் மனை.

தானே[1] சென்ற நலனும்
கரு நல்கார் கொல்லோ நாம் நயந்தி னேரே.

—காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்.

(சொ - ள்.) கரு. (தோழி), நாம் நயந்திசினேர் - நம்மால் விரும்பப்பட்ட தலைவர்,

எ—று. நிழல் அறு நனந்தலை - நிழலற்ற அகன்ற பாலை நிலத்தே, எழால் ஏறு குறித்த - புல்லாற்றிரை எற்றுதல் குறிக்கப்பட்ட, கதிர்த்த சென்னி - பெரிய தலையினையும், நுணங்கு செந் நாவின் - நுண்ணிய சிலந்த நாவினையும், விதிர்த்த போலும் அம் நுண் பல் முடைய, காமர் சேவல் - அழகிய குறும்பூழ்ச் சேவல், ஏமம் சேப்ப - பாதுகாவலான இடத்திற் சென்று தங்க எண்ணி, முளி அரில் புலம் பப் போகி - தாவிருந்த காய்ந்துபட்ட சிறு தூறு தனித்தொழியப் போய்,

கு—கo. முது அது முரம்பு அடைந்திருந்த மூரி மன்றத்து - வன்னிலத்தைச் சார்ந்திருந்த பழமையான பெரிய மன்றிலே, அதர் பார்த்து அல்கும் - (ஆறலைக்க) வழியைப் பார்த்துத் தங்கியிருக்கும், ஆ கெழு சிறுகுடி - பசுக்கள் பொருந்திய சிறார்கள்வனே, உறையுநர் போகிய ஓங்கு நிலை வியன்நகர் - உறைவோர் விட்டுப்போன இடமாகிய உயர்ந்த நிலையினையுடைய பெரிய மனையில், இறை நிழல் ஒரு சிறை - இறப்பு நிழலின் ஒரு பக்கத்தே தங்கி, புலம்பு அயா உயிர்க்கும் - தனிமையால் பெரு மூச்செறிந்திருக்கும், வெம்முனை அரும் சுரம் நீந்தி - கொடிய முனையிருப்புக்களையுடைய அரிய சுரத்தினைக் கடந்து,

கo—ரு. தம் வயின் ஈண்டு வினை மருங்கின் - தம்மிடத்து வந்துற்ற பொருளீட்டும் வினையகத்தே, மீண்டோர் என - மீண்டும் செல்லுதலுற்றாரென, நள் என் யாமத்து உயவுத் துணை ஆக - நள்ளென்ற நடு யாமத்தும் உசாவும் துணையாகும் பொருட்டு, நம்மொடு பசலை நோன்று - நம்மொடு இதுகாறும் பசலையைப் பொறுத்திருந்து இப்பொழுது, தம்மொடு தானே சென்ற நலனும் - அத் தலைவருடன் தானே வலிந்த சென்ற நம் நலனையேனும், நல்கார் கொல்லோ - நமக்கு அருளாரோ.

(முடிபு) (தோழி!) நாம் நயந்திசினேர், அருஞ்சுரம் நீந்தி, வினை மருங்கின் மீண்டோர் என நம்மொடு பசலை நோன்று தம்மொடு தானே சென்ற நலனும் நல்கார்கொல்லோ!

எழாலேறு குறித்த சேவல், ஏமம் சேப்ப, போகி, இறை நிழல் ஒரு சிறை புலம்பு அயாவுயிர்க்கும் அருஞ்சுரம் என்க.

(வி - ரை.) எழால் - புல்லாறு. ஏறு - எறிதல், வவ்வுதல்; [2]'கூருகிர்ப் பருந்தின் ஏறு குறித் தொரீஇ' என்பது காண்க. கதிர்த்த

1. காமே. 2, புறம். சக.

சென்னி - ஒளிவிடும் தலை எனலுமாம். சேவல் - சண்டுக் குறும்பூம்ச் சேவல். மீண்டோர் - மீண்டு செல்லூர். ஆகிய எனும் பாடத்திற் கும் ஆகும் பொருட் டென்பதே பொருள். நலனும் உயவுத் தணி யாக நம்மொடு பசலை நோவறிந்து, தம்மொடு தானே சென்றது; இனி, கல்காண் கொல்லோ என்று உரைத்தலுமாம். இதற்குச் சென் றது என்றது சென்ற என விகாரமாயிற்று என்க.

---

104. முல்லை

[வினை முற்றி மீளுந் தலைமகற்குத் தோழி சொல்லியது.]

வேந்துவினை முடித்த காலைத் தேம்பாய்ந்
நினவண் டார்க்குந் தண்ணறும் புறவின்
வென்வேல் இளையர் இன்புற வலவன்
வள்புவலிந் தூரின் அல்லது முள்ளூரின்
முந்நீர் மண்டிலம் ஆறி ஆற்ரு
நன்னெல்கு பூண்ட கடும்பரி நெடுந்தேர்
வீங்குவினை பொலிய ஏறிப் புதல
பூங்கொடி அவரைப் பொய்யதள் அள்ள
உளரில் வயிற்ற வெள்ளை வெண்மறி
மாழ்கி யன்ன சாழ்பெருந் தெவிய
புன்தலைச் சிருரோ டுகளி மன்றுழைக்
கலையிலை ஆரின் அங்குழை கறிக்கும்
சிறார் பலபிறக் கொழிய மாலை
இனிதுசெய் தனையால் எந்தை வாழிய
பனிவார் கண்ணள் பலபுலந் துறையும்
ஆய்தொடி யரிவை கூந்தல்
போதுகுரல் அணிய வேய்தந் தோயே.

—மதுரை மருதனிளாகனார்.

(சொ-ள்,) கூசு. எந்தை - எம் தலைவனே!

க—எ. வேந்து வினை முடித்த காலை-வேந்தன் வினையை முடித்த காலத்தே, தேம் பாய்ந்து இன வண்டு ஆர்க்கும் - திசைகள் தோறும் பறந்து கூட்டமாய வண்டுகள் ஆரவாரிக்கும், தண் நறும் புறவில் - குளிர்ந்த நறிய முல்லை நிலத்தே, வென்வேல் இளையர் இன்புற - வென்றி பொருந்திய வேலினையுடைய வீரர் இன்பம் அடைய, வல வன் வள்பு வலித்து ஊரின் அல்லது-பாகன் கடிவாளத்தினை இழுத் துப் பிடித்துச் செலுத்தின் அல்லது, முள்ளூரின் முந்நீர் மண்டிலம் ஆறி ஆற்ரு - காற்றுக்கோல் தண்டின் கடல் சூழ்ந்த உலகே ஆறி எனும் செலவிற்குப் போதாத, கடும்பரி நல்நால்கு பூண்ட நெடுந் தேர் - மிக்க வேகமுடைய நல்ல நான்கு குதிரைகள் பூட்டப்பெற்ற

ஈண்ட தேரில், வாங்கு சினை பொலிய ஏறி - வளைந்த கொடிஞ்சி பொலிய ஏறி,

எ—கூ. புதல் பூ கொடி அவரைப் பொய் அதள் அன்ன - புதல் களிற் படர்ந்த பூவையுடைய அவரைக் கொடியிலுள்ள பொய்த் தோல்போன்ற, உள்இல் வயிற்ற - உள்ளீடில்லாத வயிற்றினவும், மாழ்கி யன்ன தாழ்பெரும் செவிய - மயங்கிக் கிடந்தாலொத்த தாழ்ந்து தொங்கும் பெரிய செவியினவும் ஆகிய, வெள்ளை வெண் மறி - வெள்ளாட்டின் வெள்ளிய குட்டி, புன்தலைச் சிறுதோடு உகளி - புற்கென்ற தலையினையுடைய சிறுவர்களொடு குதித்துச் சென்று, மன்றுழைக் கலை இலை ஆரின் அம் குழை கறிக்கும் - மன்றின் கண்ணே கலையாய இலையினையுடைய ஆத்தியின் அழகிய தளிரைக் கடிக்கும், சிறு ஊர் பல பிறக்கு ஒழிய - சிறிய ஊர்கள் பல பின்னே ஒழிந்திட வந்து,

கூ—எ. மாலை - இம் மாலைக் காலத்தே, பனிவார் கண்ணள் பல புலந்து உறையும் - நீர் வடியும் கண்ணினளாய்ப் பலவற்றையும் எண்ணி வெறுத்து உறையாநிற்கும், ஆய்தொடி அரிவை - ஆராய்ந்த வளையலையுடைய தலைவி, அணிய— அணிந்துகொள்ளுமாறு, குரல் கூந்தல் - அவளுடைய கொத்தாகிய கூந்தலில், போது வேய்ந்தோய் - மலரைச் சூட்டினை (ஆகவே), இனிது செய்தனை - இனிய தொன்றைச் செய்தனையாவாய், வாழிய - நீ வாழ்வாயாக.

(முடிபு) எந்தை! வேந்து வினை முடித்த காலை, கடும்பரி நெடுந்தேர் ஏறி, சிறார் பல பிறக்கு ஒழிய (வந்து,) மாலை, புலந்து உறையும் அரிவை அணிய கூந்தல் போது வேய்ந்தோய், அதனால், இனிது செய்தனை, வாழிய!

(வி - ரை.) தேம் - திசை, [1] 'அவன் மறை தேளம் நோக்கி' என்பது காண்க; தேனுமாம். வள்பு - வார். கடிவாளம். மூள் - தாற்றுமுள். ஆநி – குதிரையின் நேரோட்டம். நால்கு – நான்கு; பெயர்த் திரிசொல் லென்பர் நச்சினார்க்கினியர்; [2] 'பால்புரை புரவி நால்குடன் பூட்டி' என்பதன் உரை காண்க. சினை - தேரின் உறுப்பாகிய கொடிஞ்சி. பொய் அதள் - உள்ளீடின்றித் தோல் மாத்திரமாயிருக்கும் காய். தலைவனை எந்தை யென்று கூறுவது, 'அன்னை யென்னை யென்றலு முளவே' என்னுஞ் சூத்திரத்து உம்மையால் தழுவப்படும். மறி, சிறுதோடுகளிக் குழை கறிக்கும் சிறார் பல பிறக்கொழிய என்றது, கார்ப் பருவத்தில், தலைவன் மீண்டு வரும் வழியானது, அவனுக்கு இன்பத்தை விளைத்து, தலைவிபால் விரைந்தேகத் தூண்டியதைக் குறித்தவாறு.

(மே - ள்.) [3] 'வெறியறி சிறப்பின்' என்னுஞ் சூத்திரத்து, வஞ்சிக் கண்ணும் பொதுவியல் வருவன உள என்று கூறி, அது 'வேந்து வினை முடித்த' என்னும் அகப்பாட்டினுள், சுட்டி ஒருவர் பெயர் கூறு வஞ்சி பொதுவியலாய் வந்தவாறு காண்க, என்றும், [4] 'வினைவயிற் பிரிந்தோன்' என்னுஞ் சூத்திரத்து, இச்செய்யுளைக்

1. அகம். சஅ. 2. பொருந. கூடு. 3. தொல். புறத். டு. 4. தொல். கற்பு. டுகூ.

காட்டி, இதனுள் விளைமுடித்த காலத் தெரிவையர் செலவிற்கேற்ப வராது கோலன்றில் உலவிறந்தன செலவிற்குப் பற்றுத குநிரைத் தேரேறி இடைச்சுரத்தில் தங்காது மாலைக்காலத்து வந்து பூச்சூட் டினை; இனிது செய்தனை; எந்தை வாழிய, எனத் தோழி கூறியவாறு காண்க என்றும் • ரைத்தனர் நச்.

---

105. பாலை

[மகட் போக்கிய தாய் சொல்லியது]

அகலறை மலர்ந்த அரும்புமுதிர் வேங்கை
ஒள்ளிலைத் தொடலை தைஇ மெல்லென
நல்வரை நாடன் தற்பா ராட்ட
யாங்குவல் லுநள்கொல் தானே தேம்பெய்து
மணிசெய் மண்டைத் நிம்பால் ஏந்தி
சுனைத் தாயர் மடுப்பவும் உண்ணாள்
நிழற்கயத் தன்ன நீள்நகர் வரைப்பின்
எம்முடைச் செல்வமும் உள்ளாள் பொய்ம்மருண்டு
பந்துபுடைப் பன்ன பாணிப் பல்லடிச்
சில்பரிக் குநிரைப் பல்வேல் மறினி
கெடலருந் துப்பின் விறல்தாழின் முடிமார்
கனையெரி நடந்த கல்காய் கானத்து
வினைவல் அம்பின் விழுத்தொடை மறவர்
தேம்பிழி நறுங்கள் மகிழின் முனைகடந்து
விங்குமென் சுரைய ஏற்றினைத் தருஉம்
முகைதலை நிறைந்த வேனில்
பகைதலை மணந்த பல்லதர்ச் செலவே.

—தாயங்கண்ணனார்.

(சொ - ள்) சு—அ. மணி செய் மண்டைத் நிம்பால் தேம் பெய்து ஏந்தி - மணிகளிழைத்த பொற்கலத்தில் இனிய பாலொடு தேன் கலந்து ஏந்தி, சுனைத் தாயர் மடுப்பவும் உண்ணாள் - செவிலித் தாயர் ஊட்டவும் உண்ணாளாய என் மகள், நிழற் கயத்து அன்ன நீள் நகர் வரைப்பில் - நிழற்கண் ணுள்ள குளம்போலக் குளிர்ந்த நீண்ட மாளிகை யிடத்தேயுள்ள, எம் உடைச் செல்வமும் உள்ளாள்-எமது பெரிய செல்வத்தையும் நினையாளாய்,

க—கூ. அகல் அறை மலர்ந்த அரும்பு முதிர் வேங்கை - அகன்ற பாறையில் அரும்பு மூதிர்ந்து மலர்ந்த வேங்கையின், ஒள் இலைத் தொடலை தைஇ - ஒள்ளிய இலை விராவிய, மாலையினை அணிந்து, மெல்லென - மெத்தென, நல்வரை நாடன் தன் பாராட்ட - நல்ல மலை நாடனுடைய தலைவன் தன்னைப் பாராட்டி வர,

அ. பொய் மருண்டு - அப் பொய்யை மெய்யென மயங்கி,

கூ—கஎ. பந்து புடைப்பன்ன பாணிப் பல்லடி - பந்து புடைக்கப்பட்டு எழுவதொத்த காளத்துடன் கூடிய பல அடியிட்டினையும், சில் பரி - சிலவகைச் செலவினையுமுடைய, குதிரை-குதிரைகளையும், எழினி - கெடுதலில்லாத வலிபொருந்திய எழினி யென்பான், விடு தொழில் முடிமார் - ஏவிவிட்ட தொழிலை முடிக்கும்பொருட்டு, கரி நடந்த கல்காய் கானத்து - மிக்க எரி பரக்கலின் பாறைகள் காய்ந்திருக்கும் காட்டின்கண், விசி வல் அம்பின் விழுத்தொடை மறவர் - போர்த் திறம் வாய்ந்த அம்பினது தப்பாத தொடுத்தலையுடைய வீரர்கள், தெம்பிழி நறுங் கள் மகிழின் - பிழிந்த தெறல் சமைந்த நறிய கள்ளுண்ட மகிழ்ச்சியினால், முனை கடந்து - பகைவர் போர் முனையை வென்று, வீங்கு மென் சுரைய ஏறு இனம் தருஉம் - பருத்த மெல்லிய மடியினையுடையவும் ஏறுகளோடு கூடியவுமாகிய ஆனினத்தைக் கொணர்ந்து தரும், பகை தலை மணந்த - பகைவருடன் பொருதல் கூடிய, பல் அதர் - பலவாகிய நெறிகளில், முகை தலை திறந்த வேனில் - மலை முழைஞ்சுகள் வெடித்தற் கேதுவாகிய வேனிற் காலத்தே, செலவு - செல்லுதலை,

ச. யாங்கு வல்லுநள் கொல் - எங்ஙனம் வல்லள் ஆயினளோ.

(முடிபு) சுனைத்தாயர் நீம்பால் தேம் பெய்து மடுப்பவும் உண்ணுள், எம் முடைச் செல்வமும் உள்ளாள், வரை நாடன் தற் பாராட்ட, பொய் மருண்டு பகை தலைமணந்த பல்லதரில், வேனிலில் செலவு யாங்கு வல்லுநள் கொல்.

எழினி விடு தொழில் முடிமார் மறவர், முனை கடந்து ஏற்றினம் தருஉம் பகை தலை மணந்த பல்லதர் என்க.

(வி - ரை.) மெல்லென என்றதனைச் செலவு என்பதனோடு இயைத்து உரைத்தலுமாம். நற்றாயின் வேறு படுக்கச் செவிலியை, சுனைத் தாயர் என்றார். சில்பரி - ஆதி, மண்டிலம் முதலிய செலவு வகை. விடுதொழில் - ஏவிய தொழில்; பகைவர் - ஆனினத்தைக் கவர்ந்து வரும் தொழில்; பகைவர் கவர்ந்த தன்து நிரையை மீட்கும் தொழிலுமாம். கள் மகிழின் - கள்ளையுண்டு மகிழ்ந்தால் என்றுமாம். வேற்று இனம் எனப் பிரித்து, பகைப் புலத்து இனம் என்றலுமாம். முகை - மலை முழைஞ்சு. ஏற்றினம் தருஉம் அதர், பகை தலைமணந்த அதர் எனத் தனித்தனி கூட்டுக.

---

106. மருதம்

[தலைமகள் தன்னைப் புறங்கூறினாளாகக் கேட்ட பரத்தை அவட்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது.]

எரியகைந் தன்ன தாமரைப் பழனத்துப்
பொரியகைந் தன்ன பொங்குபல சிறுமீன்
வெறிகொள் பாசடை யுணீஇ யியர் வைப்பயப்
பறைதபு முதுநிரல் அசையுவந் திருக்குந்

துறைகே ழூரன் பெண்டிர் கொழுநனை
நம்மொடு புலக்கும் என்ப நாமது
செய்யா மாயி னும்மை யுய்யா மையின்
செறிதொடி தெளிர்ப்ப வீசி நிறுநல னுண்டு
உலமந்து வருகம் சென்மோ தோழி
யொளிறுவாட் டானைக் கொற்றச் செழியன்
வெளிறில் கற்பின் மண்டமர் அடுதொறும்
களிறுபெறு வல்சிப் பாணன் எறியும்
தண்ணுமைக் கண்ணின் அலைஇயர்
தன் வயி றே.

—ஆலங்குடி வங்கனார்.

(சொ - ள்.) தோழி -,

க—கூ. எரி அகைந்தன்ன நாமரைப் பழனத்து - தீ கிளைத் தெரிந் தாற் போலும் தாமரைப் பூக்களையுடைய வயலில், பொரி அகைந் தன்ன பொங்கு பலை சிறுமீன் உணீஇயர் - நெற்பொரி முதலியன தெறித்தாற் போன்று விளங்கும் பல சிறிய மீன்களை உண்ணும் பொருட்டு, வெறிகொள் பாசடை - மணங்கொண்ட பசிய இலையில், பறைதபு முதுசிரல் - பறத்தல் ஒழிந்த முதிய சிச்சிலிப் பறவை, பைப்பய அசைபு வந்திருக்கும் - மெல்ல மெல்ல அசைந்து வந்திருக் கும், துறைகேழ் ஊரன் பெண்டு - துறை பொருந்திய ஊரனது மனைவி, தன் கொழுநனை நம்மொடு புலக்கும் என்ப - தன் கணவனை நம்மொடு கூட்டி வெறுத்துப் பேசுகின்றாள் என்பர்;

கூ—எ. நாம் அது செய்யாம் ஆயினும் உய்யாமையின் - நாம் அதற்கேதுவாய தொன்றும் செய்யாம் ஆயினும் அவள் கூறும் பழி யினின்றும் நீங்க மாட்டாமையின்,

க0—ங. ஒளிறு வாள் தானை கொற்றச் செழியன் - விளங்கும் வாட்படையினையுடைய வெற்றி பொருந்திய பாண்டியன், வெளிறு இல் கற்பின் மண்டு அமர் அடுதொறும் - குற்றமில்லாத படைப் பயிற்சியொடு கூடி நெருங்கிய போரில் அடுந்தோறும், களிறு பெறு வல்சிப் பாணன் எறியும் - களிறாகிய உணவினைப் பெறும் பாணன் அடிக்கும், தண்ணுமைக் கண்ணின் - மத்தளத்தின் கண்போல, தன் வயிறு அலைஇயர் - அவள் தன் வயிற்றை அலைக்கும்படி,

அ—கூ. செறி தொடி தெளிர்ப்ப வீசி - செறிந்த வளை ஒலித்தி டக் கையை வீசி, சிறிது அவண் உலமந்து வருகம் - சிறிது பொழுது அவ்விடத்தே உலாவி வருவோம், சென்மோ - வருவாயாக.

(முடிபு) தோழி! துறை கேழ் ஊரன் பெண்டு, தன் கொழுநனை நம்மொடு புலக்கும் என்ப; நாம் அது செய்யாமாயினும் உய்யாமையின், செழியன் அமர் அடுதொறும் பாணன் எறியும் தண்ணுமைக் கண்ணின், தன் வயிறு அலைஇயர், சிறிது அவண் உலமந்து வருகம், சென்மோ.

(வி - ரை.) தெளிர்த்தல்-ஒலித்தல், சென்மோ-வாராய் என்ற படி. மோ, முன்னிலை யசை. கற்பு - கல்வி, படைக்கலப் பயிற்சி.

(உ - றை.) முதுமையால் பறக்கமாட்டாத சிறல், மீதுக்கு அண்மையிற் பாசடை மீறிருந்தும் அதனைக் கவரமாட்டாமலும் ஏனை யிளஞ் சிறல் கவர்தற்குப் பொருமலுமிருந்தல் போல், முதுமை யால் எழுச்சி குன்றிய தலைவி, தன் மனையகத்தே கலைவனைக்கொண் டிருந்தும் அவனை வளைத்துக்கொள்ள மாட்டாமலும், ஏனை யிளம் பருவமுடையார் தழுவுதற்குப் பொருமலும் இருக்கின்றுள் என்பது.)

(மே - ள்.) [1]'பரத்தை வாயில்' என்னுஞ் சூத்திரத்து, 'செறி தோழி' என்றக்கால் தலைவிக்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லிக் கூறல் வேண்டு மென்பது என்றனர் போர.

---

107. பாலை

[தோழி தலைமகள் குறிப்பறிந்து வந்து தலைமகற்குச் சொல்லி யது.]

நீசெல வயரக் கேட்டொறும் பலநினைந்
தன்பின் நெஞ்சத் தயாஅப்பொறை மெலிந்த
என்னகத் திடும்பை கூஎமார் நின்னெடு
கருங்கல் வியலறைக் கிடப்பி வயிறுநின்
இரும்புலி துறந்த ஏற்றுமான் உணங்கல்
நெறிசெல் வம்பலர் உவந்தனர் ஆங்கண்
ஓலிகமழ நெல்லின் அரிசியோ டோராங்
காரிலைப் பள்ளி அளைபெய் தட்ட
வானினம் உருக்கிய வாஅல் வெண்சோறு
புகரைத் தேக்கின் அகவிலை மாந்தும்
கல்லா நீள்மொழிக் கருநாய் வடுகர்
வல்லாண் அருமுனை நீந்தி அல்லாந்து
உகுமுரை றஞ்சும் ஒருகாற் பட்டத்
தின்ன ஏற்றத் திழுக்கி முடங்கூர்ந்
தொருதனித் தொழிந்த உரனுடை நோன்பக
டுங்குழை இருப்பை அறைவாய் வான்புழல்
புல்லுளைச் சிறுஅர் வில்லின் நீக்கி
மரைகடிந் தூட்டும் வரையகச் சிறார்
மாலை இன்றுணை யாகிக் காலைப்
பசுநனை நறுவீப் பருஉப்பர நுறைப்ப
மனமனை கமழுங் கானம்
துணையி ரோதியென் தோழியும் வருமே.

—காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்.

(சொ - ள்.) தலைவ, உஉ. துணை ஈர் ஒரி என் தோழியும் — இடையொத்த குளிர்ந்த கூந்தலையுடைய என் தோழியும்.

1. தொல். செய். கக.

உஉசு

க—ங. நீ செலவு அயரக் கேட்டொறும் - நீ உடன்கொண்டு செல்லுதலே விரும்ப அவ்விருப்பினைக் கேட்குந்தொறும், அன்பின் நெஞ்சத்துப் பல நினைந்து - அன்பினையுடைய நெஞ்சத்து (முன்பு நிகழ்ந்த) பலவற்றையும் எண்ணி (அதனொடு), அயாஅப் பொறை மெலிந்தன் அகத்து இடும்பை கூறுமார் - வருத்தத்தைத் தாங்குவ தால் மெலிந்துள என் நெஞ்சத்துள்ள துன்பினை நீக்கும் பொருட்டு,

ச—கஉ. இரும்புலி கருங்கல் வியல் அறை கிடப்பி-பெரிய புலி யானது கரிய கற்களையுடைய அகன்ற பாறையில் கிடத்தி, வயிறு தின்று துறந்த ஏற்றுமான் உணங்கல் - வயிறு நிறையத் தின்று விட்டுப் போன மானேற்றின் காய்ந்த தசையை, நெறி செல் வம் பலர் - வழிச் செல்வோராய புதியர், உவந்தனர் ஆங்கண் - கண்டு மகிழ்ந்தனராய் (அதனை) அவ்விடத்தே, ஒலி கழை நெல்லின் அரிசி யொடு ஓராங்கு - தழைத்த மூங்கிலின் விளைந்த நெல்லின் அரிசி யுடன் ஒருங்கே கூட்டி, ஆவிலைப் பள்ளி அமைபெய்து அட்ட - ஆயர் சேரியிலுள்ள தயிரினைப் பெய்து சமைத்த, வால் நிணம் உருக்கிய் வால் வெண் சோறு - வெள்ளிய நிணத்தினை உருகச்செய்த மிக வெள்ளிய சோற்றினை, புகர் அரைத் தேக்கின் அகல் இலை மாந்தும் - புள்ளி பொருந்திய அரையினையுடைய தேக்க மரத்தினது அகன்ற இலையில் வைத்து உண்ணுவதும், கல்லா நீள்மொழிக் கத நாய் வடு கர் - கல்வியில்லாத நெடுமொழி கூறும் சினம் மிக்க நாயையுடைய வடுகரது, வல் ஆண் அருமுனை - வலிய ஆண்மை விளங்கும் அரிய போர் முனையாவதுமாகிய சுரத்தினை, நீந்தி - கடந்து சென்று,

ஙஎ—டு. உகு மண் ஊறு அஞ்சும் ஒரு கால் பட்டத்து - இடிந்து விழும் மண்ணின் இடையூற்றினை அஞ்சுவதான ஒரே துறையினை யுடைய ஓடையிலுள்ள, இன்று ஏற்றத்து இழுக்கி முடம் கூர்ந்து- இன்னுதாகிய ஏற்றங்கொண்ட நெறியில் வழுக்கி விழுந்து மிக்க முடம்பட்டு, ஒரு தனித்து ஒழிந்த உரன் உடை நோன் பகடு - தன் னந் தனியே ஒழிந்து கிடக்கும் உடல் வலி வாய்ந்த பொறுக்குந் தன்மையுடைய பகட்டினை,

ஙசு—உக. புல் உளைச் சிறுர் - புல்லிய குடுமியினையுடைய சிறுவர், அம் குழை இருப்பை அறை வாய் வான் புழல் - அழகிய தளிரையுடைய இருப்பையின் அற்ற வாயினையும் வெள்ளிய துளையினையுமுடைய பூவை, வில்லின் நீக்கி - வில்லினால் உதிர்த்து, மரை கடிந்து ஊட்டும் - அதனைத் தின்னவரும் மரைமானைத் துரந்து உண்பிக்கும், வரை அகச் சிறார் - வரையிடத்தே யுள்ள சிறிய ஊர்களில், மாலை இன்துணை ஆகி - மாலைக் காலத்தே தினைக்கு இனிய துணையாகித் தங்கி, காலை பசு நனை வி - காலைப் போதில் புதிய தேனையுடைய நறிய பூக்கள், பருஉப் பரல் உறைப்ப - பெரிய பாறைக் கற்களில் உதிர்ந்து கிடத்தலான், மண மலி கமழும் கானம் - மணம் நிகழும் மலை போன்று நாறுங் காட்டில்,

ங. நின்னொடு - நின்னுடன்,

உஉ. வரும் - வாரா நிற்பள்.

(முடிபு) தலைவ! நீ செலவு அயரக் கேட்டொறும் என் தோழியும், பல நினைந்து, என்னகந்து இடும்பை கூர்மார், வம்பலர் வெண்சோறு மாந்துவதும், வடுகர் அருமுனையாவது மாகிய கூந்தலை நீந்தி வரையகச் சேரர் மாலை இன்றுணையாகி, காலை மணமலை கமழும் காளம் நின்னெடு வரும்.

(வி - ரை.) வயிறு தின்று - வயிறு நிறையத் தின்று. அட்ட வெண்சோறு எனவும், வால் நிண முருக்கிய வெண்சோறு எனவும் கூட்டுக. அடுதலால் நிணம் உருகிய தென்க. வம்பலர் வெண் சோறு மாந்தும் முனை எனவும், வடுகர் அடுமுனை எனவும் தனித் தனி இயையும். பகடு - பகட்டினை. ஒருகாற் பட்டம் - ஒரே துறை யினையுடைய ஓடை. புழல், பூவிற்கு ஆகுபெயர். மாலை இன் துணை யாகி என்பதற்கு - மாலைப் பொழுதில் நீ இனிய துணை யாகை யாலே என்றுரைத்தலுமாம். இதற்கு ஆகி என்றதனை ஆக எனத் திரிக்க.

(உ - றை.) ஓடையிலே நீருண்டு அதினின்றும் ஏறமாட்டாத முடம்பட்ட உரலுடைப் பகட்டிற்குச் சிறுர் இருப்பைப் பூவை மரத்தினின்றும் பிரித்து மனையினைக் கடிந்து ஊட்டினாற்போல, களவொழுக்கமாகிய இன்பத்தை நுகர்ந்து, இவ்வொழுக்கத்தினின் றும் நீங்கி வரைவொடு புகமாட்டாது வருந்தும் நினக்குக் குற்றே வல் மகளாகிய யான் தலைமகனைச் சுற்றத்தினின்றும் பிரித்து தொது மலர் வரைவினை மாற்றி உட்டன்போக்கிற்கு ஒருப்படுத்தானின்றேன் என்பது.

---

108. குறிஞ்சி

[தலைமகன் சிறப்புறத்தானுகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.]

புணர்ந்தோர் புன்கண் அருளலும் உணர்ந்தோர்க்
கொத்தன்று மன்னில் எவன்கொல் முத்தம்
வரைமுதல் நிகந்த யவை[1]போல் யானைப்
புகர்முகம் பொருத புதுநீர் ஆலி
பளிங்குசொரி வதுபோல் பாறை வரிப்பக்
கார்கூதம் பட்ட கண்ணகன் விசும்பின்
விடுபொறி யெரிமுயில் கொடிபட மின்னிப்
படுமழை பொழிந்த பானட் கங்குல்
ஆருயிர்த் துப்பில் கோண்மா வழங்கும்
இருளிடைத் தமியன் வருதல் யாவதும்
ஆருளான் வாழி தோழி அல்கல்
விரவுப்பொறி மஞ்ஞை வெரிஇ யரவின்
அணங்குடை யருந்தலை பைவிரிப் பவைபோல்
காயா மெல்லினை தோய நீடிப்
பஃறுடுப் பெடுத்த அலங்குகுலைக் காந்தள்
அலிமலர் நறுந்தா தூதுந் தும்பி

பாடம். 1. வரை மிசைச் சிதறியவை.

உஉஅ

கையாடு வட்டில் தோன்றும்
மையாடு சென்னிய மலிநிழ வோனே.
—தங்காற் பொற்கொல்லனார்.

(சொ - ள்.) கக. தோழி வாழி—, கஉ—அ. விரவுப் பொறி மஞ்ஞை வெரீஇ - புள்ளிகள் விரவிய மயிலைக் கண்டஞ்சி, அரவின் அணங்குடை அரும் தலை பை விரிப் பவை போல் - பாம்பின் வருத்தத்தைச் செய்யும் அரிய நஞ்சினை யுடைய தலைகள் படத்தை விரிப்பன போல, காயா மென்சினை தோய - காயாவின் மெல்லிய சினைகள் தோய, நீடிப் பல் துடுப்பு எடுத்த அலங்கு குலைக் காந்தள் அணி மலர் - நீண்டு தாக்கிய பல துடுப்புகள் போலும் அசையும் குலைகளையுடைய காந்தளது அழ கிய மலரின், நறும் தாது உணீஇயும் தும்பி - நறிய தாதினைக் குடைந் துண்ணும் வண்டுகள், கை ஆடு வட்டில் தோன்றும் - கையின்கண் வைத்து ஆடும் வட்டுப்போலத் தோன்றும், மை ஆடு சென்னிய மலி கிழவோன் - மேகம் தவழும் சிகரங்களையுடைய மலைக்கு உரிய னாகிய நம் தலைவன்.

உ—கக. முத்தம் வரை முதல் சிதறியவை போல் - மலைத்தலை யில் முத்துக்கள் சிதறியவை போல் விளங்கும், யானைப் புகர் முகம் பொருத புது நீர் ஆலி - யானையின் புள்ளியினையுடைய முகத்தில் மோதி வீழ்ந்த புதிய ஆலங் கட்டி, பளிங்கு சொரிவது போல் பாறை வரிப்ப-பளிங்கினைச் சொரிவது போலப் பாறையில் வீழ்ந்து கோலம் செய்ய, கார் கதம் பட்ட கண் அகல் விசும்பில் - முகில்கள் சினந்தெழுந்தனவாய இடமகன்ற வானில், விடு பொறி ஒருகிழி யின் கொடி பட மின்னி - பொறிவிடுகின்ற கொள்ளி போல் ஒழுங்குபட மின்னி, படு மழை பொழிந்த பானாள் கங்குல் - மிக்க மழையைச் சொரிந்த நடு நாளாகிய. இரவில், ஆர் உயிர் துப்பின் - அரிய உயிர்ப் பொருளாகிய உணவினையுடைய, கோண்மா வழங் கும் இருளிடை - கொல்லும் தொழிலுடைய விலங்குகள் திரியும் இருளிடையே, அல்கல் தமியன் வருதல் யாவதும் அருளான் - நாடோறும் தனியே வருதலானே சிறிதும் அருள் செய்கிலன் ; னல்லன் :

கூ—உ. புணர்ந்தோர் புன்கண் அருளலும் - தம்மைச் சார்ந்தோ ரது துன்பினைப் போக்கியருளலும், உணர்ந்தோர்க்கு ஒத்தன்று - அறிவுடையார்க்குப் பொருந்தியதாகுமே, மன் - நம் தலைவன் அங் ஙனம் செய்திலன், எவன்கொல் - என்னையோ ?

(முடிபு) மலை மொழிவாழையை நம் தலைவன் பானாட் கங்குல் கோண்மா வழங் கும் இருளிடை அல்கல் தமியன் வருதலானே யாவதும் அருளான் ; புணர்ந் தோர் புன்கண் அருளலும் உணர்ந்தோர்க்கு ஒத்தன்று மன் ; எவன்கொல் ?

(வி - ரை.) புன்கண் அருளலும் - புன்கண்ணை நீக்கியருளலும் என்க ; மன், ஒழியிசை. வரையிடத்துச் சிதறிய முத்தம் போல் யானை முகத்திற் பொருத ஆலி என்பதும், மஞ்ஞை வெரீஇ அரவின்

தலை விரிப்பவை போல் காயா மென் சினை தோய நீடி எடுத்த குலைக் காந்தள் என்பதும், கை யாடு வட்டில் போலக் காந்தள் மலரை யூதும் தும்பி தோன்றும் என்பதும் இரட்டைக் கிளவி யாகிய உவமங்களாம். ஆலி - நீர்க்கட்டி; நீர் என முன் வந்தமை யின் சண்டுப் பெயர்மாத்திரையாக நின்றது. முகில் குமுறி எழுந்ததைக் கதம்பட்டது என்றார். கோண்மா - சிங்கம் முதலி யன; ஒருவகை விலங்குமாம். என்ன? 'அச்சப் பொருளாவன - வள்ளெயிற் றரிமா வாள்வரி வேங்கை, முள்ளெயிற் றாவே முழங் கழற் செந்தீ, சற்று மதமா ஏக பாதம், கூற்றங் கோண்மா குன் றுறை யகுணம் என்று சொல்லப்பட்டன போல்வன' என்றார் பேராசிரியர் ஆகலின். வருதல் - வருதலால் என உருபு விரிக்க. காயாவின் மென்சினைக்கு மஞ்ஞையும், தாக்கிய காந்தட் குலைக்குப் பாம்பு படம் விரித்ததும் உவமம். தும்பிக்கு வட்டு, வண்ணம், வடிவு, தொழில் என்னும் மூன்றும் பற்றிய உவமையாம்.

(உ - றை.) கண்டார் விரும்பத்தக்க காந்தட்குலை அஞ்சத்தக்க அரவின் படம் போலும் என்றது, நம்மால் விரும்பத்தக்க தலைவன் வருகை, ஆற்றது தீமையால், நமக்கு அச்சத்தை விளைவிக்கின்றது என்று தலைவன் உணருமாறு தோழி கூறியபடியாம்.

(மே - ள்.) [1]'விரவியும் வருஉம் மரபின வென்ப' என்னும் சூத்திரத்து, 'காயா மென்சினை ... மலைகிழ வோனே' என்புழி, ஆடுதற்றொழில்பற்றியும், வடிவுபற்றியும், வண்ணம்பற்றியும் (உவமை) வந்தது என்பர் பேரா.

× 109. பாலை

[இடைச்சுரத்துத் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

பல்லிதழ் மென்மலர் உண்கண் நல்யாழ்
நரம்பிசைத் தன்ன இன்சீர்க் கிளவி
நலநல் கொருத்தி இருந்த ஊரே
கோடுழு களிற்றின் தொழுதி யிண்டிக்
5 காடுகால் யாத்த நீடுமரச் சோலை
விழைவெளில் ஆடுங் கழைவளர் நனந்தலை
[2]வென்றுயர் யம்பின் விசையிட வீழ்ந்தோர்
என்றுவரம் பறியா உவலிடு பதுக்கைச்
சுரங்கெழு கவலை கோட்பாற் பட்டென
10 வழங்குநர் மடிந்த அந்தம் இறந்தோர்
கைப்பொருள் இல்லை யாயினும் [3]மெய்க்கொண்
டின்னுயிர் செகாஅர் விட்டதன் நப்பற்குப்
பெருங்களிற்று மருப்பொடு வியன்நகர் இறுக்கும்

---

1. தொல் உவம. கூ. (பாடம்) 2. வெற்றுயர். 3. மெய்கட் டின்னுயிர்.

அறனில் வேந்தர் ஆளும்
கடு வறுமுறு குன்றம் பலவிலங் கினவே.
—கடுந்தொடைக் காவினர்.

(சொ - ள்.) க—கூ. பல் இதழ் மெல் மலர் உண் கண் - பல இதழ் களையுடைய மெல்லிய மலர் போன்ற மையுண்ட கண்ணினையும், நல்யாழ் நரம்பு இசைத்தன்ன இன் தீம் கிளவி - நல்ல யாழின் நரம்பு ஒலிப்பது போன்ற மிக இனிய மொழியினையும் உடைய, நலம் நல்கு ஒருத்தி - நலனெல்லாம் தரவல்ல ஒப்பற்ற நம் காதலி, இருந்த ஊர் - இருக்கும் ஊரானது,

சா—கo. கோடு உழு களிற்றின் தொழுதி சுண்டி - தம் கொம்பு முதல் பகையாயவற்றைக் குத்தி உழும் களிற்றியானைகளின் கூட்டம் கூட, காடு கால் யாத்த நீடு மரச்சோலை - காடாகப் பரந்த நீண்ட மரங்களையுடைய சோலையிலுள்ள, விழை வெளில் ஆடும் கழை வளர் நனந்தலை - ஒன்றை யொன்று விழைந்த அணில்கள் கூடி ஆடும் மூங்கில் வளர்ந்த அகன்றவிடத்தே, வெள் நுனை அம்பின் விசை இட வீழ்ந்தோர் - நிணம் தோய்தலால் வெள்ளிய முனையினை யுடைய அம்பின் வேகம் பட இறந்தோர்களின், எண்ணு வரம்பு அறியா உவல் இடு பதுக்கை - எண்ணின் எல்லை அறிய லாகாத தழையிட்டு மூடிய பதுக்கைகளையுடைய, சுரம் கெழு கவலை கோள் பால் பட்டென - சுரத்திற் பொருந்திய கவர் நெறிகள் ஆறலைக்கும் பகுதியிற் கொள்ளப்பெற்றதாக, வழங்குநர் மடிந்த அத்தம் - வழிப் போவார் இல்லையாகிய அச் சுர நெறியில்,

கo—ரு. இறந்தோர் கைப் பொருள் இல்லை யாயினும் - அறியாது வந்தோர் கையிற் பொருள் இல்லையாயினும், மெய் கொண்டு இன் உயிர் செகார் விட்டு அகல் தப்பற்கு - அவர்தம் மெய்யைப் பற்றிக்கொண்டு அவர் இனிய உயிரினைக் கொல்லாராய் விட்டு அகன்று வந்த பிழைக்காக, பெரும் களிற்று மருப்பொடு வரி அதள் இறுக்கும் - பெரிய களிற்றின் கொம்பொடு புலியின் வரி பொருந்திய தோலைத் தண்டமாகத் தன் ஏவலரை இறுக்கச் செய்யும், அறன் இல் வேந்தன் ஆளும் வறன் உறு குன்றம் பல விலங்கின - அறனில்லாத அரசன் ஆளும் வறட்சியுற்ற குன்றுகள் பல குறுக்கிட்டுள்ளனவே; (என்று தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறினன்).

(முடிபு) நலம் நல்கு ஒருத்தி இருந்த ஊர், அறனில் வேந்தன் ஆளும் குன்றம் பல விலங்கின.

சோலையையுடைய அகன்ற இடத்தில் வீழ்ந்தோரது பதுக்கைகள் பொருந்திய சுரங் கெழு கவலை கோட்பாற் பட்டென, வழங்குநர் மடிந்த அத்தம் என்றும், அத்தம் இறந்தோர் உயிர் செகாஅர் விட்டகன் தப்பற்கு மருப்பொடு வரி அதள் இறுக்கும் அறனில் வேந்தன் எற்றும் கூட்டுக.

(வி - ரை.) சுண்டி - சுண்ட எனத் திரிக்க. கால் யாத்தல் - பரத்தல். கோட்பால் - நிலத்தின் பகுதி; என்றது ஆறலைக்கும் பகுதி. இறுக்கும் - ஏவலரை இறுக்கச் செய்யும் என விரித்துரைக்க.

அறனில் வேந்தன் என்றது - காட்டினை ஆளும் தலைவனை. குன்றம் பல விலங்கினவாதலின் இத்துணையும் போந்து இளி வறிதே மீளுதல் ஒல்லா தென்றான் என்க.

(மே - ள்.) [1]'வெறியறி சிறப்பின்' என்னுஞ் சூத்திரத்து 'அறனில் வேந்த னுளும், வறனுறு குன்றம் பல விலங்கினவே' எனக் காட்டுத் தலைவனை நாட்டுத் தலைவன் பெயராற் கூறினர் என்றனர் நச்.

- X -

110. நெய்தல்

[தோழி செவிலித் தாய்க்கு அறத்தொடு நின்றது.]

அன்னை அறியினும் அறிக அலர்வாய்
அம்மெவ் சேரி கேட்பினுங் கேட்க
பிறிதொன் றின்மை அறியக் கூறிக்
கொடுஞ்சுழிப் புகாஅர்ந் தெய்வம் நோக்கிக்
கடுஞ்சூள் தருகுவல் நினக்கே[2] கானல்
தொடலை யாயமொடு கடலுடன் ஆடியுஞ்
சிற்றில் இழைத்தும் சிறுசோறு குவைஇயும்
வருந்திய வருத்தம் தீர யாஞ்சிறி
திருந்தன மாக எய்த வந்து
கடமெவ் பணைத்தோள் மடநல் லீரே
எல்லும் எல்லின் றசைவிசு உடையேன்
மெல்லிலைப் பரப்பின் விருந்துவ் டியானுமிக்
கல்லென் சிறுகுடிக் தங்கின்மற் றெவனே
எனமொழிந் தனனே ஒருவன் அவற்கண்
டிறைஞ்சிய முகத்தெம் புறஞ்சேர்பு பொருந்தி
இலைநுமக் குரிய வல்ல இழிந்த
கொழுமீன் வல்சி என்றனம் இழுமென
நெடுங்கொடி நுடங்கும் நாவாய் தோன்றுவ
காணு மோவெனக் காலிற் றிதையா
நில்லாது பெயர்ந்த பல்லோ ருள்ளும்
என்னே குறிந்த நோக்குமொடு நன்னுதல்
ஒளிகோ யானென அழிதகக் கூறி
யாள்பெயர் கென்ன நோக்கிந் நான்தன்
நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி
நின்றோன் போலும் [3]இன்றுமென் கட்கே.

—போந்தைப் பசலையார்.

(சொ - ள்.) கு—கூ. தொடலை ஆயமொடு கடல் உடன் ஆடியும் - மாலை போன்ற ஆயத்தாரோடு கடலில் ஒருங்கு விளையாடியும்.

---

1. கொல். புறத். கு. (பாடம்) 2. எனக்கென. 3. என்றுமென் மகட்கே.

சானல் சிற்றில் இழைத்தும் - கடற்கரைச் சோலையில் சிறு வீடு கட்டியும், சிறு சோறு குவைஇயும் - சிறு சோற்றை அட்டுக் குவித்தும், வருந்திய வருத்தம் தீர - இங்ஙனம் வருந்திய வருத்தம் நீங்க, யாம் சிறிது இருந்தனமாக - யாம் சிறிது இளைப்பாறி யிருந்தோமாக (அதுபோது),

கூ—கச. ஒருவன் எய்த வந்து - ஒரு தலைவன் எம்மிடம் அணுக வந்து, தடமென் பணைத் தோள் மட நல்லீரே - பெரிய மெல்லிய மூங்கில் போலும் தோளினையுடைய மடப்பம் வாய்ந்த நல்லீரே, எல்லும் எல்லின்று - பகலும் ஒளி இழந்தது, அசைவு மிக உடை யேன் - தளர்ச்சி மிகவும் உடையேன், மெல் இலைப் பரப்பின் விருந்து உண்டு யானும் - யானும் மெல்லிய இலைப் பரப்பின் நீயிர் இடும் விருந்துணவினை உண்டு, இக் கல் என் சிறு குடித் தங்கின் எவனே-இந்தக் கல்லென்ற ஆரவாரமுடைய சிறுகுடியில் தங்கினால் எய்தும் குறை யாது? என மொழிந்தனன் - என்று கூறினன்;

கச—எ. அவன் கண்டு இறைஞ்சிய முகத்தெம் - அவனைக் கண்டு கவிழ்ந்த முகத்தேமாய், புறம் சேர்பு பொருந்தி - மறை வான இடத்தே சேர்ந்திருந்து, இழும் என - இழுமென்ற மெல்லிய குரலில், இவை நுமக்கு உரிய அல்ல - இவ்வுணவு நுமக்கு ஏற்றன அல்ல, இழிந்த கொழுமீன் வல்சி என்றனம் - இழிவாய கொழு மீனுலாய உணவு என்று கூறினேம்: (பின்னர்),

கஅ—உஉ. நெடுங்கொடி நுடங்கும் நாவாய் தோன்றுவ - நீண்ட கொடிகள் அசையாநிற்கும் நாவாய்கள் தோன்றுவன வற்றை, காணுமோ என - யாம் காண்பே மல்லேமோ என்று கூறி, காலின் சிதையா - எம் சிற்றில் சிறு சோறுகளைக் காலாற் சிதைத்து விட்டு, நில்லாது பெயர்ந்த பல்லோருள்ளும் - அங்கு நில்லாது போய பலருள்ளும், என்னே குறித்த நோக்கமொடு - அவன் என்னையே குறித்து நோக்கிய பார்வையொடு, நல் நுதால் ஒழிகோ யான் என அழிதகக் கூறி - நல்ல நெற்றியினை யுடையாளே யான் செல்லுகோ என்று என் நெஞ்சம் அழிந்திடக் கூற,

உஙு—ரு. யான் பெயர்க என்ன - யான் செல்க என்னலும், நோக்கி - (பெயராது என்னை) நோக்கியவளாய், தான் தன் நெடுந் தேர்க் கொடிஞ்சி பற்றி - அவன் தவது நீண்ட தேரின் கொடிஞ் சியினைப் பற்றிக் கொண்டு, நின்றோன் - நின்றனன், இன்றும் என் கட்குப் போலும் - இன்றும் என் கண் முன் நிற்பது அந்நிலையே போலும்;

க—ரு. அன்னை அறியினும் அறிக - இதனை அன்னை அறி யினும் அறிவாளாக, அலர் வாய் அ மென் சேரி கேட்பினும் கேட்க - அலர் கூறும் வாயினையுடைய அம் மெல்லிய சேரியினர் கேட்பினும் கேட்டிடுக, பிறிது ஒன்றும் இன்மை அறியக் கூறி - வேறொன்றும் இல்லாமையை நீ யறியக் கூறி, கொடுஞ் சுழிப் புகார்த் தெய்வம் நோக்கி - வளைந்த சுழிகள் மேவிய புகாரிடத்துள்ள தெய்

வத்தை நோக்கி, நினக்குக் கடுஞ் சூள் தருகுவன் - நினக்குக் கடிய சூள் செய்து தருவன்.

(மூடி) - கானல் தொடலை ஆயமொடு வருந்திய வருத்தம் நீர யாம் சிறிது இருந்தனம்; ஒருவன், அசைவு மிக உடையேன், விருந்துண்டு இச் சிறு குடி தங் லாது பெயர்ந்த பல்லோருள்ளும் என்னை குறித்த நோக்கமொடு ஒறிகோயா னென அறிதகக்கூறி, யான் பெயர்க என்ன, கொடுந்தி பற்றி நின்றேன் போலும் இன்றும் என் கட்கே; (இதனை) அன்னை அறியினும் அறிக: சேரி கேட்பினும் கேட்க. பிறிதொன்றின்மை அறியக் கூறிப் புகார்த் தெய்வம் நோக்கி நினக்குக் கடுஞ் சூள் தருகுவன்.

(வி - ரை) அன்னை என்றது நற்றாயை. சேரி - ஆகுபெயர். தலைவியுற்ற நோய்க்குக் காரணம் பிறிதொன்று மின்மையை என்க. பிறிதொன்றும் என்னும் முற்றும்மை தொக்கது. மற்றெவனே: மற்று யான் என்னோர்க்குச் செல்லுவ தொழிந்து எனப் பொருள் தருதலின் விகாரமாற்று. என்னை - என்னையே. கூறி, கூற எனத் திரிக்க. நின்றோன் போலும்: நின்றோன் என முற்றுக்கி அன்னியே போலும் என விரித்துரைக்க. என்று மென் மகட்கே என்பது பாட மாயின், அங்ஙனம் நின்றவனே என்றும் என் மகட்கு உரியன் போலுமென அன்னை அறியினும் அறிக என இயைத்துரைக்க.

கடுஞ்சூள் என்பதனை, கடி என்னும் உரிச் சொல் முன்றேற் றுப் பொருளில் வந்ததற்கு எடுத்துக் காட்டி, முன்றேற்று, புறத்தி ன்றித் [1] தெய்வ முதலாயினவற்றின் முன்னின்று தெளித்தல் என் பர் சேனா.

மேலெல்லாம் ஆயத்தாரையும் தலைவியையும் உளப்படுத்திக் கூறிய தோழி பின்னர் [2] 'நில்லாது பெயர்ந்த பல்லோருள்ளும்' என் னது: பல்லோருள்ளு மெனத் தன்னை வேறு பிரித்துக் கூறியது அவ ரெல்லாம் தலைவனுக்கு இரங்காது சென்றமையும், தான் மட்டும் தனித்து நின்றமையும் தோன்றக் கூறியதாகும் என்பர் நச்.

(மே - ள்) [3] 'மாயோன் மேய' என்னுஞ் சூத்திரத்து, நெய்த னிலத்தில் நுளையர்க்கு வலைவளம் தப்பின் அம் மகளிர் கிளையுடன் குழீஇச் சுறவுக் கோடு நட்டுப் பரவுக்கடன் கொடுத்தலின் ஆண்டு வருணன் வெளிப்படும் என்று கூறி, கொடுஞ்சுழிப் புகாஅர்த் தெய் வம் நோக்கிக் கடுஞ்சூள் தருகுவல் என வரும் என்றும், [4] 'மெய் தொட்டுப் பயிறல்' என்னும் சூத்திரத்து, 'மெல்லிலைப் பரப்பின் விருந்துண்டியானுமிக், கல்லென் சிறுகுடித் தங்கின் மற்றெவனே' என வருவது, 'ஊரும் பேரும் கெடுநியும் பிறவும்... கூறி என்ற சூத்திரப் பகுதியில், பிறவும் என்றதனைக் கொள்க என்றும், அச் சூத்திரத்துத் 'தண்டாது இரப்பினும்' என்னும் பகுதிக்கண், 'எல் லும்... ஒருவன்' எனத் 'தலைவன் இரவுக்குறி வேண்டியதனைத் தோழி கூறியவாறு காண்க' என்றும், [5] 'எளித்தலேத்தல்' என்னுஞ்

1. தொல். சொல். உரி. அ. 2. தொல். சொல். எச். கூ. 3. தொல். அகத். டு. 4. தொல். களவி. கூ. 5. தொல். பொருளி. கூ.

குத்திரத்து, 'எல்லும் . . . ஒருவன்' இது எளித்தல் என்றும், அச் குத்திரத்து, 'பிறிதொன்றின்மை . . . கடுஞ்சு டருகுவ வினைக்கே' இது தலைப்பாடு என்றும் கூறுவர் நச்.

1. கண்ணினுஞ் செவியினும்' என்னுஞ் குத்திரத்து, 'ஒழிகோ யானென அழிதகக் கூறி என்புழி, தலைமகன் மனத்து நிகழ்ந்த அழி வெல்லாம் ஒழிகோ யான் என்ற உரையானே உணர்ந்தமையின் அது செவியுணர்வு எனப்படும் என்று கூறினர் போர.

---

111. பாலை

[தலைமகன் பிரிவின்கண் தோழி தலைமகளை யாற்றுவித்தது.]

உள்ளாங் குவந்தல் செல்லார் கறுத்தோர்
எள்ளல் நெஞ்சத் தேனச்சொல் நாணி
வருவர் வாழி தோழி யரச
யானை கொண்ட துகிற்கொடி போல
அலந்தலை ஞமையத்து வலந்த சிலம்பி
ஓடைக் குன்றத்துக் கோடையொடு துயல்வர
மழையென மருண்ட மம்மர் பலவுடன்
ஓய்களி றெடுத்த தோயுடை நெடுங்கை
தொகுசொற் கோடியர் தூம்பின் உயிர்க்கும்
அத்தக் கேழல் அட்ட நற்கோள்
செந்நாய் ஏற்றை கம்மென ஈர்ப்பக்
குருதி யாரும் எருவைச் செஞ்செவி
மண்டமர் முழுவத் தெல்லிக் கொண்ட
புன்றோர் விளக்கின் தோன்றும்
வின்தோய் பிறங்கல் மலையிறந் தோரே.

—பாலபாடிய பெருங்கடுங்கோ.

(சொ - ள்.) தோழி வாழி -.

உள்ளாங்கு உவந்தல் செல்லார் - தமக்குப் பொருள் உள்ள அளவிற்கு ஒத்த விலராய், கறுத்தோர் எள்ளல் நெஞ்சத்து எளச் சொல் நாணி - பகைவர் இகழும் நெஞ்சத்துடன் கூறும் அம்பு போலும் சொல்லிற்கு நாணினராய்,

அரச யானை கொண்ட துகிற்கொடி போல - பட்டத்து யானை தன்மீது கொண்ட துகிற்கொடி போல, ஓடைக் குன்றத்து - ஓடை என்னும் குன்றத்துள்ள, அலந்தலை ஞமையத்து - காய்ந்த தலையினையுடைய ஞமை மரத்தின்மீது, வலந்த சிலம்பி - பின்னிய சிலம்பியின் கூடானது, கோடையொடு துயல்வர - மேல்காற்றால் அசைய,

---

1. தொல். மெய். உள.

களிற்றியானை நிரை

எ—கு. மழை என மருண்ட - அதனை மேகம் என மயங்கிய, மம்மர் ஓய் களிறு பல உடன் - மயக்கத்தினையுடைய இளைத்த களிறு கள் பலவும் ஒருங்கே, எடுத்த நோயுடை நெடுங் கை - தூக்கிய வருத்தத்தினையுடைய நீண்ட கைகள், தொகு சொல் கோடியர் தூம் பின் உயிர்க்கும் அத்தம் - புகழினைத் திரட்டிக் கூறும் கூத்தரது தூம்பினைப் போலத் தோன்றி ஒலிக்கும் காட்டிலுள்ள, கேழல் அட்ட நல்கோள் செந்நாய் ஏற்றை - ஆனை பன்றியினைக் கொன்ற தன் இரையினை நன்கு பற்றிக்கொள்ளும் திறனுடைய செந்நாயின் ஏற்றை, கம்என சுர்ப்ப - விரைவாக அதனை இழுத்திட, குருதி ஆரும் எருவைச் செஞ்செவி - வழியெலாம் ஒழுகிய குருதியினைப் பருகும் பருந்தின் சிவந்த செவிகள், மண்டு அமர் அழுவத்து எல்லிக்கொண்ட புண்டீதர் விளக்கில் தோன்றும் - மிக்க போர்க்களப் பரப்பில் இராப்பொழுதில் கைக்கொண்ட வீரர்களது மருமத்துப் புண்களை ஆராயும் விளக்குக்களைப்போன்று தோன்றும், விண்தோய் பிறங்கல் மலை இறந்தோர் - வானைத் தோயும் விளக்கத்தையுடைய மலையினைக் கடந்து பொருள் ஈட்டச் சென்றோராய நம் தலைவர்,

கூ. வருவர் - விரைய வருவர் (எனத் தோழி தலைவியை ஆற்று வித்தாள்).

(முடிபு) தோழி வாழி! உவந்தன் செல்லார், எனச் சொல் நாணி மலையிறந் தோர் வருவர்.

(வி - ரை.) உள்ளாங்கு - உள்ளபடி, எனச்சொல் - பெருமிதத் துடன் கூறும் சொல்லுமாம். அலந்ததலை அலந்தலை யென விகாரப் பட்டது. ஞமையத்து: அத்து சாரியை. ஓடைக் குன்றத்திற்கு அரசயானையும், ஞமையத்து வலந்த சிலம்பிக் கூட்டிற்குத் தலைக் கோடியும் உவமம். (உண்டற்கு நீரின்றி மெலிந்த களிறு மேலுள்ள சிலம்பிக்கூட்டை மேகமென மருண்டு அதில் நீருண்டற்குக் கையை மேலே எடுத்த தென்க.) கோடியர் தூம்பின் ஒலியும் யானையின் உயிர்ப் பொலியும் ஒரு தன்மையன என்பது. [1] 'கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பின்' என்பதனையும் அறிக. உயிர்க்கும் அத்தம் எனவும், அத்தத்தில் கேழலட்ட ஏற்றை ஈர்ப்ப அதன் குருதியை ஆரும் எருவை எனவும் இயையும். குருதி படிந்த அத்தம் அமர்க் களம் போலாக, எருவைச் செஞ்செவி ஆண்டுள்ள விளக்குப் போலத் தோன்றும்.

கம்மென: திசைச்சொல்.

(உ - ரை.) சிலம்பிக் கூட்டினை மேகமெனக் கருதும் யானை யைக் காணும் தலைவர், தாம் பொருளல்லதனைப் பொருளெனக் கருதியதனை உணர்ந்து விரைய மீள்வர் என்றபடி.

---

1. மலைபடு. கூ.

112. குறிஞ்சி

[இரவுக்குறி வந்த தலைமகனை யெதிர்ப்பட்டு நின்று தோழி சொல்லி வரைவு கடாயது.]

1கூனல் எண்கின் குறுநடைத் தொழுதி
சிதலை செய்த செந்நிலைப் புற்றின்
மண்புனை நெடுங்கோ டுடைய வாங்கி
இரைநசைஇப் பரிக்கும் அரைநாட் கங்குல்
சுன்றணி வயவுப்பிணைப் பரித்தென மறப்புலி
ஒளிறேந்து மருப்பின் களிறட்டுக் குழுமும்
பனியிருஞ் சோலை யெமியம் என்னாய்
நிங்குசெய் தலையே யிங்குவந் தோயே
நாளிடைப் படினெவ் ரேழி வாழாள்
தோளிடை முயக்கும் நீயும் வெய்யை
2கழியக் காதலர் ஆயினும் சான்றோர்
பழியொடு வருஉம் இன்பம் வெஃகார்
வரையின் எவனே வான்தோய் வெற்ப
கனைக்கலி இருக்கும் கறியிவர் சிலம்பின்
மனைப்பருங் காமம் புனைந்நமை அறியார்
தொன்றியல் மரபின் மன்றல் அயரப்
பெண்கோள் ஒழுக்கம் கண்கொள நோக்கி
நொதுமல் விருந்தினம் போலவிவள்
புதுநாண் ஒடுக்கமும் காண்குவம் யாமே.

—நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர் கிழார்.

(சொ - ள்.) கூ. வான்தோய் வெற்ப - வானை அளாவும் மலையையுடைய தலைவனே!

க—ச. கூனல் குறுநடை எண்கின் தொழுதி - கூனிய முதுகினையும் குறுகக்குறுக அடியிட்டு நடக்கும் நடையினையும் உடைய கரடிக் கூட்டம், சிதலை செய்த செந்நிலைப் புற்றின் - கறையான் எடுத்த சிவந்த நிலையினையுடைய புற்றினது, மண்புனை நெடுங்கோடு உடைய வாங்கி - மண்ணற் புனைந்த நீண்ட உச்சி உடைத்திடப் பெயர்த்து, இரை நசைஇப் பரிக்கும் அரைநாள் கங்குல் - புற்றுஞ்சோறுமுய இரையினை விரும்பிச் சுழ்ந்துகொண்டிருக்கும் நடுநாள் இரவில்,

ஞ—அ. சுன்ற அணி வயவு பிணை பரித்தென - குட்டியை சுன்ற அண்மையினையுடைய வேட்கையையுடைய பெண்புலி பரித்ததாக, மறப்புலி - தறுகண்மையையுடைய ஆண்புலி, ஒளிறு ஏந்து மருப்பின் களிறு அட்டுக் குழுமும் - ஒளி வீசுகின்ற ஏந்திய கோட்டினையுடைய ஆண் யானையைக் கொன்று முழங்குகின்ற, பனி இரும்

(பாடம்) 1. கூரல் எண்கின். கூருகிர் எண்கின். 2. கழிபெருங்காதலர். கழியாக் காதலர்.

சோலை - குளிர்ந்த கரிய சோலையில், எமியம் என்னும் - யாம் தமியேம் என்று நினையாயாய், நீங்கு செய்தனையே சுங்கு வந்தோயே - சுங்கு வருதலின் நீ நீங்கு செய்தாய் ஆவாய்;

கூ—கo. நாள் இடைப்படின் என் தோழி வாழாள் - நீ வாராது ஒரு நாள் இடையிடினும் என் தோழி உயிர் வாழாள்காண், தோளிடை முயக்கம் நீயும் வெய்யை - அங்ஙனே நாளும் என் தோழி யின் தோளின்கண் முயங்குதலே நீயும் விருப்புகலுடையை;

கக—உ. சான்றோர் கழியக் காதலர் ஆயினும் - சான்றோரா வார் மிகக் காதல் கொண்டார் ஆயிடினும், பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார் - பழியுடன் கூடி வரும் இன்பினை விரும்பார் ஆகலின், என்னை? (அங்ஙனம் வரைந்திடின்),

கஙு—சூ. கணம் கலை இருக்கும் கறி இவர் சிலம்பில் - கூட்ட மாகிய கலைமான்கள் தாழ ஒலிக்கும் மிளகு கொடி படர்ந்த மலைச் சாரலில், மணப்பு அரும் காமம் புணர்ந்தமை அறியார் - எய்துதற்கு அரிய காமத்தால் நீர் கூடிய களவொழுக்கத்தினை அறியாத எமர், தொன்று இயல் மரபின் மன்றல் அயர - தொன்று தொட்டு வரும் முறைப்படி வதுவை நிகழ்த்திட,

கள—கூ. பெண்கோள் ஒழுக்கம் கண்கொள நோக்கி - நீ இவளை வரைந்துகொள்ளும் அவ்வொழுக்கத்தினைக் கண்ணுர நோக்கி, யாம் நொதுமல் விருந்தினம் போல - யாம் அயலேமாகிய புதியேம் போல, இவள் புதுநாண் ஒடுக்கமும் காண்குவம் - இவள் புதிய நாணுலாகிய ஒடுக்கத்தினையும் காண்பேமன்றே.

(முடிபு) அரை நாட் கங்குல் புலி களிறு அட்டுக் குழுமும் சோலையில் சுங்கு வந்தோய் நீங்கு செய்தனை; நாள் இடைப்படின் என் தோழி வாழாள்; தோளிடை முயக்கம் நீயும் வெய்யை; சான்றோர் பழியொடு வரூஉம் இன்பம் வெஃகார்; வரையின் எவள்? மன்றல் அயர அப் பெண் கோள் ஒழுக்கத்தை நோக்கி யாம் நொதுமல் விருந்தினம் போல இவள் புது நாண் ஒடுக்கமும் காண்குவம்.

(வி - ரை.) 'கூரலெண்கின்' என்ற பாடத்திற்கு, வகுந்த உடம்பினையுடைய் கரடியின் என்பதே பொருளாகும். அணி - அணிமையுடைய. பிணை என்பது பினை என்றுயது, [1]'குறியத னிறுதிச் சினைகெட வுகரம் - அறிய வருதல் செய்யுளு ளுரித்தே' என்னுஞ் சூத்திரத்தீது. அறிய என்னும் இலேசாற் கொள்ளப்படும். கழியாக் காதலர் என்பது பாடமாயின், நீங்காத காதலையுடையார் என்க. மன்றல் நிகழ்த்தும் தமராவார், இருமுது குரவரும் சான்றோரு முதலாயவர்.

(உ - றை.) கரடியின் கூட்டம் சிதலை செய்த புற்றின் கோட்டினை யுடைத்து, அதிலுள்ள புற்றும் பழஞ் சோற்றை யுண்டும்,

1. தொல். உயிர்மயங். சூ.

மேலும் அதனை விரும்பிச் சூழ்ந்தாற் போல, நீ எமர் காவலைச் சிதைத்துத் தலைவியை நுகர்ந்தும் மீட்டும் அக் களவொழுக்கத்தையே விரும்பிப் பகலிலும் இரவிலும் சூழ்வாராகின்றாய் என்பது.)

(மே - ள்.) [1]'காற்றமும் தோற்றமும்' என்னுஞ் சூத்திரத்து, 'ஆற்றது நீமை யறிவுறு கலக்கமும்' என்பதற்கு இப்பாட்டு உதாரணமாகும் என்றும், [2]'பொழுது மாறுங் காப்பும்' என்னுஞ் சூத்திரத்து 'நன்மையுந் தீமையும் பிறிதினைக் கூறலும்' என்ற பகுதிக்கு, 'கழிபெருங் காதல ராயினுஞ் சான்றோர், பழியொடு வருஉ மின்பம் வெஃகார்' எனப் பிறர்மேல் வைத்துத் தலைவனை அறிவு கொளுத்தினமையின் வழுவாய் அமைந்தது என்றும், 'பழியொடு வருஉ மின்பம் வெஃகார்' எனவே, புகழொடு 'வருஉம் இன்பம் வெஃகுவரெனக் கொள்ளவைத்தலின், நன்மையுந் தீமையும் பிறிதின்மேல் வைத்துக் கூறிற்றும் என்றும் கூறினர் நச்.

[3]'கல்வி தறுகண்' என்னுஞ் சூத்திரத்து, 'கழியாக் காதல ராயினுஞ் சான்றோர், பழியொடு வருஉ மின்பம் வெஃகார்' என்பது புகழ் பற்றிப் பிறந்த பெருமிதம்' என்பர் பேரா.

---

113. பாலை

[தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

நன்றல் காலையும் நட்பிற் கோடார்
சென்று வழிப்படுஉந் நிரிபில் சூழ்ச்சியில்
புன்றலை மடப்பிடி அகவுநர் பெருமகன்
[4]அமர்விசு வண்மகிழ் அஃதைப் போற்றிக்
காப்புக்கை நிறுத்த பல்வேற் கோசர்
இளங்கள் கமழும் நெய்தலம் செருவின்
வளங்கெழு நன்னு டன்னவென் தோள்மணந்
தழுங்கல் மூதூர் அலரெடுத் தாற்ற
நல்காது துறந்த காதலர் என்றும்
கல்பொரூஉ மெலியாப் [5]பாடிநுங் அடியன்
[6]அல்கு வன்சுரைப் பெய்த வல்சியன்
இகந்தன வாயினும் இடம் பார்த்துப் பகைவர்
ஒம்பினர் உறையும் கூம்கெழு குறும்பில்
குவையிமில் விடைய வேற்ரு ஓய்யும்
கனையிருஞ் சுருணைக் களிகாழ் நெடுவேல்
விழவயர்ந் தன்ன கொழும்பல் நிற்றி
எழாஅப் பானள் நன்னுட் டும்பர்
நெறிசெல் வம்பலர்க் கொன்ற தெவ்வர்

---

1. தொல். களவு. 2. தொல். பொருளி. கசு. 3. தொல். மெய்ப். க. (பாடம்) 4. மாவிசு. 5. பரட்டிநுனடி. 6. அகன்கு லஞ்சுரைப் பெய்த வல்சியர். வகை லஞ்சுரைப் பெய்த.

எறிபடை கழீஇய சேயரிச் நின்னீர்
அறுதுறை யயிர்மணல் படுகரைப் போகிச்
சேயர் என்றலில் நிறுமை யுற்றவென்
கையறு நெஞ்சத் தெவ்வம் நீங்க
அழாஅம் உறைநலும் உரியம் பராரை
அலங்கல் அஞ்சினைக் குடம்பை புல்லெனப்
புலம்பெயர் மருங்கில் புள்ளெழுந் தாங்கு
மெய்யிவ ணெழியப் போகிஅவர்
செய்வினை மருங்கில் செலீஇயரென் உயிரே.

—கல்லாடனார்.

(சொ - ள்.) கூ—டு. நன்று அல் காலையும் நட்பில் கோடார் - நிரியாராய், சென்று வழிப்படூஉம் நிரிபு இல் குழ்ச்சியில் - அந் நட்டார்பாற் சென்று அவர் குறிப்பிற் படும் மாறுபாடில்லாத அறிவுடைமையால், அகவுநர் பெருமகன் - கூத்தரைப் புரக்கும் தகைவ புல்லிய தகையினையுடைய இனைய பிடியினை அமரின்கண் அளிக்கும் வண்மையாலாகிய மகிழ்வுடைய, அஃதை போற்றி - அஃதை என் பானைப் பாதுகாத்து, காப்புக்கை நிறுத்த - அவனைக் காவல் மிக்க இடத்தே நிலை நிறுத்திய, பல்வேல் கோசர் - பல வேற்படையினை யுடைய கோசரென்பவரது.

கூ—எ. இளங் கள் கமழும் நெய்தலுஞ் செறுவின் - புதிய கள் கமழும் நெய்தலுஞ் செறு எனும், வளம் கெழு நல் நாடு அன்ன - வளம் பொருந்திய நல்ல நாட்டை யொத்த,

எ—கூ. என் தோள் மணந்து - என் தோளினைக் கூடி, அழுங்கல் மூதூர் அலர் எடுத்து அரற்ற - ஆரவாரமுடைய பழைய ஊர் அலரினை மிகுத்துக் கூற, நல்காது துறந்த காதலர் - அருளாது விட்டேகிய நம் காதலர்,

கூ—கஉ. என்றும் கல் பொருஉ மெலியாப் பாடுஇன் நோன் அடியன் - எஞ்ஞான்றும் கல்லைப் பொருது மெலிவுறுத ஓசை இனிய வலிய அடியினையுடையவனும், அல்கு வன் சுரை பெய்த வல்சியன் - மிக்க வலிய மூங்கிற் குழாயிற் பெய்த உணவினையுடையவனும்,

கூஉ—எ. இகந்தனவாயினும் - தன் நாட் டெல்லையைக் கடந்து சேய்மைக்கண்ணவாயினும், இடம் பார்த்து - கவரும் செவ்வி பார்த்து, பகைவர் ஒம்பினர் உறையும் கூம்கெழு குறும்பில் - பகைவர் ஆவினைப் பாதுகாத்து உறையும் உணவு மிக்க அரண்களிற் சென்று, குவை இமில் விடைய வேற்று ஆ ஓய்யும் - திரண்ட இமிலையுடைய விடைகளுடன் கூடிய பகைப்புலத்து ஆக்களைக் கவர்ந்து செலுத்தும், கதிர். இரும் சுருளின கவி காழ் நெடுவேல் - செறிந்த கரிய பூணையும் நெய் கலிந்த தண்டையுமுடைய நீண்ட வேலினையும், விழவு அயர்ந்தன்ன கொழும் பல் திற்றி - விழாச்

கூ—டு. பிறை மருள் வான் கோட்டு அண்ணல் யானை - பிறையினை யொத்த வெள்ளிய கோட்டினையுடைய பெருமை தங்கிய யானைகளையும், இனம் மிகு முன்பின் வாம் மான் அஞ்சி - இனம் மிக்க வலிமையையும் தாவும் குதிரைகளையுமுடைய அஞ்சி என் பான், இனம் கொண்டு ஒளிக்கும் அஞ்சு வரு கவலை - பகைவரது ஆவினங்களைக் கைப்பற்றி மறைத்திடும அச்சந் தோன்றும் கவர்த்த நெறிகளிலே,

கசு—அ. நன்னர் ஆய்கவின் தொலைய - நன்குகிய நமது அழகு தொலைய, நம் நீத்துச் சேய் நாட்டு உறையும் பொருட்பிணை - நம்மைப் பிரிந்து நெடுந் தூரத்திலுள்ள நாட்டில் வதிதற்கேதுவாய பொருளீட்டும் செயல், கூடாமையின் நீடியோர் - உரிய காலத்தினுள் முற்றுமையின் காலம் தாழ்ந்திருப்போர் ஆகிய,

சு—எ. நம் காதலர் என்றும் நோயிலர் ஆக - நம் காதலர் என்றும் நோயின்றி இனி திருப்பாராக.

(முடிபு) முதாரில் வெஞ்சொற் பெண்டிர் எள்ளினும் எள்ளுக; என் ஆய் நலம் தொலையினும் தொலைக; எவ்வி வீழ்ந்த செருவில் பாணர் முறிந்து இடுஉப் பழிச்சிய வணர் மருப்பு அன்ன கொன்றை நெற்று தாஅம் அத்தம் நீளிடை, அஞ்சி னினம் கொண்டொளிக்கும் கவலையில், கவின் தொலைய நீத்துச் சேய்நாட் டுறையும் பொருட்பிணை கூடாமையின் நீடியோர் ஆகிய நம் காதலர் என்றும் நோயிலராக.

(வி - ரை.) பலர் - பலரும்; 'பலர் புகழ் ஞாயிறு' என்புழிப் போல முற்றும்மை தொக்கது. சேரி அம் பெண்டிர்: அம், சாரியை. பாணர் யாழிலே தெய்வம் உறைதல் பற்றியும், தமக்கு உணவளிக்கும் உதவியுடைமைபற்றியும் யாழினைத் தொழுது பரவுவார் எனவும். எவ்வி இறந்தபின் இனித் தம் பாட்டினைக் கேட்டுப் பரிசில் அளிப்பார் இலரென்னும் வருத்த மிகுதியால் யாழினை முறித்துப் போகட்டார் எனவும் கொள்க. மருப்பு அன்னவாக நெற்று அறை மிசைத் தாஅம் என்க. இதனால் பாணர் முறித்துப் போகட்ட மருப்பும் பல வென்பது பெற்றும். வயமான் அஞ்சி என்பது பாடமாயின், சிங்கம் போலும் வலியுடைய அஞ்சி என்றுரைக்க. யானை சின மிகு முன்பின் வயமான் அஞ்சி இனங் கொண் டொளிக்கும் என்பது பாடமாயின், யானையானது சிங்கத்தைக் கண்டஞ்சி தன் இனத்தைக் கொண்டொளிக்கும் கவலை என்க.

(மே - ள்.) [1]'மங்கல மொழியும் வைஇய மொழியும்' என்னுஞ் சூத்திரத்து, 'நோயில ராகநங் காதலர்' எனக் கூறுவது, நம்மை அறனன்றித் துறத்தலின் நீங்கு வருமென்று அஞ்சி வாழ்த்தியது; நம்பொருட்டுத் நீங்கு வருமென நினைத்தலின் வழுவாய் அமைந்தது என்றனர் நச்.

---

1. தொல். பொருளி. ரு0.

116. மருதம்

[தோழி தலைமகனை வாயில் மறுத்தது.]

எரியகைந் தன்ன தாமரை யிடையிடை
அரிந்துகால் குவித்த செந்நெல் வினைஞர்
கட்கொண்டு மறுகுஞ் சாகா டளற்றுறின்
ஆய்கரும் படுக்கும் பாய்புனல் ஊர
பெரிய நாணிலை மன்ற பொரியெனப்
புன்கவிழ் அகன்றுறைப் பொலிய ஒள்ளுதல்
நறுமலர்க் காண்வரும் குறும்பல் கூந்தல்
மாமழை நோக்கிற் காழியல் வனமுலை
எஃகுடை எழில்நலத் தொருந்தியொடு [1]நெருநை
வைகுபுனல் அயர்ந்தனை யென்ப அதுவே
பொய்புறம் [2]பொறிந்தியாம் கரப்பவும் கையிகந்து
அலரா கின்றுல் நானே மலர்தார்
அமயவரி யாஅ மறப்போர்ச் செழியன்
பொய்யா விழவின் கூடற் பறந்தலை
உடனிலை தெழுந்த இருபெரு வேந்தர்
கடல்மருள் பெரும்படை கலங்கத் தாக்கி
இரங்கிசை முரசம் ஓரியப் பரந்தவர்
ஓடுபுறம் கண்ட ஞான்றை
ஆடுகொள் வியன்களந் தார்ப்பிறும் பெரிதே.

—பரணர்.

(சொ - ள்.) க—ரு. எரி அகைந்த அன்ன தாமரை இடையிடை - நெருப்பு கப்புவிட் டெரிவது போன்ற தாமரைப் பூக்களின் இடையிடையே, செந்நெல் கால் அரிந்து குவித்த வினைஞர் - செந்நெற்ருளை அரிந்து அரிஅரியாகப் போகட்ட நெல்லரிவோர், கட்கொண்டு மறுகும் சாகாடு - தங்கட்குக் கள்ளைக் கொண்டு பல காலும் திரியும் வண்டி, அளற்று உறின - சேற்றிற் பதிந்திடின், ஆய்கரும்பு அடுக்கும் பாய்புனல் ஊர - அதனைப் போக்கச் சிறந்த கரும்புகளை அடுக்கி இடைமடுக்கும் பாயும் புனல் வளம் மிக்க ஊரனே, பெரிய நாணிலை மன்ற - உறுதியாக நீ பெரிதும் நாணில்லாதவனுவாய்;

ரு—க0. பொரி எனப் புன்கு அவிழ் அகல் துறை பொலிய - பொரிபோலப் புன்கம்பூ மலரும் அகன்ற நீர்த்துறை பொலிவுற, ஒள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றியினையும், நறுமலர் காண்வரும் குறும்பல் கூந்தல் - நறிய மலர்கள் வேய்ந்த காண்டற்கினிய குறிய பலவாய கூந்தலினையும், மாமழை நோக்கின் - மாவடுப் போன்ற கண்ணினையும், காழ் இயல் வன முலை - முத்துவடம் அசையும் அழகிய

(பாடம்) 1. நெருநல். 2. யான் கரப்பவும்.

மூலியினையும், எஃகு உடை எழில் நலத்து ஒருத்தியொடு-நுண்ணிய அழகின் நலத்தினையுமுடைய ஒரு பரத்தையோடு, நெருநை வைகு புனல் அயர்ந்தனை என்ப - நேற்று இடையருது ஒழுகும் புனலில் விளையாட்டயர்ந்தனை எனப் பலருங் கூறுவர்;

கo—க. அதுவே - அதுதான். பொய்புறம் பொதிந்து யாம் கரப் பவும் - அதனைப் பொய் யென்று புறத்தே மூடி யாம் மறைக்கவும், கையிகந்து - எம்செயலினைக் கடந்து,

கஉ—கூ. மலர் தார் - மலர்ந்த பூமாலையினையும், மை அணி யானை - தலையில் மை அணிந்த யானையினையும் உடைய, மறப்போர்- மறம் பொருந்திய போரில் வல்ல, செழியன் - பாண்டியனது, பொய்யா விழவின் கூடல் பறந்தலை - என்றும் நீங்காத விழவினை யுடைய கூடற் போர்க்களத்தில், உடன் இயைந்து எழுந்த இரு பெரு வேந்தர் - தம்முள் ஒருங்கு இயைந்து எழுந்த சோழ சேர அரசர் களது, கடல்மருள் பெரும் படை - கடல் போன்ற பெருந்தானைகளை, கலங்கத் தாக்கி - கலங்கும் பரிசு தாக்கி, இரங்கு இசை முரசம் ஒழி யப் பரந்து அவர் ஓடுபுறம் கண்ட ஞான்றை - ஒலிக்கும் ஒலியினை யுடைய முரசு ஒழிந்து கிடக்க அவர் பரந்து ஓடும் புறக்கொடை யைக் கண்ட நாளில். ஆடு கொள் வியன் களத்து ஆர்ப்பினும் பெரிது - வெற்றி கொண்ட பெரிய களத்தின்கண் எழுந்த ஆரவா ரத்தினும் பெரிதாக,

கஉ. அலர் ஆகின்று - அலராகின்றது.

(முடிபு) பாய் புனலூர! பெரிய நாணிலை மன்ற; எழில் நலத் தொருத்தி யொடு நெருநை வைகுபுனல் அயர்ந்தனை என்ப; அது யாம் கரப்பவும் கை யிகந்து, செழியன் கூடற் பறந்தலை, இருபெரு வேந்தர் பெரும்படை கலங்கத் தாக்கி அவர் புறங்கண்ட ஞான்றை, களத்து எழுந்த ஆர்ப்பினும் பெரிது அலர் ஆகின்று.

(வி - ரை.) ஆய் கரும்பு-மெல்லிய கரும்புமாம். கரும்பு அடுக் கும் என்றது மருத நிலத்தின் வளமிகுதி கூறியபடி. மாழை - இளமை என்றும், அமகென்றுமாம். எழில் நலம் - எழுச்சியும் நலமு மாம். யானைக்கு நெற்றியில் அஞ்சனம் அணிதல் மரபாதலின், மை யணி யானை யென்றார்.

(உ - றை.) நெல்லரியும் வினைஞர் தம் தொழிலை விடுத்து இழிந்த கள் வண்டியின் ஆழ்ச்சியைப் போக்கற்குச் சிறந்த கரும் பினைச் சிதைப்பதுபோல, நீ இல்லறஞ் செய்தலாய நின் ஒழுக்கத் தினைக் கைவிட்டு, இழிந்த பரத்தையின் இன்பத்தை நுகர்தற்குச் சிறந்த தலைவியை வருத்துகின்றாய் என்பது.

(மே - ள்.) [1] நிழலோன் விளையாட் டாங்கு மற்றே' என்னுஞ் சூத்திரத்து, 'எஃகுடை யெழினலத் தொருத்தியொடு . . . அலரா கின்றுற்றனே' என்பது, தலைவி பிறர் அலர் கூறியவழிக் காமஞ் சிறந்து புலந்தவாறு என்றும், [2] வாயிற் கிளவி வெளிப்படக் கிளத் தலின் அதனை

1. தொல். கற். உக. 2. தொல். பொருளி. சஎ.

தல்' என்னும் சூத்திரத்து, 'எரியகைந் தன்ன காமரை யிடை ... யார்ப்பினும் பெரிதே' என்பதனுள், 'நாணிலை மன்ற' எனத் தோழி கூறி அலராகின்றுல் என வெளிப்படக் கிளத்தலின் வழுவாய் அமைந்தது என்றும் கூறினர் நச்.

---

117. பாலை

[மகட் போக்கிய செவிலித்தாய் சொல்லியது.]

மெளவலொடு மலர்ந்த மாக்குரல் நொச்சியும்
அவ்வரி அல்குல் ஆயமும் உள்ளாள்
ஏதிலன் பொய்ம்மொழி நம்பி ஏர்வி(னை)
வளங்கெழு திருநகர் புலம்பப் போதி
வெருவரு கவலை ஆங்கண் அருள்வரக்
கருங்கால் ஓமை யேறி வெண்டலைப்
பருந்துபெடை பயிரும் பாழ்நாட் டாங்கண்
பொலந்தொடி நெளிர்ப்ப வீசிச் சேவடிச்
சிலம்புநக இயலிச் சென்றனள் மகட்கே
சாந்துளர் வணர்குரல் வாரி வகை வகுத்து
யான்போது துணைப்பத் தகரம் மன்னுள்
தன்னே ரன்ன தகைவெங் காதலன்
வெறிகமழ் பன்மலர் புனையப் பின்னுவிடச்
சிறுபுறம் புதைய நெறிபுதாழ்ந் தனகொல்
நெடுங்கால் மாஅத் தூழுறு வெண்பழம்
கொடுந்தாள் யாமை பார்ப்பொடு கவரும்
பொய்கை சூழ்ந்த பொய்யா [1]யாணர்
வானன் சிறுகுடி வடாஅது
தீநீர்க் கான்யாற்று அவிரறல் போன்றே.

(சொ - ள்.) க—உ. மெளவலொடு மலர்ந்த மாக்குரல் நொச்சியும் - முல்லைப் பூவோடு மலர்ந்த கரிய கொத்தினையுடைய நொச்சியையும், அவ்வரி அல்குல் ஆயமும் உள்ளாள் - அழகிய வரி பொருந்திய அல்குலினையுடைய ஆய்த்தினையும் நினையாளாயும்,

கூ—கூ. சாந்து உளர் வணர் குரல் வாரி - மயிர்ச் சாந்து பூசிய வளைந்த கொத்தாகிய கூந்தலை வாரி, வகை வகுத்து - வகைப்படுத்து, யான் போது துணைப்ப - யான் மலர்களை இணைக்கப்புக, தகரமும் மண்ணுள் - அதற்கு உடன்பட்டுத் தகரமும் பூசிக்கொள்ளாளாயும்,

கூ—சு. ஏதிலன் பொய் மொழி நம்பி - பிறனொருவன் பொய்ம் மொழியினை விரும்பி, ஏர் வினை வளம் கெழு திரு நகர் புலம்பப்

(பாடம்) 1. யாணர்ப் பண்ணன்.

போகி - அழகிய தொழினலம் வாய்ந்த வளம் பொருந்திய செல்வ
மிக்க மாளிகை தனித் தொழியப் புறப்பட்டு,

5—க. வெரு வரு கவலை ஆங்கண் - அஞ்சத்தக்க கவர்த்த
நெறிகளாய அவ்விடங்களில், வெண்தலைப் பருந்து - வெள்ளிய தலை
யினையுடைய பருந்து, கருங்கால் ஓமை ஏறி - கரிய அடியினையுடைய
ஓமை மரத்தின் மீதேறி, அருள் வர - இரக்கம் உண்டாக, பெடை
பயிரும் பாழ் நாட்டு ஆங்கண் - தனது பெடையினை அழைக்கும்
பாழான நாட்டிடத்தே, பொலம் தொடி தெளிர்ப்ப வீசி - தனது
பொற்றொடி யொலிக்கக் கையினை வீசியும், சேவடிச் சிலம்பு ந
இயலி - சிவந்த அடியிற் சிலம்புகள் விளங்க உலாவியும், சென்ற
என் மகட்கு - போய்விட்ட என் மகளுக்கு,

10—க. தன் ஓரன்ன தகை வெம் காதலன்—தன்னையே ஒத்த
தகைமையையும் விருப்பத்தையுமுடைய காதலனாகிய தலைவன்,
வெறி கமழ் பன் மலர் புனையப் பின்னுவிட - மணம் கமழும் பல
வகை மலர்களினை தனைச் செயற்குப் பின்னுதலைச் செய்ய (அவள்
கூந்தல்),

15—க. நெடுங் கால் மாஅத்து ஊழ் உறு வெண் பழம் -
நெடிய அடியினையுடைய மாமரத்தினது முறையாக முற்றிய வெள்
ளிய பழத்தினை, கொடு தாள் யாமை பார்ப்பொடு கவரும் - வளைந்த
காலினையுடைய யாமை தன் பார்ப்போடு கவர்ந்துண்ணும்,
பொய்கை சூழ்ந்த பொய்யா யாணர் - பொய்கைகள் சூழ்ந்துள்ள
என்றும் அருத புது வருவாய்களையுடைய, வாணன் சிறுகுடி வடா
அது - வாணனது சிறுகுடி என்னும் ஊர்க்கு வடக்கின்கண் ணுள்ள:
தீம் நீர்க் கான்யாற்று அவிர் அறல் போன்று - இனிய நீரினை
யுடைய காட்டாற்றின் விளங்கும் அறல் போன்று,

20—க. சிறுபுறம் புதைய நெறிபு தாழ்ந்தன கொல் - பிடர்
மறைய நெறிந்து தொங்குகின்றனவோ.

(முடிபு) நொச்சியினையும் ஆயத்தினையும் நினையாளாயும், தகரம் மண்ணு
ளாயும், எஃலன் பொய்ம்மொழி நம்பி, நகர் புலம்பப் போகி, பாழ்நாட்டாங்கண்,
வீசியும் இயலியுஞ் சென்ற என் மகட்கு, காதலன் பின்னுவிட, அவள் கூந்தல்
வாணன் சிறுகுடி வடாஅது கான்யாற்று அறல் போன்று சிறுபுறம் புதைய
நெறிபு தாழ்ந்தனகொல்.

(வி - ரை.) அருள் வர - பெடைக்கு அருள்; கண்டார்க்கு
அருள்வர என்னுமாம். கையை வீசி என்க. தன்னோ ரன்ன - அன்பு,
ஒழுக்கம் முதலியவற்றால் தன்னை யொத்த.

---

118. குறிஞ்சி

[செறிப்பறிவுறீஇ இரவும் பகலும் வர லென்று வரைவு கடாஅயது.]

கறங்குவெள் [1]அருவி பிறங்குமலைக் கவாஅன்
தேங்கமழ் இணர வேங்கை சூடித்

(பாடம்) 1. அருவிப் பிறங்கு.

தொண்டகப் பறைச்சீர்ப் பெண்டிரொடு விரைஇ
மறுகிற் றாங்கும் சிறுகுடிப் பாக்கத்து
இயன்முரு கொப்பினை வயநாய் பிற்படப்
பகல்வரிற் கவ்வை அஞ்சுதும் இகல்கொள
இரும்பிடி கன்றொடு விரைஇய கயவாய்ப்
பெருங்கை யானைக் கோள்பிழைத் தீரிய
அடுபுலி வழங்கும் ஆரிருள் நடுநாள்
கனியை வருதல் அகளிறும் அஞ்சுதும்
என்னு குவள்கொல் தானே பன்னுள்
புணர்குறி செய்த புலர்குரல் ஏனல்
கிளிகடி பாடலும் ஒழிந்தனள்
அளியள் தானின் அளியல நிலனே.

—கபிலர்.

(சொ - ள்.) கூ—சு. கறங்கு வெள் அருவி பிறங்கு மலைக்கவா அன் - ஒலிக்கும் வெள்ளிய அருவிகள் விளங்கும் மலையின் சாரற் கண்ணே, தேம் கமழ் இணர வேங்கை குடி - தேன் கமழும் கொத்துக்களையுடைய வேங்கைப் பூக்களைச்சூடி, தொண்டகப் பறைச்சீர் - தொண்டகம் என்னும் பறையின் தாளத்திற்கிசைய, பெண்டிரொடு விரைஇ - ஆடவர் பெண்டிரொடு கலந்து, மருகில் தாங்கும் சிறுகுடிப் பாக்கத்து-தெருக்களில் ஆடும் எமது சிறுகுடிப் பாக்கத்தின்கண்ணே, இயல் முருகு ஒப்பினை - இயங்கும் முருகனை ஒப்பாயாகி, வயநாய் பிற்படப் பகல்வரின் - வலிய நாய் பின்னே வரப் பகற்கண் நீ வரின், கவ்வை அஞ்சுதும் - ஊரார் கூறும் அலர்க்கு அஞ்சுகிறோம்;

சூ—கூ. இரும்பிடி கன்றொடு விரைஇய-கரிய பிடியோடும் கன்றோடுங் கூடிய, கயவாய் பெருங்கை யானைக் கோள் பிழைத்து - அகன்ற வாயினையும் நீண்ட கையினையுமுடைய யானையைக் கொள் ளுதல் பிழைத்து, இகல்கொள இரிய - அதனால் அவற்றைப் பகைமை பொருந்த மறைந்திருக்கும்படி செய்த, அடுபுலி வழங்கும் ஆர்இருள் நடுநாள் - கொல்லும் புலி திரியும் அரிய இருள் குழ்ந்த நள்ளிரவில், தனியை வருதல் அதனினும் அஞ்சுதும்-நீ தனியையாகி வருதலை அதனைக் காட்டினும் அஞ்சுகின்றோம்;

கூ—சு. பன்னுள் புணர்குறி செய்த புலர்குரல் ஏனல் - பல நாளும் புணரும் பகற் குறியாகக் கொண்ட முற்றிய கதிரையுடைய தினைப்புனத்திலே, கிளி கடி பாடலும் ஒழிந்தனள் - கிளியை ஓட்டுதற்குப் பாடும் பாடலும் நீங்கினள்; என் ஆகுவள் கொல்-இனி என் ஆகுவளோ, அளியள் தான் நின் அளி அலது இலனே - இரங்கத் தக்காளாய என் தோழி நின் அருளையன்றி பிறிதொரு பற்றுக் கோடும் இலள்.

(முடிபு) கறுவு, சிறுகுடிப் பாக்கத்து இயல் முருகு ஒப்பினை பகல்வரின் கவ்வை அஞ்சுதும்! அடுபுலி வழங்கும் ஆரிருள் நடுநாள் தனியை வருதல்

(பாடம்) 1. இல்முருகு. 2. யானை கோட்பிழைத்து.

அதனினும் அருந்தகை யிலன். எனக் கெளிய பாடலும் ஒழிந்தனள்; என் ஆயன் கொல்? அளியள் தில் அளியலது இலள்.

(வி - ரை.) அருவிப் பிறங்குமலை என்பது பாடமாயின் அருவியையுடைய விளங்கும் மலை யென்க. இகல் முருகு என்பது பாட மாயின், பகைவரோடு மாறுபாடு கொண்ட முருகன் என்க. மிகல் கொள எனப் பிரித்து, தருக்கு அமைய என் றுரைத்தலுமாம். இரிய - ஓடும்படி. செய்த என்றுமாம். யாரை கொட் பிழைத்து என்பது பாடமாயின், யாரையானது கொள்ளுதல் பிழைத்து இரிய என்க. வழங்கும் அறிருள் நடுநாள் என்பது பாடமாகக் கொள் எனின் - வழங்கும் தெறியின்கண் இருளையுடைய நடுநாள் என்க.

பகல்வரிற் கவ்வை யஞ்சுதும் என்றதனாலே பகற்குறி விலக்கி யும், அறிருள் நடுநாள் வருதல் அஞ்சுதும் என்றதனால் இரவுக்குறி விலக்கியும், எனல் இளிதாற் பாடலும் ஒழிந்தனள் என்றதனால் தெறிப்பறிவுறுத்தியும், நின் அளியல நிலன் என்றதனால் வரைந்து கொள்ளல் வேண்டும் என்றுளாம்.

(மே - ள்.) 'பொழுது மாறும்' என்ற சூத்திரத்துப் 'பகல் வரல்' என்றதற்குப் 'பகல்வரிற் கவ்வை யஞ்சுதும்' என்பதனை எடுத்துக் காட்டினர் நச்.

---

119. பாலை

[செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொற்றது. தோழி தலைமகட்குச் சொற்றதுமாம்.]

நுதலுந் தோளுந் நிதலை யல்குலும்
வண்ணமும் வனப்பும் வரியும் வாட
வருந்துவள் இவளெனத் திருந்துபு நோக்கி
வரைவுநன் றென்ற தகலினும் அவர்வயிது
ஆறுசெல் மாக்கள் அறுந்த பிரண்டை
ஏறுபெறு பாம்பின் பைந்துணி கடுப்ப
நெறியயல் நிரங்கும் அந்தம் வெயிகொள
உமண்சாத் நிறந்த ஓழிகல் அடுப்பின்
நோன்சிலை மழவர் ஊன்புழுக் கயரும்
சுரவ்வழக் கற்ற நென்ற துரஞ்நிறந்து
நெய்தல் உருவின் நிநெங் ககலிலந்
தொடையமை பிளிப் பொலிந்த கடிகை
மடையமை நின்சுரை மாக்காழ் வேலொடு
தனியமர் அழுவம் தம்மொடு துணைப்பத்
துணிகுவர் கொல்லோ தாமே துணிகொள
மறப்புலி உழிந்த வரிபடு செல்லி

---

1. நொல், பொருள். கூ. (பாடம்) 2. தனிகொள், தனிகொண்டு.

உறுதரம் வருத்தமொடு நோவிடு மண்ணும்
படிறமும் னைவிய தெறிகடல் வாசிக
வகைதரம் புரிக்கு மிவ்வுரு வுடைத்தே
உ0 மைதரு நிலைய மாசிரி யர்க்கே.

—நூலாயிற் கீரந்தையார்.

(சொ - விர்.) க—ச. (தொகுதி) உறு - மிக்க தெய்வம். கன்று எல்லை அகலிலும் - வாசல் பெரிய நிலம் எல்லை பிரிந்திடினும், நகரும் கோளும் நிலை அகலிலும்-வானமும் வளைப்பும் வரியும் வாட - கொடியும் கோளும் பெருமையுடைய ஞாயிறும் நிறமும் அழகும் வரியும் வாட, வருத்தலை இவள் எனத் திருத்தி கொக்கி - இவள் வருத்தலை என்று கண்டு தோழர்க் துணர்ந்து.

(கி)—உ0 மறப்புலி உழந்த கனை கொள வகிபடு செவ்வி - மறத்தையுடைய புலியுடன் பொருது உழந்தமையால் அணைமாகப் பிளவுபட்ட சென்னியிலங்கை, உறு கோல் வருத்தமொடு - உற்ற நோயாலாய வருத்தத்துடன், உயிரிய ரணை - தீர் உண்டற்கு விரைந்து சென்று, படி நிறம் னைவிய தெடு வல் வாசி - மண்ணில் முழங்காகி முடித்தான்றிய தெடிய வல்ல வாசியை - தோய்த்து உயிர்க்கும் வறந் கூவி - தனது கையால் நோய்த்தும் நீரின்மையால் பெருமூச் செறியும் வறிய சுவையினையுடைய, மை தோய் சிமைய மலை முதல் .ஆறு - மேகம் படியும் உச்சியினையுடைய மலையிடத்துச் செல்லும் நெறியாய,

ச—எ. ஆறு செல் மாக்கள் அறுத்த பிரண்டை - நெறியிற் செல்லும் மக்கள் அறுத்துப் போகட்ட பிரண்டைக் கொடி, ஏறு பெறு பாம்பின் பைந் துணி கடுப்ப - இடியாற் முக்குதல் பெற்ற பாம்பினது பசிய துண்டு போல, நெறி அயல் வறிது நிரம்பும் அத்தம் - வழியின் பக்கத்தே பயனின்றி வளங்கெடக் கிடக்கும் காட்டில்,

எ—கo. உமண் சாத்து இறந்த ஓதி கல் அடுப்பில் - உப்பு வணிகர் கூட்டம் விட்டொழிந்த கல் அடுப்பில், கோன் சிலை மழவர் - வலிய வில்லையுடைய மழவர், வெரி கொள் வன் புழுக்கு அயரும் சுரன் - நாற்றமுண்டாக வலிய புழுக்கு புணரும் இடங்களையுடைய சுரமானது, வழக்கு அற்றது என்றது - பெண்டிரோடு இயங்குதற்கு உரியதல்லது என்று கூறியது,

கo—டு. உரம் சிறந்து - வலிமை மிக்கு, நெய்தல் உருவின் நிற இலங்கு அகல் இலை - நெய்தற்பூப் போலும் உருவினையுடைய அழகாக விளங்கும் அகன்ற இலையினையும், தொடை அமை பிலிப் பொலிந்த கடிகை-தொடுத்தல் அமைந்த மயிற்சிறகையால் விளக்க முற்ற காம்பினையும், மடை அன்ன நிலை கரை-மூட்டுவாய் அமைந்த நிலையிய சுரையினையும், மா காழ் வெதிரொடு - கரிய நன்முதிரையுடைய வேதிலை துணையாக, தனி அமர் அருவம் - பகைவரைத்

தணிவிக்கச் செல்லும் போர்க்களத்திற்கு, தம்மொடு துணைப்பா - நாமும் தம்மொடு துணையாகிச் செல்ல, துணிகுவர் கொல்லோ-துணி யரோ.

(முடிபு) நோழி! நம் தலைவர் வரைவு நல்லறனல்லது அகலிலும், வருந்து வள் இவள் எனத் திருத்துபு நோக்கி, மலிமுந்நல் ஆறு ஆய சுரன் வழக்கற்ற தென்னாது, உரஞ் சிறந்து அமர் அழுவம் தம்மொடு துணையாகக் கொண்டு செல்லத் துணிகுவர் கொல்லோ.

பிரண்டை நிரங்கும் அத்தத்தில் அடுப்பில் மழவர் ஊன்புழுக் கயரும் சுரன் என்க.

(வி - ரை.) வறிது நிரங்கும் எனவும், வெறிகொள ஊன் புழுக் கயரும் எனவும் கூட்டுக. ஏறு - இடி யேறு எனவும், எறிதல் என வும் இரட்டுற மொழிதலாகக் கொள்க. சாத்து - வணிகர் நிரள். துனிகொள என்னும் பாடத்திற்கு வெறுப்புண்டாக என்றுரைக்க.

(உ - றை.) ('ஆறு செல்லும் மாக்களால் அறுத்துப் போகடப் பட்டுப் பிரண்டை வறிதே நிரங்குவதுபோலத் தலைவராற் றுறக்கப் பட்டு எம் அழகு பயன்படலின்றியே கழியாநின்றது.' 'சாத்தராற் றுறக்கப்பட்ட கல்லடுப்பு மழவர்க்கு ஊன்புழுக் கயர்ந்து மகிழ் தற்குக் கருவியானற் போலத் தலைவராற் றுறக்கப்பட்ட யாம் அம்பற் பெண்டிர்க்கு அலர்தூற்றி மகிழற்கு இலக்காயினேம்.'

'புலியொடுழந்து சென்னியிடத்து வடுப்பட்டு வருந்திய யானை நீருண்ணச் சுனையிடத்து முழ மூன்றிக் கையைத் தோய்த்தும் நீர் பெரு துயிர்த்தாற் போல், அன்னையின் கொடுஞ் சொல்லாலும் அம்பற் பெண்டிரின் அலராலும் நெஞ்சு புண்ணுற்ற யாம், அந் நோய் தீர வரையுமாறு தலை மகன் கழல்தொடிப் பணிந்து வேண்டியும் அருள் பெறுமல் உயிர்க்கின்றேம்' என்றுளாம்.) (இராசகோபா லையங்கார்)

X 120. நெய்தல்

[தோழி பகற்குறிக்கண் தலைமகளை இடத்துய்த்து வந்து தலை மகனை எதிர்ப்பட்டு நின்று சொல்லியது.]

நெடுவேள் மார்பின் ஆரம் போலச்
செவ்வாய் வானந் நின்டிமீன் அருந்தும்
பைங்காற் [1]கொக்கின நிரைபறை யுகப்ப
எல்லை பைப்பயக் கழிப்பிக் குடவயின்
கல்சேர்ந் தன்ன பல்கறுப் ஞாயிறு
மதரெழில் மழைக்கண் கலுழ)இவளை
பெருநான் அணிந்த சிறுமென் சாயல்
மாணலம் சிதைய ஏங்கி யாஅது
அழல்தொடங் கினளே பெரும அதனால்

(பாடம்) 1. கொக்கின் சிரை.

களிற்றியானை நிரை

கo கழிச்சுரு எறிந்த புட்டாள் அத்திரி
நெடுநீர் இருங்கழிப் பரிமெலிந் தசைஇ
வல்வில் இளையரொ டெல்லிச் செல்லாது
சேர்ந்தனை செலினே சிதைகுவ துண்டோ
பெண்ணை ஒங்கிய வெண்மணற் படப்பை
கரு அன்றில் அகவும் ஆங்கண்
சிறுகுரல் நெய்தலெம் பெருங்கழி நாட்டே.

—நக்கீரனார்.

(சொ - ள்.) க—ரு. நெடுவேள் மார்பின் ஆரம் போல-முருகக் கடவுள் மார்பினிடத்து முத்தாரம்போல, செவ்வாய்வானம் தீண்டி-செவ்வானத்திடம் பொருந்தி, மீன் அருந்தும் பைங்கால் கொக்கு இனம் நிரைபறை உகப்ப - மீனை அருந்தும் பசிய காலையுடைய கொக்கினது இனம் வரிசையாகப் பறத்தல் உயர்ந்திட, எல்லை பை கதிர் ஞாயிறு குடவயின் கல் சேர்ந்தன்று - பல கதிர்களையுடைய ஞாயிறு மேற்றிசையில் மறையும் மலையை அடைந்தது;

சு—கூ. இவளே பெருநாண் அணிந்த சிறுமென் சாயல் - மிக்க நாணைக் கொண்ட சிறிய மெல்லிய சாயலினையுடைய இவள், மாண் நலம் சிதைய - மாண்புற்ற அழகு கெட, ஏங்கி - ஏக்கமுற்று, மதர் எழில் மழைக்கண் கலுழ - மதர்த்த அழகினையுடைய குளிர்ந்த கண் கலங்கிட, ஆனாது அழல் தொடங்கினளே - அமையாது அழுதலைத் தொடங்கியுள்ளாள்;

கூ—கூஉ. பெரும - தலைவ! அதனால் - அதனாலும், கழிச் சுரு எறிந்த புண் தாள் அத்திரி - உப்பங்கழியிலுள்ள சுருமீன் எறிதலா லுற்ற புண்ணுற்ற தாளினையுடைய கோவேறு கழுதை, நெடுநீர் இருகழி பரி மெலிந்து - நீண்ட நீரினையுடைய கரிய கழியில் செல் லுதல் மெலிந்திடலாலும், வல் வில் இளையரொடு எல்லிச் செல்லாது அசைஇ - வலிய வில்லினையுடைய நின் ஏவலரொடு இவ்விரவிற் செல்லாது இளைப்பாறி,

கசா—சூ. பெண்ணை ஒங்கிய வெண்மணல் படப்பை - பனை மரங் கள் ஓங்கிய வெள்ளிய மணல் பரந்த தோட்டங்களில், அன்றில் அகவும் ஆங்கண் - அன்றில் தன் துணையை அழைக்கும் அவ்விடத்தே, சிறுகுரல் நெய்தல் எம் பெருங் கழி நாட்டு - சிறிய பூங்கொத்தினை யுடைய நெய்தல் பொருந்திய எமது பெரிய கழி சூழ்ந்த நாட்டின் கண்,

கஎ. சேர்ந்தனை செலினே சிதைகுவது உண்டோ - நீ தங்கிச் செல்லின் கெடுவதொன்று உளதோ?

(முடிபு) பெரும! பல் கதிர் ஞாயிறு கல் சேர்ந்தன்று; இவள் அழல் தொடங்கினள்; அதனாலும், அத்திரி பரிமெலிந்திடலாலும் இளையரொடு எல்லிச் செல்லாது அசைஇ, எம் பெருங்கழி நாட்டுச் சேர்ந்தனை செல்லின், சிதைகுவது உண்டோ.

(நி - ரை.) முருகக் கடவுள் மிக்க செந்நிறமுடைய ரென்பது சேய், செவ்வேள் என்னும் பெயர்களாலும், [1]" பலர்புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு " [2]" பவழத் தண்வரைமேலி " என்பவற்றாலும் அறியப்படும். செவ்வானத்திற்கு நெடுவேளின் செம்மேனியும், அவ்வானத்தை யொட்டி வரிசையாகப் பறந்து செல்லும் கொக்கினத்திற்கு அவரது மார்பிலணிந்த முத்தாரமும் உவமமாயின ; ஆற்றுப் படையால் முருக வேளை யேத்திய ஆசிரியர் கக்கீரனாரது அன்பு கனிந்த திருவுள்ளத்தில் செவ்வானையும் அதனை யொட்டிப் பறந்து செல்லும் கொக்கின் நிரையையும் கண்டுழிச் செவ்வேளின் திருமேனியும் அவரது மார்பின் முத்தாரமும் தோன்றுவது இயல்பேயாம். கொக்கின் நிரை என்பது பாடமாயின் கொக்கின் கூட்டம் என்க. உகப்பு - உயர்வு ! பறை யுகப்ப - உயர்ந்து பறக்கவெனக் கொள்க. சாயல் இவள் எனக் கூட்டுக. மெலிந்து என்பதனை மெலிய வெனத் திரிக்க. அன்றில் அகவும் ஆங்கண் என்றதனால் தலைவன் வராவிடில் தலைவிக் குண்டாம் ஏதம் குறிக்கப்பட்டது. [3]" எல்லி, . . . அன்றில், துணையொன்று பிரியினும் தஞ்சா காண் " என்பதன் உரை காண்க.

இது நெய்தலிற் களவு. [4]" நினைமயக் குறுதலுங் கடிநிலை யிலவே " என்பதனால் அமைந்தது.

(மே - ள்.) [5]' நாற்றமும் தோற்றமும்' என்னுஞ் சூத்திரத்து. தோழி தலைவனை வேளாண் பெருநெறி வேண்டிக்கோடற்கு இச் செய்யுளை எடுத்துக் காட்டினர் இளம்.

[6]'வைகுறு விடியல்' என்னுஞ் சூத்திரத்து இச் செய்யுள், பகற் குறிக்கண் இடத்துய்த்துத் தலைவனை எதிர்ப்பட்டு உரைத்தது என்றும், சண்டு நெய்தற்கு எற்பாடு வந்ததென்றும், [7]'பொழுதும் ஆறும் காப்பும்' என்னுஞ் சூத்திரத்து, 'வல்வி லிளையரொடு . . . பெருங்கழி நாட்டே' என்பது, 'இரவினும் பகலினும் நீ வா' எனத் தோழி கூறுவதற்கு உதாரணமாகும் என்றும், இங்ஙனம் களவு அறிவுறு மென்று அஞ்சாது வருக என்றலின் வழுவேனும், தலைவன் வருத்தம் பற்றிக் கூறலின் அமைத்தார் என்றும், [8]'தேரும் யானையும் குதிரையும் பிறவும் ஊர்ந்தனர் இயங்கலும், உரியர் என்ப' என்னுஞ் சூத்திரத்து, 'பிற' ஆவன கோவேறு கழுதையும் சிவிகையும் முதலியனவாம் என்றும், 'கழிச்சுரு வெறிந்த புட்டா ளத்திரி . . . பரிமெலிந் தசைஇ' என வருதல் அதற்கு உதாரணமாகு மென்றும், இன்னும் இச்சூத்திரத்து (இயங்கலும் என்ற) உம்மையால் இளையரோடு வந்து தனித்துக் கூடுதலுங் கொள்க ; இதற்கு 'வல்வி லிளையரொடு . . . சிதைகுவ துண்டோ ' என்பது உதாரணமாகு மென்றும் கூறினர் நச்.

---

1. முரு. உ. 2. குறுந். கடவுள் வாழ்த்து. 3. அகம். ஙo. 4. தொல். அகத். கஉ. 5. தொல். கள. உச. 6. தொல். அகத். ஊ. 7. தொல். பொருளி. கசு. 8. தொல். பொருளி. கஎ.

"பல்வேல் பற்றிக்கொன்றனை (படிப்பாடுகம
எம் தலை மென்பூ தெரிந்நிரை"

"மனைவிளக் கெடுத்த பாக்கத்து யாங்கும்
உயர்வரை நெடுங் நிறுங்கு யன்ற தெய்ம்
கானே"
(படிப்பாடுகம்)

-6
தன் தேடலாயிரம் அன்றேன்.
(பாடல் 44)
தேடலை
நிறுத்

"தனிட நிகில்லாக் கொன்றனன்
(பாடல் 46) அன்றிற்
கில்லை

தலைப்பட்டகம்:-

இந்த பட்டகை

ஆட்சி யாண்டில் சிறந்து விளங்கியவர்
ஸ. ஏ ங்கர். 1947 ஆம் ஆண்டு சிதர்
திரத்திற்காக காந்திஜி, நேருஜி
ராஜாஜி போன்றோருடன் அளவிலா
அரிஉரைகள் கரி சுதந்திரம் வாங்கி
கும்பரா மாயணம் இயற்று பதற்கு
கும்பருக்கு முகவாக விளாங்கி
தேப்பரிய காவியத்தை படைத்திர்.